# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FORTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL
UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXII (Nos 1 to 7)

22nd, 23rd, 24th and 27th To 30th Jan. 1981

©
GOVERNMENT OF TAMIL NADU
1981

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price Rupee 1

122020

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FORTY NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*22nd, 23rd, 24th and 27th to 30th January* 1981

Volume CLXXII (Nos. 1 to 7)

---

## TABLE OF CONTENTS.

### Thursday, the 22nd January 1981.

PAGES

Personnel of the Government of Tamil Nadu ... i—v

Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... vii

List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. ... ix—xi

1. Obituary reference *re*—
   Death of Thirumathi K. B. Sundarambal and Thiruvalargal M. Ayyasamy and V. Valmigi .. 1—2

2. Condolence Resolution *re*—
   Death of Thiru Bishnu Ram Medhi, former Governor of Tamil Nadu and former Chief Minister of Assam ... .. ... 2—9

### *Friday, the 23rd January* 1981.

1. Questions and Answers ... ... 37—50

2. Announcements—
   (1) Panel of Vice-Chairmen ... ... 50

   (2) Election of Members to Annamalai University Senate ... ... ... ... 50—51

## Higher Secondary Schools

* 4 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government are aware of the difficulties experienced by students who have passed the Tenth Standard, to get admissions in the first year of Plus Two Course in Higher Secondary Schools; and

(b) whether there is any proposal to upgrade more High Schools into Higher Secondary Schools?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து எழும் பிரச்சினைகள் அவ்வப்போது தீர்க்கப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளிகளை ஆய்வு செய்யும் அலுவலர் களுக்கும் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு, மாணவர்கள் சேர்ப்பது குறித்து புகார்கள் ஏதும் வாராமல் பார்த்துக்கொள்ளும்படியும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். மேலும் அதிக அளவில் மாணவர்கள் சேர்க்கப்பட்டால், அதற் கேற்றவாறு கூடுதல் வகுப்புகளைத் தொடங்க அனுமதிக்கும்படியும் அறி வுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) 1980-81 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட பள்ளிகளையும் உள்ளிட்டு, தற்போது 1,243 மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. தற்போதைய தேவைக்கு இப்பள்ளிகளே போதுமானதாக உள்ளன.

திரு. த. சந்தோஷம்: தலைவரவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. அதற்குப் பின் அநேக உயர் நிலைப் பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டது எனக்குத் தெரியும். இப்போது 10 ஆம் வகுப்புத் தேறிய மாணவர்கள் தொகை எத்தனை என்பதையும் பிளஸ் 2 முதலாண்டில் எத்தனை மாணவர்களுக்கு இட வசதி இருக்கி தென்பதையும் தெரிவிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாணவர்களின் எண்ணிக் பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் தேறிய மாணவர்கள், மே நிலைப் பள்ளிகளில் சேருவதற்கு வாய்ப்புகளை உருவாக்கி, புகார்க இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம்.



## Tamil Nadu Librarians' Association.

*5 Q.—DR. T. R. JANARTHANAM (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received by the Government from the Tamil Nadu Librarians' Association in June, 1980;

(b) if so, the details of their grievances; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) மற்றும் (உ) கேள்வி எழவில்லை.

டாக்டர் இரா. ஜனார்த்தனம்: நூலகர்களை அரசு ஊழியர்களாக்கும் உத்தேசம் அரசுக்குண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நூலகத் துறையில் பணி புரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக்காமல் அரசு ஊழியர்கள் பெற்று வரும் ஓய்வூதியம், பணிக்கொடை போன்ற சலுகைகளை மட்டும் அவர்களுக்கு நீட்டிக்கலாமென்று அரசு கருதியது. அதன் அடிப்படையில் நூலக ஆணைக் குழுவின் ஊழியர்களுக்கு, அடிப்படை ஊழியர்கள் உட்பட, அரசாணை எண். 862, கல்வி, நாள் 20—5—1980-ல் ஓய்வூதியம், பணிக் கொடை வழங்குவதற்கான ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. சில்லரைச் செலவினத்திலிருந்து ஊதியம் பெறும் இரவுக் காவல்காரர்களின் பணி நிரந் தரம் ஆக்கப்படாமலிருப்பதால், அவர்கள் இத்திட்டத்தின்படி ஓய்வூதியம் பெற வழியில்லை.

திரு. ஆ. நல்லசிவன்: நூலகர்கள் அனைவரையும் நிரந்தரமாக்கி, அவர் களையும் அரசு ஊழியர்களாக நியமிக்க ஏன் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நூலகத் துறையைச் சார்ந்த நூலகங்களை நடத்துவது என்று சொல்லும்போது, அதற்குத் தேவைப்படும் நிதி ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து நூலக வரியாகப் பெற்றும், அதற்கு ஈடாக அரசு மானியம் தந்தும் பெறப்படுகிறது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த நூலகங்களை அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை.

*Friday, the 30th January 1981—cont.* PAGES

2. Questions and Answers .. ... ... ... 472—473
3. Call Attention Notice—
   Suspension of 13 B.T. Teachers of S.K.V Higher Secondary School, Kurinjipadi ... ... 472—473
4. Discussion on the Governor's Address—cont .. 473—524
5. Papers laid on the table of the House ... 525—529
INDEX ... ... ... .. .. 530—591

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**வெள்ளிக்கிழமை, 1981 ஜனவரி 23.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 1, 2 ஒத்திவைக்கப்படுகின்றன.

### பள்ளிகளின் மின்கட்டணம்.

*3. வினா **திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிகளில் மின்கட்டணத்தை, சாதல்வார் பில் தயாரித்து கருவூலத்திற்கு அனுப்பி தொகையினைப் பெற்று செலுத்த கால தாமதமாவதால், அக்கட்டணத்தை வசதிக் கட்டண நிதியிலிருந்து (Amenity Fee) Fund) கட்ட, அனுமதி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (இ) தனியார் உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, மின் கட்டணச் செலவானது ஏற்கெனவே வசதிக் கட்டண நிதியிலிருந்து செலவிட அனுமதிக் கப்பட்ட செலவினங்களுள் ஒன்றாகும். அரசு மற்றும் நகராட்சி, மாநகராட்சி உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் அவ்வாறு வசதிக் கட்டண நிதியிலிருந்து மின்கட்டணம் கட்ட அனுமதி இல்லை. இதை மாற்றுவதற்கான செயற்குறிப்பும் இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களையும் அரசு ஊழியர்களாக்கும் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவது போல, நூலகத் துறையில் பணி புரியும் ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக்க அரசு முன் வருமா? அடுத்த கட்டத்திலாவது அதைப்பற்றி அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் இது குறித்து வேறு ப நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். அந்த நடவடிக்கைகள எடுத்த பிறகு, இதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நூலகங்களில் பணியாற்றும் சில்லரைப் பணியாள களுக்கு ஓய்வூதியம் வழங்க முடியாதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் இதே போன்று தனியார் பள்ளிகளில் பணியாற்றும் சில்லரைப் பணியாள களும் ஓய்வூதியம் பெற முடியாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்க நாள் முழுவதும் வேலை பார்ப்பதால், அவர்கள் பணியை வரன்முறை செய் விதிகளை வகுத்து, அவர்களுக்கும் ஓய்வூதியம் அளிக்கும் முறையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினரவர்கள் சொன்னது போன்ற பிரிவினர்களைப் பற்றிப் பரிசீலிக்கும்போது, இவர்களைப் பற்றியும் பரிசீலிக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நூலக வரியைப் பெற்று, செலுத்த வேண்டிய உள்ளாட்சித் துறை ஸ்தாபனங்கள், தங்களுடைய பங்கைச் சரியாகச் செலுத்தாததால், நூலகங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு ஒழுங்காக ஊதியம் கிடைப்பதில்லை என்று புகார்கள் வருகின்றன. ஆதலால் மாதந்தோறும் முதல் தேதி அவர்கள் ஊதியம் பெறும் நிலையில், அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வசூலிக்கப்பட்ட நூலக வ டனடியாகச் செலுத்தப்படவில்லை என்ற குறைபாடு தொடர்ந்து இருக் றது. அந்தக் குறைபாட்டை நீக்குவதற்காக அரசு சில முயற்சிகளை மே கொண்டிருக்கிறது. எனவே அந்தக் குறைபா...





**நாகப்பட்டினப் பேருந்து நிலையம்.**

*** 6. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயணிகள் போக்குவரத்து அதிகமாக உள்ள நாகப்பட்டினத்தில், போதிய வசதியுடன் கூடிய பேருந்து நிலையம், கழிவிடங்கள் ஆகியவை இல்லாததால், மக்கள் அவதிப்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அவ்வசதிகள் எப்போது அமைத்துத் தரப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) & (இ) நாகப்பட்டினத்தில் நவீன பேருந்து நிலையம் ஒன்று அமைக்க நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போதுள்ள பேருந்து நிலையத்தின் அருகில் புதிதாக இரண்டு கழிவிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** குடியரசுத் தலைவரவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கோவை நகராட்சியில் அவசரம் அவசரமாக நகரப் பேருந்து நிலையம் திறக்கப்பட்டது. அங்கே போதிய வசதிகள், கழிப்பிடங்கள் இல்லாமல் இருக்கிறது. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மூலக் கேள்வி நாகையைப் பொறுத்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோவையைப் பற்றிக் கேட்கிறார்கள். அது என்னுடைய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், தலைவரவர்களுடைய ஒப்புதலோடு, கூறுகிறேன். கோவை நகரப் பேருந்து நிலையத்தை விஸ்தரிப்பதற்காக இப்போது தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒரு திட்டம் தீட்டி, ஒரு கோடி ரூபாய் செலவில் கடைகள் கட்டியும், நகரப் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தியும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** சேலத்திலும் இது போன்ற நிலை இருக்கிறது. அங்கு பேருந்து நிலையம் இருந்தாலும், மிக நெருக்கடியாகவும், மக்கள் அவதிக்குள்ளாகும் நிலையிலும் இருக்கிறது மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவை நகரப் பேருந்து நிலையத்திற்கு நல்ல வழி செய்ததுபோல, சேலம் பேருந்து நிலையத்திற்கும் வழி செய்ய முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : துணை வினாக்கள் கேள்வியை விட்டு எங்கோ போய்க் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அப்படியே கேட்டால் எப்படி?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பொதுவாக நான் ஒரு பதிலைச் சொல்லிவிட்டால், மற்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்க மாட்டார்கள். பொதுவாக தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களிலும், பல நகராட்சிகளிலும் இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்து ஒவ்வொரு இடத்திலும் நல்ல விசாலமான பேருந்து நிலையங்களைக் கட்டும் திட்டம் இருக்கிறது. தேவைக்கேற்ற முறையில் நல்ல வசதியுள்ள பேருந்து நிலையங்களைக் கட்டுவதற்கான திட்டத்தைத் தீட்டி நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் உள்ள பேருந்து நிலையத்தை விசாலமாக ஆக்க ஒரு திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் மதிப்பீடு எவ்வளவு? அது எந்த நிலையில் இருக்கிறது? டெண்டர் போடப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது இன்னும் அரசின் நடவடிக்கைக் குறிப்பில்தான் இருக்கிறது. மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை.

THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister clarify one things? When these facilities are provided for parking heavy vehicles so as to avoid congestion in the bus-stands, will facilities be provided underground for latrines, as it is done in several other countries? That would keep the bus-stands much more clean.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : உறுப்பினருடைய யோசனையும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. செ. முத்துசாமி : பொதுவாக தமிழ் நாட்டில் எந்தப் பேருந்து நிலையங்களுக்குச் சென்றாலும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாகப்பட்டினப் பேருந்து நிலையம் பற்றி ஏற்கெனவே இரண்டு முறை சொல்லியாகி விட்டது. மூலக் கேள்வியை விட்டு விட்டு எங்கே செல்கிறீர்கள்.



திரு. செ. முத்துசாமி : நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தை விட்டு விட்டு நான் எங்கும் செல்லவில்லை. அங்குள்ள கழிப்பிடங்கள் பற்றி நான் சொல்கிறேன். அங்குள்ள கழிப்பிடம் நீர் இல்லாமல் மிகக் கேவலமாக இருக்கிறது. பொதுவாக பேருந்து நிலையங்களிலுள்ள கழிப்பிடங்களை சுகாதார நிலையில் வைத்திருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்கெனவே நாகப்பட்டினம் பேருந்து நிலையத்திலுள்ள கழிப்பிடம்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி விட்டார்கள். கழிப்பிடங்கள் நாடு முழுவதும் உள்ளன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடுமானவரை பேருந்து நிலையங்களில் நவீன கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமும். அந்த வகையில் பேருந்து நிலையங்களில் எல்லாம் கட்டணக் கழிப்பிடம் கட்டுகின்ற திட்டம் ஒன்றும் இருக்கிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், துர்நாற்றம் ஒன்றும் ஏற்படாது.

THIRU G. VASANTHA PAI: Sir, I want one clarification.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வியே நாற்றம் அடிக்கிறது. (சிரிப்பு). எவ்வளவு நேரம்தான் கேள்வி கேட்பது?

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister consider a suggestion? When providing for pay-and-use latrines at least three of them have to be free for the public so that those who cannot aford to pay may also use them.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கட்டணக் கழிப்பிடம் கட்டுகின்ற பேருந்து நிலையங்களில் எல்லாம் இலவசக் கழிப்பிடங்களையும் சேர்த்தே கட்டுகிறோம்.

### தென் ஆற்காடு மாவட்டத்தில் உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள்.

* 7. வினா.—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை வட்டங்களில் உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளன?

(இ) இந்த அலுவலகங்கள் அமைக்கப்படாத வட்டங்களில் இவற்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1981 ஜனவரி 2:

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: இது ஒரு சிறந்த முறை
என்றாலும் கூட, தமிழகத்திலே பன்னெடுங்காலமாக வேறு ஒரு பெயரி
அது பின்பற்றப்பட்டு வருகிறது. அதை கிண்ணி முறை என்று சொல்லு
கிறார்கள். சிறு சிறு நில உடமையாளர்கள் நீரின் அளவுகளைக் கணக்
கெடுக்கின்ற முறை தமிழகத்தில் இன்றும் நடைமுறையில் இருக்கிறது.
எனவே, தமிழகத்தில் அதை ஓரளவு பன்னெடுங்காலமாகப் பின்பற்றி
வருகிறார்கள். இப்போது கூட பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தில் அதை
சில இடங்களில் சோதனைக்காகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்
அடுத்து வரக்கூடிய ஐந்தாண்டுத் திட்டங்களில் இதை முன்னோடித் திட்ட
மாகச் செயல்படுத்த அரசு யோசித்து வருகிறது. நீர்ப்பாசனக் குழு
அமைக்கப்பட்ட உடனே, உறுப்பினர்களை அழைத்துச் சென்று, பல்வேறு
மாநிலங்களிலுள்ள நிலைமைகளைப் பார்த்து நிச்சயமாக அது குறித்துப்
பரிசீலனை செய்யலாம்.

## *Malpractices in Special Repair Work of Thovalai Channel*

* 9. *Q*.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Ministe
for Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that, in connection with allege
malpractices in the special repair work of Thovalai Channel i
Kanyakumari District in the year 1971-72, seven officers of th
Government and seven contractors were prosecuted by the Vigilanc
and Anti-Corrruption Department in the Special Court at Nagercoil

(*b*) whether all the fourteen of them have been convicted;

(*c*) whether in respect of the same F.I.R. and in connectio
with the same work, the same seven officers and thirteen other officer
and sixty-eight contractors are sought to be prosecuted again; an

(*d*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (அ) ஆம்.

(இ) நாகர்கோயில் சிறப்பு நீதிபதி தனது தீர்ப்பில் தோவாளை
கால்வாயில் பணி செய்த ஏழு அதிகாரிகளும் ஏழு ஒப்பந்தக்காரர்களும். அ
பணியில் நடந்த பல முறைகேடுகளுக்குப் பொறுப்பானவர்கள் எனத் தீர்
பளித்து, அவர்கள் மீது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக இரண்
ஆண்டு கடுஞ்சிறை தண்டனையும், மேலும் தலா ரூபாய் 50 (ஒவ்வொ
பிரிவின் கீழ் குற்றத்திற்கும்) அபராதத் தொகையும் விதித்துள்ளார்.



1981 ஜனவரி 23]

(உ) & (எ) இக்கால்வாயின் பணிகள் இரண்டு கட்ட நிலைகளில்
நிறைவேற்றப்பெற்றது. முதல் கட்டத்தின் கீழ் சிமென்ட்-காங்கிரீட்
பலகைகளைத் தயாரிக்கும் பணி நடந்தது. இரண்டாவது கட்டத்தின் கீழ்
தடுப்புச் சுவர் கட்டுதல், கால்வாயின் கரைகளில் சிமென்ட் பலகைகளைப்
பொருத்துவது போன்ற பணிகள் நடைபெற்றன. இவ்விரு கட்ட வேலை
களும் தனித்தனியே எடுத்துக்கொள்ளப் பெற்று நிறைவேற்றப் பெற்றதால்.
இப்பணிகளில் ஏற்பட்ட முறைகேடுகள் பற்றிய புலனாய்வும் இரண்டு கட்ட
மாக எடுத்துக் கொள்ளப்பட்டது. முதல் கட்டப் பணிகளில் ஏற்பட்ட முறை
கேடுகள் பற்றிய புலனாய்வு 1977-ல் முடிவடைந்து, குற்றப்பத்திரிகை தாக்கல்
செய்யப்பட்டு நீதி மன்றத்தினால் தீர்ப்பும் அளிக்கப்பட்டது. இரண்டாவது
கட்டப் பணிகளின் முறைகேடுகள் மீது புலனாய்வு 1979-ல் முடிவடைந்து
குற்றப் பத்திரிகை சிறப்பு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு
விசாரணையிலுள்ளது. முதல் கட்டப் பணியில் ஈடுபட்டு குற்றம் சாற்றப்
பட்ட ஏழு அதிகாரிகள் இரண்டாவது கட்டப் பணியின் மீது தொடரப்பட்ட
வழக்கிலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். வழக்கு நீதி மன்றத்தின்
விசாரணையில் உள்ளதால், மேலும் தகவல்கள் தர இயலவில்லை.

(முற்பகல் 10-50)

திரு. த. சந்தோஷம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஒழுங்
கீனங்கள் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டது 1971-72 ஆம் ஆண்டிலே.
இரண்டு கட்டத்திற்கும் சேர்த்து ஒன்றாக அப்போது புலனாய்வு நடந்திருக்க
வேண்டும். ஒரு மாதம், இரண்டு மாதங்கள் என்று குறுகிய கால அளவில்
பணியாற்றிய அதிகாரிகள்கூட இந்தக் குற்றப் பத்திரிகையிலே சேர்க்கப்பட்
டிருப்பதாக அறிகிறேன். இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை அரசியல் சட்டத்
தின் கீழ் அளிக்கப்பட்ட விதிகளின்படிதானா எடுக்கப்பட்டிருக்கிறது? இது
பற்றி அரசாங்கத்தின் மேல்மட்ட சட்ட ஆலோசனை பெறப்பட்டதா? இந்தக்
கோப்பு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அதன் மீது அரசு
நடவடிக்கை எடுத்ததா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அவ்வளவு விரிவான தகவல்கள்
இப்போது என்னிடத்தில் இல்லை. 1971 ஆம் ஆண்டு இந்தப் பணிகளைத்
தொடங்க வேண்டும் என்று அரசு அனுமதியளித்தது. பணி ஆரம்பித்த
ஓராண்டு காலத்திற்குள்ளேயே ஒழுங்கீனங்கள் முறைகேடுகள் வந்ததாக 1972
ஆம் ஆண்டில் அன்றைக்கு இருந்த ஆட்சி உடனடியாக புலனாய்வுக்கு உத்தர
விட்டிருக்கிறது. அப்போதே பரிசீலனை செய்து இரண்டு கட்டமாக வழக்கு
நடத்த வேண்டும் என்று முடிவெடுத்ததால், முதல் கட்டம் 1971 ஆம் ஆண்டி
லேயும் இரண்டாவது கட்டப் புலனாய்வு அதற்குப் பிறகும் போடப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் 10 வட்டங்களில் நிரந்தர உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் உள்ளன.

(இ) தற்போது இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சாதாரணமாக ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்திற்கும் ஒரு நெடுஞ்சாலை உட்கோட்டம் என்கிற முறையில் நெடுஞ்சாலை உட்கோட்ட அலுவலகம் திறக்க அனுமதி கொடுக்கப்படுகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் இன்னும் இரண்டு வட்டங்களுக்கு அவ்வாறு உட்கோட்டங்கள் அமைக்கப்படவில்லை. உதவி கோட்டப் பொறியாளர்கள் நெடுஞ்சாலைத் துறை சாலைகளைப் பராமரிக்கின்ற பணியையும், புதிய சாலைகளை உருவாக்குகின்ற பணியையும், பஞ்சாயத்து சாலைகளை மேற்பார்வையிடுகின்ற பணியையும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்திற்கும் ஒரு உட் கோட்டம் என்கிற முறையில் அலுவலகங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, 10 இடங்களில் உட் கோட்டங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. அந்த 10 இடங்களிலும் நிரந்தர அலுவலகங்கள் இருக்கின்றன. இப்போதைக்கு பண்ருட்டி, காட்டுமன்னார்கோயில் ஆகிய இரண்டு இடங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலைகளையெல்லாம் சிதம்பரம், கடலூர், குறிஞ்சிப்பாடி போன்ற இடங்கள் மூலம் செயல்படுத்த வேண்டி இருக்கிறது. உளுந்தூர்பேட்டையிலும் அதுபோல் ஏற்படுத்த வேண்டுமென்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்திற்கும் ஒரு உட் கோட்டம் என்று வந்தாலும்கூட, அவர்களுக்குப் பணி அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில் இரண்டு வட்டங்களின் பணிகளை ஒரு உட் கோட்ட அலுவலகத்தில் ஒப்படைப்பதன் மூலம் பராமரிப்பு போன்ற பணிகள் சரிவர நடைபெறுவதில்லை. ஆகவே, ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்திற்கும் ஒரு உட்கோட்டம் என்கிற முறையில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட யோசனை அரசின் பரிசீலனையில் இல்லை.





டாக்டர் இரா. சனார்த்தனம் : 5 மாவட்டங்களுக்கு ஒரு மேற்பார்வைப் பொறியாளர் இருப்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் வீதம் நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மேற்பார்வைப் பொறியாளர்களின் பணிகள் அதிகமாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு அவர்களுடைய பணிகளை வரன்முறைப்படுத்தி, அதிகாரத்தைக் குறைத்து அவர்களுக்குள்ள அதன் மூலம் அதிக வேலைகளைச் செய்கின்ற தன்மையில் அவர்களுக்குள்ள மாவட்டங்களைக் குறைக்கின்ற முடிவு எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வார பந்தி முறை நீர்பங்கீடு.

* 8. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹரியானா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் உள்ளது போல, விவசாயத்திற்கான நீரைப் பங்கீடு செய்ய வார பந்தி முறையை தமிழகத்திலும் பின்பற்றுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) & (இ) வார பந்தி முறையை தமிழகத்திலும் பின்பற்றுவது குறித்த யோசனை ஆரம்ப தொடக்க ஆய்வு நிலையிலேயே உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : வார பந்தி முறை அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் நடைமுறையில் செயல்பட்டு வருகிறது என்று நான் ஒரு அறிக்கையில் படித்தேன். நம்முடைய மாநிலத்திலுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப இந்த முறையை அமுல்படுத்த வேண்டுமென்றால் நம்முடைய மாநிலத்திலிருந்து ஒரு குழு அங்கே சென்று இந்த முறையைப் பார்வையிட வேண்டும். அதை உடனடியாகச் செயல்படுத்த முடியுமா என்பது குறித்து அரசு பரிசீலித்திருக்கிறதா?

டாக்டர் இரா. ஜனார்த்தனம் : இந்த மாதிரி நடவடிக்கைகள் எடுக்கின்ற போது திட்டங்கள் நிறுத்தப்பட்டுவிடுவதால், பிறகு இவைகளை மேற் கொள்ளும்போது திட்டச் செலவு அதிகமாக ஆகி விடுகிறது. ஆகவே இம் மாதிரி நடவடிக்கை எடுக்கும்போது, திட்டங்களை நிறுத்தாமல் நிறைவேற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறான மதிப்பீடுகள் தயாரித்து, தவறான புள்ளி விவரங்களைக் கொடுத்து அதிக நிதியைக் கேட்பதாகக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இனி மேல், இம்மாதிரி முறைகேடுகள் இருக்குமானால் அவைகளைத் தனியாக எடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பதவி நீக்கம் செய்து வைத்துவிட்டு, கால தாமதம் இல்லாமல் பணிகளைச் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து நல்லதுதான். இந்தக் கருத்தை அரசு கருத்தில் கொள்ளும்.

திரு. ம. சங்கரலிங்கம் : திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட புகார்கள் வந்து, பின்னால் வரும் அதிகாரிகள் அதனால் பாதிக் கப்படுவதால், இப்போது புதிய திட்டங்களைத் தீட்டுவதற்கு அதிகாரிகள் அஞ்சுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு கேரள மாநிலத்திலே திட்டங்கள் போட்டு வேலை செய்கிறபோதே, விஜி லென்சுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, அவர்கள் திடீர் திடீரென்று வந்து பார்க்கிறார்கள். சிமெண்ட் கலவை மற்றும் தொழில் முறைகளைக் கவனிக் கிறார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு அதற்கான பில் சாங்ஷன் செய்யப்பட்ட பிறகு, இந்த மாதிரியான புகார்களுக்கு இடமில்லை என்கிற அளவுக்கு அவர்கள் ஒரு நியதி வகுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நியதியை வகுக்க நமது அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அம்மாதிரியான பணிகளைச் செய்ய 'மொபைல் ஸ்க்வாட்' என்று சொல்லப்படும் அமைப்பு நமது நெடுஞ் சாலைத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அம்மாதிரி அமைப்பை பொதுப் பணித் துறையிலேயும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

சக்தி பைப்ஸ் தொழிற்சாலை.

* 10. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கும் சக்தி பைப்ஸ் நிறுவனத்தை மாநில அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?



(இ) இந்நிறுவனம் மூடப்பட்டிருப்பதால், பாதிக்கப்பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(இ) 410.

திரு. ம. சங்கரலிங்கம் : சக்தி பைப்ஸ் நிறுவனம் மூடப்பட்டுவிட்டதால், அங்கு பணி புரிந்து வந்த 410 தொழிலாளர்களுக்கு வேலை பாதிக்கப்பட்டு அவர்களின் குடும்பங்கள் மிகவும் தொல்லைக்குள்ளாகியிருக்கின்றன. எனவே, அரசு வேறு ஏதாவது ஒரு விதத்தில் அந்தத் தொழிலைத் திரும்பத் தொடங்க ஏற்பாடு செய்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : அரசு இதுவரையில் அந்த நிறுவனத்திற்கு வழிவகை முன்பணம், கடன் ஆகிய வகைகளில் மொத்தம் 195.80 லட்சம் ரூபாயும் வங்கிகள் பொறுப்பேற்றிருக்கும் வகையில் வட்டியுடன் சேர்த்து ரூபாய் 112 லட்சமும் கொடுத்திருக்கிறது. அரசே அந்த நிறு வனத்தை தேசியமயமாக்க வேண்டும் என்று சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் 1975-ல் கொண்டு வந்த தீர்மானம் ஜனாதிபதி அவர்களால் நிராகரிக்கப்பட்டதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இந்த நிலையில் இப்போது அந்த சக்தி பைப்ஸ் நிறுவனமே அதை மேற்கொண்டு நடத்துவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து அது மூடப் பட்டதால் பாதிக்கப்பட்ட 410 தொழிலாளர்களுக்கு அந்த நிறுவனமே வேலை வாய்ப்பு அளிப்பதற்கு முன்வந்தால் அதற்கான உதவிகளைச் செய்யவும், இல்லா விட்டால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேறு வேலைவாய்ப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் அரசு தக்க வழிவகைகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : நான் ஏற்கெனவே சொன்னது போல, சக்தி பைப்ஸ் நிறுவனமே அதை மேற்கொண்டு எடுத்து நடத்துவதற்கு இப்போது முயற்சிகளை எடுத்து வருகிறது. 'சிக் யூனிட்'டாக அதைத் தொடர்ந்து அறிவிக்க வேண்டும் என்று அது கேட்டிருக்கிறது. அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்த நிறுவனம் மீண்டும் செயல்படத் தொடங்கும்போது அதற்கான உதவிகளைச் செய்வதற்கும், அதில் பணியாற்றிய தொழிலாளர்கள் மீண்டும் வேலையில் அமர்த்தப்படுவதற்கான வசதிகளைச் செய்யவும் இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

[1981 ஜனவரி 23

திரு. ஆ. நல்லசிவன் : அந்த நிறுவனத்தில் பாதிக்கப்பட்ட 410 தொழிலாளர்களுக்கும் முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது உதவி இந்த அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இப்போது அது போன்ற திட்டம் எதுவும் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) மாற்றுத் தலைவர் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6 ஆவது விதியின்கீழ் மேலவையின் 59 ஆவது கூட்டத் தொடருக்கு, கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நியமித்துள்ளேன் :—

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
3. திரு. சு. அருணாசலம்
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி

### (2) அண்ணாமலைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு ( Senate ) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுள் இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத்தேர்தல் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்குமூலம் நடைபெறும். இத் தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

நியமனத்தாள் வந்து சேர கடைசி நாளும் நேரமும் : 24—1—1981 நண்பகல் 12 மணி.





நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும் : 24—1—1981 பிற்பகல் 1 மணி.

நியமனத்தாள்கள் திரும்பப்பெற கடைசி நாளும், நேரமும்: 27—1—1981 நண்பகல் 12 மணி.

வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கான கடைசி நாளும், நேரமும் : 27—1—1981 பிற்பகல் 1 மணி.

தேர்தல் இருப்பின், அதற்கான நாளும், நேரமும் : பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்களும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் அகர வரிசைப் பட்டியலும் மேலவைச் செயலாளரிடமிருந்து, அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

### (3) சென்னைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சென்னை பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுள் மூவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத் தேர்தல் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்குமூலம் நடைபெறும். இத் தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப்பட்டுள்ளன :—

வேட்பு மனுக்கள் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளும், நேரமும் : 24—1—1981 நண்பகல் 12 மணி.

வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்தல் : 24—1—1981 பிற்பகல் 1 மணி.

வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும், நேரமும் : 27—1—1981 நண்பகல் 12 மணி.

வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கான கடைசி நாளும் நேரமும் : 27—1—1981 பிற்பகல் 1 மணி.

தேவை ஏற்படின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் : பின்னர் அறிவிக்கப்படும்.

வேட்புத்தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நான் குறிப்பிட்டேன். " பார் சிறுத்ததோ படை பெருத்ததோ " என்று சொல்லுவார்கள். அதைப் போலவே " மக்கள் வெள்ளம் பெருத்ததோ மாமதுரை சிறுத்ததோ " என்று சொல்லுமளவுக்கு தமிழ் கூறும் நல்லுலகத்தைச் சேர்ந்தவர்களையும், தமிழ் உணர்வு படைத்த பெருமக்களையும் ஒன்றாகத் திரட்டி அம்மாநாட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்தி முடித்திருக்கிறார்கள். நடந்து முடிந்த அந்த மாநாட்டில் தமிழக மக்களை மட்டுமல்லாமல், இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ் உணர்வும் ஆர்வமும் படைத்த மக்களையும் வரவழைத்து, அதோடு கடல் கடந்த நாடுகளில் உள்ள தமிழ் ஆய்ந்த பெருமக்களையும் ஒன்றாகத் திரட்டி தொன்மைத் தமிழில் பொதிந்து கிடக்கிற புதினங்களை வெளியே கொண்டு வந்து, " வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் " என்று சொல்லும் அளவுக்கு இன்றைக்கு ஒரு குறுகிய வட்டத்தில், குறுகிய எல்லைப் பகுதிக்குள்ளாகத் தமிழ் உணர்வு இருக்கிறதே அந்த நிலைமையை மாற்றி கடந்த காலத்தில் தமிழ் எப்படி பரந்து, விரிந்து இருந்தது என்ற வரலாற்றை நாட்டுக்கும் உலகுக்கும் எடுத்துச் சொல்லும் பெருவிழாவாக அம்மாநாட்டை நடத்திக் காட்டிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும், அவரால் வழி நடத்தப்படும் இந்த அரசையே சாரும். அப்படிப்பட்ட ஒரு பெரு விழாவை நடத்தியும்கூட, தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல், சுவரொட்டியிலோ, ஒரு " வால் போஸ்டரிலோ " அல்லது ஒரு கல்வெட்டிலோ தன் பெயர் இல்லாத அளவுக்கு எல்லாவற்றிலும் இந்த அரசையே முன்னிலைப்படுத்தி, அந்த அரசோடு தன்னைப் பின்னிலைப்படுத்திக் கொண்ட நிலையில், ரிக அருமையான பணியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். நான்மாடக் கூடல் நகரில், நான்கு திக்குகளிலிருந்தும் வந்த தமிழ் ஆய்ந்த பெருமக்கள் இப்படிப்பட்ட மாபெரும் விழாவினை நடத்திக் காட்டிய தலைவர் யார் யார் என்று கேட்டபோது, அது நான்தான் என்று தன்னை முன்னிலைப்படுத்தி நிறுத்தாமல் மிகுந்த அடக்கத்தோடும் அமைதியோடும் மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். வேறுபட்ட நாடுகளிலிருந்து வந்தவர்கள், வேறுபட்ட உணர்வுகளுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாமல் இத்தகைய வெற்றியைத் தேடித்தந்த வெற்றித் திருமுகம் எங்கே என்று மதுரைப் பெருநகர் முழுவதும் அந்தத் தமிழ் ஆய்ந்த பெருமக்கள் கேட்டபோது, நான்தான் அது என்று தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளாமல், தன்னை அங்கே விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் செயலாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் அவரால் வழி நடத்திச் செல்லப்படும் இந்த அரசையும் நாம் பெற்றிருக்கிறோம். நான் இதைச் சொல்வதற்குக்



காரணம், இங்கே விளம்பரப் பிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், " நாம் இருவர், நமக்கு இருவர் " என்று சொல்லும் குடும்பக் கட்டுப்பாடு விளம்பர போர்டில்கூட சிவப்பு முக்கோணத்தில் தன்னுடைய முகம் வராதா என்று ஏங்கித் திரிந்த சரித்திர நாயகர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நாயகர்கள் வாழ்கிற இந்த நாட்டிலேதான் அகில உலகத்தையும் சார்ந்த தமிழ் ஆய்ந்த மக்கள் எல்லாம் கூடி பாராட்டக்கூடிய மாபெரும் விழாவை நடத்திக் காட்டி, அதிலே தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளாமல், தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ளாமல், மிக அமைதியாக, கம்பீரமாக நடந்து கொண்டிருக்கிறார் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்றால், அது மிகையாகாது.

அது மட்டுமல்ல. அனைத்து மக்களையும் மதுரை மாநகரில் ஒன்று திரட்டி, அதிலே இந்தியத் துணைக் கண்டத்தையே வழி நடத்திச் செல்லும் இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும் அழைத்து வந்து, அந்தப் பல லட்சக் கணக்கான மக்கள் மத்தியிலே அவர்களை அழைத்து வந்து, சிறப்பு செய்திருக்கிறார். " இந்திரா காந்தி அம்மையார் வருவாரா? வரமாட்டாரா? " என்ற கேள்விகள் தொனிக்கிற நேரத்தில் ' எப்படி வந்துவிடுவார்! நான் பார்த்துவிடுகிறேன் " என்று மார் தட்டி ஆலவட்டம் சுற்றி, தோள் தட்டி, தொடை தட்டி சிலர் இருந்த நேரத்திலும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரைக்கு அழைத்து வந்தார்கள். அது மட்டுமல்ல, லட்சக்கணக்கான மக்களின் உணர்வுகளையும் உள்ளத்தையும் புரிந்துகொள்கிற ஆற்றல் படைத்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அனைத்து இந்தி பேசாத மக்கள்மீது நாங்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்ற உத்தரவாதத்தைக் கொடுக்கும் நிலையையும் உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட ஒரு உத்தரவாதம் தந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு படி மேலே போய் சொல்ல வேண்டுமென்றால், மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையாரின் அந்த உத்தரவாதம் வெறும் வாய் வார்த்தைகளாக இல்லாமல், அதற்குச் சட்ட வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அது உத்தரவாதம்தான். அந்த உத்தரவாதத்திற்கே நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன் என்றாலும், பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் உருவாக்கப்படுகிற சட்ட வடிவங்களைப்போல் இந்த உத்தரவாதமும் சட்டவடிவம் கொடுக்கப்பட வேண்டும். " இந்தி பேசாத அனைத்து மக்கள் மீதும் இந்தியை

(4) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் கொடுப்பது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24 ஆம் நாள் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

(5) மேலவை நிகழ்ச்சி விவரம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்பட்டவாறு, மேலவை 23—1—1981 முதல் 30—1—1981 வரை நடைபெறும். மேற்கொண்டு நிகழ்ச்சி விவரம் பின்னர் முடிவு செய்யப்படும்.

8. ஆளுநர் உரையின்மீது விவாதம்.

(முற்பகல் 11-00)

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21 ஆம் நாள், ஆளுநர் அவர்கள் களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர் "
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் அவை முன் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21 ஆம் நாள், ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை மேதகு ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்."

@ 102-125ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரோக்கியமிக்க, நல்ல ஆக்க பூர்வமான ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழியும் பெருவாய்ப்பு கிடைத்தமையாலும், ஆளுநர் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடக்க இருக்கும் விவாதத்தைத் தொடங்கி வைக்கக்கூடிய பெருவாய்ப்பு கிடைத்தமையாலும் நான் மிகுந்த மகிழ்ச்சியையும், பெருமையையும் அடைகிறேன். இவ்வாய்ப்பைத் தந்த அவைத்தலைவர் பெரியவர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய உணர்வுகளையும், அரசாங்கத்தை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் குறிக்கோள்களையும், திட்டங்களையும் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுவதாக அமையும் என்பது இந்த அவையில் இருக்கும் ஆய்ந்து அறிந்த பெரியவர்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்ததாகும். கூட்டு அவையில் ஆற்றப்பட்ட மேதகு ஆளுநர் அவர்களின் உரை பல சிறப்பு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. கடந்த காலத்தில் நமது அரசு செய்திருக்கிற பணிகளையும், நிகழ்காலத்தில் செய்து கொண்டிருக்கிற பணிகளையும், எதிர் காலத்தில் அரசானை எதிர்நோக்கியிருக்கிற காரியங்களையும், திட்டங்களையும், செயல்படுத்த இருக்கிற பணிகளையும் கோடிட்டுக் காட்டுவதாக இவ்வுரை அமைந்திருக்கிறது. இவ்வுரையில் இருக்கிற அனைத்து சிறப்பு அம்சங்களையும் தனித்தனியாக நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். காரணம், இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் என்னைவிட அனுபவத்தில் சிறந்தவர்கள்; தமிழ் ஆய்ந்த பெருமக்கள். எனவே, சிலவற்றை மட்டும் எனது உரையில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1981 ஆம் ஆண்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு என்றால் அது மிகையாகாது. காரணம், தமிழ், தமிழ் என்று சொல்லி, தமிழுக்காகவே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், தமிழுக்காக உயிரை விடவும் நாங்கள் தயார் என்று இந்த நாட்டில் பறைசாற்றிய பெருமக்கள் எல்லாம் செய்ய முடியாத காரியத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடல் மாநகரில் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டி நடத்திக் காட்டியிருக்கிறார்கள். அப்படி சிறப்புமிக்க அந்தத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டியதன் மூலம் ஒரு பெரிய திருப்பு முனையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். எனவேதான் இந்த ஆண்டு தமிழர் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு என்று

நாங்கள் இணிக்க மாட்டோம்" என்ற அந்த உத்தரவாதம் சட்ட பூர்வமான
ஒன்றாக ஆக்கப்பட்டால், சட்ட வடிவம் கொடுக்கப்பட்டால், நாம் காலமெல்
லாம் அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருக்க முடியும்.

அதுமட்டுமல்ல, நான்காவது உலகத் தமிழ்ச் சங்கத்தையும் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட
ஒரு சங்கம் உருவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே காரணகர்த்தாவாக
இருந்தாலும், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அச்சங்கம் சுய உரிமை
யோடு, பணியாற்ற வழிவகை செய்யும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள்
உறுதியளித்திருக்கிறார்கள். அது தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்
படும் என்ற உறுதியையும் அளித்திருக்கிறார்கள். அந்த சங்கம், தமிழகத்தில்
மட்டுமல்லாமல், வெளி மாநிலங்களிலும், இன்னும் சொல்லப்போனால் கடல்
கடந்த நாடுகளிலும் உள்ள தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு
கொண்டு இயங்கும், தமிழ்ப் பண்பாட்டையும், நாகரிகத்தையும், கலாச்சா
ரத்தையும் உலகிற்குப் பறைசாற்ற இச்சங்கம் உதவி செய்யும் என்றால், அது
மிகையாகாது.

தமிழுக்காக உயிர் ஈந்த மன்னர்கள் ஏராளமாக இங்கே இருந்திருக்கிறார்
கள். உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழுக்காக இழந்தவர்கள் ஏரான
மாக இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய தமிழகத்தைப் பொறுத்த
வரையில், தமிழுக்காக வாழ்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, தமிழால்
ஏற்றம் பெறும் மக்களைத்தான் நாம் காண முடிகிறது. இந்த நிலையில்
எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லுகிற உணர்வு வெறும் ஏட்டள
வில், பேச்சளவில் இல்லாமல், செயல் வடிவம் பெற வேண்டும் என்று சொல்லி,
நமது அரசு அதனைச் செயல்படுத்துவதில் முனைப்பைக் காட்டி வருகிறது.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், இதனை தீவிர
மாகக் கவனத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

அது மட்டுமல்ல. தமிழகத்தின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக
மத்திய அரசிடமிருந்து ஏறத்தாழ 3,150 கோடி ரூபாய் உதவியைப் பெற்று
வந்திருக்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள். தமிழகத்தில் தொழில்
வளர்ச்சி ஏற்பட்டாக வேண்டும், தமிழ் மக்கள் வாழ்வில் வளம் ஏற்பட்டாக
வேண்டும் என்றால், திட்டத்திற்கான மூலதனச் செலவு அதிகப்படுத்தப்பட
வேண்டும் என்று பல முறை மத்திய அரசோடு பேச்சுவார்த்தை மேற்கொண்டு,
அதற்கு ஏறத்தாழ ரூபாய் 3,150 கோடி என்று நிர்ணயம் பெற்று வந்திருக்கி
றார். இதன் காரணமாகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும்
இந்த அரசையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் ...வது ஐந்தாண்டு



(முற்பகல் 11-10)

அப்படிப்பட்ட அதிகமான தொகையைப் பெற்றுத் தந்திருக்கிற இந்த அரசுக்
கும், இந்த அரசை வழி நடத்திச் செல்லுகிற மாண்புமிகு முதல்வர் அவர்
களுக்கும் நன்றி சொல்ல வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

அடுத்து, இந்த அரசினுடைய அடிப்படையான நோக்கம் வறுமையை
ஒழிக்க வேண்டும் என்பது. வறுமையை ஒழிக்க முடியுமா, வறுமையை
ஒழிப்பது எளிதான காரியமா என்ற கேள்விகள் நாட்டிலே எழக்கூடும்.
வறுமையை ஒழிக்க வேண்டுமென்ற கொள்கை ஏட்டளவில் இல்லாமல் செயல்
வடிவம் பெற வேண்டுமென்ற முனைப்பில் நமது அரசு செயல்பட்டுக்கொண்
டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திட்டக்
குழு நபர்வாரி வருமான அடிப்படையில்தான் நமக்கு வேண்டிய மூலதனத்
தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு, வறுமைக்
கோட்டிற்குக் கீழே எத்தனை சதவீதம் பேர்கள் இருக்கிறார்கள் என்ற சத
வீதத்தை எடுத்து அதற்கேற்ப இந்த மூலதனத்தை ஒதுக்க வேண்டும் என்ற
அடிப்படையிலே கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படியானால் அந்த அளவிற்கு
வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தமிழகத்திலே இந்த அரசு
காலத்திலே இருக்கிறார்களா என்று கேட்கக் கூடும். இந்த அளவிற்கு
வறுமைக் கோட்டிற்குக் கீழே மக்கள் இருப்பதற்குரிய நிலைமையை ஏற்படுத்
திய பெருமை கடந்த காலத்திலே இருந்த அரசைச் சாரும். ஆனால் வறுமைக்
கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கு வாழ்வு தர நம்முடைய அரசு பல வழி
களில் முயன்று கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டக் குழுவின் விவாதத்தில் வறுமைக்
கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் சதவீதத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்க
வேண்டுமென்று தன்னுடைய கருத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த
அளவிற்கு இந்த அரசு வறுமையை ஒழிப்பதற்குக் காரியங்களை ஆற்றிக்
கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக
இருக்கிறேன்.

விவசாயிகள் போராட்டம் என்ற தீச் சுவாலை கொழுந்து விட்டு கடந்த
காலத்திலே எரிந்திருக்கும். நீங்களும் பார்த்திருக்கலாம். ஆனால் விவசாயப்
பெருமக்கள் இந்த அரசைப் பார்த்துக் கோருவதெல்லாம், தாங்கள் உற்பத்தி
செய்கிற பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதுதான்.
உழைப்பவன் கணக்குப் பார்த்தால் உழக்குத்தான் மிஞ்சும் என்பார்கள்.
நானும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். விவசாயத்தில் ஈடுபட்
டிருப்பவன்தான். "காடுவெட்டி" என்ற பெயர் எனக்கு வரக் காரணம் நான்

(திரு. காடுவெட்டி கன்னைப்பன்) [1981 ஜனவரி 23

ஒரு விவ்சாயத் தொழிலாளி என்பதுதான். அதனால்தான் அந்த நாமத்தைச் சூட்டினார்கள். ஆகவே விவசாயப் பிரச்சினையை நான் நன்றாக உணர்ந்தவன். விவசாயிகளுடைய உணர்வுகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறவன் நான். ஆகவே இந்த மாநில அரசையும், மத்திய அரசையும், விவசாயிகள் சார்பாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், விளைகின்ற பொருள்களுக்கு உரிய விலையைக் கொடுக்க வேண்டும் என்பதுதான். விலையை நிர்ணயிக்கிற அதிகாரம் மத்திய சர்க்காரிடத்தில் இருக்கிறது. இங்கே விளையும் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 130 ரூபாய் தர வேண்டுமென்று கேட்கிறோம். இந்த அரசும் அப்படிக் கேட்கிறது. ஆனால் மத்தியிலே உள்ளவர்கள் 105 ரூபாய் கொடுத்தால் போதும் என்று சொல்லி அவ்வாறு நிர்ணயம் செய்கிறார்கள். இங்கே விளைகிற கரும்புக்கு மத்திய சர்க்கார் ஒரு டன்னுக்கு 130 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்கிறது. ஆனால் ஒரு டன்னுக்கு 200 ரூபாய் தர வேண்டுமென்று நாம் கோருகிறோம், இந்த அரசு கோருகிறது. ஆனால் இங்கே இருக்கிற விவசாயத் தலைவர்களும், விவசாயத் தலைவர்களுக்குப் பின்னால இருக்கின்ற அரசியல் உணர்வு படைத்தவர்களும் இந்த அரசினுடைய அமைதியான போக்கைக் கெடுப்பதற்காக இந்த அரசின் மீது ஏவுகணைகளைத் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது மிகையாகாது. அதற்காக மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இந்த அரசுக்குள்ள தர்மசங்கடமான நிலையை விவசாயப் பெருமக்கள் உணர்ந்தாக வேண்டும். இந்த அரசினுடைய நியாயமான உணர்வுகளை விவசாயிகள் சங்கத்திற்குப் பின்னாலே உள்ள அரசியல் உணர்வு படைத்தவர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய சர்க்கார் நெல்லுக்கு குவின்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் என்று நிர்ணயித்த பிறகும்கூட, நம்முடைய மாநில சர்க்கார் மேலும் 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்து, அதாவது 115 ரூபாய் கொடுத்து நெல்லை வாங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் போலவே கரும்பு டன் ஒன்றுக்கு 130 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்திருந்தபோதிலும் மாநில சர்க்கார் 175 ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. இருப்பினும் எதிர்முகாமில் இருப்பவர்கள், போராட்டத்தைத் தூண்டாமல் இருக்கிறோம், தூண்டிவிடத் தயாராக இருக்கிறோம். ஆனால் இதுவரை தூண்டவில்லை என்று சொல்லிக்கொண்டு, போராட்டங்களுக்கு உள்ளே புகுந்து கொண்டு, நாட்டில் உள்ள அமைதியைக் கெடுத்துக் கொண்டிருப்பதை இந்த நாடு மறக்காது. ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில், விவசாயப் பெரு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றுதான் கருதுகிறது.



1981 ஜனவரி 23] (திரு. காடுவெட்டி கன்னைப்பன்)

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்று வள்ளுவன் எடுத்துக் காட்டியதைப் போல சுழல்கின்ற ஏருக்குப் பின்னாலேதான் இந்த நாடு நடக்கும். ஏர் முடங்கினால் இந்த நாட்டுச் செயல்களும், இந்த நாடும் முடங்கும் என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்கிறது தமிழக அரசு. விவசாயிகள் உள்ளத்திலே சோர்வு ஏற்பட்டு விவசாயத்தில் சோர்வு ஏற்படுமானால், இந்த நாடும் சோர்வு அடைந்துவிடும் என்பதைப் புரிந்துகொண்ட இந்த அரசு, மத்திய சர்க்கார் உரிய விலையை நிர்ணயிக்காவிட்டாலுங்கூட, கூடுமான வரையில் அதிகமான விலையைத் தந்து நல்லுணர்வோடு செயல்பட்டு வருகிறது. ஆகவே இந்த அரசுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சிறு விவசாயிகள் வாங்கியிருந்த தக்காவிக் கடனில் ரூ. 20,61,50,077-88 நம்முடைய அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. இப்படி தள்ளுபடி செய்த தன் காரணமாக ஏறத்தாழ 9,17,559 உழவர் பெருமக்கள் நன்மை பெற்றிருக்கிறார்கள். இப்படி நன்மை பெற்றிருக்கிற உழவர்கள் சார்பாக இந்த அரசுக்கும், இந்த அரசை வழி நடத்திச் செல்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நான் என்னுடைய பணிவன்பான நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கடந்த ஒரு மாத காலமாக அல்லது 20 நாட்களாக பெரியதொரு போராட்ட உணர்வு தமிழகத்திலே எழக் காரணமாக இருந்தது மின்சாரக் கட்டணத்தை வசூலிப்பதுதான். மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டதால், அதைக் கண்டித்து மரங்கள் வெட்டப்பட்டு சாலைகளிலே போடப்பட்டன. பாலங்கள் இடிக்கப்பட்டன. நகரங்களுக்குச் செல்லுகிற தண்ணீர் குழாய்களைக் கூட உடைத்து அதில் விஷப் பொருள்களை கலக்கக்கூடிய அளவிற்கு சில விஷமிகள் தயாராக இருந்தார்கள் என்பதையெல்லாம் இந்த நாடு மறந்திருக்க முடியாது. அதே நேரத்தில் இந்த அரசு பரிவோடு விவசாய சங்கத் தலைவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது. மின் கட்டண பாக்கி அதிகமாக இருப்பதால், அதை தவணை முறையிலே வசூல் செய்ய வேண்டுமென்று பெரும்பான்மையான விவசாயப் பெருமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 1 பிளஸ் 1 என்ற அடிப்படையில் மின் கட்டணத்தைக் கட்ட அரசு ஒத்துக்கொண்டது. அதற்குப் பின்னாலும் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள் விவசாயிகளும், அவர்களுக்குப் பின்னால் இருக்கிற அரசியல் உணர்வு படைத்தவர்களும். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று நாம் மனப்பூர்வமாக ஆசைப்படுகிறோம். ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசில் உள்ள திட்டக் குழு மாநில அரசுக்குத் தாக்கீதுகளை அனுப்பிக்கொண்டிருக்கிறது. திட்டக் குழு எப்படிப்பட்ட தாக்கீது

(திரு. [illegible]வெட்டி கண்ணப்பன்) [1981 ஜனவரி 23

களை அனுப்பிக்கொண்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். தமிழ் நாடு மின் வாரியத்திற்கு அதிர்ச்சியைக் கொடுத்து நிதி நிலைமையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென திட்டக் குழு தமிழக அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. அதிர்ச்சி என்றால், தமிழ் நாட்டில் உள்ள மின் கட்டண [illegible] உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. தற்போது 12 பைசா என்றால், அதையே கட்ட மறுக்கிறார்கள். 12 பைசாவை 1 பின் 1 என்ற தவணை முறையில் கட்டச் சொன்னாலே போராட்ட உணர்வு வெடிக்கிறது. ஆனால் மத்திய திட்டக் குழுவினர் அதிர்ச்சி வைத்தியம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படி மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது என்பது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பெரியதொரு அதிர்ச்சியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்

([illegible])

கிறேன். அது மட்டுமல்ல, இந்த மின்சாரக் கட்டண அளவை நாம் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில் உள்ள அளவோடு ஒப்பிட்டுக் குறிப்பிடு வோமானால், மிகக் குறைவான மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்கின்ற மாநிலமாக நம்முடைய மாநிலம் இருக்கிறது. நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அண்டை மாநிலங்களான, ஆந்திர மாநிலத்திலே 14.68 பைசாவும், அசாம் மாநிலத்திலே 21 பைசாவும், பீஹார் மாநிலத்திலே 17 பைசாவும், குஜராத் மாநிலத்திலே 25.77 பைசாவும், கர்நாடகத்தில் 21 பைசாவும், கேரளா மாநிலத்திலே 13 பைசாவும் வசூல் செய்து கொண்டிருக் கிறார்கள். இந்த அளவுக்கு இந்திய துணைக் கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்கள் வசூலிக்கின்றன. தமிழ் நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, அவைகள் அதிகமான மின் கட்டணத்தை, அதிகமான பைசாக்களைத் தான் வசூல் செய்துகொண்டிருக்கின்றன என்பது தெரிகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், 12 பைசாதான் என்று சொன்னாலும் அதை எதிர்த்தும் ஒரு போராட்டம். அந்தப் பிரச்சினைக்குப் பின்னணியிலே இருக்கின்ற பெருமக்களைக் கேட்டால், போராடலாமா, வேண்டாமா என்ற உணர்வைத் தூண்டுவதற்குக் காரணகர்த்தாவாக இருப்பது இந்த ஆட்சி, நாங்கள் போராட்டத்தைத் தூண்டவில்லை என்று சொல்கிறார்கள். நாங்கள் போராட் டத்தைத் தூண்டவில்லை என்று ஓரிடத்தில் சொல்லிவிட்டு, "இந்த விவசாயி களுக்கு நாங்கள் சாதகமாக இருப்போம், விவசாயப் பெருமக்களுக்குச் சாதகமாக இருப்போம்" என்று ஒரு தீர்மானத்தைப் போடுகின்றார்கள். இப்படி இரட்டை வேடம் போடுகின்ற அரசியல் கட்சிகளைத்தான் நாம் பார்க்க முடிகிறது.



1981 ஜனவரி 23] (திரு. காடுவெட்டி கண்ணப்பன்)

1972 ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன். அன்றைய தினம் புதிய [illegible] கட்டணத்தை பைசாவிலிருந்து 11 பைசா என்று ஒரு பைசா உயர்த்திக் கட்டணத்தை நிர்ணயித்தது. அப்படி ஏற்றிய நேரத்தில், எங்கள் மாவட்டமான கோவை தீவிரமாக இருந்தது. பெரியார் மாவட்டத்தில் கட்டை வண்டிப் போராட்டம் [illegible] கட்டணம் உயர்த் தப்பட்டபோது ஏற்பட்ட போராட்டத்தில், பறிக்கப்பட்டது. அது மட்டு மல்ல, ஆற்றூருக்குப் பக்கத்திலே ஒரு ஊரில் 11 பேர்கள் உயிர் பறிக்கப் பட்டது. இதை இந்தத் தமிழக வரலாறு நிச்சயமாக மறந்திருக்க முடியாது.

அதற்குப் பிறகு 1975 ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன். இந்த [illegible] நாட்டிலே எமர்ஜென்சி வந்தபோது, அந்த எமர்ஜென்சி நிலையைப் [illegible] மின்சாரக் கட்டணம் இந்த [illegible], அந்த 11 பைசாவிலிருந்து 14 பைசாவாக [illegible] நாட்டிலே உயர்த்தப்பட்டது. அப்போது [illegible] கேட்பதற்கு [illegible] சொல்வதற்கு [illegible] [illegible] இருந்தோம் என்று சொல்வதற்கு [illegible] இல்லை. அந்த நிலையில் அன்றைக்கு இருந்தவர்கள் [illegible] [illegible] ஆனால் அன்றைய தினம் ஏற்படுத்தப்பட்ட அந்த [illegible] [illegible] 14 பைசாவாக [illegible] [illegible] 14 பைசா [illegible] [illegible] [illegible], அதையும் [illegible] முறையிலே [illegible] வேண்டுமென்றே குறை சொல் [illegible] இருந்தாலும் [illegible], அதிலேயும் [illegible], விவசாயிகள் [illegible] [illegible]. எங்கே [illegible] [illegible] என்ற அளவில் [illegible] உணர்வோடு [illegible] சாதகமாக [illegible] என்ற [illegible] இருக்கின்றன என்று சொன்னால், அது [illegible] அரசியல் இயக்கங்கள் இருக்கின்றன என்று சொல் [illegible]. விவசாயிகள் போராட்டம் வேண்டாம் என்று [illegible] உணர்ச்சியும் கொண்டிருக்கும் [illegible] இல்லை. விவசாயிகளிடம் பற்றும் பாச உணர்ச்சியும் பெற்றிருக்கிறது என்பதை ஒருவரைத்தான் தமிழக முதல்வராக இந்த அரசு பெற்றிருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாயிகளுடைய அந்தப் பிரச் சினைக்கு, அவர்களுடைய போராட்ட உணர்வுகளுக்கு இந்த அரசு செவி சாய்க்கிறது. மின் கட்டணத்தைப் பொறுத்த அளவில், மத்திய அரசும் அதற்குக் கீழே இருக்கின்ற திட்டக் கமிஷனும், அந்தக் கட்டணத்தை உயர்த்த வேண்டும். அதை வசூல் செய்துதான் ஆகவேண்டும் என்று ஆணையிடுகின்றன. அப்படி ஆணையிட்ட நேரத்திலும், நம்முடைய அரசு 12 பைசா என்று நிர்ணயித்து. அதை வசூலிப்பதற்கு கெடுபிடிகளை அதிகப் படுத்தாமல், விவசாயப் பெருமக்களை அழைத்துப் பேசி, மனிதாபி மானத்தின் அடிப்படையில், அவர்களுடைய பிரச்சினைகளை அனுகி

கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் அனுதாபத்தோடு இந்த விவசாயிகள் பிரச்சினையை அணுகிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் இந்த விவசாயப் பிரச்சினையை அதிகப்படுத்தி, அதைப் பெரிய பிரச்சினையாக ஆக்கிக்கொண்டிருக்கின்ற அரசியல் இயக்கங்களினால், அவர்கள் பொறுப்புக்கு வருகின்ற காலங்களில், அது அவர்களுக்கேகூட பாதகமாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கடந்த 3 ஆண்டுகளாக நல்ல மழை பெய்து நிலத்தடி நீர் ஏராளமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு முன்னாலே கோவை மாவட்டத்திலே கிணறு வெட்ட வேண்டுமென்று சொன்னோம். அதற்கு என்று பெர்மிட் கொடுத்தோம். அப்போது நிலத்தடி நீர் வறண்டு போய்விட்டது. 1977-க்குப் பின்னாலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதவிப் பொறுப்பு ஏற்ற பின்னர், தமிழகத்திலே நல்ல மழை பெய்து. அதிகமாகப் பெய்து, நிலத்தடி நீர் தேவையான அளவுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு மழை குறைவாகப் பெய்திருக்கிறது. அப்படி மழை குறைந்துவிட்ட காரணத்தினாலே, சில பகுதிகளிலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வட ஆற்காடு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியைப் போக்க கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகள் வெட்டவும் என்று 1.30 கோடி ரூபாய் நம்முடைய அரசு ஒதுக்கியுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்தில் நில வரியை அடியோடு நாம் தள்ளுபடி செய்திருக்கிறோம். அப்படிச் செய்வது எதைக் காட்டுகிறது? விவசாயப் பெருமக்களிடம் நாம் வைத்திருக்கின்ற பாச உணர்வை, நல்லுறவைக் காட்டுகிறது. அவர்களுடைய வாழ்விலே வாட்டம் வரக்கூடாது என்ற மனிதாபிமான உணர்வோடு நம்முடைய அரசு காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மேற்கு மலைத் தொடரில் பெய்கின்ற மழை ஆறாகி, மேற்குக் கடற்கரையில் வீணாக விழுகின்ற தண்ணீரைத் தடுத்து இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்குப் பாய்ச்சினால் அது நல்ல பலனைத் தரும் என்ற அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரள அரசோடு தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்தி, அந்தத் தண்ணீரைத் திருப்புகின்ற முழுப்பணியை மேற்கொண்டிருப்பதாக இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி எடுத்துச் சொல்லியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





1968-ஆம் ஆண்டிலே இருந்து ஏறக்குறைய 12 ஆண்டுக் காலமாக காவிரி நீர்ப் பிரச்சினை தீர்க்க முடியாத பிரச்சினையாக இருக்கிறது. அதற்குக்கூட நம்முடைய அரசு பல முனைகளில் பேச்சு வார்த்தை நடத்தி, அதைத் தமிழகத்திற்குக் கொண்டுவர தன்னாலான பணிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதற்கு என் நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல. ஒரு மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி பெருக வேண்டியிருக்கிறது. அதற்குச் சாதகமாக இருப்பது மின்சாரம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் போதிய மின்சார உற்பத்தியைச் செய்ய வேண்டும். நம்முடைய தேவைக்கு வேண்டிய மின்சாரம் கிடைக்காமல் நாம் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கு நாம் 1,023 கோடி ரூபாய் செலவிட்டு பல வழிகளில் மின்சார உற்பத்தியைப் பெருக்கப் போகிறோம். அதற்காக என்று உத்தரவாதமும் தரப்பட்டிருக்கிறது. அதற்கு நான் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், மேட்டூர் புனல் மின் திட்டமும், மேட்டூர் அனல் மின்திட்டமும் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு, அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து சென்னை மாநகரத்தில் உள்ள பி அண்டு ஸி தொழிற்சாலைபற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்த ஆலை நலிவுற்ற ஒரு ஆலையாக இருந்துகொண்டிருக்கிறது. அதிலே ஏறக்குறைய 13 ஆயிரம் பேர்கள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் அவர்களின் குடும்பங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் நாளைய சோற்றுக்கு என்ன வழி என்ற கேள்விக் குறியோடு வேதனைப் பட்டுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்த ஆலையில் ஏறத்தாழ ஒரு நாளைக்கு ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் வருவதாகச் சொல்கிறார்கள். இந்த நேரத்தில் நலிவுற்ற தொழில்களை தேசியமயமாக்குகின்ற கொள்கை அடிப்படையிலே இந்த ஆலையையும் தயவுசெய்து மத்திய அரசே எடுத்துக்கொண்டு, அந்த மக்களுக்கு வேலை கொடுத்து வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு பல ஆலைகளை தேசிய மயமாக்கி தானே எடுத்துக்கொண்டிருக்கிறது. நான் உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். பெங்கால் மருந்து கம்பெனியை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதுபோல கோவை மாவட்டத்திலே இருக்கின்ற சில டெக்ஸ்டைல் ஆலைகளையும் மத்திய அரசு தன் வசப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதுபோல இந்த நலிவுற்ற பி அண்டு ஸி ஆலையை எடுத்துக்கொண்டு தொழிலாளப் பெருமக்களுக்கு பல நன்மைகளைச் செய்து

(திரு. காடுவெட்டி கண்ணப்பன்) [1981 ஜனவரி 23

லாம் நினைக்கிறார்கள். நாங்கள் மக்களைச் சந்திக்கப் பயப்படாதவர்கள்.
மக்கள் மன்றத்திலே எங்கள் கொள்கைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன். ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை இந்த ஆண்டு நடத்த வேண்டு
மென்றுதான் அரசு செயல்பட்டது. ஆனால் மத்திய அரசு, ஒட்டுமொத்த
மக்கள் கணக்கெடுப்பு முடிந்த பிறகு தேர்தல்களை நடத்தினால் நலமாக
இருக்குமென்று சொன்னதால், அந்தக் கணக்கெடுப்பு முடிந்த பிறகு,
ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை நடத்த இருக்கிறோம் என்ற உத்தரவாதம்
தரப்பட்டிருக்கிறது. மக்களைச் சந்திக்கப் பயப்படாத அரசாக, மக்களிடம்
ஓட்டு கேட்க தயக்கமில்லாத அரசாக இந்த அரசு இருக்கிறதென்பதை இந்த
நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியத் தேர்தல்
கள் நடத்தப்படுமென்பதற்கு உத்தரவாதம் தரப்பட்டுள்ளதற்காக நான் நன்றி
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகருக்கான குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக்
கூட, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களுடைய தலைமையில் இயங்கும்
அரசு விரைவில் வழி வகை செய்யுமென்று உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது.
திருச்சிக்குப் பக்கத்திலுள்ள கட்டளைப் பொறி மதகின் கீழ் காவிரி ஆற்றி
லிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டுவர 459 கோடி ரூபாய்வரை
செலவாகுமென்று திட்டமிட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.
அதற்கு 459 கோடி ரூபாய் செலவிட வேண்டுமா என்று கேட்கலாம். இந்த
நாட்டிலே இருக்கிற ஏழை மக்கள் ஒரு லட்சம் பேருக்கு வேலை
வாய்ப்பு கொடுக்கவும், அதே நேரத்தில் சென்னைக்குக் குடி தண்ணீர்
கொண்டுவரும் திட்டம் நிறைவேறும் வகையிலும், இது ஒரு பல்நோக்குத்
திட்டமாக அமையுமென்று சொன்னால், அது மிகையாகாது. எனவே இந்தத்
திட்டத்தை வரவேற்று, ஆதரித்து, நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக
இருக்கிறேன்.

தமிழகத்தில் கடந்த 3, 4 மாதங்களுக்கு முன்பாக பஸ் கட்டணம்
உயர்த்தப்பட்டது. அப்படி பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டபோது, பொது
மக்கள் அமைதியாக இருந்த நேரத்திலும்கூட, பொது மக்கள் சார்பு என்ற
போர்வையில் உள்ளடங்கி, இந்த அரசுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டு
மென்று, பஸ் கட்டணம் ஏற்றியது தவறு என்று சொல்லி, போராட்ட
உணர்வுகளைத் தெரிவித்தார்கள். ஆனால் ஆளுநர் அவர்கள் உரையிலே
தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது. இந்தியாவில் மட்டுமல்ல, அகில உலகத்
திலும் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எனவே பஸ்
கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அதற்குக்கூட எதிர்ப்புகளைத் தெரிவித்
தார்கள். நான் குறிப்பாக, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு, நம்முடைய



1981 ஜனவரி 23] (திரு. காடுவெட்டி கண்ணப்பன்)

மாநிலத்தில் பஸ் கட்டணம் எந்த அளவிற்கு குறைவாக உயர்த்தப்பட்டிருக்
கிறது என்பதைச் சொல்ல முடியும். தமிழ் நாட்டில் புற நகர் பிரிவு
பேருந்துகளில் 500 கிலோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்யப் பேருந்துக்
கட்டணம் ரூ. 31.25. ஆனால் கர்நாடக மாநிலத்தில் 40 ரூபாயும், ஆந்திர
மாநிலத்தில் ரூ. 37.50-ம் அதே தூரத்திற்குக் கட்டணமாக வசூலிக்கப்படு
கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ் நாட்டில் பஸ்
கட்டணம் குறைவாகத்தான் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்,
மக்களுடைய எதிர்ப்பு என்ற போர்வையில் உள்ளடக்கி, இந்த அரசைக்
கண்டனம் செய்ய வேண்டுமென்று சிலர் இருக்கிறார்கள். மக்களுக்கு
முடிந்தவரை நன்மை செய்ய வேண்டுமென்றுதான் அரசு இருக்கிறது. நகரப்
பேருந்துகளைப் பொறுத்தவரையில், 30 கிலோமீட்டர் செல்ல தமிழகத்தில்
பஸ் கட்டணம் 1 ரூபாய் 10 காசுகள். ஆனால் அதே தூரத்திற்கு கர்நாட
கத்தில் 2 ரூபாய் 40 காசுகளும், கேரளாவில் 1 ரூபாய் 95 காசுகளும் வசூ
லிக்கப்படுகிறது. ஆக பஸ் கட்டணம் தமிழகத்திலேதான் குறைவாக
இருக்கிறதென்பதை உணர்ந்தாக வேண்டும். பெட்ரோல் விலை ஏறி
யிருந்தும், ஊழியர்களின் சம்பளம் கூட்டப்பட்டும், குறைவான அளவிற்குத்
தான் தமிழகத்தில் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். அதற்குக் காரணம்
மக்கள் துன்புறக்கூடாதென்று மக்கள் நலனையே விரும்பும் அரசாக நம்மு
டைய அரசு இருக்கிறதென்பதுதான். எனவே இப்படிப்பட்ட அரசுக்கு
நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 11-40)

ஒரு அரசு இயங்க அடிப்படைக் காரணமாக இருப்பது வரி வசூலிப்பது.
இந்த நாட்டிலே இப்போது ஒரு கோஷம் இருக்கிறது. உள்ளாட்சி நிறுவ
னங்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மின்சார வாரியத்துக்குச் செலுத்தத்
தக்க அல்லது செலுத்த வேண்டிய வரிகளையெல்லாம் செலுத்தக் கூடாது
என்று கோஷம் போடுகிறார்கள். வரியை அரசுக்குச் செலுத்தாவிட்டால்,
அரசு எப்படி நல்ல காரியங்களைச் செய்ய முடியும்? "வரியை வசூலிக்க
அதிகாரி பெருமக்கள் ஊருக்கு வந்தால், அதனால் நடக்கக்கூடிய விபரீதங்
களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல" என்று பல ஊர்களில் போர்டுகள்
வைக்கப்பட்டிருக்கின்றன. "வீட்டு வரி, தொழில் வரி, இதுபோன்ற எந்த
வரியாக இருந்தாலும், வசூலிப்பதற்கு அதற்குரிய அதிகாரிகள் ஊர்
எல்லைக்குள் வரும்போது, அதனால் நடக்கக்கூடிய விபரீதங்களுக்கு நாங்கள்
காரணமாக இருக்க மாட்டோம், நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல" என்று
போர்டுகள் எழுதி வைத்திருக்கிறார்கள். "இங்ஙனம் கிராம விவசாய
சங்கம்" என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இப்போது கிராம அதிகாரி

(திரு. [illegible] கண்ணப்பன்) [1981 ஜனவரி 23

வேலை வாய்ப்புகளின் திட்டித் தர வேண்டும். அப்படி இந்த ஆலையை அமைத்துக்கொண்டால், அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்து, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் நிறைவேற்றாத ஒரு திட்டத்தினை, மாண்புமிகு முதல்வரவர்கள் தன்னுடைய தனித் தன்மையால் தமிழகத்தில் உருவாக்கியிருக்கிறார்கள். அதுதான் தன்னிறைவுத் திட்டம். அந்தத் திட்டத்தின் மூலம், இந்த மாநிலத்தில் இருக்கிற 376 ஊராட்சி ஒன்றியங்களில், ஆண்டுதோறும் 63 ஊராட்சி ஒன்றியங்கள் 42 கோடி ரூபாய் அளவிற்கு திட்டத்தின் மூலதனத்தில் பலன்களைப் பெறும். அதாவது, அந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற அனைத்து கிராமங்களிலுள்ள மக்களுடைய அடிப்படைத் தேவைகள் ஓராண்டுக்கால எல்லைக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மகாத்மா காந்தி அவர்கள் 18 நிர்மாணத் திட்டங்களைச் சொன்னபோது, அதில் ஒன்றாக 'கிராம ராஜ்யம்' என்று சொன்னார். இந்திய நாடு விடுதலை பெற்று 30, 32 ஆண்டுகளாகியும், இந்த நாட்டில் இருக்கிற பல கிராமங்கள் நடைபாதை வசதி இல்லாமல், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இல்லாமல், பள்ளிக்கூடங்கள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அன்றைய தினம் காந்திபிரான் அவர்கள் 'கிராம ராஜ்யம்' நடைபெற வேண்டுமென்று சொன்னார். அந்த அடிப்படையிலே தான், நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் ஓராண்டுக் கால எல்லையை வரையறை செய்து, அதற்குள் 60 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற அனைத்து கிராமங்களும் தன்னிறைவு பெற வேண்டுமென்று திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். தன்னிறைவு என்றால், அந்தக் கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் பெற்றாக வேண்டும்; பள்ளிக்கூடங்கள் அங்கே உருவாக வேண்டும்; அந்தக் கிராமங்கள் நல்ல சாலைகளைப் பெற்றாக வேண்டும்; மருத்துவ வசதியை அந்த கிராம மக்கள் நிச்சயமாகப் பெற்றாக வேண்டும் என்பதுதான். இந்த முறையிலேதான் தன்னிறைவுத் திட்டத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 60 ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவு பெறுமென்று சொன்னால், வருகிற காலத்தில், அதாவது அடுத்த ஆண்டு 120 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத்



1981 ஜனவரி 23] (திரு. [illegible] கண்ணப்பன்)

திட்டம் நிறைவேற்றப்படுமென்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களும், அனைத்து வசதிகளையும் பெற்றாக வேண்டுமென்ற அடிப்படையில், [illegible] நிறைவேற்றும் வகையில், திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு படி மேலே போய், [illegible] விரும்புகிறேன். கம்ப நாடன், கம்ப ராமாயணத்திலே 'ராம ராஜ்யம்' [illegible] 'வெண்மையும் இல்லாமை [illegible] கொடுப்பாரில்லை" என்றும், "[illegible] இல்லாமையால் [illegible]" என்றும் இரண்டு வரிகளில் அதன் பெருமையைக் குறிப்பிடுகிறார். [illegible] இல்லாமையால் கொடுப்பாரில்லை என்ற [illegible] பொருளாகும். [illegible] இல்லை [illegible] இல்லாததால், அங்கே [illegible] மையால் காவலில்லை என்று சொல்வதால், திருடர்கள் இல்லாததால், அங்கே [illegible] மையால் காவலில்லை என்று கம்பர் சொல்லு [illegible] காவலரும் இடையாது. இதுதான் ராம ராஜ்யம் என்று இந்த நாட்டிலே [வர] வேண்டுமென்று [illegible]. அப்படிப்பட்ட ராம ராஜ்யம் இந்த நாட்டிலே [illegible] பெற வேண்டும் [illegible] கிராமங்களில் [illegible] நல்லதொரு திட்டத்தை மாண்புமிகு [illegible] உணர்வோடு, இப்படிப்பட்ட நல்லதொரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அது முதல்வரவர்கள் இந்த நாட்டிலே அறிமுகப்படுத்தியிருக்கும் [illegible] செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்தியாவிலே எந்த [illegible] 'ராம ராஜ்யம்' என்று குறிப்பிட்டானே கம்ப நாடன், அந்த திட்டம் இது. [illegible] காந்தி [illegible] கனவை நிறைவாக்கும் வகையில், [illegible] இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையிலே மாண்புமிகு முதல்வரவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அது [மிகையாகாது]. [illegible] அவரது அரசுக்கும் என்னுடைய நன்றி மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், [illegible] தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேலைக்கு உணவுத் திட்டம். கிராமங்களிலே இருக்கிற பெருவாரியான மக்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியே அவர்கள் ஏதாவது தொழில் செய்தாலும்கூட, அதற்கான கூலி [illegible] அவர்கள் கௌரவமாக வாழ்க்கை நடத்தும் [illegible] நிச்சயிக்கப்படவில்லை. அவர்கள் [illegible] கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்ற திட்டத்தின்மூலம் வேலை கொடுத்து, புது வாழ்வை உருவாக்கியுள்ள அரசு நம்முடைய அரசு. அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியத் தேர்தல் வருமா? அதை நடத்துவார்களா? எத்தனை ஆண்டுகளாக தேர்தலைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், இவர்கள் மக்களைச் சந்திக்கப் பயப்படுகிறார்கள் என்றெல்

களும், அதிகாரி பெருமக்களும் ஊருக்குள்ளே செல்ல பயப்படுகிறார்கள். சில அரசியல் இயக்கங்கள் மறைமுகமாக அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்றன. மத்தியிலே இருக்கின்ற அரசு இவைகளை வசூல் செய்யுங்கள் என்று நம்மை முடுக்கி விடுகிறது. வரிகள் இல்லாமல் எந்த ஒரு அரசாவது நல்ல காரியங்களைச் செய்ய முடியுமா? கழிவறைகள், பள்ளிக்கூடங்கள், வாய்க்கால்கள், கல்லூரிகள் தேவை என்று ஒரு புறத்திலே நாம் நம்முடைய தேவையைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். ஆனால் அதே நேரத்திலே மறு புறத்திலே ஒரு பிரிவினர் அதற்குத் தேவைப்படும் பணம் வரவேண்டிய இடத்திலே இருந்துகொண்டு அதைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி அதற்குத் தூண்டுகோலாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அரசியல் சதுரங்கத்தில் இன்றைக்கு இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு வரிகளைச் செலுத்தாமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக ஒரு புறத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு புறத்திலே நம்முடைய தேவைகளை நிறைவேற்றுமாறு நாம் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மறுபுறத்திலே அதற்குத் தேவைப்படும் பணத்தைக் கட்டாதே என்று ஒரு சிலர் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படித் தூண்டிக்கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக்கொள்வது, வரி கட்டாமல் இருந்தால், அது எந்த வரியாக இருந்தாலும் சரி, எந்த அரசும் இயங்க முடியாது; எந்த நல்ல காரியத்தையும் செய்ய முடியாது. நாட்டு மக்கள் மீது அன்பு வைத்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால், அவசியம் முறையாக வரியைக் கட்ட முன்வருகின்றவர்களுடன் துணையாக இருக்க வேண்டும். அதோடு இப்போது நாட்டிலே மற்றொரு புதிய பிரச்சினை மக்கள் மத்தியில் இருக்கிறது. மின் கட்டணத்தைக் கேட்டால், கடனைத் திருப்பிக் கேட்டால், கொடுப்பதில்லை. அதுமட்டுமல்ல, விவசாயிகளிலே பெரிய விவசாயி என்றும் சிறிய விவசாயி என்றும் இருக்கிறார்கள். தொழில் ஒன்றுதான். விவசாயத் தொழில் செய்யக்கூடிய பரப்பளவு, மூலதனம் இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு இது பிரிக்கப்படுகிறது. எல்லோரும் மண் வெட்டுபவர்கள்தான். 50 ஏக்கர் அல்லது 5 ஏக்கருக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும், மேழியைப் பிடிப்பவர்கள்தான் விவசாயிகள். ஐம்பது ஏக்கருக்குச் சொந்தக்காரனும் விவசாயி. 5 ஏக்கருக்குச் சொந்தக்காரனும் விவசாயி. ஐந்து ஏக்கருக்குச் சொந்தக்காரன் 250 அடிக்குக் கீழேயிருந்து தண்ணீர் பெற வேண்டும். அப்போதும்கூட தண்ணீர் வராது. ஐம்பது ஏக்கர் வைத்துள்ள மேட்டு நிலம் உடையவனும் விவசாயிதான். ஆனால் யாருக்கு நன்மை செய்வது, யாருக்குச் சலுகை தருவது என்பதிலேதான் வேறுபாடு. ஐந்து ஏக்கர், 6 ஏக்கர், 7 ஏக்கர் அல்லது 8 ஏக்கர் புஞ்சையாக இருந்தாலும் அல்லது நஞ்சையாக இருந்தாலும், அவர்களுக்கு நன்மை



கடனைத்
செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கமும் அவர்களுடைய
குறைத்திருக்கிறது.
தன்னுபடி செய்திருக்கிறது. மின்சாரக் கட்டணத்தைக்
என்கிற போர்வை
ஆனால் இன்றையதினம் மிராசுதாரர்கள் கூட விவசாயிகள்
“வரி கட்ட மாட்டோம், நாங்கள்
யிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்.
விட்டு விடுவோம்” என்று சொல்கிறார்கள்.
நினைத்தால் நிலத்தைத் தரிசாக
என்று ஆளுநர் உரை
அப்படிச் செய்தால், நிலம் பொதுவுடைமையாக்கப்படும்
போட்டால், அந்த
யிலே சொல்லியிருக்கிறார்கள். நிலத்தைத் தரிசாகப்
கொடுக்கப்படும் என்று
நிலம் நிலமில்லாத விவசாயிகளுக்குப் பிரித்துக்
இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத புரட்சித் திட்டத்தை ஆளுநர்
வரி கேட்டால் நிலத்தை சும்மா
உரையிலே சொல்லியிருக்கிறார்கள்.
இதனால் கூலி விவசாயிகள்
போட்டு விடுவோம் என்று சொல்கிறார்கள்.
நாட்டிலே உணவுப் பஞ்சத்தை
மிகுதியாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
சிலர் செயல்படுகிறார்கள். அதனால்
உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில்
அமைதியான போக்குக்குக் கெடுதலை
இந்த அரசுக்குக் கெட்ட பெயரை,
சிலர் செயல்பட்டுக்கொண்டிருக்
உருவாக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டு
அவர்களுடைய
நிறைவேறாது.
கிறார்கள். அவர்களுடைய எண்ணம்
பொதுவுடைமையாக்கும் என்ற
செயலின் காரணமாக அரசே நிலத்தைப்
அதற்காக கூலி விவசாயிகள்,
புரட்சிக் குரல் இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது.
அவர்களுக்கு
சிறு விவசாயிகள் சார்பாக நான் மாண்புமிகு முதலமைச்சர்
காடுவெட்டி என்ற பெயர்
நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
காரணத்தால்தான்.
எனக்கு வந்தது. நான் ஒரு விவசாயக் கூலி என்ற
கொண்டு வந்தவன் நான்.
காட்டிலேயிருந்து கரும்பை வெட்டி ஆலைக்குக்
அந்த வகையில்
அதனால்தான் காடுவெட்டி என்ற பெயர் எனக்கு வந்தது.
கூலி விவசாயிகள்
நான்கூட ஒரு விவசாயக் கூலிதான். பொதுவாகவே
செய்கிறார்கள். அரசு
காலை முதல் மாலை வரை கடுமையாக வேலை
அங்காங்குள்ள மிராசு
அவர்களுக்காக கூலியை நிர்ணயம் செய்தாலும் கூட,
தருவதில்லை. அவர்களுடைய
தார்கள் அவர்களுக்கு முறையாக கூலியைத்
அதற்காக வேண்டி
விவசாயி என்கிற போர்வை அகற்றப்பட வேண்டும்.
அரசுக்கு என்னுடைய
இப்படிப்பட்ட புரட்சிக் குரலை எழுப்பியிருக்கிற
முதலமைச்சர் அவர்கள்
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரும்
'வீட்டுக்கு ஒருவ
சார்பாக இங்கே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.
இன்றைக்கு இருக்கின்ற
ருக்குக் கட்டாய வேலை' என்கிற திட்டம்.
எல்லாம் பொருளாதார நிலையில் ஏழையெளிய மக்கள் எப்படியெல்லாமோ கலங்கிக்
வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள
கொண்டிருக்கிறார்கள். முன்பு கூட
இப்போது வறுமைக் கோட்டிற்குக்
மக்களைப்பற்றிய கேள்வி வந்தது.
கீழே இருக்கின்ற அந்த ஏழையெளிய குடும்பங்களுக்கு இந்த விஷயத்தில்
முன்னுரிமை தரப்படுகிறது. ஆகவே இத்திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

(திரு. காடுவெட்டி கண்ணப்பன்) : [1981 ஜனவரி 23

நாலடியில் கூட இதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக ஏழை
யெளிய மக்களுடைய உணர்வுகளை எடுத்துச் சொல்லுகிறேன். அறமும்
தானாக வரும், இன்பமும் தானாக வரும். ஆனால் காசு இல்லாதவன்
நிலை மிகவும் மோசமாக இருக்கும். இரும்பை அடிக்கின்ற ஆலையில்
இரும்புக்கு அடியில் மாட்டிக்கொண்டிருக்கும் எறும்பு வாய் இருந்தால்
எப்படி கதறுமோ அதுபோல ஏழையெளிய மக்கள் கதறிக்கொண்டிருக்கி
றார்கள். 'வீட்டுக்கு ஒருவருக்கு வேலை' என்கிற திட்டத்தை இந்த அரசு
நன்கு உணர்ந்து முதன் முதலாக அறிவித்திருக்கிறது. இத்திட்டம் வெற்றி
பெற வேண்டும். அதற்காக என்னுடைய வாழ்த்துக்களை மாண்புமிகு
முதலமைச்சருக்குத் தெரிவிக்கிறேன். நம்முடைய அரசுக்கும், மாண்புமிகு
முதலமைச்சருக்கும் என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படவில்லை என்ற
மேடைகளிலே கூக்குரலிடுகிறார்கள். அமைதியான முறையில் கண்ணிய
மாக இந்த அரசு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு
ஒன்றைச் சொல்கிறேன். தர்மபுரியாக இருந்தாலும், திருப்பூராக இருந்
தாலும், திருப்பத்தூராக இருந்தாலும், நக்சலைட் போன்ற தீவிர சிந்தனை
யுடையவர்கள் இந்த மண் சிகப்பு ரத்தமாக, சிகப்பு பூக்காடாக மாறினால்
தான், மக்களுடைய அடிப்படைத் தேவை பூர்த்தி செய்யப்படும் என்று மனித
உணர்வுக்கு மாறுபட்ட முறையில் செயல்பட்டார்கள். விவசாயிகள், கடை
முதலாளிகள் போன்றவர்களையெல்லாம் அச்சுறுத்தும் நிலை இருந்தது.
ஆனால் அதே மண்ணிலே, போராட்ட உணர்வு எழுந்த இடத்திலேயே நம்மு
டைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணிந்து சென்று அங்குள்ள
மக்களை அழைத்து, அவர்களுடைய உணர்வுகளைக் கேட்டுப் புரிந்துகொண்
டார்கள். சட்டத்தைக் கடுமையாக ஆக்கி, அந்தப் போராட்ட உணர்வு,
மனிதாபிமான உணர்வுக்குப் புறம்பான நிலை வேறு மாவட்டங்களுக்குப்
பரவாமல் அடக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களையே சாரும்.

(முற்பகல் 11-50)

திருப்பத்தூரிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களாக
இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், அவர்கள்
மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 'நாங்கள் இங்கே இருப்ப
வர்கள், எங்களுக்குத் தெரியும், இந்த அரசு எடுத்த நடவடிக்கை நியாயமான
நடவடிக்கை' என்று அவர்கள் அனுபவபூர்வமாகச் சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால், அனுபவத்தில் உணராதவர்கள், இருக்கின்ற பிரச்சினைகளைச்
சரிவரத் தெரிந்துகொள்ளாதவர்கள் அரசு எடுத்த நடவடிக்கை சரியில்லை



1981 ஜனவரி 23] (திரு. காடுவெட்டி கண்ணப்பன்)

என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளை நேராகக் கண்டறிந்த
வர்கள் அரசு எடுத்த நடவடிக்கை நியாயமான நடவடிக்கை என்று சொல்கி
றார்கள். உண்மை நிலைமை இப்படி இருக்க எடுத்த நடவடிக்கை
சரியில்லை என்று சொன்னால் அது எந்த அடிப்படையிலே நியாயம் என்பது
எனக்குப் புரியவில்லை. எனவே, இந்த அரசு சட்டத்தையும், நியாயத்தையும்
காப்பதற்கு கண்ணியத்தோடு கடமையாற்றுகிறது என்று சொன்னால் அது
மிகையாகாது.

அதுபோலவே, காவலர்கள் நல நடவடிக்கைகளையும் இந்த அரசு தீவிர
மாக எடுத்திருக்கிறது. அவர்களுக்கு அரிசியும் மற்ற பொருட்களும் மலிவு
விலையிலே தருகிறது. மேலும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை
மேம்படுத்துவதற்காக இந்த அரசு தன்னுடைய கவனத்தை அவர்கள் பக்கம்
வைத்திருக்கிறது. இப்படி, இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் எல்லா
வழியிலும் மக்களுடைய ஒட்டுமொத்தமான நிலை கருதி எடுக்கப்படுகின்ற
நடவடிக்கைகளாக இருப்பதால், உறுப்பினர்கள் முழுமையான ஆதரவு தர
வேண்டும். அப்படித் தரும் ஆதரவு இந்த அரசு எடுக்கும் நடவடிக்கை
களின் பலனை செம்மையாக இந்த நாட்டு மக்கள் அனுபவிக்க வழி வகுக்கும்.
அதற்கு ஆதரவு தேவை என்று சொல்லி தலைவர் அவர்களுக்கு நன்றி
சொல்லி அமைகிறேன். வணக்கம்.

திரு. ப. மாணிக்கம் : மதுவிலக்குக் கொள்கைப்பற்றி என்ன?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அவையின் முடிவிற்கு விட்டப்பட்
டிருக்கிறது.

திரு. ப. மாணிக்கம் : உறுப்பினர் அவர்களின் கருத்து என்ன என்று
தான் கேட்டேன்.

திரு. நீலநாராயணன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்
களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மா
னத்தினை மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள்
இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். மிகவும் உணர்ச்சி பொங்க தன்னுடைய
கருத்துக்களை இங்கே எடுத்து வைத்து, இந்த ஆட்சிக்கு தன்னுடைய
நன்றிக் கடனை ஆற்றுவதைப்போல அவருடைய பேச்சு அமைந்திருக்கிறது.
ஆனால், என்னைப் பொறுத்தவரையில், இந்த உரையிலே இருக்கின்ற சிலபல
கருத்துக்களை—எடுத்து விமர்சனம் செய்வது கூட அல்ல—எந்த அளவுக்கு
இந்த அரசு செயல்படுத்தப் போகிறது என்பது கேள்விக்குறியாகவே இருக்
கிறது என்றே இன்னும் நாம் கருதுகிற நிலைமைகள் இருக்கின்றன என்ற
வகையில் இந்த ஆட்சியின் பணிகள் கடந்த காலத்திலே நடைபெற்றிருக்

(திரு. நீலநாராயணன்) [1981 ஜனவரி 23

கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கின்ற பல கருத்துக்கள் சென்ற தடவை நடைபெற்ற ஆளுநர் உரையிலேயும் கூறப்பட்டிருந்தன. அந்தக் கருத்துக்களின் முடிவு என்ன ஆயிற்று, அவைகளைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு எந்த அளவுக்கு முனைந்து நின்றது, இந்த ஆட்சியை நடத்து பவர்கள் முனைந்து நின்றார்கள் என்று பார்த்தால், ஏமாற்றம்தான் நம்மை ஆட்கொள்ளக்கூடிய அளவிலே இருக்கிறது. உண்மையிலேயே இந்த ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கின்ற பல கருத்துக்கள் எதிர்காலத்திலே எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்ற நிலைமைகள் இருக்க முடியும் என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்வேன். சென்ற ஆளுநர் உரையிலே தமிழகத்திலே இருக்கின்ற மதுரைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் போன்ற இந்தப் பல்கலைக் கழகங்களுடைய சட்டங்களுக்குத் திருத்தத்தைக் கொண்டு வந்து, நல்லதொரு சமூக நிலையை உருவாக்குவதற்கு இந்த அரசு முன்வரும், அதற்குரிய முயற்சியினை எடுக்கும் என்று இந்த அரசு தன்னுடைய கருத்தை வலியுறுத்திக் கூறியது. அந்தக் கருத்து இன்றையதினம் எப்படி இருந்து கொண்டிருக்கிறது? ஜனவரி 20 ஆம் தேதியிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும், இதர ஊழியர்களும் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கின்ற அளவிற்கு இன்றையதினம் நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அரசு அளித்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாத காரணத்தாலே, அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கின்ற தன்மையிலே இந்தப் போராட்டம் இன்றையதினம் தலை தூக்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்கு, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன். எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகின்றேன் என்று சொன்னால், சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்கள் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து, இந்த சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்களில் உண்மை இருக்கிறதா, நிச்சயமாக இவர்கள் அவற்றைச் செய்வார்களா, அதற்குரிய பொறுப்பு இவர்கள் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு திட்ட அம்சத்தோடு இருக்கிறதா, அவைகளை நிறைவேற்றுவதாகக் கருதித்தான் இந்த வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்களா என்பது போன்ற விஷயங்களைப் பார்க்கும்போது, ஏமாற்றமாகத்தான் இருக்கிறது என்பதை முதற்கண் சுட்டிக்காட்டிவிட்டு, அதற்கு அடுத்து ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.



1981 ஜனவரி 23] (திரு. நீலநாராயணன்)

(நண்பகல் 12-00)

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை.)

இந்த உரையின் ஆரம்பக் கட்டம், புத்தாண்டு வாழ்த்தோடும் பொங்கல் வாழ்த்தோடும் மிக அழகாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அதுபோன்று, இந்த உரையின் முடிவுரையிலேயும் இந்த அரசு தோழமை உணர்வை வளர்த்துக்கொள்வதற்கு, அனைவரும் இணைந்து பணியாற்றுவதற்கு, எல்லோரும் சேர்ந்து வாருங்கள் என்று ஒரு கோரிக்கையை விடுகின்ற முறையிலே அமைந்திருக்கிறது. ஆகவே முதலும், முடிவும் மிகவும் அழகாக அமையும் வகையிலே இந்த உரையை அமைத்துத் தந்திருக்கிறார்கள். படிப்பதற்கு சுவையாக இந்த உரை இருக்கிறது. இனிமையாகவும் இருக்கிறது. ஆனால் நடைமுறையிலே எப்படி இருக்கிறது? இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இந்த ஆளுநர் உரையினுடைய தன்மை நன்றி கூறத்தக்க அளவுக்கு இருக்கிறதா, இல்லையா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பொங்கல் வாழ்த்து கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே, களிப்போடு, உண்மையான, பொலிவான, சுவை மிக்க, மகிழ்ச்சிகரமான பொங்கல் இந்த வருஷம் கொண்டாடப்படுகின்ற நிலைமையை, சூழ்நிலையை நாம் பெற்றிருக்கிறோமா? மனதிலே கை வைத்து நண்பர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். கடந்த ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த ஆண்டு நடைபெற்ற பொங்கல் விழாவிற்கும் இருக்கின்ற தாரதம்மியத்தை, வித்தியாசத்தை ஒப்பிட்டுப் பார்த்தால். இதுவரை காணப்படாத ஒரு வறட்சியான பொங்கலை நாம் இந்தத் தடவை சந்தித்திருக்கிறோம் என்று சொன்னால், அதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ மாட்டார்கள். இதற்கு என்ன காரணம்? புதுப் பானையிலே பொங்க வேண்டிய புத்தரிசியை நமக்கு விளைவித்துத் தரவேண்டிய விவசாயிகள், இந்தப் பொங்கல் திருநாளிலே நெற்களத்திலே நிற்க வேண்டிய விவசாயிகள் அறப் போர்க்களத்திலே தள்ளப்பட்டிருந்தார்கள்.

(நண்பகல் 12-00)

இல்லத்தில் பொங்கல் கொண்டாட வேண்டியவர்கள் சிறைச்சாலைகளில் சிறைக் கம்பிகளுக்கிடையே சித்திரவதைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதை நான் சுட்டிக்காட்டும்போது, இவர்கள் விவசாயிகளைத் தூண்டிவிடுகிறார்களோ, விவசாயிகளுக்கு இவர்கள் அடி எடுத்துக் கொடுக்கிறார்களோ என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எண்ணக்கூடும். எனவே ஆரம்பத்திலேயே ஒன்றை நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. நீலநாராயணன்) [1981 ஜனவரி 23

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளைத் தூண்டிவிட்டுத்தான் கட்சியை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை அன்றும் இல்லை, இன்றும் இல்லை, இனி என்றும் இருக்கப் போவதில்லை என்பதைத் தெளிவாக அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆனால் நிலைக் கண்ணாடி முன் நின்றுகொண்டு பேசுவதைப்போல், கடந்த காலத்தில் விவசாயிகளுடைய போராட்டங்களுக்குப் பின்பலமாக, தூண்டுகோலாக யார் யார் இருந்தார்களோ அவர்கள் அந்த அனுபவ முத்திரையைப் பதிய வைத்துக் கொண்டிருப்பவர்கள், "அப்படியும் இருக்குமோ" என்ற சந்தேகத்தின் அடிப்படையில்தான், திராவிட முன்னேற்றக் கழகம்தான் தூண்டி விடுகிறதோ என்ற ஐயப்பாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் "விவசாயிகளின் போராட்டத்திற்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை; விவசாயிகளை வரி கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அதனை விவசாயிகள் மீதும், வெறும் அரசியல் கட்சிகள் மீதும் தயவுசெய்து பிரயோகிக்காதீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் உருவாக்கப்பட்ட போதே, இந்தக் கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லப்பட்டது. இந்தியப் பேரரசின் சார்பில் இதற்குரிய உறுதிமொழியை பிரதமர் அவர்களே அளித்தார்கள். தமிழகத்தின் முதல்வர் அவர்களும் அப்போது அதை ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். அதன் அடிப்படையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயிகளின் பிரச்சினையை இன்றைக்கும் அணுகிக் கொண்டிருக்கிறது" என்று மிகத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விவசாயிகளில் சிலர் கைது செய்யப்படாமல் இருந்திருந்தால், அந்தக் காரியத்தைச் செய்யாமல் விவசாயிகளின் மீது வேறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்திருந்தால், தி.மு.க. இந்தப் பிரச்சினையில் எந்த நிலையை மேற்கொண்டிருக்கும் என்பது ஆளும் கட்சியினருக்குப் புரிந்திருக்கும். ஆகவே, எதையோ நினைத்துக்கொண்டு எதையோ பேசிக் கொண்டிருப்பது சரியில்லை, அதனால் பலனில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு மிகப் பூரிப்போடு, உலகத் தமிழ் மாநாடு அளித்த சிறப்பு, கீர்த்தியோடு ஆரம்பமாகியிருக்கிறது என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். உண்மைதான். ஆனால் எந்த அளவுக்கு அதை நமது மக்கள் அனுபவிக்க முடிகிறது; நாட்டு மக்களால் எந்த அளவுக்கு அதைச் சுவைக்க முடிகிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, உண்மையிலேயே நா



1981 ஜனவரி 23] (திரு. நீலநாராயணன்)

வருத்தத்தோடு ஒன்றைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஆட்சியின் ... நடைபெறும் நிலைமைகளும், அடக்குமுறைகளும், தடியடி தர்பார்களும் ... இருக்கிறது. எனவே இந்த ... யில்தான் இந்தப் பொங்கல் விழாவே ஆரம்பமாகி இருக்கிறது. ... ஆண்டு மகிழ்ச்சியோடு ஆரம்பமானதாக நாங்கள் சொல்லவில்லை.

கிராமப்புறத்தின் பொருளாதாரத்தை வளர்க்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டது. ஆனால் உண்மையிலே என்ன நடைபெறுகிறது என்றால், கிராமப்புறத்தில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையில் வேதனையைத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ கொடுமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கிராமத்தில்தான் இந்த நிலைமை, நகரங்களில் ... ஒரு வேளை பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறதோ என்று ஒரு சிலர் எண்ணிப் பார்க்கக்கூடும். நகரங்களிலேகூட பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படவில்லை. காரணம் விலைவாசி ஏற்றம். விலைவாசி ஏற்றத்தைப் பொறுத்த வரை, இந்த அரசு எந்த ஒளிவு மறைவும் இன்றி ஒன்றை ஒப்புக்கொண்டிருக்கிறது. "விலைவாசிகளின் உயர்வு கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது; எட்ட முடியாத அளவுக்கு விலைகள் உயர்ந்து விட்டிருக்கின்றன" என்று உளப் பூர்வமாக இந்த அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படிக் கூறியதன் மூலம் இந்த அரசே அப்ரூவராக" காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இதைச் சொல்வதற்குத் தானா ஒரு அரசு? இதற்குத்தானா ஒரு அரசு? விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்வதற்கு ஒரு அரசு தேவையா? விலை உயர்ந்து விட்டது என்று ஒப்புக்கொள்கிறோம் என்று சொல்வதற்கு ஒரு உரை தேவையா என்றுதான் கேட்க விரும்புகிறேன். விலைவாசி உயர்வுக்கு என்ன பரிகாரம் கூறுகிறீர்கள்? விலைவாசி உயர்வை இந்த அரசு அந்தப் பரிகாரத்தின் கீழ் எந்த அளவுக்கு விலைவாசி உயர்வை இந்த ... கட்டுப்படுத்தியிருக்கிறது? இதையல்லவா நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திடம் எதிர்பார்க்கிறார்கள். இதைக் கேட்கும்போது, நான் ஏதோ ... காழ்ப்புணர்ச்சி காரணமாக இப்படிக் கேட்பதாக யாரும் எண்ணிவிடக் கூடாது. நாட்டு மக்களின் நிலைமையை ஆட்சியாளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டத்தான் நான் இதையெல்லாம் இங்கே கூறுகிறேன். இன்றையதினம் எத்தனையோ பொய் வழக்குகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளுக்கெல்லாம் அப்ரூவர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே இந்த அரசு தானே அப்ரூவராகி, "ஆமாம், ஆமாம், விலைவாசி ஏறி விட்டிருக்கிறது" என்பதை இந்த உரையின் மூலமாக ஒப்புக்கொண்டிருக்கிறது. அவ்வாறு ஒப்புக் கொண்டதின் மூலம் தங்களின் கையாலாகாத்தனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். உண்மையை ஒத்துக் கொண்டதற்காக நான் இந்த ஆட்சியாளர் ...

(திரு. நீலநாராயணன்) [1981 ஜனவரி 23

களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான பரிகாரம் என்ன ? இதைத்தான் என்னைப் போன்றவர்கள் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[illegible]-1977 அன்று இதே அவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், திரு. இராகவானந்தம் அவர்கள் ஒருமுறை ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக வந்துவிட்டார் என்று சொன்னாலே சோஷலிச சமுதாயத்திற்கு அங்குரார்ப்பணம், அதாவது கால்கோள் விழா நடத்தப்பட்டுவிட்டது என்றுதான் பொருள்" என்று மிகுந்த நம்பிக்கையோடு குறிப்பிட்டார்கள். இந்த அவையில் அவர் தற்போது இல்லாவிட்டாலும், அவர் பேரவையில் இருக்கிறார். இந்த அவையின் மூலம் நான் அவரைப் பார்த்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். விவசாயிகளும், தொழிலாளர்களும்தான் சோஷலிசத்தின் இரு கண்கள் என்று பல அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். பல புத்தகங்களில் நான் படித்திருக்கிறேன்; அந்த இரு கண்களும் இந்த சோஷலிச சீமான்கள் கையிலே எந்த அளவுக்கு அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்ன நிலைமையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, உண்மையிலேயே நான் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. நான் ஏற்கெனவே விவசாயிகளின் நிலைமையைப்பற்றி இங்கே குறிப்பிட்டேன். அவர்கள் ஒரு கண். பழுதுபட்ட நிலையில் அந்தக் கண் இருக்கிறது. மருத்துவ மனையிலே அது சிகிச்சை பெற வேண்டியிருக்கிறது. இதோ இன்னொரு கண்ணான தொழிலாளர்கள் ! அவர்கள் நிலைமை என்ன ?

பி அண்டு சி மில் தொழிலாளர்களின் நிலைமையைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் அந்த மில்லில் பணியாற்றிய 13,000 குடும்பங்கள் நடுத் தெருவில் நின்று கொண்டிருக்கின்றன. அது கவலை தருவதாக இருக்கிறது என்று இந்த ஆட்சி கூறிக் கொண்டிருக்கிறது. ஆட்சி அம்பலத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிற அரசு இதைக் கூறிக்கொண்டிருக்கிறது. அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிற அரசு இதைக் கூறிக் கொண்டிருக்கிறது. நான் உண்மையிலேயே இதற்காக வருத்தப்படுகிறேன். "பி. அண்டு சி. மில் மூடப்பட்டதால், தொழிலாளர்கள் நிலைமை கவலை தருவதாக இருக்கிறது" என்று சொல்லுவதன் மூலம் இந்த அரசு அப்பாவாக ஆகியிருக்கிறது. இதற்காகத்தானா இவர்கள் ஆட்சிப் பீடத்தில் ஏறினார்கள் ? உண்மை நிலவரத்தை ஒப்புக்கொள்வதற்காக மட்டும் ஒரு அரசு தேவைதானா ? ஒப்புக் கொண்ட நிலையில் அதற்குப் பரிகாரம் காண வேண்டாமா ? பரிகாரம் கண்டிருக்கிறார்களா ? பி அண்டு சி மில்லை மூடாதீர்கள் என்று கோரி 13,000 தொழிலாளர்கள் சென்னை நகர வீதிகளில் ஊர்வலமாக வந்தார்கள்.



1981 ஜனவரி 23] (திரு. நீலநாராயணன்)

பூக்கடைப் பக்கத்திலே நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிலையின் அருகே ஊர்வலம் வருகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்திலே வந்து நடு ரோட்டிலே அந்த ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி அவர்களிடம் பேசியிருக்கிறார். என்ன பேசினார் ? வெளியிலே கூட அந்தக் காட்சியைப்

(பேரவைத் தலைவர் தலைமை)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

பார்த்ததில்லை. உள்ளத்தைத் தொடுகிற அளவிற்கு அருமையான காட்சியை உருவாக்கிக் காட்டினார்கள். அப்போது ஒரு உறுதிமொழியைக் கொடுத்தார்கள். நாங்கள் கோரிக்கைகளை "தொழிலாளர்களுடைய அரசு இருக்கிறது. ஆகவே நீங்கள் கவனிக்கிறோம். அதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது. ஆகவே நீங்கள் கோட்டைக்குச் செல்லாதீர்கள், உங்கள் ஊர்வலத்தை நிறுத்துங்கள், நிறைவேற்றுவதைப் பொறுத்த வீட்டுக்குப் போங்கள். கோரிக்கைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்த வரையில், நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். இந்த அரசின் சார்பிலே நான் பொறுப்பேற்கிறேன்" என்று அன்றைய தினம் முதல்வர் அவர்கள் வாக்கு அளிக்கவில்லையா ? அதைக் கேட்டு நம்பி அப்பாவி தொழிலாளர்கள் ஊர்வலத்தைக் கலைத்துவிட்டு வீட்டுக்குச் செல்லவில்லையா ? இப்போது அதற்காக நாங்கள் வருந்துகிறோம் என்று மட்டும் இந்த அவையிலே தெரிவிப்பதுதான் இந்த ஆட்சியின் இலட்சணமா ? இது குறித்து என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை மத்திய சர்க்கார்தான் முடிக்க வேண்டியிருக்கிறது என்று கூறி விட்டார்கள். அது வரையில் ஆலையை மூடாமல் பார்த்துக்கொள்ளுகிறோம் என்ற ஒரு நிலைமையையாவது இந்த அரசு உருவாக்கியிருக்க வேண்டாமா ? உண்மையிலேயே நாங்கள்தான் சோஷலிச சிற்பிகள். தொழிலாளர்களின் தோழன் என்று சொல்லிக்கொள்பவர்கள் இது குறித்து என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். பி அண்டு சி மில்லின் விவகாரம் இந்த அளவில் இருக்கிறபோது, சோஷலிச பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, உண்மையிலேயே நாங்கள் பரிதாபப்படுகிறோம். இதை நாங்கள் சொல்லுகிறபோது, நாங்கள் கவலைப் படவில்லை. உண்மையிலேயே எங்கேயாவது பாதிப்பு ஏற்பட்டால், குரல் கொடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதையும் அதைத் தன்னுடைய கடமையாகவும் கருதுகிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் நாங்கள் இதைச் சுட்டிக்காட்டுகிறோமே தவிர, வேறு ஒன்றுமல்ல.

கொள்கையில்தான் இந்த அளவுக்குக் குழப்பம் இருக்கிறதென்றால், ஒரு திறமையான நிர்வாகம் நடக்கிறது என்ற திருப்தியையாவது மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. இதை நிச்சயமாக நம்மால் அறுதியிட்டுக் கூற முடியும். உதாரணத்திற்கு அறநிலையத் துறையை நான் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இங்கே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அவையிலே இருக்கும்போது சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுவதால் இதைச் சொல்கிறேன். திருச்செந்தூரிலே அசிஸ்டெண்ட் கமிஷனர் அந்தஸ்தில் உள்ள ஒரு தனி அதிகாரி—அவர் பெயர் சுப்பிரமணிய பிள்ளை—மரணம் அடைந்திருக்கிறார்.

திரு. ஜேப்பியார் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் குறித்து நீதி விசாரணை நடைபெறுகிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். ஆகவே இவ்வளவு தெளிவாகப் பேசுவது சரியாக இருக்குமா?

திரு. நீலநாராயணன் : நீதி விசாரணைக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அது கொலையா அல்லது தற்கொலையா என்ற பிரச்சினைக்குப் போக விரும்பவில்லை. நிர்வாகத் திறமை பற்றிய சில பிரச்சினைகள் அதிலே இருப்பதால், நான் அதைக் குறித்துச் சொல்ல விரும்புகிறேன். வேறல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் என்னுடைய உரையை முழுவதுமாகக் கேட்டுவிட்டு, பின்னாலே பேசலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

சாதாரணமாக சர்க்கார் அலுவலகத்தில் இன்றியமையாத அல்லது பரபரப்பான நிகழ்ச்சி ஏதாவது ஒன்று நடைபெற்றால், அது குறித்துத் தகவல்கள் 24 மணி நேரத்திற்குள் தலைமை அலுவலகத்திற்கு வந்துவிடும். ஆனால் திருச்செந்தூரிலே ஒரு அலுவலர் இறந்திருக்கிறார். அதுபற்றிய தகவல்கள் இங்கு வந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட தகவல்கள் இங்கு வந்தனவா? அப்படி வந்திருந்தால், இப்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டிருக்காது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்செந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்காக சென்னையிலே இருக்கின்ற அறநிலையத் துறையைச் சார்ந்த ஊழியர்கள் 'டெமான்ஸ்ட்ரேஷன்' நடத்தியிருக்கிறார்கள். ஆனால் அது வெளியே தெரியவில்லை. ஆகவே இதுகுறித்துப் பலருக்குச் சந்தேகம் வருகிறது. ஆகவே நீதி விசாரணை வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அதனுடைய தலைவர் டாக்டர் கலைஞர் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். பத்திரிகை நிருபர்களுக்கு



கடம் கேட்டுக் கொடுத்திருக்கிறார். [illegible] இல்லையென்று சொன்னால் மறுத்து [illegible] வெளியிட்டிருக்கிறார். [illegible] அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. அதில் முக்கியமாக மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மறுத்து "டாக்டர் கலைஞர் [illegible] பொறுப்பற்ற தன்மை, [illegible] இல்லை. [illegible] தலைவரின் [illegible] போல் காட்டியிருக்கிறார்கள். [illegible] இந்த முறையிலே தன்னுடைய அறிக்கையை அவர்கள் [illegible] வெளியிட்டிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். [illegible] அவர் இருக்கிறார்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள், இந்த ஆட்சியிலே நிர்வாகம் சீர்கெட்டுப் போய்விட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக திருச்செந்தூரில் நடைபெற்றிருக்கிற ஒரு மரணத்தைக் குறிப்பிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் சுட்டிக்காட்டிய பிறகும், நான் இந்த விசாரணை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிக்குள் நுழையமாட்டேன் என்று சொல்லிவிட்டு, நிர்வாகச் சீர்கேட்டைப் பற்றி விளக்குகிறேன் என்றும் சொல்லிவிட்டு மேலும் சில தகவல்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

மரணம் சம்பவித்துவிட்டது என்ற செய்தி பத்திரிகைகளில் வந்தது. அதைத் தொடர்ந்து அரசாங்கம் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தது. அரசாங்கம் என்னென்ன செய்து கொண்டிருக்கிறது என்று ஒவ்வொரு வினாடியும் வெளியே சொல்லிக் கொண்டிருக்காது. எப்போது அவசியம் நேர்கிறதோ அப்போதுதான் அரசாங்கம் தகவல்களை வெளியே சொல்லும். அதுதான் நல்ல நிர்வாகத்திற்கு அடையாளம். அரைகுறையாகத் தெரிந்துகொண்டு அதை வெளியே சொல்லும் நிர்வாகத்தை நல்ல நிர்வாகம் என்று திரு. நீலநாராயணன் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அரசாங்கம் அக்கறையோடு அந்த நிகழ்ச்சிகளைக் கவனித்து அடிப்படைக் காரணங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், போலவே எதிர்க் கட்சித் தலைவர், சந்தேகம் இருக்கிறதென்று ஒரு பெரிய பிரச்சினையைக் கிளப்பி முதலமைச்சர் அவர்களுக்கும், ஆளுநர் அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் தந்தியைக் கொடுத்திருக்கிறார். நீதி விசாரணை வேண்டும் என்று போலவே எதிர்க் கட்சித் தலைவர் கேட்டதை அது அவர் செய்ய வேண்டிய கடமை என்று அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆனால் அந்தச் செய்தி வருகிற நேரத்தில், நீதி விசாரணை வேண்டும் என்று கோரிய பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவரே பொறுப்பு ஏற்று நடத்துகிற பத்திரிகையிலே "அடித்துக் கொல்லப்பட்டார்" என்று குற்றம் சாட்டுவதைப் போல 8 காலம் தலைப்பில் போட்டு செய்தியை வெளியிட்ட போதுதான் அதைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. அப்போதுதான், "அந்த அறிக்கையை அதிகாரிகளைக் கொண்டு படிக்க வைத்தோம். ஆனால் அரசின் சொந்தக் கருத்து எதையும் சொல்ல வில்லை" என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நீதி விசாரணை வேண்டும் என்று கேட்பதிலே உள்ள நியாயம், அவருக்குள்ள உரிமை ஆகியவற்றை அரசாங்கம் மறுக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆனால் நீதி விசாரணை கேட்கிற அவரே தன்னுடைய பத்திரிகையிலேயே "அடித்துக் கொல்லப்பட்டார்" என்று 8 காலம் தலைப்பில் செய்தியைப் போட்டு குற்றம் சமத்துகிற அந்த உணர்வை தான் நான் கண்டித்தேன்.

திரு. நீலநாராயணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டித்ததைப்பற்றிக் கூட நான் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. பொறுப்பிலே இருப்பதால், இது அவர் செய்ய வேண்டிய கடமை, அவரது உரிமை. அது முடிந்த பிறகு போலீசார் தந்த அறிக்கையையும், கலெக்டர் சமர்ப்பித்த அறிக்கையையும் படித்து சமாதானம் சொல்லியிருக்கிறார். அதற்குப் பின்னாலே அதையொட்டி பேரவை எதிர்க் கட்சித் தலைவரைப்பற்றி விமர்சனங்கள் நடைபெற்றிருக் கின்றன. அவைகளையெல்லாம் தாண்டி முதல்வர் அவர்கள் திருச்செந்தூருக்குச் சென்றிருக்கிறார்கள். இறந்துபோன இடத்தைப் பார்த்திருக்கிறார்கள். அங்கே கூடியிருந்த மக்களுடைய உணர்வைப் பார்த்திருக்கிறார்கள். அங்கு உள்ளவர்கள் நீதி விசாரணை வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பிறகு முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்று அங்கிருந்த மக்களுடைய உணர்வுகளைப் பார்த்துவிட்டு நீதி விசாரணைக்கு உத்தரவிடவில்லை. ஏதாவது செய்தி கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் எதிர்க் கட்சி யினர் இதைப் பெரிய பிரச்சினையாக ஆக்கி நாட்டிலே தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தி அநியாயமாக மற்றவர்கள் மீது பழி சுமத்துகிற உணர்வோடு தூண்டிக் கொண்டிருக்கிற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றுதான் அரசு நீதி விசாரணை வைத்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சென்றபோது அங்கே கொந்தளித்து வந்த புரட்சியை அடக்க முடியாமல் நீதி விசாரணைக்கு ஆணையிடவில்லை. முதலமைச்சர் அவர்கள்





ஆணையிட்டார்கள் என்றால், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களுடைய கருத்தையும் பெற்று அமைச்சரவை முடிவு எடுத்ததன் [illegible] இந்த நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை நீதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டிருப்பதால், வெளியிலே இருந்து கொண்டிருக் கின்ற பிரச்சினையாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நீதி விசாரணைக்குள் போகாமல் இருக்க வேண்டும். அது அவரை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் என்ற காரணத்தினாலே, அங்கத்தினர் அவர்கள் கூடுமானவரையில் அது குறித்து அதிகமாகப் பேசாமலிருப்பது நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* திரு. ம. சங்கரலிங்கம்: இந்த சந்தர்ப்பத்தில் அங்கத்தினர் அவர் களுடைய உரிமையைப்பற்றி துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த நாட்டில் நடந்த ஒரு சம்பவம் நீதி விசாரணைக்கு வந்தபின், அந்த சம்பவத்தைப்பற்றிய சாதக பாதகமான விஷயங்களைப்பற்றி இங்கே பேசக்கூடாது. ஆனால் அதன்மீது எடுத்த நடவடிக்கைகள், அரசினுடைய செயல்கள் இவைகளைப்பற்றி இந்த அவையிலே பரிபூரணமாக விமர்சிப்பதற்கு உரிமை உண்டு என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபோது, நீதி விசாரணை ஏற்படுத்தப்பட்டது அரசின் மீது ஏற்பட்ட சந்தேக உணர்வைப் போக்குவதற்கும் அதை அரசியல் கட்சிகள் ஒரு பிரச்சினையாக்கி அதையே ஒரு முதலீடாக ஆக்குவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் என்று சொன்னார்கள். அப்படியானால் சங்கராபுரம் கற்பழிப்பு சம்பவத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் எழுப்பியிருக்கிறார். அவர் அதனைப் பிரச்சினையாக்கி அரசியல் முதலீடாக ஆக்குவதற்கு, ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்குத்தான் இந்த நீதி விசாரணையும் வைத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இரண்டு விசாரணைகளையும் ஒரே நேரத்தில் அமைத்து சரியாகவோ, தவறாகவோ அதை மக்கள் மத்தியில் விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாக மாற்றும் நிலையைத் தவிர்க்க வேண்டுமென்ற பொது நோக்கத்தின் அடிப்படையில் அரசு எடுத்த முடிவுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நீலநாராயணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நான் நீட்டிக்கொண்டு போக விரும்பவில்லை. இப்பொழுது முதலமைச்சர் அவர்கள், பொதுமக்கள் தன்னுடைய உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதுபற்றி பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன. அவைகளை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் அங்கே வந்துவிட்டுச் செல்கின்றபோது, காரிலே இருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டி, அதோ போகிறாரே அவர்தான் இதற்குக் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீதி விசாரணை நடைபெற வேண்டுமென்று மக்கள் முழக்கமிட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து அவர் காரிலிருந்து இறங்கிச் செல்கின்ற அளவுக்கு அங்கே சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தியே தவறான செய்தி என்று தகவல் வந்திருக்கிறது.

திரு. நீலநாராயணன் : அதை நான் மறுக்கவில்லை. அதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுமக்களிடையே உணர்ச்சி எப்படி இருந்தது என்பதைப்பற்றிச் சொல்கிறேன். அவர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்த பின்னர்தான் திருச்செந்தூர் வந்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே என்ன நடைபெற்றது ? அங்கு பொது மக்கள் முதலமைச்சர் அவர்களை யார் யார் பார்த்தார்கள். பொதுமக்கள் மனுக்களை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த விஷயங்களையெல்லாம் நாம் கணக்கிட்டுப் பார்த்து தெளிந்த பின்னர்தான், நான் இந்த சம்பவங்களைப் பற்றிச் சுட்டிக்காட்டுகிறேன். ஏனோ தானோ என்று சொல்லவில்லை. அவசரப்பட்டு அறிக்கைகளைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பின்னால் இப்படிப்பட்ட நிலவரங்கள் வருகிறபோது, ஒரு இக்கட்டான நிலைமைக்கு இந்த அரசு ஆளாக்கப்படுகிறது. இப்படி ஒரு திறமைக் குறைவான இலாகா இந்த நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். அதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்டுகிறேன். வேறல்ல.

அடுத்து, நான் அறங்காவலர் குழுவைப்பற்றிப் பேச வேண்டுமென்று கருதுகிறேன். இது இப்போது நீதி விசாரணைக்குட்பட்டதாகாது என்று நான் கருதுகிறேன். சாதாரணமாக அறங்காவலர் குழுவை நியமிக்கின்றபோது, ஒரு வரைமுறையை, சட்ட திட்டங்களை வைத்துக்கொண்டு தான் நியமனங்கள் நடைபெறுகின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, அறங்காவலர் குழுவிலே இடம் பெற [illegible]



[illegible] அந்த மனுவை அரசாங்கத்திற்கு [illegible] அனுப்பி, [illegible] சம்பந்தப்பட்ட [illegible] அவருடைய [illegible] குற்றங்களிலே [illegible] இந்து மதத்தைச் சேர்ந்தவரா [illegible] என்று இப்படிப்பட்ட கேள்விகளை வைத்து, அதற்குப் [illegible] கண்டு, அதற்கு விடை கண்டு, இங்கே அரசுக்கு அனுப்பி, அதற்குப் பின்னர்தான் [illegible] செய்து, அதிலே யார் யார் தகுதிப்படுகிறார்களோ, [illegible] இருப்பவர்களுடைய மனுக்களை மட்டும் பரிசீலனை செய்து தேர்ந்தெடுத்து, அந்த அறங்காவலர் குழுவிலே உரியவர்களை நியமிப்பதுதான் வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. இதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும். உதாரணத்திற்கு திருத்தணி கோயிலை எடுத்துக் கொண்டால், முக்கியமான [illegible] ஒருவர் நியமிக்கப்பட வேண்டும், அறங்காவலர் குழுவில் இடம் பெற வேண்டுமென்று சர்வ [illegible] முனைந்து ஒரு ஆளைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அவர் அங்கே பணியாற்ற முடியவில்லை, அதற்கு அரசு அனுமதிக்கவில்லை. அவர் மீது கிரிமினல் குற்றச்சாட்டு இருக்கிறது, கிரிமினல் குற்றவாளி என்று குற்றச் சாட்டைக் காரணம் காட்டினார்கள். அன்றையதினம் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வரைமுறைகள், இந்தத் திருச்செந்தூர் கோயிலைப் பொறுத்தவரையிலே, அறங்காவலர் குழு நியமிக்கின்றபோது, கையாளப்பட்டனவா என்பது சந்தேகப்படக்கூடிய அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. காரணம், அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டபோது, அந்தக் குழுவினர் பெயர்கள் வரிசையாக அறிவிக்கப்பட்ட உடனே ஒருவர் [illegible] அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவரா என்று கேட்டிருக்கிறார்கள். அங்கே இருப்பவர்கள் அமைச்சருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அதனுடைய நகல் எதிர்க் கட்சியினருக்கு வருகிறது. எங்களைப் போன்ற அங்கத்தினர்களுக்கும் வருகிறது. அதைப்பற்றி விசாரித்துப் பார்த்தால், அந்த அறங்காவலர் குழுவிலே இடம் பெற்றிருக்கின்ற ஒருவர், இருவேறு மதத்தைச் சேர்ந்தவர், [illegible] திருமணம் செய்து கொண்டவர். இன்றைய தினமும் [illegible] விடாமல் இருப்பவர் என்று தெரிகிறது. ஏன் இத்தகைய நிலை ஏற்பட்டது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அடிக்கடி மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய பேச்சில் குறுக்கிடுவதற்குப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். அவர் இந்த சபையிலே தவறான தகவலைச் [illegible] என்று முடிவு எடுத்துக்கொண்டு

பேசுவது போல இங்கே தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். அவர்கள் ஆட்சிக் காலத்திலே அறங்காவலர்கள் நியமனம் செய்கின்றபோது, முறைகளையெல்லாம் கடைப்பிடித்து, சட்ட விதிகளையெல்லாம் கடைப்பிடித்து ஒழுங்காகப் போட்டோம், இப்போது அதுபோல எதும் நடைபெற வில்லை என்பது போல, ஒரு குறிப்பிட்ட ஆலயத்தைப்பற்றி, ஒரு குறிப்பிட்ட அறங்காவலரைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது பரிசீலிக்கப் பட்டு, சட்ட விதிகளைப் பார்த்து, ஆய்வு செய்து, அதற்குப் பிறகுதான் அவர்கள் அங்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி முறையற்ற வகையில் நியமிக்கப்பட்டிருந்தால், எந்த நேரத்திலும் யாரும் வழக்குத் தொடரலாம் அவர்களை நீக்கலாம்.

**திரு. நீலநாராயணன்** : வழக்குத் தொடருவதற்கோ, நீக்குவதற்கோ அல்ல இந்த பிரச்சினையை நான் இங்கே எடுத்துச் சொல்வது. எந்த அளவுக்குப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் அதைச் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்து, முடிவு எடுத்து, நியாயமான நியமனம் தான் என்று முடிவு செய்துதான் அரசாங்கத்தில் நியமித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அங்கத்தினர் அவர்களுக்கு ஏதோ சான்றுகள் வந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்தச் சான்றுகளை எங்கே கொடுத்து எங்கே நிரூபிக்க வேண்டுமோ, அங்கே நிரூபித்தால், அந்தச் சான்றுகளின்படி நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. செய்யப்பட்டிருக்கின்ற நியமனங்கள் எல்லாம் முறைப்படி பரிசீலிக்கப்பட்டுத்தான் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன்** : அந்தச் சான்றுகள் எல்லாம் முதல்வர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றின் நகல்கள் தான் எனக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நான் இப்போது ஆளுநர் அவர்கள் உரையின் மீதுதான் பேசிக்கொண்டிருக் கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

அடுத்து, நான் மற்றொரு அமைச்சருடைய பேச்சைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல்-12.30)





மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் உள்ளாட்சி மன்றங்களுடைய தேர்தல்களை இந்த அரசு நடத்துவதற்கு முன் வந்தது போலவும், ஆனால் இந்தியப் பேரரசு தலையிட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்றதற்குப் பின்னாலே அதை நடத்திக்கொள்ளலா மென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க அதை ஒத்தி வைத்தது போலவும் இன்னும் ஓராண்டுக்குள் தேர்தல்கள் வர இருக்கின்றன என்ற முறையிலும் விவரங்களைச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஓராண்டிலாவது அந்தத் தேர்தல்கள் நடைபெறுமானால் அது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் சென்ற கூட்டத்தொடரிலே, உள்ளாட்சி மன்றங்களுடைய தேர்தல்கள் அரசியல் கலப்பற்றதாக இருக்க வேண்டும், அரசியல் கட்சிகளின் சின்னங்களை வைத்துக்கொண்டு தேர்தல்களில் போட்டி யிடக்கூடாது என்ற தன்மையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அப்படி சட்டத்தை நிறைவேற்றும்போதுதான், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலபடப் பேசினார்களே, 'ராம ராஜ்யம்', 'கிராம ராஜ்யம்' என்று, அந்த ராஜ்யம் முழுமை பெறுமென்று சுட்டிக் காட்டினார்கள். அதற்கு நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டம் எந்த அளவிற்கு இந்த அரசாலே கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது அல்லது ஆளும் கட்சியினாலே மதிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு சமீபத்தில் பல்லாவரம் கன்டோன்மென்ட்டில் நடைபெற்ற தேர்தல் ஓர் எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது. 14—12—1980 அன்று அந்தத் தேர்தல் நடை பெற்றது. அந்தத் தேர்தலுக்கான கடைசி நாள் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், இந்த அவையின் முன்னவர் மாண்புமிகு திரு. இராசா முகமது அவர்கள் கலந்துகொண்டு பேசியதாக 14—12—1980 "மாலை முரசு" இதழில் செய்திகள் வந்துள்ளன. "கன்டோன்மென்ட் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றால், அரசு பல சலுகைகளைச் செய்யும், இல்லாவிட்டால் அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று நீங்கள் சகித்துக்கொள்ளுகின்ற சூழ்நிலைதான் ஏற்படும்; ஆகவே அ.தி.மு.க. வெற்றி பெற ஆவன செய்யுங்கள், வாக்கு அளியுங்கள்" என்று அமைச்சரவர்கள் அன்றையதினம் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆட்சியில் இருக்கின்றவர்கள் சலுகையைத் தருகிறார்கள் என்ற எண்ணத்தை உருவாக்கும் வகையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியதாகச் செய்திகளைப் பார்த்தேன். அது உண்மையாக இருக்குமோ, என்னவோ. ஆனால் செய்தி வந்திருக்கிறது. அதற்கு அமைச்சரவர்கள் இதுவரையில் எந்தவித மறுப்பும் தெரிவிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு செய்தி உண்மையாக இருக்குமா என்ற சந்தேகம் வந்திருக்கிறது. அதனால் 'மாலை முரசு' என்று சொல்லுகிறபோது, செய்திகள் எப்படி

(திரு. கா. இராசாராம்) [1981 ஜனவரி 21

[illegible] இந்த நாடு உணர்ந்திருக்கிறது [illegible] பகுதி முழுக்க முழுக்க இராணுவ இலாகா, மேற்பார்வையில் [illegible] அங்கே தலைவராக இருக்கிறவர் இராணுவ இலாகா அதிகாரி [illegible] அங்கே [illegible] நோடியாகச் செய்யக்கூடிய காரியங்கள் [illegible] இதற்கு முன்பிருந்த உறுப்பினர்கள் யாருமே அந்தக் காரியங்களைக்கூடச் செய்வதற்கு அரசை அணுகாமல் இருந்தார்கள். எனவே, அரசை அணுகக் கூடியவர்களாக இருந்தால் இன்னும் கூடுதலாக நன்மைகள் செய்ய வாய்ப்புகள் இருக்கும். இல்லையென்றால் அதை அரசியலாக்கி விடாதீர்கள் என்று சொன்னதை பத்திரிகையில் அப்படி வெளியிட்டிருக்கிறார்கள். இது ஒவ்வொரு முறையும் நடப்பது. எனவே இதற்கெல்லாம் மறுப்பு சொல்வதில்லை. எப்போது உறுப்பினர் அவர்களுக்கு உண்மையாக இருக்குமா என்ற சந்தேகம் வந்ததோ, அதைச் சொல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

திரு. நீலநாராயணன்: உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தான் அதைச் சொன்னேன்.

அடுத்து, மதுவிலக்குப் பிரச்சினை. இங்கே அந்தப் பிரச்சினைபற்றி நானே பேசுவேன் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேப்பியார் அவர்களும், திரு. இராதா அவர்களும் ஜாடையாகச் சொன்னார்கள். நான் அதைப்பற்றிப் பேச வேண்டுமென்று கருதவில்லை. ஆனால் இப்போது ஒரு புது பாரம்பரியத்தை, இந்த அரசைப் பொறுத்த வரையில், உருவாக்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். காரணம், மதுவிலக்கை அதிகமாகத் தீவிரப் படுத்தப் போகிறோம், இன்னும் தீவிரமான சட்டங்களைக் கொண்டுவரப் போகிறோம், மூன்று வருடங்கள், நான்கு வருடங்கள் தண்டிக்கப் போகிறோம், நாடு கடத்தப் போகிறோம், கடுமையாகத் தண்டிக்கும் வகையில் சட்டங்களைத் திருத்தப் போகிறோம் என்று சொல்லி, சட்டங்களைக் கொண்டு வந்தபோது, இந்த மன்றத்தைக் கேட்கவில்லை. மற்ற உறுப்பினர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ள அக்கறை காட்டவில்லை. ஆனால் இப்போது அதைப்பற்றி மறுபரிசீலனை செய்வது அவசியமா என்பது குறித்து மன்ற உறுப்பினர்களின் கருத்து என்ன என்று ஜனநாயகத்தின் அடிப்படையை அறிந்தவர்கள்போல, கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நான் பத்திரிகைச் செய்தி ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதைக்கூட மறுத்தாலும் மறுக்கக்கூடும். பத்திரிகைச் செய்திகளை எந்த அளவிற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது கூட சந்தேகத்திற்கு வந்து விட்டது. காரணம், [illegible] முதலமைச்சர் [illegible] [illegible] பேசியதாக [illegible] பட்டேன். அதைப்பற்றிய செய்தியைப் பத்திரிகையில் படித்தேன். [illegible]



1981 ஜனவரி 21] (திரு. நீலநாராயணன்)

மன்றத்தில் பேசியது போல் அல்ல, [illegible] பேசினேன் [illegible] வேண்டும். ஆகவே பொறுப்புணர்ந்து [illegible] குறிப்பிட்டதாக ஒரு பத்திரிகையில் பார்த்தேன். [illegible] [illegible]யைப் பற்றி [illegible] வைத்திருக்கிறார்களென்று [illegible] படுத்துகிறது. ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நம்மை [illegible], நம்முடைய கருத்து என்ன என்று கேட்க முன் வந்திருக்கிறார்கள். [illegible] கட்டாயம் என்ன? இந்த நிலைமை ஏன் வந்தது? இதற்கு [illegible] அப்படிப்பட்ட நிலைமை, எண்ணம், வராதபோது, இப்போது இந்தப் பிரச்சினை ஏன் வந்தது என்பதைத்தான் இந்த அவை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத் [illegible] நிதி ஒதுக்கீடுபற்றி மிகப் பெருமையாகப் பேசினார்கள். மூன்று மடங்கு அதிகமாக ஒதுக்கீடு வாங்கி வந்திருக்கிறார்கள், இது புரட்சித் தலைவர்களின் சாதனை அல்லவா என்று கீதம் பாடினார்கள். அதில் [illegible] மறுப்புமில்லை. அவர்கள் பாடிக்கொண்டு இருக்கட்டும். ஆனால் அன்றைய தினம் டெல்லியிலே இருக்கிற பொருளாதார நிபுணர்கள், நம்முடைய முதல்வரவர்களைப் பார்த்து, பொருளாதாரக் கணக்கின் அடிப்படையிலே கேட்டார்கள். "3,150 கோடி ரூபாய் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இதிலே தமிழகத்தினுடைய நிதி ஆதாரம் 1,657 கோடி ரூபாய், மத்திய அரசு உதவி, மற்ற கடன்கள், உலக வங்கி கடன் எல்லாம் சேர்த்து [illegible] கோடி ரூபாய்; ஆக மொத்தம் 2,318 கோடி ரூபாய் உங்களுக்குக் [illegible] வருகிறது. துண்டு விழுகிற தொகை 832 கோடி ரூபாய். துண்டு விழுகிற 832 கோடி ரூபாய்க்கு எங்கே நிதி ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்?" என்று டில்லியிலே இருக்கிற பொருளாதார நிபுணர்கள் நம்முடைய முதல்வரவர்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முதல்வரவர்கள் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கின்றபோது, 'அது இரகசியம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இரகசியம் என்ன? இப்போது நம்மை அணுகிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே, உறுப்பினர்களே உங்கள் கருத்து என்ன என்று, அதுதான் இரகசியமா? மறு ஆய்வு செய்வது அவசியமா என்பது பற்றிக் கருத்து சொல்லுங்கள் என்று கேட்கிறீர்களே, இதுதான் இரகசியமா? இதிலே என்ன கீர்த்தி, கொப்பு வரப்போகிறது? புது வரிகள் வருகிறதென்று சொன்னால், வரவேற்றிருக்கலாம். ஆனால், இரகசியம் என்று கூறியிருக்கிறார்கள். இன்றைய தினம் நம்மிடம் வந்து, உங்கள் கருத்து என்ன என்று கேட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் [illegible]க்கொள்ள விரும்புவதெல்லாம், எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் [illegible] மதுவிலக்கு பற்றி என்ன கருத்துக்களை பேரவையில் எடுத்து [illegible]கிறார்களோ அந்தக் கருத்துக்களைத் தவிர நாங்கள் புதியதாக

கிராமம். அங்கு இருப்பது 200 அல்லது 300 மக்கள் தான். அங்கு ஒரு ஜாதிக் கலவரம் ஏற்பட்டது. போலீஸ் போய் அங்கே அமைதி காத்திருக்கிறார்கள். போலீஸ் அங்கே போய் வந்திருக்கிறார்கள். இன்றைக்கு அந்த கிராமத்திலே ஆட்களே இல்லை. அதுபோல், மருதவாலயம் என்றொரு கிராமம். அங்கேயும் போலீசார் போய் வந்திருக்கிறார்கள், அங்கேயும் இப்போது ஜனங்கள் இல்லை. அங்கு வசித்த மக்கள் இப்போது திருச்செந்தூர் கோயிலில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஊருக்குள்ளே நுழைய முடியவில்லை. இது இன்றைக்கு கிராமங்களில் இருக்கிற நிலைமை. சென்னைக்குப் பக்கத்தில் இருக்கிற ஊர்களில் கூட இது தான் நிலைமை. பொன்னேரிக்குப் பக்கத்திலே இருக்கிற பாதிரிவேடு என்கிற கிராமத்திலே பிளஸ் 2 பரிட்சை நடத்த இங்குள்ள பள்ளிக்கு மையம் வேண்டுமென்று கேட்டார்கள். சம்பந்தப்பட்ட இலாகா உண்டு, இல்லை என்று சொல்ல வேண்டும். அதற்காக ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். ஊர்வலத்தை நடத்த விடுவேனா பார் என்று சொல்லி காவலர்கள் ஊர்வலத்துக்கு உள்ளேயே நுழைந்து விட்டார்கள். இப்போது அந்த ஊரில் பெண்களைத் தவிர யாரும் இல்லை. கேஸ் போட்டார்கள். ஜாமீனில் வந்தவர்கள் அனைவரும் பொன்னேரியில் இருக்க வேண்டுமென்பது கண்டிஷன். அந்த கிராமத்தில் விசாரணைக்கு ஏற்பாடு செய்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோர்ட் கிராமத்திலே இருக்கிறது. அடிபட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் பொன்னேரியில் இருக்கிறார்கள். சாட்சி சொல்ல ஒருவனும் கிராமத்திலே இல்லை. அதுபோல் திருச்சியிலே பர்மா அகதிகளுடைய வார்டனாக கன்காபாய் இருந்திருக்கிறார். அவர் இறந்து போயிருக்கிறார். அதை விசாரிக்க இன்னொரு வார்டனுடைய கணவன் கேசவன் என்பவனை அழைத்துக்கொண்டு போகிறார்கள். அவன் காவல் நிலையத்திலிருந்து திரும்பி வரவில்லை. அதற்காக ஒரு போராட்டம். இத்தாப்பு பேசுவதால் தான் நான் இதையெல்லாம் சுட்டிக்காட்டுகிறேன். ஆளுநர் உரையில் தோழமை உணர்வோடு நாம் எல்லாம் பழக வேண்டும். இணைந்து பணியாற்றுகின்ற நிலைமை உருவாக வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரியங்களைப் பார்க்கும்போது, தோழமை உணர்வோடு பழகுகிறார்களா, இல்லை காழ்ப்புணர்ச்சியோடு பழகுகிறார்களா என்று புரியவில்லை.

சென்னைக்குக் குடிநீர் வழங்குவது பற்றிய திட்டம் குறித்து ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது கட்டளைக் கால்வாய் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். 459 கோடி ரூபாய் செலவில் அதை உருவாக்கப் போகிறோம், சென்னை மக்களுக்குக் குடிநீர் பஞ்சம் தீர்ந்து





விட்டது என்று முழங்க ஆரம்பித்து விட்டார்கள். ஏற்கெனவே இருந்த அரசு வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? அதை ஏற்றுக்கொள்வதற்கு மறுக்கிறார்கள். லஞ்ச ஊழலா? இல்லை இல்லை, அது நிரூபிக்கப்படவில்லை என்று சர்க்காரியா கமிஷன் கூறிவிட்டது. அதில் வேறு ஏதாவது நிபுணர்களுடைய குற்றச்சாட்டு இருக்கிறதா? ஜனாதிபதி ஆட்சியில் போடப்பட்ட நிபுணர் குழு இது சாத்தியபூர்வமான நல்ல திட்டம், வரவேற்க வேண்டிய நல்ல திட்டம், செயல் படுத்த வேண்டிய திட்டம் என்று சான்றிதழ் கொடுத்து விட்டது. அதற்குப் பின் ஏன் அதைத் தூக்கி எறிய வேண்டும்? 100 கோடி ரூபாய் வரை செலவிட்டால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றி விடலாம். ஒன்றிரண்டு ஆண்டுகளில் அதை நிறைவேற்றி விடலாம். அதை விட்டு விட்டு 5 ஆண்டுகளுக்குள் கட்டளைக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொல்கிறார்கள். இப்படிச் செய்வது காழ்ப்புணர்வு இல்லையா? இதற்குப் பெயர் தான் தோழமை உணர்வா? சென்னை மக்களுக்கு பஞ்சமில்லாமல் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் இருந்தால், இதைக் கொண்டுவர வேண்டாமா? இதில் என்ன ஓட்டை இருக்கிறது? வீராணம் திட்டத்தை நிறைவேற்ற திட்டம் தீட்டிய எஞ்சினியர்கள் தான் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற திட்டம் தீட்டியிருக்கிறார்கள். ஆகவே, எஞ்சினியர்களைக் குறை சொல்கிறார்களா? அவ்வாறு திட்டத்தைத் தீட்டுகின்ற எஞ்சினியர்களுடைய திறமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஆகவே வீராணம் திட்டத்தை மறுபரிசீலனை செய்து கொண்டுவர. இந்த அரசு முனைய வேண்டும். அப்போது தான் தோழமை உணர்வு என்கிற சொல்லுக்கு உண்மையான அர்த்தம் இருக்க முடியும். அந்த அளவுக்கு இந்த அரசு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்றும், அரசியல் காழ்ப்புணர்வை விட்டு விட்டு, ஜனநாயக முறையில், தோழமை உணர்வோடு இனிமேலாவது நடந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

* **திரு. க. அருணாசலம்:** துணைத் தலைவர் அவர்களே. இந்தச் சந்தர்ப்பத்தில் உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் முன் மொழிந்த இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டின் பண்பினையும், தமிழ் இலக்கியத்தின் சிறப்பினையும் எடுத்துக்காட்டுவதற்காக இந்தப் புத்தாண்டிலே நடந்த பெரும் முயற்சி உலகப் பாராட்டுக்குரிய ஒன்றாக இருந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பொதுவாக மக்கள் பேசிக்கொள்வது இதற்கு இவ்வளவு அதிகமாகப் பணம் செலவு செய்ய

வேண்டுமா என்பது. மதுரை நகரத்திலிருந்து வந்த நான், இந்தச் செலவு நிரந்தரமான பெருமையை உருவாக்கித் தந்திருப்பதாகத் தோன்றுகிறது, மதுரை நகரத்தின் பெருமையை வெளிக்கொண்டு வந்திருப்பதனாலேயே, இந்தச் செலவு பொருத்தமானது, இப்படி ஆண்டுதோறும் ஒரு நகரத்திற்குச் செலவு செய்தாலும் அது பொருத்தமானது என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 'நேஷனல் இன்டகிரேஷன்' என்று பேசுகின்றார்கள். ஒருவர் இன்னொருவருடைய பண்பாட்டைப் புரிந்துகொண்டு அதற்கு மரியாதை கொடுக்கும் அளவுக்கு நிலைமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றால், இந்தமாதிரி விழாக்கள் நிறைய நடைபெற வேண்டும். இப்படி ஒரு சிறந்த நகரம் இருக்கிறது, அங்குள்ளவர்கள் மற்றவர்களோடு அவர்களுடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் புரிந்துகொண்டு சிறப்பாகக் கூடி வாழ முன்வருகிறார்கள் என்ற செய்தியை விளம்பரப்படுத்தியதற்காக நான் நன்றி செலுத்துகின்றேன்.

ஆளுநருடைய உரையிலே, வறுமையைப் போக்க நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து முன்னாலே சொல்லப்பட்ட கருத்தாக இருந்தாலும், மறுபடியும் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகளைக் கொண்டு, அந்தத் தொழில்மயத்தை எப்படி இந்த நாட்டிலே கொண்டுவருவது என்பதை நாம் தீர சிந்திக்க வேண்டும். என்னுடைய அனுபவத்திலே இருந்து நான் சில விஷயங்களைச் சொல்கிறேன். 12 ஆண்டுக் காலமாக இந்த நாட்டைத் தொழில்மயமாக்கு வதற்கு செய்த முயற்சிகளிலிருந்து எனக்குத் தெரிந்த சில அனுபவங்களை நான் பகிர்ந்துகொள்கிறேன். அரசு உண்மையாக வறுமையைப் போக்க வேண்டுமென்று நினைத்தால், சிறு தொழில்களை, கிராமத் தொழில்களை, விவசாயத்துடன் இணைந்த தொழில்களை வளர்க்க வேண்டும். ஆனால், தொழில்மயமாக்க வேண்டும் என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு பெரும் தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். உலகத்திலே பல பகுதிகளிலே அதிகமான அளவிலே தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய நாட்டிலே பீஹார் மாநிலத்திலே அதிகமான பெரும் தொழில்களை ஆரம்பித்திருக் கிறார்கள். இவ்வளவு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டும், அங்குள்ள வறுமை நிலைமை குறைந்திருக்கிறதா? நம்முடைய நாடும் கடந்த 20 ஆண்டுக் காலத்திலே கீழ் நிலையிலே இருந்து மேல் நிலைக்கு உயர்ந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஒன்பது ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த தேசிய வருமானம் இன்றைக்கு 68 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இருந்த போதிலும், வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கையும் கொஞ்சம் அதிகமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது என்று ஒவ்வொரு





ஐந்தாண்டுத் திட்டம் முடியும்போதும் சொல்கிறார்கள். இன்று 48 சதவீதம் பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருக்கிறார்கள் என்று திட்டக் கமிஷன் சொல்கிறது. உலகத்தின் பார்வையில் அடிமட்டத்தில் இருந்த நாடு இன்றைக்கு 11-ம் இடத்திலே இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும்போது, ஏன் இந்த வறுமையை ஒழிப்பதில் முன்னேறவில்லை என்று சொன்னால், அதற்குக் காரணம் நம்முடைய கிராமங்கள் இன்னும் முன்னேறாதது. தொழில்மயமாக்க வேண்டும் என்று சொல்லி பெரும் தொழில்களை நாம் அதிகமாகப் பெருக்கி விடக் கூடாது. கிராமத்திலே செய்யக்கூடிய தொழில்களை கிராமத்திலே உள்ளவர்கள் செய்ய வேண்டும் என்று விட்டுவிட வேண்டும். எந்தத் தொழிலை கிராமத்திலே செய்கிறார்களோ அந்தத் தொழிலை பெருந்தொழில் ஆக்கக் கூடாது. இந்தக் கருத்துக்களை இப்போது பிறநாட்டினரும் ஏற்றுக்கொண்டு சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இப்போது இருக்கும் சிறு தொழில்களையும், கைத்தொழில்களையும் எடுத்துக்கொண்டால், இப்போது இருக்கும் நிலையிலேயே நவீன கருவிகளை எப்படி உபயோகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றுதான் நாம் சிந்திக்க வேண்டும். நம் நாட்டில் உள்ளவர்கள், குறிப்பாக தமிழ் நாட்டில் உள்ளவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேலே வருவதற்கு இப்படிச் சிந்தித்துச் செயல்படுத்தும் திட்டம் மிகவும் உதவியாக இருக்கும். அதற்கு மாறாக இப்போது ஒவ்வொரு வட்டாரத்திலே உள்ள 600 குடும்பங்களை எடுத்துக் கொண்டு அவர்களை மேம்படுத்துவதற்காக திட்டங்கள் தீட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டங்களை 'வேலைக்கு உணவு திட்டம்' என்று சொல்கிறார்கள். ரோடு போடுவது, மண் வெட்டுவது, குளங்களைத் தோண்டுவது என்றெல்லாம் வேலைகளை, திறமையற்ற தொழில் களை, கிராமங்களிலே இருப்பவர்களுக்குக் கொடுத்து வருவதன் மூலம் அவர் கள் நிரந்தரமாக ஒரு வேலை செய்து நாட்டின் உற்பத்தியையும் அவர் களுடைய நல்வாழ்வையும் பெருக்க முடியாது என்ற ஒரு நிலைமையை உரு வாக்குகின்றார்கள். இதனால் அவர்கள் என்றைக்கும் 'சப்சிஸ்டென்ஸ் லெவல்' க்குக் கீழே இருக்கும் நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலத் தைப் பார்த்தால், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு இயந்திரம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது ஒரு தொழில் செய்கிறார்கள். ஓய்வு நேரத்திலே செய் கிறார்கள். முழுநேர வேலையாகவும் செய்கிறார்கள், எல்லாம் சேர்ந்து அவர் களுடைய லாபம், வருமானம் அதிகமாக இருக்கிறது. அந்த மாநிலத்திலே பெரிய தொழில்கள் அதிகமாக இல்லை. பெருந் தொழில்கள் என்று நாம் ஆரம்பிக்கும்போது சிறு தொழில்கள் கைத்தொழில்கள் மற்றும் கிராமத்திற்கு வேண்டிய தொழில்கள் இல்லாமல் போய்விடுகிறது.

(திரு. க. அருணாசலம்) [1981 ஜனவரி 23

நம்முடைய நாட்டிலே விவசாயப் பெருங்குடி மக்கள் மூலப்பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். விவசாயிகளுடைய விளைபொருள்களுக்குப் போதுமான விலை கொடுக்க முடியவில்லை என்று நாம் அனைவரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் உற்பத்தி செய்கிற பொருளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நாம் அதிக விலை கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். அதோடு, அவர்கள் வேறு தொழில்களையும் செய்தால்—எந்தப் பொருள் இங்கு அதிகமாக விற்பனையாகிறதோ அந்தப் பொருளை உற்பத்தி செய்தால்—பொதுவாக அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும். இல்லாவிட்டால் வேடிக்கையான நிலைமைகள் உண்டாகும். ஏழைகள் மேலும் அதிகமான அளவில் ஏழைகளாக இருந்து கொண்டிருப்பார்கள். எனவே, இந்தக் கருத்துக்களை அரசு கவனத்தில் கொண்டு, நாட்டைத் தொழில்மயமாக்க வேண்டும் என்று சொல்லும்போது, கிராமத்து மக்கள், கிராமத்திலே இருக்கின்ற விவசாயக் குடிமக்கள் இவர்களுக்கெல்லாம் நிரந்தரமாக ஒரு தொழிலை ஏற்படுத்திக் கொடுத்து, அந்தத் தொழிலைச் செய்யக்கூடிய அளவுக்கு தொழில் திறமையை வளர்த்து, அந்தத் தொழில் செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். அப்படிச் செய்தால்தான், அவர்களுடைய வறுமையை நிரந்தரமாகப் போக்க உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்குக் கொள்கை. அதைப்பற்றி நாம் பேச வேண்டியது மிகவும் அவசியம். அது முக்கியமான சமுதாயச் சீர்திருத்தம் என்பதிலே சந்தேகம் இல்லை. மக்கள் மக்களாக வாழ்வதற்கு வேண்டிய ஒரு திட்டம் அது. நம் மாநிலத்திலே பல ஆண்டுக்காலமாக நாம் இதைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்திருக்கிறோம். இதை முதன்முதலாக நாடு தழுவிய நிலையில் கொண்டு வந்த பெருமை தமிழ் நாட்டிற்கு உண்டு. குஜராத் மாநிலத்திலே மதுவிலக்கு இருக்கிறது. ராஜஸ்தான் மாநிலத்திலே முழுவதும் இது இப்போது அமுலுக்கு வந்திருக்கிறது. சில மாநிலங்களிலே பாதி அளவிலே இருந்ததை இப்போது நீக்கி வைத்திருக்கிறார்கள். உத்திரப்பிரதேச மாநிலத்திலே சில மாவட்டங்களிலே இருந்த மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தினார்கள். அப்போது அங்கே என்ன நடந்தது? மக்களே எழுச்சியடைந்து மதுவிலக்கை அமுல்படுத்தும்படி செய்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலேயும் நடந்த கதையெல்லாம் நமக்கு ஞாபகம் இருக்கும். திண்டுக்கல் எலக்ஷன் மறக்க முடியாததல்லவா? ஆகவே, நாம் என்ன பேசினாலும் எப்படியாவது பொருளீட்ட வேண்டும் என்று நினைக்கும் கயவர்கள் சமுதாயத்திலே இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக ஆங்காங்கே நடக்கிற சாராயத் தொழில்களைப் பார்த்து, இதைத் தளர்த்த வேண்டும் என்று பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள். ஆனால்



1981 ஜனவரி 23] (திரு. க. அருணாசலம்)

(பிற்பகல் 1-00)

நாம் இதைப்பற்றி கவனத்தோடும் விழிப்போடும் இருக்க வேண்டும். பொது மக்களுக்கும், சாதாரண ஏழை எளிய மக்களுக்கும், கிராமத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்றால், மதுவிலக்கை அரசு தீவிரமாக அமுல் நடத்த முன்வர வேண்டும்; அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரப்படுத்தி என்ன செய்வது? எப்படி தீவிரப்படுத்தினாலும், சில கயவர்கள் இருந்து கொண்டுதானே இருப்பார்கள் என்று கேட்கலாம். ஆனால் செய்முறைகளைச் செம்மையாகவும் திறமையாகவும் செய்தால், மதுவிலக்கைச் சிறப்பாக அமுல்படுத்த முடியும் என்றுதான் நான் நம்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையில் வெறும் சட்டம் மட்டும் போட்டுவிட்டால் போதாது. இதற்குத் தேவையான இணைச் செயல்களாகப் பலவற்றைச் செய்ய வேண்டும். கிராமங்களிலும், சேரிகளிலும் மற்ற இடங்களிலும் மாமன்றங்கள், மனமகிழ் மன்றங்கள் போன்ற மாற்று அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் குடிப்பவர்களேகூட குடிப் பழக்கத்தை விட்டுவிட்டு தங்கள் கவனத்தை வேறு வழியில் செலுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இதை நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட மாற்று ஏற்பாடுகள் தற்போது இல்லை. நாடெங்கும் பெரிய பெரிய குடிசை மாற்று ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பெரிய பெரிய திட்டங்களைப் போட்டு, மிகப் பெரிய கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். அங்கெல்லாம் பெரிய பெரிய கம்யூனிட்டி ஹால்களைக் கட்டுகிறார்கள். ஆனால் குடிசை மாற்று ஏற்பாடுகளைச் செய்யும்போது, ஒரு 100 பேர் சேர்ந்து இருக்கிற மாதிரி ஒரு இடம் கூட அமைப்பதில்லை. ஆகவே அங்கே இருப்பவர்கள் தங்கள் வேலை முடிந்தவுடனே வேறு எங்காவது போகலாம் என்று நினைத்து, கடைசியில் சாராயம் விற்கிற இடத்திற்குப் போய் அங்கே குடித்துவிட்டுப் பேசிக் கொண்டிருக்க ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்றால், ஆங்காங்கே 100 அல்லது 200 பேர் கூடி இருக்கிற மாதிரி இடம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் எல்லாம் அந்த இடத்திற்குப் போய் வேறு காரியங்களைப் பார்க்க முடியும். நிறைய டீ கடைகளையும், காப்பி கடைகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் அங்கெல்லாம் பொது மக்கள் நின்றுகொண்டுதான் டீ, காப்பியைக் குடிக்க முடியும். 10 பேர் உட்கார்ந்து பேசக்கூடிய இடமாக அது இல்லை. ஹோட்டல்களுக்குப் போனால், 4 பேர் உட்காருவதற்கு வசதியாக மேஜையும் அதைச் சுற்றி 4 நாற்காலிகளும் போட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தால்தான் நாம் மகிழ்ச்சியோடு உட்கார்ந்து பேச முடிகிறது.

உ கடைகளில் அத்தகைய வசதி இல்லாத காரணத்தால், அங்கெல்லாம் கள்ளுக் கடையைத் திறக்க வேண்டும் என்றுதான் பேசுகிறார்கள். கள்ளுக்கடைகளைத் திறனதால் அரசாங்கத்திற்கும் ஏராளமான பணம் கிடைக்கும் என்று பரவலாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கேட்கும்போது, அரசாங்கத்திற்கேகூட நிறைய பணம் வராதமென்ற எண்ணம் ஏற்படும். அரசாங்கத்திற்கு ஒரு ரூபாய் வருகிறது என்றால், பொது மக்களுக்கு நான்கு ரூபாய் செலவாகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதில் 3 ரூபாய் இடைத் தரகர்களுக்குப் போய்விடுகிறது. இதைச் செய்யாமல் மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் செய்தால், இந்த 4 ரூபாய் செலவும் நல்ல வழியில் இருக்கும். அரசாங்கத்திற்கும் அதனால் வருவாய் கிடைக்கும். பொது மக்கள் அந்தப் பணத்தைப் பிரயாணத்திற்கும், சுற்றுலாவுக்கும், மற்ற பொருள்களை வாங்குவதற்கும் செலவழிப்பார்கள். இதன் காரணமாக அரசாங்கத்திற்கே வருவாய் அதிகமாகும் என்பதைப் பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பிளானிங் கமிஷனில் இருக்கிற நிபுணர்களுக்கு கிராம வாழ்க்கைபற்றி ஒன்றும் தெரியாமல் இருப்பதால் அங்கெல்லாம் இருக்கும் ஏழை எளிய மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதுபற்றித் தெரியாமல், இதற்கு ஆதரவு தரமாட்டேன் என்கிறார்கள். இப்படி எந்தப் பஞ்சமாபாதகத்தைச் செய்தாவது பொருள் சேர்க்கலாம் என்று நினைத்தால், அதன் விளைவாக நாடு குட்டிச்சுவராகத்தான் போகும்.

தமிழர்களாகிய நாம் பண்பாடு மிக்கவர்கள். 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த பெரியவர்கள் சொல்லிச் சென்ற நீதிநெறிகளின்படி முறைப்படி நாம் இன்னும் வாழ்வதால்தான், நம் பண்பாடுபற்றி நம்மால் இன்னும் பேச முடிகிறது. இந்த நிலைமை மாறாமல் இருக்க வேண்டுமென்றால், நாம் மது விலக்கை இன்னும் தீவிரமாக அமுல் செய்ய வேண்டும். அதற்கான எல்லா முயற்சிகளையும் நாம் மேற்கொண்டாக வேண்டும். இப்படிப்பட்ட முயற்சிகளில் பொதுவாக ஊர் பொதுமக்களை நாம் ஈடுபடுத்த வேண்டும். ஆங்காங்கே உள்ள பெரியவர்களை இதில் ஈடுபடுத்துவதன் மூலம் இந்தத் திட்டத்தைச் சரிவர அமுல்படுத்தலாம். வெறும் போலீஸ்காரர்களை மட்டும் நம்பினால் இந்தத் திட்டம் சரியாக நடக்காது. ஒவ்வொரு ஊரிலும் ஆங்காங்கே உள்ள பெரியவர்களைக் கொண்ட குழு அமைத்து, அவர்களின் ஆதரவைப் பெற்று, இதை நடத்தினால் சிறப்பாக இருக்கும். தஞ்சை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் ஆங்காங்கே உள்ள கிராம மக்கள், குழுவாகக் கூடி ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த அமைப்பை மாவட்டத்திலும் ஏற்பாடு செய்து, மிகத் திறமையாகக் காரியம் செய்து கொண்டிருந்தார்கள். இப்படி எல்லா மாவட்டங்களிலும் செய்தால், இப்போது இருப்பதைவிட இன்னும் தீவிரமாக மதுவிலக்குத் திட்டம் நடைபெறும்.



தற்போது நம்மில் பலர் ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது நம்முடைய மாநிலத்தின் பணம் இப்போது வீணாகிக் கொண்டிருக்கிறது. நம் பணம் பாண்டிச்சேரிக்கும் கருநாடகாவுக்கும் போகிறது. நம் மக்கள் அங்கே போய் குடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நமது அமைச்சர்கள் பல காரியங்களுக்கு பக்கத்து மாநிலங்களுக்குச் செல்லும்போது, நமது மாநிலத்தின் எல்லைக்கு அப்பால் ஒரு குறிப்பிட்ட தூரம் வரையில் மதுக் கடைகளை அந்த மாநிலங்கள் வைக்காமல் செய்யும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நம் மாநிலமும் சிறப்பாக இருக்கும். அவர்களுக்கும் அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். என்வே எந்தக் காரணத்தைக் கொண்டும் மது விலக்குக் கொள்கையைத் தளர்த்திவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். தளர்த்துவதாக இந்த அறிக்கையில் ஏதும் சொல்லப்படவில்லை. ஆனால், இந்தக் கொள்கைபற்றி இடையிடையே பேசுவது இல்லது என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளியே கண்டபடி பேசுவதைவிட இங்கே நம் கருத்துக்களைச் சொல்லித் தெளிவுபடுத்துவது நல்லதாக இருக்கும் என்ற எண்ணத்தில் சொல்லியிருப்பார் என்று நம்புகிறேன். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொண்டு, எல்லோரும் மது விலக்குக் கொள்கையைத் தளர்த்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். நாடே மோசமாக இருக்கிறது என்று சொல்லி நாமும் அந்தப் போக்கில் சென்றுவிடக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுக்கே இது தெரியும். இது மிக முக்கியமான சமுதாயச் சீர்திருத்தமாகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத்தான் அரசு இருக்கிறதே தவிர, இதைவிட இன்னும் கெட்டுப் போக வழி செய்வதற்கு இல்லை என்பதை நாம் உணர வேண்டும். ஆனால் நமது நாட்டில் ஒரு துரதிருஷ்டம் என்னவென்றால் பல மாநிலங்களில் இன்னும் மது விலக்கு அமுல் செய்யப்படாமலேயே இருக்கிறது. எனவேதான் இந்த மாதிரியான எண்ணம் நம்மில் சிலருக்கு ஏற்படுகிறது. அண்டை மாநிலங்கள் அமுல்படுத்தாமல் இருக்கும்போது, நாம் மட்டும் இந்தக் கொள்கையில் வெற்றி பெற இயலுமா என்ற சந்தேகம் நம்மில் பலருக்கு ஏற்படுகிறது. நம்முடைய மாநிலத்தின் பணம் மற்ற மாநிலங்களுக்குப் போய்விடுகிறதே என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டும்போது, நமக்கேகூட சபலம் தோன்றலாம். அப்படிப்பட்ட சபலம் தோன்றுவது நமது பண்பாட்டுக்கு உதவி செய்வதாகாது; எனவே அதை அனுமதிக்கக் கூடாது என்று கூறிக் கொள்வதோடு இந்தத் திட்டத்தை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் உரையில் ஆங்கிலத்தில் "ஷெட்யூல்டு கேஸ்ட்ஸ் அண்டு ஷெட்யூல்டு டிரைப்ஸ்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நாம் வழக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் வார்த்தைகள். 'ஷெட்யூல்டு கேஸ்ட்ஸ்' என்று சொல்லும்போது, அதில் எத்தனையோ பிரிவினர் இருக்கிறார்கள். ஆதி திராவிடர்கள் என்பது ஒரு பகுதி. இவர்கள் தவிர வேறு பல பிரிவினர் அதில் அடங்கியிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் சேர்த்துத்தான் நாம் "டிப்ரஸ்டு கிளாசஸ்" என்று சொல்லிப் பார்த்தோம். அதில் நமக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஆதி திராவிடர்கள் என்றால், ஆதி ஆந்திரர்கள் என்பவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நம் நாட்டிலேயே தெலுங்கு பேசுகிற நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆதி ஆந்திரர்கள். அவர்கள் ஆதி திராவிடர்கள் என்றால், அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்த நிலையில் ஆளுநர் உரையின் தமிழாக்கத்தில் ஷெட்யூல்டு கேஸ்ட்ஸ் என்பதை ஆதி திராவிடர்கள் என்று போட்டிருக்கிறார்கள். அதையொட்டி வேறு சில சுற்றறிக்கைகளும் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஹரிஜன் நல இலாக்கா, ஹரிஜன நல ஊழியர்கள், ஹரிஜன் வெல்பேர் ஆபீசர்ஸ் என்று இப்படி எல்லாவற்றையும் மாற்றவேண்டும் என்று இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான உத்தரவும் வந்திருப்பதாக நான் அறிகிறேன். இந்தப் போக்கு நம் நாட்டில் நிலவி வரும் ஒற்றுமைக்கே உலை வைப்பதாக இருக்கும், உதவியாக இருக்காது என்றுதான் நான் சந்தேகப்படுகிறேன்.

ஜாதிகளை ஒழிக்க வேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டே ஜாதிகளில் நாம் தீவிரவாதிகளாக இருக்கிறோம். மகாத்மா காந்தி அடிகள் அவர்களுக்கே இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. எனவே எல்லாவற்றையும் சேர்த்து அப்போது "டிப்ரஸ்டு கிளாசஸ்" என்று சொல்லிப் பார்த்தோம். அதுவே சரியில்லை என்று சொன்னதால், 'ஷெட்யூல்டு கேஸ்ட்ஸ்' என்று குறிப்பிட்டு வருகிறோம். இது கடந்த 50 ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. எல்லா மாநிலங்களிலும் இது இருக்கிறது. ஒருவேளை ஹரிஜன் என்பது சரியான தமிழ் இல்லையென்று நினைத்து, ஆதி திராவிடர் என்று போட்டால் சரியாக இருக்குமென்று கருதி போட்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஆதி திராவிடர்கள் என்று சொன்னால், ஆதி ஆந்திரர்கள் அதை வேண்டாம் என்று சொல்லுவார்கள். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் என்று சொல்லுகிறோம். ஆகவே ஜாதிப் பாகுபாடு இருக்கக் கூடாது. 'அரிஜன' என்ற வார்த்தையை விட்டுவிட்டு 'ஆதி திராவிடர்' என்று போட்டுவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? காந்தி சொன்ன அரிஜன் என்ற வார்த்தையைப் பிடிக்கவில்லை, ஆகவே வேறு ஒரு வார்த்தையைப் போடலாம் என்று போட்டிருக்





களாம். அரிஜன் என்ற பெயரே இருக்க வேண்டுமென்று பிறகு கிளர்ச்சி நடத்துவார்கள். ஏற்கனவே நாட்டிலே ஏராளமான கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கிளர்ச்சிகளை நடத்த இடம் கொடுக்காமல் ஏற்கனவே வழக்கில் இருந்த சொல்லையே தொடர்ந்து பயன்படுத்தினால் நலமாக இருக்கும்.

ஆளுநர் தன்னுடைய உரையில் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகள் பிரச்சினைகளைப்பற்றி அதிக ஒரு பெரும் குழுவை அமைக்கப் போகிறோம் என்று ஏற்கெனவே அரசு ஓர் உத்திரவாதத்தை அளித்திருக்கிறது. அப்படிப்பட்டதொரு குழு அமைத்திருந்தால், இப்போது நடந்திருக்கக் கூடிய சில்லரைப் பிரச்சினைகளில் தீர்வு கண்டிருக்க முடியும். அப்படிப்பட்ட குழுவை அமைத்தால் உதவியாக இருக்குமென்று கூறிக்கொள்ளுகிறேன். நல்ல பல திட்டங்களைச் சொல்லி ஆளுநர் ஆற்றியுள்ள உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் முன்மொழிந்துள்ள நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-10)

4. ஆணைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

141. Notification issued with G.O. Ps. No. 1029, Commercial Taxes and Religious Endowments, dated the 13th October 1980 in regard to amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II(1) CTRE|196|77, dated the 6th September 1977 published at page 124 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 28th September 1977. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

142. Notification issued with G.O. Ps. No. 833, Commercial Taxes and Religious Endowments, dated the 10th September 1980 in regard to an amendment to the Revenue Department Notification S.R.O. No. A. 1966 of 1959 dated the 28th March 1959, published at pages 488—490 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

143. Notification issued with G.O. Ps. No. 1078, Commercial Taxes and Religious Endowments, dated the 22nd October 1980 exempting from tax payable by the Union Company (Motors) Private Limited, Madras-2 under the Tamil Nadu General Sales Tax Act on the sale of a Standard 20 (251 D) Delivery Van to Thiru M. Balasubramaniam, Ex-warrant Officer, Indian Air Force, Madras-78, for donation to Sri Srinivasa Nikethanam, Madras-34. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

144. Notification issued with G.O. Ms. No. 1197, Rural Development and Local Administration, dated the 19th July 1975 in regard to an amendment to the Tamil Nadu Municipal Service Rules, 1970. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

145. Audit Report on the Accounts of the Tamil Nadu Water Supply and Drainage Board for the year 1971-72. [Laid on the table of the House under section 47 of the Tamil Nadu Water Supply and Drainage Board Act, 1970 (Tamil Nadu Act 4 of 1971).]



Y 211, 32 N81
NE1-12252

*A. Statutory Rules and Orders—cont.*

146. Order issued with G.O. Ms. No. 2582, Revenue, dated the 15th November 1980 invoking the 'Power to remove difficulty' provision under section 9 of the Tamil Nadu Abolition of Posts of Part-time Village Officers Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 10 of 1980). [Laid on the table of the House under section 9 (2) of the Tamil Nadu Abolition of Posts of Part-time Village Officers Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 10 of 1980).]

147. Report of the Comptroller and Auditor-General of India for the year 1978-79 (Civil). [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

148. Report of the Comptroller and Auditor-General of India for the year 1978-79 (Commercial). [Laid on the table of the House unded Article 151 (2) of the Constitution of India).]

149. Report of the Comptroller and Auditor-General of India for the year 1978-79. (Revenue Receipts). [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India.]

150. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1978-79. [Laid on the table of the House under Article 151(2) of the Constitution of India).]

151. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1978-79. [Laid on the table of the House under Article 151(2) of the Constitution of India).]

*B. Reports, Notifications and Other Papers.*

Nil.

122020

இணைப்பு.

[52-ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

Address by Thiru Sadiq Ali, Governor of Tamil Nadu to the Members of the Tamil Nadu Legislative Assembly and the Tamil Nadu Legislative Council assembled together at the Assembly Chamber, Fort St. George, Madras, at 11.00 a.m. on Wednesday, the 21st January 1981.

*Honourable Members of the Legislature,*

I deem it a great privilege to meet all of you for the first time in this year. Let me take this opportunity of wishing you a very happy New Year and a very happy Pongal. Let us hope that the current year would usher in an era of prosperity and plenty to the people of Tamil Nadu.

2. The year has begun well with the Fifth World Tamil Conference having just been completed on a very happy note. Government had taken immense pains in drawing up a very well organised programme for holding this conference in the ancient and historic city of Madurai. This opportunity has been availed of not only by the Tamil knowing population of this State but also by the lovers of the language spread throughout the country, more especially by those coming from various countries of the world. Though this event, it has been made possible to re-live and re-enact the greatness of Tamil history, the grandeur of Tamil culture and literature and also to show to the world the richness of Tamil heritage.

3. The State also had the signal honour of the Prime Minister of the country gracing the occasion on the final day, which marked the close of the Conference and which drew the appreciation from several lakhs of pepole. Addressing the huge gathering at Madurai on the 10th of this month, the Prime Minister assured the people of Tamil Nadu that Hindi would not be imposed on non-Hindi pepole. The Government and pepole of Tamil Nadu are very grateful to her for reiterating the assurance given by the late Pandit Jawaharlal Nehrn that Hindi would never be imposed on Tamil Nadu.







4. The participation of a very large number of foreigners from different countries of the world in the Tamil Conference, is a clear indication of the very great interest evinced by the foreigners in Tamil language. The State Government would request Government of India to grant scholarships liberally to foreign students visiting this country to learn Tamil and also to help this Government in sending Tamil teachers to foreign countries where the domiciled Tamilians wish to learn this language.

5. Government have also decided to establish a World Tamil Sangam with headquarters at Madurai. This organisation would be staffed by Tamil Scholars who will be undertaking intensive research work. This Sangam will function with complete academic autonomy and with its own branches in various parts of the world. Government will be making all efforts to implement the principle " Engum Tamil, Ethilum Tamil ".

6. Another happy development has been the finalisation of the State's Sixth Five-Year Plan, recently in New Delhi. After a series of discussions between the Chief Minister and the Union Planning Minister, the State Plan has been fixed at Rs. 3,150 crores which is almost three times as large as the Fifth Five-Year Plan outlay of Rs. 1,122 crores. This is also Rs. 1,000 crores higher than the Rs. 2,150 crores figure envisaged earlier for the 1978-83 Draft Five-Year Plan. As against a 411 crore rupees State Plan for the year 1980-81, a 514 crore rupees Plan for 1981-82 has been accepted by the Planning Commission.

7. The State Government has been requesting the Government of India at various forums to increase the quantum of Central assistance to the Plan Outlay. As the Hon'ble Members are aware, Central Plan assistance is now determined under what is popularly known as the ' Gadgil formula '. Even at the last National Development Council meeting in Delhi the Chief Minister had suggested that the present criteria under this formula for allocation of funds needed to be changed. In the discussions with the Planning Commission last month, it was reiterated that the backwardness of a State should be judged on the basis of percentage of population below poverty line and per capita Plan Outlay of the State instead of the per capita income concept. When the emphasis is for the elimination of poverty, it is hoped that the Government of India will accept these reasonable proposals.

8. Government views with concern the trend of spiralling prices and the consequent build-up of inflationary pressures. When there is inflation, wage increases are not really going to help them, as this would again refuel fire of inflation. Price increase and wage increase seem to be following each other in a vicious circle. Furthermore not only such wage increases do not bring the desired benefits to this organised miniority, but also it throws the unorganised large majority of people below poverty line such as handloom weavers, landless labourers, the village artisans, etc., into the grip of misery by further rise in prices. While te organised miniority has some clout to get higher emoluments, the hapless majority does not have this. Thus, it is the silent majority which suffers the most. It is very essential that this trend is arrested. In order that the essential commodities are made available at reasonable prices to all sections of the society, especially to the weaker sections, first the public distribution system must be strengthened and next, there must be an all round increase in production of such items. Honourable Members are aware that the Government has already organised a fair price shop in every revenue village in our State, to strengthen the public distribution system. As for the increased production, my Government is of the view that the farmers must be given all forms of incentives such as higher procurement price, supply of inputs such as fertilisers, pesticides, diesel, etc., at reasonable prices without causing any increase in the consumer price.

9. Agriculture, being the major contributory factor to the economy as a whole, forms the most important aspect of the rural economy. In order that not merely the land owing class but the weaker sections in the rural society such as small and marginal farmers, landless agricultural labourers, village artisans, etc., survive, they must be placed on a sound basis. One way of ensuring health in this sector is to fix a remunerative price for their produce. Time and again, my Government has been insisting on the Government of India at almost all forums, to fix a price ensuring reasonable return to the farmers. Price of Rs. 130 per quintal for paddy and Rs. 200 per tonne for Sugarcane have been urged by my Government. The Government of India however has fixed Rs. 105 per quintal as the procurement price for common variety of paddy and Rs. 130 per tonne as the statutory minimum price of Sugarcane. My Government, though still insisting on the Government of India to reconsider the above decisions, on its own has fixed price of Rs. 115 per quintal of paddy and Rs. 175 per tonne of Sugarcane.



10. Keeping the interests of the agriculturists in mind, Government has undertaken a series of measures to help the small farmers who have not been able to repay the co-operative loans due to failure of rains and natural calamities. State Government had approached the Government of India for assistance to write off the loans at least to the small farmers in respect of short-term co-operative loans converted into medium term loans which were outstanding as on 31st March 1980. But this plea for assistance was not accepted by the Government of India. However, the State Government from its own funds, has accorded sanction for Rs. 42 crores for repaying to the co-operative societies, on behalf of the small farmers, the medium term conversion and medium term conversion rephasement loans with interest, including penal interest, as on 31st March 1980. In case there are small farmers who owe money to the co-operative societies as on 31st March 1980 under the above conditions, and who have not been included in the earlier calculations, their loans also would be repaid by the State Government. There are some small farmers who had repaid loans of this nature to co-operative societies earlier. Government felt that the benefit given to the defaulters should accrue to this category of small farmers as well. The refund to be made to them will be adjusted towards the loans falling due against them during the year 1981-82.

11. My Government has also ordered waiving the collection of dues in respect of Thakkavi loans. As a result of implementing this order as on 3rd December 1980, a sum of Rs. 20,61,50,077 has been written off benefiting about 9,17,559 agriculturists.

12. Even in spite of these liberal gestures by the Government from its meagre resources, a certain section of agriculturists has been indulging in no-tax campaign against the State Government urging non-payment of current consumption charges, co-operative loans, taxes to the Government and to the local bodies, etc. When Government took steps to collect the current consumption charges from the agriculturists amounting to about Rs. 35 crores, the various associations of agriculturists and the political parties wanted a dialogue with the Government. My Government held consultations with the representatives from all such bodies twice and at their instance agreed to collect in easy instalments in the form of current dues and corresponding one month arrears, popularly known as one plus one formula. It is unfortunate that a certain section of the agriculturists organised an agitation, stopping the supply of essential commodities to the towns, thereby causing violence, loss of life and damage to property. In some places, milk and food were spoilt by them. No

Government can tolerate this type of activity. Therefore, my Government took appropriate action to maintain law and order. I hope that wise counsel would prevail among them to see reason and rationale in this stand of Government in helping the agriculturists to the utmost extent.

13. Rainfall in the course of this year has been fairly satisfactory, though not plentiful. However, certain pockets in the districts of Pudukkottai and North Arcot have experienced drought conditions due to failure of monsoons. Government has acted immediately and authorised digging of new wells and deepening of old wells at a cost of Rs. 1.30 crores. In North Arcot district, Government has also ordered remission of land revenue where the crop yield is less than 50 per cent. Relief measures would be taken wherever similar drought conditions become marked.

14. Whenever help is to be provided to the agricultural sector, Government has always kept the interest of the small and marginal farmers and landless agricultural labourers uppermost in its mind. This helpful and sympathetic attitude will be continued in the future also as a policy by this Government.

15. Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1980, which has been passed by the State Legislature, has been sent to the Government of India for the assent of the President. When the Bill becomes an Act, it will unearth transfers of land effected between 1st January 1958 and 6th April 1960, with a view to circumvent the then proposed legislation on land ceiling. Consequent on this Bill becoming an Act, surplus lands will be available for distribution among landless agricultural persons.

16. Irrigation forms an integral part of Agriculture. As the major river sources are almost exploited, in order to extend the area of irrigation, especially to help the drought prone parts of Madurai, Ramanathapuram and Tirunelveli districts, my Government will hold talks shortly with the Government of Kerala for diverting some of the surplus waters from the west-flowing rivers. It is unfortunate that a settlement on Cauvery River water dispute is yet to be reached in spite of several meetings among the basin States for the last twelve years starting from the year 1968. I hope that at least this year, we would be able to arrive at an amicable solution in the best interest of Tamil Nadu.



17. Allied to Agriculture, is the field of Fisheries. Tamil Nadu is blessed with a long coastal line but the State has not had the good fortune of getting the maximum benefit from this natural gift. As an initial step, State Government has requested Government of India to undertake a study, to survey the fishery resources of the East Coast of India. Government of India has responded stating that this will be examined. As a further step, PAUT has been asked to work out comprehensive proposals for enabling a study to be made of the marine mining, marine environment, marine resources, etc., of the East Coast.

18. At the same time, in order to tap the fish wealth in the deeper portions of the sea, the Tamil Nadu Fisheries Development Corporation has secured technical assistance from Government of India in identifying the type of deep sea fishing trawlers for different fishing areas and the agency from whom these are to be secured. All these measures undertaken by the Government would lead to a better utilisation of the marine resources of this State and would improve the living conditions of the fishermen.

19. Power being an important infrastructure for economic development, it is proposed to make major investments in this sector in the Sixth Plan to the tune of Rs. 1,023 crores. Lower Mettur Hydel Scheme costing Rs. 89.71 crores and Mettur Thermal Scheme costing Rs. 189.70 crores have already been sanctioned. More schemes will follow suit. However, at present there is a shortage of power necessitating 30 per cent cut on industries, which will be maintained at this level for this water year ending June 1981.

20. For stepping up industrialisation of the State and to create employment opportunities Government has been encouraging establishment of industries both in the private and public sectors. With the prospect of better availability of electricity, communication facilities, skilled manpower, etc., I hope that sufficient investments by the private sector can be attracted to our State. Government of India have been addressed to issue a licence for establishing a Sugar Mill with a crushing capacity of 1,250 tonnes of cane per day in the co-operative sector in Chengalpattu district. The Newsprint Project to be started in the public sector is also making headway and the Government of India, Planning Commision and World Bank are showing keen interest in this Project.

21. The progressive labour policy, followed by the Government has produced fruitful results. The labour situation in the State was, by and large, satisfactory in 1980. Government is considering amending the Industrial Disputes Act, 1948 with reference to certain

provisions on settlement under clause 12 (3) of the Act and also in regard to launching of strikes, the approval for which should be backed by 60 per cent of the labour force. This is now before the Standing Committee on Labour Laws, whose recommendations are awaited.

22. The one problem that is looming large is that of B. & C. Mills, involving about 13,000 families in Madras City. On the one hand, when the Government is going all out to create new job opportunities for the unemployed, it is really disheartening to note a situation, where even the existing employed is rendered jobless by the closure of this Mill. The State Government is doing its best to resolve this dispute. It is pertinent to point out that this is essentially a matter to be settled by the Government of India involving both the management and the workers. They have convened a series of meetings. Government hope that before long this problem will be amicably solved so that the industry can start working again.

23. Self-Sufficiency Scheme is now being implemented in 69 blocks out of 376 blocks in the State at an estimated cost of about Rs. 43 crores. It is expected that the physical targets fixed for the first batch of 69 blocks will be achieved before the end of the current financial year. This scheme will be extended to additional 120 blocks during the next financial year. Preliminary arrangements are being made to determine the size of the programme and for fixing the targets and arriving at estimates. A High Power State Level Committee is also monitoring the progress of the Scheme.

24. The Food for Work programme now modified and restructured as the National Rural Employment Programme, will be implemented in the State with the utmost vigour to help the rural poor.

25. Government of India opined that it would be desirable to hold the elections to the Local bodies after census work is completed; accordingly, election will be held after this work is over. These elections will be held at the earliest possible and the reins of Local Administration will be duly handed over to the democratically elected representatives of the people.

26. In the field of Education, proposals for establishing two new Universities at Coimbatore and Tiruchirappalli were already announced. The legislation to that effect will be introduced shortly. Government is also endevavouring to establish two more Universities —a Tamil University and a University at Karaikudi—during this year itself.



27. With the co-operation of the National Institute of Oceanography under-sea archaeological explorations in the coromandel coast (i.e., east coast of Tamil Nadu) especially at Kaveripoompattinam is being undertaken by the State Department of Archaeology.

28. Government have recently taken over the management of the Pachaiyappa's Trust, in public interest, for a period of two years.

29. Madras City has been having its own peculiar problems. If the monsoons fail, even drinking water becomes scarce. In order to augment the City water-supply, Government has decided to bring drinking water from River Cauvery, from a point below Kattalai regulator, in Tiruchirappalli district. Chief Engineer has opined that this scheme would provide an additional quantity of 995 million litres of water per day to the City and can be completed in a period of five years. This will provide employment opportunities to about a lakh of persons every day during the construction period. The cost of the project is nearly Rs. 459 crores and the World Bank has shown interest in this scheme.

30. Quick clearance of traffic is another serious problem pertaining to Madras City. The State is actively pursuing with Government of India the proposal for a Mass Rapid Transit System from Madras Beach to Luz at a tentative cost of over Rs. 60 crores.

31. State Government has been pressing the Government of India for quite some time now, for introducing a third level feeder air service in the State. There are many centres of tourist, historic, cultural, commercial and religious importance which are not covered by the Indian Airlines network. Recently, it has been reported that North Eastern region will have the benefit of this third level air service in the course of this month. State Government hopes that Government of India would clear this proposal for Tamil Nadu also at the earliest possible time.

32. Prohibition as a measure is an important social reform. However, various views have been expressed even in this august House at various times. I would therefore request the Honourable Members to give their free and frank views on how best we can implement this beneficial measure and whether any rethinking on the policy itself is warranted.

33. The recent hike in the prices of petroleum products has been caused due to an international situation on which none in the country could do anything. Since the petroleum prices have gone up, a rise in the bus fare is inevitable. Government hopes that people of the State would appreciate the reasons for the increase in bus fare.

34. For effective implementation of any policy, it is essential to streamline the administration. In pursuance of this Policy, Government abolished the Board of Revenue last year. Since the system of part-time Village Officers was out-moded and not fitting with the modern needs of village administration, Government decided as a next step to abolish all posts of part-time Village Officers. Accordingly, an Ordinance was also promulgated by the Government. A Bill will be introduced in the ensuing session of the Legislature to replace this Ordinance.

35. For any Government to run its affairs, the collection of revenue is an important function. Honourable Members are aware that a certain section of persons is indulging in anti-social activities such as inciting the agriculturists not to pay land revenue, taxes or other amounts due or payable to the Government, to local authorities, to the State Electricity Board or to co-operative societies causing harm and hardship and thereby creating a sense of insecurity in the minds of those who discharge their dues. It had also been brought to the notice of the Government that the sponsors of the agitation were inciting directly or indirectly the use of criminal force against the public servants. As this amounted to anti-State activities and was likely to impair the State apparatus and as it is the foremost duty of the State to ensure protection to the law-abiding citizens, it was found necessary to take deterrent action against such anti-social elements. Therefore, an Ordinance was promulgated in November 1980, to deal with them. A Bill to replace this Ordinance will be introduced in the Legislature shortly.

36. The Tamil Nadu Debt Relief Act, 1980 was enacted to offer debt-relief to persons whose annual house-hold income during the year ended 31st December 1979 did not exceed Rs. 4,800. The intention of this Act was to provide relief only to the poor debtors. But certain provisions of the Act had been interpreted by the affluent classes to their benefit. To rectify this defect, the Act was amended by the Tamil Nadu Debt Relief (Amendment) Ordinance, 1980. A Bill to replace this Ordinance will be brought before the Legislature soon.

37. A certain section of affluent agriculturists has wantonly left their lands fallow or deliberately switched from cultivation of food-grains to cultivation of firewood like casuarina, to avoid employing agricultural labourers at the wages prescribed by Government. This will lead to a grave situation of tremendous shortage of foodgrains in the not too distant future, with the attendant disastrous consequence



of throwing the millions of poor agricultural labourers into a predicament of daily starvation. To deal with this situation, Government is contemplating introduction of a suitable legislation for takeover of such lands for distribution among the landless.

38. To help such of those unemployed youth who have registered in the employment exchange and who belong to poor families, my Government will initiate action to give them preference in the matter of employment opportunities so that at least one member in such a family gets a job. This is the first step to implement the policy of the Central, State Government to provide employment to at least one individual per family.

39. The law and order and crime situation in the State have been generally satisfactory. It is heartening to note that instances of communal clashes and the connected violence have come down during the last year when compared with the previous years. The menace of extremists which is a major threat to public peace particularly in certain areas of North Arcot and Dharmapuri districts, has been controlled to a considerable extent. My Government has decided to improve, both quantitatively and qualitatively, the scientific aids necessary for the efficient discharge of duties and responsibilities enjoined on the Police Force.

40. Discipline and morale of the Police Force has been high due to the introduction of several welfare measures, notable among which are the supply of essential commodities at subsidised rates, sanction of risk allowance and creation of a Police Housing Corporation.

41. It is the accepted policy of the Government that atrocities on the weaker sections of the society, particularly on Scheduled Castes and Scheduled Tribes should be dealt with, with a firm hand. Recently, Government have appointed a senior police officer in the rank of Deputy Inspector-General of Police, specially to enforce effectively the provisions of the Protection of Civil Rights Act, which is meant for protecting the rights of the members of Scheduled Castes and Scheduled Tribes. Separate police unit to deal exclusively with crimes that are committed on the members of Scheduled Castes and Scheduled Tribes are functioning in the districts. Government will not countenance the criminal acts of anti-social elements who are a menace to the community. My Government will take severe action against the anti-social elements who indulge in these heinous deeds.

[1981 ஜனவரி

42. With the combined efforts of the people, the Government of Tamil Nadu and all of you, I am sure that the future will be bright and prosperous. Let us all work together in a spirit of friendship, understanding and co-operation to realise the laudable objectives of promoting the development of the State and improving the lot of the poor and the downtrodden.



1981 ஜனவரி 23]

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

உங்கள் அனைவரையும் முதன்முறையாக இந்த ஆண்டில் சந்திப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு உங்கள் அனைவர்க்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நடைமுறை ஆண்டு, தமிழ் நாட்டு மக்களுக்குக் குன்றாச் செல்வத்தையும் குறையாத வளத்தையும் வரையாது வழங்குமென நம்பிக்கை கொள்வோமாக!

2. உவகை தரும் வகையில், அண்மையில் நடந்து முடிந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுடன் இந்த ஆண்டானது நல்ல முறையில் தொடங்கியுள்ளது. பழம் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட மதுரையில் நடைபெற்ற இந்த மாநாட்டினை நடத்துவதற்கு நன்கு உருவாக்கப்பட்ட பெரிய திட்டத்தினை வகுக்க இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைத் தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்கள் மட்டுமல்லாமல், நாட்டின் பல பகுதிகளிலும் பரவியிருக்கும் தமிழார்வமுடையவர்களும், அதிலும் குறிப்பாக, உலகில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்திக்கொண்டனர். இந்த மாநாட்டின் மூலம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் நாட்டின் பின்னணியில் நாம் வாழ்வது போன்றதொரு உணர்வு ஏற்பட்டது. தமிழ்ப் பண்பாட்டின் பொலிவும் இலக்கியத்தின் பெருமையும் உணரப்பட்டன; வழிவழி வந்த தமிழ்க் கலைமுறையின் பெருமை உலகுக்கு உணர்த்தப்பட்டது.

3. இந்த மாநாடு நிறைவெய்திய நாளன்று இந்தியத் தலைமையமைச்சர் கலந்துகொள்ளும் பெரும் பேற்றினை இம் மாநிலம் பெற்றது. இதனைப் பல இலட்சக்கணக்கான மக்கள் போற்றிப் புகழ்ந்தனர். மதுரையில் இத்திங்கள் 10 ஆம் நாளன்று கூடிய பெருந்திரளான மக்களிடையே பேருரையாற்றிய இந்தியத் தலைமையமைச்சர் அவர்கள் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்கள் மீது வலுக்கட்டாயமாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்று உறுதியளித்தனர். தமிழ் நாட்டின் மீது ஒருபோதும் இந்தி திணிக்கப்படமாட்டாதென்று மறைந்த பண்டித சவகர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்திக் கூறியதற்காகத் தமிழ்நாடு அரசும், மக்களும் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

4. உலகத்தில் பல்வேறு நாடுகளிலிருந்தும் வெளி நாட்டினர் பெருமளவில் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டது, வெளிநாட்டினர்க்கு தமிழ் மொழியினிடத்தில் எத்துணைப் பற்று உள்ளது என்பதைத் தெளிவாகப்

புலப்படுத்துகிறது. தமிழைப் பயிலுவதற்காக இந்நாட்டிற்கு வருகிற வெளி
நாட்டு மாணவர்களுக்குத் தாராளமாகப் படிப்புதவித்தொகைகள் வழங்குமாறு
மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்கிறது. அதேபோன்று வெளி
நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தமிழ் கற்க ஆசிரியர்கள் தேவைப்படும்போது,
அத்தகைய ஆசிரியர்களைத் தமிழக அரசு அவர்களுக்கு அனுப்பி உதவி செய்ய
மத்திய அரசு துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

5. மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட உலகத் தமிழ்ச் சங்கம்
ஒன்றினை ஏற்படுத்துவது எனவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த
நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணிபுரிவர். இவர்கள் தமிழ்
ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம்
ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது
உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ் சங்கக்கிளை நிறுவனங்களுடன்
தொடர்பு கொண்டு இயங்கும். "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்னும்
கோட்பாட்டைச் செயல்படுத்துவதற்கு இம் மாநில அரசு அனைத்து முயற்சி
களையும் மேற்கொள்ளும்.

6. தமிழ் நாட்டின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு அண்மையில்
டில்லியில் முடிவு செய்யப்பட்டிருப்பது மற்றொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி
யாகும். நமது முதலமைச்சரும் மத்திய திட்ட அமைச்சரும் பலமுறை கூடிப்
பேசிய பின்னர், இம்மாநிலத்தின் திட்ட அளவு ரூ. 3,150 கோடியென நிர்ண
யிக்கப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட அளவாகிய ரூ. 1,122 கோடி
யைக் கணக்கிடும்போது, இது கிட்டத்தட்ட மும்மடங்கு கொண்டதாகும்.
மேலும், முன்னர் 1978—83 கால அளவுக்கான ஐந்தாண்டு வரைவுத் திட்டத்
திற்கு நிச்சயிக்கப்பட்ட தொகையாகிய ரூ. 2,150 கோடியைவிட ரூ. 1,000
கோடி அதிகமாகும். 1980-81 ஆம் ஆண்டுக்கு இம் மாநில ஆண்டுத் திட்டம்
ரூபாய் 411 கோடியாக இருக்க, 1981-82 ஆம் ஆண்டுத் திட்டம் ரூபாய் 514
கோடியாக இருக்குமெனத் திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

7. ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்கு மத்திய அரசின் நிதி உதவி அளவை
உயர்த்துமாறு பல்வேறு வாய்ப்புக்களில் இம்மாநில அரசு மத்திய அரசை
வேண்டிவந்துள்ளது. மத்திய அரசின் நிதி உதவி 'காட்கில் ஏற்பாட்டின்'
கீழ் தற்போது நிர்ணயிக்கப்பட்டுவருவது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யாவ
ரும் அறிந்ததே. புதுடில்லியில் அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி
மன்றக் கூட்டத்திலும்கூட, இந்த ஏற்பாட்டின்கீழ் நிதி ஒதுக்க, தற்போது பின்
பற்றும் அடிப்படையை மாற்ற வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். கடந்த திங்களில் திட்டக் குழுவுடன்
நடத்திய விவாதங்களின்போது, ஒரு மாநிலத்தின் பின்தங்கிய நிலையை,





நபர்வாரி வருமான அடிப்படையில் நிர்மாணிப்பதற்குப் பதிலாக, வறுமைக்
கோட்டிற்குக் கீழுள்ள மக்கள் சதவிதம், மாநிலத்தின் நபர்வாரித் திட்டச்
செலவு ஆகியவற்றின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று
வலியுறுத்தப்பட்டது. வறுமையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்னும்
கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமானால், இந்த நியாயமான
கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்கும் என்று நம்புகிறோம்.

8. விலைவாசி ஏற்றத்தையும் அதனைத் தொடர்ந்து பணவீக்க நிலை
தொடர்ந்து இருப்பதையும் கண்டு, இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளது.
பணவீக்கம் ஏற்பட்டுள்ளபோது, ஊதிய உயர்வுகளினால் உண்மையில் பயன்
ஏற்படாது; அதற்கு மாறாக ஊதிய உயர்வு பணவீக்கம் என்கிற தீயை மேலும்
வளர்ப்பதாக அமைந்துவிடுகிறது. விலைவாசி உயர்வும் ஊதிய உயர்வும்
ஒன்றையொன்று தொடர்ந்து வரும் ஒரு நச்சு வட்டமாகவே தோன்றுகிறது.
மேலும், அமைப்பு ரீதியாகச் செயல்படும் சிறுபான்மையினர் பெறும் ஊதியம்,
அவர்களுக்கு எதிர்பார்த்த பலனை அளிக்காதது மட்டுமல்ல, அதனால் ஏறும்
விலைவாசி, அமைப்பில்லா பெரும்பான்மையினரான கைத்தறி நெசவாளர்கள்;
நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைத்திறப் பணியாளர்கள்
போன்ற ஏழை, எளிய உழைக்கும் மக்களையும் பாதித்து விடுகிறது.
அமைப்பு ரீதியான சிறுபான்மையினரிடம் உள்ள கூடுதல் ஊதியம் பெறும்
சக்தி, மிகப் பெரும்பான்மை உழைக்கும் மக்களிடம் இல்லை. இந்நிலையில்
இவ்வமைதிப் பெரும்பான்மையினரே பெரும் அவதிக்காளாகின்றனர்.
இத்தகைய போக்கினை உடனடியாகத் தடுத்து நிறுத்துவது இன்றியமையாத
பணியாகும். சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களுக்கும், குறிப்பாக நலிந்த
பிரிவினர்களுக்கு நியாயமான விலையில் இன்றியமையாப் பொருட்கள்
கிடைக்கச் செய்யும் பொருட்டு முதற்கண் பொது விநியோக முறையை வலுப்
படுத்த வேண்டும்; அடுத்து, எல்லா இன்றியமையாப் பொருட்களின் உற்பத்தி
யும் பெருக வேண்டும். பொது விநியோக முறையை வலுப்படுத்துவதற்காக,
இம் மாநிலத்தில் உள்ள வருவாய்க் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாயவிலைக்
கடைகளை அரசு ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளதை மாண்புமிகு சட்ட மன்ற
உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். உற்பத்தியைப் பெருக்குவதற்காக,
இடுபொருள்களின் உயர்வு ஏதும் ஏற்படாமல், நியாயமான விலையில்
இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், டீசல் போன்ற இடுபொருள்
கள் வழங்குதல், உயர் கொள்முதல் விலை அளித்தல் போன்ற எல்லா வகை
யான ஊக்கமும் ஆக்கமும் உழவர்களுக்கு வழங்க வேண்டுமென எனது அரசு
கருதுகிறது.

9. நாட்டின் பொருளாதாரம் செழிப்பதற்கு வேளாண்மையே முக்கிய கூறாக விளங்குவதால், கிராமப் பொருளாதாரத்தின் மிக முக்கிய அம்சமாக அது திகழ்கிறது. நிலவுடைமையாளர்கள் மட்டுமின்றி, கிராமச் சமுதாயத்தில் சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைத்திறப் பணியாளர்கள் முதலிய நலிந்த பிரிவினர்களும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தும் பொருட்டு அவர்கள் நல்ல வருவாய் பெற்று வாழ்வாங்கு வாழும் நிலையை உருவாக்குவது அவசியமாகும். இத்துறையில் அவர்கள் நன்முறையில் வாழ்வதை உறுதிப்படுத்த அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உரிய ஆதாயம் கிட்டும் வகையில் விலையை நிர்ணயிப்பது அவசியமாகும். உழவர்களுக்கு நியாயமான ஆதாயம் கிடைக்கும் வகையில் விளை பொருளுக்கு உரிய விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று எல்லா வாய்ப்புக்களிலும் மீண்டும் மீண்டும் நமது அரசு, மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 130-ம், கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ. 200-ம் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென எனது அரசு வலியுறுத்தி வந்துள்ளது. இருப்பினும், சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 105 ரூபாயாகவும், ஒரு டன் கரும்பின் சட்டப்படியான குறைந்த அளவு விலை 130 ரூபாயாகவும் மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. மேற்சொன்ன முடிவுகளை மறு பரிசிலனை செய்யுமாறு மத்திய அரசை இன்னும் வற்புறுத்தி வரும்போதே, எனது அரசு ஒரு குவிண்டால் நெல்லின் விலையே 115 ரூபாயாகவும், ஒரு டன் கரும்பின் விலையை 175 ரூபாயாகவும் தானாகவே உயர்த்தியுள்ளது.

10. விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, மழை இல்லாமலும் இயற்கையின் சீற்றங்களினாலும், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத சிறு விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, அரசு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்பட்ட குறுகிய கால கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் (1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவர நிலுவை) குறைந்தது சிறு உழவர்கள் வாங்கிய கடன்களை மட்டிலுமாவது தள்ளுபடி செய்வதற்கு உதவி செய்யும்படி இந்திய அரசை இம் மாநில அரசு கேட்டுள்ளது. எனினும், இவ்வேண்டுகோளை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி நடுத்தரக் காலக் கடன்களையும், நடுத்தரக் கால தவணை ஒத்திவைப்பு கடன்களையும், அவற்றிற்குரிய வட்டியையும், தண்ட வட்டியையும் சிறு உழவர்கள் சார்பில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்காக, மாநில அரசு தன்னுடைய சொந்த நிதியிலிருந்து ரூ. 42 கோடி அனுமதித்தது. இத்தொகைக்கு மேற்பட்டும், 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி, மேற்கூறிய விதிகளுக்குட்





பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொகையைச் செலுத்த வேண்டிய சிறு உழவர்கள் இருந்தால், மாநில அரசு, அவர்களுடைய கடன்களையும் திருப்பிச் செலுத்தும். ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்தகைய கடன்களைத் திருப்பிச் செலுத்தியுள்ள சிறு உழவர்களும் சிலர் உள்ளனர். கடன் தொகையைச் செலுத்தத் தவறியவர்களுக்கு அளிக்கின்ற சலுகைகளைக் கடன் தொகையைச் செலுத்திய சிறு உழவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே, அச்சிறு உழவர்கள் 1981-82 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியிருக்கும் கடன் தொகையில் இத் தொகையைக் கழித்து, அவர்களுக்கும் அப்பயன்கள் அளிக்கப்படும்.

11. தக்காவிக் கடன் தொடர்பான நிலுவை வசூலிப்பை ரத்து செய்தும், எனது அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணையைச் செயற்படுத்தியதன் விளைவாக, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் வரை ரூ. 20,61,50,077 கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சுமார் 9,17,559 உழவர்கள் இதனால் பயனடைகின்றனர்.

12. இவ்வரசுக்கு உள்ள நிதி ஆதாரங்கள் குறைவு. அத்தகைய நிலையிலும், இத்தகைய தாராளச் சலுகைகளை இவ்வரசு வழங்கியுள்ளது. இருப்பினும், மின் கட்டணங்கள், கூட்டுறவுச் சங்கக் கடன்கள், அரசு, உள்ளாட்சி மன்றங்கள் முதலியவற்றுக்குச் சேரவேண்டிய வரிகள் ஆகியவற்றைச் செலுத்த வேண்டாமென வற்புறுத்தி, உழவர்களில் ஒரு பகுதியினர், வரிகொடா இயக்கம் நடத்தி மாநில அரசுக்கு எதிராகச் செயல்பட்டனர். சுமார் 35 கோடி ரூபாய் அளவுக்கு மின் கட்டணங்களை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுத்தபோது, பல்வேறு உழவர் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த விரும்பின. அச் சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் என்னுடைய அரசு இரு முறை பேச்சுவார்த்தைகள் நடத்தியது; அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் எளிய தவணைகளில் அதாவது ஒவ்வொரு மாதமும் நடப்பு மாத மின் கட்டணத்தையும் பழைய நிலுவையில் ஒருமாதக் கட்டணத்தையும் வசூல் செய்யும் ' 1+1 ' என்னும் ஏற்பாட்டை அரசு ஏற்றுக்கொண்டது. துரதிருஷ்டவசமாக உழவர்களில் ஒரு சங்கத்தினர் மட்டும் இந்த ஏற்பாட்டை ஏற்கவில்லை. அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நகரங்களுக்கு இன்றியமையாப் பொருள்கள் செல்வதைத் தடுத்தனர்; சில இடங்களில் பால், உணவுப் பொருள்களைப் பாழ்படுத்தினர்; அதுமட்டுமின்றி, வன்முறையில் ஈடுபட்டு, உயிருக்கும் உடைமைக்கும் ஊறு விளைவித்தனர். இத்தகைய செயல்களை எந்த அரசும் அனுமதிக்க இயலாது. எனவே, சட்டம் ஒழுங்கைக் காக்க அவசிய நடவடிக்கைகளை எனது அரசு எடுத்தது. உழவர்

களுக்கு இயன்றவரை உதவிவரும் அரசின் நிலையில் நியாயம் இருப்பதை உணர்ந்து இவர்கள் தீர்க்கமாகச் சிந்தித்து ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன்.

13. இவ்வாண்டில் மிதமிஞ்சிய அளவுக்குப் பெய்யாத போதிலும், பெய்த மழை கணிசமான அளவுக்குத் திருப்திகரமாகவே இருந்துள்ளது. ஆயினும், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, புதுக்கோட்டை, வட ஆர்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் வறட்சி நிலை ஏற்பட்டது. அங்கு ரூ. 1.30 கோடி செலவில் புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடார்க்காடு மாவட்டத்தில், பயிர் விளைச்சல் 50 சதவீதத்திற்கும் குறைந்த நிலங்களுக்கு நிலவரியைத் தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டது. இது போன்ற வறட்சி நிலை, குறிப்பாகக் காணப்படும் இடங்களிலெல்லாம் துயர் தணிப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

14. வேளாண்மைத் துறையில் உதவி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் போது, நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள்; உழவுத் தொழிலாளர்கள் ஆகியோரது நலனை அரசு கண்ணுங் கருத்துமாகக் கட்டிக்காத்து உதவி செய்து வந்துள்ளது. இவர்களுக்கு உறுதுணையாகவும் பரிவுடனும் நடந்துகொள்ளும் போக்கு, இவ்வரசின் கொள்கையாக இனியும் தொடர்ந்து நிலவும்.

15. இம் மாநிலச் சட்ட மன்றம் நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட வரைவு, குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நில உச்சவரம்பு குறித்து முன்பு இயற்றிய சட்டத்தை ஏமாற்றும்பொருட்டு, 1958 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1960 ஆம் ஆண்டு ஏப்ரல், திங்கள் 6 ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நில மாற்றங்களை அம்பலப்படுத்தும் இச்சட்ட வரைவு சட்டமாகிவிட்டால், உபரியாகக் கிடைக்கும் நிலங்கள், நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

16. வேளாண்மைத் தொழிலுக்குப் பாசனம் இன்றியமையாததாகும். பெரிய ஆறுகளின் நீர் முழுவதையும் பாசனத்தின் பொருட்டு அநேகமாகப் பயன்படுத்தியாகி விட்டதால், பாசனப் பரப்பை விரிவுபடுத்தும் பொருட்டும், குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வறட்சிப் பாங்கான பகுதிகளுக்கு உதவும் பொருட்டு, கேரளாவில் மேற்கே பாயும் ஆறுகளின் உபரி நீரிலிருந்து ஓரளவு நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பி விட கேரள அரசுடன் என்னுடைய அரசு நிலையில் பேச்சுவார்த்தை



நடத்தும். காவிரி ஆறு சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன், 1968-ம் ஆண்டு முதல் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. இருப்பினும், காவிரி நீர்ப்பகிர்வில் உடன்பாடு ஏற்படவில்லை. இது வருந்தத்தக்கது. இவ்வாண்டிலேனும் நாம் தமிழ் நாட்டின் நலனுக்கேற்ற நல்லதொரு தீர்வு காண முடியுமென்று நம்புகிறேன்.

17. மீன்வளம், வேளாண்மையுடன் தொடர்புள்ள ஒன்றாகும். நீண்ட கடற்கரையைப் பெற்றிருக்கும் பேறு தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது. என்றாலும், இயற்கை தந்த இவ்வளத்தை மிகுதியான அளவு பயன்படுத்தும் பேறு மட்டும் இல்லாமல் போய்விட்டது. இவ்வகையில் முதல் நடவடிக்கையாக, இந்தியாவின் கிழக்குக் கடற் பகுதியில் மீன்வளப் பரப்புக் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி நடத்துமாறு மத்திய அரசை மாநில அரசு வேண்டியுள்ளது. இக்கோரிக்கை பரிசீலிக்கப்படுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது. அடுத்த நடவடிக்கையாகக் கிழக்குக் கடற்பகுதியில் உயிரினங்களைப் பிடித்தல், கடல் பகுதி சுற்றுச் சூழல், கடலுறை வளங்கள் முதலியவை குறித்து ஆய்வு மேற்கொள்ள வசதியாக விரிவான செயற்குறிப்புகள் தயாரிக்குமாறு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

18. அதே சமயத்தில், கடலின் மிக ஆழமான பகுதிகளில் உள்ள மீன்களைப் பிடிக்க இயலும்பொருட்டு, வெவ்வேறு மீன்பிடிப் பகுதிகளுக்கேற்ற ஆழ்கடல் மீன்பிடி இழுபடகுகள் எவைஎவை என்பதையும், அவற்றை எவர்களிடமிருந்து வாங்கலாம் என்பதையும் அறிய உதவுவதற்கு மத்திய அரசிடமிருந்து தொழில் நுட்ப உதவியைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. அரசு மேற்கொண்டுள்ள இந் நடவடிக்கைகள், இம் மாநிலக் கடல் வளத்தை மேலும் சிறந்த முறையில் பயன்படுத்தவும், மீனவர் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் துணை புரியும்.

19. பொருளாதார வளர்ச்சிக்கு, மின்சாரம் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாக இருப்பதால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1.023 கோடி அளவுக்குப் பெரும் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. ரூ. 89.71 கோடி செலவில் கீழ் மேட்டூர் புனல் மின் திட்டமும், ரூ. 189.70 கோடி செலவில் மேட்டூர் அனல் மின்திட்டமும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து மேலும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இருந்தபோதிலும், தற்போது மின்சாரப் பற்றாக்குறை உள்ளது. இதனால் தொழிற்சாலைகளுக்கு 30 சதவீத மின்சார வெட்டு விதிக்கப்பட்டுள்ளது. 1981 ஜூன் மாதம் வரை மின்சார வெட்டு இந்நிலையிலேயே தொடர்ந்து இருக்கும்.

20. இம்மாநிலத்தைத் தொழில்மயமாக்கும் திட்டத்தை மேலும் செயல் படுத்துவதற்கும், வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கவும், தனியார் துறை யிலும், அரசுத் துறையிலும் தொழில்களைத் தொடங்க அரசு ஊக்கமளித்து வருகிறது. மின்சாரம், சாலைப் போக்குவரத்து வசதி, தேர்ச்சிபெற்ற மனித ஆற்றல் முதலியவை நன்முறையில் நமக்குக் கிடைக்கும் வாய்ப்பினைக் கொண்டு பார்த்தால், இம்மாநிலத்தில் தனியார் துறை போதிய முதலீடுகள் செய்யுமென்று நான் நம்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியக்கூடிய திறனுடைய சர்க்கரை ஆலையொன்றை ஏற்படுத்த உரிமம் வழங்குமாறு இந்திய அரசுக்கு நாம் எழுதிக் கேட்டுள்ளோம். அரசுத்துறையில் தொடங்கவிருக்கிற பத்திரி கைக் காகிதத் தொழில் திட்டத்தைச் செயலாக்க முன் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய அரசும், திட்டக்குழுவும், உலக வங்கி யும் இத்திட்டத்தில் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றன.

21. இவ்வரசு பின்பற்றும் முன்னேற்றமான தொழிலாளர் கொள்கை கனிந்த பயனை நல்கி வந்துள்ளது. இம்மாநிலத்தில் தொழிலாளர் நலன் 1980 ஆம் ஆண்டில் மொத்தத்தில் திருப்திகரமாகவே இருந்து வந்திருக்கிறது. 1948 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பகுதியின்கீழ் செய்து கொள்ளப்படும் உடன்பாடு, வேலை நிறுத்தங்கள் தொடங்குவது தொழிலாளர்களில் 60 சதவீதத்தினரின் உடன்பாட்டுடன் மேற்கொள்ள தேவை யான சட்டத்திருத்தங்களை ஏற்படுத்த இந்த அரசு கருதியுள்ளது. தொழி லாளர் சட்டங்கள் குறித்த நிலைக் குழு முன் இது வைக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

22. "பக்கிங்காம்-கர்நாடிக் ஆலை" தற்போது மூடப்பட்டிருப்பது நம்முன் உள்ள பெரிய பிரச்சினை ஆகும்; இதனால் சென்னை மாநகரில் ஏறக்குறைய 13,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பற்றோருக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக, அரசு தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொண்டுவரும் போது, இவ்வாலை மூடப்படுவதனால் இவ்வாலையில் ஏற்கனவே வேலை செய்து வருவோர் தங்களது வேலையை இழக்கும்படியான நிலை ஏற்பட் டுள்ளது என்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். இப்பிரச்சினைக்கு முடிவுகாண, மாநில அரசு தன்னால் ஆகக்கூடிய எல்லாவற்றையும் செய்து வருகிறது. நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையை மத்திய அரசே தீர்த்து வைக்க வேண்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். மத்திய அரசு, இது தொடர்பாகப் பல கூட்டங்களைக் கூட்டியது; இவ்வாலை மீண்டும் செயல்படுத்தத் தொடங்க இயலும் வகையில், இப்பிரச்சினை மிக விரைவில் சுமுகமாக தீர்த்துவைக்கப் படுமென எனது அரசு நம்புகிறது.



23. இம்மாநிலத்தில் 376 வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன; அவற்றில் 69
வளர்ச்சி வட்டாரங்களில், சுமார் ரூ. 43 கோடி மதிப்பீட்டுச் செலவில் தன்
னிறைவுத் திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது. 69 வளர்ச்சி வட்
டாரங்கள் அடங்கிய முதல் தொகுதிக்காக நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கு
கள், நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் எய்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.
இத்திட்டம், அடுத்த நிதியாண்டில் மேற்கொண்டு புதிய 120 வளர்ச்சி வட்
டாரங்களில் செயல்படுத்தப்படும். திட்டத்தின் அளவை முடிவு செய்தல்,
இலக்குகளை நிர்ணயித்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல் போன்ற தொடக்க
ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாநில அளவில் உள்ள உயர்
அதிகாரக் குழு, இத்திட்டம் செயல்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக்
கண்காணித்து வருகிறது.

24. வேலைக்கு உணவுத் திட்டம் இப்போது திருத்தியமைக்கப்பட்டு கிராமப்
புற வேலைவாய்ப்பு தேசியத் திட்டமாகப் பெயர் பெற்றுள்ளது. கிராம
மக்களுக்கு உதவி செய்யும் வகையில் இம்மாநிலத்தில் இத்திட்டம் மிகுந்த
முனைப்புடன் செயல் படுத்தப்படும்.

25. மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தபின் உள்ளாட்சி மன்றங்களுக்
குத் தேர்தல் நடத்துவது நல்லதென்று மத்திய அரசு கேட்டுக்கொண்டதற்
கிணங்க, அந்தப் பணிகள் முடிந்தவுடன் தேர்தல்கள் நடத்தப்படும். எவ்
வளவு விரைவில் இந்தத் தேர்தலை நடத்தவேண்டுமோ அவ்வகையில் நடத்தி,
மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையில் உள்
ளாட்சிப் பொறுப்பை எனது அரசு ஒப்படைக்கும்.

26. கல்வித் துறையில், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் இரு
பல்கலைக் கழகங்கள் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் ஏற்கெனவே
அறிவிக்கப்பட்டன. அதைச் செயற்படுத்துவதற்கான சட்டம் ஒன்று விரை
விலேயே கொண்டுவரப்படும். இவ்வாண்டிலேயே தமிழ் பல்கலைக் கழகமும்,
காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகமுமாக மேலும் இரு பல்கலைக் கழகங்கள்
ஏற்படுத்தவும் எனது அரசு முயற்சி எடுத்து வருகிறது.

27. கடல் பாப்பாய்வியல் தேசிய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சோழ
மண்டலக் கடற்பகுதியில் (அதாவது தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில்),
முக்கியமாக காவிரிப்பூம்பட்டிணத்தில் படுகை தொல் பொருளியல் ஆய்வுகளை,
அரசு அண்மையில் வெளியிட்ட ஆணைகளையொட்டி, மாநில அரசின் தொல்
பொருளியல் துறை நடத்திவருகிறது.

28. பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை ஈராண்டுக் காலத்திற்குப்
பொது நலனை முன்னிட்டு அரசு மேற்கொண்டுள்ளது.

29. சென்னை மாநகருக்கு எனத் தனிப்பட்ட சில பிரச்சினைகள் உள்ளன. பருவமழை தவறினால், குடிநீர் கிடைப்பதும் அரிதாகிவிடுகிறது. சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவைப் பெருக்குவதற்காக திருச்சி மாவட்டத்தில் கட்டளைப் பொறிமுறையின்கீழ் காவிரி ஆற்றிலிருந்து குடி தண்ணீரைக் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தினால் நாளொன்றுக்கு 99.5 கோடி லிட்டர் கூடுதலாக நீர் கிடைக்கப்பெறும். இத்திட்டம் 5 ஆண்டுக் கால அளவில் முடிக்கப்படலாம் என்று தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார். கட்டுமானக் காலத்தில், ஏறக்குறைய ஒரு நாளுக்கு இலட்சம் பேருக்கு 5 ஆண்டு காலத்திற்கு இதனால் தினசரி வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்திற்கு ரூபாய் 459 கோடி வரை செலவாகும்; இதில் உலக வங்கி அக்கறை காட்டியுள்ளது.

30. சென்னை மாநகரைக் குறித்த மற்றொரு சிக்கலான பிரச்சினை, விரைவான போக்குவரத்துப் பிரச்சினையாகும். சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் முனைக்கு, சுமார் ரூ. 60 கோடிக்குக் கூடுதலான செலவில், பெரும்பகுதியினரைக் கொண்டு செல்லும் விரைவுப் போக்குவரத்துத் திட்டம் (Mass Rapid Transit System) குறித்து மத்திய அரசுடன் இவ்வரசு தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறது.

31. இம் மாநிலத்தில், விமானப் போக்குவரத்து வகையில், மூன்றாம் நிலை கிளை வழி விமானப் போக்குவரத்தைத் தொடங்குமாறு, மாநில அரசு மத்திய அரசைச் சில காலமாக வலியுறுத்தி வருகிறது. இம் மாநிலத்திலுள்ள சுற்றுலா இடங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், பண்பாட்டைப் பறைசாற்றும் இடங்கள், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சமயப் பெருமை உறையும் இடங்கள் பலவற்றுக்கு 'இந்தியன் ஏர்லைன்ஸ்' போக்குவரத்து வசதிகள் இல்லை. இம்மாதம், இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் மூன்றாம் நிலை கிளை வழி விமானப் போக்குவரத்துத் தொடங்கப்படுமென அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில், தமிழ்நாட்டிற்கென அளித்துள்ள செயற்குறிப்புக்கு மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்குமென மாநில அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

32. மதுவிலக்கு முக்கியமானதொரு சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாகும். எனினும், இதுபற்றி இந்த மாமன்றத்தில் பல்வேறு கருத்துக்களை அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன. நாட்டுமக்களுக்கு நலன் விளைவிக்கும் மதுவிலக்குக் கொள்கையை எந்த வகையில் சிறப்பாகச் செயற்படுத்தலாம் என்பதையும் இக்கொள்கையை மறுபரிசீலனை செய்வது அவசியமா என்பதையும் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை மனந்திறந்து தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



33. அனைத்து நாடுகளிலும் நிலவும் நிலைமை காரணமாகப் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இவற்றின் விலையைக் கட்டுப்படுத்துவது நம் கையில் இல்லை. பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளமையால், பேருந்துக் கட்டணம் உயர்வதைத் தவிர்க்க இயலாது. எனவே, பேருந்துக் கட்டணம் உயர்வதற்கான நியாயமான காரணங்களை இம்மாநில மக்கள் ஏற்றுக்கொள்வர் என்று எனது அரசு நம்புகிறது.

34. எந்த ஒரு கொள்கையும் செவ்விய முறையில் செயல்பட வேண்டுமானால் நிர்வாகத்தைச் சீரமைப்பது இன்றியமையாததாகும். இந்தக் கொள்கையைச் செயலாக்கும் வகையில், சென்ற ஆண்டு அரசு வருவாய் வாரியத்தைக் கலைத்தது. இதன் தொடர்ச்சியாக, பகுதி நேர கிராம அதிகாரிகள் அமைப்பை, காலத்துக்கு ஒவ்வாத காரணத்தாலும், கிராம நிர்வாகத்தில் தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாததாலும், மாற்றியமைக்க முடிவு செய்தது. ஆகவே, இதற்காக அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்கு பதிலாக சட்ட முன் வடிவு இக்கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

35. எந்த அரசும் இயங்குவதற்கு வரி வசூலிப்புப் பணி மிகவும் இன்றியமையாததாகும். அரசுக்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு, மாநில மின்சார வாரியத்திற்கு அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய அல்லது செலுத்தத்தக்க நிலவரி, வரிகள் ஏனைய தொகைகளைச் செலுத்தக் கூடாது என்று உழவர்களைத் தூண்டி வருவதும், ஒழுங்காக அரசுக்கு வரி செலுத்துவோரை துன்பத்துக்குள்ளாக்கி, பாதுகாப்பற்ற நிலை ஏற்படுத்துவதும் போன்ற சமூக விரோத செயல்களில் சில பிரிவினர், ஈடுபட்டு வருவது மாமன்ற உறுப்பினர்கள் அறிந்ததேயாகும். கிளர்ச்சியை நடத்துபவர்கள், அரசுப் பணியாளர்கள் மீது வன்முறை நடவடிக்கை எடுக்குமாறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தூண்டி வருவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. இது அரசுக்கு விரோதமாகச் செய்யும் நடவடிக்கை என்பதாலும், அரசு அமைப்பையே குலைக்கக்கூடும் என்பதாலும், சட்டத்திற்குட்பட்டு வாழ்பவர்களுக்குத் தக்க பாதுகாப்பு தரவேண்டுவது ஒரு அரசின் தலையாய கடமை என்பதாலும் இத்தகைய சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது அவசியமாயிற்று. ஆகவே, இவர்களின் நடவடிக்கைகளைச் சமாளிப்பதற்காக, 1980 நவம்பரில் அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, சட்ட வரைவு ஒன்று நடப்புக் கூட்டத்தொடரில் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும்.

36. 1979 டிசம்பர் 31 ஆம் தேதி முடியும் ஆண்டில், ஆண்டு குடும்ப வருமானம் 4,800 ரூபாய்க்கு மேற்படாதவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டது. வறுமை நிலையிலுள்ள கடனாளிகளுக்கு மட்டுமே நிவாரணம் அளிப்பதுதான் இச்சட்டத்தின் நோக்கமாகும். ஆனால், இச்சட்டத்தின் சில விதிப் பிரிவுகளுக்குச் செல்வந்தர்கள் தங்களுக்குச் சாதகமாக பொருள் விளக்கம் கொள்கின்றனர். இக் குறைபாட்டை நீக்க, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தினால் இச்சட்டம் திருத்தப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டவரைவு ஒன்று விரைவிலேயே சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும்.

37. அரசு நிர்ணயித்த கூலியை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல் அவர்களுக்கு வேலையில்லாமற் செய்ய, வேண்டுமென்றே நிலங்களை தரிசாகப் போடுவதும் உணவு வகைகளைப் பயிரிடும் நிலங்களில் சவுக்கு போன்ற பணப்பயிர்கள் பயிரிடுவதும் ஆகிய செயல்கள் ஒரு சில வசதி படைத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நடவடிக்கை மக்களிடையே உணவுப் பஞ்சத்தை உண்டாக்குவது மட்டுமல்லாமல், விவசாயத் தொழிலையே நம்பிவாழும் பல இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்களை அன்றாடம் பட்டினிபோடவும் செய்யும் செயலாகும். நல்ல நிலங்களைத் தரிசாகப் போட்டாலோ அல்லது உணவுப் பயிர்கள் பயிரிடுவதற்கு மாறாக உழவர்களைப் பட்டினி போடும் வகையில் சவுக்கு போன்ற வேறு பயிர்களை பயிரிட்டாலோ அத்தகைய நிலங்களைஅரசு எடுத்து நிலமற்ற உழைக்கும் விவசாயிகளுக்குப் பங்கிட்டு கொடுக்கும் வகையில் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படும்.

38. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலை இல்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை தர எனது அரசு நடவடிக்கை எடுக்கும். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற மைய, மாநில அரசின் கொள்கையை ஒட்டித் தொடங்கும் முதல் முயற்சியாகும்.

39. இம்மாநிலத்தில் சட்டம், ஒழுங்கமைதி, குற்ற நிகழ்வு நிலைமை பொதுவாகத் திருப்திகரமாகவேயுள்ளது. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் வகுப்புக் கலவரங்கள், அவற்றையொட்டி வன்முறைச் சம்பவங்கள் முந்தைய ஆண்டுகளைவிட குறைந்துவரும் தன்மை நமக்கெல்லாம் ஓரளவுக்கு மன ஆறுதல் தரத்தக்கதாகும். பொது அமைதிக்குப் பெரிதும் குந்தகம் விளைவித்து வந்த தீவிரவாதிகளின் தொல்லைகள் குறிப்பாக, வடார்க்காடு, தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளில் பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காவல்



படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும், பொறுப்புகளையும் மிகவும் திறமையுடன் நிறைவேற்றுவதற்கு அவசியமான அறிவியல் சாதனங்களின் தரத்திறனையும் எண்ணிக்கையையும் மேம்படுத்துவதில் மேலும் கவனம் செலுத்த எனது அரசு முடிவெடுத்துள்ளது.

40. காவலர் நல நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டதன் காரணமாக, காவல் படையினரின் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் மனத்திட்பமும் உயரிய தன்மையிலேயே உள்ளன. இத்தகைய நல நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை, மலிவு விலையில் இன்றியமையாத பொருள்கள் வழங்குதல், இடர்படி வழங்குதல், காவலர் வீட்டு வசதிக் கழகம் ஏற்படுத்தல் போன்றவையாகும்.

41. சமுதாயத்தில் நலிந்த, எளிய பிரிவினர்மீது, குறிப்பாக, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை உறுதியோடு ஒடுக்கவேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்றே, மக்கள் உரிமை பாதுகாப்பு சட்டத்தின் விதிப் பிரிவுகளைச் செவ்வனே செயல்படுத்த, காவல் துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவித் தரத்தில், மூதுநிலை அதிகாரி ஒருவரை அரசு அண்மையில் நியமித்துள்ளது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் மீது இழைக்கப்படும் குற்றங்களைத் தனியே விசாரித்து ஒடுக்குவதற்குத் தனிப்பட்ட காவல் பிரிவுகள் மாவட்டங்களில் இயங்குகின்றன. சமுதாயத்திற்கே பெருந்தீங்கு விளைவிக்கும் சமூக விரோத சக்திகள் செய்யும் குற்றங்களைப் பார்த்துக்கொண்டு அரசு வாளா இருக்காது. இத்தகைய கொடுமையான செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகள் மீது எனது அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

42. தமிழ்நாட்டு மக்களும், தமிழக அரசும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களாகிய நீவிரும் இணைந்து எடுத்துக்கொள்ளும் ஒத்துழைப்போடு எதிர்காலம் சிறந்து விளங்கும் என்று நான் திண்மையாக நம்புகிறேன். தோழமை உணர்வுடனும் ஒத்துழைப்புடனும் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி, ஏழை எளிய, உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தமிழகத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும் எல்லா வகையிலும் ஒன்றுபட்டு நின்று கடமையாற்றி வெற்றி பெறுவோமாக.

வணக்கம்.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1981 ஜனவரி 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் சட்டமன்ற மேலவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 11, 12 இறுதியில் எடுத்துக் கொள்ளப்படும்.

### *Small Industries.*

* 13 Q.—THIRU P. MUNUSAMI (on behalf of THIRU K. RAMAMOORTHY): Will the Hon. the Minister for Rural Industries be pleased to state the number of Industries started in the State under the Small Scale Industries scheme in each year from 1971 to 1977 and up to June 1980?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தமிழ் நாட்டில் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980 ஆண்டு ஜூன் திங்கள் முடிந்த காலத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் அமைக்கப்பட்டு சிறுதொழில் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1971-ம் ஆண்டிலிருந்து 1977-ம் ஆண்டு வரையில்—15,365 நிறுவனங்களும்;

1971-ம் ஆண்டிலிருந்து 1977-ம் ஆண்டு வரையில்—16,365 நிறுவனங்களும் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. சந்தோஷம்: தலைவர் அவர்களே, இந்தச் சிறு தொழில்களை ஆரம்பிக்கும் சமயத்தில், தென் மாவட்டங்கள் ஓரளவுக்கு நிராகரிக்கப்பட்டதாக ஒரு கருத்து இருந்து வருகிறது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 1978-79 வரை குறிப்பாக எத்தனை தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 24

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக என்னிடத்திலே விவரங்கள் இல்லை. 1978-79வது ஆண்டு ஏறக்குறைய சிறு தொழில்கள் நிறுவுவதற்கு சர்டிபி கேட்டுகள் புரொவிஷனலாகக் கொடுக்கப்பட்டது. 5,082 என்றும் பர்மனென்ட்டாக கொடுக்கப்பட்டது 1,905 என்றும் புள்ளி விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தனியாக அதுபற்றி ஒரு கேள்வியைப் போட்டால், அந்த மாவட்டங்களிலே என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை இந்த கன்னியமிக்க சபைக்கு எடுத்துச் சொல்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: சிறு தொழில்கள் தொடங்குவதில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு ஊக்கம் தரும் வகையில் ஏதேனும் திட்டம் உள்ளதா? சிறு தொழில்களில் அவர்களை ஈடுபடுத்த ஏதேனும் வழிவகை அவர்களுக்குச் செய்ய அரசு முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் ஆரம்பிக்கின்ற நேரத்திலே, அப்படிப்பட்ட நபர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் இந்த அரசு செய்து தருகிறது.

விவசாயப் பயிற்சி பெற்றவர்கள்.

* 14. வினா திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) அரசு விவசாயப் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களில், வேலையில்லாமல் இருப்பவர்கள், மாவட்ட வாரியாக எத்தனை பேர்?

(இ) 1974க்குப் பின் பயிற்சி பெற்றவர்களில், எத்தனை சதவிகிதத் தினர், வேலை பெற்றிருக்கிறார்கள்?

(உ) விவசாயப் பயிற்சி பெற்றவர்கள் சங்கத்திடமிருந்து, வேலை வாய்ப்பு கோரி, அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ), (இ), (உ), மற்றும் (எ); வெற்றின் விடையாக ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப் படுகிறது.

@ 196-197-ம் பக்கங்களின் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1981 ஜனவரி 24]

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் 813 பேர்கள், விவசாயப் பயிற்சி பெற்றவர்கள், வேலை யில்லாமல் இருப்பதாக இந்த விவர அறிக்கையிலே காணப்படுகிறது. மேலும், 1974க்குப் பிறகு அத்தகைய வேலைகள் உருவாகவில்லை என்ற காரணத்தினால், வேலை கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். விவசாய அபிவிருத்தித் திட்டம் அல்லது விவசாய உற்பத்தியைப் பெருக்கு கின்ற திட்டத்தின்கீழ் பல புதிய பதவிகளை உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்தப் பயிற்சிப் பள்ளி பயிற்சி பெற்றவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளிக்கும் உத்தரவாதத்துடன் நடத்தப்படும் பள்ளியல்ல. கிராமப்புறங்களில் உள்ள சாகுபடியாளர்கள் முன்னேற்றத்திற்கு, முயற்சிக்கு ஊக்கம் தரவேண்டுமென்ற அடிப்படையிலே தான் இந்த விவசாயப் பயிற்சி வழங்கப்படுகிறது. அதற்கு இது ஒரு முன்னணிப் பயிற்சி தான். இந்தப் பயிற்சியில் சேர்வதற்கு அடிப்படைத் தகுதி 8வது வகுப்பு அல்லது மூன்றாவது ஃபாரம் என்றுதான் இருக்கிறது. மற்றப்படி பதவிகளில் நியமிக்கின்றபோது, இதை அடிப்படைத் தகுதியாகக் கருதவில்லை. எங்கெங்கு அவ்வப்போது பதவிகள் காலி ஆகின்றனவோ, அங்கு அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: இங்கு பயிற்சி பெறுபவர்கள் நேரடியாக அரசிடம் வேலை பெறாவிட்டாலும், அவர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்வ தற்கோ, விவசாயக் கருவிகளை இலவசமாகவோ கடனாகவோ கொடுப் பதற்கோ அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஏற்கெனவே விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் இந்தத் தொழிற் பயிற்சியிலே ஈடு படுத்தப்படுகிறார்கள். இந்தப் பயிற்சியில் சேர்வதற்கு அதுவும் ஒரு அடிப்படையான தகுதியாகும். ஆகவே அவர்களுக்கு என்று நிலம் எதுவும் ஒதுக்கிடுவது என்ற கேள்வி எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. த. சந்தோஷம்: விவசாயிகள் நிலம் வைத்துக்கொள்வதற்கு நில உச்சவரம்பு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். தவிப்பட்ட விவசாயிகள் நிலம் வைத்திருக்கிறார்கள். தகுந்த அளவிலே அவர்களுக்கு வேலை கொடுத்து சம்பளம் கொடுக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இவர்கள் பயிற்சி பெற்றும் வேலை இல்லாமல் திண்டாடுவதைப் போக்க அரசாங்கப் பண்ணைகளை அதிகமான அளவுக்கு உருவாக்க அரசு முன்வருமா என்று கேட்கிறேன்.

[1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கெனவே போதுமான, இன்னும் சொல்லப்போனால் அதிகமான அளவு பண்ணைகளிலே வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. இனி புதிதாக வாய்ப்பு ஏற்பட்டாலொழிய வேலை தர வழியில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெற் பயிரிடுதல்.

*15. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, ஜூன் முதல் செப்டம்பர் முடிய, கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல்போக (கன்னிப்பூ) நெற்பயிரேற்றாத நிலங்களின் பரப்பளவு, வட்டவாரியாக எவ்வளவு ?

(இ) இக்கால கட்டத்தில் பயிரேற்றி, தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட, நிலங்களின் பரப்பளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, (அ) 1980 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் வட்டவாரியாக முதல்போக (கன்னிப் பூ) நெற்பயிரேற்றாத நிலங்களின் பரப்பளவு பின்வருமாறு :—

| வட்டத்தின் பெயர். | முதற்போக நெற் பயிரேற்றாத நிலங்களின் பரப்பளவு (ஏக்கரில்). |
|---|---|
| தோவாளை | ஏதுமில்லை. |
| அகஸ்தீஸ்வரம் | 1,650 |
| ராஜக்காமங்கலம் | 4,100 |
| குருந்தன்கோடு | 2,974 |
| தக்கலை | 450 |
| திருவட்டார் | 150 |
| மேல்புரம் | ஏதுமில்லை |
| முஞ்சிறை | 220 |
| விளவங்கோடு | 900 |
| மொத்தம் | 10,644 |



1981 ஜனவரி 24]

**(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முதற்போக நெற்பயிரேற்றி, தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பளவு 7,892 ஏக்கராகும்.**

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த புள்ளிவிவரப்படி, ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் முதல்போகம் பயிரிடாமல் விடப்பட்டிருக்கிறது. அத்தகைய நில உடைமையாளர்கள், விவசாயிகள் அந்த நிலத்தில் அடுத்த போகம் பயிரிட அரசு என்ன வசதி செய்து கொடுத்தது ? நல்ல விதைகள் இலவசமாகக் கொடுத்ததா, கடன் ரத்து செய்யப்பட்டதா ? அடுத்த கேள்விக்கு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரம் சொல்லியிருக்கிறார்கள். அதாவது விவசாயிகள் பயிரேற்றி, அது தண்ணீர் இன்றி அழிந்து விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலவுடைமையாளர்களுக்கு, விவசாயிகளுக்கு விவசாயக் கடனை ரத்து செய்து கொடுத்துள்ளதா ? அதைப்பற்றி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஏற்கெனவே நீர்ப்பிடிப்பு போதுமான அளவுக்கு மழை பெய்யாத காரணத்தாலே இல்லை. ஆகவே இப்படிப் பட்ட மாற்று நீர்ப்பாசனம் செய்யக்கூடிய முறைகள் புகுத்தப்பட்டன. அவர்களுக்கு என்ன நிவாரணம் அரசு செய்திருக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். அதுபற்றி எந்த முறையீடும், தகவலும் அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு போக நிலமாக 50 ஆயிரம் ஏக்கர்கள், அல்லூர்ட் வாட்டர் சப்ளை, பாதுகாக்கப் பட்ட தண்ணீர் கொடுக்கும் திட்டத்தின் கீழ் உள்ள நிலமாக, இருக்கின்றன. அதில் 10 ஆயிரம் ஏக்கர் நிலம், அதாவது ஐந்தில் ஒரு பங்கு பகுதி பயிர் ஏற்றிய நிலையில் இருந்து, தண்ணீர் இல்லாமல் அழிந்திருக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் இல்லை. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று பதில் சொல்வது வருந்தத்தக்குரியது. அதுபோலவே கன்னியாகுமரி மாவட்டத்தில் முதற்போக நெற் பயிரேற்றி தண்ணீர் இன்றி 7 ஆயிரம் ஏக்கர் நிலம் அழிந்திருக்கிறது. அந்த விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிப்பதுபற்றிய தகவல் இல்லை என்று சொல்கிறார்கள். தகவல் கிடைக்கும் வரை இந்த வினாவை தலைவர் அவர்கள் ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்விக்குரிய புள்ளி விவரங்கள் இங்கே தரப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு என்ன, அவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுப்பது என்பது எல்லாம் மூலக்

கேள்விக்குத் தொடர்பு கொண்டதாக இல்லை. அந்த வகையிலே தனிக் கேள்வி அனுப்பினால், அதைப்பற்றி அறிந்து, என்ன நிவாரணம் அளிக்கப் பட்டது என்று கண்டறிந்து சொல்லலாம். நிவாரணம் கொடுப்பது என்பதெல்லாம் இந்தத் துறையினால் எடுக்கப்படும் முயற்சிகள் அல்ல. அங்கத்தினர் அவர்கள் கேட்ட மூலக் கேள்விக்கு வேண்டிய புள்ளிவிவரங்கள் இங்கு தரப்பட்டிருக்கின்றன. அடுத்தது, பேச்சிப் பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறைந்து அந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். அதுபற்றியும், மற்றும் பாதிப்பு, நிவாரணம் பற்றிய விவரங்களும் அறிய மற்றொரு தனிக் கேள்வி போடுவதுதான் முறையானது என்று நான் கருதுகிறேன்.

### நல்லாற்றின்மீது பாலம்.

*16. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியத்தைச் சேர்ந்த தலைஞாயிறு-வாட்டாக்குடி இணைப்புச் சாலையின் குறுக்கே ஓடுகின்ற நல்லாற்றின்மீது பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பாலம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கட்டி முடிக்கப்பட்ட பாலம் நடைப் பாலமா அல்லது வண்டிப் பாலமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே திட்டமிட்டபடி கட்டி முடிக்கப்பட்டதா அல்லது பிற்காலத்தில் அதில் ஏதாவது மாற்றம் செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது வண்டிப் பாதை நடைபாதைப் பாலம். ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வண்டிப் பாதை-நடைபாதைப் பாலம் என்றால், அது வண்டிப் பாதையா, நடைபாதையா என்பதில் ஏது என்று தெரியவில்லை. அதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இரண்டும் சேர்ந்து பாலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஆற்றின் குறுக்கே இது போன்ற பாலங்கள், நெடு நாட்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டவை, இப்போது பழுது அடைந்திருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட பாலங்களைச் சரிசெய்து . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைஞாயிறில் உள்ள பாலத்தைப் பற்றியது மூலக் கேள்வி. உறுப்பினரவர்களின் துணைக் கேள்வி பொதுப் படையானது.

### வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுடைய கட்டாய சேமிப்புத் தொகை.

*17. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பல ஊராட்சி ஒன்றியங் களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு கட்டாய சேமிப்புத் தொகை 15—6—1980 வரை திருப்பித்தரப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதைத் திருப்பித்தர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் : ஆசிரியர்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய கட்டாய சேமிப்புத் தொகை அவர்களுக்கு விரைவில் கிடைக்க என்ன மாதிரியான அறிவுரைகள், யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, எப்போது கொடுக்கப்பட்டன, அதன்மீது அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வட ஆற்காடு மாவட்டத்தில் எட்டு ஊராட்சி ஒன்றியங்களில்தான் கட்டாய சேமிப்புத் தொகை ஆசிரியர் களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தது. சென்னையிலுள்ள கருவூலக் கணக்கு இயக்குநருக்கு இதுபற்றிய குறிப்புகள் அனுப்பப்பட்டு, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் அவர்களுக்கு இந்தத் தொகை கிடைக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கட்டாய சேமிப்புத் தொகையைத் திரும்பப் பெறுவதற்கு நிறைய ஆவணங்கள் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக அலுவலக எழுத்தர் நேரடியாக வரவேண்டியிருக்கிறது. ஆனால் ஆசிரியர்களே அதைத் தயாரித்துக்கொண்டு வர வேண்டுமென்று நிர்வாகிகள் சொல்லுகிறார்கள். அவ்வாறு இல்லாமல் விரைவிலே அலுவலர்களே சென்று அந்தக் காரியங்களை முடிக்கிற அளவிற்கு ஆணைகள் பிறப்பிக்கப்படுமா.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மருந்துச் செலவுக்கு உதவித் தொகை.

*18. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
&
செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) அரசு மருத்துவமனைகளில் ஒரு நோயாளிக்கு 4 காசு விதம் தான் மருந்துச் செலவுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதனை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை. மருந்துச் செலவிற்கு தற்போது எந்தவித இலக்கும் நிர்ணயிக்கப்பட வில்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மருந்துச் செலவுகளுக்காக நோயாளிகளுக்கு ஒதுக்கப்படுகிற தொகை போதுமானதாக இல்லையென்பது மருத்துவர்கள் சார்பாகச் சொல்லப்படுகிற ஒரு குறைபாடு. எனவே இப்போதுள்ள ஒதுக்கீடு குறைவாக இருக்கிறதென்பதை அரசு அறிந்திருக்கிறதா ? அதை நிவர்த்தி செய்து, மேலும் அந்தத் தொகையை உயர்த்துவதற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருக்கிறதென்பது அத்தனை பேரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக இருக்கிறது. மூலக் கேள்விக்குத்



தொடர்புள்ள பதிலைச் சொல்லுகிறேன். 1977-78 ஆம் ஆண்டில் ஒரு நோயாளிக்கு சராசரியாக 87 பைசாதான் ஒதுக்கப்பட்டது. 1978-79-ல் சராசரி ரூ. 1.25 ஒரு நோயாளிக்குச் செலவழிக்கப்பட்டது. இப்போது டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் அவர்களின் கீழுள்ள மருத்துவமனைகளில் ரூ. 2.41 ஒரு நோயாளிக்குச் செலவழிக்கப்படுகிறது. இதற்கு மேலும் செலவழிக்க வாய்ப்பு இருந்தால், அது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்கவில்லை

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த ஆண்டு கூடுதலாக ஒதுக்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அப்படி ஒதுக்கப்பட்டும், அவை ஏழை மக்களுக்குச் சென்றடைவதில்லை என்ற குறைபாட்டை அரசு அறிந்திருக்கிறதா? அப்படி அறிந்திருந்தால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக முதலமைச்சரவர்களிடம் இந்தத் துறையின் பொறுப்பு இருந்த போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மருந்துகள் இரண்டு வகைப்படும். அதாவது ஆர்டினரி மெடிசன், காஸ்ட்லி மெடிசன் என்று இரண்டு வகைப் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது மாத்திரைகளில் முத்திரை யிட்டு, நோயாளிகளுக்குக் கொடுத்தோம். அதை மருந்துக் கடைகளில் விற்க முடியாத அளவிற்கு பாதுகாப்பான ஏற்பாடுகளைச் செய்தோம். அந்த நடவடிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம்.
படும். டெர்ராமைசின், ஆம்பிசிலின் கேப்சூல்கள் ஒரு ரூபாய்க்கு மேல் விலையாகிறது. அந்த மருந்துகளும் நோயுற்ற ஏழை மக்களுக்குச் சேர வேண்டுமென்று, மாண்புமிகு முதல்வரவர்களிடம் இந்தத் துறை இருந்த

திரு. ஆ. நல்லசிவன் : நோயாளிகளுக்குத் தொகை ஒதுக்குவதில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இது ஒரு சங்கடமான கேள்வி. உண்மையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறோம். நமக்கு இன்னும் நிறையப் பணம் இதற்காகக் கிடைக்க வேண்டும். எனவே நாம் முன்னணியில் இருக்கிறோமென்று சொன்னால், பணம் கிடைப்பதில் பாதகம் ஏற்படும். மற்ற துறைகளில் இந்த மாநிலம் முன்னேற்றமடைந்திருப்பதுபோல, இதிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஏழை மக்களுக்கு, பண வசதி குறைந்தவர்களுக்கு நல்ல வசதிகள்

செய்ய, 300 ரூபாய்க்கு மேலே மாத வருமானம் உள்ளவர்களிடமிருந்து பணம் வாங்கி, அதை உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்று கருதுகிறோம். அதாவது diversion of funds from the rich to the poor. பேரறிஞர் அண்ணா அவர்களின், tap the rich and pat the poor என்ற கொள்கையின் அடிப்படையிலே செய்யலாமா என்றுகூடக் கருதிக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கு ஓய்வூதியத்துடன் மாதந்தோறும் மருத்துவச் செலவிற்காக 50 ரூபாயோ வேறு ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகையோ கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தொகை கொடுத்தோமானால், நாம் எந்த நோக்கத்திற்காகக் கொடுக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். ஒருவருக்கு நோய் வாராமல் இருக்கும். இன்னொருவருக்கு மாதம் 100 அல்லது 200 ரூபாய் செலவழிக்க வேண்டி நேரும். எனவே தொகையினைக் கொடுப்பதைவிட மருந்துகளைக் கொடுப்பதுதான் நல்லது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: ஓய்வு பெற்றவர்கள் வயதானவர்கள். அவர்களுக்கு உடல் நலம் இல்லாமல்தான் இருக்கும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வயது ஆனவர்கள் எல்லோரும் நோயாளிகள் அல்ல.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: அவர்களுக்கு மருந்துச் செலவு ஏற்படும். எனவே அதை உணர்ந்து, அமைச்சரவர்கள் அவர்களுக்கு உதவி செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: உதவித் தொகை கொடுத்துவிடுவோமானால், உரிய நேரத்தில் அது பயன்படாமல் போய்விடும். நோய் வந்த நேரத்தில் அதைக் கவனிப்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தனியார் மருத்துவ மனைகளையெல்லாம் பெரிய தொழிலாக நடத்தும்போது, அரசு மருத்துவ மனைகளில், அமைச்சரவர்கள் தெரிவித்ததுபோல, வசதி உள்ளவர்களிடமிருந்து கட்டணம் வாங்கி, ஏழை நோயாளிகளுக்கு நல்ல சத்துணவு தரும் திட்டத்தை அமல்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(முற்பகல் 10.50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஏற்கெனவே நாம் ஒரு விதியை வகுத்திருக்கிறோம். 200 அல்லது 300 ரூபாய்க்கு மேலே ஒருவருக்கு





வருமானம் இருக்குமானால், அவரிடமிருந்து கட்டணம் வசூலிக்கலாம். அதையே சற்று விரிவாக வசூலித்தால் கூட ஓரளவுக்கு வருமானம் பெருகும். அது இல்லாமல் சாதாரணமாக நோயாளிகள் எளிதாக ரூபாய் 5 அல்லது 10 கொடுத்து சிகிச்சை பெறுவதற்காக ஏதாவது ஏற்பாடு செய்யலாமா என்பது கொள்கைப் பிரச்சினை. கொள்கைப் பிரச்சினையைக் குறித்து கேள்வி நேரத்தில் சொல்லலாமா என்பது கேள்விக்குரியது; ஆகவே கட்டணத்தையே ஓரளவுக்கு சரியாக வாங்கினால், இன்னும் நாம் அதிகமாக வசதி செய்ய வாய்ப்பாக இருக்கும்.

திரு. த. சந்தோஷம்: அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, விலை உயர்ந்த மருந்துகளில் த/அ என்று குறிப்பிட்டு அதை வெளிக் கடைகளில் விற்பனை செய்யாமல் இருப்பதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்து வெளியில் விற்பனை செய்யாமல் தடை செய்யலாம். ஆனால் அரசு மருத்துவ மனைகளில் டாக்டர்களாக வேலை செய்கிறவர்கள் பிரைவேட்டாகவும் சிகிச்சை செய்கிறார்கள். பிரைவேட்டாக பிராக்டீஸ் செய்கிற இடத்திற்கு இந்த மருந்துகள் செல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அரசு மருத்துவர்கள் பிரைவேட்டாக பிராக்டீஸ் செய்யக் கூடாது என்கிற வகையில் ஏற்பாடு செய்து அவர்களுக்கு காம்பென்சேஷனாக அரசு ஏதாவது வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்தக் கேள்வியில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. முதல் அம்சத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் பிரைவேட்டாக பிராக்டீஸ் செய்யக்கூடிய டாக்டர்களிடத்தில் லேகோரொம்ஸ் த/அ என்று முத்திரையிடப்பட்ட மருந்து இருக்குமானால் ஏதாவது ஒரு நோயாளி அதை உடனடியாக அரசுக்கோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ தெரியப்படுத்த வாய்ப்பிருக்கிறது. அதன் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே அந்த முறையைக் கைவிடுவதற்கில்லை. இரண்டாவது அம்சம் பிரைவேட்டாக பிராக்டீஸ் செய்வதற்கு அரசு மருத்துவர்களுக்கு அனுமதி வழங்கலாமா என்பது குறித்தது ஆகும். கேள்வி-பதில் நேரத்தின்போது, கொள்கைப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கக் கூடாது. இது கொள்கைப் பிரச்சினை சம்பந்தப்பட்டது. ஆகவே இதற்கு பதில் பிறகு வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 19 மற்றும் 20 ஒத்தி வைக்கப்படுகின்றன.

கூடுதல் அகவிலைப்படி வைப்பீட்டுக் கணக்கு.

*11 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெள்ளப்பாதிப்பு மாவட்டம் என அறிவிக்கப்பட்ட கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்றிய/தனியார் துறை ஆசிரியர்கட்கு கட்டாய சேமிப்புத் தொகை முழுவதுமாக வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அந்தத் தொகையை வழங்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1978 ஆம் ஆண்டில் பெய்த பெருமழை காரணமாக, கிழக்கு இராமநாதபுரம் அதாவது (இராமேஸ்வரம் துணை வட்டம் உட்பட) இராமநாதபுரம் (கமுதி துணை வட்டம் உட்பட) முதுகுளத்தூர், திருவாடானை ஆகிய கடலோர வட்டங்களில் உள்ள அரசுப் பணியாளர்கள், ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள், அரசு மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் வீடுகள் அல்லது சொத்துக்கள் பெருமளவிற்குச் சேதமடைந்தன. அவர்களுக்கு கூடுதல் அகவிலைப்படி வைப்பீட்டுக் கணக்கிலிருந்து உரிய காலம் முடிவடையுமுன்னரே தொகை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. பழைய திட்டத்தின்படி, கூடுதல் அகவிலைப்படி வைப்பீட்டுத் தொகையின் 5 ஆம் தவணைத் தொகையான இறுதித் தவணைத் தொகையை 1980 ஜூலையில் கொடுக்க வேண்டும். ஆகவே இத்திட்டத்தின் கீழ் தொகைகள் யாவும் திருப்பிக் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படித்த அந்தப் பகுதியைத் தவிர ஏனைய சில பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கோடிட்டுக் காட்டப்பட்டது. அதற்குப் பிறகு எல்லோருக்கும் அந்தத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழிகூட தந்தார்கள். ஆகவே அதை நிறைவேற்ற ஆவன செய்யப்படுமா ?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்தெந்தப் பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டனவோ அந்த இடங்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அதை வழங்குவதற்காக கருவூலக் கணக்கு இயக்குநரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

மீன் எண்ணெய்.

*12 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாட்டில், கடல் மீனிலிருந்து மருந்துக்குப் பயன்படுகின்ற மீன் எண்ணெய் தயார் செய்யும் தொழில் எந்தெந்தப் பகுதிகளில் நடைபெறுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மருந்துக்குப் பயன்படும் சுறா ஈரலெண்ணை தயாரிப்பு தமிழ்நாட்டில் நடைபெறவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : தமிழகம் நீண்ட கடற்கரையைக் கொண்ட ஒரு பகுதி. இங்கிருந்து கிடைக்கக்கூடிய சுறா போன்ற மீன்களிலிருந்து வைட்டமின் ஏ மற்றும் டி உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை தனியார் துறை மூலம் நிறுவ முன் வராவிட்டாலும் கூட, அரசுத் துறை சார்பிலாவது நிறுவ இந்த அரசிடம் செயல் திட்டம் ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1941–42 ஆம் வருடத்தில் கூட்டு மாநிலமாக சென்னை மாநிலம் இருந்தபோது, கடலோரப் பகுதிகளில் சுறா மீனின் ஈரலிலிருந்து எண்ணெய் எடுக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டன. மருத்துவ உபயோகத்திற்காக மீன் எண்ணெய் எடுப்பதற்கும், மீன் எண்ணெய் குழாய் மருந்துகள் தயாரிப்பதற்காகவும் (தற்போது கேரள மாநிலத்திலுள்ள) கள்ளிக்கோட்டையில் சுறா எண்ணெய் நிலையம் 1944 ஆம் வருடத்தில் நிறுவப்பட்டது. 1956 ஆம் வருடத்தில் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டபோது, சென்னை மாநிலத்தில் 32 மீன் எண்ணெய் எடுக்கும் நிலையங்கள் இருந்தன. இந்த நிலையங்களை கள்ளிக் கோட்டையிலுள்ள கேரளா சோப்பு மற்றும் எண்ணெய் நிறுவனம் மேற்கொண்டதால், இந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத மீன் எண்ணெய் மொத்தமும் இந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டு வந்தது. இப்படிக் கொடுக்கப்பட்ட எண்ணெயின் அளவு குறைவாக இருந்தாலும், இதன் தரமும் மற்றும் 'ஏ' வைட்டமின் அளவும் குறைவாக இருந்தாலும் இந்த எண்ணெயைப் பெற்றுக்

னேனை இந்த நிறுவனம் அடிக்கடி மறுத்தது. எண்ணெயின் மொத்த அளவை அதிகரிப்பதற்கும், மற்றும் அதன் தரத்தை உயர்த்துவதற்கும், எவ்வித வாய்ப்பும் இல்லாமலிருந்தது. ஆகவே, இம்மாநிலத்திலிருந்த 32 மீன் எண்ணெய் நிலையங்களில் 25 நிலையங்கள் 1965-68 ஆம் வருடங்களில் மூடப்பட்டன. இதர நிலையங்களும் சரிவரச் செயல்படாத காரணத்தால் பின்னர் மூடப்பட்டன.

அநேக மீன் எண்ணெய் நிலையங்கள் மீன் வாடிகளில் (மீன், கருவாடு போடும் நிலையங்களில்) செயல்பட்டு வந்தன. மீன் எண்ணெய் எடுக்கும் வேலையை மீன்வாடிகளில் உள்ள பணியாளர்களே செய்து வந்தனர். பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் குளிர் வைப்பறைகள் நிறுவப்பட்டதன் காரணமாக இந்த மீன்வாடிகள் எல்லாம் 1960-க்குப் பிறகு மூடப்பட்டன. எனவே, சுறா ஈரலெண்ணெய் உற்பத்தியின் அளவும் கணிசமாகக் குறைந்தது.

அதிக இலாபகரமான மிதவை வலை மீன்பிடிப்பு. தாழ்ப்ப வலை மீன் பிடிப்பு மற்றும் இழுவலை மூலம் நொணலை, வஞ்சிரம், காளான், கெளுத்தி கொடுவா, சூறை மற்றும் இறால் ஆகியவற்றைப் பிடிப்பதில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளதால் சுறா மீன் பிடிப்பு குறைந்தது. சுறா ஈரலெண்ணெய் எடுப்பதும் கணிசமான அளவு குறைந்துள்ளது. ஆகவே, சுறா மீன் பிடிப்பைத் தீவிரப் படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை.

இந்தியாவின் மேற்குக் கடலோரப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் எண்ணெயை விட தமிழ் நாட்டின் கடலோரப் பகுதியில் உற்பத்தி செய்யப் படும் மீன் எண்ணெயின் வைட்டமின் தரம் குறைவாக உள்ளதால் இதனைச் சுத்திகரிப்பதும், இதர பொருட்களுடன் சேர்ப்பதும் இலாபகரமானதல்ல.

கடலோரப் பகுதிகளில் சில இடங்களில் குறிப்பாக சென்னையில் காசிமேடு, செங்கற்பட்டு மாவட்டத்தில் கடப்பாக்கம், தென்னாற்காடு மாவட்டத்தில் கூனிமேடு, தஞ்சாவூர் மாவட்டத்தில் பூம்புகார், ஆற்காட்டுத் துறை, இராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பன் மற்றும் கீழக்கரை போன்ற இடங்களில் எப்போதாகிலும் உற்பத்தி செய்யப்படும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் தோல் பதனிடுவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: சுறா மீனிலிருந்து எடுக்கப்படும் ஏ மற்றும் டி வைட்டமின் சத்துடன் கள்ளிக்கோட்டையில் உள்ள நிலையத்தில் கடலை எண்ணெயைச் சேர்த்து தரத்தைக் குறைத்து, கூடுதலாக இருக்கக்கூடிய சத்தைக் குறைத்து மனிதர்கள் அல்லது குழந்தைகள் உண்பதற்கு ஏற்ற



வகையில் தயார் செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் நிறைய நிலையங்களை ஏற்படுத்தாவிட்டாலும் கூட, ஒரு பகுதியிலாவது அதை ஏற்படுத்தி, வைட்டமின் ஏ மற்றும் டி-யைத் தயார் செய்வதற்கு ஏற்பாடு செய்து, அதை சத்தில்லா ஏழையெளிய குழந்தைகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா? இது குறித்து ஆய்வு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உறுப்பினருடைய யோசனையை ஆராயலாம். 32 நிலையங்கள் முதலில் இருந்தன. அவற்றைச் செம்மையாக நடத்த முடியாத காரணத்தாலும், வழியர்களுக்குச் சரியாக ஊதியம் கொடுக்க முடியாத காரணத்தாலும், அது நிறுத்தப்பட்டது. உறுப்பினர் சொல்லியதுபோல் ஏதாவது ஒரு இடத்தில் அதை ஏற்படுத்தினால் அதன் மூலம் பயன் ஏற்படும், லாபம் கிடைக்கும் என்று கருதினால் அந்த முயற்சியில் அரசு ஈடுபடலாம். அதுபற்றி அரசு ஆராயலாம்.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

உறுப்பினர் நேரத் தீர்மானம்.

தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,

வேளாண்மைத் துறையின் 20—8—1979 நாளிட்ட 1838 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. இரத்தின பாலகுருசாமி, எம். எல். சி., சட்டமன்ற மேலவையினால் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959), 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு 18—4—1980 ஆம் நாளன்று அவர் இறந்து விட்டபடியால் 18—4—1980 ஆம் நாளன்று முடிவடைந்துள்ளதாலும்,

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f)

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1981 ஜனவரி 24

பகுதியினையொட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"வேளாண்மைத் துறையின் 20—8—1979 நாளிட்ட 1638 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. இரத்தின பாலகுருசாமி, எம். எல். சி., சட்டமன்ற மேலவையினால் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959), 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு 18—4—1980 ஆம் நாளன்று அவர் இறந்து விட்டபடியால் 18—4—1980 ஆம் நாளன்று முடிவடைந்துள்ளதாலும்,

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினையொட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 27—1—1981, செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 27—1—1981, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-0 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பு வேட்பாளர்கள் 28—1—1981 புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.



1981 ஜனவரி 24] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கை ஆகியவை ஒன்றுக்கு மேற்பட்டிருப்பின் தேர்தல் நடைபெறும். தேர்தலுக்கான நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

8. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

(முற்பகல் 11-00)

திரு. பா. ரா. [illegible]: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே சமீபத்தில் மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கு உலகத் தமிழ் மாநாடு எந்த அளவுக்கு சிறப்பாகவும், பெருமையாகவும் நடைபெற்றது என்பதனை நானும் பார்க்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தேன். இந்த மாநாட்டினை வெகு சிறப்பாக அமைத்து நடத்திய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், ஏனைய அமைச்சர் பெருமக்களையும், பல அரசுத் துறைகளையும், அந்தத் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்களையும், ஏனைய பெருமக்களையும் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற முறையிலே அவர்களுக்கு என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழமை மிக்க மதுரை மாநகர் தமிழ்ச் சங்கங்கள் கண்ட மதுரை மாநகர். இந்த மாநகரிலே உலகத் தமிழ் மாநாடு நடைபெற்று மேலும் அந்த மாநகருக்குச் சிறப்பையும் பெருமையையும் பெற்றுத் தந்திருக்கிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரை மாநகரம் மேலும் சிறப்பு பெற்றிருக்கிறது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழ் மண்ணிலே இந்த மாநாடு எந்த அளவுக்குச் சிறப்பாக நடந்தது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டுமென்றால் அங்கு எந்த அளவுக்கு மக்கள் லட்சக்கணக்கில் வந்து சேர்ந்தார்கள் என்ற காட்சி ஒன்றே போதும். லட்சக்கணக்கான மக்கள் அந்தக் காட்சியைக் கண்டு களித்தார்கள் என்ற நிலையைப் பார்க்கும் போது, இந்த மாநாடு ஒரு பெரும் எழுச்சியைத் தமிழ் நாட்டிலே உருவாக்கியிருக்கிறது என்று நான் கூறிக் கொள்கிறேன். உலகத்தின் பல்வேறு பகுதிகளிலேயிருந்தும், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், பிரதிநிதிகள், வல்லுநர்கள், சிறந்த அறிவாளிகள் வந்து கூடி பட்டி மன்றங்களிலும் ஆராய்ச்சிப் பணிகளிலும் கவியரங்குகளிலும் பங்கு கொண்டு தம்முடைய பழம்பெரும் ஆற்றலை, பழம்பெரும் பாங்கினை,

கலை உணர்ச்சியை வெளிக் கொணர்ந்து வளர்த்து தமிழ் நாட்டின் நம்பிக்கையை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இலக்கிய, இதிகாச இலக்கியப் படைப்புகளைக் கூட சிந்தித்துப் பார்க்கக் கூடிய ஒரு நல்ல வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த மாநாட்டின் மூலமாகவும் மதுரை நகரில் நுழை வாயில்கள் அமைத்ததன் மூலமாகவும், பழம்பெரும் சிறந்த தமிழ் அறிஞர்களின் சிலைகள் மூலமாகவும் மதுரை நகரைப் பெருமைப்படுத் தியதோடு நின்றுவிடாமல், மதுரை நகருக்கும் அந்நகரில் வாழும் மக்களுக்கும் நிரந்தரமான வசதிகள் பலவற்றை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதைக் கூறி, இந்த ஆட்சிக்கு என்னுடைய உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு நகரமே சுத்தம் செய்யப்பட்டது. சாலைகள் அழகு படுத்தப்பட்டன. பொருட்காட்சிகள் சிறப்பாக அமைக்கப்பட்டன. திருமலை மன்னருடைய அரண்மனையில் ஒலியொளிக் காட்சி சிறப்புற அமைக்கப்பட்டது. இப்படி ஒலியொளிக் காட்சி அமைக்கப்பட வேண்டும் என்று முன்பு ஒரு முறை இந்த மன்றத்தில் நான் கருத்துக்களைக் கூறியபோது, அது முடியாது என்று அன்றைக்குக் கூறப்பட்டது. ஆனால், இன்றைக்கு அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதே முறையிலே தமிழகத்திலே உள்ள பழமையான, சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களிலே இந்த ஒலியொளிக் காட்சி அமைப்பது நம்முடைய பண்புக்குச் சிறப்பாகும் என்று கூறி, அரசு அவற்றை அமைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாக நிலைமைகளைப் பொறுத்தவரையில், இந்த உலகத் தமிழ் மாநாடு நடக்குமா அல்லது ஒத்தி வைக்கப்படுமா என்ற கருத்து இருந்தது. இது நடந்தே தீரும் என்று முடிவு எடுக்கப்பட்டபோது, இந்த மாநாட்டு ஏற்பாடுகள் எந்த அளவுக்கு துரிதமாக—சிகப்பு நாடாவை அறுத்து எறிந்து விட்டு—செய்யப்பட்டது என்பதைப் பார்க்கும்போது, அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நிர்வாகத் திறமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. குறுகிய காலத்திலே, அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டதால்தான் இந்த அளவுக்குக் காரியங்கள் செய்ய முடிந்தது. இப்படிச் சிறப்பாகக் காரியங்கள் செய்தது குறுகிய காலத்தில் நாம் சிறப்பாக எவ்வளவு காரியங்களைச் செய்யலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. நிர்வாக இயந்திரத்தின் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் பெற்று அரசும் செயல்பட்டது. இந்த அளவுக்கு நாம் காரியங்கள் ஆற்றினால், பெரும் பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும் என்ற கருத்தினையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





"உலகத் தமிழ் மாநாட்டில் மக்கள் வெள்ளத்தைப் பார்ப்பது என்றாலே, அது ஒரு மகிழ்ச்சியான காட்சியாக இருந்தது. மாநாட்டுக்கு வந்த மக்கள், மக்கள் வெள்ளத்தைக் கண்டே இன்புற்றிருந்தார்கள். இலட்சக்கணக்கான மக்கள் எப்படி இந்த நகருக்குள்ளே நுழைந்தார்கள், எவ்வளவு கட்டுப்பாட்டோடு அவர்கள் நடந்து கொண்டார்கள் என்பதையெல்லாம் பார்க்கும் போது, மிகவும் பூரிப்பு ஏற்பட்டது. ஒருவேளை கி. பி. இரண்டாயிரம் ஆண்டின்போது மதுரையிலே மக்கள் தொகை எப்படி இருக்கும் என்பதற்கு இது ஓர் ஒத்திகையோ என்று கூடப் பார்த்தேன். அந்த அளவுக்கு ஜன நெருக்கடி, போக்குவரத்துகள் எல்லாம் இருந்தன. இவ்வளவு அதிகமான மக்கள் தொகை மதுரைக்கு வந்தபோதும் அவர்களை எந்தவிதமான ஆபத்துமில்லாமல் கொண்டு வந்து, அவர்கள் பத்திரமான முறையில் நகரில் இருந்து வீட்டு திரும்பிச் செல்ல உதவிய போக்குவரத்துத் துறைக்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் போக்குவரத்துக்குப் பொறுப்பேற்றிருந்த அனைவருக்கும் என்னுடைய பாராட்டுதல்கள். இந்தியத் துணைக் கண்டத்தின் நிலப்பரப்பு உலகின் நிலப்பரப்பில் 2 விழுக்காடு. ஆனால் உலக மக்கள் தொகையில் 1/6 பங்கு நம் நாட்டில் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் மனதில் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த மாநாட்டுக்கு வந்த மக்களுக்கு அளித்த குடிநீர் வசதி, வீட்டு வசதி, சாப்பாட்டு வசதி இவைகளையெல்லாம் பார்த்தபோது எவ்வளவு மக்கள் ஒரு நகரிலே வந்துவிட்டாலும் அவர்களை நாம் எப்படியும் பராமரிக்க முடியும் என்று எடுத்துக் காட்டும் முறையிலே அந்த ஏற்பாடுகள் அமைந்திருந்தன. மேலும், இவைகளையெல்லாம் பார்க்கும்போது குடும்பக் கட்டுப்பாடு எந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம். குடும்பக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் எந்த அளவுக்கு பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண்டி வரும் என்பதையும் இது எடுத்துக் காட்டுவதாக இருந்தது. 4 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை இரவிலே மதுரையைப் பார்த்திருக்க வேண்டும். "இரவில் மதுரை" என்ற ஒரு காட்சியைப் பார்க்கும்போது, இரவு நேரத்திலே போடப்பட்டிருந்த மின்சார அலங்கார விளக்குகள் மிகவும் சிறப்பாக இருந்தன. அதைப்பற்றி ஒரு சர்ச்சை எழுந்தது. இந்தச் சிறப்பான மின்சார ஏற்பாடுகளையெல்லாம் செய்தது யார் என்ற சர்ச்சைதான் அது. மின்சார வாரியத்தைச் சேர்ந்தவர்கள் 'நாங்கள்தான் சிறப்பாக இவைகளைச் செய்திருக்கிறோம்' என்று சொல்லி, அந்த வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அறிக்கைகளையும் கொடுக்க, மாநகராட்சியைச் சேர்ந்த மின்சார

[திரு. பா. ரா. [illegible]] [1981 ஜனவரி 24

அதிகாரிகள் மேயர் போன்றவர்கள் மாநகராட்சியிலுடைய மின் துறை அதிகாரிகள்தான் சிறப்பாக இதற்குப் பணியாற்றினார்கள் என்று சொல்லி இரண்டுவித சர்ச்சை கிளம்பியது. அங்கு அந்த ஏற்பாடுகளைச் செய்வதில், "மாநகராட்சி ஏராளமான பணம் செலவிட்டு சிறந்த விளக்குகளை அமைத்திருக்கிறது, ஆகவே எங்களுக்குத்தான் பொறுப்பு" என்று அவர்கள் சொல்கிறார்கள். நல்ல வேளையாக இந்தச் சர்ச்சை மாநாடு நடந்து முடிந்த பிறகு எழுந்தது. மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், அதற்கு வருவாய் என்பது அதனிடம் இருக்கும் மின் துறையின் மூலமாகத்தான் வருகிறது என்பது பொதுவான கருத்து. அந்தப் பொறுப்பை இப்போது மின்சார வாரியம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் இருந்து வருகிறது. இது பற்றி அரசு திடமான முடிவெடுக்க வேண்டும். மாநகராட்சியின் வருவாயில் பெரும்பகுதி அதனிடம் இருக்கும் மின்துறையின் மூலமாகத்தான் வருகிறது. மேலும், மாநகராட்சியின் மின் துறையில் பணி புரியும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்ற கருத்தையும் கூறிக்கொள்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்தின் அமைச்சர் பெருமக்களும், அலுவலாளர்களும் டெல்லிக்குச் சென்று சிறந்த முறையிலே வாதாடி நம்முடைய மாநிலத்திற்கு ஒரு நல்ல பங்கைப் பெற்று வந்திருக்கிறார்கள். 3,150 கோடி ரூபாய். நிதி ஒதுக்கீடு பெற்று வந்திருப்பது மிகவும் சிறப்புக்குரிய ஒன்று. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட அளவைக் கணக்கிடும்போது, இது கிட்டத்தட்ட மூன்று மடங்கு என்பது அதைவிட மேலும் சிறப்பு. அதற்கு வேண்டிய வழிமுறைகளை மாநில அரசு எடுக்கக் கடமைப்பட்டிருந்தாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கொள்கைப்படி அதாவது மாநில அரசினுடைய நிதியொதுக்கீடு எந்த அடிப்படையில் என்று கருத்து தெரிவித்ததற்கேற்ப, அதாவது 'காட்கில் ஏற்பாட்டின்' கீழ் தற்போது பின்பற்றும் அடிப்படையை மாற்ற வேண்டுமெனவும் மாநிலத்திலுள்ள மக்களில் பின்தங்கியவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டும் நபர்வாரி திட்டச் செலவை அடிப்படையாகக் கொண்டும் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளையும் மத்திய அரசு ஏற்றுக்கொண்டு மாநிலத்தினுடைய நிதியொதுக்கீட்டை முறையாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 ஜனவரி 24] [திரு. பா. ரா. [illegible]]

இப்போது மாநிலத்தில் விலைவாசி ஏறியிருக்கிறது. அகில இந்திய அடிப்படையில் விலைவாசி ஏறும்போது ஊழியர்களின் ஊதியத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்று நம்முடைய அரசு முடிவெடுத்திருந்தது. இப்போது ஊதிய உயர்வு பண வீக்கம் என்கிற நிலை மேலும் வளர்ப்பதாக அமைந்துவிடுகிறது என்று ஆளுநர் அவர்களின் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. 1—9—1980 ஆம் நாள் அன்றுள்ள நிலவரப்படி விலைவாசிப் புள்ளி 368 லிருந்து 376 ஆக உயர்ந்திருக்கிறது. மத்திய அரசு உடனடியாக 1 அகவிலைப்படியை மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கியிருக்கிறது. அடுத்து

(பிற்பகல் 11-10)

1—12—1980 அன்று விலைவாசிப் புள்ளி 376-லிருந்து 384 ஆக உயர்ந்த காரணத்தால் மற்றுமொரு அகவிலைப்படி உயர்வு மத்திய அரசால் தரப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன இரண்டு அகவிலைப்படி உயர்வுகளையும் இம்மாநில அரசின் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கும் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இம்மாநிலத்தில் சில இடங்களில் உயர் செலவினப்படி வழங்கப்படுகிறது. குறிப்பாக இராமேஸ்வரத்திலிருந்து மண்டபம் வரையுள்ள பகுதியில் உள்ளவர்களுக்கு இந்த உயர் செலவினப்படி வழங்கப்படுகிறது. ஆனால் இந்தப் பகுதியெல்லாம் 1970 ஆம் ஆண்டுக்கு முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் தற்போது வழங்கப்படும் இந்த உயர் செலவினப்படி ரூபாய் 2½ ரூபாய் 4 4½ ரூபாய் 9 மற்றும் ரூபாய் 13 என்ற அளவில். அதுவும் அடிப்படை ஊதியம் ரூபாய் 65 ரூபாய் 75 ரூபாய் 100 ரூபாய் 120 என்பதின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுத் தரப்படுகிறது. தற்போது அந்தத் தீவுப் பகுதியெல்லாம் அதிகமான விலை உயர்வு காரணமாக கஷ்டப்படுவதோடு அல்லாமல் சரியான போக்குவரத்து வசதிகளும் இல்லாமல் அங்கே இருக்கும் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 1972 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டபடி அங்கே இன்னும் பாலம் கட்டி முடிக்கப்படவில்லை என்ற காரணத்தால் அங்கெல்லாம் சரியான போக்குவரத்து வசதியில்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களோடு அங்கே பணியாற்றும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உள்ளாட்சி மன்ற ஊழியர்கள் அனைவரும் அவதிப்படுகிறார்கள். போக்குவரத்து வசதியின்மை, விலைவாசி உயர்வு ஆகிய நிலைமைகளோடு அந்தப் பகுதியெல்லாம் மலேரியா நோய் நிறைந்த பகுதியாகவும் இருப்பதால் உயர் செலவினப்படியைத் தகுந்த அளவுக்கு உயர்த்தி வழங்கிட மாநில அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பா. ரா. நாமன்] [1981 ஜனவரி 24

அடுத்து இராமேஸ்வரம் செல்வதற்கு மண்டபத்திலிருந்து ரயில் மூலம் வழியாக தினம் ஒன்றுக்கு ஒரே ஒரு ரயில் போக்குவரத்து வசதி மட்டுமே இருக்கிறது. இதன் காரணமாகவும் மக்கள் பெருமளவுக்கு அவதிப்படுகிறார்கள். எனவே அந்தப் பகுதியில் படகுப் போக்குவரத்தைச் செய்தாவது இராமேஸ்வரத்திற்கும் மண்டபத்திற்கும் இடையில் ஒரு நிலையான நிரந்தரமான போக்குவரத்து வசதி அங்கே வாழும் மக்களுக்குச் செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்னொரு பிரச்சினையையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்கு ஏற்கெனவே இருப்புப் பாதை போடப்பட்டு விட்டது. ஆனால் அந்தப் பாதையில் இன்னும் ரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்படாமல், பலமாதங்களாக தடைப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக மாநிலத்தின் வளர்ச்சியே குன்றியிருக்கிறது. எனவே மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அந்த இருப்புப் பாதையைப் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை விரைவில் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பிரச்சினை என்பது இந்த நாட்டின் பொதுவான பிரச்சினையாகும். அண்மையில் சென்னையில், பாராளுமன்றத்தின் சபாநாயகர் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதாவது அவர்கள் "neglected for long; விவசாயிகள் கடந்த 30 ஆண்டுக் காலமாகவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று நேற்றல்ல. ஏதோ இந்த அரசு வந்த பிறகு உருவான பிரச்சினை அல்ல அது. பல ஆண்டுக் காலமாகவே சரியாகக் கவனிக்கப்படாமல் விடப்பட்ட பிரச்சினை அது. அகில இந்தியப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, நகர்ப்புற விவசாயிகளில் 41 விழுக்காடு விவசாயிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். அதிலும் தமிழகத்தில் மட்டும் 52 சதவித நகர்ப்புற விவசாயிகள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். அதைப்போலவே கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால், அகில இந்தியாவிலும் 54 சதவித விவசாயிகள் வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிறார்கள். அதிலும் தமிழகத்தைப் பொறுத்த வரையில், 63 சதவித விவசாயிகள் வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிறார்கள். எனவே இந்த நிலைமைகளையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கிறபோது, விவசாயிகளின் பிரச்சினையை நாம் இன்னும் சற்று கூடுதலான அனுதாபத்தோடு அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது அவர்களுக்குத் தேவையான இடு பொருள்களானாலும் சரி, விளை பொருள்களுக்கு விலை நிர்ணயிப்பதானாலும் சரி இவைகளெல்லாம் விவசாயிகளுக்குக்



1981 ஜனவரி 24] [திரு. பா. ரா. நாமன்]

கட்டுப்படியாகக் கூடிய விலையில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். விவசாயிகளின் விளை பொருள்களுக்கும் கட்டுப்படியாகக் கூடிய விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமே அவர்களின் பிரச்சினையை நாம் தீர்க்க முடியும் என்ற கருத்தைச் சொல்லி, இந்தப் பிரச்சினையில் நமது மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கிற அனுதாபமான போக்கை வாழ்த்தி வரவேற்று, மத்திய அரசோடு இன்னும் வாக்குவாதம் செய்து போராடி விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசின் ஊதியக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதில் காணப்பட்ட முரண்பாடுகளைக் களையும் நோக்கத்தோடு 'பணிக்கர் குழு' என்று ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவைப் பற்றி சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலேகூட குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் குழுவின் அறிக்கை வெளி வந்துவிட்டதா, அந்தக் குழு என்ன பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறது, ஊழியர்களின் ஊதிய விகிதத்தில் என்னென்ன முரண்பாடுகளை அது கண்டறிந்து அதற்குப் பரிகாரம் கூறியிருக்கிறது என்பது போன்ற விவரங்கள் நமக்கு இன்னும் தெரியவில்லை. எனவே அந்தக் குழுவின் அறிக்கையை வெளியிடுவதைத் துரிதப்படுத்தி அந்த அறிக்கையை இந்த அவையிலேயே விவாதித்து அமுல்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாநிலத்தின் சில பகுதி மக்கள் சரியான பாதுகாப்பு இல்லாமல் இருக்கிற சூழ்நிலை இன்னும் இருந்து வருகிறது. குறிப்பாக பாலிடெக்னிக் ஆசிரியர்கள் தனியார் எஞ்சினியரிங் கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோருக்குச் சரியான சட்டப் பாதுகாப்பு இல்லாத நிலை இருந்து வருகிறது. அதோடு தனியார் கல்லூரி ஆசிரியர்கள் அலுவலர்களுக்குச் சட்டம் இருந்தாலும், சரியான சட்டப் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. காரணம் தற்போது கல்வி நிறுவனங்கள் சிறுபான்மை வகுப்பினரின் கல்வி நிறுவனங்கள், பெரும்பான்மை வகுப்பினரின் கல்வி நிறுவனங்கள் என்று அரசியல் சட்டத்தின் 31-எ பிரிவுப்படி பிரிக்கப்பட்டு சில உரிமைகளை அனுபவிக்கின்றன. அரசியல் சட்டத்தின் பிரிவு 31-எ சொல்வதாவது:

"All minority communities, whether based on language or religion shall have the right to establish and administer institutions of their choice."

எனவே இந்த ஷரத்தைக் காட்டி சிறுபான்மை வகுப்பைச் சார்ந்த கல்வி

[திரு. பா. ரா. தாமஸ்] [1981 ஜனவரி 24

நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிருவாகத்தில் அரசு தலையிட முடியாது என்று சொல்கிறார்கள். அந்த ஷரத்து அரசியல் சட்டத்தில் எந்தவகை கால கட்டத்தில் சேர்க்கப்பட்டு, அந்த உரிமை வழங்கப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். அரசு மான்யம் இரு பங்கும், நிருவாகத்தின் பங்கு ஒரு பாகமும் சேர்த்து ஆசிரியர்களின் ஊதியமாகக் கொடுக்கப்பட்ட போது, இந்த ஷரத்து சேர்க்கப்பட்டது. ஆனால் 1952 மற்றும் 1964 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்து ஆசிரியர்களின் ஊதியத்தையும் முழுமையாக அரசே வழங்கி வருகிறது. அதாவது பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து முழுமையாகவே ஆசிரியர்களின் ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த நிலைமையில் இத்தகைய விதிவிலக்கு அது கிறித்துவ சமயத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனமானாலும் சரி, இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த கல்வி நிறுவனமானாலும் சரி, அந்த நிறுவனங்களுக்கு எந்த வகையிலும் பொருந்தாது என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இதற்குரிய வகையில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்றும் நான் வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். அரசோ, கல்வித் துறையோ வகுக்கும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் பணிப் பாதுகாப்பைத் தர இத்தகைய சிறுபான்மை நிறுவனங்கள் மறுத்தால் அல்லது தொடர்ந்து தடை செய்து வந்தால், வெகு சீக்கிரத்திலேயே அவர்களெல்லாம் அந்தப் பள்ளிகளை அல்லது கல்வி நிறுவனங்களை விட்டுவிட வேண்டிய காலம் நெருங்கிவிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை நான் ஒரு எச்சரிக்கையாகவே விடுக்க ஆசைப்படுகிறேன். காரணம், இப்போது சிறுபான்மை அல்லாதவர்கள் நடத்தும் பள்ளி நிர்வாகங்கள்கூட தங்களுக்கும் சிறுபான்மை உரிமையைப் பெற முயற்சிக்கிறார்கள். ஒரு பள்ளியின் நிருவாகம் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரை வெளியேற்ற முற்பட்டது. அந்த ஆசிரியர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்பே நீதிமன்றத்திற்குப் போய் "நாங்கள் இந்து சமயத்தைச் சார்ந்திருந்தாலும், எங்களுக்கு என்று ஒரு தனியான கடவுளை வணங்குகிறோம்; எனவே எங்களுக்குத் தனியாக சிறுபான்மை உரிமை வழங்க வேண்டும்" என்று கேட்டார்கள். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. அதற்கு இடையிலேயே இடைக்காலத் தடையை நீதிமன்றத்தில் அந்தப் பள்ளி நிருவாகத்தினர் பெற்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போது வழக்கு முடிந்துவிட்டதா இல்லையா என்பதை உறுப்பினர் தெரிவிப்பது நல்லது.

திரு. பா. ரா. தாமஸ்: இன்னும் முடியவில்லை.



1981 ஜனவரி 24]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அப்படியென்றால் அதைப்பற்றி அவையில் பேசுவது கூடாது.

திரு. பா. ரா. தாமஸ்: இடைக்காலத் தடையை எவ்வாறு வாங்கினார்கள் என்றால், இந்தப் பிரச்சினை குறித்த நீதிமன்றத் தீர்ப்பைப் பெறும்வரை ஆசிரியர் பிரச்சினையில் எந்த முடிவையும் சொல்லக் கூடாது என்று வாங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீதிமன்றம் தடை செய்திருந்தாலும், நிறுத்தியிருந்தாலும், அதைப்பற்றி இங்கே அபிப்பிராயம் சொல்வது என்பது சரியில்லை. நிச்சயமாக அதில் தலையிடுவதாகத்தான் அது இருக்கும்.

திரு. பா. ரா. தாமஸ்: நான் சமூக நீதிக்காக இங்கே வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அதைப்பற்றி இங்கே குறிப்பிடுவது சரியல்ல என்றுதான் நான் சொல்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: ஆகவே இத்தகைய சூழ்நிலையில் மாநில அரசு சில முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

4—2—1980 அன்று உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அரசு ஒரு நிருவாகத்திற்கோ, பள்ளிக்கோ ஏற்பு அளிக்கும்போது அல்லது பள்ளிகளுக்கு மான்யம் அளிக்கும்போது, கல்வியின் தரத்தையும், ஊழியர்களின் பணிப்பாதுகாப்பையும் மேற்பார்வை செய்வது அரசின் கடமை என்று சொல்லியிருக்கிறது. அந்த வகையில் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் பணிப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சட்டம் கொண்டுவர வேண்டியது மாநில அரசின் கடமை என்று கூறி, அதற்கான சட்டத்தையும் விதிமுறைகளையும் அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில், திருச்சி, கோவை, காரைக்குடி ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று கூறியிருப்பதும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட இருப்பதும் வரவேற்கக்கூடிய அம்சங்களாகும். கல்வி நலனை அடிப்படையாகக் கொண்டு பச்சையப்பன் அறக்கட்டளையை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆனால் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த

வகையில், இங்கே நான் ஒரு பிரச்சினையைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆசிரியப் பெருமக்கள் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். நியாயமான, நேர்மையான உரிமைகளுக்காக, ஊதிய உயர்வுகளுக்காக, பதவி உயர்வுக்காகப் போராட்டம் நடத்தினார்கள். அவர்களுடைய பிரச்சினையை, மாண்புமிகு

(பிற்பகல் 11-20)

முதலமைச்சர் அவர்களும், கல்வியமைச்சர் அவர்களும் அனுதாபத்துடன் அணுகி நிர்ந்திருக்கிறார்கள். கல்வித் துறைக்கும் அலுவலர் சங்கங்களுக்கும் இடையிலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தில், எந்த விதமான பழி வாங்கும் நடவடிக்கையையும் எடுக்கமாட்டோம். போராட்டம் நடந்த காலத்திற்கான ஊதிய இழப்பு இருக்காது, சிறையில் இருப்பவர்கள் வெளியே விடப்படுவார்கள்; வெளியே விடப்பட்டுள்ளவர்கள் மீதுள்ள வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்று வரையிலும் வழக்குகள் திரும்பப் பெறப்படாத காரணத்தால், ஆசிரியர்கள் மத்தியிலும் ஊழியர்கள் மத்தியிலும் அச்சம் நிலவி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் சற்று இரக்கம் காட்டி, தங்களுடைய உரிமைகளுக்காக நேர்மையாகப் போராடிய அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமல் காக்க வேண்டும்; அவர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அரசனுடைய சட்டங்கள் திருத்தப்பட வேண்டுமென்ற உறுதிமொழி சென்ற ஆளுநர் உரையிலேயே அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையிலே மற்றப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் கூட ஜனநாயகப்படுத்தப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே பல்கலைக் கழகங்களின் சட்டங்களைத் திருத்த வேண்டும். எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் புதிய சட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே இருந்த பழமையான ஜனநாயகமற்ற சட்டங்களைப்பற்றி அடிக்கடி குறை கூறக்கூடிய நிலைமை உருவாகியிருப்பதால், நம்முடைய அரசு உடனடியாக சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து பல்கலைக் கழகங்களில் அமைதியை நிலைநாட்ட வேண்டும்.

மாண்புமிகு இரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மேலவைத் துணைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதுதான் அரசினுடைய மிக



முக்கியமான கருத்தாகும், எண்ணமாகும். ஆனால் அமைதியை ஏற்படுத்துவது என்பது சட்டத்தினால் மட்டும் முடியக்கூடியதல்ல. அதைப் பொறுப்பில் உள்ளவர்கள் நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் ஆகியவர்கள் இப்படிப்பட்ட பிரச்சினையில் கொஞ்சம் வேகம் காண்பிக்கும்போது அதைச் செம்மைப்படுத்த, ஒழுங்குபடுத்த, சீர்படுத்த, அமைதிப்படுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளவர்கள் பேராசிரியர்கள், ஆசிரியப் பெருமக்கள் ஆகியவர்கள். ஆனால் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு மறியல் செய்வது என்பதும், இப்போது திறந்திருக்கிற பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் செல்லும்போது அவர்களைத் தடை செய்வது என்பதும் உண்மையிலேயே தவறான செயல் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்னுமொன்றை திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசு எடுத்துக்கொள்ளப் போகிறது என்று அங்கே ஒரு பிரச்சாரம் நடைபெறுகிறது. இந்த அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் கிடையாது என்பதைத் திட்டவட்டமாக இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று சொன்னால், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவதற்காகவும் அதே சமயத்தில் ஒழுக்க முறையைக் கடைப்பிடிக்க வேண்டிய அளவிற்கும் செய்ய வேண்டும் என்பது தான் சரி என்பதை இங்கே அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

திரு. பா. ரா. தாமஸ் : மாற்றுத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கூறிய இந்தக் கருத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேன். பல்கலைக் கழகமானாலும் சரி, கல்லூரியானாலும் சரி, நல்ல முறையிலே அவைகள் நடைபெற வேண்டும் என்பதுதான் ஆசிரியர் சமுதாயத்தினுடைய உண்மையான நோக்கம். அதற்கு இடையூறு ஏற்படும் வகையில் ஆசிரியர்கள் நடந்துகொள்ளமாட்டார்கள் என்ற உறுதியைக் கூற ஆசைப்படுகிறேன். ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் இந்த உறுதி மொழியை நான் கொடுக்கிறேன். ஆனால் ஒரு திட்டவட்டமான உறுதி மொழியை அரசுத் தரப்பில் கொடுப்பார்களேயானால், நிச்சயமாக இந்த நிலை உருவாகாது. ஒருவேளை ஆசிரியர்கள் தாக்கப்பட்டுவிட்டார்கள், அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்ற அவல நிலை உருவாகி இருக்கிறதோ என்ற . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர்கள் தாக்கப்பட்டுவிட்டார்கள் என்ற சந்தேக நிலையை வைத்து கருத்து சொல்லுவது நியாயமும் அல்ல. அது பத்திரிகைகளில் தவறாக வெளியிடப்படலாம். அங்கே மாணவர்கள் பொறியியல் கல்லூரியில் படிப்பதற்கு முன்வந்தும், அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய ஆசிரியர்கள் செல்லாமல் தடைப்படுத்தப்படுகிறார்கள் என்பதும், மாணவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் நகரில் இருந்து சமைத்து அனுப்பப்படுகின்றன என்பதையும் இங்கே தெரிவிக்கும்போது, எந்தெந்த வகைகளில் எல்லாம் தொல்லைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை மேலவை உறுப்பினர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே ஆசிரியர்கள் ஆசிரியர்களாக இருக்க வேண்டும். போராட்ட வீரர்களாக, வேகம் உள்ளவர்களாக மாறக்கூடாது. விவேகத்தின் சொந்தக்காரர்கள் அவர்கள் என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்திலிருந்து வெகு விரைவிலே இந்தப் பிரச்சினை முடியக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறதென்று நான் நினைக்கிறேன். ஆசிரியப் பெருமக்களானாலும் சரி, ஆசிரியர்கள் பிரதிநிதிகளானாலும் சரி, எங்களைப் பொறுத்த வரையில், இந்தப் பிரச்சினையைக் குறித்து ஒரு திட்டவட்டமான உறுதி மொழி கொடுக்கப்பட்டுவிட்டால், இந்தப் பிரச்சினையைத் தொடர்வதில் அர்த்தம் இல்லையென்று கருதுகிறோம். சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பது ஒரு முக்கியமான கோரிக்கையாக இருக்கும்போது, சட்டம் திருத்தப்படுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு உறுதிமொழியை மீண்டும் கொடுத்துக்கொண்டிருக்கும் போது. . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இடையிடையே குறுக்கிடுவதைத் தவறாகக் கருதக்கூடாது. ஒருவர் பேசும்போது இடையிலே குறுக்கிடாமல் இருந்து, பேசுபவர்களுக்கு வாய்ப்பு அளித்துவிட்டு, பிறகு கடைசியில் பதில் சொல்ல வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அந்த எண்ணம் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். இருந்தாலும், " சட்டத் திருத்தம் " என்ற வார்த்தையை மட்டும் வைத்துக்கொண்டு நாம் விளையாடிவிடக்கூடாது. சட்டத்தைத் திருத்துவது என்றால், எந்தச் சட்டத்தை எந்த வகையில் எந்தச் சூழ்நிலையில், யாருடைய தவறுகளைத் திருத்துவதற்காக, எந்த ஒழுக்கங்களை ஏற்படுத்துவதற்காக, எதை நிலை நிறுத்துவதற்காக என்பதை யெல்லாம் வைத்துத்தான் சொல்ல வேண்டும். சட்டத்தைத் திருத்துவது



என்று சொன்னால், எல்லாச் சட்டங்களையும் திருத்துவது என்பது வரும். " சட்டத்தைத் திருத்துவது " என்று சொல்லுவதைவிட ஒழுக்கம், ஒழுங்கு ஆகியவைகள் நிறைவேறச் செய்யக்கூடிய திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இத்தகைய விளக்கத்திற்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பல்கலைக் கழகங்களில் அமைதி நிலவ வேண்டுமென்ற அவருடைய உணர்வோடு நானும் ஒத்துப்போகிறேன் என்று கூறிக்கொண்டு இந்தப் பிரச்சினையை இதோடு முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

அடுத்து, நதி நீர்ப் பிரச்சினையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திற்குக் கேரள மாநிலத்திலிருந்து நீரைப் பெற வேண்டும். கேரளாவில் பெய்யும் மழையில் 85 விழுக்காடு மழை நான்கு மாதங்களில் பெய்கிறது. அந்த நான்கு மாதங்களில் பெய்கிற மழை குறுகிய இடத்திலே ஓடிக் கடலிலே போய்க் கலக்கிறது. அதைத் தேக்க அங்கே அணைகள் கட்ட முடியவில்லை. அதைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆகவே மலைகளைக் குடைந்து அந்த நீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தால், ஏராளமான மின் உற்பத்தி நிலையங்களை நாம் உண்டாக்கலாம். சீன நாட்டிலே கூட நீர்வீழ்ச்சிகளின் மூலமாக மின் உற்பத்தி செய்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அந்த முறையிலே மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். கேரளாவிலிருந்து இந்த நீரைக் கொண்டு வருவதால் நான்கு மாவட்டங்கள் செழிப்படையும் என்பதாலும், ஏறக்குறைய 54 இலட்சம் ஏக்கர் நிலம் விவசாயத்திற்குக் கொண்டு வரப்படும் என்ற நிலையும் இருப்பதால், இதைத் துரிதப்படுத்த வேண்டும் என்றும், அதுவும் இந்த ஆண்டு முடிவிற்குள்ளாகவே செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்

வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள், மற்றும் படித்தவர்கள், கிராமத்தில் உள்ள படிக்காதவர்கள் ஆகிய அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பது என்பது சிக்கலான பிரச்சினைதான் என்றாலும், இது குறித்து மத்திய அரசும் மாநில அரசும் ஒட்டுமொத்தமான ஒரு கொள்கையை வகுத்து நல்ல திட்டங்களை அமலாக்கினால், நல்ல அமைதி நிலவும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இல்லையென்றால் நிச்சயமாக பெரும் பூகம்பம் போன்ற நிலை உருவாகும் என்ற நிலையையும் கூறி, இது குறித்து மாநில அரசு துரிதமாகச் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

[1981 ஜனவரி 24

(பிற்பகல் 11-30)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையிலே சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே நான் பல்வேறு பாராட்டத்தக்க அம்சங்களை யெல்லாம் தொகுத்துச் சொல்ல வேண்டும் என்று கருதி பல முறை அதைப் படித்தேன். படித்ததற்குப் பின்னாலே, குறிப்பிட்ட முறையிலே, இதை இதை நாங்கள் செய்து விடுகிறோம் என்று உறுதி மொழி தருகிற அளவுக்கு எதுவும் சொல்லப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் ஆர்வம் உள்ளவர்களுக்கு, தமிழைப் படிக்க ஆர்வம் உள்ளவர்களுக்கு, வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு தமிழ் படிக்க தமிழ் ஆசிரியர்களை அனுப்ப இந்த அரசு ஆவன செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பல்கலைக் கழகம், கோவை, திருச்சி பல்கலைக் கழகம் அமைத்தல், காரைக்குடியிலே பல்கலைக் கழகம் அமைத்தல், பச்சையப்பன் அறக் கட்டளையை இந்த அரசே ஏற்று நடத்துதல், மூன்றாம் நிலைக் கிளை வழி விமானப் போக்குவரத்து தொடங்க முயற்சிப்பது, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை கொடுக்கும் முயற்சி எடுப்பது, காவலர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள்கள் கொடுப்பது, வீட்டு வசதி செய்து தருவது, ஈட்டுப் படி கொடுப்பது போன்றவைகளையும் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அவைகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை யெல்லாம் கூட நான் மிகவும் சிரமப்பட்டுத்தான் பாராட்டுவதற்காகத் தேடி எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. இதிலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள் கிறேன். அதைச் செய்ய முயற்சிக்கப்படும் அது செய்யப்படும் என்றுதான் இதிலே குறிக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல. அத்தனையையும் முடித்து விடுவோம், முடிப்பதற்கான வழி வகைகள் வகுக்கப்பட்டுவிட்டன என்று இந்தக் குறிப்பிலே ஆளுநர் அவர்கள் உரையிலே திட்டவட்டமாக எதையும் செய்துவிடுவதாகக் குறிப்பிடாமையால், ஓஹோஹோ என்று என்னால் பாராட்ட இயலவில்லை. நாட்டிலே இன்றைக்கு பற்றி எரிகின்ற பிரச்சி னைகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் பரிகாரம் தருகின்ற வகையிலே ஆளுநர் அவர்கள் உரையிலே எவ்வளவோ இருக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். இதை நான் ஏன்



1981 ஜனவரி 24] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

சொல்கிறேன் என்றால், நான் ஆசிரியர் பரம்பரையைச் சேர்ந்தவன். நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று சொல்லக்கூடிய பரம்பரை.

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரிலானுங் கெடும் "

என்பது வள்ளுவர் வாக்கு. அதற்கேற்ப, வள்ளுவர் கூறிய வாக்கின்படி, நான் இவைகளை எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டவன் ஆவேன் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டில் உள்ள விவசாயிகள் பிரச்சினைபற்றி எரிகிறது. கிராம அதிகாரிகள் போராட்டம் நடத்துகிறார்கள். பி. அண்ட் சி. மில் தொழிலாளர் கள் 13 ஆயிரம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் பணியில்லாமல் இருக்கிறார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தினர் போராட்டம் நடத்த இருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு பக்கம் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் கோரிக்கைகள் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் போராட்டத்திற்குத் தயாராகிக்கொண் டிருக்கிறார்கள். நாட்டிலே உள்ள இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் பரிகாரம் செய்யும் வகையிலே, அவர்களுக்கு நன்மைகள் செய்வதாகக் கோடிட்டுக் காட்டுகின்ற வகையிலே ஏதாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று பார்த் தேன். ஒன்றுமில்லை. இந்த நிலையில் நான் இந்த ஆளுநர் அவர்கள் உரையை எப்படிப் பாராட்டுவது அப்படிப் பாராட்ட இயலாமைக்கு என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகத் தமிழ் மகாநாட்டைப்பற்றி இந்த அங்கத்தினர்கள் பேசினார்கள். மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்ற தாகச் சொன்னார்கள். அந்த மகாநாட்டிற்கு நான் கூட வரவேண்டும், அந்தக் காட்சிகளைக் காணவேண்டும், கண்டு பாராட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் இருந்தேன். எனக்கு அழைப்பும் வந்தது. ஒரு எம்.எல்.சி. என்ற அளவில்தான் அழைப்பு வந்தது. ஒரு மிகப் பெரிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் ஆசிரியர் சமுதாயத்தின் இயக்கம் என்ற முறையிலே, அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு மதிப்பளிக்கும் முறையிலே அழைப்பு வரவில்லை.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பி னர்கள் என்ற முறையில் அழைப்புகள் அனுப்பியிருக்கிறார்கள். அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. பேராசிரியர்கள், சில

தமிழ்ச் சங்கங்கள், சங்கங்கள் அமைத்திருப்பவர்கள் போன்றவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் பல்வேறு அமைப்புகளுக்கு ஒட்டுமொத்தமாக அனுப்பினால், அங்கே அவர்களுக்கெல்லாம் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத நிலைமை அரசுக்கு இருந்தது. இதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்கு நன்றி. நாட்டிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய அமைப்புகளுக்கு, அரசியல் கட்சிகளுக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்கிறார்கள். மேலவை உறுப்பினர் என்ற முறையிலே எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. ஒரு அமைப்பின் பொதுச் செயலாளர் என்ற முறையில், அந்த அமைப்பின் சார்பிலே பணியேற்று இருக்கக்கூடியவன் என்ற வகையிலே அழைப்பு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டில் ஆசிரியர் சமுதாயத்தில் சுமார் 2½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதிலே உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்களிலே 2,500 பேர்களை அரசு தேர்ந்தெடுத்து அவர்களைப் பார்வையாளர்களாக மாநாட்டிற்கு அழைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் மற்றவர்களுக்கும் அதாவது தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு பார்வையாளர்களாக வர வாய்ப்பு அளியுங்கள் என்று ஆசிரியர்கள் மன்றத்தின் சார்பிலும், எம்.எல்.சி. என்ற அளவிலும் எழுதிக் கேட்டிருக்கிறேன். அது புறக்கணிக்கப்பட்டது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்த அழைப்பு இல்லை. ஏன் இல்லை என்று கேட்டபோது, அவர்கள் அங்கு சென்று மாணவர்கள் மத்தியிலே விளம்பரம் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று மறுமொழி தரப்பட்டது. எழுத்து மூலம் நான் கேட்டிருந்தேன். அவர்கள் அப்போதே பதில் சொன்னார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொரு ஊரிலும் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, யார் அப்படிக் கடிதம் எழுதியது என்று சொல்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** உலகத் தமிழ் மாநாட்டிற்காக நியமிக்கப்பட்ட தனி அலுவலரிடத்தில் கேட்டேன். "இதற்கு அழைப்பு அனுப்புவது யார்? யார் யாருக்கு அனுப்பினீர்கள்"? என்று கேட்டேன். இயக்குநர் அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று அவர்கள் கூறினார்கள். இயக்குநர் அவர்களுக்கு எழுத்து மூலமாகக் கேட்டிருந்தேன். இதுவரையிலும் பதில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** யார் பதில் எழுதியது? அங்கத்தினர் அவர்கள் பதில் வந்தது என்று சொன்னார்கள். அதைப்பற்றித் தான் நான் கேட்கிறேன். தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோள், கேள்வி, கோரிக்கை எல்லாம், எந்த அலுவலகத்திலிருந்து, எந்த அதிகாரிக்கு உறுப்பினர் அவர்கள் எழுதியதற்கு 'மாணவர்கள் மத்தியிலே விளம்பரம் செய்ய வேண்டிய, சொல்லித் தரவேண்டிய நிலைமைகள் இல்லை' என்ற குற்றச்சாட்டைத் தாங்கிய கடிதத்தை யார் எழுதியது என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் தனி அதிகாரி அலுவலகத்தில் கேட்டேன். "தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு அனுப்ப வேண்டும். அதற்கு யாரைக் கேட்பது?" என்று தனி அலுவலரிடம் கேட்டேன் என்று சொன்னேன். அதைத்தான் அப்படிச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது சரிதானா என்று முடிவு கூற உங்கள் தீர்ப்புக்கு விடுகிறேன். அதிகாரிகள் சொன்னார்கள் என்பதை இப்போது சொல்லி, முன்னால் பதில் வந்தது, கடிதம் வந்தது என்று சொல்கின்றார்கள். ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் மேலவையிலே இப்படிச் சொல்லலாமா, அது நியாயமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் வாய் தவறிச் சொல்லிவிட்டார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் பதில் வந்ததாகக் கூறவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதைக் குறிப்பில் பார்க்கலாம். யாருக்கும் வாய் தவறி வருவது உண்டு.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடலாம்.

பள்ளியினுடைய அபிவிருத்திக்காக என்று 'பள்ளிகள் அமெனிட்டீஸ் ஃபண்ட்' என்று இருக்கிறது. இதை பள்ளிகளில் அபிவிருத்தி செய்யவும், வேலி கட்டுதல், ஷெட் போடுதல் போன்ற காரியங்களுக்கும் செலவழிக்க வேண்டும். ஆனால் அந்த 'ஃபண்ட்'ஐ இந்தக் காரியத்திற்காகச் செலவழித்திருக்கிறார்கள். அது அவ்வளவு ஏற்புடையது என்று நான் கருதவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, உடனுக்குடனே பதில் சொல்வது நல்லது என்று நான் இப்போது கருது கிறேன். இதைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இந்த நிதி பள்ளியினுடைய அபிவிருத்தி நிதிதான். கல்வியினுடைய அபிவிருத்திக்குத் தான் இப்படிச் செலவழிக்கப்படுகிறது. இந்த நிதி கல்வி வளர்வதற்கு என்று தான் செலவழிக்கப்படுகிறது. ஆகவே இந்தக் காரியத்திற்குச் செலவு செய்ய லாம் என்று யோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு அப்படிக் கருதினார்கள். அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற அளவில் செயல்படுவதை நான் வரவேற்கிறேன். அந்த அளவில் செயலாற்றி யதை நான் வரவேற்கிறேன்.

தமிழாசிரியர்களுக்கு ஏதாவது சலுகைகள் அளிக்க நம்முடைய அரசு இந்த நேரத்திலாவது முயற்சி எடுத்திருந்தால், அது பாராட்டத்தக்கதாக அமைந்திருக்கும். உலகத் தமிழ் மாநாட்டின் அறிகுறியாக சிலவற்றையாவது இந்த அரசு எல்லா வகையிலும் தமிழை வளர்க்கின்ற அளவிலே செய்திருக்க லாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இதுவரையிலும் இந்த அரசு தமிழாசிரியர்களுக்கு என்று இந்த மூன்று ஆண்டுகளாகச் செய்ய வில்லையா? இரண்டு முறைகள் பதவிக்கு வந்து எதுவுமே செய்யவில்லை என்று சொல்லத் தயாராக இருக்கிறாரா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எதுவுமே செய்யாமல் எந்த அரசும் இருக்க முடியாது. ஏதேனும் செய்துதான் ஆகவேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஏதோ செய்வது என்பது ஒன்று, தேவையைப் பொறுத்துச் செய்வது என்பது வேறு. எந்த வகையில் இந்த அரசு செய்தது ? இந்த அரசு நன்மை செய்ய முயற்சி செய்தது இல்லையா என்பதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் பேசும்போது நான் இந்த அரசின் மீது குற்றச்சாட்டு சாட்டுவதாகக் கருதுவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் இடித்துக் கூறவேண்டும் என்ற அளவில் சொல்கிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அங்கத்தினர் அவர்கள் இடித்துக் கூறும்போது, அதற்கு பதில் அடித்துக் கூற வேண்டும் என்றுதான் இப்படி நான் சொல்கிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வரவர்கள், மாண்பு மிகு உறுப்பினரவர்கள் அந்த மாதிரி தொனியில் இருப்பதாக நினைக்கிறார்கள், அந்த மாதிரிச் சொன்னதாக நினைக்கவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் அடித்துக் கூறுகிறேன் என்பதால், கோபப்படாமல், அன்புடன் அரவணைத்துச் செல்லுவதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

" தமிழாசிரியர்களை, அவர்களுக்குரிய முதலிடத்தில் அமர்த்துவதுதான் என்னுடைய முதல் பணி, இதை யார் தடுத்தாலும் உங்கள் உரிமையைப் பாதுகாத்தே தீருவேன் " என்பது முதல்வரவர்களுடைய மொழி. மதுரையில் தமிழாசிரியர்கள் மாநாட்டில் பேசியது இது. தமிழாசிரியர்களை முதலிடத் தில் வைத்தே தீருவேன் என்று சொன்னார்கள். தங்களைத் தலைமை ஆசிரியர் களாக ஆக்குங்கள் என்று தமிழாசிரியர்கள் கேட்கிறார்கள். அப்படிக் கேட்டு பல ஆண்டுகளாகின்றது. பி. டி. படித்தவர்களுக்கு என்ன தகுதியிருக் கிறதோ, அந்தத் தகுதிகளைப் பெற்ற தமிழாசிரியர்கள், தங்களைத் தலைமை ஆசிரியர்களாக்குங்கள் என்று கேட்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறை வேற்றப்படவில்லை. முதலமைச்சரவர்கள் நிறைவேற்றுவதாகச் சொல்லு கிறார்கள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அதற்குரிய ஆணை வர வில்லை.

அடுத்து, புலவர் பட்டயத்தைத் தனிப் பட்டமாக்க வேண்டுமென்று கேட் கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் புலவர்கள் போதிப் பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** புலவர் பட்டயம் பட்டமாக்கப்பட்டிருக் கிறது. நான் பல்கலைக் கழக செனட்டில் இருந்ததால் தெரியும். பி.ஏ. பட்டத்திற்கு இணையாக பி. லிட்.-ஐ ஆக்கியிருக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பி.லிட். பட்டம் என்பது தனி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பட்டயத்தைப் பட்டமாக அங்கீகரித்து விட்டார்கள். ஒரு பேப்பர் தேர்ச்சி பெற்றால் போதும். முன்பு ஆங்கிலம் எழுத வேண்டுமென்று இருந்தது. மூன்று ஆண்டுக் காலம் சண்டை போட்டு, எந்த சப்ஜெக்ட் எழுதினாலும் போதுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஆயிரக்கணக்கானவர்கள் அப்படித் தேறி எம்.ஏ. பட்டம்கூட வாங்கி விட்டார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த அவையில் தமிழ் அரியாசனத்தில் உட்கார்ந்திருக்கிறது. இந்த நேரத்தில், தமிழுக்கு முதலிடம் தருவேன் என்று முதல்வரவர்களும் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படி செய்யப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழாசிரியர்கள் போராட்டம் செய்து பழக்கப்படாதவர்கள். ஆனால் உலகத் தமிழ் மாநாட்டுக்கு இரண்டு நாட்களுக்குமுன் அவர்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். ஆணை எரிப்புப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி அறியாதவர்கள் என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தமிழாசிரியர்கள் இது வரை இப்படிப் பட்ட போராட்டத்தில் ஈடுபடவில்லை. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராடியிருக்கிறார்கள் ; உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் போராடியிருக் கிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதைத்தான் குறிப்பிட்டேன். முதல்வரவர்கள், ஆசிரியர்கள் ஆசிரியர்களாக நடந்துகொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். போராட்டம் நடத்தி னால் ஆசிரியர்கள் இல்லையா ? அது ஆசிரியர்கள் பண்புக்குப் புறம்பானதா? அந்தக் காலத்தில் நக்கீரரே போராடினார். பெரும் புலவர்கள் போராடினார் கள். அவர்கள் கத்தியைக் கொண்டு போராடவில்லை. அவர்கள் கருத்து மோதலால் போராடுகிறார்கள். . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : போராடுவது என்பது, ஜனநாயகத்தில் ஒருவருக்குத் தரப்பட்டிருக்கின்ற உரிமையாகும். அந்தப் போராட்டம் அந்த வகையில் எப்படி நடைபெறுகிறது என்பதையும், மாண வர்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுவதைத் தடை செய்வது போராட்டம் அல்ல என்பதையும் நான் குறிப்பிட்டதை, மாண்புமிகு உறுப்பினரவர்கள் புரிந்து கொண்டுதான் பேசுகிறாரா அல்லது வேண்டுமென்றே புரியாதது மாதிரி பேசுகிறாரா என்பது தெரியவில்லை.





திரு. க. மீனாட்சிசுந்தரம் : முதல்வரவர்கள் சொன்னது சரி. மாணவர் களைத் தடுத்தால் தவறு. ஆசிரியர்கள் ஆசிரியர்களாக இருக்க வேண்டு மென்றால், போராடுகிறவர்கள் ஆசிரியர்கள் இல்லையா ? அதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். மாணவர்களைத் தடுப்பது ஆசிரியர் களின் பணியாக இருக்க முடியாது. ஆகவேதான் சொன்னேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாணவர்களைத் தடுப்பது தவறு. ஆனால் அவர்கள் போராடுவதே தவறு என்றால், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மீண்டும் சொல்வது, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒழுங்காகச் சொல்லிக் கொடுக்கிற மிகப் பெரிய பொறுப்பு வாய்ந்த பதவியில் இருப்பவர்கள். மாணவர்களைக் கல்விச் சாலையில் புகாமல் தடுக்கும் போராட்டம் தவறு. போராட்டம் என்பது ஒவ்வொரு மனிதனுடைய உரிமை என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மூன்று ஆண்டுகளுக்கு முன்பு குடந்தையில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர் மாநாட்டில் முதல்வரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கோவில்களிலே 3,000 தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார் களென்று சொன்னார்கள். அப்படி 3.000 தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார் களென்று சொல்லிவிட்டு, நூற்றுக்கணக்கானவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு 100 ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. அதைப் பெறக்கூட அவர்கள் கோயில் ஈ.ஓ.விடம் அடிமை வேலை புரிய வேண்டும். தமிழாசிரி யர்கள் தமிழ் படித்தவர்கள். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் விளங்க வேண்டு மென்று சொல்லும் இன்றைய நிலையில் 100 ரூபாய் பிச்சைக்காசு வாங்கிக் கொண்டு, அடிமைகளாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : உறுப்பினரவர்கள் பேசும் போதே பதில் சொல்லிவிடுவது நல்லதென்று கருதிப் பேசுகிறேன். பிச்சைக் காசு என்று பெற வேண்டிய நிலைமையில் தமிழாசிரியர்கள் இருக்கிறார்கள் என்றால், தமிழாசிரியர்கள் இத்தனை நாட்களாக எப்படி வைக்கப்பட்டார்கள் என்பதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 3,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது எங்களுடைய எண்ணம்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 ஜனவரி 24

ஆனால் கோவில்களையே நடத்த முடியாமல் இருக்கும்போது, மேலும் அரசே பணம் கொடுத்து அவைகளை நடைபெறச் செய்யும் நிலை இருப்பதால், அந்தக் காரியம் முழுமையாகச் செய்யப்படவில்லை. அந்தக் கொள்கை கைவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அந்தக் கொள்கையைத் தொடர்ந்து நிறைவேற்ற இருப்பதாக நம்முடைய முதல்வரவர்கள் சொன்னதற்கு நன்றி. தமிழாசிரியர்களுக்கு நூறு ரூபாய் என்பதை அவர்களே எண்ணிப் பார்ப்பார்கள். பிச்சைக் காசு என்று உணர்ச்சி வசப்பட்டு சொல்லக்கூடிய அளவிற்கு அத்தொகை மிகக் குறைவாக இருக்கிறதென்பதை அவர்களே கருதுவார்கள். அதே நேரத்தில் தமிழாசிரியர்கள் அதற்கு முன் அப்படி வைக்கப்பட்டார்கள் என்பதையும் ஒத்துக் கொள்வதற்கில்லை. 8 ஆம் வகுப்புவரை படித்த, தமிழாசிரியர்களானவர்களை பி.டி. ஆசிரியர்களின் தகுதிக்கு உயர்த்திய பெருமை முன்னாள் அரசுக்குண்டு. எனவே ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் சில சிறப்பான பணியாற்றப்பட வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். எனவே முன்னாள் அரசு தமிழாசிரியர்களைக் கேவலமாக வைத்துவிட்டார்கள் என்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. இன்றைக்கு வேலையில்லாமல் 5,000 தமிழாசிரியர்கள் இருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது, அந்த மாநாட்டின் அறிகுறியாக சில அறிவிப்புகளைச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

தமிழ்ப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள் 30-க்கு மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். அவற்றை அச்சிட முடியாமல் இருக்கிறது. 'அகர முதலி' வெளியிட முடியாத சூழ்நிலை இருக்கிறது. உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றதன் அறிகுறியாக, அவற்றை அச்சிட்டு வெளியிடுவதற்கான அறிவிப்பை முதல்வரவர்கள் தந்தால் அது மிகச் சிறப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களுக்கும் தெரியும். 'அகர முதலி' இன்னும் முடிவடையவில்லை. அரசின் செலவில் தான் அது முடிக்கப்பட இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு தான் செலவழிக்கிறது. மேலும் அந்தப் புத்தகங்களையெல்லாம் அரசு வெளியிட இருக்கிறதென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** முதல்வரவர்களின் அறிவிப்புக்கு நன்றி.



1981 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கும், மாண்புமிகு முதல்வரவர்களுக்கும் ஏற்கெனவே உடன்பாடா? ஒவ்வொன்றுக்கும் முதல்வரவர்கள் பதில் சொல்லி, உறுப்பினரவர்கள் நன்றி சொல்கிறார்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** திருக்குறள் ஆய்வுத் துறை இருப்பது போல, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் புதுமைப் படைப்புகளை ஆராய தனி ஆய்வுத் துறைகள் ஏற்படுத்துவது சிறந்த வழிகாட்டியாக அமையுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தகுதியுடைய தமிழாசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக்க வேண்டும். தலைமையாசிரியர்கட்கு என்ன தகுதி சொல்லுகிறார்களோ, அந்தத் தகுதியுடைய தமிழாசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க உடனடியாக உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். 5,000 தமிழாசிரியர்கள் பணியில்லாமல் இருக்கிறார்கள். அவர்களைப் பணியில் நியமிக்கக்கூட முன்பு ஒரு நடைமுறை இருந்தது. 'தொழில் பயில் ஆசிரியர்கள்' என்று திட்டம் இருந்தது. அது இடையே நிறுத்தப்பட்டு விட்டது. அந்த முறையில்கூட அவர்களுக்கு உடனடியாக வேலை அளிக்கலாம். அவர்கள் தாமரை இலையைக் கிள்ளி, விற்றுப் பிழைக்கிறார்கள். உணவு விடுதிகளில் மேஜை துடைத்துப் பிழைக்கிறார்கள். தமிழ் படித்தவர்கள் வேறு வேலைக்கும் போக முடியாது. மாண்புமிகு தலைவரவர்களின் அனுமதியுடன் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையில் எனக்கு அனுமதிச் சீட்டு தந்தார்கள். அதில் என்னுடைய பெயரை எப்படி எழுதியிருக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

அந்த 'மீனாட்சி' என்னபாடு படுகிறாள். மீயன்னா, னாவன்னா, க்கன்னா வடமொழி அடிப்படை "மீனாக்ஷி" பாருங்கள் என்றுகூட முன்பே நான் குறிப்பிட்டிருக்கிறேன். 'மீனாட்சி' என்ற சொல்கிற அந்த வார்த்தையில் அவ்வளவு பிழைகள் இருந்தன. நான் இதையெல்லாம் சொல்வது, ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டு, இவையெல்லாம் நல்ல தமிழில் வர வேண்டும் என்பதற்காகத்தான். ஒவ்வொரு துறையிலும் தமிழ் படித்தவர்களை எழுத்தர்களாகவாவது நியமிப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தமிழ் ஆசிரியர்களிடையே உள்ள வேலையில்லாத நிலை போய்விடும். இது குறித்து நான் அன்றைக்கே அவையிலே பேசியிருக்கிறேன். அப்போது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே இல்லை. இப்போது அவையிலே இருக்கிறார்கள். இப்படி சில அறிவிப்புகளை தமிழ் படித்தவர்களுக் காகத் தர வேண்டும்.

இங்கே இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டுக்கு இலட்சக்கணக்கானவர்கள் வந்திருந்தார்கள் என்று சொல்கிறார்கள். நான் போய்ப் பார்க்க முடியவில்லை. லட்சக்கணக்கான வர்கள் வந்தார்கள் என்றதும் எனக்கொரு சந்தேகம். சபரி மலைக்குக்கூட 30 லட்சம் பக்தர்கள் வந்ததாகச் சொல்கிறார்கள். 2 கோடி வருமானமும் கூட. கும்பகோணம் கோயிலுக்கு மகாமகத்துக்குக்கூட 40 லட்சம் பக்தர்கள் வந்ததாகச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்கு ஏதோ குறை இருப்ப தால், அதைப் போக்கும் வகையில் மாநாட்டில் எடுக்கப்பட்ட போட்டோவைக் காட்டினால் குறை போகும் என்று கருதுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நம்முடைய நாட்டிலேயுள்ள பக்தர்கள் செலவழிக்கின்ற பணம் எல்லாம் கேரளாவிலுள்ள ஐயப்பன் கோயிலுக்கும், ஆந்திராவிலுள்ள திருப்பதி கோயிலுக்கும், கர்நாடகாவிலே உள்ள வேறு ஏதோ ஒரு கோயிலுக்கும் செல்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த ஆட்சி வந்த பிறகு இப்போது பழனியிலே நல்ல வசூல்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில் உள்ள கடவுள்களுக்கு சக்தி இல்லையா ? தமிழ் நாட்டிலுள்ள கோயில்களிலுள்ள கடவுள்களுக்கும் சக்தி உண்டு என்கிற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணம் வேறு மாநிலத்திற்குச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரையின் மீது நடைபெறும் விவாதத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உலகத் தமிழ் மாநாட்டையொட்டி [illegible] போனதால் இதைச் சொல்கிறேன்.



திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் எல்லாம் தமிழ் நாட்டிலுள்ள கோயில்களுக்குச் செல்ல ஆரம்பித்தாலே நல்ல வருமானம் வர ஆரம்பிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அடுத்து, விலைவாசி உயர்வு, பண வீக்கம் இவற்றைப் பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலையில் அக விலைப்படி உயர்வு ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் கிடைக்குமா என்கிற சந்தேகம் எழுகிறது. விலைவாசி உயர்வும், பண வீக்கமும் நமக்கு மட்டும் உரியதல்ல. இது மத்திய அரசும் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இங்கே பணியாற்றுகின்ற மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர் களுக்கும் ஒரே அளவில் தான் விலைவாசி இருக்கிறது. மத்திய அரசினர் மே மாதத்தில் வழங்கியதை இங்கே ஜூலை மாதத்திலிருந்து வழங்கினார்கள். பொதுவாக அகவிலைப்படி உயர்வு மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் ஒரே நேரத்தில் உயர்த்தப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையெல்லாம். செப்டம்பர் மாதத்திலே அகவிலைப்படி உயர்வை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தாலும்கூட, முன் தேதி யிட்டு ஜூலை மாதத்திலிருந்தே அதை வழங்கினார்கள். நாங்கள் அதற்காகப் பாராட்டியிருக்கிறோம். இன்றைய தினம் செப்டம்பர் மாதத்திலிருந்து ஒன்றும், டிசம்பர் மாதத்திலிருந்து ஒன்றும் ஆக இரண்டு அகவிலைப்படி உயர்வுகளை மத்திய அரசு வழங்கியிருக்கிறது. இந்த இரண்டு அகவிலைப் படி உயர்வுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து மாநில அரசு ஊழியர்களுக்கும் அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவல் துறையினருக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். தொடக்கத்திலேயே நான் அதைப் பாராட்டிச் சொன்னேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விலைவாசி உயர்வு என்பது எல்லோருக்கும் பொதுவாக உள்ளது. காவல் துறையினருக்கும் இன்றைக்கு அரசு அகவிலைப் படியை உயர்த்துகிறது. அதே நேரத்தில் அவர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்களையும் தருகிறது. இது ஒரு முன்னோடித் திட்டமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதை அனைவருக்கும் தர வேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கும் என்று கருது கிறேன். காவல் துறையினருக்கு மட்டும் தருகின்ற மலிவு விலை உணவுப் பொருட்களை ஆசிரியர்களுக்கும், எல்லா அரசு ஊழியர்களுக்கும் வழங்க

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 ஜனவரி 24

வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் [illegible] கடமைப்பட்டிருக்கிறேன். கற்பிப்புத் துறை காவல் துறைக்கு [illegible] வக்கற்றவன் வாத்தியார் வேலைக்குப் போவான். போக்கற்றவன் [illegible] வேலைக்குப் போவான் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அது உண்மையான பழமொழி அல்ல. வாக்கு கற்றவன் வாத்தியார் வேலைக்கும், போக்குவரத்து கற்றவன் போலிசு வேலைக்கும் போவான் என்பதே உண்மையான மொழி. ஆனால் இன்றைய தினம் வக்கற்ற ஆசிரியர் சமுதாயம் கிராமப் புறங்களிலே குறைந்த வருமானம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினருக்கு வழங்கியுள்ள இந்தச் சலுகையை தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரைவில் விரிவாக்கி தொடர்ந்து அனைத்து நிலை ஆசிரியர்கட்கும் விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசியதாக ஒரு பத்திரிகையில் ஒரு தகவலைப் பார்த்தேன். காவல் துறையினர் 24 மணி நேரமும் பணியாற்றுகிறார்கள். எனவே அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம் என்று பேசியிருக்கிறார்கள். ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் காலையில் 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரைதான் வேலை செய்கிறார்கள் என்கிறார்கள். 24 மணி நேரமும் காவல் துறையினரும் போலிஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்திருப்பதில்லை. சென்சஸ் டியூட்டி போட்டால், ஆசிரியர்களும் 24 மணி நேரமும் வேலை செய்கிறோம். கிராம அதிகாரிகளைப் பகுதி நேர அதிகாரிகள் என்று கூறுகிறார்களே, அவர்கள்கூட பகுதி நேர ஊழியர்கள் என்று சொல்லத் தக்கவர்கள் அல்ல. காரணம் இரவு வேளையில் ஒருவன் இறந்துவிட்டால் கூட, அவர்கள் அங்கே போக வேண்டும். எங்களுக்கும் அந்த நிலைதான். நாங்கள் பகுதி நேர ஊழியர்கள் அல்ல. ஹெட்குவார்ட்டர்சில்தான் எப்போதும் இருக்க வேண்டும். ஹெட்குவார்ட்டர்சை விட்டுப் போக வேண்டுமென்றால் மேலதிகாரிகளின் அனுமதி பெற்றுத்தான் போக வேண்டும். ஆகவே 24 மணி நேரமும் காவல் துறையினர் வேலை செய்கிறார்கள், மற்றவர்கள் அப்படிச் செய்வதில்லை என்கிற காரணத்தைச் சொல்லுவது ஏற்கக் கூடியதல்ல; இதையே சொல்லி, அதைக் கொடுக்காமல் இருந்துவிடக் கூடாது என்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சட்டமன்றம் கூடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னாலேயும் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுகிறது. அதே நேரத்தில் சட்டமன்றக் கூட்டம் முடிந்ததற்குப் பின்னாலேயும் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுகிறது. எந்த குறிப்பிட்ட நேரத்தில் பிறப்பிக்க [illegible] என்று ஒரு நியதி இல்லாமல், எந்த நேரமும் அவசரச் சட்டம் வந்து



1981 ஜனவரி 24] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கொண்டிருக்கிறது. மின் இணைப்புத் துண்டிப்புக்கு அவசரச் சட்டம்; மின் கட்டணம் செலுத்த மறுப்பவர்களைத் தண்டிக்க அவசரச் சட்டம்; [illegible]க்கு உறுதுணையாக இருப்பவர்களைத் தண்டிக்க அவசரச் சட்டம். கிராம அதிகாரிகளைப் பதவி நீக்க அவசரச் சட்டம்; வேலை நிறுத்தத் தடைக்கு ஒரு அவசரச் சட்டம், இத்தியாதி இத்தியாதி என்று வந்து கொண்டிருக்கிறது. அதுபோல அத்தியாவசியப் பணி வேலை நிறுத்தத் தடைச் சட்டம் வந்திருக்கிறது. வேலை நிறுத்தத் தடைச் சட்டம் ஆசிரியர்களுக்காகவும் அரசு ஊழியர்களுக்காகவும் வந்திருக்கிறது. அவர்கள் ஸ்டிரைக்கை விரும்பியா செய்கிறார்கள்? எப்போது செய்கிறார்கள்? கோரிக்கைகளை வைத்து, மெமோரண்டம் தந்து தீர்மானங்களை அனுப்பி அமைச்சர்கள் அதிகாரிகள் போன்றவர்களுடன் கலந்து பேசி, மாநாடு போட்டு இத்தனையும் செய்த பிறகு முடியாத நிலை ஏற்படும்போது அரசு கேளாக்காதினராய் இருக்கும்போது, வேலை நிறுத்தம் செய்கிறார்கள். வேலை நிறுத்தத் தடைச் சட்டம் என்பது ஜனநாயக உரிமையை, அரசியல் சட்டத்தில் தந்திருக்கிற உரிமையைப் பறிப்பதாக ஆகிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அரசியல் சட்டத்தில் தந்திருக்கிற உரிமையை மீறி, யதேச்சாதிகாரமாக இந்த அவசரச் சட்டத்தை நாங்கள் கொண்டு வந்தோமா என்பதற்கு விளக்கம் தந்தால் உதவிகரமாக இருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: வேலை நிறுத்தம் செய்வது ஜனநாயக உரிமை. முறையாகக் கோரிக்கைகளை அனுப்பி தீர்மானம் போட்டு, பேச்சுவார்த்தை நடத்தி முடியாத கட்டத்தில் ஜனநாயக முறையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது. அதைத் தடை செய்வதற்கு என்ன இடம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அதற்குரிய முறையில் அரசு நடவடிக்கை எடுத்திருந்தாலும்கூட, இப்போது அந்த முறையைப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அவசரச் சட்டம் கொண்டு வரும் நிர்ப்பந்தம் என்பது அவசரத்தை உருவாக்குபவர்களால் உருவாக்கப்படுவது. அரசாக அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவதில்லை. அதனால்தான் சட்டமன்றம் கூடுகின்றபோது, சட்டம் ஆக்குகின்றபோது சட்டமன்றத்தின் அனுமதியை வேண்டுகின்றோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 3 மாதத்திற்கு அல்லது 6 மாதத்திற்கு அது இருக்கும் என்று போட்டிருக்கிறீர்கள். அதன் பிறகு அவசியம் … விட்டால் அது காலாவதியாகி விடும். எனவே, அது இந்த அவைக்கு வராது; எனவே இப்போது அதைப்பற்றிப் பேசுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவைக்கு வரும்.

(நண்பகல் 12-00)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இங்கே இருக்கின்ற ஆசிரியர் சங்கங்கள் எல்லாம் தங்களுக்கு அங்கீகாரம் வேண்டும் என்று கேட்கின்றார்கள். இது வரையில் பல சங்கங்களுக்கு அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சங்கத்திற்கு அங்கீகாரம் தேவை என்று விண்ணப்பித்ததற்குப் பிறகு இன்றைக்கு 'நார்ம்ஸ்' வெளியிடப்பட்டிருக்கின்றன. அதற்கான அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். இப்போது என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், அது மனித உரிமைக்குப் புறம்பாக இருக்கிறது. "வேலை நிறுத்தம் செய்யவோ, வேலை நிறுத்தம் செய்வோம் என்று சொல்லவோ மாட்டோம் என்று எழுதித் தர வேண்டும்". அதற்கடுத்து, "ஒரு மாநில அளவிலான சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால், அதைப் பத்திரிகைகளுக்குத் தரக்கூடாது.' அரசாங்கத்தைக் கேட்டுத்தான் 'ப்ரஸ் நோட்' தர வேண்டும் என்று சொன்னால், அது ஒரு சங்கமாக இருக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். போராட்டங்கள், ஊர்வலங்கள் கூடாதாம் என்று சொன்னால், அதற்கு ஒரு அங்கீகாரம் தேவையா? அதாவது "அடிமைச் சாசனம் எழுதிக் கொடு, அப்போதுதான் அங்கீகாரம் உண்டு" என்று சொல்வது போல இருக்கிறது இந்த உத்தரவு. ஒரு சங்கம், மாநிலம் தழுவிய அளவில் இருந்தால், அதற்கு மாவட்ட, ஒன்றிய அளவில் அமைப்புகள் இருக்கின்றன. ஒன்றியத்திலே இருக்கின்ற தலைவர் மீது வேண்டுமென்றே ஒரு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னால், அவரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கக்கூடாது. அது தனி நபர் பிரச்சினை என்று சொன்னால், அதற்கு ஏன் ஒரு சங்கம்? அது எப்படி ஒரு சங்கமாக இருக்க முடியும்? இப்படி வேண்டுமென்றே அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தால்தான் அங்கீகாரம் தருவோம் என்று கூறுவது எப்படி நியாயம்? அதிகாரிகளை விமர்சிக்கக் கூடாதாம். ஒரு சங்கம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று உத்தரவு போடுவது எப்படி சரியாகும்? அரசியல் கட்சிகளுடன் தொடர்பு இருக்கக் கூடாது என்று அதிலே இருக்கிறது. ஆனால் ஒன்று, ஆளும் கட்சியுடன் மட்டும் தொடர்பு இருக்கலாமா!





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆளும் கட்சியும் அரசியல் கட்சிதான் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அப்படித்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இவைகளையெல்லாம் குறைபாடுகள் என்று வைத்து அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் தரமுடியாது என்கிறீர்கள். மற்றொன்று, இந்த ஆணை உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நான் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆசிரியர் பிரச்சினைகளை முதலிலேயே எடுத்திருந்தால், பேசுவதற்கு நிறைய நேரம் கிடைத்திருந்திருக்கும். அதை விட்டுவிட்டு, எங்கெங்கோ சுற்றிவிட்டு இப்போது உறுப்பினர் அவர்கள் ஆசிரியர் பிரச்சினைகளுக்கு வந்திருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் இல்லை; இப்போதுதான் வந்திருக்கிறார்கள். எனவே இப்போது பேசுகிறேன். ஆசிரியராக இருந்து அவர் சங்கத்துக்குப் பொறுப்பாளராக இருந்தால், அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கலாம் என்று இருக்கிறது. இதில்தான் உள்நோக்கம் இருக்கிறது. இன்றைக்கு எங்கள் சங்கத்துக்கு நான் பொதுச் செயலாளர். என்னுடைய சங்கத்துக்கு அங்கீகாரம் கிடையாது. காரணம் நான் ஆசிரியராக இல்லை. நேற்று …வரையில் நான் ஆசிரியர். இன்றைக்கு நான் ஆசிரியராக இல்லை. நாளைக்கு ஆசிரியராகப் போகலாம். நான் சொல்கிறேன், நான் இன்றைக்கும் ஆசிரியர். இன்றைக்குப் பணியிலே இருப்பவர்களுக்குத்தான் அங்கீகாரம், நேற்று …வரையில் அந்தப் பணியிலே இருந்து இங்கே வந்திருப்பவர்களுக்கு இல்லை …என்று சொன்னால், அது எப்படி நியாயமாகும்? மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி. ஆர். தாமஸ், திரு. லெட்சுமிகாந்தன் ஆகியோர் இங்கே உறுப்பினர்…களாக இருக்கிறார்கள். அவர்கள் தனியார் பள்ளியில் பணிபுரிந்துகொண்டி…ருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியராக இருக்கலாம்; அதேநேரம் உறுப்பினர்…களாகவும் இருக்கலாம். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரிபவர்கள் என்றால், அரசுப் பள்ளிகளில் பணி புரிபவர்கள் என்றால் அவர்கள் ராஜிநாமா செய்துவிட்டுதான் இங்கு வர வேண்டும். ஒன்று அந்தச் சட்டத்தைத் திருத்துங்கள். இல்லாவிட்டால் இதைச் செய்யுங்கள். அதாவது ஆசிரியர்

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1981 ஜனவரி 28

[illegible] பெற்ற [illegible] உள்ளவர்கள் ஆசிரியர்கள் பிரதிநிதியாக [illegible] சங்கத்திற்குப் பொறுப்பேற்று இருக்கலாம் என்ற [illegible] ஆணையைத் திருத்த வேண்டும்; இல்லையேல் என்னை அந்தப் பொறுப்பிலே யிருந்து நீக்குவதற்காகத்தான் அரசு இந்த மாதிரி விதிகள் இயற்றியுள்ளது என்று பொருளாகும். நான் ஆசிரியர்களால் நிறுத்தி வைக்கப்பட்டு அவர் களின் பிரதிநிதியாக இங்கே வந்திருக்கிறேன். இவ்வளவு பெரிய அரசு சர்க்கார் என்னைப் போன்றவர்களைக் கண்டு அஞ்சி இவ்வாறு சட்டம் இயற்ற வேண்டுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் அவர்கள் அந்தப் பொறுப்பிலே இருக்கக்கூடாது என்று விதிகளை அப்படி ஏற்படுத்தவில்லை. நல்லமுறையில் காரியங்கள் நடை பெற வேண்டும் என்றுதான் விதிகளை அப்படி இயற்றியிருக்கிறோம். அவருடைய சங்கத்திலே அவரைவிடத் திறமையானவர்கள் இல்லை என்று அவர் பேசக்கூடாது

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உள்நோக்கத்தோடு பேசுகிறார்கள். என்னுடைய அமைப்பிலே இருப்பவர் களிலே தகுதியுள்ளவர்கள் இல்லை என்று பொருள்பட நான் சொல்லவில்லை. எல்லாத் தகுதிகளையும் உடையவர்கள் நிறைய இருக்கிறார்கள்; அவர் களெல்லாம் சேர்ந்துதான் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நான் நேற்றைக்கும் ஆசிரியர், இன்றைக்கும் ஆசிரியர், நாளைக்கும் ஆசிரியர். நான் எந்த அரசியல் கட்சியுடனும் இல்லை. தனியாகத் தான் இருக்கிறேன். நான் எப்போது வேண்டுமானாலும் பொதுச்செயலர் பொறுப்பை விட்டு விடத் தயாராக இருக்கிறேன். மற்றவர்களைக் குறைவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நான் கருத்துக்களைச் சொல்லவில்லை. (மணியடிக்கப் பட்டது) இதுபோன்ற நிபந்தனைகள் மற்ற சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும்போது போடப்படவில்லை. என்.ஜி.ஜி.ஓ. சங்கத்துக்கு அங்கீ காரம் அளித்தபோது, இந்த மாதிரி நிபந்தனைகள் ஏதுமில்லை; கடைநிலை ஊழியர்களின் சங்கத்தை அங்கீகரித்தபோது இந்த மாதிரி நிபந்தனைகள் ஏதுமில்லை; தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கத்தை அங்கீகரித்த போது இந்தமாதிரி நிபந்தனைகள் ஏதுமில்லை; இப்போது உண்மையில் பி. & டி. ஊழியர்கள் சங்கத்தை அங்கீகரித்தபோதுகூட இம்மாதிரி நிபந் தனைகள் ஏதுமில்லை. காவலர்கள் சங்கத்தை அங்கீகரிக்க சிலபல நிபந் தனைகள் இருந்தன. ஆனால், மற்ற ஊழியர்களுக்கு இல்லாத, மற்ற



1981 ஜனவரி 28] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

ஊழியர் சங்கங்களுக்கு இல்லாத ஒரு நிலையை ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் சங்கங்களுக்கு ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு தலைவர் அவர்கள் சைகை காட்டினார்கள்.) நான் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும் என்று தலைவர் அவர்கள் விரும்புகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைப்பதையே தலைவர் சொல்கிறார்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: கிராம நல ஊழியர்கள் இன்றைய தினம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையை அரசு கனிவுடன் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: கிராமப் பணியாளர்கள் சார்பாக அவர்கள் பிரதிநிதிகள் என்னை வந்து சந்தித்து கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் எங்களோடு ஒத்துழைக்கின்ற அளவுக்கு சில முடிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு குழு அமைத்து அதைப் பற்றி விசாரித்து முடிவெடுக்கப்படவிருக்கிறது. உண்ணாவிரதம் இருப்பவர்கள் அவர்களோடு சேர்ந்தவர்களா என்று கேட்டதற்கு, நாங்கள் அவர்களோடு வரமாட்டோம் என்று சொன்னார்கள். நிலைமை இப்படி இருக்கிறது. இதை யெல்லாம் ஒழுங்கு படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளி யிட்ட கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். அடுத்து, ஒன்றே ஒன்று. . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்படி ஒன்றே ஒன்று என்று சொன் னால் எப்படி முடிப்பது ? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சம்பந்த மாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமல் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில பதில்களைச் சொன் னார்கள். அந்தப் பல்கலைக் கழகத்தின் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை இருக்கிறது. . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் பலமுறை அதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறேன். சட்டத்தைத் திருத்துவது என்பது வேறு, நடைமுறையிலே தேவைக்கேற்ப சில விதிமுறைகளைத் திருத்துவது என்பது வேறு. மீண்டும் அதை ஏன் வற்புறுத்துகிறார்கள் என்று தெரியவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஊழியர்கள், ஆசிரியர்கள் என்ன நினைக்கிறார்களோ அவர்களின் கருத்தை நான் இங்கே வெளியிட்டேன்; கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் அந்தப் பல்கலைக் கழகத்தைப்பற்றி யாருக்கும் எத்தவிதமான விரோதமுப் இல்லை. அந்தப் பல்கலைக் கழகத்திலே இருந்த துணைவேந்தர்களில் யாராவது இயல்பாக அவர்களுடைய பதவிக் காலம் முடிந்து போயிருக் கிறார்கள் என்ற வரலாறே இல்லை; என்ன காரணம்? நான் வரிசையாகக் கூறுகிறேன். ' புரபொசர் திரு. எம். ரத்தினசாமி " எனக்கு டாக்டர் பட்ட பே வேண்டாம்" என்று போயிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பின அவர்கள் ஏதோ அங்கே இருக்கிறவர்களும் அரசும் பேச்சுவார்த்தை நடத் முடிவு செய்ய வேண்டிய ஒன்று என்பதுபோல பேசியிருக்கிறார்கள். அந் நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஒரு ச யான முடிவெடுத்து, செயல்படுத்த இருக்கிறது. அதை அரசு செயல்படுத்தும் இதை இப்படியே கொண்டு போய் பிரச்சினைகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம். அந்தப் பல்கலைக் கழகம் அங்கே பணியாற்றியவர்களை வெ யேற்றப்போகிறதா அல்லது அவர்களாகவே வெளியேறுகிறார்களா என்பது வேறு. இந்தக் காரியங்களையெல்லாம் சொல்லியதிலிருந்து, அந்தப் பல்கலைக் கழகத்திலே என்ன நடக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல் யதற்காக நன்றி.

(பிற்பகல் 12-10)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் எனது பேச்சை மேலே தொடரவில்லை எனினும் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். காரணம் இங்கே ஒரு தவறான தகவல் தரப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தி ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்டது உண்மைதானா என்ற ஐயப்பாடு இங்கே உருவாகும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள் எனவே அதைப்பற்றி மட்டும் நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன் 16—12—1980 அன்று ஆங்கிலத் துறையின் பேராசிரியரான திரு. பழனியப்ப என்பவர் தாக்கப்பட்டது உண்மை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே ஆசிரியர் தாக்கப்பட்டது உண்மை என்று சொல்ல முடியாது. அவர் தாக்க பட்டதாகச் செய்தி வந்திருக்கிறது, அவ்வளவுதான். முடிவு என்பது விசாரணைக்குப் பிறகுதான் எடுக்கப்பட வேண்டும்.



***திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கான வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நான் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையில் உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது குறித்து இந்த உரையில் சொல்லப் பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களும், மேலவையின் தலைவரான தாங்களும், உறுப்பினரான நானும் அந்த மாநாட்டில் பங்கு கொண்டோம். அத்தகைய சிறப்பான நிகழ்ச்சியைக் குறித்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் "ஏதோ ஐயப்பன் சாமிக்குக்கூட 30 லட்சம் பேர் வருகிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். அப்படிக் கூறுவதன் மூலம், உலகத் தமிழ் மாநாட்டையே கிண்டல் செய்வது போல் பேசியிருக்கிறார். நான் அதற்காக வருத்தப்படுகிறேன். அவர் தமிழ் நாட்டில் இருப்பவர். தமிழ் மொழி, தமிழ்ச் சமுதாயத்தின் மிகச் சிறந்த மொழி. பண்டைப் பெருமை வாய்ந்த அந்த மொழி உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவியிருக்கிறது. அந்த வகையில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு பல நாடுகளிலிருந்தும் வந்திருந்தவர்களைப் பார்த்து ஐயப்பன் சாமிக்கு வருகிறவர்களோடு ஒப்பிட்டுப் பேசினால், அவ்வாறு பேசிய மாண்புமிகு உறுப்பினரின் தமிழ் பற்றை இம்மாமன்றம் நன்கு அறிந்துகொள்ளும் என்று நம்புகிறேன்.

மதுரையில் சிறந்த முறையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, மிகச் சிறப்பான பெயரெடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் அவர் தலைமையில் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியையும் நான் உளமாரப் பாராட்டுகிறேன்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நமது மாநில முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு வாதாடி கிட்டத்தட்ட ரூபாய் 3,150 கோடி ஒதுக்கீடு பெற்று வந்திருக்கிறார்கள். அந்தத் தொகையை வைத்துக்கொண்டு இந்த நாட்டில் நல்ல வளர்ச்சியை உருவாக்குவார்கள் என்பதில் ஐயமில்லை. என்னைப் போன்ற ஏழை எளிய நெசவாளர்கள், விவசாயிகள், நிலமற்ற விவசாயக் கூலிகள், நித்திய தரித்திரர்களாக, நாள்தோறும் வேலை தேடி, அங்காடிகளின் ஓரத்திலும், கடை வீதிகளின் சந்துகளிலும் நின்றுகொண்டு தங்களை யாராவது வேலைக்குக் கூப்பிடுவார்களா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் மக்களின் நலனுக்காக இந்த ரூபாய் 3,150 கோடியைச் செலவு செய்வதற்காகவே பெற்று வந்திருக்கிறார் என்பதால், அவருக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் பணவீக்கம்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. வசதிபடைத்து இருப்பவர்கள்தான் காரியங்களைச் சாதிப்பார்கள் என்பார்கள். அழுகிற பிள்ளைதான் பால் குடிக்கும் என்பார்கள். ஆனால் நாங்களெல்லாம், ஏழை நெசவாளர்கள், நிலமில்லாத விவசாயிகள், கை வண்டி இழுப்பவர்கள். எங்களுக்கு என்று சங்கம் ஏதும் கிடையாது. நாங்கள் நாள்தோறும் உழைக்கிறோம். நாள் முழுதும் உழைத்தால், ரூபாய் 6 அல்லது 7 கூலியாகக் கிடைக்கும். மண் வேலைக்கு வருகிறாரா, நாற்று நட வருகிறாயா என்று யாராவது கூப்பிட்டுப் போனால்தான் வேலை. அப்படி அழைத்துச் சென்று வேலை கொடுத்தால்தான் நாங்கள் வாழ முடியும். சுதந்திரத்திற்கு முன்பும் இந்த நிலைதான். சுதந்திரத்திற்குப் பிறகு கடந்த 33 ஆண்டுகளாகவும் இந்த நிலைதான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் "நாங்கள்" என்று குறிப்பிடுவது யாரை என்று தெளிவுபடுத்துவது நல்லது. நான் சரியாகக் கவனிக்கவில்லை (சிரிப்பு).

திரு. சி. இராமலிங்கம்: நான் என்று சொல்லும்போது ஏழை எளிய நெசவாளர்கள், நிலமற்ற விவசாயிகள், நித்தம் நித்தம் வேலை செய்து பிழைக்கும் மக்கள் ஆகியோரைத்தான் குறிப்பிடுகிறேன். நான் ஒரு ஏழை நெசவாளி. நாங்கள் நெசவாளர்கள் சங்கம் என்று வைத்துக்கொண்டு கூப்பாடு போட முடியவில்லை. சங்கம் வைத்து கூப்பாடு போடுகிறவர்களுக்குத்தான் ஏறுகிற விலைவாசிக்குத் தகுந்தாற்போல் அகவிலைப்படி உயர்வு கிடைக்கிறது. சங்கம் வைத்திருப்பவர்கள் விலைவாசி உயர்வைக் காட்டி அதிக ஊதியம் கேட்கிறார்கள். வீட்டுவாடகை உயர்ந்துவிட்டது என்று சொல்லி கூப்பாடு போடுகிறார்கள். இப்படி உத்தியோகத்தில் இருப்பவர்கள் விலைவாசி உயர்ந்துவிட்டது என்று ஊதிய உயர்வு பெற முடிகிறது, மற்ற பல சலுகைகளைப் பெற முடிகிறது. சென்னையில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில், பால் அரை லிட்டர் ஒரு ரூபாய்க்கு—நியாய விலையில்—கிடைக்கிறது. கிராமத்தில் ஏழை மூன்று ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. நகரங்களில் இருப்பவர்களில் உத்தியோகஸ்தர்களுக்கு நியாயமான வாடகையில் குடியிருக்க குவார்ட்டர்ஸ் கட்டித் தருகிறார்கள். எங்கே பார்த்தாலும் என்.ஜி.ஓ.க்களுக்குக் குவார்ட்டர்ஸ் கட்டுகிறார்கள். ரெவின்யூ இலாக்காவில் வேலை செய்பவர்களுக்குக் 'குவார்ட்டர்ஸ்' கட்டித் தருகிறார்கள். நியாயமான வாடகையில் அவர்களுக்கு வீடுகள் தரப்படுகின்றன. தண்ணீரும் அரிசியும் நியாய விலையில் கொடுக்கப்படுகின்றன. அதைப்போலவே காய்கறி, மற்றும் சர்க்கரை எல்லாம் நியாய விலையில் கிடைக்கின்றன. இவைகளெல்லாம் சென்னையில் படித்துவிட்டு உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மட்டும்தான்



கிடைக்க வேண்டுமா? படிக்காதது எங்களுடைய தவறு இல்லையே? இந்த நாட்டுப் பொருளாதார வளர்ச்சிதானே அதற்குக் காரணம்? அப்படி இருக்கும்போது, விலைவாசி ஏறிவிட்டால், நாங்கள் மட்டும்தான் அவஸ்தைப்பட வேண்டுமா? சர்க்கரை இன்றையதினம் வெளி மார்க்கெட்டில் கிலோ ரூபாய் 7 முதல் 8 வரை விற்கிறது. இந்த அளவுக்கு விலைவாசி உயர்வு இருக்கும்போது, நாங்கள் யாரிடம் போய் அகவிலைப்படி உயர்வு கேட்பது அல்லது 'பேட்டா' வை உயர்த்த வேண்டும் என்று யாரிடம் கேட்பது? எனவே எங்களுக்கெல்லாம் அரசு நீதி வழங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம்: நெசவாளர்கள், கூலி போதவில்லை என்று பல இடங்களில் போராட்டம் நடத்துகிறார்கள். அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், அவர்கள் அதிகக் கூலி கேட்காமல் இல்லை. அப்படி அதிகக் கூலி கேட்டு போராட்டம் நடத்தும்போது, அவர்களுக்குக் கேட்டு வாங்கித் தருவதில் உறுப்பினர் அவர்கள் என்ன நிலையை மேற்கொள்வார் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: நாங்கள் கேட்கிறோம். வால்தவம்தான். கொடுப்பதற்கு யார் இருக்கிறார்கள்? அரசியல் வாதிகள் எங்களை எடுப்பார் கைப் பிள்ளைகளாக வைத்துக்கொண்டு, போராட்டம் நடத்துகிறார்கள். போராட்டம் நடத்தும் 10 நாட்களுக்கு வந்து போகிறார்கள். அதற்குப் பிறகு யார் இருக்கிறார்கள் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு? எங்களுடைய நெசவுத் தொழிலைப் பொறுத்தவரையில், மூன்று விதமான ஆக்கிரமிப்பு இருந்து வருகிறது.

பத்திரிகைகளைப் பார்த்தால், இந்த ஆண்டு கைத்தறித் துணிகள் ரூ. 20 கோடி அளவுக்கு விற்றன என்று செய்திகள் வருகின்றன. கோ-ஆப்டெக்ஸ் மூலம் நல்ல வியாபாரம் நடப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நெசவாளர்களின் நிலையைப் பார்த்தால், மிகவும் மோசமாக இருக்கிறது. கையெழுத்து தெரியும் நேரத்திற்கு முன்பே தறிக்குழியில் இறங்கி கையெழுத்து மறையும் நேரத்தில் வெளியே வருகிறவர்கள் நெசவாளிகள். காலை முதல் மாலை வரை வேலை செய்தால்தான் ரூபாய் 3 அல்லது ரூபாய் 4 சம்பாதிக்க முடியும். இப்படிப்பட்ட நாங்கள் சங்கம் வைத்துக் கொண்டிருந்தாலும், யாரிடம் போய் கேட்பது? எங்களுக்கென்று ஒரு திட்டவட்டமான அமைப்பு இல்லாத காரணத்தால்தான், நெசவாளர்களான நாங்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நெசவாளர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கென்றே சட்டம் ஒன்று கொண்டுவர இருக்

[திரு. சி. இராமலிங்கம்] [1981 ஜனவரி 24

கிறார்கள். அது செலக்ட் கமிட்டிக்குப் போயிருக்கிறது. அப்படி ஒரு நல்ல சட்டம் கொண்டுவந்தாலும், எங்களுடைய தொழிலுக்கு நல்ல பாதுகாப்பு இருக்குமா என்ற சந்தேகம், அச்சம் எல்லாம் இருக்கிறது.

கைத்தறி என்ற பெயரில் பவர் லூம்ஸ் வைத்துக்கொண்டு உற்பத்தி செய்கிறார்கள். இவர்களுக்கு மத்திய சர்க்காரோ, மாநில சர்க்காரோ பர்மிட் தந்திருக்கிறார்களா என்பதுகூட தெரியவில்லை, அதைப்பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படாமல் அனாமதேய கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படி போலியான கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மில் முதலாளிகள் கைத்தறித் துணி என்ற போர்வையிலேயே நாங்கள் என்னென்ன ரகங்களை, டிசைன்களைப் போடுகிறோமோ அவைகளையெல்லாம் போட்டு மில்லில் துணி உற்பத்தி செய்து விற்கிறார்கள். "செக் டிசைன்" என்பார்கள். நான்கு நாடா, 5 நாடா செளத்து என்பார்கள். இதையெல்லாம் 50, 52 இன்ச் அளவுக்குப் போட்டு சேலைகளைத் தயாரிக்கிறார்கள். மறைந்த பெரியவர் திரு. இராஜாஜி அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், திரு. ஜீவா அவர்களும் ஒன்றுகூடி கரை போட்ட வேட்டியையும் சேலையையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்று கேட்டார்கள். மத்திய அரசு அன்று முதல் இன்றுவரை அதை அனுமதிக்கவில்லை. இதன் காரணமாகவே மில் முதலாளிகள் எங்களோடு போட்டியிடுகிறார்கள்.

ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இந்த அரசுக்கு மூன்று மனைவிகள் இருக்கிறார்கள். இப்போது மூன்றையும் தாண்டி பவர் லூம்ஸ் நான்காவது மனைவி ஸ்தானத்திற்கு வந்து விட்டது. கட்டிய மனைவிபோல் பட்ட மகிஷியாக இருப்பது கதர். காதலி போல் இருப்பது துணி மில் முதலாளி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மூன்றாவது மனைவி போல் வேடம் போட்டுக் கொண்டிருக்கிறது பவர் லூம்ஸ் என்று சொல்லலாமோ.

**திரு. சி. இராமலிங்கம்:** காதலி போல் இருப்பது மில் துணி. மில் முதலாளிகள்தான் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். கைத்தறி, ஒரு வேலைக்காரியைப்போல் இருக்கிறது என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது அந்த ஸ்தானத்திற்கும் போட்டியாக பவர் லூம் வந்து விட்டது. அரசு அதைக் கவனித்து கைத்தறிக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஜனவரி 24] [திரு. சி. இராமலிங்கம்]

நான் அவையில் நீண்ட நேரம் பேசுவதாக இல்லை. என்றாலும் சில பிரச்சினைகளைப்பற்றி மட்டும் என் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் விலைவாசியைப்பற்றிச் சொல்லும்போது தற்போதைய நிலைமை பணவீக்கத்தைக் கொண்டு வந்துவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்களுக்கே நன்கு தெரியும். அதிகமான வயதானவர் அவர். நீண்ட அனுபவம் பெற்றவர்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதிகமான வயது என்றால் எவ்வளவு?

**திரு. சி. இராமலிங்கம்:** என்னுடைய தந்தையைப் போன்ற நிலையில் இருப்பவர்கள் ....

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விதிமுறை அனுமதிக்கவில்லை. அனுமதித்திருந்தால் இதை 'எக்ஸ்பஞ்ச்' செய்திருப்பேன். (சிரிப்பு)

(பிற்பகல் 12-20)

அந்தக் காலத்திலே விலைவாசிகள் ஏறிக்கொண்டே வந்தது. அப்போது 'வார் அலவன்ஸ்' கொடுத்தார்கள். அதற்குப் பிறகு ரேஷன் வந்தது. அதற்குப் பிறகு பஞ்சப்படி என்று கொடுத்தார்கள். இதையெல்லாம் கூர்ந்து கவனித்தால் ஒன்று தெளிவாகத் தெரியும். உளுத்தம் பருப்பு முதலில் இரண்டரை ரூபாய்க்கு விற்றது என்றால், சர்க்கார் ஊழியர்களுக்குச் சம்பளத்தை அதிகமாக்கிய பிறகு அந்த உளுத்தம் பருப்பு இரண்டு ரூபாய் 60 காசுக்கு விற்கப்படும். சர்க்கார் ஊழியர்களுக்கு பத்து ரூபாய் அதிகமாகப் பஞ்சப்படி அளிக்கப்பட்டது என்ற செய்தி வந்ததும் எல்லாப் பொருள்களின் விலையும் உடனே ஏறிவிடும். நாம் நன்றாகக் கவனித்துக் கொண்டுவந்தால், இது தெளிவாகத் தெரியும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, சர்க்கார் ஊழியர்களுக்குச் சம்பளம் அதிகப்படுத்தும்போது, விலைவாசிகளும் ஏறுகின்றன என்று கூறியிருக்கிறார். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே விலைவாசி எப்படி ஏறுகிறது என்றும், மத்திய அரசில் உள்ள குறைகளைப் பற்றியும் நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அதற்கு உடன்படுகிறாரா? இப்போது ஒரு புதிய கருத்தைச் சொல்லுகிறாரே!

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் என்னைச் சிக்கலில் மாட்டி வைக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். சிக்கலில் இருந்து நூலைப் பிரித்து எடுத்துத் தறி நெய்பவன் நான். பொருளாதாரத் தத்துவத்தைப்பற்றி நெசவாளர்களாகிய எங்களுக்குக் கவலையில்லை. இராமப்

பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டு கோள். கிராமத்திலே இருப்பவனுக்கு குடிக்கக்கூட தண்ணீர் இல்லாதபோது ஒரு சிலர் பன்னீரில் வாய் கொப்பளிக்கிறார்கள். ஓரிடத்திலே ஒரு தொழிற் சாலையில் இலாபம் வந்துவிட்டால், போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால் மற்றொரு இடத்திலே அந்த வேலைகூட இல்லாமல் இருக்கிறார்கள். இதை யெல்லாம் கவனிக்க வேண்டுமென்றுதான் நான் பலமுறை பேசியிருக்கிறேன். பொருளாதார ஏற்றத்தாழ்வால் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகளும் நெச வாளர்களும்தான். அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று சொல்லு வதில் நாம் பேச்சோடுதான் நிற்கிறோம். ஆனால் கூப்பாடு போடுகிறவர் களுக்கு 10 ரூபாயை அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆகவேதான் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே, ஊதிய உயர்வை அளிப்பதால் மேலும் விலை வாசிகள் ஏறும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அடுத்து, நெசவாளர்கள் பிரச்சினைபற்றி ஒன்றைச் சொல்லுவது மிகவும் முக்கியம் என்று கருதுகிறேன். ஏனென்றால் இப்போது டில்லியில் பட்ஜெட் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். கவனிப்பார்கள் என்று கருதுகிறேன். நெசவாளர்களுக்குப் பாதுகாப்பாக இருந்த ஒரே ஒரு திட்டம் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் முன்பு கொண்டு வந்த இருபது அம்சத் திட்டத்திலே இருந்தது. கிராமங்களில் தொழில்கள் வளர வேண்டும் என்று அம்மையார் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். கிராமங்களில் பல தொழில் களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறதென்றாலும், அதிகமாகப் படிக்காதவர் களும், கல்லூரியில் சேராமல் இருப்பவர்களும் தங்களுடைய அனுபவத்தைக் கொண்டு செய்யக் கூடிய தொழில்களில் தலையாய தொழில்கள் விவசாயமும் நெசவும் தான். ஆகவே அதை மேலும் வளர்க்கலாம் என்று அம்மையார் அவர்கள் கூறியிருந்தார்கள். இப்போது அதை மத்தியில் உள்ளவர்கள் மாற்ற முயற்சி செய்கிறார்கள் என்பதாக நான் அறிகிறேன். யார் என்று கேட்கலாம். அப்படிச் செய்யக் கூடாது என்று, தலைவர் அவர்களே, உங்கள் சார்பாக நான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: என் சார்பாக என்று சொல்ல வேண்டாம். என் அனுமதியோடு என்று சொல்லலாம்.

திரு. சி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நெசவு மில்களை விஸ்தரிக்க வேண்டும் என்றும் புதியதாக நெசவு மில்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்றும் மத்திய அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் பேசியிருக்கிறார்கள்.



அவரிடமே நான் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். அதை மீண்டும் வலியுறுத்தி, எந்தக் காரணத்தைக் கொண்டும் நெசவு மில்களை விஸ்தரிக்கக் கூடாது என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெசவாளர்களுக்கு உதவிகள் செய்கிறோம் என்று சொல்லுகிறோம். கொடுக்கப்படுகிற உதவிகள் நெசவாளர்களுக்கு நேரிடையாகப் போய்ச் சேருவ தில்லை. இரண்டாவது உலக யுத்தம் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1952 ஆம் ஆண்டில், மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகள் "சுய தேவை" என்ற திட்டத்தின் கீழ் நம்முடைய துணியை வாங்காததால், நம்முடைய நாட்டில் கைத்தறித் துணி ஏராளமாகத் தேங்கிவிட்டது. அதனால் கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய தோளில் கைத்தறித் துணியைச் சுமந்து விற்றார்கள். அதே நேரத்தில், காங்கிரஸ் காரர்கள் கதர் துணியை அணிய வேண்டுமென்ற தத்துவம் இருந்ததைப் போல, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எல்லாம் கைத்தறி ஆடையை அணிய வேண்டும் என்றும் அண்ணா அவர்கள் சொன்னார்கள். மலர் மாலைக்குப் பதிலாக கைத்தறித் துண்டையே போட வேண்டும் என்ற கொள்கையை ஏற்படுத்தினார்கள். அதைப் போலவே கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஊர்வலமாக வந்தார்கள். அமரர் ஜீவா அவர்கள் தலைமையேற்று அதை நடத்தினார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கலந்து பேசி, அப்போது முதலமைச்சராக இருந்த திரு. ராஜாஜி அவர்களிடம் ஒரு மனுவைக் கொடுத்த வுடனே அவரும் அதை உடனே ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார். அமரர் நேரு அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு நித்தி யானந்த கனுங்கோ கமிட்டியை அமைத்தார்கள். அந்தக் கமிட்டியினர் 1953, 1954 ஆம் ஆண்டு வரை ஆராய்ந்து மில் துணிகளுக்கு 'செஸ்' என்ற முறையில் ஒரு கெஜத்திற்கு 3 பைசா என்று வரி போட்டு வசூலித்து அந்தத் தொகை முழுவதையும் கைத்தறி நெசவாளர்களுக்காக ஒதுக்கி நன்மை செய்ய வேண்டுமென்று ஆரம்பித்தார்கள். அந்த செஸ் வரியிலிருந்து கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களை அமைத்தார்கள். நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார்கள். இப்போது அந்த செஸ் வரி நிதியில் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் வருவதாகச் சொல்லுகிறார்கள். அது சரியோ தவறோ தெரியவில்லை. அதை படிப்படியாக மத்திய அரசினுடைய பொது நிதியில் சேர்த்துவிட்டிருக் கிறார்கள். நெசவாளர்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்கிறபோது ரிபேட் என்ற முறையிலே ஓரளவிற்கு உதவுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பள்ளியாடி கூட்டுறவு நெசவாளர்கள் சங்கக் கட்டடத் திறப்பு விழாவிற்கு மத்திய நிதியமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் வந்திருந்தபோது,

இந்த செஸ் நிதியை தனியாக ஒதுக்கி இந்தியா முழுவதும் உள்ள நெசவாளர் களுக்கு, அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவுவதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை எடுத்து வைத்தேன். அப்படி நான் கோரிக்கையை வைத்தபோது, " உண்மைதான், அதை பொது நிதியிலிருந்து பிரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று மந்திரி சபைக் கூட்டத்திலே பரிசீலிக்கிறேன் " என்று மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது இந்தியா முழுவதும் யாருமே கைத்தறித் துணியை வாங்குவதில்லை. கிட்டத்தட்ட 35 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் இந்தியா முழுவதும் இருக்கிறார்கள். தமிழகத்திலே மட்டும் 5 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான முறையிலே வேலை கிடைப்பதில்லை. அச்சு முறிந்த

(பிற்பகல் 12-30).

வண்டியைப் போல ஏதோ அவர்களுடைய வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது
ஆகவே கைத்தறித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத் தரும் திட்டத்தை
மத்திய அரசால்தான் கொண்டுவர முடியும். ஏனென்றால் இந்தத் தொழிலிலே
சேல்ஸ் டாக்ஸ் கிடையாது. கைத்தறிக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லாமல் இருக்
கிறது. சேல்ஸ் டாக்ஸ் ஏதாவது கொண்டு வரச் செய்யலாமா என்று
சொன்னால், அது கொள்கை ரீதியாக தேவையற்ற ஒன்று என்று பல பேர்கள்
சொல்கிறார்கள். இதில் சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்பதற்குக் காரணம் இதில்
உண்மையான கணக்கு இல்லாததுதான் என்று சொல்கிறார்கள். இதனால்
மத்திய அரசுக்கு இன்கம் டாக்ஸ் வருவதில்லை. அதனால் இந்தத் துறையை
புறக்கணிக்கிறார்கள் என்று டெல்லியிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள்.
இந்தத் திட்டத்தை மத்திய அரசு அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டு
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலையில்லாதவர்களைப் பொறுத்தவரை வீட்டுக்கு ஒருவருக்கு வேலை
கொடுக்கும் திட்டத்தினை கவர்னர் அவர்கள் உரையில் அறிவித்திரு
கிறார்கள். நான் பணிவன்போடு சொல்வது என்னவென்றால், இனி வேலை
கொடுக்கின்றபோது கவனத்தில் சிலவற்றைக் கொள்ள வேண்டும். நா
என்னுடைய கன்னிப் பேச்சிலேகூட சொல்லியிருக்கிறேன். ஒரு குடும்பத்தி
ஒரு வீட்டில் 20 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள், 20 வீடுகள் வைத்திரு
கிறார்கள், 4 வியாபார ஸ்தலங்கள் வைத்திருக்கிறார்கள், அந்தக் குடும்பத்தில்
5 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த ஐந்து பேர்களும் முக்கியமா
உத்தியோகத்தில் இருக்கிறார்கள். இப்படி வருமானம் ஒரே குடும்பத்தி
சேர்கிறது. ஒரு கம்யூனிஸ்ட் மெம்பர் சொல்லுவதுபோல, ஒரே குடும்ப
பூர்ஷ்வாக்களைப் போல வாழ்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டி
இருக்கின்றன, இந்த நிலைமையை மாற்ற வேண்டும். இந்த நிலைமைக



ற்றி ஒரு வீட்டிற்கு ஒருவருக்கு நிச்சயம் வேலை என்ற தத்துவத்தைக்
ொண்டுவந்து அதற்குத் தேவையான திட்டங்களைக் கொண்டுவந்து பல
ர்மைகளைச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

அப்படி வேலை கொடுக்கின்றபோது, கைத்தறி நெசவாளர் குடும்பங்
ளுக்கு வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தில் முன் உரிமை
டுக்க வேண்டும். எப்படி அரிசனங்களுக்கு முன் உரிமைகள் கொடுத்து
லை கொடுக்கின்றார்களோ அதுபோல என்னுடைய சமுதாயத்தைச்
ர்ந்தவர்களுக்கும் முன்உரிமை கொடுத்து வேலை கொடுக்க வேண்டும் என்று
ட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் பேசுவதற்கு
னக்கு வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு என் நன்றி கலந்த
க்கத்தைக் கூறி என் உரையை முடிக்கிறேன்.

டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்: மாண்புமிகு மேலவைத்
லைவர் அவர்களே, இப்போது நான் சில நிமிடங்கள் மட்டுமே பேச விரும்பு
றேன். கூடுமான வரையில் மற்ற மாண்புமிகு அங்கத்தினர்கள் பேசியதை
டுவிட்டுப் பேச முயற்சி செய்கிறேன்.

இப்போது முதலில் உலகத் தமிழ்மாநாடுபற்றிச் சொல்ல விரும்புகிறேன்.
ந்து நாட்களும் அங்கே இருந்து பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்.
ங்கு 10 லட்சம் 20 லட்சம் மக்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கு
ந்து மகாநாட்டில் கலந்துகொண்டு பின்னர் அமைதியாகத் திரும்பியிருக்
றார்கள். நாம் அதைப் பாராட்ட வேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள்
லைமையில் நடந்தது. தாங்களும் வந்திருந்து அது எவ்வளவு விமரிசையாக
டந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அதைப்பற்றி நான் இந்த
மலையில் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. எல்லோரும்
ங்கே வந்திருந்தார்கள். திரு. சந்தோஷம் கூட வந்திருந்தார்கள். இந்த
லகத் தமிழ் மகாநாடு சிறப்பாக நடந்தது என்று பல அங்கத்தினர்கள்
சான்னார்கள். 15 லட்சம் 20 லட்சம் பேர்கள் வந்து நிம்மதியாகத் திரும்பிப்
போனார்கள் என்று சொன்னால், நம்ப முடியாது என்று சொல்வார்கள்
ந்த மகாநாட்டிற்குப் பிறகு ஒரு தமிழ்ச் சங்கம் உருவாகியிருக்கிறது.

டது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழே அமர்ந்து கொண்டு நமது
மிழ்ப் பேராசிரியர்களையும், அறிஞர்களையும் ஆராய்ச்சியாளர்களையும்
டியிலே உட்கார்ந்து பேசும்படி ஊக்கப்படுத்தினார்கள். இது ஒரு பெரிய
ரியம். தமிழ் வளர பண உதவிகளைத் தொடர்ந்து செய்வோம் என்று
சொல்லியிருக்கிறார்கள். அந்த விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு

முதல்வர் அவர்கள், மற்ற அமைச்சர்கள், தமிழ்ப் பேரறிஞர்கள், எல்லோருக்கும் இந்த மேலவையின் மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு விழாவில் பிரதமரை வரவழைத்து முக்கியமான ஒரு பிரச்சினைக்கு ஒரு வார்த்தை சொல்லச் செய்திருக்கிறார்கள். அதாவது 'இந்தியை நாங்கள் திணிக்கமாட்டோம்' என்று பிரதமர் சொல்லிவிடும்படியான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது ஒரு முக்கியமான விஷயம். 1937 ஆம் வருடத்தில் நடந்தது எனக்குத் தெரியும். முதன்முதலாக ராஜாஜி அவர்கள் இந்தியைக் கட்டாயமாகக் கொண்டு வந்தார்கள். நான் அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்ததனால், நான்தான் முதன் முதல் ஆட்சேபனை தெரிவித்தேன். இதைப்பற்றி இப்போது சொல்ல வேண்டியதில்லை. இப்போதும் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் 'இன்கிரிஸ்ட் யூஸ் ஆப் இந்தி' என்ற அளவில் பணம் செலவு செய்கிறார்கள். அதன் காரணமாக மணியார்டர், பாங்க் பாரம்கள் எல்லாம் இந்தியில் வருகின்றன. அந்தந்த ஊரில் தாய் பாஷையும் ஆங்கிலமும் இருக்கலாம். அப்படிச் செய்யலாம். தமிழில் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். இந்தியையும் போட்டுவிட்டால், அது சரியில்லை. இந்தியைப் போடாமல் இருக்க வேண்டும். தேவையில்லாமல் போட்டு அதில் அர்த்தம் இல்லாமல் போய்விடுகிறது. பாங்க் டிராப்ட்கள் சரியாக 'பில் அப்' செய்யாததால் திரும்பிவிடுவதாகச் சொல்கிறார்கள்.

பலர் என்னை வந்து சந்திக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வருகிறார்கள். ஆப்பிரிக்காவிலிருந்தும், மலேயாவிலிருந்தும் பலர் வந்து சந்திக்கிறார்கள். அவர்களில் தமிழ் ஆர்வம் உள்ளவர்களுக்கு தமிழாசிரியர்களை அனுப்பித் தமிழ் கற்பிக்கலாம். வெளிநாடுகளுக்கும் நாம் உபாத்தியாயர்களை அனுப்ப வேண்டும். அந்த முறையில் நாம் தமிழை உலகில் பரப்ப வேண்டும். 75 வயது ஆனவர்கள், பெரியவர்கள் தமிழ் பேசுகிறார்கள். அவர்கள் பிள்ளைகள் தமிழ் சுமாராகப் பேசுகிறார்கள். அவர்களின் பிள்ளைகள், பேரன் பேத்திகள் 'மம்மி', 'டாடி' என்று பேசுகிறார்கள். அப்படித்தான் அவர்கள் தமிழ் இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்தாற்போல் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கவர்ண்மெண்ட் ஆர்டர் போடலாம் சாதாரண ஆர்டர். ஆர்டினன்ஸ் என்றுகூட போட வேண்டியதில்லை. எந்த அச்சாபீசில் தமிழ் புத்தகம் போட்டாலும், அதிலே இரண்டு நகல்களை தமிழ் டெவலப்மெண்ட் இலாகாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவர்கள் பார்த்து அதில் நல்ல புத்தகங்களை குழுக்களை வைத்து தேர்ந்தெடுக்க வேண்டும். 10 புத்தகம் அனுப்பி அதில் 2 புத்தகங்கள் நன்றாக இருந்தாலும், அவற்றின் பிரதிகளை வெளி நாடுகளுக்கு, அங்கே இருக்கின்ற தமிழ்ச் சங்கங்களுக்கு எல்லாம் அனுப்ப வேண்டும். 40 அல்லது 50 பேர்கள் நியமித்து அவர்களுக்கு வேலையைக் கொடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். எல்லா தமிழ்ப் பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்ப வேண்டும். இலவசமாகவே அனுப்ப வேண்டும். இதனால் லட்சக்கணக்கில் செலவாகலாம். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.



இந்த உலகத் தமிழ் மகாநாட்டிற்காக ரூ. 12 கோடி செலவாகியிருக்கிறது. நான் அதை ஒப்புக்கொள்கிறேன். ஏனென்றால் நான் 6, 7 மாதங்களாக மதுரையம்பதிக்குச் சென்று வந்திருக்கிறேன். நிச்சயமாக அந்த அளவுக்குச் செலவாகியிருக்கும். அதைப்பற்றி யாரும் தவறாகப் பிரச்சாரம் செய்யக் கூடாது. தமிழன் என்ற முறையில், நான் பார்த்த அளவில் சொல்கிறேன். அங்கே மதுரையம்பதிக்கு வேண்டிய அளவுக்கு நிரந்தரமான உபயோகத்திற்கு ஏற்ப பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இவ்வளவு பேருக்கு வசதிகளைத் தனிப்பட்ட முறையில் யாரும் செய்துகொடுத்திருக்க முடியாது. இதிலே அரசுத் துறை அதிகாரிகள் நன்கு பணியாற்றியிருக்கிறார்கள். இதை நாம் பாராட்ட வேண்டும். எல்லாம் நன்றாகவே செய்திருக்கிறார்கள். யார் யார் என்று பெயர் சொல்ல முடியாது. எல்லோரும் சேர்ந்தே செய்திருக்கிறார்கள். இது ஒரு பெரிய சாதனையாகும். அத்தனை பேரும் பெரும்பங்கு கொண்டு பணியாற்றியிருக்கிறார்கள்.

இந்த பட்ஜெட்டுக்கு என்று 3,150 கோடி ரூபாய் ஒதுக்கி நல்ல முறையில் செலவழிக்க இருக்கிறார்கள். இந்த 3,150 கோடி ரூபாய் பற்றாவிட்டாலும் இன்னும் ஆயிரம் கோடி ரூபாய் லோன் எழுப்பி எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றலாம். ரிசர்வ் வங்கியில் எவ்வளவோ பணம் இருக்கிறது. பணம் நிறைய இருக்கும்போது இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய் செலவு பண்ணுவது என்று இருந்தால், அதையும் செய்யலாம்.

எசன்சியல் ஆர்டிகில்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பேர் பிரைஸ் ஷாப்கள் இருப்பது நல்லது. ஏழை மக்கள் அதைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். தக்காவி லோனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். விவசாயிகள் போராட்டங்கள் செய்யலாம், கோரிக்கைகள் எழுப்பலாம். அவர்கள் பிரச்சினைகள் குறித்து பரிசீலனை செய்ய இந்த அரசு ஒரு குழு அமைத்திருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். அப்படியெல்லாம் இருக்கும் போது, விவசாயிகள் நகரங்களுக்கு எசன்சியல் ஆர்டிகில்ஸ் வருவதைத்

தடுப்பதை நிறுத்த வேண்டும். அதில் தகராறு செய்யக் கூடாது. கிராம மக்களுக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்க பேர் பிரைஸ் ஷாப்கள் வேண்டும். 'வார் டைம்'ல் 1946ல் நான்கூட பேர் பிரைஸ் ஷாப்கள் வைத்து நடத்தியிருக்கிறேன். எனக்கு அனுபவம் கிடையாது. அப்போது எனக்கு 1 1/2 லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டது. அப்போது பேர் பிரைஸ் ஷாப்கள் இருந்ததால், கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களுக்கு வர முடிந்தது.

அடுத்து, குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் வரவேற்கத் தக்க விஷயம்.

அடுத்து, ஒரு விஷயம் பற்றிச் சொல்கிறேன். கேரளாவிலிருந்து இந்த மாநிலத்திற்குத் தண்ணீர் கொண்டுவருவது பற்றிச் சொல்கிறேன். திரு. காமராஜர் அவர்கள் காலத்திலேயிருந்தே இது குறித்து முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதுவரையில் அது முடியாமல் இருக்கிறது. அந்த நீரைக் கொண்டு வந்தால், கன்னியாகுமரி, நாகர்கோயில் போன்ற 4, 5 பகுதிகளுக்குத் தண்ணீர் வந்துவிடும். இந்த கேரளா முதலமைச்சர் திரு. நாயனாருடன் நமது முதலமைச்சர் அவர்களும் நட்பாக இருக்கிறார். நமது முதலமைச்சர் அவர்கள் பேசும்போது நாம் அண்ணன் தம்பிகளாக இருக்கிறோம் என்றார். அவர் நாம் தாயும் மகளும் போல இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, வீராணம் திட்டம் பற்றிச் சொல்கிறேன். அது ஒரு நல்ல திட்டம். அந்தத் திட்டத்தைத் திரும்பவும் எடுத்து நிறைவேற்ற வேண்டும். நாலு வருடத்தில் ஒரு வருடம் மழை பொய்த்து விடுகிறது. ஒரு வருடம் தண்ணீர் இருந்தால் ஒரு வருடம் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. நாம் வீராணம் திட்டத்தை நிறைவேற்றினால், அந்த நிலைமைகளை மாற்றிவிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

ஆகையால் காவிரி நீர்த் திட்டத்தை எத்தனை கோடி ரூபாயானாலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் ஆந்திராவோடு சிநேகபாவத்துடன் இருக்கிறோம். எனவே கிருஷ்ணா தண்ணீரையும் சென்னைக்குக் கொண்டுவர வேண்டும். நான் மேயராக இருந்தபோது ஸ்டீல் பைப் போடுவதற்கு ஏற்பாடு செய்தேன். அதற்கு 850 கோடி ரூபாயாகும். இரண்டு பைப்புகள் போட வேண்டும். தண்ணீரைத் திறந்த கால்வாயில் கொண்டு வருவதைவிட, மூடப்பட்ட கால்வாயில் கொண்டுவருவது நல்லது. நீர்ப் பாசனத்திற்காக பல அணைகளைக் கட்ட வேண்டும்.





மேலும் நிறைய தெர்மல் ஸ்டேஷன்களை நாம் அமைக்க வேண்டும். தெர்மல் ஸ்டேஷன்களை அதிகப்படுத்தினால்தான், நமது மாநிலத்திற்கு நல்லது. தொழிற்சாலைகளுக்கு நிரந்தரமாக மின் துண்டிப்பு கூடாதென்றால், நிறைய தெர்மல் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேட்டூரில் ஹைடல் பவர் ஸ்டேஷன் ஏற்படுத்தியபோதே, நமக்கு தெர்மல் ஸ்டேஷன்கள் தேவையென்று சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் கூறினார்கள். தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால் அது தேவை. இப்போது மத்திய அரசில் நிதியமைச்சராக திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இருப்பதால், நம்முடைய தொழிலமைச்சர் அவரிடம் சொன்னால், கண்டிப்பாக அவர்கள் உதவி செய்வார்கள். தெர்மல் பவர் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தாவிட்டால், பெரிய தொழிற்சாலைகளுக்குக் கவலையில்லை. சிறிய தொழில்கள்தான் பாதிக்கப்படும். எனவே தெர்மல் ஸ்டேஷன்களை ஏற்படுத்தினால்தான், சிறிய தொழில்களுக்கு மின்சாரம் கிடைக்கும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது பற்றி மகிழ்ச்சி. அது தமிழகத்திற்குப் பயன்படும். காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஏற்படுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதற்கும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் இயக்குநராக திரு. நாகசாமி இருக்கிறார். அந்தத் துறை முத்தமிழுக்கும் உபயோககரமாக இருக்கும். இயல், இசை, நாடகத்திற்கு உபயோகமாக இருக்கும்.

அடுத்து 'ரேபிட் டிரான்சிட் சிஸ்டம்', என்று சொல்லியிருக்கிறார்கள். சுமார் 60 கோடி ரூபாய் செலவில் சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் முனைக்கு பெரும்பகுதியினரைக் கொண்டு செல்ல திட்டமாகும் இது. திரு. தியாகராஜச் செட்டியார் கார்ப்பரேஷன் பிரசிடெண்ட்டாக 1920ல் இருந்தபோது, கூவத்தில் கடல் தண்ணீரை விட்டு, போட்விட ஒரு கோடி ரூபாய் அளவில் திட்டம் போட்டார்கள். இப்போது அந்தத் திட்டத்திற்கு 10, 15 கோடி ரூபாயாகும். 20, 30 பேர்கள் செல்லக்கூடிய அளவிற்கு 'போட்' விட்டால் நல்லது. அப்போது சென்னை நகரில் பயணிகள் வேகமாகச் செல்ல வசதி ஏற்படும். டிராம்கள் இப்போது இல்லை. பஸ்கள்தான் இருக்கின்றன. எவ்வளவு பஸ்களை விட்டாலும் போதவில்லை. ஜனத்தொகை அதிகமாகி விட்டது. எனவே நகரத்தை மேம்படுத்த ரேபிட் டிரான்சிட் சிஸ்டத்தோடு கூவம் ஆற்றிலும் 'போட்' விட வேண்டும்.

உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடந்தபோது காவல் துறையினர் செய்த தொண்டினைப் பாராட்ட வேண்டும். அவ்வளவு கும்பலையும் நல்ல முறையில் சமாளித்தார்கள், அதற்காக காவல் துறையையே பாராட்ட

வேண்டும். நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் இருந்தும் உபயோகமில்லை. ஜீப் கொடுத்தால் நல்லது. அப்போது திருட்டே நடக்காது. அவர்கள் அவ்வப்போது உடனடியாகச் சென்று பார்க்க வசதியாக இருக்கும். ஒவ்வொரு டெபுடி சூப்பரிண்டுக்கும் 3 வேன்கள் இருக்க வேண்டும். ஒன்று அவருக்கும், இரண்டாவது துறை வேலைகளுக்கும் வேண்டும். பொதுவாக ஊரில் திருட்டுக்கள் நிறைய நடக்காமல் இருக்க, போலீஸ் நிலையங்களுக்கு உபயோககரமாக இருக்க ஜீப் தேவை. ஆளுநர் உரையில் நிறைய திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலமைச்சரவர்களுடைய முயற்சியாலும், மற்ற அமைச்சர்களுடைய முயற்சியாலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட அளவு ரூ. 3,150 கோடியென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஏற்பாட்டையும் பாராட்டி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி, உரையைத் துவக்குகிறேன்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடந்தது மிகச் சிறப்பானது. அதில் இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கலந்துகொண்டு பேருரையாற்றியது மிகச் சிறப்பானது. அந்தப் பேருரையில் அவர்கள் இந்தியை தாய் மொழியாகக் கொள்ளாத மக்கள்மீது வலுக்கட்டாயமாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்று உறுதியளித்தது தமிழ் மக்களுக்கு, பொங்கலுக்கு இனிப்பான சர்க்கரைப் பொங்கல் அளித்ததாக அமைந்தது. தமிழ் மாநாடு நடத்த வேண்டியதுதான். ஆனால் அதே நேரத்தில் இம்மா நாட்டிற்குப் பல கோடி ரூபாய் செலவு செய்தது மிக வேதனை தருவதாக இருக்கிறது. பொங்கல் திருநாளில் 13,000 குடும்பங்கள், பல ஆண்டுகளாக மகிழ்ச்சியாகப் பொங்கல் கொண்டாடியவர்கள், வீட்டிலே இந்த ஆண்டு சர்க்கரைப் பொங்கல் இல்லை, பால் பொங்கவில்லை, குழந்தைகளுக்குப் புத்தாடை இல்லை. அதற்குப் பதில் அவர்கள் உள்ளங்கள் பொங்கியது. 13,000 குடும்பங்களுக்கு பொங்கல் இல்லை. ஆனால் மாநாட்டின் பெயரால் பல கோடி ரூபாய் விரயமாக்கப்பட்டது. பல கோடி ரூபாய் செலவு செய்வதற்கு முன்பே இந்த அவையில் அனுமதி பெற்றிருந்தால், நலமாக இருந்திருக்கும்.







[illegible] இடமில்லை. [illegible] [illegible] [illegible] பயிர்கள் நாசமடைந்தன. தண்ணீரைத் தேக்கி [illegible] [illegible] டக்கும்போது தண்ணீரை விட்டு, [illegible] [illegible] ருப்பதுபோல ஒரு காட்சியை உருவாக்கினார்கள்.

தமிழ் நாட்டின் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு [illegible] 3,150 கோடி ரூபாய் என்று நிர்ணயித்ததை [illegible] அமைச்சரும் [illegible], மத்திய அமைச்சர்களுக்கும் [illegible] வேற்கிறேன். வருங்காலத்திலும் முதலமைச்சரும், [illegible] தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவைகளுக்கு முயற்சியைச் செய்வார்களென்று நம்புகிறேன்.

விலைவாசி ஏறுமுகத்தைப் பார்க்கும்போது, இதை எப்படி கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 130 ரூபாயும், கரும்புக்கு ஒரு டன்னுக்கு 200 ரூபாயும் விலை நிர்ணயிக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துவதைவிட்டு, மகாராட்டிரா மாநிலத்தில் கொடுப்பதைப்போல் சப்போர்ட் பிரைஸ் கொடுக்க வேண்டும். மின் கட்டணங்களைத் தவணை முறையில் கட்டுவதற்கு, அதாவது ஒவ்வொரு மாதமும் நடப்பு மாத மின் கட்டணத்தையும், பழைய நிலுவையில் ஒரு மாதக் கட்டணத்தையும் வசூல் செய்யும் 1 பிளஸ் 1 என்னும் ஏற்பாட்டை வரவேற்க வேண்டியதுதான். உழவர்களில் ஒரு சங்கத்தினர் இந்த எதிர்காலச் [illegible] நகரங்களுக்கு வர வேண்டிய அத்தியாவசியப் பண்டங்களான பால், உணவுப் பொருட்கள் ஆகியவற்றைப் பாழ்படுத்துவது, தடுப்பது ஆகிய காரியங்கள் சமுதாயத்திற்கே தீங்கு விளைவிப்பதாகும். உழவர் சங்கத்தின் ஒரு தலைவர் "நீங்கள் அவசரப்பட்டு வரி கட்டிவிட்டீர்கள், நீங்கள் கட்டாதிருந்தால், மத்திய அரசும், மாநில அரசும் உங்கள் காலில் வந்து விழுந்திருக்கும்" என்று பேசியிருந்தார், அப்படிப் பேசியிருந்ததைப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படிப் பேசியிருப்பதைப் அவர்மீது ஏன் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் அவசியம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,023 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

(பிற்பகல் 12-50)

மின்சார வாரியத்தில் பல கோடி ரூபாய் வீண் விரயமாக்கப்படுகிறது. நிர்வாகச் சீர்கேடு அதிகமாக இருக்கிறது. இது குறித்து அடுத்து [illegible] [illegible] தெரிவிக்க [illegible] கிறேன்.

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1981 ஜனவரி 24

பக்கிங்காம்-கர்நாட்டிக் ஆலை தற்போது மூடப்பட்டிருப்பது நம் முன்
உள்ள பெரிய பிரச்சினை. அது 13 ஆயிரம் குடும்பங்களின் சம்பந்தப்பட்ட
பிரச்சினை. அந்த ஆலை மூடப்படுவதற்கு முன்னால் அந்த ஆலையின்
தொழிற் சங்கத் தலைவர்களும் நிர்வாகமும் அரசிடம் கலந்து பேசினார்கள்
முதலமைச்சர் அதற்குப் பிறகு ஒரு கமிட்டி ஏற்படுத்தி அந்தக் கமிட்டி
ரிப்போர்ட்டு கொடுத்தது. அந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட்டில் மூன்று
ஆயிரம் தொழிலாளர்களின் ஆட்குறைப்பு பற்றிச் சொல்லியிருக்கிறது. அந்த
ரிப்போர்ட் மீதுதான் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத்
தெளிவாகச் சொல்லியிருக்கிறது. முதலமைச்சர் அவசரப்பட்டு கமிட்டியை
அமைத்துவிட்டு இப்போது மத்திய அரசு மீது திசை திருப்புவது நியாய
மில்லை. அந்த ஆலையின் தொழிற் சங்கத் தலைவர் மத்திய அரசு செய்ய
வேண்டுமென்று சொல்கிறவர். என் மாநில அரசு செய்ய வேண்டுமென்று
சொல்லவில்லை. எப்படி இருந்தாலும், அந்தக் கமிட்டியினுடைய
ரிப்போர்ட்டை அவைமுன் வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். பல கோடி
ரூபாய் உலகத் தமிழ் மாநாட்டிற்குச் செலவு செய்த அரசு சில கோடி ரூபாய்
இதற்கு முதலீடு செய்து 13,000 குடும்பங்களின் கண்ணீரைத் துடைத்திரு
கலாம். முதலமைச்சர் பல்லாயிரம் தொழிலாளர் முன்பு வாக்குறுதியை
அளித்தார். அந்த வாக்குறுதியைக் காப்பாற்றும்படியும் மீண்டும் ஆலையைத்
திறந்து 13 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்றுப்
கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு ஏற்கெனவே 2½ ஆண்டுக் காலமாகவும் இப்போது ஒரு
ஆண்டுக் காலமாகவும் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவோம்
என்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. இந்த அரசு சொல்லும் வாக்
குறுதியை மக்கள் நம்ப மாட்டார்கள். நகரங்களில் நகராட்சிகள் செயல்பட
வில்லை. நகரத்தில் பிரதான ரோடுகளில்தான் விளக்குகள் எரிகின்றன
ரோடுகளும் சுத்தமாக இருக்கின்றன. மற்ற இடங்களின் நிலைமை மிகவும்
மோசமாக இருக்கிறது.

சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை மிக மோசமான நிலையில்
இருக்கிறது. சாக்கடைக் கழிவு நீரும் குடிநீரும் கலந்து வருகிறது என்று
நிபுணர்கள் அறிவித்த பிறகும் அதே தண்ணீரை மக்களுக்குக் கொடுப்பது
அநீதி. 50, 60 வருடங்களுக்கு முன்னால் போடப்பட்ட தண்ணீர்க்
குழாய்கள், கழிவு நீர்க் குழாய்கள் பழுதடைந்திருப்பதால், இரு நீரையும்
கலந்து குடிக்கக்கூடிய அவல நிலை சென்னை நகர மக்களுக்கு ஏற்பட்டிருக்
கிறது. இதற்கு உடனடி நடவடிக்கை தேவை என்பதை நான் வலியுறுத்திக்
கூறிக்கொள்கிறேன்.



1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: குடி நீரும் சாக்கடை நீரும்
ஒன்றாக வருகிறது என்று ஒரு வார இதழில் எழுதியிருந்தார்கள். அதற்கு
அதே வார இதழில் என்ஜினியர்கள் அப்படி இல்லை என்று மறுத்து அறிக்கை
வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அதைப் படித்திருப்பார்
என்று கருதுகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: அதற்குப் பிறகு தான் நிபுணர்கள் தண்ணீருடன்
மருந்துகளைக் கலந்து விட்டார்கள் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் வருகிறது என்று கூறி, பல
கோடி ரூபாய் செலவிடப்பட்டும், இன்னும் வீராணத்திலிருந்து தண்ணீர்
வரவில்லை. இப்பொழுது திருச்சி மாவட்டத்தில் கட்டளைப் பொறி மதகின்
கீழ், காவிரி ஆற்றிலிருந்து குடிநீருக்கான தண்ணீர் வருகிறது. இத்திட்டத்
திற்கு ரூபாய் 459 கோடி வரை செலவாகும் என்று தலைமைப் பொறியாளர்
கூறியுள்ளார். வீராணத்திலிருந்தும் சென்னைக்குக் குடிநீர் வரும் என்று
திட்டம் கொடுத்ததும் அன்று இருந்த தலைமைப் பொறியாளர். இன்றைக்கு
இந்தத் தலைமைப் பொறியாளரின் யோசனையைக் கேட்டு மக்கள் வரிப்பணம்
ரூபாய் 459 கோடியை வீணாக்காமல் பல மாநில நிபுணர்களைக் கலந்து முடிவு
எடுத்த பிறகு இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளிப்பது நல்லது என்பதைக்
கூறிக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்கைப் பற்றி உறுப்பினர்கள் மனம் திறந்து பேச வேண்டும்,
கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இதில்
உள்ள உண்மைகளைச் சொல்லும்போது அரசுக்கும் நல்லது நாட்டு மக்க
ளுக்கும் நல்லது. தமிழ் நாட்டில் மதுவிலக்கு என்பது ஏட்டில்தான் உள்ளது,
ஆனால் நடைமுறையில் இல்லை என்பது இந்த அரசுக்கு நன்றாகத் தெரிந்
திருந்தும், உறுப்பினர்களுடைய கருத்தைக் கேட்பது விந்தையாக இருக்
கிறது. கள்ளச் சாராய சாம்ராஜ்யம் தமிழ் நாட்டில் பகிரங்கமாக நடக்
கிறது. இல்லையென்று சொல்லுவதற்கு இந்த அரசுக்கு நியாயம் இல்லை.
தினமும் ஏழையெளிய பாட்டாளி மக்கள் கள்ளச் சாராயத்தையும் விஷச்
சாராயத்தையும் குடித்து செத்து மடிகிறார்களே, பெண்கள் தாலியிழந்து
பொட்டிழந்து காட்சியளிக்கிறார்களே, அந்த அபலைத் தாய்க் குலத்தின்மீது
முதலமைச்சர் கருணை காட்ட வேண்டும். இதுகுறித்து ஒரு நல்ல முடி
வெடுக்க வேண்டியவர் முதலமைச்சர். அரசுக்கு வருடத்திற்கு வர வேண்டிய
200 கோடி ரூபாய் தனிப்பட்டவர்களுக்கும், யார் யாருக்கோ போய்ச் சேரு
கிறது.

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1981 ஜனவரி 24

அவசரச் சட்டம் சமுதாய விரோதிகள்மீது பிரயோகிக்கப்படவில்லை. சமுதாய விரோதிகள் நாட்டிலே பகிரங்கமாக உலாவுகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தமிழ்நாடு போலீஸ் ஸ்காட்லாந்து போலீசுக்கு அடுத்தபடியாகக் கருதப்படுகிறது. ஆனால் சட்டம் ஒழுங்கு குற்ற நிகழ்வு திருப்திகரமாக உள்ளது என்று சொல்லுவதில் நியாயமில்லை. நாட்டு மக்களைத் திசை திருப்புவதாகும். பட்டப்பகலில் கொலை, பெண்களிடம் கொள்ளை நடைபெறுகிறது. குறிப்பாக தியாகராய நகரில் வீட்டினுள் புகுந்து கத்தியைக் காட்டி பெண்களிடம் கொள்ளை நடைபெற்றிருக்கிறது. மைலாப்பூரில் இசபெல்லா ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் நர்ஸிடம் வீட்டிற்குப் போகும் வழியில் கொள்ளை நடைபெற்றிருக்கிறது. அசோக் நகரில் வீட்டுக்குள் புகுந்து கத்தியைக் காட்டி பெண்ணிடம் கொள்ளை நடைபெற்றிருக்கிறது. இவை சென்னையில் நான்கு நாள் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள். ஜனவரி மாதத்திலிருந்து கணக்கெடுத்தால் பல கொலை, கொள்ளைகள் நடந்திருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஒரு காலத்தில் தமிழ்நாடு போலீஸ் குற்றம் கண்டுபிடிப்பதில் ஸ்காட்லாந்து போலீசுக்கு அடுத்தபடியாக உள்ளது என்று போற்றப்பட்டது. ஆனால் இன்றோ செயலிழந்து, திறமையிழந்து, குற்றங்கள் பெருகுவதற்குக் காரணமாக உள்ள போலீசாரைப் பார்க்கும் போது, இதற்கெல்லாம் காரணம் அரசிடம் மதுவிலக்கைப் பொறுத்தவரையில் தெளிவான கொள்கை இல்லாதது என்று தெரிகிறது. நாட்டு மக்களுக்கு இன்றைய தினம் பாதுகாப்பு இல்லை. பெண்கள் வெளியே செல்வதற்கும், வீட்டில் தனியாக இருப்பதற்கும் அஞ்சுகிற நிலைமை வந்து விட்டது. இந்த அவல நிலைமை தொடர்ந்து நீடிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் விலையில் இன்றியமையாத பொருட்களை போலீசாருக்கு வழங்குவது போல் இதர அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும்.

சமுதாயத்தில் நலிந்த ஏழையெளிய பிரிவினர்மீது, குறிப்பாக ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு இழைக்கப்படும் கொடுமைகளை உறுதியோடு ஒடுக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படும் கொடுமைகளைத் தடுக்க உறுதியுடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் அலெக்சாந்தபுரத்தில் சாதிச் சண்டையில் ஓட்டி குலசேகரம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ற ஆதி திராவிடத் தலைவர் திரு. ஏ. ஜே. ராஜ் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடிக்கப்பட்டதன் காரணமாக போலீஸ் ஸ்டேஷனிலிருந்து ஆஸ்பத்திரிக்குப்



1981 ஜனவரி 24] [திரு. ஏ. ஜே. தாஸ்]

போகும் வழியில் மரணம் அடைந்தார். பொதுச் சேவையில் ஈடுபட்ட தாழ்த்தப்பட்டோர் தலைவர் கொல்லப்பட்டார் என்ற தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டென்னிசும், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் திரு. மோசஸ் அவர்களும் முதலமைச்சருக்கு உடனடியாகக் கொடுத்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு, அந்த ஆதி திராவிட மகனுக்கு ஏற்பட்ட அநீதியைப் போக்க வேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இன்றைக்கு ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்து, மாணவர்கள் துன்பப்படுவதாக ஒரு சுற்றறிக்கை அங்கத்தினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 'ஹிந்து' பத்திரிகையிலே போடப்பட்டிருந்த ஒரு சின்ன நிகழ்ச்சியை நான் படிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

"It is an open secret that many among the staff members are engaged in a variety of business from running book-stalls and shoe-marts to money-lending not only in Chidambaram but in nearby places, and have very little time to look after the students. They are keen to see the University closed for as long as possible so that they can devote more time to their 'side-business" with the salary assured.

Another reason why frequently disturbances are welcome to some of the teachers is that there is good money in private coaching, and when there are fewer classes the students are driven to the necessity of taking tuition."

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களின் அனுமதியுடன்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிக்கிறாரா இல்லையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ் : தலைவரின் அனுமதியை முன்பே வாங்கிவிட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பத்திரிக்கையிலிருந்து படிப்பதாக இருந்தால் தலைவரின் முன் அனுமதி வேண்டும். அதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். பத்திரிகையிலிருந்து படிக்கிறேன் என்று சொன்னதால்தான் இந்தப் பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுந்தது.

திரு. ஏ. ஜே. தாஸ் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் இது சுற்றறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் நாம் அனைவரும் அனுப்பியிருக்கிறது. அங்குள்ள நிலைமைகளை

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1981 ஜனவரி 24

அறிவோம். மாணவர்களுடைய முன்னேற்றத்திற்காக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுத்து மாணவர்களைக் காப்பாற்ற வேண்டும். தோழமை உணர்வோடு ஒத்துழைப்பு வேண்டும் என்பது நியாயம். ஆனால், அரசு எடுக்கும் நல்ல காரியங்களுக்கு ஆதரவு அளிப்போம். தவறான காரியங்களைக் கண்டிப்போம் என்பது காங்கிரஸ் கட்சியின் நோக்கமேயொழிய எதிர்த்துக்கொண்டிருப்பது எங்களுடைய நோக்கம் அல்ல என்று சொல்லி தவறுகளைத் திருத்திக்கொள்வதிலே கௌரவப் பிரச்சினைகளைப் பார்க்காமல் நாட்டு மக்களின் நன்மைக்காகப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 27—1—1981, செவ்வாய்க்கிழமை, காலை 10-30 மணிக்கு கூடும்.

(பிற்பகல் 1-05)

பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டது.

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

152. Notification issued with G.O. Ms. No. 2600, Revenue, dated the 8th November 1980 in regard to framing of the Tamil Nadu Abolition of posts of Part-time Village Officers Rules, [Laid on the table of the House under section 12 (3) of the Tamil Nadu Abolition of posts of Part-time Village Officers Ordinance, 1980 (Tamil Nadu Ordinance No. 10 of 1980)].

153. Notification issued with G.O. Ms. No. 2645, Revenue, dated the 27th November 1980 in regard to amendment to the Tamil Nadu Abolition of posts of Part-time Village Officers Rules published with Revenue Department Notification No. S.R.O. B 570(a)|80, dated 18th November 1980, at pages 1-4 in Part III—Section 1(b) of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 20th November 1980. [Laid on the table of the House under section 12(3) of the Tamil Nadu Abolition of posts of Part-time Village Officers Ordinance, 1980 (Tamil Nadu Ordinance No. 10 of 1980).]

154. Notification issued with G.O. Ms. No. 2747, Revenue, dated the 12th December 1980 in regard to amendment to the Tamil Nadu Abolition of posts of Part-time Village Officers Rules published with Revenue Department Notification



1981 ஜனவரி 24]

No. S.R.O.-B 507(a)|80, dated 18th November 1980, on page 1-4 in Part III—Section 1(b) of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 20th November 1980 and No. S.R.O. B-574(a)|80, dated the 1st December 1980 on pages 1-2 in Part III—Section 1 (b) of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 1st December 1980. [Laid on the table of the House under section 12(3) of the Tamil Nadu Abolition of posts of Part-time Village Officers Ordinance, 1980. (Tamil Nadu Ordinance No. 10 of 1980)].

155. Notification issued with G.O. Ms. No. 1371, Education, dated the 22nd July 1980 in regard to an amendment to the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Rules, 1974. [Laid on the table of the House under section 57(2) of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 (Tamil Nadu Act 29 of 1974)].

156. Notification issued with G.O. Ms. No. 1162, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 25th November 1980 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 in Volume-I of the Tamil Nadu Services Manual, 1977. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

*B. Reports, Notifications and other Papers.*

## இணைப்பு.

(128 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 14-க்கான விடையைக் காண்க.)

(அ) தமிழ்நாடு அரசு விவசாயத் துறையினரால் நடத்தப்படும் விவசாயப் பள்ளிகளில், பயிற்சி பெற்றவர்களில், மாவட்ட வாரியாக, தமிழ் நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் செல்லுபடியாகும் பதிவேட்டில் உள்ளோரின் எண்ணிக்கை 30—6—1980 அன்றைய நிலவரப்படி பின்வருமாறு :

| வரிசை எண் | மாவட்டம் | வேலைவாய்ப்பு செல்லுபடியாகும் பதிவேட்டில் உள்ளோரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | சென்னை | 26 |
| 2. | செங்கல்பட்டு | 58 |
| 3. | வட ஆற்காடு | 87 |
| 4. | தென் ஆற்காடு | 16 |
| 5. | சேலம் | 49 |
| 6. | தருமபுரி | 59 |
| 7. | பெரியார் | 30 |
| 8. | கோயம்புத்தூர் | 11 |
| 9. | நீலகிரி | 23 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 42 |
| 11. | தஞ்சாவூர் | 83 |
| 12. | புதுக்கோட்டை | 102 |
| 13. | மதுரை | 12 |
| 14. | ராமநாதபுரம் | 23 |
| 15. | திருநெல்வேலி | 42 |
| 16. | கன்னியாகுமரி | 140 |
| | மொத்தம் | 818 |



| | | |
|---|---|---|
| (இ) | 1974—75 | 100 % |
| | 1975—76 | 22.5 % |
| | 1976—77 | 8 % |

1977 ஆம் ஆண்டிலிருந்து, புதிய செயல்விளக்கப் பதவிகள் ஏற்படாததினால், வேளாண் வேளாண்மை பயிற்சிப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் எவருக்கும் வேளாண்மைத்துறை இயக்குநர் வேலை கொடுக்கவில்லை. ஆயினும், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 1977 ஆம் ஆண்டிலிருந்து 31—7—1980 முடிய 20 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம்.

(எ) முறையிட்டு வந்ததும், மேற்படி சங்கங்களுக்கு அவர்களது உறுப்பினர்களை, அருகாமையில் உள்ள வேலைவாய்ப்பு நிறுவனத்தில் அவர்களது பெயர்களைப் பதிவு செய்து கொண்டு புதுப்பித்து வரும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

194-296-வரையில்

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1981 ஜனவரி 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-30 மணியளவில், மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கிராமப்புறங்களில் பணிபுரிவோருக்கு வீட்டு வாடகைப் படி

*31 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) கிராமப்புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்கள் அனைவருக்கும் வீட்டு வாடகைப் படி தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) விடை எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் பணியாற்றுகிற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் கிராமப்புறங்களிலேயே நிலையாகத் தங்கி, தங்கள் பணிகளைச் செம்மையாகச் செய்ய வேண்டியிருக்கிறது. தற்போது நகர்ப்புறங்களில் கொடுக்க வேண்டிய அளவுக்கே கிராமப்புறங்களிலும் அவர்கள் வீட்டு வாடகை கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கிராமப்புறங்களிலேயே அவர்கள் நிலையாகத் தங்கி பணியாற்றுவதன் மூலம் அவர்கள் கிராமப்புற வளர்ச்சிக்கு உதவ முடியும். எனவே தற்போதைய வாடகைப் பளுவை ஈடுகட்டும் வகையில் நகர்ப்புறங்களில் பணியாற்றுவோருக்கு அளிக்கப்படும் வகையிலேயே அவர்களும் வாடகைப் படி கேட்கிறார்கள். ஆகவே, அரசு தற்போது இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலாவது அவர்களின் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மிகவும் வசதிபடைத்த மத்திய அரசினுடைய வாடகைப்படித் திட்டங்களை விட மிகவும் வசதிக் குறைவான தமிழக அரசின் வாடகைப்படித் திட்டம் மிகவும் தாராளமான வகையில்தான் இருக்கிறது. இந்திய அரசின் விதிகளின் படி சில மாநகரங்களின் நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளுக்கும், ஏனைய நகராட்சிகளின் நகராட்சி எல்லைகளிலிருந்து 8 கிலோ மீட்டருக்குள்ளும் உள்ள இடங்களுக்கு மட்டும் வீட்டு வாடகைப் படி அனுமதிக்கப்படுகிறது. வீட்டு வாடகைப் படி வழங்குவதில் மாநில அரசு பின்பற்றுகிற இந்தத் திட்டத்தின்படி சென்னை மாநகரைச் சுற்றிலும் 32 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள எல்லையோரப் பகுதிகளிலும், கோயம்புத்தூர் மதுரையைச் சுற்றிலும் 16 கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளும் அமைந்துள்ள எல்லையோரப் பகுதிகளிலும் உள்ள அலுவலகங்களிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் வீட்டு வாடகைப் படி வழங்கப்படுகிறது.

இந்திய அரசின் விதிகளின்படி, அடிப்படைச் சம்பளத்தில் 7½ சதவீதம் 'பி' வகை நகரங்கள் வீட்டு வாடகைப் படி பெறுவதற்குத் தகுதியுடையன வாகும். மாநில அரசின் விதிகளின்படி 8 சதவீதம் வீட்டு வாடகைப் படி பெறுவதற்குத் தகுதியுடையனவாகும். இந்திய அரசின் திட்டத்தின் கீழ் வீட்டு வாடகைப் படி பெறத் தகுதியில்லாத பல இடங்கள் அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத்தில் மாநில அரசின் வீட்டு வாடகை பெறும் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. வீட்டு வாடகை குறித்த செலவு, அனைத்திந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டெண்ணை நிர்ணயத்தில் ஒரு கூறாக உள்ளது. எனவே, மாநிலத்தில் பொதுவாக வாடகை உயர்ந்துள்ள வகையில், அனைத்திந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 320 உடன் இணைக்கப்பட்டுள்ள பொதுவான சம்பள வீத அமைப்பின் கீழ் நாம் வாடகைப் படியை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

மேலும் வீட்டு வாடகைப் படி வீதங்களைப் பெறுவதற்குள்ள தகுதியை நிர்ணயிப்பதற்கு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டிருப்பது போதுமானது அல்ல என்று மத்திய அரசு 3 வது சம்பளக் குழு தெரிவித்திருக்கிறது. ஆனால் மாநில அரசு சம்பளக் குழு இது குறித்து சரியான வழிமுறையை வகுக்க மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு



மாநகரங்களும், நகரங்களும் வகைப்படுத்தப்படுவதை விட மிகச் சிறந்த வழிமுறை வேறெதுவுமில்லை என்று குறிப்பிட்டதால், அந்த முறையை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

வீட்டு வாடகைப் படி அனுமதிக்கப்படாத கிராமப் பகுதிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் உள்பட பணியாளர்கள் அனைவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 என்ற வீதத்தில் "கிராமப் பணி ஊக்கப்படி" என்று அழைக்கப்படும் சிறப்புப் படி வழங்க அனுமதித்து நிதித் துறை 25—10—1979 ஆம் நாளிட்ட தனது அரசாணையில் உத்தரவிட்டுள்ளது. எனவே இப்படிப்பட்ட சலுகைகளைப் பார்க்கிறபோது கிராமப்புறங்களில் பணியாற்றுவோருக்கு வீட்டு வாடகைப்படி வழங்குவதற்குத் தேவையான சூழ்நிலை ஏதுமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் தரப்படும் சலுகைகள் அனைத்தையும் இங்கே குறிப்பிட்டார்கள். அவை அனைத்தும் உண்மை என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவர்களுக்குத் தேவையான வீட்டு வாடகைப்படி தற்போது நகர்ப்புறத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கு அளிக்கப்படும் வீதத்தில் கிராமப்புறங்களில் பணியாற்றுகிற அலுவலர்களுக்குக் கொடுக்காவிட்டாலும், கிராமப்புற வாழ்க்கைக் குறியீட்டு எண்ணுக்குத் தகுந்தாற்போல், மற்றும் விலைவாசி ஏற்றம், வாழ்க்கைச் செலவு ஆகியவற்றிற்கு ஏற்றவாறு வாடகைப்படி நிர்ணயிப்பதன் மூலம் அவர்கள் கிராமப்புறங்களிலேயே தங்கியிருந்து, அந்தப் பகுதி மக்களோடு ஒன்றியிருந்து வாழ்ந்து, நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்ற எண்ணத்தில்தான் நாங்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பி வருகிறோம். எனவே எதிர்காலத்திலாவது இந்தக் கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலனை செய்யுமா என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாச் சூழ்நிலைகளையும் கணக்கில் கொண்டுதான் ஊதியக் குழு ஒரளவுக்கு அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பரிந்துரை செய்து அதனை நாம் செயல் படுத்திக் கொண்டு வருகிறோம். இதுபற்றி மீண்டும் ஆராய வேண்டுமென்றால், அடுத்த ஊதியக் குழுதான் உரிய வகையில் ஆராய்ந்து தக்க முடிவை எடுக்க முடியும்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, மத்திய அரசு நகரத்தை மையமாக வைத்து வீட்டு வாடகைப்படியைக் கொடுப்பதாகவும் தமிழக அரசு நகரத்தைச் சுற்றியுள்ள

பகுதிகளுக்கு, சற்று கூடுதலாக விரிவடைந்த பகுதிகளுக்கும் உரிய வகையில் வீட்டு வாடகைப்படி கொடுப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு மற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்கப்படியாக ரூ. 10 கொடுப்பதாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால் பொதுவாக மக்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், கிராமப்புற மக்களிடமிருந்து வரி வசூல் செய்து அந்தப் பணத்தை நகர்ப்புறத்தில் இருப்பவர்களுக்காகச் செலவு செய்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை நீங்கும் வகையிலும், கிராமப்புறங்கள் வளர்ச்சியடைந்தால்தான் நாட்டு முன்னேற்றத்திற்கு நல்லது என்பதாலும், கிராமப்புறங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு வீட்டு வாடகைப்படி என்று இப்போது தனியாகக் கொடுக்காவிட்டாலும், ஊக்கப்படியாகத் தற்போது அளிக்கப்பட்டுவரும் தொகையை ரூ. 10 லிருந்து ரூ. 20 ஆக உயர்த்திக் கொடுக்கும் வகையில் அரசு சிந்தனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தனியாகத்தான் ஆராய வேண்டும். நிதிநிலை வசதி மற்ற வசதிகள் ஆகிய வற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் நாம் எதையும் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். கிராமங்களின் நிலை உயர வேண்டும், கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றுதான் பல்வேறு திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தை 3 அல்லது 4 ஆண்டுக் காலத்தில் மேற்கொண்டு நிறைவேற்றி முடிக்க இருக்கிறோம். அதே நோக்கில் நகர்ப்புறங்களும் புறக்கணிக்கப்படக் கூடாது. நகர மக்களுக்குச் செய்கிற அனைத்து வசதிகளும் அவர்களுக்கு மட்டுமே உரியவை அல்ல. அந்த வசதிகள் கிராமத்திலிருந்து வருகிறவர்களுக்கும் சேர்த்துதான் செய்யப்படுகின்றன. எனவே கிராமங்கள் புறக்கணிக்கப்படுகிற நிலை இல்லை. நிதி நிலைக்கு ஏற்பவே நாம் யாருக்கும் வசதி வாய்ப்புகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. எனினும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட யோசனை பின்னாலே ஆராயப்பட வேண்டிய ஒன்று என்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளிலும், என்.ஜி.ஓ. காலனிகளிலும், குடியிருக்கும் அரசு ஊழியர்களிடமிருந்து சம்பளத்திலேயே 8 சதவீத வீட்டு வாடகைப் படி பிடித்தம் செய்து கொள்ளப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் மேற்கொண்டும் அவர்களின் ஊதியத்திலிருந்து 10 சதவீதம் வாடகையாகப் பிடித்தம் செய்து கொள்ளப்படு



வதால் அரசு ஊழியர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்ற புகார்கள் என்.ஜி.ஓ. யூனியனிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றனவா? பெறப்பட்டிருந்தால் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விளக்கக் குறிப்பு என்னிடம் தற்போது இல்லை. எனவே இந்தப் பொருள் குறித்துத் தனியாகக் கேள்வி கேட்டால், அதற்குரிய முழு விவரங்களையும் சேகரித்துத் தர முடியும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நாங்கள் கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பினாலும், அதற்குப் பதிலாக கிராம ஊக்கப் படியாக ரூபாய் 10 மட்டுமே அரசு அளித்து வருகிறது. எனவே நகர்ப்புறங்களில் பணியாற்றுகிறவர்களுக்குத் தரப்படுகிற அளவுக்காவது அந்த ஊக்கப் படியை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இது நிதிநிலை, மற்ற வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் ஆராயப்பட வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : வீட்டு வாடகைப் படி இல்லாத இடங்களில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு கிராம ஊக்கப்படியாக தற்போது ரூபாய் 10 மாதந்தோறும் வழங்கப்படுகிறது. இதையும் இந்த அரசுதான் கொடுக்கிறது. எனவே இந்தத் தொகையைக் குறைந்தபட்சம் ரூபாய் 25 ஆக உயர்த்திக் கொடுக்க முன்வருமா? காரணம் தற்போது எந்த ஊரிலும் ரூபாய் 25-க்குக் குறைவாக யாரும் வீட்டை வாடகைக்கு விடுவதில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதெல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

## ரெட்டி சாதிப்பிரிவு

*32 வினா.—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிற்பட்டோர் (Backward Classes) பட்டியலில் உள்ள "ரெட்டி (கஞ்சம்)" என்ற சாதிப் பிரிவை மட்டும் இல்லாமல், "ரெட்டி" சாதியில் எல்லாப் பிரிவையும் உள்ளடக்கி (ரெட்டி எல்லாப் பிரிவும்) பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1981 ஜனவரி 28

(இ) இல்லையெனில், இந்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) பிற்பட்டோர் பட்டியலில் கண்டுள்ள சாதி மற்றும் இனத்தவர்கள் மற்றும் பிற்பட்டோர் அல்லது மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென கோரியுள்ள சாதி/இனத்தவர்கள் ஆகியோரின் கல்வி சமூக மற்றும் இதர நிலை பற்றிய புள்ளி விவரங்களைக் கண்டறிந்து அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பி வைக்குமாறு பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரை தனி அதிகாரியாகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மதுரை, இராமநாதபுரம், நெல்லை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வாழும் ரெட்டி இனத்தைச் சேர்ந்த அனைவரையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென வந்த மனு மேற்கண்ட தனி அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் தக்க முடிவெடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : இந்தச் சமுதாயத்தைப் பொறுத்த வரையில், ஒரு காலத்தில் நிறைய செல்வாக்குப் பெற்றவர்களாகவும், செல்வந்தர்களாகவும் இருந்தார்கள் என்பது உண்மைதான். தற்கால நிலைமையில் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் முன்னேற்றம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று பொதுவாகத் தெரிய வருகிறது. ஆகவே அரசாங்கம் அவற்றைப் பரிசீலித்து அவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி, பல வகுப்பினர் தங்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும், பிற்பட்டோர் பட்டியலில் உள்ளவர்கள் தங்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும், மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் உள்ளவர்கள் தங்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டிய பணி மத்திய அரசைச் சார்ந்தது. ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நமக்கு முழு புள்ளி விவரம் வந்த பிறகுதான் இதை ஆராய வேண்டும். இந்த ஆண்டு சென்சஸ் எடுக்கும் போது, இந்த விவரங்களையெல்லாம் சேர்த்து எடுத்து நமக்குத் தர வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினோம். இந்தப் புள்ளிவிவரங்களை சென்சஸ் புள்ளிவிவரத்தோடு சேர்க்க இயலாது என்று மத்திய அரசு மறுப்புத் தெரிவித்திருக்கிறது. சென்சஸ் வந்த பிறகு, கல்வி நிலை, அவர்களுடைய வாழும் இடம், தகுதி போன்றவற்றைக் கண்டறிந்து பல இனங்களுடைய கோரிக்கைகளைப் பற்றியும் ஆராய வேண்டும்.



1981 ஜனவரி 28]

ரெட்டியார்களைப் பொறுத்த வரையில், பல்வேறு வகையான ரெட்டியார்கள் இருந்தாலும், "கஞ்சம்" என்ற பிரிவினை மட்டும் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்திலிருந்தே பிற்பட்டவர்கள் பட்டியலில் வைத்திருக்கிறார்கள். சட்டநாதன் தலைமையில் அமைந்த பிற்பட்டோர் நலக் குழு ரெட்டியார் சமூகத்தைப் பற்றி ஆராய்ந்து, குறிப்பாக "கஞ்சம்" பிரிவினைப் பிற்பட்டோர் பட்டியலில் வைக்கலாம் என்றும், மற்ற ரெட்டியார்களைப் பொறுத்த வரையில், அவர்கள் தமிழகம் முழுவதும் இருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதார வசதியையும் பார்க்கிறபோது, பிற்பட்டோர் பட்டியலில் வைக்க அவர்கள் தகுதி பெற்றவர்கள் அல்ல என்றும் புள்ளிவிவரம் தந்திருக்கிறது. ஆகவே ஏற்கனவே அமைக்கப்பட்ட குழு ஆராய்ந்து பார்த்து முடிவைத் தந்திருக்கிற காரணத்தால், எல்லா ரெட்டியார்களையும் பிற்பட்டோர் பட்டியலில் கொண்டு வருவது என்பது இப்போது இயலாத ஒன்றாக இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : ரெட்டியார் வகுப்பில் "கொண்டா ரெட்டி" என்று ஓர் இனம் இருக்கிறது. அவர்கள் மத்திய அரசின் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் வருகிறார்கள். தமிழ் நாட்டிலும் அவர்கள் இருக்கிறார்கள் என்று மத்திய அரசு கூறுகிறது. அப்படிப்பட்டவர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்களா, இல்லையா என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மலைவாழ் பகுதிகளில் இருக்கின்ற பலருக்கு "கொண்டா ரெட்டி" என்ற பெயர் இருக்கிறது. அவர்கள் அந்தப் பெயரில் வருகிறார்கள் என்றாலும், அவர்கள் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவதில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : வருமானத்தின் அடிப்படையிலே குறைந்த வருமானம் உள்ளவர்கள் பிற்பட்டோர் என இந்த அரசு முதலிலே கருதி அதற்காக ஒரு ஆணையையும் போட்டது. பின்னாலே அதை நீக்கிவிட்டு, பிற்பட்டோர் வகுப்பில் உள்ள எல்லோருக்கும் சலுகை வழங்கப்படும் என்று மாற்றப்பட்டது. இந்த மாறுதல் எதற்காகச் செய்யப்பட்டது ? முன்பு போல பிற்பட்டோர் வகுப்பில் உள்ளவர்களைக் குறைக்க அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, I think that there are 141 communities listed as Backward. May I know whether the Government have any proposal not to list the Backward Classes but to list only Forward Communities, in which case the Government will get only claim for exclusion from the Forward Communities list and not for inclusion in the Backward Communities list?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக ஒருவருக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட சலுகையை மறுப்பது என்பது இயலாத ஒன்று. மற்றவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகளை அளிப்பதுபற்றி வேண்டு மானால் யோசிக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் இரண்டு வகுப்பிலுமிருந்து பிற்படுத்தப்படுவதால், பிற்பட்டோர் பட்டியலை மறு பரிசீலனை செய்யும்போது, அவர்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை இரு தரப்பினரும் பிற்படுத்துவதால், அவர்களுடைய நிலைமை என்னவென்று கேட்டார்கள். உயர்ந்த வகுப்பினர் ஒருவரும் பிற்பட்ட வகுப்பினர் ஒருவரும் திருமணம் செய்துகொண்டாலும், அவர்களை என்ன செய்வது என்ற பிரச்சினை இருக்கிறது. இப்படிப்பட்ட கேள்விகளின் மூலமாக, பிரச்சினைகளை அதிகமாக்குவதைவிட நல்ல யோசனைகளைச் சொன்னால், உதவிகரமாக இருக்கும்.

## ரப்பர்.

*** 33 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் ரப்பர் மரங்கள் வளர்க்கப்படுகின்றன ?

(இ) ரப்பர் உற்பத்தியை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(உ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் மரங்கள் வளர்க்கப்படுகின்றன.



(இ) 1979-80 வரை தமிழ்நாடு வனத் துறையால் கன்னியாகுமரி மாவட்டத்தில், மொத்தம் 4,775 எக்டேர் பரப்பளவில் ரப்பர் பயிரிடப்படுகிறது. மேற்கொண்டு ரப்பர் பயிரிட தகுதியான வனப் பகுதிகள் இல்லாததால், மேற்கொண்டு ரப்பர் உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பு இல்லை.

(உ) கேள்வி எழவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த 4,775 எக்டேர் பரப்பு நிலத்தில் பயிரிடப்படும் இரப்பர் மரத்திலிருந்து என்னென்ன இரப்பர் பொருள்கள் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன ? அந்தப் பொருள்கள் நம்முடைய மாநிலத் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தப் படுகின்றனவா அல்லது வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இரப்பர் மூலப் பொருளிலிருந்து இரண்டு தொழிற்சாலைகளின் மூலமாக ஷீட் இரப்பராகவும் ஸ்கிராப் இரப்பராகவும் தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவில் எந்தப் பகுதியிலிருந்தும் வந்து மொத்தமாக ஏலத்தில் அதிகமான விலைக்குக் கேட்கிறவர்களுக்கு இது விற்கப்பட்டு வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக இரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்போது அங்கே இரப்பர் புராசெசிங் நிலையம் தான் உள்ளது. ஆகவே கூட்டுறவுத் துறையிலோ, பொதுத் துறையிலோ ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று சிறு தொழில் இரப்பர் உற்பத்தியாளர்களிடமிருந்து முறையீடு அரசுக்கு வந்துள்ளது. அதை அரசு பரிசீலனை செய்ததா? அது எந்த நிலையில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** இரப்பர் மூலப்பொருளைப் பயன்படுத்தி இங்கேயே செய்பொருளாக மாற்றுவதற்கான ஒரு தொழிற்சாலையைத் துவங்க வேண்டும் என்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது பற்றிய ஒரு குறிப்பை அனுப்ப வேண்டும் என்று "டான்சி" யிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பு வந்த பிறகு அரசு முடிவு எடுக்கும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு இரப்பர் தோட்டத்தில் ஆயிரம் ஏக்கர்களை ஒரு டிவிஷனாக வைத்திருக்கிறார்கள். அதனால் தூரத்திலிருந்து இரப்பர் பாலை கோகுலேஷன் ப்ளாண்டுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்குள்ளாக வழியிலேயே உறைந்து விடுவதால், அதை வெட்டி விற்கும்போது, ஒரு கிலோவிற்கு 8 ரூபாய்தான்

கிடைக்கிறது. உறையாமல் நல்ல பாலாக இருந்தால், 11 ரூபாய் முதல் 12 ரூபாய் வரையில் கிடைக்கும். உறைந்துவிடுவதால் நஷ்டம் ஏற்படுகிறது. தனியார் நடத்தும் இரப்பர் தோட்டங்களில் ஆயிரம் ஏக்கரில் நான்கைந்து டிவிஷன்களை வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே அரசுத் தோட்டத்திலும் ஆயிரம் ஏக்கரில் நான்கைந்து டிவிஷன்களை வைத்து, ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு கோகுலேஷன் பிளான்டை வைத்தால், இரப்பர் பாலை உறையாமல் தடுக்க முடியும். அப்படிச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நீண்ட தூரத்திற்கு இரப்பர்பாலை எடுத்துக் கொண்டு போவதால் ஏற்படுகிற சங்கடங்களையும், நஷ்டத்தையும் உணர்ந்த அரசு அந்தப் பகுதியிலேயே மற்றொரு தொழிற்சாலையை ஆரம்பித்து அத்தொழிற்சாலையைச் சுற்றி எடுக்கப்படுகிற பாலை அங்கேயே தருகிற ஒரு ஏற்பாட்டை இப்போது செய்கிறது. ஆனால் நாம் பயிரிடுகிற அந்தத் தோட்டங்கள் இன்னும் முழு அளவிலே பலனைத் தருகின்ற நிலையை அடையவில்லை, அப்படி அடைகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுவது இலாபகரமாக இருக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இரப்பர் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க "டான்சி"-யிடமிருந்து ஒரு குறிப்பைக் கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். சிறு தொழில் இரப்பர் உற்பத்தியாளர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களின் சார்பிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தபோது "டான்சியே" அத்தகைய தொழிற்சாலையை ஆரம்பிக்க இருப்பதாக அரசு பதில் தந்திருக்கிறது. அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது கைவிடப்பட்டதாக அறிகிறேன். அது உண்மையாக இருந்தால், சிறு தொழில் இரப்பர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுத் துறையில் ஒரு தொழிற்சாலையை அமைக்க அனுமதி வழங்க அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தக் கேள்வியை மாண்புமிகு தொழிலமைச்சரிடத்திலே கேட்டால், விரிவான பதில் கிடைக்கும்.

திரு. ஆ. நல்லசிவன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு இரப்பர் தோட்டத்திலே பல இடங்களில் யானைகள் புகுந்து இரப்பர் மரங்களைச் சேதப்படுத்தி யிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக மயிலாறு என்னும்



இடத்தில் ஆயிரம் மரங்களைச் சேதப்படுத்தியிருப்பதாகத் தகவல் இருக்கிறது. யானைகளுடைய சேதத்திலிருந்து மரங்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகிற செய்தி இப்போதுதான் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது பற்றிய மேல் தகவல்களை விசாரித்து அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். யானைகளையும் மனிதர்களைப் போல பாதுகாக்க வேண்டும் என்று உலகம் முழுவதும் இயக்கம் நடைபெறுவதால், அவற்றையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே எப்படியும் இரண்டுக்கும் பாதகம் இல்லாமல் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 10-50)

**கன்னியாகுமரி நகரியத்தில் சுற்றுலா பேருந்துகள் நிறுத்த இடம்.**

*34. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கன்னியாகுமரி நகரியப் பகுதிக்கு வரும் சுற்றுலா பேருந்துகளை கடற்கரையோரப் பகுதியில் நிறுத்தக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருப்பது உண்மையா?

(இ) மாற்று இடமான கோவளம் சாலையில் நிறுத்துவதினால் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டிருப்பதும், விபத்துக்கள் ஏற்படுவதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) தற்சமயம் தடை ஒன்றும் விதிக்கப்படவில்லை.

(இ) கன்னியாகுமரி நகரியப் பகுதிக்கு வரும் சுற்றுலா பேருந்துகளை கடற்கரைப் பகுதியில் நிறுத்தக்கூடாது என்று தடை ஒன்றும் விதிக்கப்படாததினால், கோவளம் சாலையில் சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. எனவே, போக்குவரத்திற்குத் தடையோ, விபத்துக்களோ ஏற்படவில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி நகரியப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பேருந்துகளில் சுற்றுலாப் பயணிகள் வட இந்தியாவிலிருந்தெல்லாம் வருகிறார்கள். கடற்கரைப் பகுதியில் அந்தப் பேருந்துகளை நிறுத்துவதால், கடற்கரைப் பகுதி அசுத்தப்படுகிறது என்று கருதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கோவளம் சாலையில் அந்தப் பேருந்துகளை நிறுத்த உத்தரவு பிறப்பித்தார்கள். அதனாலேயும் இடைஞ்சல்கள் இருந்தன என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஒட்டிய பகுதியில் இந்தப் பேருந்துகள் தங்குவதற்கு உரிய அளவில் ஒரு பெரிய பேருந்து நிலையமும், மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குரிய அளவில் ஒரு நிலையமும் ஏற்படுத்த வேண்டுமென்று நகரியத்திலேயிருந்து ஒரு கோரிக்கை விடப்பட்டது. அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா ? அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கன்னியாகுமரி ஒரு உலகம் தழுவிய இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர் என்ற அளவில் ஒரு மிகப் பெரிய சிறப்பு பெற்றுக்கொண்ட சுற்றுலா தலமாக இருக்கின்ற காரணத்தினால், சுற்றுலாத் துறையிலேயிருந்து ஒரு மாஸ்டர் பிளான், வரைவுத் திட்டம் வரைய இருக்கிறோம். அந்தத் திட்டத்தை வரைய வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அப்போது எங்கெங்கு பேருந்துகளை நிறுத்தலாம், எங்கெங்கே மக்களுக்கு வசதிகளைக் கொடுக்கலாம், அந்த நகரியத்தினுடைய அழகு கெடாமல் மக்கள் வசதி குறையாமல் எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றித் திட்டமிடக் கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டம் வந்த பிறகு, பரிசீலிக்கப்பட்டு அதைச் செயல்படுத்தும்போது சம்பந்தப்பட்ட துறையோடு கலந்துபேசி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### திருப்பத்தூரிலுள்ள பயணிகள் விடுதி.

* 35 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள துணைப் பயணிகள் விடுதி ஒன்றில், கீழ்த்தளத்தில் அலுவலகம் இருப்பதையும் வசதிமிக்க மேல்தளம் பயன்படுத்தப்படாமல் பாழடைந்து வருவதையும் அரசு உணருமா ?

(இ) ஆம் எனில், அப்பகுதியை பயணிகள் உபயோகத்திற்கு வாடகைக்குத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மேல்தளம் கிடையாது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தப் பயணிகள் விடுதியிலே மேல் தளம் ஒன்று இருக்கிறது. இல்லை என்று அரசு சொல்கிறது. நான் பார்த்து விட்டு வந்தேன். அதைப் பயன்படுத்துவதற்குரிய வழி முறைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைப் பயணிகள் விடுதியைப் பற்றியது கேள்வி. அதிலே இரண்டு அறைகள் கீழ்த்தளத்திலே இருக்கின்றன. மேல்தளம் கிடையாது என்பதுதான் என்னுடைய பதில். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எந்தக் கட்டிடத்தைப் பற்றிச் சொல்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

### *Municipal Employees.*

* 36 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether there is a general principle that employees of Municipalities, who have relinquished their right to promotion on the ground that transfer on promotion may separate them from their spouses and other members of their families, should not be transferred;

(*b*) if so, whether this principle is often violated by transferring some such employees; and

(*c*) whether the Government will issue proper instructions that the above principle should be strictly implemented ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

(உ) தேவை இல்லை

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பொதுவாகப் பதவி உயர்வின் காரணமாக வேறு இடங்களுக்குச் செல்லும்போது, குடும்பத்திலே கணவனும் மனைவியும் வேறு வேறு இடங்களுக்குச் சென்று பிரியும் நிலை ஏற்படுவதால், அவர்களே பதவி உயர்வே வேண்டாம் என்று பதவி உயர்வைக் கைவிடுகிறார்கள்.

அப்படிச் செய்த பிறகும் அவர்களை வேறு ஏதாவது சூழ்நிலையில் மாற்றுகிறார்கள். தங்கள் குடும்பம் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான், பதவி கூட வேண்டாமென்று இருக்கிறார்கள். அந்தக் காரணத்தின் அடிப்படையில் பதவி உயர்வு இழந்து இருப்பவர்களை வேறு எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் மாற்றக்கூடாது என்று உள்துறை உத்தரவு அனுப்பவில்லையா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: புகார்கள் வந்தாலன்றி, அரசாகப் பார்த்து அவர்களை மாற்ற வேண்டுமென்று கட்டளையிட்டாலன்றி, அவர்கள் மாற்றப்படுவதில்லை. ஆகவே அதைப்பற்றித் தனியாக அரசு பரிசீலனைக்கு கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## சித்த மருத்துவக் கல்லூரிகள்.

* 37. வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சித்த மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி யாது?

(இ) புகுமுக வகுப்பில் விஞ்ஞானத்தைச் சிறப்புப் பாடமாக தமிழ் வழி பயின்றவர்கள் தான் சித்த மருத்துவக் கல்லூரியில் சேருவதற்குத் தகுதி உடையவர்கள் என கல்வித் தகுதியை நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

(உ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் பி.எஸ்.எம். ஃ எஸ். சித்த மருத்துவப் பட்டப் படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி வருமாறு:—

(1) எஸ்.எஸ்.எல்.சி. அல்லது மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான படிப்பில் தேறியவராகவும், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்தும் சிறப்புத் தமிழ் நுழைவுத் தேர்வில் தேறியிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) புகுமுக வகுப்பு அல்லது அதற்குச் சமமான படிப்பில் மூன்றாம் பாகத்தில் சிறப்பு தமிழ் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.



அல்லது

(3) பி.ஏ., பி.எஸ்சி. போன்ற பட்டப் படிப்பில் முதலாம் பாகமான தமிழ் பாடத்தில் தேறியிருத்தல் வேண்டும்.

அல்லது

புதிய +2 மேல்நிலைக் கல்வித் திட்டத்தின் கீழ், 11, 12 ஆம் வகுப்புகளில் சிறப்புத் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு தேறியிருத்தல் வேண்டும்.

(இ) இல்லை.

(உ) எழாது.

திரு. ம. சங்கரலிங்கம்: பாளையங்கோட்டையில் நடைபெறுகிற சித்த மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்குக் குறைந்தபட்சத் தகுதி என்று வைத்திருப்பதில் மருத்துவப் பயிற்சிக்கு விஞ்ஞானம் படித்திருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. சிறப்புத் தமிழ் படித்திருக்க வேண்டும். மூன்றாம் பாகத்தில் புகுமுக வகுப்பு அல்லது அதற்குச் சமமான படிப்பில் சிறப்புத் தமிழ் படித்திருக்க வேண்டும் என்று இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் விஞ்ஞானம் படித்திருக்க வேண்டுமென்ற நிலை இல்லை. ஆகவே பிளஸ் 2 படிப்பிலே விஞ்ஞானப் பாடத்தைத் தமிழில் படித்திருப்பவர்கள்தான் சேர முடியும் என்று அரசு மாற்ற யோசனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நான் இப்போது கூறியது அதற்கான அடிப்படை குவாலிபிகேஷன். அதைத்தான் நான் கூறியிருக்கிறேன். விஞ்ஞானப் படிப்பு இருந்தால், அவர்களுக்குப் பிரிபரன்ஸ் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மருத்துவக் கல்லூரிப் படிப்பிற்கு விண்ணப்பம் அனுப்புகின்றவர்கள் விஞ்ஞானப் பாடம் படித்திருக்க வேண்டும் என்று இருந்தால்தான் விஞ்ஞானம் தெரிந்தவர்கள் மருத்துவக் கல்லூரியிலே வந்து படிக்க முடியும். யார் யாரோ விண்ணப்பம் போட்டுவிட்டு இப்போது இருக்கக்கூடிய செலக்டிவ் சிஸ்டத்திலே விஞ்ஞானப் பாடமே படிக்காதவர்கள் மருத்துவக் கல்லூரியில் படிக்க வேண்டியிருக்கும். அதனால் மருத்துவக் கல்வியின் தரம் குறைந்துவிடும் என்பதற்காகவும், அந்த நிலைமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் சொல்கிறேன். எனவே இதை அரசு ஆய்வு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இப்போது இருக்கக்கூடிய பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழ் மருத்துவத்தைப் பொறுத்தவரையில். தமிழிலே அடிப்படையான அறிவு தேவை என்ற அடிப்படையிலே இந்த வரைமுறைகளை வகுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், சென்ட்ரல் போர்ட் ஆப் இன்டெலிஜென்ஸ் துறையிலிருந்து அவர்களுக்கு என்று கைட்லைன்ஸ் வந்திருக்கிறது. அதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் படித்துக் காட்டுகிறேன். அதிலே இனிமேல் புகுமுக வகுப்பு அந்த இரண்டு ஆண்டுக் காலம் இருக்கிறதே, அதிலேகூட சித்த மருத்துவமே எடுத்துக்கொண்டு படித்தவர்களுக்குப் பிரிபரன்ஸ் கொடுக்க வேண்டும் என்று கைட்லைன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேயே இனிமேல் புகுமுக சித்தா வகுப்பு இரண்டு வருட காலம், பி.எஸ்.எம். & எஸ். பட்டப் படிப்பாக 5 ஆண்டுகள், உள் பயிற்சி மருத்துவராக ஆறு மாத காலம் என்று மொத்தம் 7½ ஆண்டுகள் படித்தாக வேண்டும் என்ற வரைமுறையைச் செய்திருக்கிறது. இதன்படி இரண்டு ஆண்டு காலம் சித்தா படிப்பு தமிழ் நாட்டிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில், 11, 12-வது வகுப்புகளில் ஒரு பாடமாகவே வந்துவிடும். 1979-80 ஆம் கல்வி ஆண்டு முதல் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 46 மாணவர்கள் கீழ்க்கண்ட பள்ளிகளில் புகுமுக சித்தா வகுப்பில் படித்து வருகிறார்கள். கீழ்க்கண்ட பள்ளிகள் என்றால், அவைகள், ஒன்று அரசினர் மேல்நிலைப் பள்ளி மடத்துக்குளம், கோயம்புத்தூர் மாவட்டம், இரண்டாவது அரசினர் மேல்நிலைப் பள்ளி, பொம்பலூர், மூன்றாவது வ. உ. சி. அரசினர் மேல்நிலைப் பள்ளி, கோவில்பட்டி, ஆக இந்தப் பள்ளிகளிலெல்லாம் சித்தா பாடம் இருக்கிறது. அதிலே எல்லா விவரங்களும் இருக்கிற காரணத்தினாலும், மேலும் சென்ட்ரல் போர்ட் கைட்லைன்ஸில் அந்த விதிகள் உட்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இதை மறு பரிசிலனை செய்யவேண்டிய தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN: May I know whether there is any proposal to increase the number of seats in the above College, since it appears that only one-tenth of the persons applying are able to get admission in the College?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 44 இடங்கள் முன்பு இருந்தன. இப்போது 75 இடங்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை நிறைவு செய்யக்கூடிய செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துவதற்குரிய செயற்குறிப்பு எதுவுமில்லை. எனினும் குடிப் பழக்கத்திற்கு அடிமையானவர்களைச் சீர்திருத்தும் பொருட்டு, அவர்களுக்குரிய வகையில் பயிற்சி அளிப்பதற்காக மருத்துவத் துறையுடன் இணைந்த மருத்துவ மனைகளில் குடிப் பழக்கத்திற்கு அடிமையானவரைத் தடுப்பதற்குரிய வசதிகளை அரசு செய்துள்ளது.

## விஷச் சாராயம்.

* 40 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1978 முதல் 15—6—1980 வரை, விஷச் சாராயம் குடித்ததனால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) இம்மாதிரி விபத்துக்கள் நேராமல் தடுப்பதற்கு, அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மு. இராசேந்திரன்: (அ) 21.

(இ) குளோரல் ஹைடிரேட் மற்றும் மெத்தினால் என்னும் பொருள்களே விஷச் சாராயம் அருந்தி இறந்துபோன முந்தைய நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்று தெரிய வந்தது. அதனால், விஷச் சாராயம் அருந்தி இறப்பவர்களைத் தடுக்கும் பொருட்டு, கள்ளத்தனமாக குளோரல் ஹைடிரேட் மற்றும் மெத்தினால் எடுத்துச் செல்வதை மதுவிலக்கு புலனாய்வுப் பிரிவு மிகவும் கூர்மையாகக் கண்காணித்து வருகிறது. கள்ளச் சாராய வேட்டையின் போது, குளோரல் ஹைடிரேட் மெத்தினால் என்னும் பொருள்கள் இருப்பதாகத் தெரிந்தால் உரிய தீவிர நடவடிக்கை எடுக்குமாறு எல்லா மதுவிலக்குப் பிரிவுகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மதுக் கஷாயம் தயாரித்து விற்கப்படுவதையும் மதுவிலக்குப் புலனாய்வுப் பிரிவு கண்காணித்து வருகிறது. இந்தத் தடுப்பு நடவடிக்கைகளினால் விஷச் சாராயம் அருந்தி இறப்பவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களே பதிலையும் கூறிவிட்டார்கள். நான் சொன்னது, cadaver பற்றாக்குறையாக இருக்கிறதென்பதுதான். அதற்காக வெளிநாடுகளிலெல்லாம் மாடல்களைப் பயன்படுத்துகிறார்கள். முன்பு ஒரு cadaver-ஐ வைத்து, 10, 15 மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது 30, 40 மாணவர்கள் படிக்கிறார்கள்.

THIRU G. SWAMINATHAN: May I know what is a cadaver?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: It is a dead body. அது கிடைக்கவில்லை என்று சொல்லும்போது, அது நாட்டின் முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்பதற்கு அடையாளம். அதுதான் பற்றாக்குறையாக இருக்கிறதென்று நான் அந்தக் கன்வென்ஷனில் சொன்னேன். Professor-cum-Reader சென்னை மருத்துவக் கல்லூரியில் மூவரும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் இருவரும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மூவரும், மதுரை மருத்துவக் கல்லூரியில் மூவரும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் ஒருவரும், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் ஒருவரும், கோவை மருத்துவக் கல்லூரியில் ஒருவரும், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் ஒருவரும் இருக்கிறார்கள். இதற்கு மேலும் சிலரை நியமிக்க வேண்டுமென்று D. M. E. அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அது ஏனென்றால், +2 படித்த மாணவர்கள் நேரடியாக இப்போது படிக்க வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே பி.யு.சி. படித்த மாணவர்கள் அனாடமி, பிசியாலஜி படிக்கிறார்கள். எனவே இந்த ஆண்டு வாடிக்கையாக இருக்கக்கூடிய எண்ணிக்கையைவிட ஒரு மடங்கு அதிகமாக இருக்கும் நிலைமை இருக்கிறது. +2 படித்த மாணவர்கள் பள்ளியிலிருந்து நேரடியாக வருகிறார்கள். அதையும் நாம் சமாளிக்கிறோம். Staggering the course என்ற முறையில் 6 மாதங்களுக்குப் பிறகு அவர்களுக்கு வாய்ப்பு தரப்படும். எனவே டெமான்ஸ்டிரேட்டர்கள் பற்றாக்குறை என்று நான் சொல்லவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: அமைச்சரவர்கள் அந்தக் கூட்டத்தில் 'கேடவர் பற்றாக்குறை இருக்கிறதென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள் என்பதால்தான் அதைக் குறிப்பிட்டேன். அந்தக் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கல்லூரியிலும் 3 பேராசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். 'டிஸ்செக்ஷன்'—உடற்கூறு பிரித்துப் படிக்க, 25 மாணவர்களுக்கு டெமான்ஸ்டிரேட்டர் மாணவர்களுடன் இருந்து கற்றுக் கொடுக்க வேண்டும்.



மாணவர்கள் விஞ்ஞானப் படிப்பைக் கல்லூரியில் படிக்கிறார்கள். அப்போது கூட 25 மாணவர்களுக்கு ஒரு டெமான்ஸ்டிரேட்டர் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. பி.எஸ்சி. வகுப்பிற்குக்கூட, 25 மாணவர்களுக்கு ஒரு டெமான்ஸ்டிரேட்டர் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. 40 மாணவர்களுக்கு மேல் போனால், 2 டெமான்ஸ்டிரேட்டர்கள் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது.

In addition to Assistant Professor or Professor who is supervising என்று இருக்கிறது ". . . need to appoint two more Junior Medical Officers as Demonstrators in Medical Colleges in Tamil Nadu was urged at a convention of Anatomists" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தேவை அங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, அரசு அதை மனதில் கொண்டு, மருத்துவக் கல்லூரிகளின் தரம் உயர, உடற்கூறு இயலை மருத்துவ மாணவர்கள் நன்கு பயில, 25 மாணவர்களுக்கு ஒரு டெமான்ஸ்டிரேட்டர் விதம் நியமிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நான் கொடுத்த பதில் பேராசிரியர்களைப் பொறுத்தது. டெமான்ஸ்டிரேட்டர்களைப் பொறுத்தவரையில், 30, 40 மாணவர்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையிலே இப்போது இருக்கிறார்கள். இன்னும் கூடுதலாக டெமான்ஸ்டிரேட்டர்களை நியமிக்க வேண்டுமென்ற நல்ல யோசனை அரசாங்கத்தால் கவனிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## Addicts of Liquor.

* 39. *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Handlooms and Khadi be pleased to state:

(*a*) whether there is any proposal to amend the Tamil Nadu Prohibition Act, 1937, so as to give psychological, psychiatric and medical treatment to addicts of liquor, instead of sentencing them to imprisonment; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. செ. தி. இராசேந்திரன்: (அ) & (இ) குடிப் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்குச் சிறைத் தண்டனை அளிப்பதற்குப் பதிலாக மனோதத்துவ, உளவியல் மருத்துவ சிகிச்சையளிக்கும் வகையில்

1981 பிப்ரவரி 28]

திரு. பா. ரா. தாமஸ்: பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு இந்த சித் வைத்தியக் கல்லூரியில் இடம் வழங்கப்படுகிறது. குடும்பங்களில் பாரம்பரை யாக சித்த வைத்தியம் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட குடும்பங்களிலே யிருந்து வருகின்ற தகுதி பெறாதவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுகிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஏற்கெனவே என்னுடை பதிலிலேயே அதற்கான அடிப்படைத் தகுதிகள் என்ன என்று மிக தெளிவான விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் தகுதிகளை பெற்றிருப்பவர்களுக்கு நிச்சயமாக இடம் தரப்படும்.

மருத்துவக் கல்லூரிகளிலே உடற்கூறு துறை.

* 38 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் உடல் உட்கூறு (Anatomy) துறையில், போதுமான அளவு ஆசிரியர்கள், விளக்குநர்கள் நியமிக்கப்பட வில்லை என்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: 1980 ஆகஸ்டு திங்கள் 31-ம் தேதி சென்னையிலே நடைபெற்ற ஒரு மருத்துவர்கள் கன்வென்ஷனில் மாண்புமிகு மருத்துவ துறை அமைச்சரவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள் அந்தக் கூட்டத்தில்

"There was inadequacy of teaching staff in Anatomy Departmen in most of the Medical Colleges, it was pointed out, and appoin ment of at least one Demonstrator for every 25 students wa necessary".

என்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதே கூட்டத்தில்,

The Health Minister, Dr. H. V. Hande, who presided over th convention said, that "there was dearth of cadavers in Medic colleges and models should be used instead of lossions in dissections

என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இல்லை என்று அமைச்சரவர்க சொல்லுவது எந்த அடிப்படையை வைத்து என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 ஜனவரி 28]

திரு. ம. சங்கரலிங்கம்: விஷச் சாராயம் நாட்டிலே பல பகுதிகளிலே கிடைக்கிறது. காரணம், நல்ல சாராயம் கிடைக்க வழிவகை இல்லாமை யால்தான். எனினும் சாராயம் குடிக்கக்கூடாது என்பதற்கான தடை களைப் பலப்படுத்தி, சாராய விற்பனைக்கு வழியில்லாமல் செய்ய வேண்டு அப்படிச் செய்தால்தான், விஷச் சாராயம் அருந்தி, பல உயிர்கள் பலியா தைத் தடுக்க முடியும். எனவே சாராயம் ஒட்டுமொத்தமாக விற்பனைக்கு வாராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தடை செய்யப்படாததா என்பதல்ல. தடை செய்யப்பட்டும் சில இடங்களில் இருக்கிறதென்பதுதா பொருள். அதற்கேற்ப, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: 'குடி' என்பது நீண்ட பாரம்பரியத்திற்கு பட்ட விஷயம். எல்லா அரசுகளும், எந்தக் கொள்கையைக் கடைப்பிடித் போதும், இதில் தோல்வியையே கண்டிருக்கின்றன என்பது நடைமுறை உண்மை. ஆகையால் விஷச் சாராயத்தைத் தடுப்பதற்கு, மதுவிலக்கை விலக்குவதற்கு இந்த அரசு ஏதாவது கொள்கை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் ஒன்றைக் குறிப்பிடு வதால், எங்களுக்கு முன்னால் பணியாற்றியவர்கள், பொறுப்பிலே இருந்த வர்கள் சரிவரச் செயல்படாமல் இருந்துவிட்டார்களென்று யாரும் கருதக் கூடாது. மதுவிலக்கு இல்லையென்ற நேரத்திலும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மதுவிலக்கு இல்லாத வெளி மாநிலங்களில்கூட விஷச் சாராயம் அருந்தி இறந்தவர்கள் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதுபற்றிய விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**1928 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டம் திருத்தப்படக் கோரி அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, 700 பேர் கைது செய்யப் பட்டது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் செ. முத்துசாமி, ஆ. நல்லசிவன், க. மீனாட்சிசுந்தரம், ப. மாணிக்கம், சி. ரா. லெட்சுமிகாந்தன், பா. ரா. தாமஸ், ம. சங்கரலிங்கம் ஆகியோர் 1928 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கோரி அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் 700 பேர் கைது செய்யப்பட்டு, அங்கு பதட்ட நிலைமை உருவாகியிருப்பதால், அது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதிக்குள் வருகிறதென்பதைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**திரு. செ. முத்துசாமி :** அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்பது நீண்டதொரு பாரம்பரியத்திற்குட்பட்ட ஒன்று. சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அடுத்தாற்போல் ஏற்படுத்தப்பட்ட தனியார் நிறுவனம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தனியார் பல்கலைக் கழகமாக இருந்தாலும், அதில் படித்து வந்தவர்கள் மாபெரும் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். அங்குள்ள நடைமுறை நிர்வாகத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக, கோளாறு காரணமாக இன்றையதினம் அங்கு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும்தான் இதுமாதிரி தவறு நடக்கும் என்கிற நிலை மாறி பல்கலைக் கழகங்களிலும் கூட தவறு நடக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. கட்டிடம் கட்டப்படாமல் கட்டப்பட்டது என்று சொல்லி பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று அங்கே பணியாற்றுகிறவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதெல்லாம் பின்னர் வரவேண்டிய பிரச்சினைகள். ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்தும் அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றியும் மட்டும் சொல்ல வேண்டும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பிரச்சினைபற்றி மட்டும் பேசுங்கள்.



**திரு. செ. முத்துசாமி :** ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டு போராட்டம் நடத்தியதால், ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை முன் வைத்து, பணிப் பாதுகாப்பு தேவை என்ற கோரிக்கையை வைத்து, நியாயமாக போராடிச் சென்ற நேரத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், ஜனநாயகக் கொள்கையைப் பின்பற்றுகிற நிலையில் ஆளுநர் உரையில் அவர்களுடைய பணிப் பாதுகாப்பு குறித்து ஏதும் சொல்லாத நிலையில், ஒரு பல்கலைக் கழகம் மூடப்பட்டு, மாணவர்கள் கூட இதில் ஈடுபட்டு, கல்வி பாதிக்கப்பட்டு, ஆசிரியர்கள் போராட்டம் நடத்திய வேளையில் கைது செய்யப்பட்டு, அதன் காரணமாக அங்கே ஒரு பயங்கரமான பதட்ட நிலை ஏற்பட்டிருப்பதால், இந்த அவசர பதட்ட நிலையினைப் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய ஒழுங்கீனங்கள் பற்றி சென்ற சில மாதங்களாக சர்ச்சை நடந்து வருகிறது. இந்தப் பல்கலைக் கழக புரோ-சான்சலருக்கு இந்த நாட்டிலே உள்ள எந்தப் பல்கலைக் கழகத்துக்கும் இல்லாத அளவுக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் திருத்தப்பட வேண்டும் என்கிற ஒரு நிலை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களுக்கு நான் ஏற்கெனவே சொன்னதை உறுப்பினருக்கும் சொல்கிறேன். இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பொதுப் பிரச்சினையாக உறுப்பினர் அவர்கள் தீர்மானத்திலே சொல்ல பிரச்சினைபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டும். தீர்மானத்திலே உறுப்பினர் குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிற பிரச்சினைபற்றி மட்டும் பேச வேண்டும். வில்லை. தாக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஏற்கெனவே அங்குள்ள பல்கலைக் கழகத்தில் ஊழல்கள் நடைபெறுவதாக சர்க்காரின் கவனத்திற்கு வந்ததால், முன்பு ஆளுநர் உரையில் அதற்கான சட்டத்திலே திருத்தம் செய்வதற்கு ஒத்துக்

கொண்டார்கள். அரசுக்கு ஆசிரியர்கள் ஒரு மகஜர் கூட சமர்ப்பித்திருக்கிறார்கள். இப்போது அளிக்கப்பட்டுள்ள ஆளுநர் உரையில் சட்டம் திருத்தப்படும் என்று சொல்லாமல் விடப்பட்டிருப்பதால், இந்தக் கிளர்ச்சி நடைபெற்றிருக்கிறது. நிர்வாகத்தினர் வெளியிலிருந்து அடி ஆட்களைக் கொண்டு வந்து அவர்கள் ஆசிரியர்களை அடிக்கிறார்கள். ஒரு ஆசிரியர் தாக்கப்பட்டு மருத்துவமனையில் இருக்கிறார். அதனால்தான் இன்றைக்கு கிளர்ச்சி நடைபெறுகிறது. இதுபற்றி அரசு துரித நடவடிக்கை எடுக்காமல் மேலும் காலதாமதப்படுத்துவதாலும், நிர்வாகத்தினர் வெளியிலுள்ள அடி ஆட்களைக் கொண்டு ஆசிரியர்களை அடித்து நொறுக்கி துன்புறுத்துவதாலும் . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அடிக்கப்பட்டிருக்கிறார் என்பது முடிவான நிலைமை. அடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார் என்பது வேறொரு நிலைமை. நிர்வாகத்தினர் அடி ஆட்களை வைத்து அடித்திருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் முடிவாகச் சொல்லக்கூடாது. இதை இப்படியே பதிவேட்டில் வைப்பது பொருத்தமாக இருக்காது. யாரையோ வைத்து அல்லது கூலி ஆட்களை வைத்து அல்லது வன்முறையாளர்களை வைத்து அல்லது அடி ஆட்களை வைத்து அடித்து மருத்துவமனையில் இருப்பதாகச் சொல்லுவதெல்லாம் அப்படியே பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று உறுப்பினர் சொன்னால் பொருத்தமாக இருக்கும். இதெல்லாம் நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியவை.

**திரு. ஆ. நல்லசிவன்:** ஆசிரியர் அடிக்கப்பட்டிருக்கிறார் என்பது முன்னாலேயே உள்ள பிரச்சினை. நீதிமன்றத் தீர்ப்பு பின்னர் வரலாம். அடித்த ஆள் யார் என்பதும் . . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் என்னைவிடப் பெரியவர். விஷயம் தெரிந்தவர். அவர் நினைத்தால் சரியாகப் பேச முடியும் என்பது எனக்குத் தெரியும். இங்கே அவர் சொல்வ தால், அதுபற்றி பதில் சொல்ல காவல் துறை அதிகாரிகள் இங்கே இல்லை. மேலும் சம்பந்தப்பட்டவர்களும் இல்லை. ஆகவே இது குறிப்பேட்டி[illegible] ஏறுவது நியாயமில்லை. இதை வழக்குமன்றத்தில் சொன்னால், தீர்ப்புக்[illegible] உதவிகரமாக இருக்கும். அடிக்கப்பட்டு காயம் ஏற்பட்டதால் மருத்துவ[illegible] மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். வன்முறையாளர்களா[illegible] அடி ஆட்களால் அவர் அடிக்கப்பட்டிருக்கிறார் என்கிற செய்தியை உறுதி படுத்தி இங்கே உறுப்பினர் சொல்வது சரியல்ல. அதுபற்றி நியாயமா[illegible]



ஆதாரம் உறுப்பினரிடம் இருந்தால், அதை நீதிமன்றத்திற்குத் தருவது தான் நியாயம். நீதிபதியின் தீர்ப்பு வந்த பிறகுதான், இன்னார் இன்னாரை அடித்தார் என்பது தெரியவரும். இப்படிப்பட்ட செய்திகள் அவை நடவடிக்கைக் குறிப்பில் தேவையா என்பதை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விவரங்களுக்கு உள்ளே போகாமல் விஷயத்திற்கு வர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'எக்ஸ் பஞ்ச்' பண்ண வேண்டுமென்று கேட்கிறார். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சினைபற்றித் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி மட்டும் சொல்ல வேண்டாம்.

**திரு. ஆ. நல்லசிவன்:** முதலமைச்சர் என்னைப் பெரியவர் என்றும் விஷயம் தெரிந்தவர் என்றும் சொன்னார். முதலமைச்சரை விட எனக்கு வயது குறைவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** வயதை மட்டும் வைத்துப் பெரியவர் என்று சொல்லுகின்ற குறுகிய எண்ணம் எனக்கு இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்னும் உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. விஷயத்திற்கு வரவேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** பல்கலைக் கழக ஆசிரியர் அடிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு அங்கு விரோதி இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப அதையேதான் சொல்லுகிறார்கள். விஷயத்திற்கு வர வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** ரோட்டிலே போனவர்கள் அவரை அடிக்கவில்லை. அடிக்க யார் காரணம் என்பது எனக்குத் தெரியும். அதுபற்றி நான் பொறுப்பேற்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் அங்கு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலே நாள்தோறும் ஊழல்கள் மலிந்து வருவதாகப் பல்வேறு பல்கலைக் கழக நிர்வாகத்திலே கிளர்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1981 ஜனவரி 28

இருக்கின்ற ஊழலைக் களைய சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சென்ற முறை இந்தச் சட்டமன்றத்திலே உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது அதை நிறைவேற்றுங்கள் என்று ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். போராட்டம் நடத்தியபோது அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையில் அந்த நிர்வாகத்தைப்பற்றி ஒன்றே ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளே போகக் கூடாது என்று மாண்புமிகு தலைவரவர்கள் சொல்வதால், உள்ளே போகாமல் ஒன்றே ஒன்றைப் பற்றி மட்டும் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவர் சொல்கிறார் என்பதல்ல, விதி அப்படிச் சொல்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இவ்வாறு சொல்வது அவையையும் அவைத் தலைவரையும் தவறான நிலையில் வைக்கிறது. அவ்வாறு சொல்லக் கூடாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எழுப்ப அனுமதி கொடுப்பதுபற்றிச் சொல்லவில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு அனுமதித்ததில்லை என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எத்தனையோ முறை நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதித்திருக்கிறேன். அப்போது உறுப்பினரும் இருந்திருக்கிறார். பேசியும் இருக்கிறார். இப்படிப் பேசுவது ஒரு மாமூலாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் சொன்னது உண்மைக்கு மாறானது. ஆகவே அதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்து விட ஆணையிடுகிறேன். இதே அவையில் நான் எத்தனையோ தடவை அனுமதித்திருக்கிறேன். விஷயத்திற்கு வரவேண்டும். தீர்மானத்தில் குறிப்பிட்டுக் கொடுத்துள்ள பிரச்சினை பற்றி மட்டும் பேசவேண்டும்.

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1981 ஜனவரி 28]

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** எந்த ஒரு துணை வேந்தராவது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து இயல்பாக அவருடைய பதவிக் காலம் முடிந்த பிறகு வெளியே வந்திருக்கிறாரா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் கொடுத்திருக்கிற முன்னறிவிப்பு எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வருகிறது என்பதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகத்தில் ஊழல்கள் மலிந்திருக்கின்றன. கோளாறைப் போக்க உறுதிமொழி அளித்துள்ளபடி. சட்டத் திருத்தம் கொண்டு வாருங்கள் என்று போராடிய ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருமே இன்றைக்கு வகுப்புக்குச் செல்லாமல் புறக்கணித்திருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற பிரச்சினை ஒருபுறம், சட்டம், ஒழுங்கு ஒழுக்கம் அங்கே கெட்டு விட்டது. அங்கே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசு அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமென்று ஆசிரியர்கள் கேட்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு மேற்கண்ட பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க வேண்டியிருக்கிறது. எனவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. மாணிக்கம் அவையில் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே ஆளுநர் உரையில் கொடுக்கப்பட்ட அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் போராடுகிறார்கள். ஆளுநர் உரையிலே சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகங்களைச் சீரமைக்க சட்ட வரைவு ஒன்று இந்த மன்றத்தின் முன் கொண்டுவரப்படும் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசு கொள்கை ரீதியாக ஒரு முடிவெடுத்த பிறகுதான் ஆளுநர் உரையில் அறிவிப்பாக வரும். கொள்கை ரீதியாக அறிவிப்பு வந்த பிறகு, இரண்டு அவைகளிலும் விவாதம் நடந்த பிறகு, பல்வேறு சந்தர்ப்பங்களில் இரண்டு அவைகளிலும் அதுபற்றிப் பேசிய பிறகு, அரசின் சார்பில்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]  [1981 ஜனவரி 28

தெளிவாக வாக்குறுதி அளிக்கப்பட்ட பிறகு, அங்குள்ள ஆசிரியர்கள் 65 நாட்கள் செம்மையாகத்தான் பணி செய்துகொண்டிருந்தார்கள். பிறகு நிர்வாகத்தின் சார்பில் யாரோ அதுமாதிரி சட்ட வரைவு வரப்போவதில்லை என்று பிரச்சாரம் செய்து வந்தால்தான் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் அந்த ஆசிரியர்களுடைய, ஊழியர்களுடைய மிக முக்கியமான கோரிக்கை. அரசே ஏற்று நடத்த வேண்டுமென்பது பொதுமக்களுக்காக அனுப்பப்பட்ட ஒரு அறிக்கை. அரசுக்கு ஆசிரியர்கள் அனுப்பிய மனுவில்கூட சட்டத்தைத் திருத்த வேண்டும் என்றுதான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதி நிறைவேறாத வகையில் ஏதோ முட்டுக்கட்டை ஏற்பட்டு விட்டதோ என்கிற சந்தேகத்தின் அடிப்படையில்தான் இன்றையதினம் அங்கே கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. விரும்பத்தகாத பல சம்பவங்கள் அங்கே நடைபெற்றிருக்கின்றன.

(முற்பகல் 11-20)

ஆகவே, ஏன் இந்த ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று விளக்குவதற்காக அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கூட்டம் 24 ஆம் தேதி நடப்பதாக இருந்தது. ஆனால், அது தடை செய்யப்பட்டது. காரணம் ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை. இந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஆசிரியர்களுக்குச் சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறது. பொது மக்களுக்கு நிலைமைகளை விளக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட சர்வ கட்சிக் கூட்டம், ஊர்வலம் ஏன் தடை செய்யப்பட்டது என்ற சந்தேகம் இருக்கிறது. அவர்கள் 144 பிரிவுப்படியான தடையுத்தரவை மீறி இன்றைக்குச் சிறைச்சாலைக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அரசு உறுதிமொழி கொடுத்தவுடன், அதை ஏற்றுக்கொண்டு, 66 நாட்கள் மிகவும் அக்கறையோடு, ஒழுங்காக அந்தப் பல்கலைக் கழகம் நடத்தப்பட்டிருக்கிறது என்ற உண்மையையும் நான் இங்கே குறிப்பிடுகிறேன். அப்படிப்பட்ட நிலைமையிலே இன்றைக்கு இந்தப் போராட்டம் வெடித்ததன் காரணமாக, நாம் எல்லோரும் இதிலே அக்கறை கொண்டு, மாணவர்கள், பெற்றோர்கள் நலனைக் கருதி, திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவர்கள் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஒரு வாக்குறுதியை எதிர்பார்க்கிறார்கள். அதற்கான நிலைமைகளை விளக்கும் வகையிலே ஒரு விவாதம் நடத்துவது மிகவும் தேவையாக இருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஜனவரி 28]

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடக்கும் சம்பவம் இந்த நாட்டிலே கல்வியின்பால் அக்கறை கொண்ட அனைவரையும் கவலையில் ஆழ்த்துகிறது. அந்தப் பல்கலைக் கழகம் செயல்படவில்லை. அந்தப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள், ஊழியர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும் என்பதிலே இரண்டு கருத்து இருக்க முடியாது. அவர்களுடைய கோரிக்கை என்று சொல்வதெல்லாம் 1928-ம் வருஷத்திய அந்தப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவது என்பதுதான். இந்த அரசினுடைய கொள்கையும் அதுதான். இந்த அரசு 1980-லே கவர்னர் அவர்களின் உரையிலே அரசினுடைய கொள்கையைப்பற்றிச் சொல்லும்போது, நிர்வாகச் சீர்திருத்தம் கருதி இந்தப் பல்கலைக் கழகத்தின் சட்டத்தைத் திருத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது, இதற்கிடையில், அரசே அந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்றெடுத்து நடத்த வேண்டும் என்ற குரல் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம் என்ற சொல்லோடு இணைந்திருப்பது 'சுயாட்சிக்' கல்வி கல்வி அமைப்பு. அரசு ஏற்றெடுத்தால், அது அரசுக் கல்லூரி போல ஆகிவிடும். பல்கலைக் கழகம் என்று சொன்னால், அது அட்டானமஸ் பாடி என்று பொருள். பல்கலைக் கழகத்துக்கு உள்ளே கல்லூரிகள் அடங்கி இருக்கக்கூடாது என்ற கருத்து பரவி. அந்தக் கல்லூரிகள் அட்டானமஸ் காலேஜ்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து பரவி, மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழும் இருக்கும் பல கல்லூரிகள் அட்டானமஸ் தன்மை பெற்று. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய சட்டத்தைத் திருத்தி அது ஒரு அட்டானமஸ் பாடியாக இயங்கச் செய்வதற்கு மிக இன்றியமையாத திருத்தங்களை நாம் கொண்டு வருவது காலங்கடவாமல் செய்ய வேண்டிய கடமையாகும். அரசு முதலில் அறிவித்ததை அவர்கள் நம்பினார்கள். இப்போது அந்த வாக்குறுதியிலிருந்து அரசு பின்வாங்குகிறதோ என்ற அச்சத்தால் அவர்கள் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அந்த அச்சத்தைப் போக்கி, அவர்களிடத்தில் நம்பிக்கை ஏற்படச் செய்து, இந்தச் சட்டத்தைத் திருத்தி, அந்தப் பல்கலைக் கழகம் சுயாட்சியாகச் செயல்படச் செய்வது அரசின் கடமை. மதுரைப் பல்கலைக் கழகத்தைப்போல,

## 1928 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக சட்டம் திருத்தப்படக் கோரி அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, 700 பேர் கைது செய்யப்பட்டது குறித்து

[திரு. ம. சங்காலிங்கம்] [1981 ஜனவரி 28

சென்னைப் பல்கலைக் கழகத்தைப்போல அந்தப் பல்கலைக் கழகத்தின் சட்டத்தையும் மாற்றியமைத்து அதை நல்ல முறையில் செயல்படச் செய்ய வேண்டும். இங்கே ப்ரோ-சான்சலர் அவர்கள் இருக்கிறார்கள். சட்டப்படி பார்த்தால், அவருக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. ஆனால், அவர் தலையிடுவதில்லை. இந்தியாவின் ராஷ்ட்ரபதி சட்டப்படி முப்படைகளின் தளபதி. ஆயினும் அவர் தனக்கு என்று எந்த அதிகாரத்தையும் எடுத்துக் கொள்வதில்லை. அப்படி எடுத்தால் என்னவாகும் என்பது எல்லோருக்கும் தெரியும். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற தேவை இப்போது இருக்கிறது. அந்தத் தேவையை அரசு உணர்ந்து. ஆசிரியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்கும் வகையில் உறுதியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு நம்முடைய ஆசிரியர்களும் அரசு அளிக்கும் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு போராட்டத்தைக் கைவிட்டு, சுமுகமான கல்வி நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கோரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன் தொடர்பாகப் போடப்பட்டிருக்கும் தடையை மீறி கைதாகிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக, மாணவர்கள் தங்களுடைய கல்வியைப் பெற முடியாத நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். போராட்டத்திற்குக் காரணம் என்னவென்று பார்க்கின்றபோது, "இந்த அரசு சட்டத்தைத் திருத்துவோம் என்று முன்பு சொல்லியது. இப்போது அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை" என்ற அடிப்படையில் அவர்கள் போராடுவதாக இங்கே கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தையும், சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தையும் மதுரைப் பல்கலைக் கழகச் சட்டத்தையும் திருத்த வேண்டும் என்று நான் விரும்பியதற்குக் காரணம், இருக்கின்ற குறைபாடுகளைப் போக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்ல, பல்கலைக் கழகங்கள் வெறும் கல்லூரிகள் போல செயல்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமைகள் மாற்றப்பட்டு, அவைகள் ஆராய்ச்சி நிலையங்களாக மாறி, தமிழ் நாட்டினுடைய நிலை மேலும் உயர வேண்டும் என்ற அடிப்படையில்தான். பல்கலைக் கழகச் சட்டங்கள் என்று வரும்போது எல்லாம்



1981 ஜனவரி 28] (திரு. செ. அரங்கநாயகம்)

ஒரேமாதிரியாக இல்லை. அவ்வப்போது வருகின்ற பெரியவர்களின் கருத்துக்களை அடிப்படையாக வைத்து. நாம் இப்போது பலவகையான சட்டங்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தைப்போல விவசாயப் பல்கலைக் கழகச் சட்டம் இல்லை, அண்ணா பல்கலைக் கழகச் சட்டம் இல்லை. அங்கே செனட் இருக்கிறது. இங்கே செனட் இல்லை. அக்கடமிக் கவுன்சில் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, இப்போது புதிதாக நாம் கொண்டுவரவிருக்கிற கோவை, திருச்சி போன்ற பல்கலைக் கழகச் சட்டத்தில் அக்கடமிக் கவுன்சில் என்று தனியாக ஒன்று இருப்பதேகூட நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு ஆராய்ச்சி நிலையமாக அமையும் அளவுக்கு அவைகள் துணை புரியவில்லை. ஒவ்வொரு துறைக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். செனட் இருக்க வேண்டும் என்று கருதி அந்தச் சட்டங்களை நாம் ஆராய்ந்து வருகிறோம். இப்படிப் பல கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, இருக்கின்ற குறைபாடுகளைப் போக்கவும். ஒரு 'எமினென்ஸ்' ஏற்பட வேண்டும், உலகமெல்லாம் இவைகள் நல்லது என்று புரிந்துகொள்ளும் அளவுக்கு பல்கலைக் கழகங்கள் சிறந்து விளங்க வேண்டும் என்ற அடிப்படையிலே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை அடிப்படையாக வைத்து திருத்தங்களைப் பரிசீலிப்போம். இந்த கவர்னர் உரையிலே நாம் ஒரு கருத்தைச் சொல்கிறோம் என்று சொன்னால் . . . .

**திரு. ஜீ. சுவாமிநாதன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், இந்தப் பக்கத்திலேயிருந்து (சட்டசபைக் கூடத்தைச் சுட்டிக்காட்டி) நிறைய சத்தம் வருகிறது. இங்கு பேசுவது ஒன்றுமே கேட்கவில்லை.

(தலைவர் ஆணைப்படி கதவுகள் மூடப்பட்டன.)

**திரு. க. இராமமூர்த்தி :** கவுன்சில் ஹாலை எப்போதுமே மூடி வைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு ஏ.சி. அமைக்கப்படுமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது நல்ல ஆலோசனைதான். புதிய கட்டிடம் அமைக்கும்போது இந்தக் கருத்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கவர்னர் அவர்களின் சென்ற உரையிலே இந்தத் திருத்தம் செய்யப்படும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை நிறைவேற்ற வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்கிறார்கள். அதை

(திரு. செ. அரங்கநாயகம்) [1981 ஜனவரி 28

நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கின்ற அளவுக்கு மேல் இன்னும் அதிகமாக நாங்கள் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று ஆசிரியப் பெருமக்கள் எந்த அடிப்படையில் எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் இப்படிச் சில காரியங்களைச் செய்யவிருக்கிறோம் என்று ஏற்கெனவே சொல்லியிருப்பது சம்பந்தமாக, கவர்னர் உரையின் மீது பேசுகின்ற உறுப்பினர்களிடம் சொல்லி, அது சம்பந்தமாகப் பேசியிருக்கலாம். அதற்கு மாறாக, அவர்கள் போராட்டம் தொடங்கியிருப்பதும், போடப்பட்டிருக்கும் தடையை மீறி அவர்களாகக் கைதாகிக்கொண்டிருப்பதும் பொது மக்கள் மத்தியிலே என்ன நிலைமையை ஏற்படுத்தும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்கள் உண்மையிலேயே இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய நன்மையிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், மாணவர்களுடைய படிப்பைக் கெடுக்காத அளவுக்கு அவர்களுடைய நடவடிக்கை இருக்க வேண்டும். மாணவர்களின் படிப்பு கெடுகின்ற அளவுக்குக் காரியங்களைச் செய்ய யாருக்கும் உரிமை கிடையாது. எந்த ஆசிரியருக்கும் உரிமை கிடையாது. அப்படிச் செய்தால், அது சமுதாயத்திற்கு விரோதமாகச் செய்யும் காரியமாகத்தான் இருக்கும். அதை அவர்கள் தெரிந்து—அண்ணாமலைப் பல்கலைக் கழகமானாலும், மற்ற பல்கலைக் கழகங்களா னாலும்—பொது நன்மையைக் கருதி, அந்தப் பல்கலைக் கழகங்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசும் எடுக்கும். அரசின் நிலைமையை நாங்கள் தெளிவாகச் சொல்லி யிருக்கிறோம். இப்போது புதிய கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், தென்னார்கா( மாவட்டத்திலே இருக்கும் கல்லூரிகளை அதனுடன் சேர்த்தால்கூட நன்றா இருக்கும் என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். எனவே இப்படி புதி கருத்துக்களைச் சொல்லும்போது, அரசு எல்லாவற்றையும் ஆராய்ந்த முடிவெடுப்பதற்கு நேரம் தேவைப்படுகிறது. இவைகளை ஆராய்ந்து சொ வதற்குத் தகுந்த அறிஞர்களின் உதவியும் தேவைப்படுகிறது என்று சொல் எனவே இந்தக் காரியத்தில் அரசு எந்த வகையான பின்வாங்குதலி இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது என்பதால், இந்த அவையின் இத அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்க வேண்டி அவசியமில்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவ ர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட கருத்துக்க அனைத்தும் ஒட்டுமொத்தமான கருத்துக்கள். அவைகளோடு ந



1981 ஜனவரி 28] [திரு. எம். ஜி. இராமசந்திரன்]

ஒன்றையும் திட்டவட்டமாக இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ந்தக் காரணத்தை முன்னிட்டும் தமிழக அரசு ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியை விட்டுப் பிறழாது; அதை நிறைவேற்றும் என்பதை மீண்டும் இந்த அவையில் சொல்லிக்கொள்கிறேன். இதை இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்களும் வெளியே இருப்பவர்களும் எண்ணிப் பார்த்து, அரசின் எண்ணத்தை உணர்ந்து, இந்தப் பிரச்சினையில் வேறு எந்தவிதமான சூழ் நிலையும் உருவாகாது பார்த்துக்கொள்ள வேண்டும். எப்படி இதற்கு முன்னால் இந்த அரசின் எண்ணத்தையும் கருத்தையும் ஏற்று அவர்கள் நம்பி நடந்து கொண்டார்களோ அதைப்போலவே இம்முறையும் நாங்கள் திருத்தத் தைச் செய்வோம் என்று நம்பி, அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்தப் பொருள் குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று கூறி, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் இதற்கு முடிவு கூற வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அளித்த விளக்கங்களுக்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி, என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

### 3. அறிவிப்புகள்.

#### (1) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு, திருவாளர்கள் சி. இராமலிங்கம் மற்றும் திரு. ந. சந்தோஷம் ஆகிய இருவர் மட்டுமே போட்டியிட்டதால், உரிய முறைப்படி, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

#### (2) சென்னைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சென்னைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு, திருவாளர்கள் ஏ. ஜே. தாஸ், ஆற்காடு நா. வீராசாமி மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம் ஆகிய மூவர் மட்டுமே போட்டியிட்டதால், உரிய முறைப்படி, அவர்கள் மூவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை

### 4. தகவல் கோரல்.

### ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிவிப்புக்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே ஆசிரியர்களும் நன்றி தெரி வித்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதற்கு மேல் விவாதம் செய்வதற்கு விதிமுறைகளில் இடமில்லையே. . . ,

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஒரே ஒரு வேண்டுகோள். தற்போது ஆசிரியர்கள் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்து, கல்வி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவர்களை அழைத்துப் பேசி இந்தப் பிரச்சினையை உடனடியாக முடிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை மட்டும் விடுத்து முடித்துக்கொள்கிறேன்.

### 5. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விவர அறிக்கை.

### விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாநில நிதியுதவி உயர்வு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேலவை விதி 82-ன் கீழ் அவைக்கு ஒரு விவர அறிக்கையை அளிப்பார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாநில ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், மாநில ஓய்வூதியம் மட்டும் பெறத் தகுதி படைத்தவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 100 ஆகவும், மத்திய மாநில ஓய்வூதியம் இரண்டும் பெறத் தகுதி படைத்தவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 75 ஆகவும் இப்பொழுது இருந்து வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் சிரம நிலையைப் பரிவுடன் கருத்தில் கொண்டு இவர்கள் பெற்றுவரும் மாநில ஓய்வூதியத் தொகையை அதிகப் படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி மாநில ஓய்வூதியம் மட்டும் பெறத் தகுதி படைத்தவர்களுக்கு ரூ. 100-லிருந்து ரூ. 150 ஆகவும் மத்திய மாநில இரண்டு ஓய்வூதியமும் பெறத் தகுதி படைத்தவர்களுக்கு ரூ. 75 லிருந்து ரூ. 100 ஆகவும் 25—1—1981 முதல் உயர்த்தப்படுகிறது. இதனால் ஓர் ஆண்டுக்கு அரசுக்குக் கூடுதலாகச் சுமார் ரூ. 50 லட்சம் செலவாகும்.



விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் பெறுவோர்கள் குறைந்தபட்சம் 3 மாத சிறைத் தண்டனை அனுபவித்திருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக 1 மாத சிறைத் தண்டனை அனுபவித்திருந்தாலே போதும் என்று 1—4—1980 அன்று தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில் அனேக மனுக்கள் அரசுக்கு வந்து அவை விசாரிக்கப்பட்டு ஆணையிடப்படும் நாளி லிருந்து ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனை 1—4—1980 லிருந்தே முன் தேதியிட்டு வழங்க வேண்டும் என்று விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் பெறுவோரின் கோரிக்கையையும் அரசு பரிவுடன் ஏற்று 1—4—1980 ஆம் தேதியிலிருந்தே ஓய்வூதியம் வழங்கப்பட அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சலுகைகளை இந்த மாமன்ற உறுப்பினர்களும், விடுதலைப் போராட்ட வீரர்களும் மனமார வரவேற்பர் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் ;** இந்த அறிவிப்பை மேலவைத் தலைவர் கூட வரவேற்கிறார், மகிழ்ச்சியடைகிறார், அதற்காக அரசுக்கு நன்றி தெரி வித்துக்கொள்கிறார்.

### 6. ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு அவர் அளித்துள்ள திருத்தங்களை முன்மொழிவார்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் முன்னறிவிப்பு கொடுத்துள்ள கீழ்க்காணும் 14 திருத்தங்களையும் முன் மொழிகிறேன் :—

1. செப்டம்பர் 1,1980, டிசம்பர் 1, 1980 இரு தேதிகளிலிருந்து வழங்கப் பட வேண்டிய அகவிலைப்படி உயர்வை மத்திய அரசுபோல் ஆசிரியர்கட்கும், அரசு ஊழியர்கட்கும் வழங்கப்படாதது குறித்து ;

2. தமிழாசிரியர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்படாதது குறித்து;

3. பணிக்கர் தலைமையிலான ஒருநபர் குழு அறிக்கை வெளியிட்டு அமுலாக்கப்படாதது குறித்து ;

4. ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாத 40 ஆயிரத்துக்கு மேற்பட் டோருக்கு பணி வழங்கப்படாதது குறித்து ;

5. தனியார் பள்ளி ஆசிரியர்கட்கும் பிற ஊழியர்கட்கும் பணிப் பாது காப்பு வழங்கும் விதத்தில் தமிழ்நாடு தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் தக்க திருத்தங்கள் கொண்டு வரப்படாதது குறித்து ;

6. நீலகிரி மலையில் பணிபுரியும் ஆசிரியர்கட்கும் அரசு ஊழியர்கட்கும் அரசு ஊழியர்கட்கும் வழங்குவதுபோல் பருவகாலப்படி (Season Allowonce) வழங்கப்படாதது குறித்து ;

7. ஊட்டி மற்றும் நீலமலை முழுவதும் குளிர்காலப்படி வழங்கப்படாதது குறித்து;

8. செங்கை மாவட்டம் முழுவதும் நகர ஈட்டுப்படி வழங்கப்படாதது குறித்து;

9. தெலுங்கு, கன்னடம், உருது, மலையாளம் மொழிப் பள்ளி மாணவர் கட்கு புத்தகங்கள் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே தர ஏற்பாடு செய்யாதது ;

10. காவலர் துறையினருக்குச் சலுகை விலையில் உணவுப் பொருட்கள் தருவதுபோல் ஆசிரியர்கட்கும் பள்ளி கல்லூரி விடுதி மாணவர்கட்கும் வழங்காதது ;

11. எல்லா நிறுவாகப் பள்ளிகளையும் அரசு ஏற்று கல்வி வாரியத்தின் கீழ் கொண்டு வராதது குறித்து ;

12. ஆசிரியர்கள் பிரச்சினை தீர்க்கப்பட நிரந்தர அமைப்பாக ஆசிரியர் பணிக்குழு ( (Teacher's Service Council) ) அமைக்கப்படாதது ;

13. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கட்கு பணி விதிகள் உடனடியாக வெளியிடப்படாதது ;

14. அண்ணாமலை, மதுரை, சென்னை பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதது குறித்து.

ஆகியவைபற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாத தற்கு இவ்வவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.





மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்றையதினம் பேசுவதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்பது பேர், பெயர் கொடுத்திருக்கிறார்கள். கட்சித் தலைவர்களுக்கு 15 நிமிடங்களும், உறுப்பினர்களுக்கு 10 நிமிடங்களும் ஒதுக்கியிருக்கிறேன். ஏற்கெனவே அவரவர் கட்சியின் உறுப்பினர்கள் பேசி கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இது ஆளுநர் உரை மீதான விவாதமே தவிர பட்ஜெட் மீதான விவாதம் அல்ல. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கி றேன்.

அண்மையில் மதுரையில் 5 ஆவது உலகத் தமிழ் மாநாடு கோலாகலமாக நடைபெற்றது. மதுரை, திருவிழாவிற்குப் பெயர்போன நகரம். அங்கே நடைபெறும் திருவிழாக்களுக்கெல்லாம் பெருவிழாவாக உலகத் தமிழ் மாநாடு அங்கே நடைபெற்று முடிந்திருக்கிறது. அதற்குக் காரணம் மக்களுடைய தமிழ் உணர்வும் தமிழ் ஆர்வமும் ஆகும். அந்தப் பெரிய திருவிழா செம்மையுற நடைபெறவும் எத்தவிதமான சிறு அசம்பாவிதமும் இல்லாமல் நடைபெறவும் எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்து கொடுத்தது. அதோடு அம்மாநாட்டுக்கு வருகை தந்தவர்களுக்கெல்லாம் எல்லாவகையான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. குறிப்பாக, பெருந்திரளாக வந்திருந்த மக்களுக்குக் கழிப்பிடங்கள் நல்ல முறையில் அமைத்துத் தரப்பட்டிருந்தன. இதற்காகவெல்லாம் நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆட்சியாளர்களும், மாவட்ட ஆட்சியாளரும், மற்ற துறை அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் மற்றும் காவலர்களும் நல்ல முறையில் செயலாற்றினார்கள். குறிப்பாக, காவல் துறையினர் கூட்டத்தை அமைதிப்படுத்தும் போதும், கட்டுப்படுத்தும்போதும் அன்பான வார்த்தைகளால் கட்டுப்படுத்தினார்கள் என்பதை நான் நேரில் பார்த்தேன். எனது பல நண்பர்களும் பல இடங்களில் இதைப் பார்த்து, காவல் துறையினர் அன்புமொழி பேசுவதை இப்போதுதான் கேட்டோம், கண்டோம் என்றார்கள். அப்படி அன்பு மொழிகளால் மக்கள் கூட்டத்தை அமைதிப்படுத்த முடியும் என்பதை அங்கே கண்டோம். எனவே அதற்காக காவலர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1981 ஜனவரி 28

நமது தேசம் விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. நாட்டில் விவசாயம் செழித்தால்தான் நாடு செழிக்கும். விவசாயம் செழிக்க வேண்டுமென்றால், கிராமப் பொருளாதாரம் சீர்பட வேண்டும். கிராமப் பொருளாதாரம் சீர்பட வேண்டுமென்றால், கிராமங்களில் உற்பத்தியாகிற விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டும். அதோடு கிராமப்புறங்களில் நல்ல தொழில்கள் அமைக்கப்பட வேண்டும். விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலையும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். நமது அரசைப் பொறுத்தவரையில், ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 130-ம், கரும்புக்கு ரூ. 200-ம் விலை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் மத்திய அரசோ குறைந்த அளவுக்குத் தான் விலையை நிர்ணயம் செய்திருக்கிறது. இருந்தபோதிலும் நமது அரசு நெல்லுக்கு ரூ. 115-ம் கரும்புக்கு ரூ. 175-ம் தருவதற்கு முன்வந்திருக்கிறது. ஆனால் நமது அரசே தான் சிபாரிசு செய்திருந்தபடி நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 130-ம் கரும்புக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 200-ம் ஏன் கொடுக்க முன்வரவில்லை என்பது எனக்கு விளங்கவில்லை.

(முற்பகல் 11-40.)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்.)

விவசாய நலன்களுக்கான திட்டங்கள் உற்பத்தியைப் பெருக்குவதாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு அளிக்கும் கடன் நிவாரணம் முதலியவற்றால் தற்காலிகப் பயன்தான் கிடைக்கிறது. விவசாயம் செழிக்கவும், கிராமத்தில் பொருளாதாரம் வளரவும் உற்பத்தியைப் பெருக்கக் கூடிய பல நல்ல திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகள் தங்களுடைய விவசாய வருமானம் கட்டுப்படியாகவில்லை என்பதற்காக கிளர்ச்சிகளைச் செய்யும்போது, அவர்களுடைய கோரிக்கைகளில் எவ்வளவுதான் உறுதியிருந்தாலும் கூட, சட்டம் ஒழுங்கை மீறுவதாக, வன்முறைப் போராட்டமாக இருந்தால் எந்த அரசும் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துவதுதான் அரசுக்கு முதல் வேலை.

விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்து நாடு முன்னேற வேண்டுமானால், கண்ட்ரோல், பெர்மிட் முதலியவற்றை நீக்க வேண்டும். இவைகள் எல்லாம் ஊழலுக்குத்தான் இடமளிக்கின்றன. இன்று விலைவாசி கூடுகிறதென்றால் அதற்கு முக்கிய காரணம் பண வீக்கமும், பெட்ரோல் பொருள்களின் விலையேற்றமும், பற்றாக்குறை பட்ஜெட்டும்தான். ஆகவே விலையேற்றத்திற்கான உண்மையான காரணங்களை அறியாமல் கண்ட்ரோல்,



1981 ஜனவரி 28] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

பெர்மிட் ஆகியவற்றை ஏற்படுத்துவதால், இலஞ்சம், ஊழல் ஆகியவைதான் பெருகும். உற்பத்தியைப் பெருக்குவதுதான் விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவும்.

இப்போது அரசு 40 சதவீதம் லெவியை அறிவித்திருக்கிறது. இந்த மாதிரி லெவியை அறிவித்திருப்பது விவசாயப் பொருள்களின் விலை மேலும் உயரக் காரணமாக அமையும். இந்த லெவி முறையால் தஞ்சை மாவட்ட நெல் உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையும் மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு அதிக விலையும் கிடைக்கும். விவசாயிகளுக்குக் குறைந்த விலை கிடைத்தபோதிலும் வாங்கி உண்பவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையைத்தான் இந்த லெவி முறை ஏற்படுத்தும். பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகி உபரியாக உள்ள சமயத்தில்தான் அவற்றைக் கொள்முதல் செய்ய வேண்டும். ஏனென்றால் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகி விலை மிகவும் குறைந்துவிட்டால், விவசாயம் தளர்ந்துவிடும் என்பதால், உபரியாக இருக்கும்போதுதான் கொள்முதல் செய்ய வேண்டும். இதைத்தான் மேல் நாடுகளில் பின்பற்றுகிறார்கள். நமது நாட்டில் பற்றாக்குறை ஏற்படும்போது, அரசு கொள்முதல் செய்ய முன்வந்தால், மேற்கொண்டு விலையேற அது காரணமாக அமைகிறது. பஞ்சாப் அரியானா போன்ற மாநிலங்களில் நல்ல நெல் விளைச்சல் இருப்பதால், நம்முடைய பொது விநியோகத்திற்காக பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்தில் லெவி முறையை அறவே நீக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிவில் சப்ளைஸ் இலாக்காவில் 1975-ஆம் ஆண்டு, கம்பு, கேழ்வரகு, வரகு போன்ற தானியங்களைக் கொள்முதல் செய்து விற்ற வகையில் 83.75 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சீனியை விற்றதில் 53.65 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆடிட்டர்-ஜெனரல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் இலாக்கா மேற்கொள்ளும் எந்தக் காரியமும் உபயோகமாகவும் செம்மையாகவும் நடைபெறுவதில்லை என்பது நாம் அறிந்த விஷயம். உருளைக் கிழங்கை இறக்குமதி செய்து விற்றதிலும் அப்படித்தான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கம்பு, கேழ்வரகு, வரகு போன்ற தானியங்களை நேரிடையாகவும் தனியார் வர்த்தகர்களிடமிருந்தும் ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்குக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். சரக்கு வந்தவுடனே அவற்றைச் சரி பார்த்து எடை குறைந்துள்ளதற்காக சப்ளை செய்தவர்களிடமிருந்து மீண்டும் சோரிப் பெற்றிருக்க வேண்டும். எடை குறைந்திருப்பதாக உடனடியாகக் கோராமல் 3 மாத

கால தாமதம் ஏற்பட்டதால், இந்த மாதிரியான நஷ்டம் பெருவாரியாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நஷ்டத்திற்குக் காரணமாக இருந்த அனைவரின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப் போலவே சீனி விற்றதில் ஏற்பட்ட ஊழல்களுக்காக சில அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், 1975 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தக் குறைபாடுகளுக்காக இதுவரையிலும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆளுநர் உரையில் வணிகர் நலக் குழுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வணிகர் நலக் குழு அமைக்கப்படுமென்று முன்பு சொன்னார்கள். ஏறத்தாழ 12 இலட்சம் வணிகர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுடைய நன்மையைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாததைப்பற்றி வருத்தமடைகிறேன்.

சென்னையில் உள்ள மூர் மார்க்கெட்டில் வியாபாரம் செய்யும் இடம் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்குத் தேவையென்று கேட்டிருக்கிறார்கள். அங்கு வியாபாரம் செய்பவர்களுக்கு வேறு இடம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த இடத்திற்குப் பக்கத்திலே உள்ள தாமரைக்குளம் என்ற இடத்தில் பல அடுக்குகளைக் கொண்ட வணிக நிலையத்திற்கு முன்பாக ஏற்பட்டிருக்கிற ஷாப்பிங் காம்பிளக்ஸ் போன்ற கட்டிடங்களைக் கட்டி அவர்களுக்குத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் அந்த வியாபாரிகளை உடனே வெளியேற்றினால் அவர்களுக்கு அதிக சிரமங்கள் இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீர்ப்பாசன, மின் திட்டங்களை மேற்கொள்ளுவதற்காக மேற்கே நோக்கிப் பாயும் நதிகளைத் தமிழகத்திற்குத் திருப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஹொகனேகல் மின் திட்டத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்கைப் பற்றி எங்களுடைய காந்தி-காமராஜ் தேசிய காங்கிரசின் கருத்து என்னவென்றால் இதை இன்னும் தீவிரமாக அமுலாக்க வேண்டும் என்பதுதான். மதுவிலக்கினால் பல ஆயிரக்கணக்கான ஏழைகள் பயனடைந்து வருகிறார்கள். மதுவிலக்கு இல்லாதபோது கிராமங்களில் எத்தனையோ பேர்கள் ஒரு முழத் துண்டுகூட இல்லாமல் இருந்திருக்கிறார்கள். அனைவரும் இப்போது ஒரு துண்டை அணிந்திருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள பெண்கள் காதில் இப்போது நகையைப் பார்க்க முடிகிறது. இப்போது



கிராமங்களில் உள்ள ஆண்களும், பெண்களும் ஒழுங்காக உடை அணிய முடிகிறது. இல்லாவிட்டால் தலைவர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப் போல, ஒவ்வொரு வீட்டிலும் ஒரே ஒரு சேலை தான் இருக்கும். அதைத்தான் மாற்றி மாற்றி கட்ட வேண்டியிருக்கும். குடிப் பவன் என்று சொல்லுவதற்கு வெட்கப்படக் கூடியவர்கள் நாம். ஆகவே நமது நாட்டில் மதுவிலக்கு வெற்றிகரமாக அமையாவிட்டால், வேறு எங்கே அமைய முடியும்? மதுவிலக்கை அமுல் நடத்துவதில் காவல் துறையினர் சரிவரக் கண்காணிக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். காவல் துறையினருக்கு அரசாங்கம் பல சலுகைகளை அளித்திருக்கிறது. ஆகவே அவர்கள் முழு மனதோடு அரசாங்கத்தோடு ஒத்துழைத்து மதுவிலக்கை அமுல் படுத்த வேண்டும். நிச்சயமாகக் கைவிடக்கூடாது என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பகுதி நேர ஊழியர்களாக இருக்கும் கிராம அதிகாரிகளை நீக்கி விட்டு பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள ஏற்பாட்டை நீக்கும்போது, அடுத்து வரக்கூடிய ஏற்பாடு அதைவிடச் சிறந்ததாக இருக்குமா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே இருந்தவர்களை நீக்கும்போது, அவர்களுக்கு உரிய நிவாரணத்தை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக ஆளுநர் அவர்களுடைய உரை பாராட்டக் கூடிய வகையிலே, அல்லது நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே, மக்கள் எதிர்பார்க்கின்ற வகையிலே அமையவில்லை என்பதை வருத்தத்தோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஏறத்தாழ 24 பக்கங்களைக் கொண்ட அறிக்கையாக இருந்தாலும், ஏற்கனவே நிதிநிலை அறிக்கையிலும் அதற்குப் பின்னாலே இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னவைகளும் மீண்டும் இதிலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறதே தவிர, புதியதாக ஆட்சியாளர்களுடைய திட்டங்கள், நோக்கங்கள் எவை எவை என்பனவைகளை உள்ளடக்கியதாக இல்லாமல் மக்களை ஏமாற்றுகின்ற ஒரு தொடர் கதையாக இது அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநருடைய உரையிலே உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது பற்றியும், அதனுடைய சிறப்புகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லி இந்த மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

(திரு. சே. ஆறுமுகம்) [1981 ஜனவரி 28

நேற்றைய தினம் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் கூட, "ஏதோ உலகத் தமிழ் மாநாடு என்று சொன்னாலே யாருக்கோ பட்டா செய்து கொடுத்தது போலவும், அவர்கள்தான் நடத்த வேண்டுமா, நாங்கள் நடத்தினால் ஏற்றுக்கொள்ள மாட்டார்களா?" என்ற கேள்வியை எழுப்பிப் பேசினார்கள். உலகத் தமிழ் மாநாடு 15 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டு நடத்தப்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில், நாங்கள் தமிழ் நாட்டிற்குச் சொந்தக்காரர்கள், தமிழர்கள், தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்கள். ஆகவே இப்படிப்பட்ட மாநாடுகள் நடைபெறுவதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து மாறுபாட்டுக்கும் எதிர்ப்புக்கும் இடமில்லை. எங்களுக்கு இது பட்டா செய்து தரப்படவில்லை. இன்றைக்கு மாநாடு நடத்தியவர்கள் பட்டை [illegible] கொள்ளுவதற்காக இந்த மாநாட்டை நடத்திவிட்டு, "இதற்காக 30 [illegible] பேர்கள் வந்தார்கள், ஆகவே தமிழர் என்று ஒத்துக்கொண்டார்கள், இனி மேல் யாரும் தமிழர் இல்லையென்று பேசக்கூடாது" என்று 25 ஆம் தேதி சேலத்திலே நடந்த ஆளும் கட்சியினுடைய பொதுக் கூட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் ஒருவரே கூட பேசியிருக்கிறார். "இனிமேலும் தமிழர் இல்லை யென்று பேசக் கூடாது. அதுவும் முதலமைச்சர் தமிழர் இல்லை" என்று பேசக்கூடாது என்று அங்கு பேசியிருக்கிறார்கள். ஆகவே இப்படி ஒரு மகா

(முற்பகல் 11-50)

நாட்டை நடத்தி அவர் தமிழர், தமிழுக்குச் சொந்தக்காரர், ஆகவே இனி மேல் தமிழர் அல்லாதவர் நாட்டை ஆளுகிறார் என்று சொல்ல முடியாது என்பதைக் காட்டத்தான் உலகத் தமிழ் மகாநாடு நடத்தியிருக்கிறார்கள். அதற்காக சர்க்காருடைய பணத்தை ரூ. 15 கோடிக்குச் செலவு செய்து, [illegible] காட்டிவிட்டோம் என்று சொல்வதற்காக இந்தக் [illegible] பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு அல்ல. மற்றபடி இதனால் எந்தவிதமான பயனும் இல்லை, நல்ல பலனும் பெற்றதாகத் தெரியவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த திரு. நல்லசிவன் அவர்கள் கூட சொன்னார்கள்.

உலகத் தமிழ் மகாநாட்டை 1968-லே அறிஞர் அண்ணா அவர்கள் நடத்தினார்கள். அப்போது அவர்கள் தமிழ் மொழி தோன்றிய வரலாறு, தமிழ் எழுத்து தோன்றிய வரலாறு, தமிழ் எழுத்துக்களை இன்னும் எப்படி எல்லாம் சீரும்சிறப்புமாக அமைக்கலாம், எழுத்து வடிவங்களை எப்படி அமைக்கலாம் என்பதற்காக என்று தமிழ் அறிஞர்கள் கருத்தரங்கைக் கூட்டினார்கள். [illegible] படித்தவர்களை வைத்து நல்ல முறையில் நடத்தப்பட்டது. [illegible] தமிழ் மகாநாட்டில் படித்தவர்கள் கருத்துக்களை பதிவு [illegible]



1981 ஜனவரி 28] (திரு. [illegible])

[illegible] பேர்கள் கூட உட்கார்ந்து பேசவில்லை என்ற மனக்குறையைச் சொன்னார்கள். இதற்குத்தான் 15 கோடி ரூபாயைச் செலவு செய்து மகாநாடு நடத்தியிருக்கிறார்கள். இதிலே நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். "நாங்கள் தமிழுக்கு மகாநாடு எடுத்தோம். நாங்கள் தமிழை வளர்க்கிறோம். நாங்கள் தமிழர்கள்தான். நாங்கள் யாருக்கும் பணியமாட்டோம்" என்று இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்கள் பேசுகின்றார்களே இதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மகாநாட்டின் இறுதிக்கட்ட நாளில் ஊர்வலம் நடத்தினார்கள். இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் அவர்களை வரவழைத்தார்கள். அவர்களும் உலகத் தமிழ் மகாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும், தமிழுக்குப் பெருமையைத் தேடித்தர வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு வந்திருந்தார்கள். அதை நான் குறை சொல்லவில்லை. ஆனால் அங்கே தமிழினுடைய மரபையே மூடி மறைத்தார்களே, இதுதான் அவர்கள் தமிழ் பற்றா என்று கேட்க விரும்புகிறேன். சேரன் செங்குட்டுவனுக்கு அலங்கார வண்டி அமைத்தார்கள். வடபுலத்திலே இருந்த கனக விஜயர்களை வென்று இமயத்திலே கண்ணகிக்குச் சிலை எடுக்க கல் சுமந்து வந்த வீரத்தைக் காட்டக்கூடிய வகையிலே, சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுத்த அந்த வீர வரலாற்றைக் காட்ட அந்த மாபெரும் ஊர்வலத்திலே அந்த அலங்கார வண்டி வருவதை ஏன் நீங்கள் நிறுத்தியிருக்கிறீர்கள் என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதை நான் தமிழுக்குச் செய்த துரோகம் என்று சொன்னால், ஆத்திரப்படுவதிலே என்ன நியாயம் இருக்க முடியும்? அவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் இந்த சர்க்காரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏன் இப்படி வடநாட்டுத் தலைவர் தலை மீது கல் எடுத்து வந்தால் அதைப் பார்த்து இந்த ஆட்சியின் மீது இந்திரா காந்தி அம்மையார் கோபித்துக்கொள்வார்கள் என்று பயந்திருக்கிறார்களா என்று கேட்கிறேன். இதுதான் அவர்கள் வீரமா? அதே உலகத் தமிழ் மகாநாட்டிலே அம்மையார் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் மூலமாகத் தான் நான் தமிழினுடைய சிறப்பினைத் தெரிந்து கொண்டேன் என்று பேசினார்கள். தமிழினுடைய சிறப்பைப்பற்றி பிரதமர் அவர்களே பேசும்போது, தன்னுடைய உரையிலேயே குறிப்பிட்டார்கள். இந்த அரசு அந்த சேரன் செங்குட்டுவன் அலங்கார வண்டி வரக் கூடாது என்று நிறுத்தியிருக்கிறது. செலவு செய்து தயாரிக்கப்பட்ட பிறகு ஊர்வலத்திலே விடவில்லை. தமிழின் மானத்தைக் காப்பாற்ற எங்களைப் போன்றவர்கள், திராவிட பாரம்பரியத்தில் வந்தவர்கள் கேட்டால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. எப்

போதே மக்கள் முன்னேற்றக் கழகத்தினை மறந்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். அதே மக்கள் இப்போதுள்ள ஆளும் கட்சியினரை மறக்க எவ்வளவு காலம் பிடிக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் காலப் போக்கில் மறந்துவிடுகின்ற காரணத்தினாலே, மக்களை திசை திருப்புவதற்காகத்தான் இந்த 15 கோடி ரூபாயைச் செலவு செய்து விளம்பரத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளில் இந்தக் குற்றச் சாட்டை நாங்கள் சுமத்தாமலிருக்க முடியாது. அதுபோலவே, இந்த உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற நேரம் விவசாயப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நேரம். 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் சிறையிலே இருந்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூட்டில் 10 பேர்கள் இறந்துபோனார்கள். ஒரு சிறுவனும் இறந்துபோயிருக்கிறான். பல கிராமங்களிலே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டப் போனவர்களால், விவசாயக் குடும்பத்திலே ஆண்கள் சிறையிலே இருந்த காலத்தில், பெண்கள் நிம்மதியாக உறங்க முடியாத நிலையில் இருந்தார்கள். அவர்கள்கூட துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் மற்ற பகுதிகளிலே சென்று வாழ்ந்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலைகளிலேதான் இப்படி 15 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்டிருக்கிறது. சிறையிலே இருந்தவர்களைப்பற்றி யோசித்தார்களா? 10 பேர்கள் இறந்திருக்கிறார்கள் துப்பாக்கி சூட்டில். ஒரு சிறுவன்கூட இறந்திருக்கிறான். ஆளும் கட்சியின் சார்பில் அந்த நேரத்தில் வருத்தம் தெரிவிக்கப்பட்டதா? அதையெல்லாம் ஊக்குவித்த வகையிலே அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விலைவாசிகள் உயர்ந்துகொண்டிருக்கின்றன. அரிசி, சோளம், ராகி இவைகள் விலைகள் எல்லாம் ஏறியிருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன? காவல் துறை நண்பர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள்கள். தானியங்கள் கொடுக்கிறார்கள். அதுவும் விளம்பரத்திற்கு ஒரே ஒரு முறை கொடுத்தார்கள். இப்போது அந்த மாதிரி கிடைக்கிறதா? காவல் துறை அதிகாரிகளுக்கு அதே அரிசி தரப்படுகிறதா? இல்லை. வேலை இல்லாதவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் திட்டத்தில் என்ன கொடுக்கிறார்கள்? யாரும் வாங்காமல் இருந்த, புழுத்துப்போன அரிசியைக் கொடுக்கிறார்கள். காவல் துறை நண்பர்களுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் ஏற்படவேண்டுமென்றால், அவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்திலேயே ரூ. 50 கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். இப்போது கொடுப்பது ஒரு விளம்பரத்திற்காகத்தான் என்று எங்கள் தலைவர் சொன்னார்கள். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறதா? இதையெல்லாம் இந்த அரசினர் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.





தொழிலாளர்களுடைய நிலையை எடுத்துச் சொன்னால் கோபம் வரும். இன்றைக்கு சொன்ன மாநகரத்தில் உள்ள பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள், 13 ஆயிரம் தொழிலாளர்கள் பிரச்சினையில் இந்த அரசின் அணுகு முறை என்ன? அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன பாதுகாப்பு கொடுக்கிறது? இந்தத் தொழிற்சாலையை நடத்த வேண்டுமென்ற அக்கறையோடு இன்றைக்கு அணுகுகின்ற முறை இருக்கிறதா. அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா என்றால் இல்லை. சேலத்தில் மேக்னசைட் தொழிற்சாலையை எடுத்து நடத்துகிறார்கள். அங்கேயுள்ள தொழிலாளர்கள் தனியார் நடத்தியபோது கொடுத்த சலுகைகள் இல்லை என்று போராட்டம் நடத்துகிறார்கள். அதற்கான கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே சேஷசாயி பேப்பர் மில்ஸ், சர்க்கரைத் தொழிற்சாலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் என்று இப்படிப் பல இடங்களில் தொழிலாளர்கள் கோரிக்கைகளை வைத்துப் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதையெல்லாம் பேசித் தீர்க்க அரசாலே முடியவில்லை. அந்தத் திறமையில்லை. ஆனால் உடனே அவசரச் சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். "அரசாங்கத் துறையிலே மற்றும் வேறு துறைகளிலே இருப்பவர்கள் போராட்டம் நடத்தக்கூடாது. போராட்டம் நடத்தினால் விசாரணையின்றி ஓராண்டுகாலம் சிறையிலே வைப்போம்" என்று அவசரச் சட்டம் கொண்டுவருகிறார்கள். இன்று நடப்பது தமிழர் ஆட்சி அல்ல. அவசரக்காலச் சட்டம் விதிக்கின்ற ஆட்சி என்ற பெயர் அளிக்கலாம். விவசாயிகள் போராட்டம் நடத்தினால், அவசரச் சட்டம் இருக்கிறது. 3 ஆண்டுக் காலம் விசாரணையில்லாமல் சிறை என்று சொல்கிறார்கள். அரசாங்க ஊழியர்கள் அவர்கள் குறைகளை எடுத்து வைக்கக் கூடாது. அத்தியாவசியப் பணி என்ற அடிப்படையில் அவர்கள் மீறி நடந்தால், அவசரச் சட்டத்தின் கீழ் சிறையிலிடப்படுவார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியே 5, 6 மாத காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு என்ன செய்திருக்கிறது? இதைப்பற்றியெல்லாம் இந்த அரசு எண்ணிப்பார்க்க வேண்டாமா? இந்த அரசு முதலாளிக்குப் பக்கபலமாகத்தான் இருக்கிறது. தொழிலாளர்கள் பக்கமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். 78 லட்சம் ரூபாய் கறுப்புப்பணம் இருந்தது என்று கணக்குக் காட்டியவர் எப்படித் தொழிலாளர் பக்கம் இருக்க முடியும்?

அடுத்து, மது விலக்குத் திட்டம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மது விலக்குக் கொள்கைபற்றி மனம் திறந்து பேசுங்கள் என்று சொல்கிறார்கள். ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் ஆளுநர் உரையிலே இப்படித்தான்

சொல்வது இப்போதுள்ள கொள்கை அவைவருக்கும் தெரியாதா? மாண்புமிகு உறுப்பினர், என் சகோதரர் திரு. ஜேப்பியார் அவர்களுக்குத் தெரியாதா? திரு. இராதா அவர்களுக்குத் தெரியாதா? ஊருக்கு ஒரு கடை இருந்தது இப்போது வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு - கடைகள் இருப்பது தெரியாதா? அது மட்டுமல்ல, வாங்கிக் குடித்துவிட்டு தன் வீட்டிற்குப் போவதில்லை. பக்கத்து வீட்டிற்குப் போகின்ற நிலைமைகள்தான் இருக்கின்றன. அந்த அளவுக்கு குடி வளர்ந்திருக்கிறது. கடந்த 6 மாத காலமாக தமிழகத்திலே குடித்தவன் மீது போலீசார் கேஸ் போடக்கூடாது. சாராயம் காய்ச்சினால் வழக்குப் போட முடியாது. இதற்கு உத்தரவுகள் இருக்கின்றன. எங்கு வேண்டுமானாலும் குடிக்கலாம், சாராயம் காய்ச்சலாம் என்ற சூழ்நிலை இருக்கிறது. மதுவிலக்கை ரத்து செய்வோம் என்று சொல்வதற்குப் பதிலாக, சொல்லாமலேயே ரத்து செய்து விட்டிருக்கின்ற நிலைமைகளைத் தான் பார்க்கிறோம். இந்தச் சூழ்நிலையில் மதுவிலக்குக் கொள்கைபற்றி மனம் திறந்து பேசுங்கள் என்று உரையிலே கேட்கிறார்கள் என்றால், அது மிகவும் வெட்கமானதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதற்காக அப்படி இந்த அவையில் கேட்க வேண்டுமென்று கேட்கிறேன். உங்கள் அரசினுடைய கொள்கையைச் சொல்லவேண்டியதுதானே. தி.மு.க. கழகத்தின்

(நண்பகல் 12-00)

கொள்கை என்ன என்று கேட்க வேண்டியது நியாயமான கேள்விதான், ஆனால் நாங்கள் பதில் சொல்லப் பயந்தவர்களா அல்லது தெரியாதவர்களா? எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், மதுவிலக்கை ஒத்தி வைத்தபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். "மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பது எங்களுடைய லட்சியம். ஆனால் அண்டை மாநிலங்களில் மதுவிலக்கு அமுலில் இல்லை, ரத்து செய்துவிட்டார்கள். அதனால் தமிழகத்தில் அதைச் சரியாக நிறைவேற்ற முடியவில்லை. பல வழிகளில் மது தமிழகத்திற்குள் வருகிறது. ஆகவே குடிப்பவர்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை. எனவே ஒத்தி வைக்கிறேன்" என்றுதான் சொன்னார்கள். அப்போதுகூட ரத்து செய்வேன் என்று சொல்லவில்லை. பின்னால் குடிப் பழக்கம் அதிகமாகி, அதனால் தமிழ் மக்கள் கெட்டுப் போகிறார்கள் என்பதால், மீண்டும் மதுவிலக்கை அமல்படுத்தினார்கள். அதில் நாங்கள் உறுதியாகத்தான் இருக்கிறோம். இப்போதைய அரசு மதுவிலக்கு குறித்து கடுமையான சட்டம் கொண்டுவந்த போதுகூடச் சொன்னோம். ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. அதன்மூலம் தண்டிக்கலாம், அதிலேயே குற்றம் செய்யக்கூடியவர்களைத் திருத்த வாய்ப்பிருக்கிறது, இப்போது வருகிற சட்டம் பாதகமானது என்று சொன்னோம். உடனே தாய்மார்கள் கண்ணீர் விடுகிறார்கள், அதைத் தடுப்



போம், அதற்காகச் சட்டம் கொண்டு வருகிறோமென்று வசனம் பேசினார்கள். ஆனால் இப்போது மதுவிலக்கை ரத்து செய்யப் போகிறோமென்று பகிரங்கமாக ஒத்துக்கொள்ளாமல், எதிர்க் கட்சிக்காரர்கள்மீது பழி போட்டு, எல்லோரும் சொன்னார்கள், நாங்கள் ரத்து செய்துவிட்டோம் என்று சொல்லி, நாளைக்கு ஊர்வலம் நடத்த நினைக்கிறார்கள். எனவே எங்கள்மீது பழி போட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமத் தன்னிறைவுத் திட்டமானாலும், வேலைக்கு உணவுத் திட்டமானாலும், நிறைய ஊழல்கள் நடைபெறுகின்றன. அந்தத் திட்டங்கள் மக்களுக்குத் திருப்திகரமாகப் பலனளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. காண்ட்ராக்ட் முறையால் பல ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், மக்களை ஏமாற்றும் வகையில் நடந்துகொண்டிருக்கிறது இது நீண்ட நாட்களுக்கு நடக்காது. உலகத் தமிழ் மாநாடு நடத்தினாலும் அல்லது வேறு விழாக்கள் நடத்தினாலும், மக்களை ஏமாற்ற முடியாது. மக்கள் வெகு வேகமாக வெறுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள், உறுப்பினர்கள் பேசுவதற்கான காலத்தை ஏற்கெனவே நிர்ணயித்திருக்கிறார்கள். அதாவது உறுப்பினர்கள் 10 மணித் துளிகளும், கட்சித் தலைவர்கள் 15 மணித் துளிகளும் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவையின் இரு புறங்களிலும் மணிப் பொறிகள் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர்களே அந்த மணிப் பொறிகளைப் பார்த்து, தாங்கள் பேசவேண்டிய காலத்தை நிர்ணயித்துக்கொள்வார்களென்று கருதுகிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தமிழகத்திலுள்ள மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையில் அல்லும் பகலும் பாடுபடும் மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையில் சிறப்பாக இயங்கும் தமிழக அரசின் நல்ல திட்டங்களை ஆளுநர் அவர்களுடைய உரை எடுத்துக்காட்டுகிறது. அதில் சொல்லப்பட்டுள்ள எல்லா அம்சங்களும் சிறந்த அம்சங்களாகவே இருக்கின்றன. ஆனால் கட்சிமாச்சரியத்தால், சிலர் தங்களுடைய வெறுப்பைக் காட்டும் வகையில், அது சரியில்லை, இது சரியில்லை என்று பேசுகிறார்கள். 'வேண்டாத மனைவி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்' என்று பழமொழி சொல்லுவார்கள்.

அதுபோல இந்த அரசு அவர்களுக்குப் பிடிக்கவில்லை, ஆதலால் இந்த அரசு எதைச் செய்தாலும் குறை கூறுகிறார்களென்று நினைக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இதை விட்டு, ஆளுநர் அவர்களுடைய உரையில் உள்ள சில அம்சங்களைப்பற்றி என் கருத்துக்களையும், யோசனைகளையும் சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையிலே, 30-வது பாராவிலே "சென்னை மாநகரைக் குறித்த மற்றொரு சிக்கலான பிரச்சினை, விரைவான போக்குவரத்துப் பிரச்சினையாகும். சென்னைக் கடற்கரையிலிருந்து வடக்கு நோக்கு சுமார் ரூபாய் 60 கோடிக்குக் கூடுதலான செலவில், பெரும்பகுதியினைக் கொண்டு செல்லும் விரைவுப் போக்குவரத்துத் திட்டம் (மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம்) குறித்து மத்திய அரசுடன் இவ்வரசு தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே இதுபற்றிப் பேசியிருக்கிறேன். இந்தத் திட்டத்தில் எனக்கு ஈடுபாடு உண்டு. இதுபற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் 80 சதவிகிதம் பிரயாணிகள் இரயிலிலும், மீதமுள்ள 20 சதவிகிதம் பிரயாணிகள் பேருந்துகளிலும், மற்ற வாகனங்களிலும் செல்லுகிறார்கள். ஆனால் சென்னை மாநகரில் அதற்கு மாறாக 80 சதவிகிதம் பிரயாணிகள் பேருந்துகளிலும், 20 சதவிகிதம் பிரயாணிகள் இரயிலிலும், மற்ற வாகனங்களிலும் செல்லுகிறார்கள். நாள்தோறும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் மூலமாக சுமார் 20 லட்சம் பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 4.6 லட்சம் பிரயாணிகள் மட்டுமே இரயில் மற்றும் இதர வாகனங்கள் மூலமாகச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. சென்னையில் தெற்கு வடக்கு திசைகளில், கிழ் பாகத்திலுள்ள பீச், ராஜாஜி சாலை, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையாறு, திருவான்மியூர் போன்ற பகுதிகளில் வசிப்பவர்கள் பேருந்துகளை மட்டுமே நம்ப வேண்டிய நிலைமை இருக்கிறது. பஸ் போக்குவரத்து இந்தப் பகுதிகளில் சிறப்பாக இயங்கினாலும், பல பஸ்கள் விடப்பட்டாலும், ஜனங்களின் நெரிசல் காரணமாக, பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மேலும் அதிகமான பஸ்களை விட்டால், சாலைகள் தாங்காதென்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த இடங்களில் துரித இரயில் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகும். மேற்கூறிய பகுதிகளில் 1981-ஆம் ஆண்டில் தினந்தோறும் 7.6 லட்சம் பயணிகள் இருப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. பஸ்கள் 3.1 லட்சம் பயணிகளுக்குத்தான் போக்குவரத்துக்கு உதவி செய்ய முடியுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் மீதமுள்ள



4.5 லட்சம் பயணிகள் அவல நிலைக்குள்ளாவார்கள். அவர்களுக்கு எந்தவித மான போக்குவரத்து வசதியும் கிடையாது. அவர்களுடைய அவல நிலையைப் போக்க துரிதப் போக்குவரத்துத் திட்டம் உடனே நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1977-ஆம் ஆண்டிலே மெட்ரபாலிடன் டிரான்ஸ்போர்ட் பிராஜக்ட் என்ற ஒரு இரயில்வே இலாகா அமைப்பு திட்டக் குழுவிற்கு ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1977-ஆம் ஆண்டிலிருந்து திட்டக் குழுவின் அங்கீகாரம் பெறாமல் அந்தத் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. நமது மாநில அரசு அந்தத் திட்டம் குறித்து தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. வேண்டிய நிலத்தைக் கொடுத்துதவ முன்வந்தது. அது குறித்து மத்திய அரசும், திட்டக் கமிஷனும் இன்னும் முடிவெடுக்கவில்லை. திருவொற்றியூரிலிருந்து கஸ்தூரிபாய் காந்தி நகர்வரை சுமார் 21 கிலோமீட்டர் தூரத்திற்கு மேற்படி திட்டம் வகுக்கப்பட்டது. பண நெருக்கடி காரணமாக அந்தத் திட்டத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து நிறைவேற்றலாமென்று யோசனை சொல்லப்பட்டது அதாவது பீச்சிலிருந்து லஸ்வரை 8.1 கிலோமீட்டர்; லஸ் முனையிலிருந்து கஸ்தூரிபாய் காந்தி நகர்வரை 4.3 கிலோமீட்டர்; பீச்சிலிருந்து திருவொற்றியூர்வரை 9.3 கிலோமீட்டர் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்தார்கள். ஆனால் மூன்றாவதாகச் சொல்லப்பட்ட பீச்-திருவொற்றியூர் திட்டம் இப்போது கைவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு திட்டங்கள் மட்டுமுள்ளன. அதில் முதலில் சொன்ன திட்டத்தை இரண்டாகப் பிரித்து நிறைவேற்ற இது நல்ல தருணமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 30-வது பாராவில் கூறப்பட்டுள்ள திட்டம், அதைப்பற்றியதுதான். பீச்சிலிருந்து பாரதி சாலைவரை 5.2 கிலோமீட்டர்; பாரதி சாலையிலிருந்து லஸ் வரை 2.9 கிலோமீட்டர். இந்த இரண்டையும் தனித் தனியாகவோ அல்லது சேர்த்தோ ஆரம்பித்து நிறைவேற்றினால், மக்களுடைய அவல நிலை சீக்கிரமாக நீக்கப்படும். ஆகையால் நம்முடைய அரசு மத்திய அரசுடன் எப்படியாவது வாதிக்கு மக்களுடைய அவல நிலையை எடுத்துச்சொல்லி, இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்

(பிற்பகல் 12-10)

கிறேன். அப்படிச் செய்யப்பட்டால், நன்றாக இருக்கும் நாளுக்கு நாள் விலைவாசி ஏறிக்கொண்டிருப்பதால், உடனே இதைச் செய்யாவிட்டால், மதிப்பீடு அதிகமாகும். இத்திட்டத்தால் வேலையில்லாத மக்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்படும். இதையெல்லாம் மனதில் கொண்டு சீக்கிரத்திலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்திருப்பவர்களுக்கு குடும்பத்திற்கு ஒருவருக்காவது வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என்று இருப்பது மிக அருமையான நல்ல திட்டம். இது புரட்சிகரமான திட்டமும்

கூட. நிச்சயமாக அத்தனை குடும்பங்களுக்குப் பயனளிக்கக் கூடிய அருமை யான திட்டம். வேலைவாய்ப்பு நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்திருப்பவர்களுக்கு 7, 8 ஆண்டுகள் ஆனாலும் வேலை கிடைப்பதில்லை. பெயர்களுக்கு அழைப்பு அனுப்ப 7, 8 ஆண்டுகள் ஆகிறது.

ஆகவே வேலை வேண்டி வேலைவாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்துள்ள வர்களில் 1 வருஷம் அல்லது 2 வருஷம் ஆனவர்களுக்கு வேலைக்கான முழுத் தகுதி இருந்தால் அவர்களை நிறுவனங்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்கிற முறையில் உத்தரவு பிறப்பித்தால், நலமாக இருக்கும்.

அடுத்து, இங்கே மதுவிலக்கைப்பற்றிப் பலரும் பேசினார்கள். ஒன்றை மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் நீதிபதியாக இருந்தபோது, அடிக்கடி குடித்தவர்களை என்னிடத்தில் கொண்டு வருவார்கள். குடித்து விட்டு என்னிடத்தில் ஒரு முறை வந்தவர்கள் மறுமுறையும் வருவார்கள். மதுப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டால் அதிலிருந்து மீளுவது மிகவும் கடினமான காரியம். அவர்கள் சிறைச்சாலையைக் கண்டும் அஞ்சுவதில்லை. மறுபடியும் திரும்பத் திரும்ப சிறைச்சாலைகளுக்குச் செல்லவும் தயங்க மாட்டார்கள். அவர்கள் நோயாளிகள் போன்றவர்கள். அவர்களுடைய நோயைப் போக்க வேண்டுமே தவிர, அந்த நோயாளிகளைப் போக்கக் கூடாது. சிறைச்சாலைக்கு அவர்களை அனுப்புவதை விட அவர்கள் ஒரு வகை நோயாளிகள் என்கிற முறையில் சைக்கியாடிரிக் என்கிற மெடிக்கல் டிரீட்மென்டைக் கொடுத்து அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வர அரசிடம் யோசனை ஒன்றும் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அப்படி இதுவரை யோசனை இல்லா விட்டாலும் கூட, இனிமேலாவது அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வுபெற்ற நீதிபதி என்கிற முறையில் நீதிபதிகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நீதிபதிகள் இன்றையதினம் இந்த நாட்டிலே கண்ணி யமாக நடத்தப்படவில்லை. அவர்களை உதாசினப்படுத்துகிறார்கள். தமிழகத்திலுள்ள நீதிபதிகளுக்கு அவர்கள் குடியிருக்க சரியான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே சென்னையிலே எழும்பூர் கோர்ட் காம்பவுண்டுக்குள் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமொன்று இருந்தது. அதை மறுபரிசீலனை செய்து விரைவிலே குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்து அவர்களைக் கண்ணியத்துடன் நடத்துகின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிபதிகள் தங்கள் வீட்டிலிருந்து கோர்ட்டுக்கு





பஸ் மூலம் போகின்ற அவல நிலை இருக்கிறது. நீதிபதிகள் கோர்ட்டுக்கு வருகின்ற கைதிகளுடன், குற்றவாளிகளுடன் கூடவே பயணம் செய்கின்ற கண்ணியமற்ற நிலைமை இருக்கிறது. நீதிபதிகள் வீட்டிலிருந்து கோர்ட்டுக்குச் செல்ல அலுவலகக் கார் அல்லது அலுவலக பஸ் போன்ற ஏதாவது ஒரு வசதியை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஓய்வு பெற்ற நீதிபதி என்கிற முறையில் ஓய்வு பெற்றவர்களைப் பற்றியும் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஓய்வு பெற்றவர்கள் ஏழைகள். வருமானத்தில் குறைந்தவர்கள். அவர்களை யாரும் கவனிப்பதில்லை. ஓய்வு பெற்றுவிட்டால் வீட்டில் பிள்ளைகள் கூட அவர்களைச் சரியாகக் கவனிப்பதில்லை. ஓய்வு பெற்றவர்களுக்கு ஒரு ஈஸிசேர் கொடுத்துப் படுக்க வைக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. எஸ். வெங்க டேசன் அவர்களை அவருடைய பிள்ளைகள் சரியாகக் கவனிக்கிறார்களா? (சிரிப்பு).

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: நான் அந்த வகையில் கொடுத்து வைத்தவன். என்னை மிகவும் நன்றாகக் கவனிக்கிறார்கள். உண்மையில் ஓய்வு பெற்ற பிறகு தான் மிக நல்ல முறையில் இருக்கிறேன். நான் என்னை மனதில் வைத்துப் பேசவில்லை. பொதுவாகத் தான் அந்தக் கருத்தை நான் சொன்னேன். பொதுவாக ஓய்வு பெற்றவர்களின் பரிதாபத்திற்குரிய நிலையைத்தான் குறிப்பிட்டேன்.

அடுத்து, பணியிலிருக்கும் அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதைப்போல் ஓய்வு பெற்றவர்களுக்கும் முழுமையாக அகவிலைப்படி கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பென்ஷனை கம்யூடேஷன் பண்ணுகிறவர்கள் 10 வருடத்திற்குப் பிறகும் உயிரோடு இருந்தால், அதன் பிறகு பென்ஷன் தொகையை முழுவதுமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். அதுமாதிரி ஆந்திராவில் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் இங்கேயும் ஓய்வு பெற்றவர்களுக்கு கம்யூடேஷன் காலத்திற்குப் பிறகு முழு பென்ஷன் தொகையையும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Mr. Vice-Chairman, Sir, I om happy that at long last we are having another session of the Legislature. I would like first to convey to the Government my serious apprehensions about the long gap that exists between sessions of the Legislature. We adjourned some time in the month

[Thiru A. R. Damodaran] [1981 ஜனவரி 28

of August last and we have met again only in the month of January. In the meantime, problems keep accumulating resulting also in certain agitations. It is my firm belief that if we could have more frequent sessions of the Legislature, it would enable the Government to understand the various viewpoints and, perhaps, to take remedial measures which would prevent mounting frustration and bitterness amongst the public.

I would also like to mention that one unfortunate feature during this long gap has been the issue of eleven Ordinances by the Government, enacting various measures which are perhaps not so urgent as far as public interest is concerned. Sir, Ordinances are anathema to any Legislature and, particularly, Ordinances which seek to raise taxes are even more reprehensible from the point of view of the Legislature. I shall have occasion to refer to these Ordinances when Bills to replace them are brought before this House. But, I would like to refer to one particular measure introduced by the Hon. the Minister for Revenue whereby he has repealed the Madras Sales of Motor Spirit Taxation Act, 1939 and introduced a varied rate of taxation on certain petroleum products, without legislative sanction, resulting in an increase of revenue of Rs. 4.5 crores per annum. Resorting to any taxation on petroleum products, without the sanction of the Legislature is, in my opinion, particularly reprehensible because the Legislature should always be consulted before taxation proposals are introduced. He has also introduced certain variations in the methods of collecting betting tax, and that too, one week after it was publicised in a newspaper in Madras. I must congratulate the "Indian Express" on its investigative reporting because it published its report one week before the Government introduced the Ordinance raising the betting tax. The same paper has also predicted a Budget proposal, which I except the Hon. the Minister for Finance to clarify, that he proposes to raise the surcharge on sales tax from 5 per cent to 15 per cent. If this is true, it amounts to a leakage of a Budget secret and may well involve a question of grave breach of privilege of this House and I reserve the right to move this motion at the appropriate time. Perhaps, the Hon. the Finance Minister may give up this proposal because it has been published in the newspaper. But, nonetheless, I think that there should be a degree of confidentiality about Budget documents and this Government cannot afford to ignore the norms and conventions that have been established not only in our country but in all countries abroad which follow the democratic practice.



1981 ஜனவரி 28] [Thiru A. R. Damodaran]

Sir, reference has been made to the celebration of the World Tamil Conference at Madurai. I do not wish to take the time of this House excepting to say that the arrangments made appear to have been excellent from the point of view of organisation of the various pageants connected with the festival. If I venture to offer one suggestion, it is only because certain suggestions have been made by non-Tamilians in respect of Tamil language. In Tamil Nadu, we tend to lose sight of the fact that if we wish to popularise the study of Tamil not only abroad but even in States other than Tamil Nadu, Tamil Nadu will have to think of a series of measures whereby they can popularise the language in other States. I would only like to refer to two great international associations, the Alliance Francaise and the Max Muller Bhavan, where French and German languages are taught to various pepole all over the world by the starting of Institutes for those languages. My appeal to the Tamil Nadu Government will be that in other States of India, let alone the world, we should popularise the teaching of the Tamil language to non-Tamilians by opening Institutes of Tamil whereby the best culture, tradition and civilisation of this language could be reflected in such Institutes.

(பிற்பகல் 12-20)

Non-Tamilians have always expressed a difficulty that Tamil is not an easy language to learn and therefore, new methods are also required to teach this language in 18 months or 24 months so that access to ancient literature may be possible to people speaking other languages. At the same time, I would like to mention that it must be remembered that if we wish to popularise Tamil language in non-Tamil States, it is essential for Tamilians to learn the languages of those States because, if we try to teach Tamil, without knowing the local language, we will not be able to make any impression on those people. I refer to this because—I must refer to this because—a very controversial issue was raised at the World Tamil Conference at Madurai by no less a person than the Vice-Chancellor of Madurai Kamaraj University that we should ban the study of English in the primary sections, as otherwise the mother-tongue would not grow. I would like to say that this type of linguistic chauvinism should not be displayed in the Eighties, when students wish to acquire more knowledge and the text-books of two years ago become out-dated now. If Tamilians wish to make an impression not only in our country but abroad, we must realise that a degree of liberalism is required in the teaching and study of languages. I would like

to reiterate my plea to the Hon. the Education Minister that what Tamil Nadu lacks today are institutes for teaching languages not only Indian but also foreign languages, because Tamilians, in my opinion, have lost considerably over the past 20 years because of certain attitudes we have taken towards the language question. I am not referring to the Official Language, Language of the Union, Link language, etc. But, I feel that our stress of Tamil alone and neglect of English as well as Hindi has disastrous consequences to Tamilians to which my hon. Friend Thiru Nallasivan referred, when a blanket ban is imposed on Tamilians seeking employment to Bank services, to Government services, to all-India services and to all services that are controlled by the Central Government. There is need, therefore, for a re-thinking on this issue and I would like to plead for a liberal attitude.

Sir, mention has been made in the Governor's Address about the Sixth Five-Year Plan and the fact that Rs. 3150 crores has been secured by the Tamil Nadu Government for the Sixth Five-Year Plan. I shall not allow myself to be influenced by figures at this stage, excepting to express the hope that the Sixth Five-Year Plan for Tamil Nadu will truly reflect development activities, which, in my opinion, have been sadly neglected over the past 10 years. Successive Five-Year Plans have only succeeded in planning for shortages and not planning for plenty. If we review what has happened over the past 30 years, we are short in not one commodity but in 15 different commodities that have been listed in the Essential Commodities Act. We are short in sugar, we are short in cement, we are short in petroleum products and we have shortages of saleable items of steel and a hundred other commodities which are affecting industrial development. I hope that the Tamil Nadu Government will be able, in the presentation of its Budget documents, to outline clearly what degree of industrial development they plan because one of the questions that face young boys and girls in Tamil Nadu today is the large labour force of over 2½ millions of young boys between the age of 25 and 30 who do not have employment opportunities and who are registered, and perhaps not even registered, in our Employment Exchanges. No amount of loans that can be written off, no amount of doles that can be given by a Government will ever be able to satisfy the aspirations of these young people unless we are able to promote employment opportunities. Therefore, I hope that in the forthcoming Budget, the Tamil Nadu Government will be very clear in the outlining of its proposals for the industrial development of our State.



Sir, one thing has been mentioned in the Governor's Address on which I would like to lay particular stress; and that is that the public distribution system is to be strengthened to make available commodities which are in short supply. This is a philosophy that has been pursued by successive Governments and accepted almost as an axiomatic principle by political parties in the belief that the establishment of a public distribution system will enable commodities in short supply to be supplied to the public. Actually, experience has shown that the public distribution system is only a temporary palliative which is incapable of solving the grim problems that face the people in the availability of commodities within the system. Because the Government seems to have taken a decision that the public distribution system should be entirely manned by Government employees or run by co-operatives, I would plead that in the public distribution system, which is doubt-less necessary during a period of shortages, they should employ fair price shops manned by private individuals who can be licensed by the Government to distribute these commodities, because a public distribution system can be an extremely expensive system.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

We have a full range of controls—distribution controls, price controls, industrial development regulation controls and hundred other controls—which, in my opinion, are inhibiting growth and employment in our country. The Dagale Committee reviewed the system of controls; but, unfortunately, its recommendations have been shelved. I hope that at least in so far as Tamil Nadu is concerned, we will be able to have a meaningful study of the existing controls to find out how far corruption is being promoted by such controls, how far black money is being generated by such controls and how far black-marketing transactions are actively promoted by the imposition of these controls. Traders have complained of the serious hampering of trade by various control agencies such as the Food Vigilance Organisation, the Essential Commodities staff in the Civil Supplies Department, etc. I would plead with the Hon. Minister, as I did during the Budget discussions last year, that we should have an advisory body of trade and commerce attached to the Civil Supplies Department to advise the Government on the difficulties of trade and commerce in arranging for the distribution of certain essential commodities that are being controlled by the Government. I would also like to remind the Government of the assurance given by the Hon. the Minister for Transport, Thiru Ponnaiyan, on the 11th February

1980 when he said that such an advisory board would be constituted. I would again like to invite the attention of the Government to the assurance given by the Hon. Thiru Ramachandran Minister for Power, in August 1980 when he said that such an advisory board would be constituted. I would request the Government to carry out these promises so that the problems of trade and commerce could be settled at least in such advisory forums.

(பிற்பகல் 12-30)

Sir, in Education, we are now faced with a very difficult situation, and in fact an adjournment motion has already been moved about the agitation in Annamalai University. I would like to make it very clear, having said in principle that I am against an amendment of any Act by Ordinance, that I do not approve of the amendment of the Annamalai University Act by an Ordinance. It has to be by legislation, it has to come before the Legislature and the Legislature must have full opportunity of discussing the various provisions of the proposed enactment, before it can be made into a law. I would like to express the feeling among the teachers that their security will be threatened if the University is opened and I would request the Government to give an assurance, that if the University is re-opened, no such incidents will be allowed and both the students and the members of the staff will be allowed to prosecute their normal avocations without any disturbance. If these two conditions are assured, I am sure the University will come back to normalcy. I would like to say that this is not going to remain an isolated incident. Already there are indications that it is likely to spread—I do not want it to spread to other Universities in Tamil Nadu, at a time when the last Semester of the University course is in progress and when examinations are scheduled to be held in April and May. In the month of January, we have had 20 holidays and we have to work only on 10 or 11 working days and this in itself has affected education in our State. I would plead with the Government to see that this issue is settled at as early a date as possible so that it may not escalate into a major crisis.

Sir, mention has been made of certain improvements that have been effected in the field of revenue administration. The Government have taken credit for the fact that the Board of Revenue has been abolished and that village officers have all been dismissed or proposed to be dismissed and new Village Officers are going to be appointed. May I point out from my knowledge of the field condition of the Revenue Administration, that the Revenue



Administration in our State is coming to a grinding halt and development activities are practically zero in the field of Revenue Administration? I do not know what object has been served by the abolition of the Board of Revenue, excepting to state that all those who were formerly labelled as Revenue Board Commissioners are now called Commissioners. Whether their Standing Orders will have the Judicial authority or validity of the former Board Standing Orders is a matter over which the Government should ponder because the Revenue Board was an institution that was respected and held almost sacred as fas as certain Revenue administration matters are concerned. Now I am grieved to find that village administration is gradually deteriorating and the conditions that exist today in our villages are dangerous and if the same anarchic condition in urban areas is allowed to extend to the villages, the policemen, whether the Government recruited 30,000 or 40,000 policemen, will not be able to rectify the situation.

A proposal has been outlined in the Governor's Address to which I must take strong exception, not because I have any sympathy for the farmers who may be agitating, but because, on grounds of principle. I think it is not business of the Government to interfere in agriculture to this extent. The proposal that has been outlined is that a Bill is likely to be introduced to prevent lands being left fallow and to prevent casuarina cultivation on lands which were formerly being used for cultivation of paddy. This is yet one more piece of legislation which we will add on to our books and which it will be impossible to implement. There are so many issues involved in this matter and I think that it is an unnecessary piece of legislation which the Government would do well not to introduce and then face the consequences of this enactment. The farmer must be allowed to choose what particular crop he will grow on his land. Fifteen years ago, when there was a prejudice against growing commercial crops like sugarcane, oilseeds and pulses, the then Minister mentioned that he was going to introduce a law which would prevent the cultivation of commercial crops because he wanted paddy to be grown. I think that all this stems from a misunderstanding and a total lack of economic knowledge of the growing of crops. I think that a farmer who desires to grow casuarina on lands which are not fit for paddy cultivation in the sense that the economic return to the farmer is not adequate should not be penalised by an enactment which says that the Government will send their employees to raid the villages and prosecute the farmers because they are growing casuarina. There is another factor

which I would like to mention. In 1985, the Government themselves may introduce an Ordinance that we should grow more casuarina crop because energy resources in our country are getting exhausted and because kerosene and other petroleum products are not likely to be available. In fact, today we are thinking of thermal stations which can be run with casuarina. When such is the case, I would like the Government to ponder over the matter and hesitate a great deal before they introduce this measure, just because a few farmers have stated, out of anger, that they are not going to grow paddy and that they will switch over to casuarina. It is an economic decision of the farmer. It is not likely to be followed by all farmers. Paddy is an uneconomic crop and still farmers continue to cultivate it because it is in their blood to grow a foodgrain crop and not many farmers would heed the advice of a few extremist people who may advise them to take this step.

Sir, Tamil Nadu is dominated by the civil services. A study by a very important author has revealed that the density of civil servants per square mile in Tamil Nadu is 73, the third highest in India, the first two being Nagaland and Mizoram which are tribal areas. We must be cautious in promoting the number of civil servants in Tamil Nadu because we already have to manage 7,52,000 of them. Now, if the Government appoint all these Village Officers as full-grade Government servants, they are going to introduce another 30,000 or 40,000 civil servants. The Hon. the Chief Minister bemoaned the fact that in a Budget of Rs. 936 crores or Rs. 950 crores, Rs. 325 crores are already being spent on Government services. Then, what is the point in extending the extent of the civil services without any benefit to the people? In fact, we have too many civil servants in Tamil Nadu. Tamil Nadu is rules and regulations oriented and it is totally non-development oriented. Every officer of the Government is interested in finding out whether there is a rule to prevent some growth or to prevent some development. This has been my consistent criticism and I am sure that Dr. Hande would have agreed with me if he had been with me on this side. I make this criticism not because I have any particular harsh feelings towards the civil servants but because we are promoting an administration whereby all elected representatives have been wiped out from the democratic system prevailing in our State. What excuse can the Government offer for keeping our co-operative institutions without elected co-operators and for keeping our local bodies, the Panchayats, Municipalities and Corporations, without elected representatives for six years? Why are they distrusting so much the



democratically elected representatives? Today, we are being ruled by Special Officers, *ad nauseam*, in every sphere of activity. There seems to be a distinct distrust of representatives in elected bodies. I would like to inform the Government that they are not doing their Party any good by delaying elections. This is not purely political. Now they have quoted the Census and one excuse after another is being quoted for not having elections. I do not know this philosophy but I would only like to say that if they are going to entrust political government to bureaucrats, they will only have a bureaucratic system of development and they are not going to have a development in which people will co-operate.

Sir, I would like to end by referring to only two items. There is one item which my hon. Friend Thiru Jeppiyar will feel if I do not mention and that is Prohibition. I cannot understand why he is pleading with us to give our views on Prohibition. Their views have been made very clear three years ago when they collected statistics and said that so much harm would come to the poor pepole if Prohibition was relaxed. Why have they turned the record now? Right from 1974. I have made my point very clear. I am not advocating drink for every body. I realise that alcohol is an evil habit. But, I have been pointing out that Government's attempts to enforce the rule of Prohibition by allowing their Police Officers to run amuck have destroyed the morality of our public services in Tamil Nadu which they are not going to rectify even by removing Prohibition. Once a man has tasted blood money in public service the Govern-

(பிற்பகல் 12-40)

ment will not find it easy to rectify the deterioration in public administration that has set in. I do not want to mention the various excuses that the Government may offer in the Budget documents for repealing Prohibition. Both the D.M.K. and the A.I.A.D.M.K., with due apologies, are excellent in the matter of turning the plate this way or that way and in whatever manner, it suits them. They are all trained pastmasters in the art of oratory and they have learnt how to speak on matters and as my hon. Friend Thiru Nallasivan mentioned, principles do not seem to influence very much their politics and I am sorry to point it out. Various Ordinances have been issued interfering with human rights and liberties of the individual. I hope the Government will realise that we must hold on to some principles in political life. I am not talking about the Ordinance regarding Prohibition but I am talking of other Ordinances promulgated.

One word more. I must refer to the speech of the Hon. the Chief Minister who has stated that he has objected to the transfer of the Chief Justice of the Madras High Court to Kerala on grounds of linguism. He has mentioned that we object only because the man who is transferred to Tamil Nadu does not know Tamil. My objection goes even further. I believe that this will constitute a serious threat to the independence of the judiciary because judicial officers must not be subjected to executive control. I would plead with all the political parties, in the interest of maintenance of the independence of judicial administration which we have got in our Constitution, to have a consensus approach to this issue because once we start tampering with the independence of the judiciary, the right of the individual to have access to Court when his liberty or life is affected will be denied. I hope the Government of Tamil Nadu will not change its views in this also as it has changed its view on Prohibition policy and that it will uphold the independence of the judiciary to be extremely sacred and that it will not only object on the ground that a Chief Justice may not know the language of the State but also object on grounds of preserving the independence of the judiciary. Thank you, very much.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. Deputy Chairman, I convey my thanks to His Excellency the Governor for his very comprehensive address to the Joint Session of the Legislature. While going through the Address, paragraph 6 mentions a very happy news that we have been able to get a plan outlay of Rs. 3,150 crores. This will help us bridge the gap between the rich and the poor and I am sure many welfare schemes would find their way into the plan.

Paragraph 37 of the Address says that the using of the land by the farmers for cultivation of casuarina will be prohibited. I do welcome this step. Fore growing casuarina, there must be sandy soil and people must be encouraged to grow casuarina on such soil. In Tiruvanimiyur and nearby villages, casuarina is growing very well. They must be educated in these maters. The land which is fit for cultivation of foodgrains should be used for growing foodgrains. I would suggest that we must have Grow More Food Campaign Committees at every level to educate the people that production of food is very important and, at the same time, production of fire-wood is also important. In that way we will be able to educate the farmer in the use of his talents for growth of those articles.





I was much taken by paragraph 38 which says that at least one in every family will be provided employment. Now we are going to have census and if we have a comprehensive application in which all the details are mentioned, we will be able to find out and identify the areas and we will be able to help them.

Now this is the International Year of the Physically Handicapped and if we are able to find out the number of physically handicapped persons available, we will be able to help them. There is a prejudice and sometimes information about physical handicap is not given to the Census Officers. But still we can persuade the people to come out with proper details and that will help us to provide them employment.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

If we are able to assess the economic condition of the particular family, provision of employment to one person in each family will be made easier.

Now, as one who is a firm believer in Prohibition, I want to make an appeal. Whatever may be the good and bad points of Prohibition, Prohibition is a social and economic method by which we could raise the standard of the families. As such, if we have an advisory committee in which we have people who have got faith in Prohibition, it will definitely be very useful. We have to provide special homes for the addicts. Recently, I read in a newspaper that a village in Tirunelveli district had been able to have complete Prohibition. In that village, people who drank were looked down upon. This kind of propaganda and education will be possible only if we have a very broad-based advisory committee to consider how we could implement Prohibition. Now, we have got good opportunity for that. His Excellency the Governor has placed before us a great task and I hope that this august House will, in one voice, support the view that Prohibition should be implemented. I also hope that the Hon. the Chief Minister who is a firm believer in Prohibition will be encouraged to retain Prohibition which is a welfare scheme. It is no use having all our welfare schemes if we are going to tax the men and torture the women. That is what suspension of Prohibition or removal of Prohibition is going to do and, in that case, all our welfare schemes would have no meaning. As a woman, I have seen the suffering of so many people and many women come to our institution for help and succour. Therefore, I would like

[Thirumathi Mandakini Krishnamurthi] [1981 ஜனவரி 28

again to request all the hon. Members of this august House to support the view that Prohibition which has stayed in Tamil Nadu should go on staying.

Thank you.

திரு. ப. மாணிக்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான்காவது நாளாக நடைபெறும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். முதலில் ஆளுநர் உரை என்பது இந்த அரசால் தயாரிக்கப் பட்டிருக்கிறது. அரசு தன்னுடைய கொள்கை என்ன என்பதை ஒரே ஒரு பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. நலிந்த மக்களைக் கை தூக்கிவிட இந்த அரசினுடைய கொள்கை, நடவடிக்கை அமையும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இது நல்ல விருப்பத்தைக் காட்டுகிறது. 42 பகுதிகளாகப் பிரித்துக் கருத்துக்களைச் சொல்லியிருப்பதில் முதல் பகுதியையும், 42-வது பகுதியையும் எடுத்துவிட்டால், 40 பகுதிகளில் கருத்துக்கள் சொல்லப்பட்டி ருக்கின்றன. ஆனால் முரண்பட்ட பல கருத்துக்களைக் கொண்டதாக அவை இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், ஆட்சிக்கு வரும்போது எந்தக் கொள்கைகளைச் சொல்லி ஆட்சிக்கு வந்தார்களோ, அந்தக் கொள்கைகளுக்கு முரணாக பல கருத்துக்கள் இந்த ஆளுநர் உரையில் வந்திருப்பதைக் காண் கிறேன். இதை வேறு ஒரு வகையில் ஆங்கிலத்திலே சொல்லுவதாக இருந்தால், "random thoughts" என்று சொல்லலாம். சிந்தனைச் சிதறல்கள் என்ற அந்த வகையில் இருக்கிறது. வரக்கூடிய ஆண்டில் இந்த அரசு எந்தக் கொள்கையின் வழியில் செல்லும் என்ற நிலைமை தெளிவாக

(பிற்பகல் 12-50)

அமையவில்லை. இன்றைய சூழ்நிலையில் இரண்டு பெரிய அபாயங்கள் இருக்கின்றன. ஒன்று வளர்ச்சி. அதாவது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி. அடுத்து, நாட்டினுடைய ஜனநாயகம். இரண்டிற்கும் ஏற்பட்டி ருக்கக்கூடிய அபாயத்தை இந்த உரையில் காண முடியவில்லை. ஆய்ந்து என்று நான் சொல்லும்போது, அரசியல் தலைவர்களின் கருத்து என்ற முறையில் அல்லது கட்சிகள் கொள்கை முறை என்ற அளவில் சொல்லவில்லை. இன்று இந்தியாவில் வளர்ந்து வரும் ஏழ்மை, இந்தியாவைச் சுற்றி சூழ்ந்துள்ள அபாயங்கள், இந்தியாவிற்குள்ளேயே ஏற்பட்டு வரக்கூடிய பல்வேறு கொந் தளிப்புகள், இவைகள் எல்லாம் எப்படி நம்முடைய மாநிலத்தையும் பாதித்துக் கொண்டிருக்கின்றன என்ற பிரச்சினையில் நம் அரசினுடைய கவனம் திரும்பி யதாகத் தெரியவில்லை. அதனாலேதான் இந்த நாட்டிலே ஜனநாயகம் நீடிக்குமா என்று நான் கேட்கிறேன். அந்தப் பிரச்சினைதான் இன்று எழுகிறது. இது எத்தகைய ஆட்சி முறை, ஆட்சி வடிவம் என்பது அல்ல:



1981 ஜனவரி 28] (திரு. ப. மாணிக்கம்)

பிரச்சினை. இன்று இருக்கின்ற கொந்தளிப்புகளை அடக்குவதற்கு எத்தகைய அதிகாரத்தை மேற்கொள்ளலாம் என்ற முறையில் அரசு இருந்து வருகிறது. அப்படித் தான் இந்த மாநில அரசு பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள் பிரச்சினையில் இருக்கிறது. தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்சினையை எடுத்துக் கூற, மக்களுடைய ஆதரவைத் திரட்ட, நடவடிக்கையில் இறங்கு கிறார்கள். அதுதான் இன்று ஜனநாயக முறையில் நாட்டில் அவர்கள் எடுத்துக்கொள்கின்ற ஒரு குறைந்தபட்ச நடவடிக்கை. காரணம் 13 ஆயிரம் தொழிலாளர்கள் அந்த ஆலையில் இருக்கிறார்கள். அத்தனை ஆயிரம் பேர்கள் வேலை செய்யக்கூடிய ஆலை, தமிழ் நாட்டில் பஞ்சு, துணி உற்பத்தியில் ஒரு முக்கியமான பங்கு வகித்துக்கொண்டிருக்கின்ற ஆலை; இந்தியாவிலுள்ள மிகப் பழம் பெரும் ஆலைகளில் ஒன்று. இதில் சென்னை மாநகரப் பொருளாதாரமே அடங்கியிருக்கிறது. 13 ஆயிரம் பேருக்கு வேலை என்று சொன்னால், சாதாரணமாக அது 13 ஆயிரம் குடும்பங்களின் வாழ்க் கைப் பிரச்சினையாகும். அதனுடைய மக்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒன் றரை லட்சம் அளவுக்கு வந்துவிடும். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வட சென்னையின் பொருளாதாரத் திலேயே மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். தமிழ் நாட்டின் பஞ்சாலைத் தொழில் உற்பத்தியில் பாதிப்பு உண்டாகும். இதனால் மக்களுக்குக் குறைபாடு கள் இருக்கலாம். ஒரு பெரிய ஆலை மூடப்படுகிறது. அந்த ஆலை மூடப்படு கின்ற அந்த நேரத்தில் அவசரச் சட்டம் வருகிறது. அதிலே என்ன இருக்கிறது? யாராவது வேலைக்குப் போக மறுத்தால், அவர்கள் கைது செய்யப்படுவார்கள். இது ஜனநாயகத்தைப் பாதுகாக்குமா? அல்லது அமைதியைப் பாதுகாக்குமா? இதன் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகள் போராட்டங்களை உருவாக்கும். மக்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் அவசரச் சட்டம் என்று சொல்வது, அவர்களுக்கு எதிராகத்தான் இருக்கிறது. அத்தகைய போக்கு ஏற்படுவதைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன். அந்த மாதிரியான ஆபத்தான போக்கு இந்த அரசினுடைய கொள்கையில் அடங்கி யிருக்கிறது என்பதைச் சொல்கிறேன். இது ஒரு அரசியல் நிலை மட்டுமல்ல. அரசுக்கு என்று ஒரு பொறுப்பு இருக்கிறது. அரசுக்கு என்ன பொறுப்பு? பொதுவாக அரசைப் பற்றிச் சொல்வதாக இருந்தால், எளிமையாகச் சொல்வார்கள். மற்ற விளக்கங்களுக்கு நான் போகவில்லை. உயிரையும் உடைமையையும் பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமை என்று சொல் வார்கள். 13 ஆயிரம் பேர்களுக்கு வேலையில்லை என்றால், அந்த உயிர்களுக்கு எப்படிப் பாதுகாப்பு? ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்தால், அதைத் தடுக்க வழி இருக்கிறது. 13 ஆயிரம் பேர்களை பட்டினிப் போடக்கூடிய கொள்கை விஷயத்திலே அரசு எப்படி நடந்துகொள்ளவிருக்கிறது? அடக்கு முறையைக் கையாள முயலுகிறது. இத்தகைய போக்குதான் ஆபத்தான

போக்கு என்று சொல்கிறேன். இன்னொன்று சொல்கிறேன். நலிந்தவர்களுக்கு வாழ்வளிப்பதற்கு, உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கொள்கையாக அறிவித்துள்ளது. நலிந்தவர்கள் வாழ்க்கையை எப்படி மேம்படுத்தப் போகிறது? அதற்கான கொள்கை விளக்கங்களை நாம் இதில் காண முடியவில்லை.

அவர்கள் சொல்கின்ற கொள்கை இரண்டு. ஒன்று பொருளாதாரக் கொள்கை. ஒன்று கூலி உயர்வினால், ஊதிய உயர்வினால் விலை ஏறுகிறது. இது கொள்கை ரீதியிலே, தத்துவார்த்தமாகத் தவறானது என்பது மட்டுமல்ல, பல சந்தர்ப்பங்களிலே பல பேர்கள் முன்னிலையிலே இது தவறு என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வாதங்கள் என்ற அடிப்படையிலே ஒரு பக்கம் இருக்கட்டும். விவரங்கள் என்ற அடிப்படையிலே பார்த்தால், நமக்குத் தெரியும். அதாவது முதலிலே விலை உயர்ந்த பிறகுதான் ஊதிய உயர்வு என்ற பிரச்சினையே எழுகிறது. எனக்கு முன்னர் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். திரு. இராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். முதலில் யுத்த காலத்திலேதான் இந்தப் பஞ்சப்படி என்று ஒன்று ஏற்பட்டது என்று சொன்னார்கள். இந்திய விவரங்களை எடுத்துப் பார்த்தாலும் சரி, உலக விவரங்களை எடுத்துப்பார்த்தாலும் சரி, விலை ஏறியதற்குப் பிறகுதான் ஊதிய உயர்வு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் சொல்கிறேன், ஊதிய உயர்வு, விலை உயர்வுக்குக் காரணமல்ல. அதற்குக் காரணம் அது அல்ல. ஏன் இந்த அரசு இப்படிப்பட்ட கொள்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, உண்மையைச் சொல்வதென்றால், எனக்குச் சந்தேகம் அல்ல, ஒரு அச்சமே ஏற்பட்டிருக்கிறது. கொடுக்கப்படுகின்ற ஊதியம் வயிற்றுக்குப் போதவில்லை என்று யாராவது சொன்னால், அவர்கள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள். அத்தகைய கொள்கைகள்தான் அதில் அடங்கியிருக்கின்றன. அதற்காகத்தான் நான் அச்சப்படுகிறேன். சில பேர்கள் நல்ல ஊதியம் பெறுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களும் போராடுகிறார்கள். போராடி அதிகம் பெறுகிறார்கள். ஆனால் நலிந்த நிலையில் உள்ளவர்கள், ஊழியர்கள், நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், செக்கு ஆலைத் தொழிலாளர்கள், சிறு கைத்தொழில் செய்பவர்கள் இவர்களைப் பற்றிக் கேட்பாரும் இல்லை. பார்ப்பவர்களும் இல்லை என்று சொல்கிறார்கள். சிறு கைத் தொழிலாளர்களைப் பற்றிக் கேட்பாரும் இல்லை, பார்ப்பவர்களும் இல்லை என்று அரசுத் தரப்பிலேயிருந்து வரக்கூடாது. அரசே அப்படிக் குறிப்பிடுவது எதற்காக? எதற்காக இந்த அரசு இருக்கிறது என்று கேட்க வேண்டியிருக்கிறது. கூடுதல் ஊதியம் பெறும் சக்தி, மிகப் பெரும்பான்மையாக



உழைக்கும் மக்களிடம் இல்லை. இந்த நிலையில் உள்ளவர்கள் அமைதிப் பெரும்பான்மையினர். அதாவது 'சைலண்ட் மெஜாரிட்டி' என்று அவர்களைக் குறிப்பிடுகிறார்கள். ஒரு அமெரிக்க ஜனாதிபதி ஒரு காலத்திலே சொன்னார். அந்த வார்த்தைகளை நான் இங்கே சொல்கிறேன்.

அமைதிப் பெரும்பான்மையினர் பெரும் அவதிக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், ஒரு அபாயகரமான நிலைக்குக் கொண்டுவைத்துவிடும். இப்படி எழுதுவதிலே நம் இருக்கலாம். ஆனால் இன்றுள்ள கொள்கையிலே உள்ள அபாயகரமான நிலையை நாம் சற்று பார்க்க வேண்டும் என்று சொல்கிறேன். இன்றுள்ள கொள்கையில் இந்த சைலண்ட் மெஜாரிட்டியினருக்கு இந்த அரசு என்ன செய்கிறது? சைலண்ட் மெஜாரிட்டி பாடுபட்டால் என்ன செய்வார்கள்?

ஒரு உதாரணம் சொல்கிறேன். மத்திய அரசுப் பண்ணை ஒன்று வட ஆர்காடு மாவட்டம் செங்கம் பகுதியில் இருக்கிறது. அங்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த ஊதியத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரம் அல்ல. 5, 6 வருடங்கள் வேலை செய்தாலும், அவர்கள் தற்காலிகம் தான். டெம்பரரியாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. கிடையாது. பி.எப். கிடையாது. அவர்கள் அட்வான்ஸ் தொகை கேட்கிறார்கள். தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகள் போது அட்வான்ஸ் கேட்கிறார்கள், கொடுக்கிறார்கள். அங்கு செமி ஸ்கில்ட் ஆக இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அட்வான்ஸ், ஊதிய உயர்வு என்று கேட்கிறார்கள். அப்போது அவர்கள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள். தகுந்த ஊதியம் வேண்டுமென்று விவசாயத் தொழிலாளர்கள் கேட்டால், அடித்து நொறுக்கப்படுகிறார்கள். அரசுக் கொள்கைபின்படி அறிவிக்கப்பட்டவைகள் எவையும் நடைபெறுவதில்லை. இந்த நேரத்தில் ஒரு அரசியல் மேதையினுடைய வார்த்தையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

Politicians are judged not by their words, but by their conduct.

அரசின் கொள்கைகளின் அடிப்படையிலே அறிவிப்பு இருந்தாலும், அவர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள்? விவசாயக் கூலிகள் 1½ ரூபாய் கூலி கட்டவில்லை என்று கேட்டால், அவர்களை அடித்து நொறுக்கிவிடுகிறார்கள். குறிப்பாக அரசு அறிவித்த கூலி பல இடங்களிலே தரப்படவில்லை. தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் இருக்கிறார்கள். நானும் பிறப்பால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் தான். அங்கெல்லாம் அங்கே 2-1/2 ரூபாய் 3 ரூபாய் கூலி என்றுதான் இருக்கிறது. அங்கெல்லாம் போராடினால், ஒடுக்கப்படுகிறார்கள். கொத்தடிமைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். இந்த மாநிலத்திலே கொத்தடிமைகள் குறைவு என்று

சொல்கிறார்கள். காந்தி பீஸ் பௌண்டேஷன், நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் லேபர் என்று இரண்டு நிறுவனங்கள் விசாரணை செய்து அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பீகார், உத்திரப் பிரதேசம், ஒரிஸா போன்ற மாநிலங்களில் இருக்கிறது என்கிறார்கள். தமிழ்நாட்டில் தர்மபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய 3 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த மாவட்டங்களில் high incidence of bonded labour இருப்பதாகச் சொல்கிறார்கள். கொத்தடிமை இல்லாத மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் என்று சொல்கிறார்கள். இந்தக் கொத்தடிமை விஷயத்தில் நக்சலைட்களுக்கு சம்பந்தம் இருக்கிறதா என்று தெரியவில்லை. நக்சலைட்டுகள் இயக்கத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட்கள் இயக்கத்திற்கும் எந்தவிதமான ஒட்டுறவும் கிடையாது. எந்த உறவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. முருகய்யாவையே ஒரு ஆண்டுக்கு முன்னாலே நக்சலைட்டுகள் கொலை செய்தார்கள். அதுபற்றி அந்தக் காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது குற்றமா நியாயமா என்ற விவாதத்திற்குப் போகவில்லை. கொத்தடிமைகள் பிரச்சினை இன்னும் தீரவில்லை. அது மட்டுமல்ல, அடக்கு முறை அதிகமாக இருக்கிறது என்று கண்டித்த காரணத்திற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 13 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இப்படிக் கைது செய்து துன்புறுத்துவதால் மட்டும், ஒரு தனி நபரைக் கொலை செய்துவிடுவதால் மட்டும், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. இதிலெல்லாம் எங்கள் கட்சிக்கு நம்பிக்கை இல்லை. ஒருவரை அடித்துப் பார்க்கலாம். அதனால் எல்லாம் கொத்தடிமைப் பிரச்சினை தீர்ந்துவிடுமா? அமைதிப் பெரும்பான்மையினர் விஷயத்தில் உள்ள அணுகு முறை சரியில்லை. அந்த அமைதிப் பெரும்பான்மையினரை பகுதி பகுதியாக ஒடுக்கி விடுகின்ற முறையிலே செயலாற்றுகிறார்கள். அந்தச் சூழ்நிலை

(பிற்பகல் 1-00)

மாற வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன். இதை நண்பன் என்ற முறையில் வேதனையோடு தெரிவிக்க விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு நாம் செய்திருக்கிற காரியங்கள், அதாவது இன்றைய தவறுகளுக்கு நாளைக்குதான் நீங்கள் விலை கொடுக்க வேண்டி வரும். 'அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்' என்று சொல்லுவார்கள். தெய்வத்தின் மீது நம்பிக்கை இல்லாதவன் என்றாலும், அதைச் சாதாரணமாக எல்லோரும் பழமொழியாகச் சொல்லுவார்கள் என்பதால் சொல்கிறேன். எனவே



சமுதாயத்தில் நடுநிலைமை உணர்த்துகின்றவது நல்லது. உடனடியாக கொத்தடிமைப் பிரச்சினையை ஒழிக்க வேண்டும். நக்சலைட்டுகள் வன்முறை எங்கிருந்து கிளம்புவது? கொல்லப்பட்டவர்கள் எல்லோரும் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். நான் இந்த நேரத்தில் இதைக் குறிப்பிடுவது வேறுவிதமான அர்த்தத்திற்கு எடுத்துச் செல்லுமென்று சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தான் கொடுமைகளை எதிர்த்திருக்கிறார்கள். அவர்கள் ஏழை எளியவர்கள். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள். அவர்கள்தான் கொடுமைகளை எதிர்க்கிறார்கள். திருப்பத்தூர் ஹோலி கிராஸ் கல்லூரியில் நக்சலைட் தத்துவம் பற்றிப் பாடம் சொல்லிக் கொடுத்து, ஊக்கம் கொடுத்து, பண உதவியும் வெளிநாட்டிலிருந்து வந்தது. அதைத் தடுத்து நிறுத்த முடிந்ததா? அதை ஊக்குவித்த கல்லூரியின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? கல்லூரியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. குறிப்பிட்ட நபர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசு இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, பக்கிங்காம் & கர்நாடிக் ஆலை பற்றிய ஒரேயொரு உண்மையைக் குறிப்பிட விரும்புகிறேன். 1,300 பேர்களைக் குறைத்தால், அந்தப் பிரச்சினை தீருமென்று சொல்லப்படுகிறது. ஆனால் ஆளுநர் அவர்களின் உரையிலே, மத்திய அரசுக்கும் அவர்களுக்கும் பேச்சு வார்த்தை நடக்கிறது என்று சொல்லி, அதோடு விட்டுவிட்டது. அது ஒரு பெரிய தொழிற்சாலை என்பது மட்டுமல்ல, பழைய தொழிற்சாலை. அதில் நடைபெறும் தவறுகள் பற்றிய தகவல்கள் மாநில அரசுக்குக் கிடைத்திருக்கும். எனவே அதில் மாநில அரசின் ஆக்கபூர்வமான அணுகுமுறையைக் கையாள வேண்டும். பி. & சி. மில் அக்கறையால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். குறித்து மத்திய அரசு சொல்லும்போது, 'ஜங்க்' என்று சொல்லியிருக்கிறது. அப்படியென்றால் தமிழ் நாட்டில் 'ஜங்க்' இல்லாத மில் எது? மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் 'மாருதி' பற்றிச் சொன்னார்கள். எனக்கு தமிழ் நாட்டிலேயே பல பஞ்சாலைகளைத் தெரியும். அவை பி. & சி. மில்லைவிட மோசம். பி. & சி. மில்லைவிட உயர்வாக மூன்று, நான்கு மில்கள்தான் இருக்கின்றன. மத்திய அரசு சொல்லுவது ஒரு கன்வீனியண்ட் ஆர்குமெண்ட். மாநில அரசு அந்த ஆலையைத் திறக்க அக்கறை காட்ட வேண்டும். மத்திய அரசுக்கும், அந்த ஆலைத் தொழிலாளர்களுக்குமிடையேயான பிரச்சினை என்று சொல்லி மாநில அரசு ஒதுங்கிப் போக நினைக்கிறது. அது வேண்டாமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

(திரு. ப. மாணிக்கம்) [1981 ஜனவரி 28

அடுத்தபடியாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் அவையில் இன்று வந்த நேரத்தில், நான் அவையில் இல்லை. அரசு வாக்குறுதி தந்திருக்கிறது. தமிழ் நாட்டில் புகழுடைய பல்கலைக் கழகம் அது. சந்தர்ப்பவசத்தால் நானும் அந்தப் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவன். ஆனால் அங்கேயிருந்து வெளியேறியவன். புகழ் பெற்ற பல்கலைக் கழகம் அது. அதன் புகழ் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல, இன்றைய ஜனநாயகச் சகாப்தத்திற்கு ஏற்றாற்போல அங்கே மாறுதல்களைச் செய்ய நம்முடைய அரசு உரிய கவனத்தை, காலத்தோடு செலுத்த வேண்டும். சில நேரங்களில் நீதி கிடைக்கத் தாமதமானால், நீதி மறுக்கப்படுவதாகப் பொருள். எனவே அதில் தாமதமின்றி, நீதியை வழங்க அரசு முன்வர வேண்டும்.

அடுத்து, நிர்வாகத்தைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாநில அரசு அதன் ஊழியர்கள் சம்பந்தமாக எப்படி நடந்துகொள்கிறதென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கருவூலக் கணக்கு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அப்போது நம்முடைய மாநில அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டிருந்த இடைக்காலம். தேர்தலுக்கு முன்னால் வேலை நிறுத்தம் செய்து, நீண்ட நாள் கோரிக்கைகளில் வெற்றி பெற்றார்கள். ஒப்பந்தம் ஏற்பட்டது. தேர்தல் நடந்து, அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஒப்பந்தம் நிறைவேற முயற்சி செய்தார்கள். ஒப்பந்தம் நிறைவேறாததால் மீண்டும் கிளர்ச்சி வந்தது. கடைசியில் என்னவாயிற்று? மீண்டும் வாக்குறுதி தரப்பட்டு, மீண்டும் அது நிறைவேற்றப்படாததால். வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்போது 63 பேர்கள் வெளியே நிற்கிறார்கள். அதுமாத்திரமல்ல. அந்தத் துறைபற்றி ஒரு விஷயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவ்வளவுக்கும் காரணம் அந்தத் துறையின் தலைமை அதிகாரிதான். எல்லாவற்றிலும் அமைச்சரே நேரடியாக ஹேண்டல் செய்ய வேண்டும் என்று நினைப்பவனல்ல நான். பிரச்சினை முற்றும்போது அதைக் காலத்தில் கவனிக்க வேண்டும். ஒரு பொறுப்பான அதிகாரியின் அணுகுமுறையின் தவறுகளால் அரசு ஊழியர்கள் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இனி இப்படிச் செய்ய மாட்டேன் என்று ஒவ்வொருவரிடமும் எழுதி வாங்கியிருக்கிறார்கள். இனி இப்படிச் செய்ய மாட்டேன் என்று யாராவது எழுதிக் கொடுத்தால், அதை நிறைவேற்ற முடியுமா? இரண்டு ஆண்டுகள் கழித்து நிர்ப்பந்தம் வந்தால், வேலை நிறுத்தம் செய்யாமல் எப்படி இருக்க முடியும்? ஏன் இப்படி எழுதி வாங்குகிறார்கள்? இப்படிப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்பது சரியாக இராது. ஊழியர்களைப் பழி வாங்காமல், அந்த இலாகாவைச் சீர் செய்ய வேண்டும்.



1981 ஜனவரி 28] (திரு. ப. மாணிக்கம்)

அடுத்து, சிறைச்சாலையைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்பு கிறேன். சிறைப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட வார்டர்கள் இருக்கிறார்கள். பல இடங்களில் மேலதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். நான் சில ஆண்டுகளாகச் சிறைக்குப் போகவில்லை. இருந்தாலும் சிறை விவரங் களைக் கேட்டால், சொல்கிறேன். சிறையிலே சூப்பரிண்டென் தான் எல்லாம். அந்தச் சிறையிலே அவர்களை மீறி ஒன்றும் நடக்காது. வேலியே பயிரை மேய்ந்தால் எப்படி என்று பழமொழி சொல்லுவார்கள். அப்படி மேலே பொறுப்பாக உள்ள அதிகாரிகளே நடக்கிறார்கள். வேறு எங்கும் அப்படி நடக்கவில்லை. வார்டர்களுடைய கோரிக்கைகளில் என்ன நியாயம் இருக்கிறதென்று பார்த்து, ஆவன செய்ய வேண்டும். சிறைக் காவலர்கள் இப்போது சிறையில் இருக்கிறார்கள். ஏற்கனவே அவர்களுக்கு ஜன்மக் கைதிகள் என்று பெயர். "நீங்களாவது தண்டனைக் காலம் முடிந்து வெளியே போகலாம், நாங்கள் இங்கேயேதான் இருக்க வேண்டும்" என்று தமாஷாகச் சொல்லுவார்கள். அவர்களை விடுதலை செய்து, அவர்களின் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டும். நிர்வாகத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து, அதிகாரிகளின் தவறான ஆலோசனை களுக்கு அரசு செவி சாய்க்கக்கூடாது. இதுபோன்று பல துறைகளின் ஊழி யர்களின் விஷயத்தில் நடந்திருக்கிறதென்று சொல்லி, அவற்றை எல்லாம் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லெனின்பு அதிகாரிகள்பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசினார்கள். அதையும் நினைவுபடுத்திக்கொள்கிறேன். கீழ்மட்டத்தில் நிறைய குழப்பம் இருக் கிறது. அவற்றைக் காலத்தில் சீர்படுத்திட தகுந்த நடவடிக்கைகள் தேவை.

இறுதியாக இரண்டு அம்சங்கள்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று மது விலக்குக் கொள்கை பற்றியதாகும். மது விலக்குக் கொள்கைபற்றி திறந்த மனத்தோடு பேசலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. திறந்த மனத் தோடு சொல்வதாக இருந்தால். உடனடியாக மது விலக்கை ரத்து செய்யுங்கள். அதனால் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும்—நல்ல பெயர் மட்டுமல்ல— வருமானமும் கிடைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. பல தமிழர்களுடைய ஈரலைக் காக்கலாம். நான் மூன்று முறை ஏற்கனவே

(பிற்பகல் 1-10)

பேசியிருக்கிறேன். நான்காம் முறையாகச் சொல்கிறேன். பல தமிழர்கள் தங்களுடைய ஈரலைக் கெடுத்து விட்டார்கள். நல்ல ஆல்கஹாலைக் குடித் தால், இந்த அளவுக்குத் தீமை இருக்காது. ஈரல் போன தமிழ் மகன் யாருக்கு உதவுவான்? பண்பாட்டைக் காப்பாற்ற முடியுமா? தமிழைக் காப்பாற்ற அவனால் முடியுமா? ஆகவே மது விலக்கை ரத்து செய்வதன் மூலம்

அரசுக்கு வருமானமும் கிடைக்கும். தமிழனின் ஒழுக்க நெறியையும் வலுப் படுத்த முடியும். மதுவைக் குடிக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டே மறைமுகமாகக் குடிக்க அனுமதிப்பதைவிட குடிக்கலாம் என்று சொல்லுவது எவ்வளவோ நல்லது. ஒழுக்கம் தவறாதவன் என்று சொல்லிக்கொண்டே ஒழுக்கம் தவறுவதைவிட ஒழுக்கம் தவறுகிறேன் என்று சொல்லிக்கொண்டு ஒழுக்கம் தவறுவதே நல்லது. ஆகவே தாமதம் செய்யாமல் காலத்தில் இதைச செய்ய வேண்டும். பல நாடுகள் இதைப் பரீட்சை செய்து பார்த்தன. ஆனால் வெற்றி பெற முடியவில்லை. ஆகவே எங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மது விலக்கை உடனடியாக ரத்து செய்து காவல் துறையைக். காப்பாற்ற வேண்டும், தமிழ் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான். காவல் துறை தமிழ் நாட்டில் இன்றையதினம் சீர் குலைந்து விட்டது. மது என்பது மட்டுமல்ல, அதனுடைய எபக்ட் என்ன என்பதையும் பார்க்க வேண்டும். தமிழகத்துக்கு வருமானம் என்பதல்ல பிரச்சினை. காவல் துறையைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் முக்கிய மானது. இல்லாவிட்டால் இன்னும் ஓர் ஆண்டுக்குப் பிறகு காவல் துறை யால் நாட்டுக்கு எந்த ஒரு பலனும் இருக்காது. காவல் துறை நமக்கு உதவ வேண்டுமென்றால், இதை உடனே செய்வது மிகவும் தேவை. காவல் துறை யினரிடமிருந்து நானும் ஒரு காலத்தில் அடி வாங்கியவன்தான். காவல் துறை நன்றாக இருக்கும்போதே, காவல் துறையினரிடமிருந்து உதை வாங்கியிருக் கிறேன். சீரழிந்தவர்களிடமிருந்து அடி வாங்க வேண்டாம். மது விலக் குக்கும் காவல் துறைக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதால்தான், நான் இதைச் சொல்கிறேன். காவல் துறைக்கும் மதுவுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. அரசுமீது மக்களுக்குள்ள நம்பிக்கை இதனால் அறவே போய் விட்டது. ஆகவே மது விலக்கை உடனே ரத்து செய்ய வேண்டும். ருசி கண்ட பூனை விடாது என்பார்கள். குடித்து ருசி கண்டவர்களால் குடியை நிறுத்த முடியாது. விஷச் செடி வளர்ந்து விட்டால், சீக்கிரம் அதை அழிக்க முடி யாது. கள்ளச் சாராயம் குடிப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுங்கள். யார் ஆதரவு தந்தாலும் தராவிட்டாலும், எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழு ஆதரவு தரும். கள்ளச் சாராயம் தமிழ்நாட்டில் அறவே வேண்டாம். ஆகவே அதற்குரிய ஏற்பாட்டினை உடனே செய் யுங்கள். “நாட்டு மக்களுக்கு நலன் விளைவிக்கும் மதுவிலக்குக் கொள் கையை எந்த வகையில் சிறப்பாகச் செயற்படுத்தலாம் என்பதையும் இக் கொள்கையை மறுபரிசீலனை செய்வது அவசியமா என்பதையும் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை மனந்திறந்து தெரிவிக்க வேண்டும்” என ஆளும் கட்சி கேட்டிருக்கிறது. அவர்கள் சொல்லத் தயங்கு கிறார்கள். திடீரென நாமாக எவ்வு செய்ய வேண்டாம் எவ்கிற அச்ச



உணர்வை அது காட்டுகிறது. அது வேண்டாம். துணிச்சலாக இது விஷ யத்தில் முடிவெடுக்க வேண்டும். விவேகமாகக் கொள்கை முடிவெடுத்தார்கள் என்கிற பெயரை எடுக்க வேண்டும். இதுகுறித்து அடுத்த பட்ஜெட் வருவ தற்கு முன்பு அறிவித்துவிட வேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். அரசு ஊழியர்களுக்குக் கடந்த காலத்திலே கட்டிடம் கட்டு வதற்குக் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. நிதிப் பற்றாக்குறை என்று சொல்லி அது நிறுத்தப்பட்டு விட்டது. பொதுவாகக் கட்டிடத்தைப் பாதியில் நிறுத்தக் கூடாது. அப்படிச் செய்தால் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள், உறவினர்கள் எல்லாம் உதவி செய்ய வேண்டுமென்று சொல்லுவார்கள். ஆகவே கொடுத்து வந்த கடனைத் தொடர்ந்து நிறுத்தாமல் கொடுத்து அரசு ஊழியர் களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக அனைத்துப் பிரிவினருடைய முன்னேற்றம்தான் ஏழையெளிய வர்களுடைய முன்னேற்றம் என்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய இந்த அறிக்கையின் மூலம் அதைக் காண முடியவில்லை. ஊதிய உயர்வுதான் விலைவாசி உயர்வுக்கான காரணம் என்பது தவறான அணுகுமுறை. உயர் ஊதியம் பெறுகிறவர்கள் போராடுகிறார்கள் என்பதல்ல பிரச்சினை. மற்ற வர்களும் போராட அவர்களுக்கு வழிவகை இருக்கிறது. ஆகவே இதை யெல்லாம் ஒப்பிட்டுப் பேச வேண்டாம். அரசு சொல்லுவதை தைரியமாகச் செய்யட்டும். தொழிலாளர் கொள்கையில் தவறான, ஆபத்தான கொள்கை யைக் கடைப்பிடிக்க வேண்டாம். அந்த நிலையைத் தயவுசெய்து உடனே திருத்திக்கொள்ள வேண்டும். தமிழகத்திற்கு இன்றைய நிலையில் சற்றும் பொருத்தமில்லாத கொள்கைகளைக் கைவிட்டு விடுவது நல்லது. அந்தப் போக்கு இந்த ஆளுநர் உரையில் காணப்படாவிட்டாலும்கூட, இனி வரக்கூடிய உரைகளிலாவது குறிப்பாக பட்ஜெட் உரையிலே காணப்பட வேண்டும். பொது வாக இந்த அம்சங்களில் திருத்திக்கொள்வது நல்லது. திருந்தி விட்டால் அதன் பலன் எங்களுக்கு அல்ல. ஆளும் கட்சிக்குத்தான். நான் இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் காரணம் நாங்கள் தோழமைக் கட்சியாக இருந்திருப்பதால். மக்களுக்கும் பாதகம் வரக்கூடாது என்று கூறுகிறோம். இந்த அம்சங்களில் அரசு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டு மென்று கேட்டு அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்துள்ள தீர்மானத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். உரையிலே முதன்மையாகச் சொல்லப்பட்டிருப்பது உலகத் தமிழ் மாநாடுபற்றி. உலகத் தமிழ் மாநாட்டின்

சிறப்பைப்பற்றி அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதன் சிறப்புபற்
இரண்டாவது கருத்தை நான் சொல்லவில்லை. சிறப்பாக நடத்திருக்கிறா
மற்ற அரசு விழாக்களைப் போல் இதற்கும் சிறப்பினைக் கொடுத்து நடத்
வைத்திருக்கிறார்கள். பொதுவான அரசு விழாவாக இது நடைபெற்றிரு
கிறது. பொதுவாக தமிழின் பெயரைச் சொன்னால், நாட்டு மக்கள் எவ்வள
பேர் கூடுவார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். பொதுவாக எந்த அரசு
ஆட்சியில் இருந்தாலும், இது மாதிரி தமிழின் பெயரால் நடைபெறும் விழாவை
மிக மிகச் சிறப்பாக நடத்த வேண்டும், அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது
தமிழ் மக்களுடைய விருப்பம். அந்த வகையில் மிகச் சிறப்பாக நடத்தி
யிருக்கிறார்கள். பெரிய அளவில் இதுமாதிரி ஒரு விழாவை நடத்தும்போது
குறைபாடுகள் நிகழத்தான் செய்யும். மனிதர்களால் நடத்தப்படுபவை
தானே. இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்று அங்கே பாரத
பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.
தனிப்பட்ட மனிதர்கள் தரும் வாக்குறுதி, அவர்கள் ஆட்சி பீடத்திலே எத்
தனை பெரிய பதவியில் இருந்தாலும், தனிப்பட்ட வாக்குறுதிதான். மக்கள்
அமைப்பின் தலைமையகமாக இருக்கின்ற பாராளுமன்றத்திற்குள்ளேயே
எழுத்து வடிவில் இதற்கு ஒரு வடிவம் கொடுக்க வேண்டுமென்பதில் தமிழ்
நாட்டு மக்கள் ஒரே கருத்தில் இருக்கிறார்கள் என்பதை நான் பாரத பிரதம
ருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பண்டித நேரு அவர்கள் இந்த நாட்டின்
பிரதமராக இருந்திருக்கிறார்கள். நாடு சுதந்திரம் பெறுவதற்காக பல
தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அவர் அளித்த வாக்குறுதி காப்பாற்றப்
படாமல் போய்விடுமோ என்று நாமெல்லாம் அஞ்சிக் கொண்டிருந்த வேளை
யில் இப்படிப்பட்ட அறிவிப்பை அவருடைய திருமகள் இங்கே வந்து செய்
திருக்கிறார்கள். இருந்தாலும் இது பாராளுமன்றத்தின் மூலம் வடிவம்
கொடுக்கப்பட வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று அறிவித்திருக்கிறார்கள்.
கேட்பதற்கு இனிமையாகத்தான் இருக்கிறது. அவர்களுடைய எண்ணத்தை
நான் பாராட்டுகிறேன். அரசின் எண்ணமும், நாம் கேட்கின்றவைகளும்
உண்மையிலேயே செயல்படுத்தப்படுகின்றனவா என்பதுதான் என்னுடைய
கேள்வி எல்லாம். பல தடவை பிரச்சினைகளை எழுப்பிப் பார்க்கிறோம்.
தமிழ்நாட்டில் பிறந்தவர்கள், தமிழ்நாட்டில் வாழ்கிறவர்கள், தமிழ்நாட்டில்
அதிகாரிகளாக இருப்பவர்கள் தமிழில் சிந்திக்கவே மறுக்கிறார்கள். சாதாரண
ஒரு உத்தரவைக்கூட தமிழில் போட மறுக்கிறார்கள். அதுபோல் இங்கே
ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். திரு. வசந்த பை போன்ற
வர்கள் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் என்றால், அவர்களுடைய ஆங்கிலத்தை
உடனே மொழி பெயர்த்துத் தருவதற்குரிய வாய்ப்பினைத் தர வேண்டும்,





நான் அவரைப் போல் வக்கீலாக இல்லாவிட்டாலும்கூட, அவருக்காக வக்கா
லத்து வாங்குகிறேன். தமிழ்நாட்டிலே இன்றையதினம் எங்கே தமிழ் ஆட்சி
மொழியாக இருக்கிறது? என்னால் அதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க
முடியவில்லை. தமிழ் மொழியை என்றும் காப்போம் என்று ஒரு புலவன்
சொன்னான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: புலவனுடைய பெயரைச்
சொல்ல வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: புலவரே இங்கே துணைத் தலைவராக அமர்ந்திருக்
கிறார்கள். ஆகவே புலவருடைய பெயரைச் சொல்ல வேண்டிய அவசிய
மில்லை. புலவருடைய பெருமையைத்தான் நான் சொன்னேன். ஆசிரியர்
தொழில் நடத்த துணைத் தலைவரவர்கள் முயற்சிக்கிறார்கள். (சிரிப்பு) நான்
அதற்கு உடன்படவில்லை. இந்த அரசு எங்கும் தமிழ், எதிலும் தமிழ்
என்பதை உண்மையிலேயே நடைமுறைப்படுத்த உத்தரவு போட வேண்டும்.
அப்படி போட்ட பிறகும் அதை அதிகாரிகள் செயல்படுத்தவில்லையென்றால்,
இந்த ஆட்சி மன்றத்திற்கு என்ன மரியாதை? அரசுத் திட்டங்கள் அறி
விக்கப்படுகின்றன. ஆனால் அரசு போடுகின்ற உத்தரவுகள் மதிக்கப்
படுவதில்லை. அரசு அதிகாரிகள் சம்பளம் பெற மட்டும் தான் சட்ட
மன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டுமென்கிற உரிமை வழங்கப்பட்டிருக்
கிறதா என்பதைத் தயவுசெய்து சொல்லுங்கள். இதுமாதிரி நிலைமை இனியும்
நீடிக்கக் கூடாது. அரசு ஆணைகள் அனைத்தும் தமிழில்தான் வர
வேண்டும்.

அடுத்து, விலைவாசி ஏறுமுகத்தில் இருக்கிறது என்பது அரசாலேயே
ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேசமயத்தில் பண வீக்கமும் ஒப்புக்
கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு அரசு ஊழியர்கள்தான் பிரதான
காரணம் என்கிற கொள்கையை இந்த அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய
அரசில் பணியாற்றுபவர்களுக்கும், மாநில அரசில் பணியாற்றுபவர்களுக்கும்,
தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களுக்கும் விலைவாசிகள் ஏறும்போது
விலைவாசிப் புள்ளிக்கு ஏற்ப இத்தனை புள்ளிக்கு இவ்வளவு அகவிலைப்படி
தர வேண்டுமென்று உத்தரவிருக்கிறது. அதை மூன்றாவது சம்பளக் குழுவும்
ஒப்புக்கொண்டிருக்கிறது. அதை இந்த அவையிலும் வைத்து நிறைவேற்றியிருக்
கிறார்கள். அதற்குத் தக்காற்போல் அரசு அகவிலைப்படி தருவதால் மட்டும்
உடனே விலைவாசி வந்துவிடும் என்று சொல்வதால் இந்தப் பிரச்சினை

(பிற்பகல் 1-20)

தீர்ந்து விடுமா? தயவு செய்து அரசு சிந்திக்க வேண்டும். விலைவாசிப்
புள்ளி உயரும்போதெல்லாம் அகவிலைப்படி அரசு தரவேண்டும். "நாங்கள்

அப்படித் தருவோம், அதுதான் அரசாங்கத்தின் கொள்கையாகவும் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு இப்போது விஷவட்டம் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள வேண்டாம். அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தரவேண்டிய அகவிலைப்படி இரண்டு தவணைகளையும் தயவு செய்து தர வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுடைய பிரச்சினை. விவசாயிகளுடைய பிரச்சினைப்பற்றி நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களின் பிரச்சினைகளில் ஒன்று கரும்புக்குக் கொடுக்கப்படும் விலை. அவர்கள் கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ. 200 வேண்டும் என்று கேட்கிறார்கள். ரூபாய் 130 தான் ஒரு டன்னுக்குத் தர வேண்டும் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. பக்கத்திலே இருக்கிற கேரள அரசாங்கம் டன்னுக்கு ரூபாய் 200 என்று அங்கே நிர்ணயித்திருக்கிறது. இதைப்போலவே, நமது அரசும் நடவடிக்கைகளை எடுத்து, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 200 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உழவுத் தொழிலிலே உற்பத்தியாகக்கூடிய நெல்லைப் பொறுத்த வரையில், ஒரு காலத்தில் குவிண்டால் ரூபாய் 100 என்று இருந்தபோது, அன்றைக்கு பணத்துக்கு இருந்த மதிப்பு என்ன, இன்றைக்கு இருக்கும் மதிப்பு என்ன என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு விவசாயி உற்பத்திக்குப் பயன்படுத்தும் பொருள்களின் விலைகள் மிகவும் ஏறிவிட்டன. நிலத்தின் மதிப்பும் உயர்ந்துவிட்டது, விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய கருவிகளின் விலையும், இடுபொருள்களின் விலையும் மிகவும் உயர்ந்துவிட்டன. முன்பெல்லாம் உரத்தைச் சலுகை விலையில் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது உரம் சலுகை விலையில் கொடுப்பது நிறுத்தப்பட்டு உரத்தின் விலை பன்மடங்காக உயர்ந்துவிட்டது. ஆகவே, இந்த நிலைமைகளின் காரணமாக விவசாயிகள் தங்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையைத்தான் கேட்கிறார்கள். லாபம் வேண்டுமென்றுகூட அவர்கள் கேட்கவில்லை. ஆகவே, நெல்லுக்கும் மாற்று விலை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரூபாய் 130 ஒரு டன்னுக்கு கரும்பின் விலை என்று சொன்னால், வெளி மார்க்கெட்டில் சர்க்கரையின் விலை இப்போது என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். வெளி மார்க்கெட்டில் சர்க்கரையின் விலை ரூபாய் 8, 9, 10 என்றெல்லாம் இருக்கும்போது, கரும்புக்கு ஒரு டன்னுக்கு இந்த விலை என்று சொல்வது எப்படி நாணயமாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப்





போராடினார்கள். விவசாயிகள் பற்றிய விவரங்கள் சில இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நான் அது தவறு என்று சொல்லவில்லை. ஆனால், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்தவர்களைப்பற்றி ஒரு அனுதாபம்கூட தெரிவிக்கப்படவில்லை. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இன்றைக்கு பயந்து நடுங்கி வீட்டைவிட்டே ஓடிவிட்டார்கள். போலீசாரின் அட்டூழியம் மிகவும் கொடுமையாக இருக்கிறது. மீண்டும், மீண்டும் போய் போலீசார் அவர்களை அடித்துத் துன்புறுத்துகின்றார்கள். அதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஒரு ஊரிலே போய் அத்தனை பேர்களையும் அடித்துத் துன்புறுத்தினார்கள். பல இடங்களிலே இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. மிகவும் அக்கிரமம் செய்கிறார்கள். கொடுமையாக அடிக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வது தர்மம் அல்ல. போலீசாரின் நடவடிக்கைகள் இப்படி இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த விஷயங்கள் தெரிந்தும் இருக்கலாம், தெரியாமலும் இருக்கலாம். இந்த விஷயங்களை இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களை நான் பார்த்திருக்கிறேன். விவசாயிகள் போராட்டம் பற்றி இவ்வளவு தூரம் அறிக்கையிலே எழுதிய நீங்கள், உயிரிழந்த அந்தத் தோழர்களுக்காக ஒரு அனுதாபத்தையாவது தெரிவித்திருக்கக்கூடாதா? தெரிவித்திருந்தால் நான் மிக்க மகிழ்ச்சியடைந்திருப்பேனே! நிகழ்ச்சிகள் எப்படியோ நடந்து விடுகின்றன. ஆனால் ஒரு அனுதாபமாவது தெரிவிக்க வேண்டாமா?

அடுத்து, மதுவிலக்குக் கொள்கைபற்றிச் சொல்கிறேன். கடந்த சில நாட்களாக இதுபற்றி பல கருத்துக்கள் இந்த அவையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. மதுவிலக்குப்பற்றி சென்ற முறை மிகவும் கடுமையான ஷரத்துக்களோடு சட்டம் நிறைவேறியபோதுகூட நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். 'திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது, அதைச் சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்குது; திருடனா பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாடிய பாடலை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தத்துவமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மதுவுக்குப் பாரம்பரியமே ரொம்ப அதிகம். அன்றைக்கே இந்திய உலகத்திலே சோமரசபானம் இருந்ததாக வரலாற்றிலே இருக்கிறது. அன்று முதல் இன்றுவரை இரத்தத்தில் ஊறிவிட்ட இந்தப் பழக்கத்தை திடீரென்று சட்டம் போடுவதனால் மட்டும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இன்றைக்கு இந்த மதுவின் நிலைமை என்னவென்றால், 'திட்டம் போட்டு குடிக்கிற கூட்டம் குடித்துக்கொண்டே இருக்குது; அதைச் சட்டம் போட்டு தடுக்கிற

கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்குது, குடிப்பவனைப் பார்த்து திருந்தா விட்டால் குடியை ஒழிக்க முடியாது' என்ற அளவிலேதான் இருக்கிறது. நான் எல்லா டி.டி.சி. கூட்டத்திலேயும் பேசிவிட்டேன். நிர்வாக இயந்திரத்தால் மது விலக்குக் கொள்கையை நல்லமுறையில் அமுல்படுத்த முடியவில்லை. அவர்கள் தோல்விதான் கண்டிருக்கிறார்கள். தன்னுடைய தோல்வியை நேரடியாக ஒப்புக்கொள்வது அரசுக்குப் பலஹீனம் என்று கருத வேண்டாம். ஒரு அட்மினிஸ்ட்ரேஷனில் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையை, தோல்வியைத் தாராளமாக ஒத்துக்கொள்ள வேண்டும். மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், மதுவிலக்கை ரத்து செய்யுங்கள் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகள் ஒட்டுமொத்தமாகப் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது, உத்தியோகத்தில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் பயன் ஏற்பட்டிருக்கிறது. அவசரச் சட்டம் போட்டு 24 ஆயிரம் பேர்களையும் வெளியேற்றிவிட்டதனால், அவர்களின் குடும்பங்கள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. இவர்களை நீக்கியிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி, மற்ற துறைகளிலே இருப்பவர்கள் மத்தியிலும் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது என்ற உண்மையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குப் பிறகு, அதாவது 1970-க்குப் பிறகு, கிராம முன்சீப்-கர்ணம் போன்றவர்களுக்கு ஒரு சர்வீஸ ரூல்சைக் கொண்டு வந்திருக்கிறது. அதை வெளியிட்டது இந்த அரசு. அந்த ரூல்ஸ் வெளியிடப்பட்டதறகு பிறகாவது அப்பாயின்ட்மென்டுக்கு வந்திருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துகொண்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் பிரச்சினை சம்பந்தமாக அதிகமாகப் பிரச்சினைகளை எழுப்ப வேண்டாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து யாருக்கு இந்த அரசு என்ன சட்டம் கொண்டுவந்தாலும், பாதிக்கப்பட்டிருக்கக்கூடியவர்களுக்கு ஒரு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சமுதாயத்திற்கு நன்மை செய்வதற்காகவென்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, ஜனநாயக அரசு, தன்னுடைய கடமையிலிருந்து தவறக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, நிர்வாகச் சீர்திருத்தம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நிர்வாகச் சீர்திருத்தம் சம்பந்தமாக நிறைய அறிக்கைகள் வந்திருக்கின்றன. ஆனால், இவ்வளவு நிர்வாகச் சீர்திருத்த அறிக்கைகள் வந்த பிறகும், ஆட்சி முறையிலே ஒரு சிறு மாறுதலும் ஏற்படவில்லை. சாதாரண மக்களுக்கு அவர்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகள் சம்பந்தமாக மாற்றங்கள்





ஏற்பட வேண்டும் என்று சொன்னால், கிராமப்புறங்களிலே இருக்கிற காவல் துறையும் அங்கே இருக்கிற ரெவின்யூ அலுவலர்களிடத்திலும் அடிப்படையிலே தக்க மாற்றங்களை நாம் ஏற்படுத்த வேண்டும். அவர்களிடம் எந்தவிதமான மாற்றமும் இல்லாதபோது, நாம் எவ்வளவு சீர்திருத்தங்களை, பெரிய பெரிய அதிகாரிகளைப் போட்டுச் செய்தாலும், அதனால் எந்தவிதமான பலனும் இல்லை. விவசாயிகள், மற்றும் சாதாரண மக்கள் அவன் நல்ல சட்டை போடவில்லை என்றும், அவன் மிகவும் நாகரிகமாக இல்லையென்றும் அவனை மதிக்காத தன்மைகள் மாற வேண்டும்.

அடுத்து, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளைப் பொறுத்தவரையில், ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும்வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரும் சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** தாங்கள் பெருந்தன்மையோடு நேரம் வழங்கியதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஓரிரு கருத்துக்களைச் சொல்லி சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன். தனியார் கல்லூரிகள் இருப்பதைப்போல, தனியார் பல்கலைக் கழகம் இருக்கிறது. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஏற்படுத்திய பல்கலைக் கழகம் அது. தனியார் பள்ளிகளிலே, சில தவறுகள் நடைபெறுகின்றன. அதுபோல, இப்போது பல்கலைக் கழகத்தி னுடைய நிர்வாகத்திலும் தவறுகள் நடந்திருக்கின்றன என்று, அங்கே பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் இன்றைக்கு பொறுத்துக்கொள்ள முடியாமல் அந்தத் தவறுகளை வெளியிடுகிறார்கள். நிர்வாகத்துக்குச் சம்பந்தப்பட்ட வர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், இந்த நாட்டிலே பல்கலைக் கழகங்களை நடத்த அனுமதித்துச் சட்டங்களை வைத்துக்கொண்டிருக்கின்ற கல்வித் துறையை நான் கேட்டுக்கொள்கிறேன். இவற்றுக்கெல்லாம் ஒரு கட்டுப்பாடு வேண்டும். பொறுப்பு வேண்டும். ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே ஆசிரியர்களை 'வெளியே போ' என்று சொல்வதைப்போல ஒரு பல்கலைக் கழகத் திலேயும் நிலைமைகள் இருப்பதைப் பார்க்கும்போது நாம் ஒரு அடிமை நாட்டிலே இருக்கிறோமா என்று எண்ணத்தோன்றுகிறது. அந்தச் சிந்தனை ஏற்பட்ட பிறகு இன்றைக்கு அந்த ஆசிரியர்கள் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். போராட்டங்கள் மூலமாகத்தான் இந்த நாட்டிலே நீதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்தப் பிரச்சினையில் அரசு நடவடிக்கை எடுத்து, அந்தப் பல்கலைக் கழகத்தை அடிப்படையாகச் சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

அடுத்து, சென்ற முறை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதிமொழிகளையும் உத்தரவாதங்களையும் இன்னும் அரசு நிறைவேற்ற வில்லை என்று கோரி, பல்கலைக் கழகப் பேராசிரியப் பெருமக்கள் உண்ணா விரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி சென்ற முறை டிஸ்மிஸ் செய்யப்படுவதற்கு முன்பு தற்போதைய கல்வியமைச்சர் அவர்களே, அப்போதும் கல்வியமைச்சராக இருந்து சில உறுதிமொழிகளைக் கொடுத்தார்கள். அவைகளெல்லாம் அரசாங்க ஆணைகளாகப் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் அவைகள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று கோரி அந்த ஆசிரியப் பெருமக்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சட்ட மன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்கிற வாக்குறுதிகளும், போடப்படுகிற அரசாங்க ஆணைகளும் நிறைவேற்றப்படாமல் இருக்குமானால், இந்த ஆட்சி யாளர்களுக்கு எதிராக இருப்பது, எதிர்க்கட்சிக்காரர்கள் அல்ல, மற்றவர்கள் அல்ல, இந்த வாக்குறுதிகளையும் அரசாணைகளையும் செயல்படுத்தாமல், அமுல்படுத்தாமல் இருக்கும் அமைப்புதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அமைச்சர்களைப் பார்க்கும்போது, அதிகாரிகள் எதையெதையோ சொல்லி திருப்தி செய்துவிடுகிறார்களே தவிர, பிரச்சினைகளைத் தீர்ப்ப தில்லை. இதனால் தான் ஜனநாயக நாட்டில் போராட்டங்கள் தோன்றுகின்றன என்பதை மாண்புமிகு அவை முன்னவர் மூலமாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, மேல்நிலைக் கல்வி முறை அமுல்படுத்தப்பட்டு, ஒரு 'கோர்ஸ்' முடிந்து அந்த முறை செம்மையாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஆனால் இங்கே இருக்கிற நிலைமை என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும். தமிழ் நாட்டில் இருக்கும் மாணவர்கள் 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்று 15 ஆண்டுகள் படித்தால்தான், பட்டம் பெறுகிற நிலை இருக்கிறது. ஆனால் இந்திய நாட் டிலேயே ராஜஸ்தான் மாநிலத்தில் பயிலும் மாணவர்கள் மட்டும் 10 பிளஸ் 1 பிளஸ் 3 என்று 14 ஆண்டுகள் மட்டுமே படித்து இளங்கலைப் பட்டதாரியாகும்



வாய்ப்பு இருக்கிறது. தமிழ் நாட்டு மாணவர்கள் மட்டும் ஏன் ஒரு ஆண்டு அதிகமாகப் படித்து இந்தப் பட்டத்தைப் பெற வேண்டும்? எதற்காக தமிழ் நாட்டு மாணவர்களுக்கு மட்டும் இந்தத் தண்டனை? அகில இந்தியாவும் ஒரே யூனியன் என்று சொல்லும்போது, 14 ஆண்டுகள் மட்டுமே படித்து இளங்கலைப் பட்டம் பெற்ற அந்த மாணவனும் சர்வீஸ் கமிஷன் பரிட்சைக்குப் போக முடிகிறது. ஆனால் நமது மாநிலத்தில் மட்டும் 15 ஆண்டுகள் படித் தால்தான் பட்டம் என்கிற நிலை இருக்கிறது. எனவே இந்த நிலையை மாற்றி 10 பிளஸ் 1 பிளஸ் 3 என்று 14 ஆண்டுகளிலேயே பட்டம் பெறும் வகையில் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மேல்நிலைப் பள்ளிகளில் எம்.ஏ., பி.டி. படித்தவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூபாய் 675. ஆனால் வெறும் எம்.ஏ. மட்டும் படித்துக் கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரி யர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூபாய் 700. இந்தக் கொடுமை மட்டுமல்ல, கடந்த மூன்று ஆண்டுகளாக அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும் அவர்களுக்கு என்று எந்த சர்வீஸ் ரூல்சும் இந்த மூன்று ஆண்டுகளாகத் தயாரிக்கப்படவில்லை. இப்படி கடந்த மூன்று ஆண்டுகளாக அவர்கள் 'அட்ரஸ் இல்லாமலேயே' பணியாற்றும் நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதில் உடனடியாக முடிவெடுத்து விதிமுறை களைத் தயாரிக்க வேண்டிய கல்வித் துறையின் மேல் அதிகாரிகள் அத்தனை பேரும் விளம்பரங்களிலும், விழாக்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிரு கிறார்களே தவிர, இவற்றைத் தயாரிப்பதற்கு அவர்களுக்கு இன்னும் நேர கிடைக்கவில்லை. நாங்கள் கல்வி இலாக்கா டைரெக்டர் அலுவலகத்திற்கு சென்றால், அங்கே அதிகாரிகளே இருப்பதில்லை. காரணம் கேட்டால் அவர்க எல்லாம் துறைத் தலைவர்களின் விழா நடத்தப் போயிருக்கிறார்கள் என் கிறார்கள். இதற்கெல்லாம் அவர்களுக்கு நேரம் இருக்கிறதே தவிர, பி ரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நேரம் இல்லை.

(திரு. செ. முத்துசாமி) [1981 ஜனவரி 28

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியராக இருந்து வந்ததால் தான் நான் இவற்றையெல்லாம் இங்கே எடுத்துக் கூறுவதற்கு கொஞ்சம் அதிக நேரம் எடுத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதனால்தான் சொல்லு கிறேன். திருவள்ளுவர் அவர்களே—

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்"

என்று சொல்லியிருக்கிறார். எனவே சுருங்கக்கூறி முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மிகுந்த புலமை மிக்கவர். அதனால்தான் அவருடைய பெயரிலேகூட புலமையை வைத்துக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: என்னைப் பற்றி பேசி அதற்காக 4 நிமிடங்களை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று உறுப் பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: விரைவில் முடித்துக்கொள்கிறேன். கல்வித் துறையைப் பொறுத்த வரையில், உயர்நிலைப் பள்ளிக் கல்வி விதிகள் எளிமை யாக்கப்பட வேண்டும். எந்த ஒரு விஷயம் குறித்தும் இங்கே போடப்படுகிற உத்தரவு போய்ச் சேருவதற்குள் மிகுந்த காலதாமதத்தை எடுத்துக் கொள்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பட்ஜெட்டின் போது—மார்ச் மாதத்தில் 2,000 ஆசிரியர்களை நியமிக்க சட்டமன்றம் அரசுக்கு அனுமதி அளிக்கிறது. அதற்கான அனுமதியோடு பண ஒதுக்கீடும் செய்கிறோம். ஆனால் அந்த 2,000 ஆசிரியர்களையும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நியமித்தால் படிக்கிற மாணவர்களும், அவர்களுடைய கல்வியும் உருப்படுமா என்பதைச் சிந்திக்க வேண்டாமா? பட்ஜெட்டை நிறைவேற்றிய உடனே இத்தனை ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கல்வித் துறை முன்கூட்டியே பட்டியல் தயாரித்து வைத்திருக்க வேண்டாமா? இந்த நிலையில்தான் தமிழ் நாட்டில் கல்வியின் தரம்—ஸ்டாண்டர்டு—ஏன் குறைகிறது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே நிர்வாக நடைமுறைகளில் தாமதமும் கெடுதலும் வந்துவிடுவதற்குத்தான் இன்றைய கல்வித் துறை அதிகாரிகள் துணை செய்து கொண்டிருக்கிறார்கள், அந்த வகையில்தான் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை



1981 ஜனவரி 28] (திரு. செ. முத்துசாமி)

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதை [illegible] போக்க வேண்டும், அதன் மூலம் மாணவர்களின் நலனைக் [illegible] வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[illegible] காவல் துறையினருக்கு உணவுப் பொருள்களைச் சலுகை விலையில் [illegible] மனதாரப் பாராட்டுகிறேன். அதைப்போலவே ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இருக்கும் மாணவர் விடுதிகளில் படிக்கிற ஹரிஜன் மாணவர்கள், மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான விடுதிகள் ஆகிய வற்றிற்கும், ஆசிரியர்களுக்கும் சலுகை விலையில் அரசாங்கம் உணவுப் பொருள்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி, படிக்கும் ஏழை மாணவர்களுக்கு சலுகை விலையில் உணவுப் பொருள்களை [illegible] 2 பேர், 3 பேர் உள்ள குடும்பத்திற்கு அது உதவிகரமாக இருக்காதா? எனவே அரசு இந்த வகையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களின் உணவு விடுதிகளுக்கும் இந்தச் சலுகையை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உலகத் தமிழ் மாநாட்டின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஒரு நாட்டின் தலைமையிடம் என்பது மையப் பகுதியில்தான் இருக்க வேண்டும் என்ற கருத்தை முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். இந்தக் கருத்தை நான் ஏற்கெனவே இங்கே பேசியிருக்கிறேன். உடனடியாக சென்னையிலிருந்து அனைத்துத் தலைமையிடங்களையும் மாற்ற வேண்டும் என்றால், சென்னையில் உள்ள பெரியவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மிகுந்த சத்தம் போடுவார்கள். காரணம், சென்னையில் இருப்பவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்கள். கிராமங்களைவிட நகரங்களில் [illegible] அனைத்தும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அவர்கள்.

மகாராட்டிர மாநிலத்தில் பம்பாயில்தான் தலைமையகம் அமைந் திருக்கிறது. என்றாலும் கல்வி இலாக்காவின் டைரக்டர் அலுவலகம் [illegible] அமைந்திருக்கிறது. அந்த வகையில் திருச்சியில் சில துறை களின் தலைமையகங்களை வையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் அதன் மூலம் மக்கள் தங்களின் பிரச்சினைகளை விரைவாகவும் சுலபமாகவும் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால் டைரக்டர்களாக வருகிறவர்கள் கீழ் அதிகாரிகள் அதிகாரங்களையும் தாங்களே எடுத்துக்கொண்டு செயல்படும் நிலைதான் இங்கே இருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும், டிவிஷனல் அளவில் [illegible] அதிகாரங்களைக்கூட தலைமை அதிகாரியே எடுத்து வைத்துக் கொண்டிருக்கிற [illegible] நிலையை மாற்றி அதிகாரத்தைப் பரவலாக்

(திரு. செ. முத்துசாமி) [1981 ஜனவரி 28

துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வகையில் தலைநகரையே நாம் மாற்ற வேண்டும் என்ற முதல்வர் அவர்களின் கருத்தையே நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு, ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன். "காரணங்கள் தேவையில்லை; காரியங்கள் நடைபெற வேண்டும்" என்று சுதந்திரத்திற்குப் பாடுபட்ட பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் சுதந்திரத்திற்குப் பிறகும் இதையே சொல்லி வந்தார்கள். காரணங்களைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளாதீர்கள். காரியங்களை ஆற்றுங்கள் என்பதையே நானும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இறுதியாக உலகத் தமிழ் மாநாடு குறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கருநாடக மாநிலத்தின் முதலமைச்சர் அதற்கு வருகை தந்திருந்தார்கள். அதுபற்றிய வருந்தத் தக்க விஷயம் ஒன்றை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் வேறு ஒரு மாநிலத்திற்கு வரும்போது, அவரை வரவேற்பதற்கு யாரை அனுப்புவது என்ற ஒரு வரைமுறை இல்லையா? கருநாடக மாநில முதலமைச்சர் மதுரைக்கு வந்திருந்தபோது, அவரை வரவேற்பதற்குப் பெரியகுளம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் வந்திருந்து வரவேற்றார். இதற்கெல்லாம் ஒரு புரொட்டோகோல் கிடையாதா? இவர்களையெல்லாம் எப்படி வரவேற்பது என்று ஒரு முறை இல்லையா? தமிழ் நாட்டின் முக்கிய அதிகாரிகள் அனைவரும் அங்கேதான் இருந்தார்கள். இதற்கு ஒரு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்தான் கிடைத்தாரா? நான் இதைச் சொல்வதற்குக் காரணம் தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்கள் வேறு எங்காவது செல்லும்போது அவருக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற அச்சம்தானே தவிர வேறல்ல. இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இதுகுறித்து விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அவருக்கு வழங்கப்பட்ட உணவுவகைகள்கூட சரியாக இல்லை என்று கேள்விப்பட்டேன். அவருக்கான உணவை பாண்டியன் ஹோட்டலிலிருந்து கொண்டு வந்திருந்தார்கள். இப்படி அடுத்த மாநில முதலமைச்சர்கள் வரும்போது அடிப்படையான இந்த விஷயங்களில் அமைச்சர்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இது குறித்து விசாரிக்க வேண்டும் என்று துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு, எனக்கு இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.



1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

## 7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

158. Notification issued with G.O. Ms. No. 1974, Rural Development and Local Administration, dated the 22nd December 1980 in regard to an amendment to the rules relating to the house-tax leviable by the panchayats, published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A.489/1961, dated the 26th April 1961 at pages 41-43 of Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th May 1961. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

159. Notification issued with G.O. Ms. No. 1161, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 25th November 1980 in regard to exclusion of the posts of Village Administrative Officers in the Tamil Nadu Ministerial Service from the Commission's purview in terms of Regulation 16 (*b*) of the Tamil Nadu Public Service Commission Regulations, 1954. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India)].

160. Notification issued with G.O. Ms. No. 1039, Rural Development and Local Administration, dated the 9th July 1980 in regard to framing of the Madurai City Municipal Corporation Class III—Town Planning Service Rules, 1980. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971)].

161. Notifications issued with G.O.Ps. No. 1243, Commercial Taxes and Religious Endowments, dated the 24th November 1980 in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959, amendment to Revenue Department Notification No. II-1. 5829 of 1962, dated the 30th November 1962, published at page 2481 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 5th December 1962, and reduction in rate of tax from four per cent to three per cent multi-point in respect of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act on the sale of all articles of ready-to wear apparel (known commercially as ready made garments) including under-garments and body supporting garments but excluding hosiery



goods. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

162. Notification issued with G.O. P. No. 1283, Commercial Taxes and Religious Endowments, dated the 2nd December 1980, exempting from tax payable by the Indian Oil Corporation, Madras under the Tamil Nadu General Sales Tax Act the sale of ... former oil feed stock to Raj Lubricants, Madras. [Laid on the ... of the House under section 53 (5) of the Tamil Nadu General ... Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

### *B. Reports, Notifications and Other Papers.*

19. Notification issued with G.O. Ps. No. 1243, Commercial ...es and Religious Endowments, dated the 24th November 1980 ...cting that the tax payable by any dealer under the Central Sales ... Act, 1956 (Central Act 74 of 1956), in respect of the sale ...all hosiery goods excluding those made of wool in the course of ...er-State trade or commerce, shall be calculated at the rate of ... and a half per cent.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

### வியாழக் கிழமை, 1981 ஜனவரி 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில், மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1 வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ஜமாபந்தி முறை.

* 41. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வருவாய்த்துறையில் நடைமுறையில் இருக்கும் ஜமாபந்தி முறையை, மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது எப்படி மாற்றியமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, வருடத்திற்கு ஒரு முறை தாலுகா அலுவலகங்களில் ஜமாபந்தி நடைபெறுகிறது. அது ஒரு சடங்கு மாதிரி, விருந்து மாதிரி நடைபெறும் முறை இருந்து வருகிறது. மொகலாய சாம்ராஜ்ய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முறையில் ஜமாபந்தியை நடத்துவதை விட தற்காலச் சிந்தனைக்கேற்ப அதை எளிதாக்கி கணக்குகளை ஆய்வு செய்யும் நாள் என்ற வகையிலே அந்தந்த வட்டத்திற்குள்ளே இருக்கும் கணக்குகளை ஆய்வு செய்யவும், குறைகளைக் கேட்டறியவும் செய்கிற வகையில் மாற்றியமைக்கிற செயற்குறிப்பினை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மொகலாயர் காலத்திலே ஜமாபந்தி முறை ஏற்பட்டது என்றாலும், அது ஆடம்பரமாக ஏற்பட்டதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் காலப் போக்கிலே, சில மாற்றங்களை செய்து, மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையிலே, கிராமக் கணக்குகளைச் சீர்படுத்துகிற வகையிலே, கிராமங்களில் உள்ள

[1981 ஜனவரி 29

விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் உற்ற குறைகளை ஜமாபந்தி அதிகாரி களிடத்திலே சொல்லி அவற்றைப் போக்குகிற வகையிலேயும் செய்ய வேண்டும் என்று எண்ணித்தான் அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக் கிறது. அது பல இடங்களில் ஆடம்பரமாக நடைபெறுகிறது என்றாலும், அப்படி நடைபெறாமல் இருப்பதற்கு அரசு வேண்டிய முயற்சியை எடுக்கும். பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அப்படி எங்கெங்கே தவறுகள் நடைபெறுகின்றன என்று இங்கே எடுத்துச் சொன்னால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பொது மக்கள் பிரச்சினைகள் சம்பந்தமாக பல கிராம அதிகாரிகள் தாலுகா அலுவலகங்களுக்குச் சென்று கேட்டால், அடுத்த வாரம் ஜமாபந்தி இருக்கிறது, ஆகவே இப்போது ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே ஜமாபந்தி என்ற நிலையை மாற்றி ஆண்டுக் கணக்குகள் தணிக்கை செய்வது என்ற வகையிலே கணக்குகளைத் தணிக்கை செய்யவும், கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது முடிவு எடுக்கவும் ஜன நாயக முறையில் எளிமைப்படுத்தி, அரசு தனியான ஆணையைப் பிறப்பிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். வருவாய்த் துறையில், வருவாய் வாரியத்தை ஒழித்ததன் மூலமாக பல சீர் திருத்தங்களைச் செய்ய ஆரம்பித் திருக்கும் அரசு இதையும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** ஜமாபந்தியைக் காரணமாகக் காட்டி மக்களுடைய அன்றாடத் தேவைகளைத் தள்ளிப் போடுகிற முறையை அரசு ஏற்றுக்கொள்ளாது. அந்த நிலைமை தொடர்ந்து வந்தால், ஒரே நாளில் அவற்றைக் களைவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுக்கும். ஜமா பந்தியில் உள்ள குறைகள் என்னென்ன என்பதைப் பற்றியும், அவற்றை எந்தெந்த வழிகளில் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் சொன்னால், அவற்றையெல்லாம் ஏற்று இந்த அரசு நிச்சயமாக நடைமுறைப்படுத்தும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஜமாபந்தி முறை ஒரு முறை ஒழிக்கப் பட்டு மறுபடியும் ஏற்படுத்தப்பட்டது. ஏன் அப்படி மாற்றம் செய்யப்பட்டது? ஜமாபந்தி முறையை நீக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறதா ? ஜமா பந்திக்கு யார் தலைமை வகிக்கிறார்கள் ? ஜமாபந்தி என்ற சொல்லை வேறு ஒரு தமிழ்ச் சொல்லால் அழைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தொடர்ந்து மூன்று, நான்கு கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அவற்றில் எதையெதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பதில் சொல்ல முடியுமோ அதைச் சொல்லு கிறேன். விட்டுப் போனதை மீண்டும் கேட்டால் பதில் சொல்லுகிறேன்.



1981 ஜனவரி 29]

முதலில் ஜமாபந்தி ஏன் ஒழிக்கப்பட்டது என்று கேட்டார்கள். மாண்பு மிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னபடி, ஜமாபந்தியில் சில குறைகள் இருக்கலாம் என்று கருதி அன்றைக்கு இருந்த அரசு 1972 ஆம் ஆண்டில் அதை ஒழிக்க வேண்டுமென்று ஓர் உத்தரவைப் போட்டு, எல்லா வற்றையும் ஒரே நேரத்தில் ஒழிக்க வேண்டாம் என்றும், சில தாலுகாக் களில் மட்டும் ஒழிக்கலாம் என்றும் சொல்லி, மொத்தம் 31 தாலுகாக்களில் ஜமாபந்தி முறை ஒழிக்கப்பட்டது. அப்படி உத்தரவு போட்ட பிறகு, கணக்குகளைச் சரி பார்க்க ஒவ்வொரு தாலுகாவிலும் துணைத் தாசில்தாரை நியமிக்க வேண்டுமென்று அன்றைக்கு இருந்த அரசு உத்தரவிட்டது. அதை நடைமுறைப்படுத்துகிறபோது, துணைத் தாசில்தாரால் அப்பணிகளைச் செய்ய முடியாது என்று கருதிய காரணத்தால், துணைத் தாசில்தாரை நியமிக்கிற இடத்திலிருந்து நிறுத்திவைக்கப்பட்டது.

இரண்டாவதாக, ஏன் மீண்டும் ஜமாபந்தி முறை கொண்டுவரப்பட்டது என்று கேட்டார். அரசு போட்ட உத்தரவு செல்லாது என்று கருதி, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று எண்ணி, எல்லா இடங்களையும் அந்த உத்தரவில் சேர்க்க வேண்டும் என்று கருதி, வட ஆற்காடு, திருச்சி, சேலம், மற்றுமொரு மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சி யாளர்களிடம் இதை ஒழிப்பதுபற்றிக் கருத்து கேட்கப்பட்டது. ஜமாபந்தியை ஒழித்துவிட்டால், கிராமக் கணக்குகள், தாலுகா கணக்குகள் சரியாக இருக்காது என்றும், ஜமாபந்தி என்று ஒரு நாளைக் குறிப்பிட்டிருப்பதால், ஜமாபந்தி நடப்பதற்கு முன்னால் கிராமக் கணக்குப் பிள்ளை கணக்குகளைச் சரி செய்ய வேண்டுமென்று உத்தரவு போடப்படுவதால், அவர் கணக்குகளைச் சரியாக வைத்திருப்பார் என்றும், அப்படி இல்லாவிட்டால் கணக்குகள் ஏன் சரியாக இல்லையென்று கேட்க வாய்ப்பு இருக்கிறது என்றும், கிராமத்தில் உள்ள விவசாயிகள், மற்றவர்கள் ஜமாபந்தி நடக்கிறபோது தாங்கள் கேட்ட எந்தெந்த வேண்டுகோள்கள் கவனிக்கப்படவில்லை என்பதை அதிகாரி களிடத்தில் எடுத்துச் சொல்லி தங்களுடைய குறைகளைப் போக்கிக் கொள்ளுகிற வாய்ப்பு இருக்கிறது என்றும், ஜமாபந்தி நடக்கிறபோது பொது மக்கள் தங்கள் மீது குறைகளை எடுத்துச் சொல்லுவார்கள் என்று அஞ்சி அரசு அதிகாரிகள் தவறு செய்யாமல் இருக்க வாய்ப்பு இருக்கிறது என்றும் எண்ணி, அதற்குப் பிறகு மீண்டும் ஜமாபந்தி கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மூன்றாவது ஜமாபந்தியை நடத்துகிற அதிகாரி யார் என்று கேட்டார் வருவாய்க் கோட்ட அதிகாரி ஜமாபந்தியை நடத்துகின்ற அதிகாரியாக இருக்கிறார்.

[1981 ஜனவரி 29

அடுத்து, ஜமாபந்தி எப்படி நடக்கிறதென்றால், ஜமாபந்தி நடக்கிற போது எப்போது வேண்டுமானாலும் மாவட்ட ஆட்சித் தலைவரோ, அவரால் நியமிக்கப்படுபவரோ இடையிடையே சென்று பரிசிலனை செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுதான் இன்றைக்குள்ள முறை.

THIRU A. R. DAMODARAN: Sir, the Government appointed an one-man committee which was headed by Thiru S. P. Ambrose to go into all aspects of revenue administration. The Ambrose Committee made certain recommendations regarding retention of Jamabandi. May I know whether the Government have given their thought to the Ambrose Committee's recommendations and whether they have accepted it?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அம்புரோஸ் கமிட்டியினுடைய சீர்திருத்தம்பற்றி அரசு ஒன்றன் பின் ஒன்றாக மேற்கொள்ள விருக்கிறது. ஆனால் நான் அமைச்சரான பிறகு நடந்த வருவாய்த் துறை அதிகாரிகள் மாநில மாநாட்டில் "ஒன் மேன் கமிஷன்" போட வேண்டுமென்று சொன்னார்கள். அந்த மாநாட்டில் நான் பேசுகின்றபோது, "கமிட்டியைப் போட்டால் காரியங்கள் தாமதமாகும். கமிட்டியைப் போடாமலேயே உங்களுடைய தேவைகள் என்னவென்பதை அரசு அறிந்து கொண்டிருக்கிறது" என்று சொன்னேன். பின்னர் முதலமைச்சரிடம் கலந்து பேசினேன். பிறகு "ஒன் மேன் கமிஷன்" போடப்பட்டது. அந்தக் கமிட்டியில் என்ன சிபார்சுகள் வரவிருக்கிறதோ அதையெல்லாம் அதற்கு முன்னாலேயே இந்த அரசு செய்துகொண்டு வருகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அவைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லுவதற்கு நேரம் இல்லை. அம்புரோஸ் கமிஷனின் சிபார்சுகள் வருவதற்கு முன்னாலேயே, அதைப் படித்துப் பார்க்காமலேயே ஒன்றன் பின் ஒன்றாக அவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல ஜமாபந்தி பற்றிச் சொன்னதையும் இந்த அரசு பின்பற்றும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த ஆண்டு, வருவாய்த் துறை கிராமங்களில் நில வரியை வசூல் செய்யவில்லை. கிராம அதிகாரிகள் அகற்றப்பட்டதன் காரணமாக கிராமக் கணக்கை ஜமாபந்தியிலே தணிக்கை செய்வது என்பது நடைபெற முடியாது. கிராம அதிகாரிகள் இல்லாததால், மக்கள் எந்தவிதமான குறைகளையும் சொல்ல வாய்ப்பு இல்லாமல் போகிறது. எனவே இந்த ஆண்டு ஜமாபந்தி நடைபெறுமா? ஜமாபந்தி நடைபெறும் என்றால், அதில் யாரெல்லாம் கலந்துகொள்ளுவார்கள்? ஜமாபந்தி நடக்கக்கூடிய தேதியை யார் எப்போது அறிவிப்பார்கள்?



1981 ஜனவரி 29]

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஜமாபந்தி நடைபெறும் தேதி பற்றி அறிவிப்பது ஜமாபந்தி நடத்தும் அதிகாரிதான். அவர் வருவாய்க் கோட்ட அதிகாரி, ஆர்.டி.ஓ., தான். அவர்தான் அதைப்பற்றி அறிவிப்பார். ஜமாபந்தி வரி வசூல் செய்து முடித்த பின்பு, கடைசியிலேதான் நடத்தப்படும். வரி வசூல் பல இடங்களில் நடந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு எவ்வளவு நிலங்கள் பயிர் செய்யப்படுகின்றன, என்ன பயிர்கள் போட்டிருக்கிறார்கள், அவைகள் விளைந்ததா, விளையவில்லையா, தண்ணீர் பாய்ந்ததா, நஞ்சையா, புஞ்சையா என்பதைப் பற்றியெல்லாம் கணக்கெடுத்து இன்றைக்கு முடியும் தருவாயில் இருக்கிறது. அதற்குப் பிறகு பணம் வசூல் செய்வதும் நடைபெறும். அதற்காக என்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது எந்தவிதமான கிராம வேலைகளும் தடைப்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: ஜமாபந்தி ஒவ்வொரு தாலுக்கா ஆபிசிலே ஒரு குறிப்பிட்ட சில நாட்களிலே நடைபெறுவதாக வருவாய்க் கோட்ட அதிகாரி அவர்கள் அறிவிப்பார்கள். கலெக்டர் முதல், ரெவின்யூ அதிகாரிகள், பெரிய அதிகாரிகள் அங்கே போகலாம். அதுபோலவே ஜமாபந்தி நடைபெறுகிற போது, மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களும் முன் அறிவிப்பு ஏதும் இல்லாமல் ஏதாவது ஒரு ஜமாபந்திக்குப் போவதற்கு உத்தேசம் உண்டா? அதுபோல ரெவின்யூ செக்ரட்டரி சென்று அங்கே நடைபெறுகின்ற நடைமுறைகளைத் தெரிந்துகொண்டு மேலும் என்ன சீர்திருத்தம் செய்யலாம் என்பதைப்பற்றி ஆராய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதுவரைக்கும் நான் போன இல்லை. அவர்களுக்குப் போகும்போது சொல்லிவிட்டால், அவர்கள் ஜாக்கிரதையாக ஆகிவிடுவார்கள். நான் கிராமத்திலேயிருந்து வருவதனால் ஆங்காங்கு நடைபெறுகின்றவைகள் எனக்கு நன்றாகத் தெரிவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, வேண்டுமானால் ஒரு முறை பரிட்சார்த்தமாகப் போகத் தயாராக இருக்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: கிராம அதிகாரிகள் கவனித்து வந்த பணிகள் தடைப்பட்டிருப்பதாகவும், அதுவும் நபர்கள் குறைவாக இருப்பதாலும்தான் இந்தப் பணிகள் தடைப்பட்டு வந்திருக்கின்றன என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே நீக்கம் செய்யப்பட்ட கிராம அதிகாரிகளை, அவர்களில் தகுதி பெற்றவர்களையாவது 10 ஏ(1) விதியின் கீழ் நியமிக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏற்கெனவே உள்ள அசல் கேள்விக்கும் இந்தத் துணை வினாவிற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

வினாக்கள் 42 முதல் 45 வரையில் பிறகு எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 46 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## *Nilayur Channel*

*46 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(*a*) whether there is any proposal for improving the Nilayur channel in Tiruparankundaram Constituency so that crops may be raised twice in a year in the Ayacuts fed by that channel; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (அ) மற்றும் (இ) திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள நிலையூர் கால்வாயை மேம்படுத்தும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) பரிசீலனையில் உள்ளது. முன்னுரிமை திட்டங்களின் (Priority Schemes) ஆய்வு முடிவடைந்த பிறகு இத் திட்டம் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. பா. ரா. தாமஸ்: இந்த நிலையூர் கால்வாய்த் திட்டத்தின் கீழ் பாசன வசதி பெறும் நிலம் எத்தனை ஏக்கர்கள்? அவைகள் எந்த வகையைச் சேர்ந்தவை? ஒரு போக விவசாயம் செய்யும் நிலமா அல்லது இரு போக விவசாயம் செய்யும் நிலமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: இந்த நிலையூர் கால்வாய் மேம்படுத்தும் திட்டம் ஏற்கெனவே உள்ளது. அங்கே ஒரு போகத்திற்குத்தான் இப்போது பாசன வசதி கொடுக்கப்படுகிறது. வைகையிலே வெள்ளம் கரை புரண்டு போகின்றது. வளர்ந்துவரும் மதுரை மாநிலத்தின் பல பகுதிகள் இந்த வெள்ளம் கால்வாயிலே கரை புரண்டு போகின்றபோது மூழ்கி விடுகின்றன. அதிலே ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். வைகை வெள்ளம் இப்படி வரும்போது, இந்தக் கால்வாயை விரிவுபடுத்துவதன் மூலம் வெள்ளத்தால் அந்தப் பகுதிகள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதுடன், வீணாகப் போகின்ற தண்ணீரையும் வீணாக்காமல் கூடுதல் பாசன வசதிக்கு வகை





செய்ய முடியும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அண்மையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலேயும் இந்தத் திட்டத்தை ஆய்வு செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மதுரையின் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் வருவதைத் தடுப்பதற்காகத்தான் இந்தக் கால்வாய் திட்டம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபோலவே மற்ற பகுதிகளிலும், மற்ற நகர்ப்புறங்களிலும் இப்படிப்பட்ட இடையூறுகள் இருப்பதைத் தடுப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, அதிகமான மழை பெய்து, வெள்ளம் வருவதன் காரணமாக பாசன வசதி பெறுகின்ற பகுதிகள் பாதிக்கப்படுவதோடு, நகரங்களும் பாதிக்கப்படுகின்றன, அதிகமான வெள்ளம் வந்துவிடுவதால், சாதாரணமாகக் குடி தண்ணீர் வசதியும் இல்லாமல் போகிறது. தண்ணீர் வெள்ளமாக வந்திருந்தும், அந்தத் தண்ணீர் குடிக்க முடியாததாக இருக்கின்ற சூழ்நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இப்படிப்பட்ட வெள்ள அபாயங்கள் வராமலிருப்பதற்கு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று இந்த அரசு கடந்த ஆண்டு முடிவு செய்தது. அந்த அடிப்படையிலேயே சென்னை நகரப் பகுதிக்கு ஆபத்து வராமல் தடுக்க வேண்டும் என்று செம்பாம்பாக்கம் ஏரியில் ரூ. 1 கோடி செலவில் சீர்திருத்தம் செய்யப்பட்டது. அந்த ஏரியின் கரைகளை உயர்த்தியும், ஆழப்படுத்தியும் சீர்திருத்தப்பட்டது. அது போலவே மற்ற நகரங்களுக்கும், அவைகளைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் வெள்ளப் பாதிப்பு ஏற்படும்போது தடுக்க நீர்ப்பாசனத் துறையிலே இப்படிப்பட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அந்த அளவிலேதான் இந்தக் கால்வாயை மேம்படுத்தும் திட்டம் அதிகமான வெள்ளத்தைத் தடுப்பதற்கும், வீணாகின்ற நீரை அதிகமான பாசன வசதிக்குப் பயன்படுத்துவதற்கும் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா தாமஸ்: இந்த நிலையூர் கால்வாயிலே பல கண்மாய்கள், குளங்கள் இருக்கின்றன. திருப்பரங்குன்றம் பகுதியில் குளம் ஒன்று பெரியதாக இருக்கிறது. அந்தக் குளத்தை பொழுதுபோக்கு இடமாக ஆக்கி, நீச்சல் வசதிகள், படகுப் போக்குவரத்து வசதிகள் எல்லாம் செய்து வைத்தால், திருப்பரங்குன்றம் கோயிலுக்கு வரக்கூடிய சுற்றுலா பயணிகளுக்கு நல்ல

பொழுதுபோக்கும் இடமாக இருக்கும். மதுரை நகர மக்களும் அந்த இடத்தைப் பொழுது போக்குக்காகப் பயன்படுத்தும் நிலை ஏற்படும். அது அரசின் ஆய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மதுரையைச் சுற்றியுள்ள இடங்களுக்கு வருகிறவர்களில் சுற்றுலாவாக வரக்கூடியவர்களும் இருக்கிறார்கள். குறிப்பாக அவர்களையும் மனதில் கொண்டு அந்தப் பகுதிகளுக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் மதுரையில் வண்டியூர் கண்மாயில் படகுப் போக்குவரத்து வசதிகள் செய்ய இருக்கிறோம். சுற்றுலாப் பயணிகள் கவரப்பட்டு வரக்கூடிய அளவுக்கு அதை மாற்றுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. இந்தப் பணி முடிந்தபின், அங்கத்தினர் அவர்கள் சொல்லும் பணியும் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Molasses

* 47. Q—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the extent of molasses produced every year in the State;

(b) the extent of its use for production of liquor; and

(c) the extent of liquor produced with molasses as the bye-product?

மாண்புமிகு திரு. க. திருநாவுக்கரசு:

| சர்க்கரை ஆண்டு. | அளவு (இலட்சம் டன்களில்) |
|---|---|
| (அ) 1975-76 | 0.86 |
| 1976-77 | 1.77 |
| 1977-78 | 2.32 |
| 1978-79 | 2.57 |
| 1979-80 | 1.74 |
| (இ) 1975-76 | 1.04 |
| 1976-77 | 1.61 |
| 1977-78 | 2.23 |



| சர்க்கரை ஆண்டு. | (இலட்சம் டன்களில்) அளவு |
|---|---|
| 1978-79 | 1.70 |
| 1979-80 | 1.49 |

| (உ) சாராயம் ஆண்டு | (இலட்சம் லிட்டர்களில்) |
|---|---|
| 1975-76 | 267.55 |
| 1976-77 | 281.00 |
| 1977-78 | 311.27 |
| 1978-79 | 335.22 |
| 1979-80 | 357.00 |

திரு. க. இராமமூர்த்தி: இந்த சர்க்கரைக் கழிவுப்பாகு மதுபானம் தயாரிக்க, ரெக்டிபைட் ஸ்பிரிட் தயாரிக்க அடிப்படைத் தேவையாக இருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. இது எந்த அடிப்படையிலே எத்தனை ஆலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது? சில தொழிற்சாலைகள், அதாவது சர்க்கரை ஆலைகள், தாங்களே மதுபானம் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். சில ஆலைகள் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை வைத்திருக்கவில்லை. இந்த இரண்டு விதமான ஆலைகளுக்கும் எந்த விகிதத்தில், எந்த அடிப்படையில் எரி சாராய உற்பத்திக்கு அனுமதி தரப்படுகிறது? அது முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா? அந்த ஆலை சொந்தக்காரர்கள் எந்த அளவுக்கு ரெக்டிபைட் ஸ்பிரிட் தயாரிக்கின்றார்களோ அந்த அளவுக்கு பர்மிட் அளிக்கப்படுகின்றதா? அல்லது அவர்கள் அதிலிருந்து போலேசல, கள்ளச் சாராயம் காய்ச்ச அந்தப் பாகு பயன்படுத்தப்படுகின்றதா? இதையெல்லாம் அரசு எந்த விதத்திலே கண்காணிக்கிறது? இந்தத் தயாரிப்புகள் முறையாக நடக்கிறதா அல்லது அதில் தவறுகள் நடைபெறுகின்றதா என்பதற்கான தகவல்கள் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, ஆண்டு வாரியாக எவ்வளவு சர்க்கரைக் கழிவுப் பாகு உற்பத்தி ஆகிறது, ஆண்டு வாரியாக டிஸ்டிலரிக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்ற விவரங்களைத்தான் விடைகளிலே சொன்னேன், இன்னும் விவரமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு ஆண்டு, குறிப்பாக 1979-80 ஆம் ஆண்டிலே மட்டும் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரைக் கழிவுப்பாகினுடைய அளவு 1.74 லட்சம் டன்கள். மொத்தம் டிஸ்டிலரில் 8 இருக்கின்றன. ஒரே விதமான அடிப்படையிலேதான் இந்த எட்டு டிஸ்டில்லரிசுக்கும் பிரித்துக் கொடுக்கப்

படுகிறது. மீதமுள்ள கழிவுப் பாகுகள் கால்நடைத் தீவனங்கள் தயாரிக்கவும், நல்லெண்ணெய் தயாரிப்பது போன்ற காரியங்களுக்கும் பயன்படுகிறது. இப்படிப் பல்வேறு துறைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இதிலே யிருந்து மோலேசஸ் தயாரிக்கப்படுகிறது. அங்கங்கே உற்பத்தியாகின்றவை களை அந்தப் பகுதி தாசில்தார்கள், அதிகாரிகள் கவனிக்கிறார்கள். அதிலே ஏதாவது தவறு நடக்கிறது என்று தெரிந்தால், அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 10-50)

**திரு. க. இராமமூர்த்தி :** சர்க்கரை கழிவுப் பாகை அளிப்பதில் அதிகாரி களின் கண்காணிப்பு இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னதிலிருந்து அதன் முக்கியத்துவம் தெரிகிறது. அந்த நிலையில் எத்தனை டிஸ்டிலரிகள் அல்லது ரெக்டிபைட் ஸ்பிரிட் தயாரிக்கும் தொழிற்சாலைகள் சென்ற ஆண்டு கொடுத்த 'கோட்டா' போதவில்லை அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் கொடுத்த 'கோட்டா' போதவில்லை என்று இந்த ஆண்டு அதிகமாகக் கேட்டி ருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அந்த ஆலைகள் மீது ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா? எந்த ஆலைகளிலாவது கொடுக்கப்படுகின்ற சர்க்கரைக் கழிவுப் பாகு தவறாகப் பயன்படுத்தப்பட் டிருக்கிறதென்று புகார்கள் வந்திருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுள்ள துணைக் கேள்விக்கும் வித்தியாசம் இருக்கிறது. முதலில் கேட்டுள்ள கேள்வி, உற்பத்தி செய்யக் கூடிய சர்க்கரை கழிவுப் பாகின் அளவு எவ்வளவு, அதில் எவ்வளவு டிஸ்டிலரி களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது என்பது பற்றியது. எத்தனை டிஸ்டிலரிகள் என்று கேட்கப்பட்டதற்கு, 8 என்று பதில் சொன்னேன். எந்த ஆலைகளில், எவ்வளவு கேட்கிறார்கள் என்பது குறித்து தனிக் கேள்வி கேட்டால் பதில் தரப்படும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒரு டன் சர்க்கரைக் கழிவுப் பாகில் எவ்வளவு ரெக்டிபைட் ஸ்பிரிட் தயாரிக்கலாமென்பது பற்றி சம்பந்தப்பட்ட டெக்னிகல் அதிகாரிகள் அரசுக்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்களா? அந்த அடிப் படையிலே கொடுக்கப்படுகின்ற சர்க்கரை கழிவுப் பாகுக்குத் தகுந்தாற்போல் ரெக்டிபைட் ஸ்பிரிட் உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஒரு டன் சர்க்கரை கழிவுப் பாகைக் கொண்டு 220 லிட்டர் எரி சாராயம் தயாரிக்கலாமென்பது கணக்கு. அந்த அடிப்படையிலேதான் கொடுக்கப்படுகிறது. அந்த அளவிற்கு





வருகிறதா என்பதும் கணக்கிடப்படுகிறது. அப்படி எரி சாராயம் தயாரிக் காமல், கொடுக்கப்படுகின்ற சர்க்கரைக் கழிவுப் பாகு தவறாகப் பயன் படுத்தப்படுகிறதென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சரவர்கள் சராசரி 220 லிட்டர் என்று சொன்னார்கள். பேக்டரிகளில் 175 லிட்டர்கள் என்று சொல்லுகிறார்கள். எனவே சராசரி 180 லிட்டர் எரி சாராயம் ஒரு டன் சர்க்கரை கழிவுப் பாகிற்குத் தயாரிக்க வேண்டுமென்று அரசு நிர்ணயித்து, அந்த அடிப் படையிலே கணக்கு செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** சராசரியாக 220 லிட்டர் தயாரிக்கலாமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஒவ்வொரு தொழிற்சாலையும் இவ்வளவு சர்க்கரை கழிவுப் பாகு தர வேண்டுமென்று வரையறை செய்து பல ஆண்டு களாகின்றது. அது சரியானதுதானா என்பதை மறுபரிசிலனை செய்யும் உத்தேசம் அரசுக்குண்டா? மேலும் ஏதேனும் தொழிற்சாலைகளில் தவறு நடக்கிறதென்று அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மொத்தமாக ஒவ்வொரு ஆலைக்கும் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறதோ அதன் அடிப்படையில் சர்க்கரை கழிவுப் பாகு அந்த ஆலைகளிலிருந்து பெறப்படுகிறது. இதிலே ஏதாவது தவறு நடக்கிறதென்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** சர்க்கரை கழிவுப் பாகாக இருக்கின்றபோதே, அதிகாரிகளைப் போட்டு, அதைக் கவனிக்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அமைச்சரவர்கள் ஆவரேஜ் அளவு சொன்னார்கள். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும்போது, ஆவரேஜுக்கு அதிகமாக அல்லது குறைவாக இருக்கலாம். எரி சாராயம் அல்லது மற்றவைகளைத் தயாரிக்கும்போது, இந்த நிலைமைகள் ஏற்படுவதுண்டு. அப்படிக் குறை வாக அல்லது அதிகமாக உற்பத்தி செய்யும்போது, அதை சம்பந்தப்பட்ட டிஸ்டிலரிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றனவா? அதிக மாக உற்பத்தி செய்யும்போது, அதை எப்படி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளதா? அப்படி அரசாங்க உத்தரவின்மூலம் சர்க்கரை கழிவுப் பாகைப் பெற்ற டிஸ்டிலரிகளின் பெயர்களுள் எவையாவது சமீபத்தில் நடந்த கள்ளக் கடத்தலில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளதா? அப்படியென்றால் எவையெவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் நான்கு துணைக் கேள்விகளைச் சேர்த்துக் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. ரெக்டிபைட் ஸ்பிரிட் தயாரிக்க சர்க்கரைக் கழிவுப் பாகைப் பிரித்துக் கொடுக்கும்போது, ஒரு டன்னுக்கு 220 லிட்டர் தயாரிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே தருகிறோம். கொடுத்த அலாட்மென்டைச் சரியாக உபயோகிக்கவில்லை அல்லது உற்பத்தி செய்யவில்லை என்றால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். இறுதியாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாதது.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister has mentioned about molasses in factories only. May I know what control the Government exercise over molasses that are distributed by the Khandasari units which are run as cottage industries because illicit liquor can also be made? Do the Government have any knowledge about that?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: குடிசைத் தொழிலாக மொலாசஸ் தயாரிப்பது அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதல்ல. அப்படிச் செய்வது தவறானது. அப்படிச் செய்வதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 48 முதல் 50 வரை ஒத்தி வைக்கப்படுகின்றன.

**பெரிய தொழில் நிலையங்களில் மின்சார உற்பத்தி நிலையங்கள்.**

@*. வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மின்சாரத் தட்டுப்பாட்டைக் குறைக்கும் வகையில், பெரிய தொழில் நிலையங்கள் சொந்தத்தில் மின்சார உற்பத்தி நிலையங்களை அமைத்துக் கொள்ளும் திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தற்சமயம் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

@ 23—1—1981 ஆம் நாளைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.



திரு. ம. சங்கரலிங்கம்: மின் பற்றாக்குறை இருக்கிற இந்தக் காலத்தில், தொழிற்சாலைகளே மின் உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளைச் செய்து தருவது, மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதாக இருக்கும். இதே முறையைக் கர்நாடக மாநிலத்தில் மேற்கொள்ளுகிறார்கள். அங்கே தனியார் தொழிற்சாலைகளானாலும், அரசுத் துறை தொழிற்சாலைகளானாலும், அவர்களே மின் உற்பத்தி செய்துகொள்வதற்கு தனித் திட்டம் வகுத்துக் கொண்டால், அதற்கு 90 சதவிகிதம் செலவைக் கடனாக அவர்கள் கொடுக்கிறார்கள். அதோடு, உற்பத்தியாகின்ற மின்சாரத்திற்கு வரியும் போடாமல் இருக்கிறார்கள். அந்த முறையை நமது மாநிலத்திலும் கொண்டு வர அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தொழில்கள் கூட்டாக இருக்கும் இடங்களில், இப்போதே அவர்கள் டீசல் மின் உற்பத்திச் சாதனங்களை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள். அதற்குப் பதிலாக அவர்களே ஒரு அனல் மின் உற்பத்தி நிலையத்தைத் துவக்க முன்வருவார்களானால், அரசு அதை நிச்சயமாகப் பரிசீலித்து உதவி செய்யும். நம்முடைய தமிழகத்தில்கூட ஒருசில தொழிலதிபர்கள் அந்த எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள். என்னையும் சந்தித்துப் பேசினார்கள். அதுசம்பந்தமாக திட்டத்தைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட திட்டங்களை அவர்கள் கொடுத்தால், அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

திரு. ம. சங்கரலிங்கம்: பெரிய தொழிற்சாலைகளில் அவர்களே உற்பத்தி செய்கிற மின்சாரத்திற்கு வரி விதிக்காதென்ற சலுகையை அறிவித்து, மேலும் கடன் வசதியும் குறைந்த வட்டி விகிதத்தில் கிடைக்குமென்று அரசு முடிவு செய்து அறிவித்தால்தான், தொழில்களை ஊக்குவிக்கும் சாத்தியக்கூறு ஏற்படும். அரசு இதில் தீவிர கவனம் கொண்டு, அந்த முயற்சியில் ஈடுபட்டால்தான், நமது மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை குறைய வாய்ப்பு ஏற்படும். எனவே இதுபற்றி அரசு தீவிர பரிசீலனை செய்யுமா?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின் உற்பத்திக்கான வரிகளை நீக்குவது என்பது எந்த அளவுக்கு நமக்கு வருவாய் வருகிறது என்பதைப் பொறுத்து மேற்கொள்ள வேண்டிய முடிவு. ஏனென்றால் மத்திய அரசின் மின் நிலையங்களில் உற்பத்தியாகிற மின்சாரத்தைக் கூட வரி போட்டு நாம் வரி வசூலித்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக நெய்வேலியில் உற்பத்தியாகிற மின்சாரத்திற்கு நாம் வரி வசூலித்துக் கொண்டிருக்கிறோம். அதையெல்லாம் நாம் கவனத்தில் கொண்டுதான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. குறைந்த

வட்டியில் கடன் கொடுப்பது அல்லது தனியார் துறையின் திட்டத்தில் அரசும் மூலதனம் போட்டு ஜாயின்ட் செக்டாரில் ஆரம்பிப்பது என்பவை அவர்கள் திட்டங்களைக் கொண்டு வந்து கொடுத்த பிறகு பேசி முடிவு எடுக்க வேண்டிய விஷயங்கள்.

**திரு. பா. ரா. தாமஸ் :** அனல் மின் நிலையங்களை தனிப்பட்ட முறையில் அந்தந்தத் தொழில் நிறுவனங்களுக்காக அவர்களே ஏற்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குவது என்பது அரசின் திட்டமா? அல்லது வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் அப்படி ஆரம்பித்துக்கொள்ளலாம் என்பது அரசின் திட்டமா? அப்படியானால் அது அரசினுடைய பொது வினியோக முறைக்கு முரண்பாடான கருத்து அல்லவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மின் பற்றாக்குறை பொதுவாக உள்ளது. இப்போதே ஆங்காங்கு தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்கள் பல்வேறு முறைகளில் மின் உற்பத்தி சாதனங்களை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவை 300 மெகாவாட் அளவுக்கு இயங்கி வருகின்றன. அதற்கு ஏராளமான டீசல் தேவைப்படுகிறது. மேலும் அதற்கு அந்நியச் செலாவணியும் தேவை. அவர்கள் இப்படிச் செய்வதற்குப் பதிலாக எல்லோரும் சேர்ந்து பொதுவாக ஒரு அனல் மின் நிலையம் வைத்துக்கொள்ள அனுமதி தேவை என்று சொன்னால், அது ஒரு நல்ல சாதனையாகவும் இருக்கும். அப்படி அவர்கள் செய்ய முன்வருவார்களேயானால், உறுப்பினர் சொன்னதுபோல் உள்ள பிரச்சினைகள் எழாது.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் சொன்ன கருத்துக்களை நான் வரவேற்கின்ற நிலையில், அனல் மின் உற்பத்தி நிலையங்களை அரசினுடைய தொழிற் பேட்டைகளில் இண்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ்களில் அல்லது அதுபோன்ற இடங்களில் அமைக்க அரசு முன்வருமா? அப்படிச் செய்து தொழில் அதிபர்களுக்கு வழிகாட்டியாக அரசு இருக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வட சென்னையில் தொழிற்சாலைகள் நிரம்ப இருக்கின்றன. அங்குள்ள தொழிற்சாலைகளிலுள்ள அதிபர்கள் முன்வந்து இத்தகைய முயற்சிகளை மேற்கொள்வார்களேயானால், அரசு ஆதரவு தரலாம்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know from the Government whether the Industrial Policy Resolution which said that power should be generated only in the public sector has since been



relaxed and whether permission has been given by the Government of India for a consortium of industries to start thermal plants of their own?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the Government of India have their own views and I do not know what exactly the attitude of the Government of India will be. But, even now the industries are allowed to have their own captive generation. Now, captive generation is being done on diesel. Instead of that, if they can come on a thermal station, then it is that much good not only in so far as the availability of diesel is concerned but also in saving foreign exchange. This idea has been mooted by me also to the Union Energy Minister. But, the views of the Government of India are yet not clear.

**திரு. ஆ. நல்லசிவன்:** மின் உற்பத்தி சக்தியை அதிகப்படுத்த மாநில அரசு சமர்ப்பித்த திட்டங்கள் தேவையில்லையென்று கூறி சென்ட்ரல் எலெக்ட்ரிசிட்டி குழு மறுத்திருக்கிறதா? அதுவும் மின் உற்பத்திக் குறைவுக்கு ஒரு காரணமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மூலக் கேள்விக்கு இக்கேள்வி சம்பந்தம் இல்லையென்றாலும் பதில் சொல்கிறேன். ஒரு மனிதனுடைய உணவுத் தேவை நிலையைக் கணக்கிடும்போது, அவன் பட்டினி கிடக்கிற காலத்தையும் கூட கணக்கிடுவதுபோல் இங்கே மின்சாரத்தைக் கணக்கிடும் போது, மின் வெட்டுக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் மின்சார வளர்ச்சியின் வேகம் குறைவாக இருக்கிறது. அது கூடாது என்று திரும்பத் திரும்ப வற்புறுத்தி வருகிறோம். பவர் கட்டை வைத்து முடிவை எடுக்கக்கூடாது என்பது நம்முடைய நிலை.

THIRU J. M. MIAKHAN: Sir, in Madhavaram Milk Colony, plenty of bio-gas is available. Cannot we use it for generation of powers at least for the industries in North Madras?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, many such things are talked of. But, how much they will be of benefit for bulk consumption is not yet established.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தற்போதுள்ள இந்த மின்சாரக் கட்டுப்பாடு எத்தனை நாள் நீடிக்கும் என்று அரசு கருதுகிறது? எப்போது அது நீங்கும்? அதுவரை தமிழகத்திலுள்ள அத்தனை சினிமா தியேட்டர்களும் தங்களுடைய ஜெனரேட்டர்கள் மூலம் மின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அரசு முடிவெடுக்குமா?

[1981 ஜனவரி 30

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை வருகின்ற வரை, அதாவது ஜுன் மாதம் வரை, இந்த மின் வெட்டு தொடர்ந்து நீடிக்கும். அத்தனை சினிமா தியேட்டர்களிலும் ஜெனரேட்டர்களை வைத்துள்ளார்களா இல்லையா என்பதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. அதுபற்றி முடிவெடுத்து உடனே ஆணை பிறப்பிக்க வேண்டிய அளவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று அது என்று இந்த அரசு கருதவில்லை.

### ஆலடி நீர்மின்விசை-நீர்த்தேக்கத் திட்டம்.

@*2 வினா.— டாக்டர் இரா. சனார்த்தனம் திரு. செ. முத்துசாமி (சார்பில்) : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேற்கு நோக்கிச் செல்லும் நதிகளை கிழக்கே திருப்பும் முயற்சியில் ஒன்றாகிய ஆலடி நீர் மின்விசை-நீர்த்தேக்கத் திட்டம், தற்சமயம் மாநில அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடும், இதனால் பயன் அடைய உள்ள நிலத்தின் பரப்பளவும் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மின் திட்டங்களை நிறைவேற்றத் தேவையான அளவுக்கு மின் கலங்களை அளிக்கின்ற நிலையில் நம்முடைய பெல் நிறுவனம் இருக்கிறதா ? அப்படிப்பட்ட நிலையில் அது இல்லாவிட்டால் நமக்குத் தேவைப்படும் மின் கலங்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது முன்னால் உள்ள கேள்விக்கு கேட்கப்பட வேண்டிய துணைக் கேள்வி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் ஒருவராக இருப்பதால் இப்போது கேட்கிறார்.

---

@ 23—1—1981 ஆம் நாளிட்ட வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப்பட்டது.



1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆலடி நீர் மின்விசை-நீர்த்தேக்கத் திட்டத்தில் மின் உற்பத்தி செய்ய முடியுமா என்பது மூலக் கேள்வி. அந்தப் பகுதி முழுவதும் கேரளா எல்லையில் இருக்கிறது. அங்கே போய் நாம் திட்டம் போட முடியாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 42 முதல் 45 வரை ஒத்தி போடப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### II. தகவல் கோரல்.

### கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எத்தனை கொடுத்தாலும் காரணம் காட்டாமல் அவைகள் எடுத்துக் கொள்ளப் படாமல் இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுபற்றி அறையில் வந்து கேட்க வேண்டும். இப்படிப் பேசுவதை ஒரு வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விதி தெளிவாக இருக்கிறது. அறையில் வந்து கேட்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படாததற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்து அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைச் செய்யலாம்.

3. அறிவிப்புகள்.

(1) தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு திரு. காடுவெட்டி கண்ணப்பன் ஒருவர் மட்டுமே முறைப்படியாக நியமனம் செய்யப்பட்டுள்ளதால், அக்குழுவிற்கு அவர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கிறேன்.

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டது :—

30—1—1981 — ஆளுநர் உரையின் மீது விவாதம்.

31—1—1981 — ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு பதிலுரை.

1—2—1981 — விடுமுறை.

2—2—1981 — 1980-81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது விவாதம்.

3—2—1981 முதல் 9—2—1981 வரை. — கூட்டம் இல்லை.



10—2—1981 மற்றும் 11—2—1981 —

1. 1980—81 ஆம் ஆண்டு தமிழ் நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம்.

2. நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவினை ஆய்வு செய்தல்.

12—2—1981 மற்றும் 13—2—1981 — அரசு அலுவல்கள்

14—2—1981 — தேவையிருப்பின், அரசு அலுவல்கள்.

மேலவை வழக்கம்போல் காலை 10-30 மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை கூடும்.

(முற்பகல் 11-10)

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, Sir, I thank you for the opportunity given to me to speak on the Governor's Address.

Sir, let me begin with a remark which has been made by the Hon. the Minister for Industries that, in 1979-80, 357 lakh litres of rectified spirit has been converted from molasses. The Hon. Minister was kind enough to say that if any irregularity in this matter was brought to his notice, he would take prompt action. I admire the Government who say that thtey would do it. As one who is duty-bound, it is my duty to place before you a serious lapse which has occurred in the Arvind Mills, Panruti while transporting 10 lakh litres of alcoholic sprits by by Permit No. 5213 of 28th October 1980. The Arvind Sugar Mills undertook to despatch 10 lakh litres by 27th November 1980 to Mannam Sugar Mills Co-operative Society, Ltd., Pandalam. They despatched one consignment of 72,000 litres on 3rd November 1980. Now, this was by the route Panruti-Tiruchirappalli-Melur Madurai-Rajapalayam Shenkottai and the check-post. Thereafter, they applied for change of the route, despite the fact that the 26th September 1980 Import

[Thiru G. Vasantha Pai] [1981 ஜனவரி 29

Permit from Kerala did not ask for the change of the route. It was very clear that this Arvind Mills applied for a change of route at the instance of one who claimed to be the representative of the Pandalam Mills. An application was made on 10th November 1980 and an order was made on 12th November 1980. Before the order could reach thte various checkpost, this Mill transported another 72,000 litres on 13th November 1980. Now nobody knows how this transport was made. This quantity of 72,000 litres, meant for Mannam Sugar Mills Co-operative Society, Alleppey, Kerala State, never reached its destination. Sir, it is the duty of this Government to find out how this went out without proper check by the Deputy Tahsildar who was in charge of Arvind Mills. I am bringing this to the notice of the Government. There is no endorgement made in this permit on 13th November 1980 in relation to this quantity of 72,000 litres. This Mills had to send within a month to Kerala a total quantity of 10 lakh litres. At the end of one month, it was found that the Mills had been able to send only a total quantity of 3 lakh litres. Where did the balance of quantity go ? These are matters which the Government should go into, both in the interests of revenue as well as in the interests of avoiding the diversion of rectified spirit for illegal purposes. I wish to bring to the notice of the Government that this 72,000 litres sent on 13th November 1980 from Arvind Mills, Panruti, was endorged by the Tahsildar-Distillery Officer, Arvind Mills only on 17th November 1980, four days after the despatch of the material. Why was the Tahsildar so negligent as not to make a check on 13th November 1980 ? I want the Government to order an investigation as to why he made the endorsement after four days. For what purpose and reason, he validated this illegal transport of 72,000 litres, when on that date, there was no permission for transport. All the other three consignments on 3rd November 1980, 17th November 1980 and 26th November 1980 have all been endorsed by the Deputy Tahsildar, Arvind Mills. Only this consignment on 13th November 1980 has been endorsed by the Tahsildar 4 or 5 days afterwards. This shows that the Mills had transported this quantity without proper permission and the whole quantity has been diverted for some other purposes because the consignment has not been received in Kerala. I am bringing this to the notice of this Government, for taking any action which it deems proper and for pursuing this matter with the Mills, so that this does not occur again as it involves both loss of revenue and also the smuggling of rectified spirit for some other purposes.



1981 ஜனவரி 29] [Thiru G. Vasantha Pai]

The next matter I would like to deal with is the growing indiscipline among students. I have myself experienced, since I have had two or three wards in my care, that of late, both in schools and colleges there are students who do not want to study and they prevent others who want to study from attending schools and colleges. This has happened not once or twice but has been happening very often during the last 7 years. This has been engaging my attention and thought. What is the reason for this change in attitude among the students? The reason is that under the present system, a number of students who do not want to study and who want only to create trouble get themselves admitted into schools and colleges. Their main hobby is to prevent pupils who are studious from studying and force them to come out, throw stones at buildings, march in processions and do things like that. As a result there is growth of student-indiscipline. The reason for this is two-fold. The first is, and I mention this with great respect to all the representatives of the teachers, that there is a growing trade union movement which is gathering momentum among the teachers which is having its bad effect on the student-world. I think that the teachers must adopt better means of ventilating their grievances. Secondly, the students who do not want to study are forced to go to schools by the existence of schemes like free education, adult education, reservation, etc. They come and apply for admissions but they are not interested in their studies. What happens as a result of this. The Madras University was considered to be the topmost University in the whole of India. It had a prestige which was unmarched and people even used to compare it to the Oxford University and the Cambridge University. This University and our educational institutions are now coming down, slowly, in stature. I have got a suggestion to make to the House. I know that many hon. Members will oppose me if I talk about abolition of reservations. It is against their grain of thinking but going to talk about it. I am going to request this

House to abolish the reservation of 50 per cent hereafter and throw everything to open competition. It is an insult even to the back-ard communities to think that they are intellectually inferior. It a disgrace for them to feel, "We are intellectually and that is hy Government come to our succour". It is not good for the development of their character and also for building up of their personality. So, this reservation must be gradually reduce. If it is 50 per cent this year, it may be reduced to 30 per cent next year, to 20 per cent in the year after and to 10 per cent in the third succeeding year. Like that, the reservation must gradually come down. Finally, all openings, both for employment and for education, must be thrown open to open competition. It is only then that people who are really interested in studies will come forward and study and make their own lives better besides making this State and the country better. The downward trend in Tamil Nadu in the field of education is a lot due to the increases, time and again, in the percentage of reservation at the request of people's who are repre-tives, and I will exhort them, to stop asking for reservations and to allow selectioin through open competition. I dare say that many students belonging to the backward communities are intellectually on a par with those of the forward communities. It is really an insult to their inteligence to say that the reservation will be there to compensation for their intellectual inferiority.

Therefore, I would request that this reservation should go

Sir, I now come to the next point. I read about a Vice-Chancellor protesting, during the Tamil Conference, that if he were the Chief Minister, he would abolish all kindergarten schools with English medium. I am glad that he is nowhere near the Chief Minister's gadi. I think that he should be prohibited from standing for elections hereafter because, as my hon. Friend Thiru Damodaran said, he seems to be a chauvinist, a person who looks around the four corners of his room and who does not want to look outside the windows to get knowledge from outside. I cannot understand people having a hatred against a language. I can understand people wanting to elevate a language, improve a language and build a language. But, I cannot understand people trying to decany another language. Every language is meant to give expression to thoughts. How well you express yourself depends on your scholastic ability in the language. In this connection, I would like to make a suggestion. Even the Government should, as part of their programme for student discipline, ask every school, right from primary school up to the plus 2 stage to make compulsory the study of Kural, Kamba Ramayanam and Silappathikaram. The study of these three must be made compulsory.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூன்றாவதாக என்ன சொன்னீர்கள்?

திரு. ஜீ. வசந்த பை : சிலப்பதிகாரம். சிரிப்பிலும் பண்ணுவதைப் பார்த்தால் சரியாக இருக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. 'சிலப்பதிகாரம்' என்று சொன்ன வார்த்தை சரியா இல்லை தவறா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சரிதான். ஆகவே, இவ்வளவு சரியாகச் சொன்ன உறுப்பினர் அவர்கள், தமிழை ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. ஜீ. வசந்த பை : திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் இந்த மூன்று நூல்களையும் கம்பல்சரியாகச் சொல்லிக்கொடுக்க வேண்டும். மாணவர்களுக்கு 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரையில் கம்பல்சரி ஸ்டடியாக இவைகள் இருக்க வேண்டும்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒன்றாம் வகுப்பிலிருந்தே வைத்து விட்டால், மாணவர்கள் 'பாஸ்' செய்ய மாட்டார்கள்.

திரு. ஜீ. வசந்த பை : அதை அவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். Let me proceed. . . . . . . :

They must be asked to learn them by heart and if they do not have the capacity they must be asked to learn them by rote so that when they later on become legislators like us, they will not prove themselves to be mere "devils quoting scripture" but will be in a position to practice what they speak. What they learn in their early life would become ingrained in their minds and they will become true and righteous citizens in the country, with regard for morality and righteous rult.

On this occasion, I want to mention that in South America, there is a Republic called Republic De La Nin where children are taught all the basic things in citizenship and civic life. By symbols and by miniature models, they are shown how a democratic form Government functions, how the police, fire service station, church, temple, mosque and such other institutions function. Children of the age of 10 to 20 are given training in such institutions and they become well trained in all aspects of civic life. Just like that, we

must have a Republic containing all such institutions in mainiature so that our children may be able to participate in them and get good education and training in civic life, and become acquainted with the various facts of life like administration, judiciary and the legislature, etc.

Now I come to the next matter Prohibition. I agree with the hon. Member Mr. Manickam when he said that Prohibition must go. I am of the opinion that when we have adopted trial and error method, if Prohibition is to stay, it would mean only loss of revenue to the Government and increase in corruption, as my hon. Friend Thiru Damodaran himself rightly put it. I would like to say that with increased corruption and with loss of revenue, no Government can function well. I do not see any reason why drinking should be prohibited, while drunkenness can be prohibited. The Government can say no person should be permitted to consume more than two glasses of arrack or two pegs of whisky. People can be allowed to drink but should not be allowed to be drunk.

THIRU A. R. DAMODARAN: May I know whether the hon. Member is suggesting rationing in liquor shops?

THIRU G. VASANTHA PAI: Sir, I am not suggesting any kind of rationing in liquor shops. Any perosn who has consumed more than two or three pegs should be deemed to be a drunkard. It can be easily found whether he has taken anything in excess of the allowed quantity and whether he has taken it in any club or any shop.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒவ்வொருவருக்கும் அந்த அளவுக்கு கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறாரா அல்லது கொடுக்கலாம் என்று சொல்லுகிறாரா ?

திரு. ஜி. வசந்த பை : ஒவ்வொருவருக்கும் அந்த அளவுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லுகிறேன். அதாவது ஒவ்வொருவருக்கும் 3 பெக் கொடுக்கலாம் அல்லது 2 பெக் கொடுக்கலாம். அதற்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : I would like to remind him.

THIRU G. VASANTHA PAI: Sir, I also want to speak on Building Advances for Government servants. I am told that the amount of Building Advances to Government servants has reached



the limit of Rs. 5 crores. Many Government servants in the Secretariat have built their houses to the level of 10 feet or 15 feet and to stop the Building advances for them on the ground that the amount has exceeded Rs. 5 crores or Rs. 5-1|2 crores is neither proper nor just. Those people have built the houses on the faith that they would get the advances in full. The Government is estopped on any ground from denying them the advances sanctioned as full by virtue of promissory estopped. The Government servant will be entitled to enforce the payment of the balance amount of loan for the construction of the unfinished house. I am, therefore, requesting the Government to see, in the Budget session, that if any Government servant has started construction and if there are amounts due to him, such amount should be disbursed to him. This is the minimum that they can do for a Government servant, instead of leaving him in an endless gaze at his unfinished house.

Sir, I am trying to finish. The last point which I would like to submit is this. Paragraph 13 of the Governor's Address speaks of drought conditions in Pudukottai and North Arcot.

The hon. Member for South Arcot, Thiru A. R. Damodaran did not say anything about his district. I am telling you that barring. . .

THIRU A. R. DAMODARAN: Let me remind the hon. Member that.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஜி. வசந்த பை அவர்கள் உட்கார வேண்டும்.

THIRU G. VASANTHA PAI: I am not yielding.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்து பேசக்கூடாது. அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை உட்கார வேண்டும்.

THIRU G. VASANTHA PAI: I am not yielding.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் திரு. வசந்த பை உட்கார்ந்தால் உறுப்பினர் திரு. தாமோதரன் சொல்ல விரும்புவதைச் சொல்வார்.

THIRU A. R. DAMODARAN: I am not going to interrupt. I only wanted to remind Thiru Vasantha Pai that I am not only a representative of South Arcot but that I am also a representative of North Arcot and Chengalpattu districts.

THIRU G. VASANTHA PAI: I am glad to hear that. But what I am saying is that he forgot that he was a representative of South Arcot. In South Arcot, barring the Veeranam ayacut, there is drought in almost every place. The Governor's Address speaks only of Pudukottai and North Arcot. It should have mentioned about South Arcot also and drought relief must be given to the South Arcot ryots.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் 5 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு 25 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருப்பது சரியல்ல.

திரு. ஜி. வசந்த பை : ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்வேன் என்று நேற்று சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று காலையில் உறுப்பினர் என்னுடைய அறையில் வந்து ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

திரு. ஜி. வசந்த பை : தலைவர் அவர்களே, விரைவில் முடித்துக் கொள்கிறேன்.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Does it mean that yesterday's five minutes are equal to today's 25 minutes?

THIRU G. VASANTHA PAI: It is not 25 minutes. You have not calculated it. I have taken only about 10 minutes. I stood on my feet at 11-10.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் விரைவில் முடிக்கவேண்டும்.

THIRU G. VASANTHA PAI: I want to bring to your notice that many areas in South Arcot district are drought-stricken. Therefore Government must extend to that district also relief measures similar to the ones which they are giving for North Arcot and Pudukottai. There must be a remission of land revenue also for these districts.

I thank you very much for the opportunity given to me and I resume my seat.





திரு. என். முத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நானும் இங்கே பேச இருக்கிறேன். முதலில் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று நானும் சில வார்த்தைகளைக் கூறலாம் என்று கருதுகிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையின் துவக்கத்திலேயே, வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மாநகரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டை வரவேற்றும் பாராட்டித் துவங்கியிருப்பதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரிவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள். ஆசிரியர்கள், பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களெல்லாம் ஆசிரியர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் இருக்கிற குறைகளைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். அதைப்போலவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒரு சிலர் மக்களுடைய குறைகளை எடுத்துக் கூறினாலும், ஒரு சிலர் அதற்கு மாறாக வேறு ஏதோ ஒரு எண்ணத்தில் இருந்துகொண்டு இங்கே உரையாற்றினார்கள் என்பதைப் பார்த்தோம்.

எடுத்த எடுப்பிலேயே உலகத் தமிழ் மாநாட்டைக் குறை கூறிப் பேசுவதற்காக என்றே சிலர் தங்களின் பேச்சைத் துவக்கினார்கள். உலகத் தமிழ் மாநாடு ஆரம்பமாவதற்கான தேதியைக் குறிப்பிட்ட உடனேயே இந்த மாநாடு தமிழர்களால் நடத்தப்படுகிற மாநாடு அல்ல என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புகிறேன். இந்த அவையை நடத்துகிற மாண்புமிகு தலைவர் அவர்கள் அந்த மாநாட்டின் முக்கிய குழு ஒன்றில் இடம் பெற்றிருந்தார். நாமெல்லாம் அவரைத் தமிழர் என்றுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 11-30)

“தலையைக் கொடுத்தாவது தலைநகரைக் காப்பேன்”, “என் தாய்மொழிக்கு ஆபத்து வந்தால் என் உயிரைக் கொடுப்பேன்” என்று சொன்ன ஒரு தமிழன் இடம் பெற்றிருந்தார் என்பதை நாம் அறிவோம். பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் ஆற்றிய வீர உரையை இங்கே பேசியவர்கள்

கேட்டிருக்க முடியாது. எப்படி தமிழ் நாட்டுக்கு, தமிழர்களுக்குச் சொந்தமானவர்கள், தமிழர்களாக இருப்பவர்கள் ஆகியவர்களால் இந்த மாநாடு நடத்தப்பட்டது என்பதை இந்த நாடு மட்டுமல்ல, உலகமே அறியும். உலகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்த மக்கள் தமிழின் சிறப்பை அங்கே எடுத்துக் காட்டினார்கள் என்றாலும், ஒரு சில பொறாமைக்காரர்கள், எந்தக் காரியம் செய்தாலும் தாங்கள்தான் செய்ய வேண்டும், மற்றவர்கள் செய்யக் கூடாது என்ற எண்ணம் கொண்டிருக்கிற ஒரு சிலர் இது தமிழர்களால் நடத்தப்படுகிற மாநாடு அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனதிலே வைத்துக்கொண்டு தமிழர்களால் நடத்தப்படுகிற மாநாடு அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். நாலரைக் கோடி மக்களும் அவரைத் தமிழன் என்று ஒத்துக்கொண்டு தமிழ் நாட்டை ஆளுகின்ற பொறுப்பை அவரிடம் தந்திருக்கிறார்கள். அவர் தமிழரா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் அதே நேரத்தில் குற்றம் சொல்லுகிறவர்கள் தமிழர்களா இல்லையா என்ற கேள்வியை எழுப்பி ஆராய்ச்சிக்குரிய பிரச்சினையாக அதே முதலமைச்சர் ஆக்கி வைத்திருக்கிறார். அதற்கு இன்னும் திர்வு காணப்படவில்லை. அது வேறு விஷயம். நடந்து முடிந்த மாநாடு தமிழர் மாநாடு, தமிழ் மொழி வளர்ச்சிக்காக நடைபெற்ற மாநாடு, தமிழ் நாட்டு மக்கள் மேம்பாட்டிற்காக நடந்த மாநாடு என்பதை உலகம் அறிந்திருக்கிறது. அதை உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நமது இந்தியப் பிரதமரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்தியப் பிரதமர் அவர்கள் பேசுகிறபோது, "அறிஞர் அண்ணா அவர்கள் மூலமாகத் தமிழ் மொழியின் சிறப்பை நான் அறிந்தேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கேட்டு நாங்கள் பெருமைப்படுகிறோம். அறிஞர் அண்ணா அவர்களால்தான் தமிழினுடைய சிறப்பை அறிந்தேன் என்று சொல்லுவதில் பெருமைப்பட மற்றவர்களை விட எங்களுக்குத்தான் அதிகமாக உரிமையுண்டு. இல்லையென்று யாராலும் சொல்லமுடியாது. நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். அதைச் சுய விளம்பரம் என்று சொன்னாலும் எனக்குக் கவலையில்லை. தமிழ், தமிழ் என்று பேசுகிறவர்கள் என்ன செய்தார்கள் என்பது எனக்குத் தெரியும். தமிழைக் காப்பதற்காக நாங்கள் போராட்டம் நடத்தியபோது, அனைவரையும் கைது செய்தார்கள். அப்போது அவர்கள் ஜாமீனில் வந்தார்கள். ஆனால் ஜாமீனில் என்னை விட மறுத்த அதே ஜஸ்டிஸ் மகாராஜன் அவர்களும் உலகத் தமிழ் மாநாட்டிலே பங்குகொண்டார். அதே நேரத்தில் தமிழுக்காக, தமிழைக் காப்பதற்காக அரசியல் சட்டத்தை எரித்துவிட்டு ஒன்றரை ஆண்டுக் காலம் சிறை சென்ற என்போன்ற தொண்டர்களும் மாநாட்டுக் குழுவிலே பங்கு கொண்டிருக்கிறோம். நாங்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா?





முத்தமிழ்க் காவலர் வந்திருந்தார். திரு ம. பொ. சி. வந்திருந்தார், புலவர்கள் வந்திருந்தனர். அதற்குப் பிறகும் அது தமிழர்களால் நடத்தப்படுகிற மாநாடு இல்லையென்று சொன்னால், அதன் அர்த்தம் என்ன? அதற்குப் பிறகு அது எடுபடாமல் போகவே, மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே, மாநாட்டினுடைய வரவு-செலவுக் கணக்குகளைக் கொடுப்பதற்கு முன்னதாகவே "ஊழல், ஊழல்" என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அப்படிச் சொன்னவர்கள் யார்? ஒரு திருடன் திருடிவிட்டு தன்னுடைய திருட்டை மறைப்பதற்காக "அதோ ஓடுகிறான் திருடன்" என்று சொல்லி எப்படித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைப்பானோ அதே போல ஊழலுக்குச் சொந்தக்காரர்கள்தான் இதைச் சொல்லுகிறார்கள்.

1937 ஆம் ஆண்டிலிருந்து இருந்த மந்திரி சபையை எனக்குத் தெரியும். ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபை இருந்தது. அப்போது பொப்பிலி அரசர் ஓபுல் ரெட்டி முதலமைச்சராக இருந்தார். அவர் காலத்தில் ஓபுல் ரெட்டி மந்திரி சபை ஊழல் மந்திரி சபை என்று யாரும் சொல்லவில்லை. அதற்குப் பிறகு இராஜாஜி முதலமைச்சராக இருந்தார். அவர் இந்தியைக் கொண்டு வந்தார் என்பதற்காக எதிர்க்கப்பட்டது, 'ராஜாஜி மந்திரி சபை ஊழல் மந்திரி சபை' என்று இந்த நாட்டில் யாரும் சொல்லவில்லை. அதற்குப் பிறகு திரு. பிரகாசம் வந்தார். அவருடைய மந்திரி சபையையும் 'ஊழல் மந்திரி சபை' என்று யாரும் சொல்லவில்லை. அதற்குப் பிறகு திரு. ராமசாமி ரெட்டியார் வந்தார். அவருடைய மந்திரிசபையை 'ஊழல் மந்திரி சபை' என்று யாரும் இந்த நாட்டிலே சொல்லவில்லை. அதற்குப் பிறகு திரு. குமாரசாமி ராஜா வந்தபோதும், அவருடைய மந்திரி சபை ஊழல் மந்திரி சபை என்று யாரும் சொல்லவில்லை. அதற்குப் பிறகு காமராஜர் வந்தார். அவருடைய மந்திரி சபையையும் ஊழல் மந்திரி சபை என்று யாரும் இந்த நாட்டிலே சொல்லவில்லை. அதற்குப் பிறகு திரு. பக்தவத்சலம் வந்தார். அவருடைய மந்திரி சபையை 'ஊழல் மந்திரி சபை' என்று யாரும் சொல்லவில்லை. அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்தார்கள். அவருடைய மந்திரி சபையையும் 'ஊழல் மந்திரி சபை' என்று யாரும் இந்த நாட்டிலே சொல்லவில்லை. ஆனால் 1969 முதல் 1975 வரை இருந்த மந்திரி சபைக்குத்தான் 'ஊழல் மந்திரி சபை' என்று பெயர் வந்து தமிழர்களுக்கு இருந்த சிறப்பும் கெட்டு, தமிழர்களுடைய மானம் பறிபோயிருக்கிறது. அப்போது இருந்த மந்திரி சபை ஊழலைச் செய்தது, மந்திரிகள் ஊழலைச் செய்தார்கள், அந்த மந்திரிசபைக்குத் தலைமை வகித்தவர் ஊழலைச்

செய்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் இன்னும் நீதிமன்றங்களில் இருந்து நீங்காது இருக்கும் நேரத்தில், ஊழல், ஊழல் என்று பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே இருக்கிறார். அவரும் பொதுக் கணக்குக் குழுவிலே இருக்கிறார். அதைப்பற்றி இங்கே சொல்லலாமா, சொல்லக்கூடாதா என்பது வேறு.

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் முத்து அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் ஊழல் மந்திரிசபை என்று பெயர் எடுத்தது என்று குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும். இப்போது பேசிக்கொண்டிருக்கக் கூடிய உறுப்பினர் சொல்லக் கூடிய பிரச்சினைகளுக்குரிய பதிலை, உறுப்பினர் அவர்களுடைய கட்சித் தலைவர் பேசும்போது கொடுக்கலாம் அதற்குரிய சந்தர்ப்பம் இருக்கும் போது. இப்பொழுது குறுக்கிடுவது சரியல்ல.

**திரு. சோ. ஆறுமுகம் :** எங்களுடைய கட்சித் தலைவர் மீது அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்லுகிறபோது, பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி நாங்கள் மறுப்புச் சொல்லாவிட்டால், அதை நாங்கள் ஒத்துக்கொண்டதைப் போல ஆகும். பிறகு அது தவறாகிவிடும். ஆகவே இதை மறுத்துச் சொல்லுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஒருவருடைய பேச்சை நீண்ட சொற்பொழிவாக ஆக்கக் கூடாது. உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைக் கண்டிப்பாகச் சொல்லுகிறேன். ஒவ்வொரு உறுப்பினரும் பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொல்லும்போது, மற்றொரு உறுப்பினரைக் குறிப்பிட்டு ஏதேனும் சொன்னால்தான். அதற்குத் தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டி வருகிறது. இப்போது அப்படிப்பட்ட தன்னிலை விளக்கம் அளிக்கும் பிரச்சினை வரவில்லை. இந்த மாதிரி குறுக்கிடுவதற்கு நான் யாரையும் அனுமதிக்க முடியாது. கட்சித் தலைவர் பேசுகிறபோது, தெளிவாகப் பதில் சொல்லலாம். இப்படி உறுப்பினர் ஒவ்வொருவரும் பேச ஆரம்பித்தால், அனுமதிக்க முடியாது.





**திரு. சோ. ஆறுமுகம் :** எங்களுடைய கட்சித் தலைவரைப் பற்றித் தவறாகச் சொல்லுகிறார். அதற்குரிய பதிலை எங்களுடைய கட்சித் தலைவர் தான் பதில் அளிக்க வேண்டுமென்றால், நாங்கள் இங்கிருந்து பணியாற்ற வேண்டிய அவசியமே இல்லையே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது உறுப்பினர் அவர்கள் விருப்பம். கட்சித் தலைவர் பேசும்போது பதில் சொல்லலாம்.

**திரு. எஸ். முத்து :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினரைப் பேசுங்கள் என்று சொல்லுவதற்கும், பேசக்கூடாது என்று சொல்லுவதற்கும் உரிய உரிமை தலைவர் அவர்களுக்குத்தான் இருக்கிறது, மற்றவர்களுக்கல்ல. நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, நாங்கள் எல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். அதற்குக் காரணம் பேசத் தெரியாதவர்கள் என்பதல்ல. நாகரீகத்தோடு அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தோமே தவிர நாங்கள் குறுக்கிடவில்லை. நாங்கள் பேசுவதிலே தவறு இருந்தால், அதை மறுத்துப் பேசுவதற்கு அவருக்கு நிச்சயமாக உரிமை இருக்கிறது. ஆனால் ஓர் உறுப்பினர் பேசுவதைத் தடுக்கும் உரிமை தலைவர் ஒருவருக்குத்தான் இருக்கிறது. தவிர மற்றவர்கள் குறுக்கிட உரிமையில்லை என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆகவேதான் நேற்றைய தினம் அவர் பேசுகிறபோது, நாங்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். குறுக்கிட எங்களுக்குத் தெரியாதது என்பதல்ல. குறுக்கிட்டுப் பேசும் அனுபவம் எங்களுக்கு இல்லையா என்ன? குறுக்கிடத்தான் தகுதியில்லையா? இருந்தாலும் கூட நாங்கள் அமைதியாகக் கேட்டோம். ஊழலைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். ஊழலைப்பற்றி நாளைக்கு கூடத்தான் போகிறது. அதே உறுப்பினர் பொதுக் கணக்குக் குழுவில் இருக்கிறார். பூம்புகார், வள்ளுவர் கோட்டம் ஆகியவற்றைக் கட்டியிருக்கிறார்கள். அரசின் அமைச்சரவை வாங்காமல் செலவு அதிகாரிகளின் ஒப்புதலும் இல்லாமல், அரசாங்கத் துறையின் ஒப்புதலும் இல்லாமல் ஆயிரக்கணக்கான ரூபாயை எடுத்துச் செலவு செய்து ஊழல் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வரத்தான் போகிறது. அதை நாம் பார்க்கத்தான் போகிறோம். என்ன பூம்புகார்? சிலப்பதிகாரத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகிற பூம்புகாரா அல்லது சிலப்பதிகாரத்தை அரங்கேற்றிய இளங்கோவடிகளுக்கு விழாவா? இந்திர விழா என்று சொல்லி யானையின் மீது பவனி. பல இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவு செய்திருக்கிறார்கள். அந்தச் செலவுக்கான கணக்கு இல்லை. தஞ்சாவூரைக் காட்டி, கும்பகோணத்தைக் காட்டி, மாயவரத்தைக் காட்டி, அங்குள்ள

அரசாங்க விடுதிகளுக்குப் பொருள்களை வாங்க வேண்டுமென்று சொல்லி பூம்புகாரில் போட்டோம் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான ரூபாய் செலவுக்குக் கணக்குகள் காணோம். இது யார் அப்பன் வீட்டுப் பணம்? மேலதிகாரிகளின் உத்தரவு இல்லாமல், அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமல், ஒரு தனி மனிதனின் பெருமைக்காக வேண்டி பல

(முற்பகல் 11-40)

ஆயிரக்கணக்கான ரூபாய் வீணடிக்கப்பட்டிருக்கிறது. நான் பொது மக்களுடைய பிரதிநிதி என்ற அளவில் சொல்கிறேன். நானும் வரி கொடுப்பவன் என்ற முறையில் சொல்கிறேன். கணக்காய்வுக் குழுவிலே அங்கத்தினர் அவர்களும் இருக்கிறார்கள். வாய் மூடி மௌனியாக இருந்தார்கள். உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வரவு செலவுக் கணக்காய்வுக் குழுவில் உள்ள பிரச்சினையைப்பற்றி நாம் இங்கே விவாதிக்க முடியாது. அந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கே விவாதிப்பது முறையானதும் அல்ல. அப்படியிருந்தும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஏதாவது சொன்னால், அதைப்பற்றி விளக்கிச் சொல்லும்படியான சூழ்நிலைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்து அவர்கள் கணக்காய்வுக் குழுவில் உள்ள பிரச்சினைபற்றிக் குறிப்பிடாமல் பேசுவது நல்லது.

**திரு. எஸ். முத்து:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊழல்களுக்குச் சொந்தக்காரர்கள் யார்? பொது மக்கள் கொடுத்த வரிப் பணம். கிட்டத்தட்ட 22 கோடி ரூபாய். மக்கள் நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தி, பாடுபட்டுக் கொடுத்தது. இந்தச் சமுதாயத்திலே, அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள் கேட்கிறார்களே. வாங்குகின்ற பொருள்கள் மீது விதிக்கப்பட்ட மக்கள் செலுத்திய வரிப்பணம் ரூ. 22 கோடி தெருவிலே கிடக்கிறதே வீராணம் என்ற பெயரால். பல கோடிக்கணக்கான ரூபாய் பூச்சி மருந்து என்ற பெயரால் இருக்கிறது. பல கோடிக்கணக்கான ரூபாய் சர்க்கரை என்ற பெயரால் இருக்கிறது. அதைத் நான் நான் இங்கே சொல்கிறேன் நீதிமன்றத்திலே சொல்கிறான். பைபிளை வைத்துக்கொண்டு சொல்கிறான் "இந்த பைபிளை சாட்சியாக வைத்துக்கொண்டு சொல்கிறேன். நான்



இத்தனை ரூபாய் லஞ்சம் கொடுத்தேன். என்னுடைய மருந்தை விற்பதற்காக இன்னாருக்குக் கொடுத்தேன்" என்று சாட்சி சொல்கிறான். அந்த சாட்சி சொன்னதை நாம் படித்திருக்கிறோம். உலகத் தமிழ் மகாநாட்டுக் கணக்கில் குறையிருந்தால், எடுத்துச் சொல்லட்டும். குறைகளை எடுத்துச் சொல்லுவதற்கு உரிமை உண்டு. ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்த உரிமை உண்டு. 15 கோடி ரூபாய்க்கு மதுரையிலே செலவாயிற்று என்றால், அதனாலே மதுரை மாநகரம் எவ்வளவோ பயனடைந்திருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஒரு விளக்கம். நான் குறுக்கிடுவதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். ஒரு வழக்கிலே சாட்சி ஒருவன் சொல்கிறான். வழக்கிலே தீர்ப்பு என்று வந்தால், அந்தத் தீர்ப்பை எடுத்துச் சொல்லிக் கேட்கலாம். வழக்கிலே ஏதோ ஒரு ஆள் சாட்சி சொல்வதைப் பற்றி, அவன் சொல்வதைப் பற்றிச் சொல்லிக் கேட்கலாமா?

**திரு. எஸ். முத்து:** வழக்கு மன்றத்திலே தான் இருக்கிறது என்று சொல்கிறேன். அந்த வழக்கினுடைய தீர்ப்புபற்றி நான் சொல்லவில்லை. அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. குற்றவாளி அல்ல என்பதை நிரூபிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு. இன்றைக்கு மதுரை மாநகர மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, வழக்கிலே தீர்ப்பு வந்தால் அதைப்பற்றிச் சொல்லலாம். அந்தத் தீர்ப்பை எடுத்துச் சொல்லட்டும். ஆனால் அப்படிச் சொன்னால் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. அந்தச் சாட்சி பணம் கொடுத்ததாகச் சொல்கிறான் என்று சொல்கின்ற ஒரு செய்தி குறிப்பேட்டிலே இருக்கிறபோது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது ஒரு செய்தி தானே. அது பற்றி அவர் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லையே.

**திரு. ம. சங்கரலிங்கம்:** செய்தி என்று சொல்வதும் இந்தக் குறிப்பேட்டிலே வரவேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதிலே ஒன்றுமில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். தவறாக இருந்தால் தவறு என்று தடுக்கத் தயாராக இருக்கிறேன். அவர் செய்தி யாகத் தான் சொன்னார். அதைப்பற்றி மேலும் ஒன்றும் சொல்லவில்லை. மேலே நானும் 'வாட்ச்' பண்ணிக்கொண்டுதான் இருந்தேன். அதற்கு அவர் என்ன சொல்கிறார் என்று பார்த்தேன்.

திரு. சோ. ஆறுமுகம் : சாட்சி அப்படிச் சொன்னார் என்று சொல்வதும், அவ்வளவோடு நிறுத்திக்கொள்வதும் கூட, நாங்கள் குற்றம் செய்தவர்களாகத் தான் காட்டும். எங்கள் தரப்பிலே அதற்கு என்ன பதில் சொன்னோம் என்பதை நாங்கள் இங்கே குறிப்பிடவேண்டும் அல்லவா ? அப்படி, நான் எதுவும் சொல்லாமல் விடுவது எப்படி முறையாகும் ?

திரு. எஸ். முத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் உரிமை பெற்ற தங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். எந்த உறுப்பினராக இருந்தாலும் அவர்களை அனுமதிக்கின்ற அதிகாரம் தங்களுக்கே உண்டு. குறுக்கிட்டு நிறுத்துகின்ற உரிமை எந்த உறுப்பினர்களுக்காவது இருக்கிறதா என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். எனவே நான் பேசும்போது குறுக்கிடுவது சரியல்ல. பேசுங்கள். நான் பேசுவதிலே தவறு இருந்தால், எடுத்துக் காட்டுங்கள். இன்றைக்கு மதுரை மாநகர மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : எங்களுக்கும் எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. (Rights) உரிமை இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தயவுசெய்து உட்கார வேண்டும். எல்லோருக்கும் தெரிந்த 'ரைட்ஸ்'தான். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் ஒருவர் பேசுகின்றபோது இன்னொரு உறுப்பினர் எழுந்துகொள்வது என்றால், ஒன்று, பேசுகின்றவர் 'அன்பார்லிமெண்டரி வேர்ட்' ஏதாவது சொன்னால், பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். இரண்டாவது குறிப்பிட்ட ஒரு உறுப்பினரைப் பற்றி ஏதாவது சொன்னால், தன்னிலை விளக்கமாக எடுத்துச் சொல்லலாம். மூன்றாவதாக, ஒரு தவறான தகவல் கொடுத்தால், அதை திருபிக்கும்படியாகக் கேட்கலாம். இதைத் தவிர, உறுப்பினர்களுடைய பேச்சில் எதிர்கின்ற கருத்து வேற்றுமைகள் காரணமாகக் குறுக்கிட எழுந்துகொள்வது என்றால், அதற்கு ஒரு முடிவே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : பார்லிமெண்டரி புரோசிஜரைப்பற்றி ஒன்றும் நான் சொல்லவில்லை. இங்கே சொல்கின்ற முறை சரியில்லை என்று அங்கத்தினர்கள் கருதினால், அதைத் தலைவர் அவர்கள் கவனத்திற்குக்





கொண்டு வர யாருக்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமை உறுப்பினர்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நானும் அதைத்தான் சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்கிறேன். அங்கத்தினர்கள் தலைவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய விஷயம் என்னென்ன என்று விளக்கிச் சொன்னேன். கருத்து வேற்றுமைகள் பேச்சிலே எழுந்தால், என்ன பண்ண முடியும் ? அவைக்கு நாம் வாதம் பண்ணத்தானே வந்திருக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இதிலே ஒரு தெளிவான ரூலிங் கொடுத்தால் நல்லது. உறுப்பினர் அவர்கள் பேசுவதற்கு உரிமையுண்டு. அதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் அங்கத்தினர் தவறான ஒரு செய்தியைச் சொல்லும்போது, தவறு என்று எங்கள் மனதில் பட்டால், அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். நாங்கள் சொல்வது சரியல்ல என்று தலைவர் அவர்கள் தீர்ப்பு சொன்னால், ஏற்றுக்கொள்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலையிடக்கூடாது என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. தலையிடவேண்டியதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த முறை எது, இடம் எது என்பதுதான் பிரச்சினை.

திரு. சோ. ஆறுமுகம் : உண்மைக்கு மாறான தகவல்களை வேண்டுமென்றே அபாண்டமாகச் சொல்லும்போது, அந்தக் கட்சி சம்பந்தப்பட்டவர்கள் அவற்றை மறுப்பதற்கு உரிமை இருக்கிறது. அதை அப்படியே ஏற்றுக்கொண்டு பேசாமல் இருக்க முடியாது.

திரு. எஸ். முத்து : நேற்றைய தினம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகிறபோது, எங்களுடைய தலைவர் அவர்களைப்பற்றி மறைமுகமாகப் பேசினார்கள். அவர் தமிழன் இல்லை என்று சொல்வதற்கு அவர் முயற்சித்ததை நாங்கள் கேட்டுக்கொண்டுதான் இருந்தோமே தவிர, மறுக்கவில்லை. உறுப்பினர் அவர்கள் அப்படிப் பேசும்போது, நாங்கள் மறுக்கவில்லை. அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. மக்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு மதுரையிலே மிகச் சிறப்பான முறையிலே உலகத் தமிழ் மகாநாடு நடந்தது. மக்கள் அதைப் பாராட்டுகிறார்கள். மதுரை மாநகர மக்கள் என்றென்றும் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். இந்த அரசைத் தலைமையேற்று நடத்துகின்ற புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறார்கள்.

இன்னும் 10 ஆண்டுகளுக்கு அங்கே சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை. அந்த அளவுக்கு மதுரை மாநகரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. பல்வேறு துறைகளிலேயும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. அந்த அளவுக்கு வேலைகள் அங்கே செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு செய்த செலவுகளைப்பற்றி இன்னும் கணக்குப் பார்க்கவில்லை. கணக்குகள் முடிக்கப்பெறவில்லை. எங்களுடைய தலைவர் அவர்கள் கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார்கள். 'எந்தக் காரணத்தைக் கொண்டும் கட்சிக் கண்ணோட்டம் இருக்கக் கூடாது. கட்சியினுடைய எண்ணங்களே இருக்கக் கூடாது. என்னுடைய படம் எந்த இடத்திலும் இருக்கக் கூடாது. கட்சிக் கொடியை எந்த இடத்திலும் காட்டக் கூடாது' என்றெல்லாம் கடுமையான உத்தரவுகளை எங்கள் கட்சித் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் போட்டிருக்கிறார்கள். தலைவர் அவர்களும் அதைப் பார்த்திருப்பார்கள். கட்சியினுடைய அறிகுறியே அங்கே இல்லை. தமிழர்கள் மகாநாடு நடத்தினார்கள். தமிழ் மக்கள் கலந்துகொண்டார்கள். அந்த மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. அதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அந்தக் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு வருவதற்குள்ளேயே 'ஊழல்கள், ஊழல்கள்' என்று சொல்கின்றார்கள். ஊழல்களுக்குச் சொந்தக்காரர்கள்தான் இப்போது அப்படிச் சொல்கிறார்கள். நான் சொல்லக் கூடாதா? அடுத்து, நான் சொல்கிறேன். தவறு இருந்தால் எடுத்துச் சொல்லட்டும். தவறுகளை நாங்கள் திருத்திக் கொள்கிறோம். தவறாக இருந்தால், மன்னிப்பு வாங்கிக்கொள்கிறோம். ஆனால் கணக்குகளைப் பார்த்து முடிப்பதற்கு முன்னாலேயே இப்படிச் சொல்கிறார்களே என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். நாம் ஏற்கெனவே பூம்புகார் கணக்கு எப்படி இருந்தது என்று பார்த்தோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு உடல்நலம் சரியில்லை. ஆகவே கொஞ்சம் உணர்ச்சி வசப்படாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். முத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகள் போராட்டம் பற்றிச் சொல்கிறார்கள். இன்றைக்கு விவசாயிகள் போராட்டத்தைப்பற்றி நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். யார் அவர்கள்? விவசாயிகள் போராட்டத்தைக் காட்டி நீலிக் கண்ணீர் வடிப்பவர்கள் யார்? யார் அவர்கள்! அவர்கள் அந்த விவசாயிகளை ஒடுக்கியவர்கள், மின் கட்டணத்தை உயர்த்தியவர்கள். போராட்டத்தில் ஈடுபட்ட 22 பேர்களைச் சுட்டுப் பிணமாக்கியவர்கள். போராட்டம் நடத்திய கம்யூனிஸ்ட்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் ஊழியர்கள் 30 ஆயிரம் பேர்களைக் கைது செய்தவர்கள். 30 ஆயிரம் பேர்களைக் கைது செய்





விட்டு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று சொன்னவர்கள். 22
பேர்களைச் சுட்டுப் பிணமாக்கியவர்கள் இப்போது விவசாயிகளுக்காக நீலிக்
கண்ணீர் வடிக்கிறார்கள். நான் கேட்கிறேன். அன்று விவசாயிகளைப்
பாதிக்கின்ற அளவுக்கு உரத்தின் விலையை உயர்த்தினார்களே, அப்போது
பேசினார்களா; விவசாயிகளைப் பாதிக்கின்ற டீசல் ஆயில் விலையை உயர்த்
தினார்களே, அப்போது பேசினார்களா; அந்த விவசாயிகள் பிரயாணம் செய்
கின்ற ரெயில் கட்டணத்தை உயர்த்தினார்களே, அப்போது பேசினார்களா?
அந்த விவசாயிகளுக்காக வக்காலத்து வாங்குகின்றவர்கள் யார்? அவர்களைப்
பற்றிப் பேசுகின்றவர்கள் யார்? 22 பேர்களைச் சுட்டுப் பிணமாக்கியவர்கள்
அப்படிப் பேசுகின்றார்கள். 30 ஆயிரம் பேர்களைக் கைது செய்து சிறை
யிலே அடைத்தவர்கள் இப்போது சொல்கிறார்கள். விவசாயிகளைக்
கொடுமைப்படுத்துகிறார்கள், விவசாயிகளைக் கொடுமைப் படுத்துகிறார்கள்
என்று இப்போது சொல்கிறார்கள். யார் அப்படிச் சொல்கிறார்கள்? விவசா
யிகளா அப்படிச் சொல்கிறார்கள்? விவசாயிகள் சொல்லவில்லை. யார்
யாரோ பேசுகிறார்கள். ஆக அவர்கள் விவசாயிகள் போராட்டம் என்று
பேசுவது விவசாயிகளுக்காக அல்ல. இந்த அரசின்மீது இருக்கின்ற பொறா
மையால் அப்படிப் பேசுகிறார்கள். நாம் ஏதேதோ செய்து பார்த்தோம்,
யார் யாரையோ சேர்த்துப் பார்த்தோம், என்ன என்னவோ செய்தோம், இருந்
தாலும் நம்மை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற எரிச்சலிலேதான்
அப்படி ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். அவர்கள் விவசாயிகளைத் தூண்டிவிடுகிறார்கள். இது தெரியாதா
மக்களுக்கு? மின் கட்டணம் செலுத்தாதே, வரி செலுத்தாதே என்றார்கள்.
மக்கள் வரி கட்டாமல் எந்த சர்க்கார் நடக்கும்? இவர்களுடைய சர்க்கார்
மின் கட்டணக் குறைப்புச் செய்யவில்லையா? இந்தச் சர்க்கார் 16 பைசாவாக
இருந்த மின் கட்டணத்தை 14 பைசாவாக ஆக்கியது. 14 பைசாவாக இருந்
ததை 12 பைசாவாக ஆக்கியது. உயர்த்தியதா? மின் கட்டணத்தை உயர்த்
தியவர்கள், இன்றைக்கு மின் கட்டணத்தைக் கட்டாதே என்று சொல்

(முற்பகல் 11-50)

கிறார்கள். நான் தலைமை தாங்குவேன் என்று பேசுகிறார்கள். நாம்
ஆட்சிக்கு வர முடியவில்லை, ஆகவே இன்னொருவர் ஆளக்கூடாதென்பதற்
காகத்தான் இப்படியெல்லாம் செய்கிறார்கள்.

அடுத்து, விலைவாசியைப்பற்றிப் பேசுகிறார்கள். விலைவாசி உயர்ந்து
விட்டது, நாங்கள் வந்தால் தாலிக்குத் தங்கம் தருவோம், ஆயிரம் ரூபாய்
விற்கும் தங்கத்தை 200 ரூபாய்க்குக் கொடுப்போம் என்று சொன்னார்கள்.
இப்போது தங்கம் 1,300 ரூபாய் விற்கிறது. ஆனால் வாய் திறக்கவில்லையே!

அதைப்பற்றி எழுதவில்லையே! பேசவில்லையே! ஆர்ப்பாட்டம் இல்லையே! ஏன்? விலைவாசி உயர்வுக்கு மாநில அரசு மட்டும்தான் பொறுப்பா? மத்திய அரசுக்குப் பொறுப்பில்லையா? இவைகளை எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். விலைவாசி உயர்ந்துவிட்டதென்று சொல்லுகிறார்கள். இவர்கள் ஆட்சிக் காலத்தில் உயரவில்லையா? படி அரிசி 8 ரூபாய் விற்றதே....

திரு. க. இராமமூர்த்தி: மத்திய அரசில் நாங்கள் இருக்கிறோம், கேளுங்கள், சொல்லுகிறோம். தைரியமிருந்தால் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மத்திய அரசைக் கேட்க தைரியம் தேவையில்லை. கடமையைச் செய்யும்போது, மத்திய அரசைக் கேட்க நிச்சயமாகத் தயங்க மாட்டோம்.

திரு. க. இராமமூர்த்தி: அப்படியென்றால் மத்திய அரசுக்கு எதிராகப் போராட்டம், ஆர்ப்பாட்டம் செய்யுங்களேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மத்திய அரசுக்கு எதிராகப் போராட்டம் செய்யும்படியாக எங்களைக் கேட்டுக்கொண்டதற்கு நன்றி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்களைப் பேசவிடுங்கள்.

திரு. எஸ். முத்து: நான் பேசும்போது மாத்திரம் ஏன் ஆத்திரம் வர வேண்டும்? நான் நடந்தவற்றைத்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் வயதில் மூத்தவர் என்பதால், உரிமையோடு பேசுகிறார்கள்.

திரு. எஸ். முத்து: அடுத்து, காவல் துறையைப்பற்றி ஒரு சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். காவல் துறையைப்பற்றிப் பேசினார்கள். காவல் துறையினர் போராட்டம் நடத்தியவுடன், நான் தலைமை தாங்குவேன், நான் தலைமை தாங்குவேன் என்று சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் எடுபடவில்லை. புரட்சித் தலைவரவர்கள், இந்த மாநிலத்தின் முதல்வரவர்கள் அவர்களுடைய வஞ்சகத்தை உடைத்து, சுக்குநூறாக்கினார்கள். அன்றைக்கு மதுரையில் பல லட்சக் கணக்கான மக்கள் காவல் துறையினரைப் பாராட்டி னார்கள். அவர்கள் பண்பாக நடந்து கொண்டார்களென்று பாராட்டி னார்கள். எங்கோ போக இருந்தவர்களைப் பண்பாளர்களாக்கி, மக்களுக்குத்





தொண்டு செய்ய வாருங்களென்று முதலமைச்சரவர்கள் அழைத்ததைத் தாங்க முடியாதவர்கள், பொறுக்க முடியாதவர்கள் இங்கே எதையெதையோ பேசு கிறார்கள்.

அடுத்து, பி & சி மில் பிரச்சினை. இன்றைக்குப் பேசுவதற்கு பக்கிங்காம் மற்றும் கர்னாடிக் மில் பிரச்சினை கிடைத்திருக்கிறது. பி & சி மில் எப்படிப் பட்டது? நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே உருவாக்கப்பட்டது அது. இயந்திரங்களெல்லாம் பழுதடைந்தவை. அவற்றை வைத்துக்கொண்டு, இன்றைக்கிருக்கிற நவீன முறையில் உற்பத்தியைப் பெருக்க முடியாது. இன்றைக்கு நவீன இயந்திரங்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. அந்த ஆலைக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அதை எடுத்து நடத்துகிற பொறுப்பு மாநில அரசுக்கா? அந்தப் பொறுப்பு மத்திய அரசுக்கு இல்லையா? மாநில அரசைக் கண்டிக்கிறார்களே! பாராளுமன்றத்திலே இருக்கிறார்களே 20 பேர்கள், அவர்கள் ஏன் இதைப்பற்றிப் பேசவில்லை? "13,000 குடும்பங்கள் பட்டினி கிடக்கின்றன, இங்கே பாராளுமன்றத்தை நடத்திக் கொண்டிருக் கிறீர்களே; இது நியாயமா?" என்று ஒருவராவது எழுந்து கேட்கக்கூடாதா? அவர்கள் கொலுப் பொம்மைகளா? இங்கே ஊர்வலம் வருகிறார்கள், கடை களை அடைக்கச் சொல்லுகிறார்கள். சென்னையிலே இதைச் செய்கிறார்கள். ஆனால் பாராளுமன்றத்தில் கை தூக்கி, வரவேற்று, பொம்மைகளாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். 20 பேர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் ஏன் கேட்கவில்லை?

திரு. ஏ. ஆர். தாமோதரன்: நான் பேச வேண்டுமென்பதற்காகக் குறுக்கிட வில்லை. பாராளுமன்றத்தில் இப்படிச் செய்கிறார்களென்று சொன்னால், அங்கே 'பிரிஞ் ஆஃப் பிரிவிலேஜ்' ஆக 'கேஸ்' பண்ணலாம்.

திரு எஸ். முத்து: பி & சி மில்லைப் பொறுத்தவரையில், மாநில அரசுக்கு அக்கறை இருக்கிறது. 13,000 குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டுமென்று அரசு விரும்பவில்லை. அவர்கள் வாழ வேண்டுமென்றுதான் அரசு விரும்பு கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இடையிடையே விட்டு குறை, தொட்டு குறையாகத் தொட்டு இருப்பதாகக் கருதி, எழுந்து பேசப் பார்க்கிறார்கள். அவர்களுடைய கட்சி அங்கே இருக்கிறது, அவர் களை ஒத்துழைக்கச் சொல்லுங்கள். இரண்டு அரசாங்கங்களும் சேர்ந்து 13,000 தொழிலாளர்களை வாழ வைக்கலாம்

திரு. க. இராமமூர்த்தி: எங்கள் கட்சிக்கு இருக்கிற சங்கடம், இந்த அரசு என்ன கேட்கிறது என்பதைக் தெளிவாகச் சொல்லாததுதான்.

**திரு. எஸ். மூத்து:** தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அடுத்து, அவசரச் சட்டம்' அவசரச் சட்டம் என்று சொல்லுகிறார்கள். நாராயணசாமி நாயுடுவைக் கைது செய்யலாமா அவசரச் சட்டத்தின்கீழ், என்ன அக்கிரமம் என்று கேட்கிறார்கள். அப்படியென்றால், பாலில் உப்பைப் போடலாமா; பாலைக் கொட்டலாமா? அரிசி வருகிற லாரிக்குத் தீ வைக்கிறார்கள். எது சமூக விரோதச் செயல்? காய்கறிகளைக் கொட்டுகிறார்கள், அவற்றுக்கு நெருப்பு வைக்கிறார்கள். வரி கட்டாதே என்று சொல்லுகிறார்கள். இவையெல்லாம் சமூக விரோதச் செயல் இல்லையா? அவசரச் சட்டத்தின்கீழ் அவரைக் கைது செய்யலாமா என்று கேட்கிறார்கள். இதோ உட்கார்ந்திருக்கிறார், அவசரச் சட்டத்தின்கீழ் உள்ளே போனவர். அவசரச் சட்டம் பொல்லாத சட்டம். சிட்டிபாபுவைக் கொன்று விட்டது. அதைப்பற்றிப் பேச முடியவில்லை. அங்கே கை தூக்கினார்கள். அவசரச் சட்டம் வந்தபோது, இது தேவை என்று அங்கே கை தூக்கியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான். இந்த அவசரச் சட்டம் தேவை, இந்தியாவிற்குத் தேவை என்று கை தூக்கிவிட்டு, இங்கே வந்து அவசரச் சட்டம் தேவையா, இது அக்கிரமம், அநியாயம் என்று பேசுகிறார்கள். ஏன் பேச வேண்டிய இடத்தில் பேசவில்லை? ஏன் அங்கே எதிர்க்கவில்லை? அதற்கு என்ன காரணம்? கேட்கமாட்டோமா? கேட்டால் ஆத்திரம் வருகிறதா? 20 பேர்கள் அல்லவா அங்கே இருக்கிறார்கள். அங்கே கேட்டிருக்கலாம். ஏற்கெனவே இருக்கிற சட்டங்கள் போதும், அந்தச் சட்டத்தின் துணை கொண்டு தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும், ஆகவே இந்தச் சட்டம் தேவையில்லை என்று கூறாமல், கை தூக்கிவிட்டு, இங்கே வந்து அவசரச் சட்டத்தின்கீழ் கைது செய்யலாமா என்று கேட்கிறார்கள். அப்படியென்றால் போலீஸ்காரர்களை வெட்டலாமா? பாலில் உப்பைப் போடலாமா? அதைப் பார்த்துக் கொண்டு இந்த சர்க்கார் சும்மா இருக்க முடியுமா?

அடுத்தாற்போல், தொழிலாளர் விரோதக் கொள்கை. எங்கே தொழிலாளர் போராட்டம், ஸ்டிரைக் நடக்கிறது? இந்தச் சர்க்காரிலேதான் தொழிலாளர்கள் அமைதியாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இருக்கிறார்கள். அவர் என்னுடைய அருமை நண்பர் அல்லவா? அவரும் ஒரு பஞ்சாலைத் தொழிலாளி. நானும் ஒரு மாஜி பஞ்சாலைத் தொழிலாளி. எங்கே போராட்டம்? எது விரோதக் கொள்கை? இப்படி ஏதேதோ சொல்ல வேண்டியது. அவர்களுக்குள்ள பிரச்சினை வேறு. அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? இப்படி ஒவ்வொருவர் ஒவ்வொரு எண்ணத்தை வைத்துக்கொண்டு' இந்தச் சர்க்காரை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.





இந்த சர்க்கார் என்ன செய்யவில்லை? கொடுத்த எந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை? எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தின் முதலமைச்சரவர்கள் திட்டக் கமிஷனுடன் பேசி 1,000 கோடி ரூபாய் அதிகமாகக் கொண்டு வந்தாரே, அப்படி ஏழு ஆண்டுக் கால ஆட்சியின்போது முடிந்ததா? ஆயிரம் கோடி ரூபாய் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அதிகமாகப் பெற்று வந்ததைப் பாராட்டியிருக்கிறார்கள் ஆளுநர் அவர்கள் உரையில். எனவே நல்லதைப் பாராட்டிவிட்டு, கெடுதல்களைச் சுட்டிக்காட்டட்டும். ஏற்றுக்கொள்கிறோம். நல்லதையும் ஏற்றுக்கொள்வதில்லை. யார் இவர்கள், தமிழர்கள் இல்லை, நாங்கள்தான் தமிழர்கள், தியாகம் செய்தவர்கள், நாங்கள்தான் சொந்தக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் சொந்தக்காரர்கள் இல்லையென்று மக்கள் தீர்ப்பு அளித்துவிட்டார்கள். அதற்குப் பிறகும் நாங்கள்தான், நாங்கள்தான் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசு எதிர்காலத்தில் நல்ல திட்டங்களை உருவாக்க இருக்கிறது. கிராம மக்கள் சிறுசிறு தொழில்களைச் செய்து, உற்பத்தி செய்யும் பொருள்களைச் சர்க்காரிடம் கொடுத்து, நல்ல விலை பெற்று, வாழ்ந்து வருகிறார்கள்.

(நண்பகல் 12-00)

இப்படி பல்வேறு திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. மக்களுடைய பணத்தை எந்த வகையிலும் வீணாக்கவில்லை. வீண் விளம்பரங்கள் செய்யவில்லை. வீணாகப் போஸ்டர்களை ஒட்டி விளம்பரங்கள் செய்யவில்லை. எந்த ஒரு நல்ல காரியத்தையும் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றுமில்லாமல், அமைதியாக இந்த நாட்டிலேயுள்ள சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்காக இந்த அரசு செய்கிறது. ஆளுநர் அவர்களுடைய உரையை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஊழல் ஊழல் என்று சொல்லுகிறவர்கள் தங்களை ஊழல்களிலிருந்து காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று கூறி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவரவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து என் னுடைய பேச்சைத் துவக்குகிறேன். இங்கே பெரிய மாண்புமிகு உறுப்பினர்கள் உலகத் தமிழ் மாநாட்டினைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி நடைபெற்ற மொழி ஆய்வு, மொழி ஆராய்ச்சிக் கருத்தரங்குகளுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 ஜனவரி 2

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

பொதுவாக, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரசு செய்யக்கூடிய அத்தனை காரியங்களையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே சமயத்தில் தமிழ் மாநாடு என்று சொல்லி, ஆடம்பரமாகச் செலவு செய்கின்ற முறையை நான் ஆதரிக்க முன்வரமாட்டேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் எவை எவற்றை ஆடம்பரமாகக் கருதுகிறார் என்று குறிப்பிட்டுச் சொன்னால், நல்லது. அதுமட்டுமல்ல எதை எதை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதையும் குறிப்பிட்டுச் சொன்னால், ஆளுநர் உரைமீதான விவாதத்திற்கு பதிலுரை அளிக்கும்போது, முதல்வருக்கோ மற்றவர்களுக்கோ உதவிகரமா இருக்கும்.

*** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** என்னென்ன செலவுகள் ஆடம்பரமாக செய்யப்பட்டிருக்கின்றன என்பது உலகத் தமிழ் மாநாடு குறித்த வரவு-செலவு திட்டம் வெளியிடப்பட்ட பின்புதான் தெளிவாகத் தெரிய வரும். அப்போ தான் அதுபற்றிச் சொல்ல முடியும். நான் சொன்னது பொதுப்படையாக தான். இந்திய நாட்டினுடைய மரியாதைக்குரிய பிரதமர் அவர்கள் சி ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கருத்தை இதே சென்னையில் வெளியிட்ட எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது. இந்த நாட்டினுடைய மக்கள் வறுமை கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் ஏழையெளிய மக் ளுடைய வரிப் பணத்திலிருந்து அரசு விழாக்களுக்கும் நினைவுச் சின்ன களுக்கும் ஆடம்பரமாகவோ, தேவைக்கு மிஞ்சியோ செலவு செய்வதை நா கண்டிக்கிறேன் என்று அப்போது பிரதமர் குறிப்பிட்டார். அப்போது தமி கத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. பிரதமருடை கருத்து நாட்டினுடைய, நாட்டு மக்களுடைய ஒரு பொதுவான கருத்தை பிரதிபலிப்பது. நாட்டிலே வறுமையில் வாழ்கின்ற மக்கள் மிக அதிகம இருக்கும்போது, அவர்களுடைய வரிப் பணத்திலிருந்து அரசாங்கம் செ செய்யும்போது, மிகவும் சிக்கனமாகவும், கவனமாகவும், எச்சரிக்கையாக செலவு செய்ய வேண்டும். அந்தக் கருத்தைத்தான் நமது பிரதமரும் பி பலித்தார். அதைத்தான் நானும் இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவு படுத் கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் எது ஆடம்பரச் செலவு என்று கு பிட்டுச் சொன்னால், நல்லதாக இருக்கும் என்றார். அது சம்பந்தமான வர செலவுக் கணக்கு வெளியிடப்பட்ட பிறகுதான் அதுபற்றிச் சொல்ல முடியு



வரி 29] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

தமிழ் பயிற்று மொழிபற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் மொழிக்குக் கவர்ச்சி தேவையே இல்லை. அதிலேயே கவர்ச்சி இருக்கிறது. புதிதாக அதற்குக் கவர்ச்சியூட்டி, மெருகேற்ற வேண்டிய அவசியமில்லை. அது முடியவும் முடியாது. தமிழ் ஒரு அறிவியல் மொழியாக, ஆராய்ச்சி மொழி யாக' தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் வளர்க்கப்பட வேண்டும், அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். தமிழ்ச் சங்கத்தை மீண்டும் துவக்குகின்ற தமிழக அரசின் முயற்சியை நான் முழுமனதுடன் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அப்படி உருவாக்கும்போது, தமிழை ஆராய்ச்சி மொழியாக, அறிவியல் மொழியாக ஆக்கும்போது, உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்குப் பூரணமான மரியாதை கிடைக்கும். இன்னொரு கருத்தையும் நான் சொல்ல ஆசைப்படு கிறேன். தமிழ் பயிற்று மொழி என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது உண்மையில் எந்த நிலையில் இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ் பயிற்று மொழியிலே படிக்கின்ற மாணவர்கள் மிகச் சிலர்தான். அவர் களுடைய பட்டப்படிப்பு முடிந்து பட்டத்தைப் பெறும்போதுகூட, அதில் தமிழ் மீடியம் என்று குறிப்பிடப்படுவதில்லை. தமிழ் மீடியம் என்று அதில் போட்டால், தங்களுக்கு வேலை கிடைக்காது என்று பயப்படுகின்ற ஒரு பரிதாபகரமான, வெட்கப்படக் கூடிய நிலை தமிழ் நாட்டிலே இன்றையதினம் இருக்கிறது என்பதை நாமெல்லாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம்? தமிழ் மீடியம் என்று போட்டால், தங்களுக்கு வேலை கிடைக்காது என்று எண்ணுகின்ற தாழ்வு நிலை இன்றைய மாணவர்கள் மத்தியில் இருக்கிறது. அதுகுறித்து இந்த அரசு உடனடியாகக் காலம் தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஆட்சியில் இருப்பவர்களைப் பார்த்தும், சர்வ கட்சித் தலைவர்களைப் பார்த்தும் சொல்கிறேன் : முதலில் நம்முடைய வீட்டிலேயுள்ள பிள்ளைகளைத் தமிழ் பயிற்று மொழியிலேயேதான் படிக்க வைப்பேன் என்கிற உறுதி மொழியை ஒவ்வொருவரும் இன்றே எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் என் பிள்ளைக்குப் படிப்பில் சுதந்திரம் கொடுக்கிறேன் என்று சொல்லி தப்பித்துக் கொள்ளுகிற மனப்பான்மை இருக்கவே கூடாது. அப்படிச் செய்தோமே யானால் நாம் நம்முடைய நாட்டு மக்களை ஏமாற்றுகிறோம் என்றுதான் பொருள். அந்த உறுதிமொழியை முதலில் நாம் எல்லோரும் ஏற்று செயல் படுத்த வேண்டும். இதுவரை அத்தகைய நிலை உருவாக்கப்படவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சில உண்மைகளை வெளிப்படையாகச் சொல்லும்போது, கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் கசப்பு மருந்துதான் நோயைத் தீர்க்கக் கூடியது.

[1981 ஜனவரி 23

திரு. ப. மாணிக்கம் : தலைவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழில் படிக்க வைக்க வேண்டுமென்கிற உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். எல்லாத் தலைவர்களும் தங்கள் பிள்ளைகளைத் தமிழில் படிக்க வைக்கவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா? அதுபற்றிய விவரங்களை வைத்திருக்கிறாரா?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : Positive ஆகத்தான் நான் சொன்னேன். நெகட்டிவ் ஆகக் குறிப்பிடாமல் சொன்னேன். எதிர்மறையில் சொல்லவில்லை. இன்றையதினம் தமிழகத்திலே பொருளாதாரத்தில் முன்னணியிலே இருப்பவர்கள், பதவியிலே இருப்பவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள், இப்படிப்பட்டவர்களுடைய குழந்தைகளை எல்லாம் ஆங்கில வகுப்புகளிலே படிக்க வைக்கிறார்கள் என்கிற எண்ணம் நாட்டு மக்களிடம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை நாம் மாற்றியமைத்தாக வேண்டும். அந்த முறையில் நான் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறேன்.

அடுத்து, பொதுவாக இந்த அரசுபற்றிப் பொதுப்படையாக ஒரு கருத்து நிலவுகிறது. அதாவது இந்த அரசு முதலில் ஒரு ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த பிறகும், இரண்டாவது முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகும், வளர்ச்சிப் பணிகளுக்காக அதிக ஆர்வம் காட்டுகின்ற நிலை இல்லை, Non-developmental Activities -ல்தான் அதிகமாகக் கவனம் செலுத்துகிறது என்கின்ற புகார் இருக்கிறது.

திரு. ஜேப்பியார் : உறுப்பினர் தமிழ்பற்றிச் சொன்னதற்காக நன்றி. அவர் தம்முடைய பேச்சினூடே ஆங்கில வார்த்தைகள் உபயோகிப்பதைக் குறைத்தால் அதைக் கேட்பதற்கு நன்றாகவும் இருக்கும், எல்லோரும் அறிந்து கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தமிழ்ப் பயிற்று மொழியை எடுத்துப் படித்தால் எதிர்காலம் என்ன ஆகும் என்று பயப்பட்ட காலத்திலேயே தமிழ்ப் பயிற்று மொழியில் படித்துப் பட்டம் பெற்றவன் நான். அதற்காக இன்றைக்கும் நான் பெருமைப்படக் கூடிய நிலையில் இருக்கிறேன். ஆகவே தமிழ் மொழியின்மீது கொண்ட பற்றைப் பொறுத்தவரையில், எந்த வகையிலும் நான் குறைந்தவன் அல்ல. உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக வழக்கத்தில் உள்ள சில ஆங்கிலச் சொற்களை இடையிடையே சொல்கிறேன்.



1981 ஜனவரி 23] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தை எடுத்துக்கொண்டால், ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அது நமக்கெல்லாம் நன்றாகப் புரியக் கூடிய உண்மை. இன்றைக்கு தமிழ் நாட்டிலுள்ள பெரிய பெரிய தொழிற் சாலைகளையெல்லாம் பார்க்கும்போது, பெருந்தலைவருடைய ஆட்சிக் காலம் நமக்கு உடனே நினைவுக்கு வரும். தமிழ் நாட்டிலுள்ள முக்கிய அணைக் கட்டுகளைப் பார்க்கும்போதெல்லாம், பெருந்தலைவரின் ஆட்சிக் காலம் நினைவுக்கு வரும். இலவசக் கல்வித் திட்டத்தைப் பார்க்கும்போதெல்லாம், பெருந்தலைவருடைய ஆட்சிக் காலம் நினைவுக்கு வரும். மதிய உணவுத் திட்டத்தைப் பார்க்கும்போதெல்லாம் பெருந்தலைவரின் ஆட்சிக் காலம் நினைவுக்கு வருகிறது. கிராமங்கள்தோறும் இருக்கின்ற பள்ளிக்கூடங்களைப் பார்க்கும்போது, பெருந்தலைவரின் ஆட்சிக் காலம் நினைவுக்கு வருகிறது. பெரிய பெரிய திட்டங்களைத் தீட்டி சாதனைகளைப் புரிந்தவர் காமராஜர் அவர்கள். அவருடைய நினைவு வரும்போதெல்லாம் அவருடைய சாதனைகளும் திட்டங்களும்தான் நினைவுக்கு வருகின்றன. அதுபோல் இந்த அரசும் செய்ய வேண்டும். அதுதான் என்னுடைய நோக்கம். வருங்காலத்திலே பெரிய தொழிற்சாலைகளை, பெரிய திட்டங்களை பெரிய சாதனைகளையெல்லாம் பார்க்கும்போது, நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நினைவு வர வேண்டும். அந்த முறையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வளர்ச்சிப் பணிகளை ஏற்றுச் செய்ய வேண்டும். வளர்ச்சிப் பணிகளுக்கு முதலிடம் தந்து, கவனம் செலுத்தித் திட்டங்களைத் தீட்டி மக்களுடைய நினைவில் நிலையாகத் தங்கக்கூடிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று என்னுடைய ஆவலைத் தெரிவித்துக்

(பிற்பகல் 12-10)

கொள்கிறேன். அப்படிப்பட்ட காரியங்களிலே நாம் வேகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

வீராணம் திட்டம் பற்றி இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டளைக் கால்வாய்த் திட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, 450 கோடி ரூபாய் செலவு செய்தாலும், இதை முடிப்பதற்கு ஐந்து ஆண்டுகளாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், இதை முடிப்பதற்கு 10 ஆண்டுகள்கூட ஆகலாம் என்று முக்கியமான பத்திரிகை ஒன்று கருத்து தெரிவித்திருக்கிறது. எனக்கு ஒரு சந்தேகம், இன்னும் பத்தாண்டுக் காலத்திலே தமிழ் நாட்டிலே பல அரசியல் மாற்றங்கள் ஏற்படலாம். அப்போது பின்னாலே வேறு யாராவது ஆட்சிக்கு வந்தால், இந்தத் திட்டத்திலே இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன, இன்னின்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லி, அவர்கள் வேறொரு திட்டத்தை அறிமுகப்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், இப்படியாகச் சென்னை

நகரில் இருக்கும் மக்களுக்குக் குடிநீர் சம்பந்தமாக ஒரு நிலையான தீர்வு காணாமல், நம்முடைய பணம் வீணாகும் என்ற அச்சத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படியே செய்துகொண்டிருந்தால், மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. வீராணம் திட்டத்தைப் பற்றி மறு ஆய்வு நடத்திய குழு மேலும் 30 கோடி ரூபாய் செலவழித்தால் அந்தத் திட்டத்தின் மூலம் வெற்றிகரமாகத் தண்ணீர் கொண்டுவரலாம், அந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தலாம் என்று அறிக்கை கொடுத்திருப்பதாகச் செய்தித் தாள்களிலே நான் பார்த்தேன். நான் அறிக்கையைப் படிக்கவில்லை. அது உண்மை என்றால், ஏன் அந்தத் திட்டத்தை நாம் மறுபரிசீலனை செய்து இன்னும் 30 கோடி ரூபாயோ அல்லது 50 கோடி ரூபாயோ செலவு செய்து அதை நிறைவேற்றக்கூடாது என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையிலே அந்தத் திட்டத்தைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்டுக் கிடக்கும் பின்னி மில் தொழிலாளர்களின் குடும்பங்களைப் பற்றி ஆளுநர் அவர்களின் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 13 ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அவர்கள் மேலும் அவதிக்கும், தொல்லைக்கும் ஆளாகாமல் அவர்களுடைய பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு காலக்கெடு வைத்துச் செயல்பட வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்தக்கூடிய ஒரு முக்கியமான கட்டாயத்திலே, பொறுப்பிலே நமது மாநில அரசு இருக்கிறது. அந்தப் பொறுப்பை உணர்ந்து இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணும் வகையில் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சினையைப்பற்றி இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். விவசாயிகள்பற்றி மகாத்மா காந்தி சொன்ன அறிவுரையை நான் இங்கு குறிப்பிடுகிறேன். அவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமான எந்தவிதமான கருத்து வேறுபாடுகளுக்கிடையிலேயும் நான் போக விரும்பவில்லை. 'இந்தியாவின் முதுகெலும்பு இந்தக் கிராமங்கள். அதை நாம் மறந்துவிடக்கூடாது. அவைகள் இன்றைக்குக் குப்பைமேடுகளாகக் காட்சியளிக்கின்றன, நாளை அவைகள் 'ஏடன்' தோட்டத்தை விஞ்சிய பூங்காவாகக் காட்சியளிக்க வேண்டும்' என்று நமது அண்ணல் காந்தியடிகள் ஆசைப்பட்டார்கள். இந்த நாட்டின் முதுகெலும்புகளாக இருக்கும் கிராமங்களில் இருக்கும் விவசாயிகளின் பிரச்சினைகளை காந்தியடிகள் சொன்னபடி, விரும்பிய





[illegible] நாம் [illegible] வேண்டும். [illegible] அறிந்தால், நான் [illegible] யார் சேர்ந்து போவார்கள்? [illegible] இருக்கும் [illegible] நகரங்களில் வசிக்கும் மக்களுக்கும் சேர்ந்து உற்பத்தி செய்ய வேண்டும். கிராமங்களில் வாழும் மக்கள் தங்களுடைய தேவைகளுக்கு மேல் உற்பத்தி [illegible] இருந்தால்தான், வெளியே அனுப்புவோம் என்று திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும் என்றுதான் காந்தியடிகள் [illegible] சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அண்ணல் காந்தியடிகள் சொல்லியிருக்கும் கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரச்சினைபற்றிச் சொல்ல விரும்புகிறேன். அது சம்பந்தமாக, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்து சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. அரசின் சார்பாக, 1980 ஜூன் மாதத்தில் ஆளுநர் உரையில் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்று நான்கு நாட்களுக்கு முன்பே அறிவித்திருந்தால், இந்தப் போராட்டம் ஏற்பட்டிருக்காது, கிளர்ச்சி ஏற்பட்டிருக்காது, ஆசிரியர்கள் சிறைச்சாலைகளுக்குப் போயிருக்கமாட்டார்கள். அந்தக் கருத்தை நேற்று சொல்லியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே கூட இன்னும் கொஞ்சம் சந்தேகங்கள் இருக்கின்றன என்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சந்தேகங்களில் சில, சட்டத் திருத்தம் கொண்டு வரப் [illegible] என்று சொல்லி 6 மாதங்கள் ஆகிவிட்டதே, அதற்கான முயற்சிகள் இன்னும் எடுக்கப்படவில்லையே என்று அவர்கள் வருத்தப்படுகிறார்கள். இடையிலே, சட்டத் திருத்தமே வராது, வராது என்று சிலர் பிரச்சாரத்தை அங்கே செய்துகொண்டிருக்கிறார்கள். யார் அந்தப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. பொறுப்பிலே இருப்பவர்கள்தான் சொல்கிறார்கள். சட்டத் திருத்தம் நிச்சயமாக வராது என்று பிரச்சாரம் செய்ததன் விளைவாகச் சந்தேகம், அவநம்பிக்கை ஏற்பட்டிருப்பதுதான் இந்த நிலைமைகளுக்குக் காரணம். அங்கே போராட்டத்தில் ஈடுபட்டு ஆசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்வது பற்றிய அறிவிப்பு ஒன்றும் இதுவரையில் இல்லை. அவர்களை விடுதலை செய்தால்தான், பல்கலைக் கழகம் இயங்க முடியும். அதைப்பற்றித் தெளிவான அறிவிப்பை அரசு வெளியிட வேண்டும். ஆசிரியர்களின் பிரதிநிதிகளும், துணை வேந்தர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னிலையிலே கடந்த ஜூலை மாதத்திலே கூடிப்பேசி, சில சமரச உடன்படிக்கைகள் ஏற்பட்டு, உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டன. இப்போது அந்த உறுதிமொழிகள் காற்றிலே பறக்கவிடப்பட்டிருக்கின்றன. அவைகள் இப்போது

என்னவாயிற்று? மீண்டும் துணை வேந்தர் அவர்களும், ஆசிரியர்களின் பிரதிநிதிகளும், கல்வி அமைச்சர் அவர்களும் கூடிப்பேசி உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 10, 15 நாட்களாக நடைபெற்ற இயக்கத்தின் காரணமாக, போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் எந்தவிதமான பாதகமும் இல்லாத முறையில் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் அரசு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அரசின் சார்பாக அந்த உறுதிமொழியை அந்த அறிவிப்பை இந்த அவையிலேயே வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு இருக்கின்ற பிரச்சினைகள் பற்றி, அந்த அமைப்பின் சார்பாகச் சொல்லப்படுகின்ற பல்வேறு புகார்களுக்கெல்லாம் பல்வேறு செக்கார்டுகளிலிருந்து எடுக்கப்பட்ட ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. இந்த ஆதாரங்கள் அனைத்தையும், மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசுக்குச் சமர்ப்பிக்கிறேன்

(மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் மூலமாகச் சம்பந்தப்பட்ட ஆதாரங்களை மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவருக்குக் கொடுத்தனுப்பினார்—மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை.)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: நானே கொண்டு வந்து கொடுக்க வேண்டுமா? அதற்கான நியதி என்னவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தரவேண்டிய ஆதாரங்களை அவையிலே தருவதாகச் சொல்லிவிட்டு, அரசுக்கு நேரடியாகத் தரலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இப்போது அவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இல்லை, மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்களும் இல்லை.

ஓர் உறுப்பினர்: (உட்கார்ந்துகொண்டு) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொடுக்கலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அப்படி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொடுப்பதுதான் முறை என்று நினைக்கிறேன். இப்போது, நான் யாரிடத்திலே இவைகளைக் கொடுக்க வேண்டும் என்று தயவுசெய்து விளக்க வேண்டுகிறேன்.





மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு ஏதாவது தகவல்கள், ஆதாரங்கள் தரவேண்டுமென்று விரும்பினால், அரசின் சார்பாக இங்கே எந்த அமைச்சர் இருந்தாலும் அவரிடத்திலே தரலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு, என்னிடம் இருக்கும் ஆதாரங்களை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். (ஆதாரங்களை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்).

இன்னொரு விஷயத்தை இந்த அவையிலே நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரச்சினைகள் பற்றி இங்கு மேலவையிலேயும், வெளியிலே நடைபெறும் கூட்டங்களிலேயும் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பிரதிநிதியாக இருக்கும் நான் பேசுகிறேன். அந்தப் பிரச்சினைபற்றிச் சில கருத்துக்களை நான் தீவிரமாகப் பேசினேன், அதில் உறுதியாக இருக்கிறேன் என்பதற்காக எனக்கும், என்னைச் சார்ந்தவர்களுக்கும் பயமுறுத்தல்களும், அச்சுறுத்தல்களும் வருகின்றன என்று சொன்னால், இது ஒரு ஜனநாயக நாட்டிலே நல்லதல்ல. எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. காவல் துறை அதிகாரியைக்கூட சந்தித்து இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய உயிரை நான்தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். 24 மணி நேரமும் இன்னொருவரால் என்னுடைய உயிரைக் காப்பாற்ற முடியாது. இதுபற்றி நான் புகார் செய்யப் போவதில்லை என்று சொன்னேன். புகார்களைத் தெளிவாகவும், உறுதியாகவும் தீவிரமாகவும் எடுத்துச் சொன்னதற்காக இப்படி பயமுறுத்தல்களும், அச்சுறுத்தல்களும் இருப்பது நல்லதல்ல. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கப் பொறுப்பாளர்களாக இருப்பவர்களுக்கும் பயமுறுத்தல்களும், அச்சுறுத்தல்களும், கொலை மிரட்டல்களும் வந்திருக்கின்றன. அதுபற்றிய ஆதாரங்கள் கூட என்னிடத்திலே இருக்கின்றன. அவைகளைத் தனிப்பட்ட முறையிலே நான் தருகிறேன். அமைதியான முறையில் நியாயமான கோரிக்கைகளை எடுத்துச் சொல்லும்போது, நிர்வாகத்தினர் ஜனநாயக ரீதியில் எப்படி வேண்டுமானாலும் பதில் தரலாம். அதை விட்டுவிட்டு, அதற்கு மிரட்டல் சரியான ஆயுதம் அல்ல என்பதை இந்த மன்றத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்திலே ஏராளமான குறைபாடுகள் இருக்கின்றன என்று நானும் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும்

பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லி அந்தக் குறைபாடுகளையெல்லாம்
நீக்கும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டிருக்
கிறோம். அந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்பது
எங்களின் நீண்டநாள் கோரிக்கையாகவே இருந்து வருகிறது. அந்த
திருத்தச் சட்டம் இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. அதைக் கால
தாமதம் செய்யச் செய்ய தனியார் பள்ளி ஆசிரியர்களிடத்திலே சோர்வு
மனப்பான்மைதான் வளர ஆரம்பிக்கின்றது. அரசாங்கம் சட்ட பூர்வமாகச்
செய்ய வேண்டிய சில நடவடிக்கைகளை உரிய நேரத்தில் செய்யாமல் காலம்
தாழ்த்துவது ஆசிரியர்களின் கிளர்ச்சிக்கு வித்தூன்றிக்கொண்டிருக்கிறது
என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே அந்தக் குறைபாடுகளை
நிறைவு செய்யும் வகையில் உரிய திருத்தச் சட்டம் ஒன்றை இந்தக் கூட்டத்
தொடரிலேயே அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். திருத்தங்கள் குறித்து பல்வேறு ஆலோசனை
களையும் நாங்கள் எங்கள் சங்கங்களின் மூலமாக அரசுக்குத் தெரிவித்திருக்
கிறோம் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மைனாரிட்டியினர் பள்ளிகளைப் பொறுத்தவரையில், சுப்ரீம்
கோர்ட்டில் நமது அரசு தொடர்ந்த வழக்கு ஒன்று பதிவாகி முடிவடையாத
நிலையில் நிலுவையில் இருந்து வருகிறது. இது குறித்து நமது அரசுத்
தரப்பு வழக்குரைஞர்கள் அந்த வழக்கை விரைவாக முடிக்க என்னென்ன
நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகள் அனைத்தையும் விரைவில்
எடுக்க வேண்டுமென்று அரசு அறிவுறுத்த வேண்டும். இதில் காலதாமதம்
செய்வதன் காரணமாக மைனாரிட்டி பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்
களிடையே "எங்களை அரசியல் சட்டத்தைக் காட்டி அரசும் பாதுகாக்க
வில்லை, கல்வித் துறையும் பாதுகாக்கவில்லை. சங்கமும் பாதுகாக்கவில்லை.
எனவே நாங்கள் வேறு வகையில் காரியத்தில் இறங்கினால்தான் எங்களுக்குப்
பாதுகாப்பு கிடைக்கும்" என்ற உணர்வு தலைதூக்க ஆரம்பித்துவிட்டது.
சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால், தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூரில்
நீண்ட நெடுங்காலமாக நடைபெற்று வரும் ஒரு பழமையான பள்ளியான
செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை
தலைதூக்கி, இன்றைக்கு அது எரிமலையாக வெடிக்கும் நிலையில் இருக்கிறது.
அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்குத்
தெரியும், திண்டிவனத்தில் நீண்ட காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும்
செயின்ட் ஆன்ஸ் உயர்நிலைப்பள்ளியிலும், இத்தகைய நிலைமை உருவாகி
யிருக்கிறது. நிருவாகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்ட மோதல் காரண
மாக அந்த மோதலில் அந்தப் பகுதி பொதுமக்களும் கலந்துகொண்டு கலவரம்
ஏற்பட்டு அதன் காரணமாகப் பெரும் சேதமே ஏற்பட்டிருக்கிறது. அதற்குப்





...நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.
...து இன்றையதினம் நிருவாகம் பணிந்து
...கைய உணர்வுகளுக்குக் காரணம் ஆசிரியர்கள் தங்களை அரசும் பாது
...கத் தவறிவிட்டது, கல்வித் துறையும் பாதுகாக்கத் தவறிவிட்டது என்று
...துவதுதான். அரசும், கல்வித் துறையும் தங்களைப் பாதுகாக்கத் தவறி
...டதால் தாங்களே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று
...றி, சட்டத்தையும் அவர்கள் தங்கள் கைகளிலே எடுத்துக்கொண்டு
...ராட்டத்தில் இறங்கிவிட்டார்கள். இதற்கெல்லாம் அரசாங்கம் கடைப்
...க்கும் காலதாமதம்தான் காரணம் என்பதை உணர வேண்டும். அந்த
...வகையில் ஆசிரியர்கள் இன்றைக்குப் போராட்டத்தில் ஈடுபடுகிற அளவுக்கு
...நிலைகளாலே தள்ளப்படுகிறார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி: திண்டிவனம்பற்றி இங்கே குறிப்பிடப்பட்ட
...ல் ஒன்றைமட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப்
...ளிக் கலவரத்தில் பொதுமக்களும் கலந்துகொண்டு போராட்டத்தில் ஈடு
...டார்கள் என்ற தகவல் சரியில்லை. காரணம் நான் அங்கேதான் இருக்
...றேன். அந்தத் தகவல் சரியல்ல. அடுத்தது அங்கே பள்ளிக்கூடத்தின்
...ரவல் கண்ணாடிகள் தான் உடைந்திருக்கின்றன. சட்டத்தை பொது
...கள் யாரும் கையிலே எடுத்துக்கொண்டு செயல்படவில்லை என்பதைத்
...ரிவித்துக்கொள்கிறேன். செயல்பட்டவர்கள் யார் என்பதை ஊகித்துக்
...ள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம்,
...ரசுத் தரப்பில் செய்யப்படுகிற காலதாமதம் காரணமாக வன்முறையைப்
...பன்படுத்தி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் ஆசிரி
...ர்களிடையே வளர்ந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான். இதை
...பல்லாம் அரசு ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான்
...கேட்டுக்கொள்கிறேன். எனக்குக் கிடைத்த தகவல் அந்தப் பள்ளிப் போராட்
...டத்தில் பொதுமக்களும் கலந்துகொண்டு ஆதரவாக நடந்து கொண்டார்கள்
...என்பதுதான். எனவேதான் நான் அதை இங்கே குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
...பேசும்போது, மைனாரிட்டி வகுப்பினர் நடத்துகிற கல்வி நிறுவனங்கள்மீது
...அரசு ஆதிக்கம் குறித்து சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற வழக்கைச் சீக்கிரமாக
...முடிக்க வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும்,
...இல்லையென்றால் எப்படிப்பட்ட நிலைமைகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன
...என்பதை எடுத்துக்காட்டுகிற வகையில் ஆங்காங்கே நடைபெறும் சில சம்பவங்
...களைச் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி
...அவர்களும் என்ன நடந்தது என்று விளக்கினார்கள். படித்துப் பட்டம்

பெற்ற ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இத்தகைய முறைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்திவிட்டால், நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வேறு சட்ட பூர்வமான வழிமுறைகள் இல்லாததால்தான், ஆசிரியர்கள் இத்தகைய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்தப் போக்கு சரியில்லை. இந்தப் போக்கை நான் சரி என்று ஒப்புக்கொள்ளவில்லை. இது சரியான முறை என்று ஏற்கவில்லை. ஆனால் ஆசிரியர்கள் இத்தகைய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற உண்மை நிலையினை மட்டும் அரசு உணர வேண்டும் என்பதை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலை தொடருவதை அரசு அனுமதிக்காமல் அரசு செய்ய வேண்டிய கடமையை விரைவுபடுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அரசு செய்ய வேண்டிய காரியத்தை விரைவாகச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னார்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மூன்று பிரச்சினைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உளுந்தூர்பேட்டையில் அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு 50 அடி தொலைவில் ஒரு சினிமா தியேட்டர் கட்ட தற்போது அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் தியேட்டர் கட்டக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியும் ஆட்சேபனை தெரிவித்த பிறகும், அத்தகைய தியேட்டர் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. "அந்தத் தியேட்டர் கட்டப்படுவதால் அது எங்களுடைய கல்விக்குப் பாதகமாக, குந்தகமாக இருக்கும் என்று சொல்லி அங்கேயுள்ள மாணவர்கள் போராட்டமும் கிளர்ச்சியும் செய்து வருகிறார்கள். அந்தப் போராட்டத்தை மாணவர்களின் பெற்றோர் சங்கம் முன்னின்று நடத்துகிறது. இன்றையதினம் அந்தப் பள்ளி மூடப்பட்டிருப்பதாக எனக்கு ஆதாரபூர்வமான தகவல் வந்திருக்கிறது. இப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மைக் கல்வி அதிகாரி ஆகியோரின் கருத்துக்களுக்கும் மீறிய நிலையில், ஊராட்சி மன்றம் நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்திற்கு மாறாக அங்கே சினிமா தியேட்டர் கட்ட அரசு அனுமதி கொடுத்தது சரிதானா என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும், இந்தப் பிரச்சினையில் அரசு தலையிட்டு அங்கே ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, சிதம்பரத்தில் உள்ள நடராஜர் ஆலயம்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முன்பொரு முறை நான் கேள்வி நேரத்தில் கேட்ட வினா ஒன்றிற்குப் பதிலளிக்கும் வகையில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் 4 உறுப்பினர்கள் பேச இருப்பதால், உறுப்பினர் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அந்த ஆலயத்தை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது குறித்து உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கேட்டிருக்கிறோம் என்று அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவரிடத்திலே அதுபற்றிக் கேள்வி கேட்டு, அவர் அந்தப் பதில் சொன்ன காரணத்தாலேயே ஊரிலே எனக்கு நிறைய எதிர்ப்பு வந்தது என்ற உண்மையை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பிறகு சிதம்பரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட போது, நான் வட மாநிலங்களுக்குச் சென்றிருந்த காரணத்தால், அதில் கலந்துகொள்ள இயலவில்லை. அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் கருத்தை மிகவும் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர் குறிப்பிட்டபடி, அது அரசுக் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட வேண்டிய நியாயமான நடவடிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்போது தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் உண்மையாகும். எனவே உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்று அந்த ஆலயத்தை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் விரைவில் கொண்டுவர வேண்டும் என்றும், மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த கருத்திலிருந்து எந்த வகையிலும் அரசு மாறாமல், வழுவாமல் உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதனை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளைத் தவிர மற்ற அனைத்துப் பகுதி களிலும் மழையில்லை. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 95 சதவிதப் பகுதி வானம் பார்த்த பூமியாக, பாசனத்தால் பயன் அடைவதில்லை. அதன் காரணமாக, தற்போது மழையில்லாமல் அந்தப் பகுதி மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும் இதை நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். எனவே தென்னார்க்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து அதற்குரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முன்பு இந்த ஆட்சி அமைந்தபோது வேலை நிறுத்தங்களும், போராட்டங்களும் நடைபெறும்போது, அதை அரசு ஒரு சரியான முறையில், எளிய முறையில் அணுகியது. ஆனால் இப்போது, போராட்டங்கள் அல்லது வேலை நிறுத்தங்கள் உருவாகும்போது, அதைக் கசப்பாக நினைத்து அணுகுகிற மனப்பான்மை ஆட்சியாளர்களிடம் வளர்ந்து வருவது நல்லதல்ல. போராட்டங்களும், வேலை நிறுத்தங்களும் அரசுக்கு எதிரானவைகள் அல்ல என்ற அடிப்படை உண்மையை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். குமுறிக் கொண்டிருக்கிற கோரிக்கைகளை வெளி உலகத்திற்குக் கொண்டு வருவதற்கும், அதன் மூலம் அவைகளுக்குப் பரிகாரம் காணவும் ஒரு சூழ்நிலையை உருவாக்கத்தான் போராட்டங்களும் வேலை நிறுத்தங்களும் நடைபெறுகின்றனவே தவிர, அவை இந்த அரசுக்கு எதிராக விடப்படும் சவால்கள் அல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தொழிலாளர்களானாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி, விவசாயிகளானாலும் சரி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் மேற்கொள்கின்றனரே தவிர அரசுக்கு எதிராக விரோதமாக இவைகளை மேற்கொள்வதில்லை. எனவே உருவாகும் பிரச்சினைகளுக்கு உரிய பரிகாரங்களைக் காண்பதில் அரசு தன்னுடைய சாமர்த்தியத்தையும் ஆற்றலையும் காட்ட வேண்டுமே தவிர, வேலை நிறுத்தங்களையும் போராட்டங்களையும் தடை செய்வதில் ஈடுபடுவது சரியல்ல. எல்லா வேலை நிறுத்தங்களையும் தடை செய்வது என்பது மிக மிக எளிது. ஆனால் அது பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது என்று சொல்லிக்கொண்டு, போராட்டங்களும், வேலை நிறுத்தங்களும் உழைக்கும் வர்க்கத்திற்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள் என்று அரசு நினைத்து அவைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கு அரசு முனைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நினைவுபடுத்தி, மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைக் குறித்து நேற்று அரசு சார்பாகக் கொடுக்கப்பட்ட அறிவிப்புக்கு நன்றியையும் வரவேற்பையும் தெரிவித்து, அது குறித்து நான் கேட்டுள்ள சந்தேகங்களையும் அரசு நிவர்த்தி செய்ய வேண்டும், அதோடு சுமுகமாக ஓரிரு நாட்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் திறந்து, அதன் மூலம் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு இந்த அரசு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 12-30)

* **THIRU J. M. MIAKHAN**: Mr. Deputy Chairman, Sir, I think you for giving me this opportunity to speak on the Governor's Address.





The Governor's Address starts very hopefully with a mention about the Fifth World Tamil Conference. I congratulate the Government on having conducted the Conference very successfully. But, I would like to know from the Government the advantages of this Conference. Certain civic amenities might have accrued to the Madurai Corporation and the Tamil-consciousness of people might have soared up. In addition to that, I would like to know what the real benefit to the Tamil language by holding this Conference is. If they had at least made some arrangements to introduce scientific and technical terms in Tamil, it would have been a great thing and it would have made the quick learning of Science in Tamil possible.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி—தலைமை)

Now, as it is, we do not have Tamil equivalents for the various technical terms like $CO_2$, $HO_2$, $HO_4$, etc. If Tamil equivalents are found for such terms, people can learn Science more quickly in Tamil language. This is another thing which I want to mention. In the Tamil Conference, one of the Vice-Chancellors seems to have said that if he had the power, he would banish the kindergarten schools from Tamil Nadu. It is really painful for me to note that a Vice-Chancellor who is in charge of a University and who is such a responsible person has said this. Does it mean that only Tamil should flourish in Tamil Nadu and that no other language should come up? Or does it mean that he wishes. . . .

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உலகத் தமிழ் மாநாட்டில் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவித்த ஒரு கருத்தைப்பற்றி சில கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் வேண்டாமென்று அவர் சொல்லவில்லை. நர்சரி பள்ளிகள் என்ற பெயரால், ஐந்து வயதுக்கும் உட்பட்ட இளம் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்றுத் தராமல் ஆங்கிலத்தை மட்டும் கற்றுத் தரும் முறையை நாம் வளர்க்கக் கூடாது என்றும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். தமிழ் நாட்டில் உள்ள கல்வி நிலையங்களுக்குள் போகிற சின்னப் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்றுத் தராமல் ஆங்கிலத்தை மட்டும் கற்றுத் தருகிற முறையைப் போக்கி தமிழையும் கற்றுத் தருகிற முறையை ஏற்படுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டார். தமிழைத் தவிர வேறு எந்த மொழியையும் கற்றுத் தரக்கூடாது என்று அவர் தெரிவிக்கவில்லை.

THIRU J. M. MIAKHAN : I thank the Hon. Minister for the correction. But, I would have welcomed it if the Vice-Chancellor had said that Tamil also should be taught in the primary schools. He need not have said that he would abolish the kindergarten schools in Tamil Nadu. That has given room for a misunderstanding amongst the people. Another achievement seems to be the assurance given by the Prime Minister of India that Hindi would not be thrust on the people of the South. It is a great achievement. But, however high the dignitary may be and however high the position may be, the mere giving of an assurance like this would not do because the succeeding Governments may not honour this assurance. Therefore, the Tamil Nadu Government, in co-operation with the other State Governments in the South, should take steps to see that it is enshrined in the Constitution that English also will continue to be a link language. What the North Indians are doing to kill the English language, our Tamil Nadu Government sometimes do in an indirect way and they try to discourage or eliminate the study of English in Tamil Nadu. Thus the students of Tamil Nadu who know neither English nor Hindi do not have any link language and when they go out of Tamil Nadu they are not able to converse with the people in those parts of India. I want to know whether it is the idea of the Tamil Nadu Government that Tamil will become one of the link languages in the country. Tamil is one of the national languages. Do the Government think that they can protect the interests of Tamilians by discouraging and eliminating the study of English ? I do not think so. We are proud to be Tamilians and we have no objection to Tamil being developed in all directions. At the same time, English language should be learnt, because it is one of the link languages. Every student in Tamil Nadu should learn English so that he may be able to converse with the people in the North. Unless we have a link language like English, the concept of India being one country will be lost. Therefore, I want the Government of Tamil Nadu to bestow their attention on this aspect.

There is another thing in the Governor's Address. It is said that some people are keeping their lands fallow and some people are growing casuarina and other products. Affluent farmers are referred to in the Address. I think they are also citizens of this country and are doing a lot for the welfare of the country. Only when they own large extent of land, they will be able to use tractors and such like things and do cultivation on a large scale.



They cannot have tractors, etc., if they own small bits of land. They will be able to make use of the land effectively only in the case of bigger plots of land. One other thing. We cannot force any farmer to raise a particular crop in his land. If he raises casuarina or chillies, he may get Rs. 1,500 per acre, where as he can get only about Rs. 400 per acre by production of paddy. We cannot force him to grow paddy and incur a loss. On the other hand, the Government must come forward to give him all facilities to grow paddy and ensure a better price for paddy grown by him. If such things are done, naturally they will grow more foodgrains. Bringing a law banning the growth of casuarina or cash crops is not a proper policy because it will be detrimental to the interests of the people in Tamil Nadu as well as the whole country.

(பிற்பகல் 12-40)

Apart from agriculture, the Government say that they are going to tap the resources of the ocean. It is a very good idea. As a matter of fact, we have not tapped even one per cent of the resources of the sea so far. People from Japan, America and other countries are sending their trawlers and fishing in our warm waters because the prawns of the warm waters like the Arabian Sea, the Bay of Bengal and the Indian Ocean are much more tasty. They come here and fish in our waters—not in troubled waters but in our waters. Why cannot we take some steps to increase the number of trawlers so that we may benefit from this bounty bestowed on us ? We should not only increase the number of trawlers but also give loans to people who need money so that they might buy trawlers and engage in fishing. Besides prawns, there are many other products of the ocean. It is said that there are several ores in the sea-bed and that several minerals are lying in the bottom of the ocean. The only difficulty is the great depth of the sea. But, if some device is conceived by which man could go to such depths, several minerals could be brought out. For instance, we now get tin only from Malaysia. But, it is said that tin and other minerals like lead, manganese and iron are available in the sea-bed. It is said that even gold is available in some places. Therefore, I request the Government to bestow some attention on this.

I congratulate the Government on getting their share for the Sixth Plan expenditure. As a matter of fact, our Party's policy is not only to congratulate the Government on whatever good

things they do but also to point out whatever better things have to be done, instead of simply scolding them using a language which is not to be used in a democracy. I request the Government to bestow some attention on the things which I suggest. They should take what I say as constructive criticism and they should not consider that I am finding fault with them. The elections to the local bodies are being postponed and some reason or other is being given every now and then. Now, it is said that the Census work has to be taken up. After the Census is over, they may mention some other reason. So, far some reason or other, they try to put off the elections to local bodies. This is not a very healthy tradition. People should be aware of and entrusted with the governance of the country. At the grass-roots level, at the level of Panchayats and Municipalities, people should be allowed to participate in the govemance of the country. Otherwise, democracy cannot develop. There will only be goverance of officialdom and it will not be in the interest of the people. Therefore, I request the Government earnestly to implement what they have said. So far, they have given several assurances and they have gone back on them and have asked for extensions for six months or one year with the result that these elections have not been held for the past nine years. They should seriously think over this and see, at least now, that these elections are held as early as possible, as has been mentioned in the Governor's Address.

Sir, many teachers' representatives have spoken very lengthily on the Annamalai University affairs and I want to make just a passing remark. Of course, the Government of Tamil Nadu will release the teachers, consult them and see that the University starts functioning as early as possib'e. At the same time, I may make a request to the teachers. Whereas representatives of other vocations are not represented here, the teachers are represented in this House and they are given a special privilege here. So, they should also not degrade themselves to the level of any labourer or other person who agitates. They should be a little more sober and they should lead the people. They should teach the people and the students how to behave. If they themselves go on strike and agitations, I do not think any University can function and education in our country will go to dogs. If they have got any grievances, they may represent them in a proper way. They need not go and take to the agitational path.





திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இங்கே ஆசிரியர்கள் பற்றிச் சொல்லுகிறார்கள். ஒரு பல்கலைக் கழகத்தைத் தவறாக நிர்வகிக்கக்கூடிய முறைகள் அங்கே இருக்கின்றன. அது சரிதானா? அதைப் பற்றி உறுப்பினர் அவர்களின் கருத்து என்ன? பல்கலைக் கழகம் தவறு செய்தால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள்?

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு வருவதற்கு என்ற கருத்தில் பொதுவான கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

THIRU J. M. MIAKHAN: I do not say that the Universities or the people who are running the Universities are always on the right. They may be wrong. But, this is not the way for teachers to behave. At least the teachers should behave themselves. They can represent their grievances in a much more civilised way. If they do like this, what will the students learn from their teachers? If they also go on strike, make agitations, break windows and burn properties, what will the students iearn from their teachers? It is the teachers who have to shape the minds of the young people. So, they should behave much better. If they behave like this, from whom will the students learn manners and from whom will they get education? Then, what will be the lot of the students? hey will become rowdies, tthey will not bestow attention on eir studies and the educational system will go to dogs. Therefore, request the teaching community to be more sober and to act a more civilised way.

As regards water supply to Madras City, the Government of amil Nadu have mentioned a scheme to bring water from the attalai Regulator. If every Government think of a different cheme and do not try to implement the scheme which has been ormulated by the previous regime, the present scheme of bringing vater from Kattalai Regulator, if not completed within the regime of the present Government, may be given up by a future Government. They will try to innovate some other scheme and give up the previous Government's scheme. In this process, the taxpayer's money is wasted. On the other hand, the schemes taken up should be examined and if they could be implemented, they should not be given up but should be implemented. May I, therefore, request the Government to complete the scheme of

[Thiru J. M. Miakhan] [1981 ஜனவரி 30

bringing water from Kattalai Regulator before the end of their term? Of course, it will cost a huge sum of about Rs. 500 crores. If it is not completed, it may have to share the same fate as the schemes of the previous Governments.

As regards the bringing of water from the west-flowing rivers of Kerala. I think it is a good idea. In the matter of negotations, I would request the Government to associate with them the engineers and technical people who have been in the job, even if they had already retired and if such negotiations are held between technicians and technical people of the respective States, it will not become a political issue or a political problem but will remain a technical issue and will be solved easily by the experts. I request the Tamil Nadu Government to take such experts into confidence, even if they have already retired and I think this will help us to come to an amicable settlement.

As regards law and order situation, it is mentioned in the Governor's Address that it is now better. I would like to say that people belonging to minority communities like Muslims and Christians are not adequately represented in the police force. A representative of the minority community should find a place in the selection or recruitment panel. If the minority communities are well represented in the police force, it will help them to tackle communal clashes. If the entire police force, including the C.B.I., etc. is taken into account, not even one per cent of the personnel belongs to Muslim community. Anyhow, they do not get proper representation in proportion to their population or the availability of persons.

I think I have done. One thing I have forgotten to mention while speaking about the Tamil Conference. In the Conference, several people have been honoured and have been respected in various ways. But, there are very many Tamil poets belonging to Muslim community, like Peer Mohammed, Umaru Pulvar and there are more than 100 such poets not only in the past but in the present time also and unfortunately, they have not been honoured. We would have been happy, if they had also been honoured in the Tamil Conference.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: துணைத் தலைவரவர்களே, முஸ்லிம் [illegible] கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்களுக்கு மரியாதையோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது நல்ல வேண்டுகோள்களை [illegible]



981 ஜனவரி 30] [திரு. இராம. வீரப்பன்]

[illegible]சாங்கத்தோடு கலந்து செய்வதற்கு, உலகத் தமிழ் மாநாட்டில் அவர்கள் [illegible]திநிதிகளும் கலந்துகொள்ள வேண்டுமென்று அழைத்தபோது, அவர்கள் [illegible]ந்துகொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாண்புமிகு [illegible]ப்பினர் திரு. மியாகான் அவர்களுக்கு இது தெரியுமோ, தெரியாதோ, [illegible]தையும் அவருடைய தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: I think that the Government are not aware of the work that Tamil Muslims have done for the cause of Tamil. There are more than 500 epics in Tamil.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் முடிப்பதற்கு முன்பாக ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். இஸ்லாமியப் பெருமக்கள், தமிழ் பெரும் புலவர்களுக்கு மரியாதை செய்யவில்லை என்றும் தெரிவித்தார்கள். அங்கே சிலைகளை உருவாக்கி எழுப்புகிறபோது, சிலை எழுப்பக்கூடாது என்கின்ற நியதி இருக்கின்ற காரணத்தினாலே, உமறுப் புலவர் அவர்களுக்கு அவர் பிறந்து வாழ்ந்த எட்டையபுரத்திலே நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்று உலகத் தமிழ் மகாநாட்டிலேயே அரசாங்கம் முன்னாலேயே எடுத்திருக்கின்ற முடிவைத் தெரிவித்தது. அது போலவே சதாவதானம் செய்குத் தம்பி புலவர் அவர்களுக்கு அவர் வாழ்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் நினைவுச் சின்னம் அமைக்கின்ற முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU J. M. MIAKHAN: I thank the Government of Tamil Nadu for this information. I hope that the Government of Tamil Nadu will bestow still more attention on the other communities also whose mother-tongue happens to be Tamil. We are also Tamilians and we have also contributed in a large measure to the. . . .

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இஸ்லாமியப் புலவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டை அரசாங்கம் நினைவு கூராமல் இருந்தால், இந்த அறிவிப்புகளைச் செய்திருக்காது. மேலும் மதுரைப் பல்கலைக் கழகத்திலே இதற்கென்று ஆராய்ச்சி 'சேர்' உருவாக்கப்பட்டிருக்கிறதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: Thank you.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் தகவலுக்காகச் சொல்லுகிறேன். அவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும், வெளி உலகமும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். மதுரையிலே நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிலே 'புலவர் இருக்கை' என்ற ஒன்றை ஏற்பாடு செய்து, இன்றைக்குப் புலவர் குழுவிலே இருக்கக்கூடிய புலவர் பெருமக்களையெல்லாம் அதிலே அமரச் செய்தோம். 49 புலவர்கள் அமர்ந்தார்கள். அதில் இரண்டு புலவர்கள்—பேராசிரியர் நயினார் முகமதும், உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த நயினார் முகமதும் கலந்துகொண்டு, அரசின் சார்பிலே கண்ணியப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அதைப்போல 'வக்ப்' வாரியத்தின் சார்பிலே இஸ்லாமியத் தமிழிலக்கியக் கருத்தரங்கு ஒன்றை ஒரு நாள் நடத்தி, அதிலே அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த பெரும் கவிஞர் சாரண பாஸ்கரன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. அவர் எழுதிய யூசுப் சுலேகா என்ற நூல் ஆயிரம் பிரதிகள் வாங்கி, உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு இலக்கியப் பரிசாக, அன்பளிப்பாக வழங்கப் பட்டது. அதைப்போல 'நெஞ்சில் நிறைந்த நபி மணிகள்' என்ற சிறந்த காவியத்தைப் படைத்த சிராஜ் பாகவி அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. அதற்கடுத்தாற்போல், இரண்டு இஸ்லாமியப் பெருமக்கள் கருத்தரங்கில் பங்கு பெற்றார்கள். ஒருவர் திரு. சுலைமான், ஐ.ஏ.எஸ். அவர்கள். மற்றொருவர் தலைமை நீதிபதி அவர்கள். தலைமை நீதிபதி மலரை வெளியிட்டிருக்கிறார்கள். எவ்வளவு சிறப்பு செய்ய வேண்டுமோ, அவ்வளவும் செய்திருக்கிறோம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் சொன்னது போன்று, உறுப்பினர் அவர்கள் அங்கே வந்து மாநாட்டில் கலந்துகொண்டிருந்தால், இன்னும்கூட அரசின் செயல்களைச் சிலாகித்துப் பாராட்டியிருக்க முடியுமே என்ற எண்ணம் எனக்கிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. எம். மியாகான் : இந்தத் தகவல்களைத் தந்தமைக்கு அரசுக்கு மிக்க நன்றி.

திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைமீதான விவாதம் கடந்த 1 வார காலமாக இந்த அவையிலே நடைபெற்று, பல்வேறு கருத்துக்கள் உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு, தெளிவான விளக்கங்களை இந்த மன்றம் ஓரளவிற்குப் பெற்றிருக்கிறது. ஏற்கெனவே ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப் பட்டுள்ள நல்ல கருத்துக்கள் அனைத்தைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் [illegible] பேசியிருக்கிறார்கள் என்பதை மறக்க முடியாது. ஆளுநர் அவர்களின்





உரையில் எந்த [illegible] நல்ல அம்சங்கள் [illegible] என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] அவர்கள், ஆளுநர் உரைக்கான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியபோது, எடுத்துரைத் தார்கள்.

ஆளுநர் அவர்கள் உரையிலே, முதலிலே, உலகத் தமிழ் மாநாடு பற்றிப் பாராட்டியிருக்கும் வரிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்பு கிறேன். சிலர் அதைப்பற்றித் தவறாகப் புரிந்துகொண்டிருக்கக்கூடும். ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ள உலகத் தமிழ் மாநாட்டின் பெருமையை, அதில் கலந்துகொண்டு உலகத் தமிழர்கள் அத்தனை பேரும் வாயார, மன தாரப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது. தமிழ் நாட்டிலே, உலகத் தமிழ் மாநாட்டை நல்ல முறையிலே நடத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தலைசிறந்த மாநாட்டை நாம் எட் போது காணப் பேறுபெற்றோமென்று என்னைப் போன்ற முதியவர்கள் என்று வருண்டு. என்னுடைய இளமைக் காலத்தில் தமிழுக்காகப் பல போராட்ட களில் ஈடுபட்டு, சிறை சென்றவன். தந்தை பெரியார், அறிஞர் அண்ண உட்பட பல தாய்மார்கள், பட்டதாரிகள், தமிழாசிரியர்கள் தமிழைக் கா பதற்காகச் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தியாகப் ப மரையால் வளர்க்கப்பட்ட தமிழ்நாடு, தமிழ் உணர்வை உலக நாடுகளுக் உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறது என்றால் என்னை மாதிரி வயது முதிர்ந்தவர்கள் இந்த மாதிரிக் காட்சியைக் காண சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்களென்று எண்ணி, அதைப் பாராட்டுகிறேன் ஏனென்றால் இந்த அவையிலே வயதிலே முதிர்ந்தவர்கள் என்னைவிட யாரு இருக்க மாட்டார்களென்று நினைக்கிறேன். நான் 72 வயதைத் தாண்டியவன் என்னைவிட மூத்தவர்கள் யாராவது இருந்தால் . . . .

ஓர் உறுப்பினர் : மேலவைத் தலைவரவர்கள் இருக்கிறார்கள்.

திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து : அவைத் தலைவரவர்கள் இருக்கிறார்க[ள்]. [illegible] இளைய தலைமுறையினரைப் பார்க்கவும், இ வயது முதிர்ந்த காலத்தில், இளைய தலைமுறையினரோடு பழகி, பேசுவதற்கும் வாய்ப் மாமன்றத்தில் இளம் தலைமுறையினரோடு பழகி, பேசுவதற்கும் வாய்ப் பெற்றிருக்கிறேன். உள்ளபடியே தமிழ் மக்களுக்காக அந்தக் காலத்தி செய்த போராட்டம் தரும் பலனை நேரடியாக, கண்கூடாகக் காண்கிறே[ன்] என்பதற்காக நான் பெருமைப்படுகிறேன். 1937-லே, இரட்டை ஆட் [illegible] மந்திரிசபை அமைக்கப்பட்டது [illegible]. அப்போ முறையிலே, ஆச்சாரியார் அவர்கள் [illegible]

தமிழுக்குப் பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஏனென்றால், அன்று தமிழோடு இந்தியையும் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்போது தமிழ் நாட்டில் இந்தி தேவையில்லை என்று தெரிவித்தோம். அதற்காகத் தமிழ் நாட்டில் பல அமைப்புகளை உண்டாக்கி, தமிழர் பாதுகாப்புப் படையை ஏற்படுத்தினோம். முதலில் தந்தை பெரியார் அவர்களும், அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களும் இருந்து அந்தப் போராட்டங்களில் முக்கிய பங்கு கொண்டார்கள். ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பேரவையிலே, 1937-லே சர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார்கள். இந்தி கட்டாயம் படிக்க வேண்டுமென்று சொன்னபோது, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 100 க்கு 97 பேர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், இன்னும் கை நாட்டுப் போடுகிறவர்களாக இருக்கிறார்கள், இந்த நேரத்தில் இது தேவையில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் அவர்கள் சொன்னார்கள். அப்போது எல்லோரும் திறமையுடன் படிக்க வேண்டும், சுதந்திரம் வரப் போகிறது, வரப்போகிறது, சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று விளக்கம் கொடுக்கப்பட்டது. எனினும் அங்கங்கே கிளர்ச்சிகள், மாநாடுகள் நடந்தது கண்டு, பல ஆயிரக்கணக்கான தொண்டர்களைச் சிறைக்கு அனுப்ப வேண்டியிருந்தது. தாய்மார்கள் குழந்தைகளோடு சிறைக்குப் போனார்கள். அந்த அளவிற்கு உணர்வு ஏற்பட்டது. இன்றைக்கு உலகத் தமிழ் மாநாட்டைப் பார்த்தபோது, தமிழர்களின் உழைப்பு, தியாகம் வீண் போகவில்லை என்பதை நேரடியாக நான் காண்கிறேன். தமிழர்களின் பாதுகாப்பிற்காக நல்ல அறிஞர்களெல்லாம் சிறை சென்றிருக்கிறார்கள். தந்தை பெரியார் மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா மட்டுமல்ல, கோவில்பட்டி வள்ளிமுத்து மட்டுமல்ல, மதுரை முத்து மட்டுமல்ல, எண்ணற்ற தொண்டர்கள், தாய்மார்கள் சிறை சென்றிருக்கிறார்கள். தமிழைக் காக்க வேண்டுமென்ற ஆர்வம், உணர்ச்சி ஏற்பட்டதால்தான் சிறை சென்றார்கள். 1938-லே திரு. பன்னீர்செல்வம் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் ஒன்றைக் கேட்டார்கள். தள்ளாத வயதில் பெரியோர்களையும், தாய்மார்களையும் சிறை பிடிப்பதுதான் ஜனநாயகமா என்று கேட்டபோது, ஆச்சாரியார் அவர்கள் மிகத் தெளிவாகப் பதில் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-00)

சிறையிலுக்குத் தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளோடு போகிறார்கள் என்றால் எதற்காகப் போகிறார்கள் என்றால் நல்ல உணவு கொடுக்கிறார்கள். நல்ல பால் கொடுக்கிறார்கள், அதனால்தான் அவர்கள் சிறைச்சாலையைப்





போகிறார்கள் என்று அப்போது அவர்கள் கூறினார்கள். அப்போது திரு. பன்னீர்செல்வம் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நான் இங்கே கூற வேண்டிய அவசியம் இல்லையென்றாலும் கூட உங்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். நல்ல உணவுக்காகவும், நல்ல பாலுக்காகவும் தங்களுடைய குழந்தைகளோடு தாய்மார்கள் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் இல்லை என்பதை ஆச்சாரியார் அறிய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். மிகத் தெளிவாக இதே மாமன்றத்திலே விளக்கமாக அன்றைக்குக் கூறினார்கள். அன்றைபதினம் தமிழர்களுடைய உணர்வுகளை அவர்கள் தட்டி எழுப்பினார்கள். அதே உணர்வு இன்றைக்கு நடைபெற்ற இந்த உலகத் தமிழ் மாநாட்டிலும் தட்டி எழுப்பப்பட்டிருக்கிறது கண்டு நான் தமிழ் நாட்டு மக்களையும், தமிழ் நாட்டையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் இன்னொன்றையும் செய்திருக்கிறார்கள். தங்கப் பதக்கம் கொடுத்திருக்கிறார்கள்; அன்றைக்கு இருந்த அதே உணர்வை இன்றைக்கு தங்கப் பதக்கத்தை அளித்ததன் மூலம் உண்டாக்கியிருக்கிறார்கள். எங்களைப் போன்ற ஊழியர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட நல்ல உணர்வை உண்டாக்கி புரட்சித் தலைவர் அவர்கள் வழிகாட்டியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், உலகத் தமிழ் மாநாட்டுக்கு உலகத்திலுள்ள தமிழ் அறிஞர்களை எல்லாம் அழைத்து, அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டு, மாநாட்டினை வெற்றிகரமாக நடத்திக் காட்டி, தமிழ் உணர்வை அவர்களுக்கெல்லாம் தந்திருக்கிறார்கள். அதை நம்முடைய முன்னாள் முதல்வரும், தியாகச் செம்மலும், மதிப்புக்குரிய பாரம்பரியம் உள்ளவருமான திரு. பக்தவத்சலம் அவர்கள் மிகத் தெளிவாகப் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள். எந்தவிதமான அரசியல் கலப்பும் இல்லாமல் நேர்மையான முறையில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றிருக்கிறது, வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் சொன்னவர் சாதாரணமானவரல்ல. அரசியலை மிகவும் நன்றாகத் தெரிந்தவர், உலகத் தலைவர்களில் ஒருவராக இருக்கின்ற அவர் கூறியிருக்கிறார். தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய மாநாடு உலகத்துக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் வகையில் அது வெற்றி பெற்றிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. உலகத் தமிழ் மாநாடு 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தொடங்கியது. ஜனவரி 10 ஆம் தேதி வெற்றி விழா நடைபெறப் போகிறது. இந்நிலையில் டிசம்பர் 31 ஆம் தேதி விவசாயிகள் போராட்டம் என்கிற பெயரில் போராட்டம் நடைபெறுகிறது. உலகத்திலுள்ள தமிழர்கள் எல்லாம் கூடியிருக்கிறார்கள். இங்கே உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது. அதே நேரத்தில் விவசாயிகள் போராட்டம்

என்றால், இந்த நாட்டுக்கே ஒரு அவமானம் உண்டாக்க வேண்டுமென்று
தாண்டி விட்டு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இதை உண்மையான
விவசாயிகள் போராட்டம் என்று எடுத்துக்கொள்ள முடியுமா? உண்மை
யிலேயே நல்ல எண்ணம் உள்ளவர்களாக இருந்தால், என்ன செய்வார்கள்?
அரசிடம் கோரிக்கைகளை வைப்பார்கள். அரசாங்கம் அல்லது தலைவர்கள்
"உலகத் தமிழ் மாநாடு முடிவடைந்த பிறகு உங்களுடைய கோரிக்கையை
வையுங்கள்" என்று எத்தனையோ சமாதானம் கூறினார்கள். ஆனால் அவர்கள்
கேட்கவில்லை. உண்மையிலேயே போராட்ட வீரர்கள் உள்ள உணர்ச்சியோடு
போராடவில்லை. அவர்களைத் தாண்டி விடுவதற்குக் காரணமாக இருந்த
நண்பர்கள் எந்த எண்ணத்தில் அதைச் செய்தார்கள் என்பதையும் நான்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறை அதிகாரிகள் எல்லாம்
உலகத் தமிழ் மாநாட்டிலே இருப்பார்கள், அந்த நேரத்திலே போராட்டம்
நடத்தினால், காவல் துறையினர் இருக்க மாட்டார்கள், ஒன்றிரண்டு பேர்கள்
தான் இருப்பார்கள், ஆகவே கொள்ளையடிக்க வசதியாகப் போய்விட்டது
என்கிற முறையில் அவர்கள் போராட்டத்தைத் தூண்டி விட்டதாக பொது
மக்கள் பேசுகிறார்கள். ஆகவே போராட்டம் சரியான நேரத்தில் நடைபெற
வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சரியான நேரத்தில் புரட்சித்
தலைவரிடத்தில் நியாயமான கோரிக்கைகளை வைத்தால், எந்தக் காரியத்தை
யும் அவரிடம் சாதிக்கலாம். 5 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கி
றோம். ஓராண்டுக்குள் முடிந்ததைச் செய்கிறோம். புரட்சித் தலைவர் அவர்
கள் இரக்ககுணம் உள்ளவர்கள். அவரிடம் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டு
மென்று கெஞ்சிக் கேட்டால் செய்யக்கூடியவர்கள். அதற்கேற்ப மந்திய
அரசிடத்திலிருந்து அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைப் பெற்றுத் தர
முடிந்தது. அந்தவகையில் புரட்சித் தலைவர் அவர்களால் எதையும் வெற்றி
கரமாக நிறைவேற்ற முடியும். நாங்கள் எற்கெனவே எதிர்க் கட்சி தேவை
என்று கூறியிருக்கிறோம். ஆனால் எதிரிக் கட்சிகள் இருக்கக் கூடாது என்று
சொல்கிறோம். எதிர்க் கட்சி பலமாக நாட்டிலே இருப்பது நம்முடைய பாது
காப்புக்குத்தான். ஆனால் எதிரிக் கட்சிகள் இருக்கக்கூடாது. அதுபோல்
எதிரி வீடுகள் நம்முடைய பக்கத்து வீட்டில் இருந்தால், கண்டிப்பாக நடக்கு
அபாயம் தான். இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் நாட்டிலே
அரசியல் நடக்கிறது. இன்றைய கால நிலையைப் பார்க்கும்போது,
எங்களுக்கே தெரியாமல் மோதலை உண்டாக்கக் கூடிய நிலை, உணர்வுகளை
உண்டாக்கக் கூடிய நிலை, வளரக் கூடிய நிலை இருப்பதைப் பார்க்கிறோம்.
இவர்கள் எல்லாம் எதிரிகளாக வருவார்கள் என்று நாங்கள் ஒருபோதும்





நினைக்கவில்லை. நாங்களெல்லாம் முதல் மாநாட்டின்போது பொறுப்பான
இடத்தில் கலைஞரைப் போட்டோம். அப்போதெல்லாம் அவர்களை எதிரி
களாக நினைத்துப் போடவில்லை. இந்த நாட்டுக்கு எதிரிகளாக அன்றைய
தினம் இருந்தவர்களை நாங்கள் போடவில்லை. அவர்களை எல்லாம்
எங்களுடைய தம்பிகளாக, பிள்ளைகளாகத் தான் கருதினோம். நம்முடைய
தம்பிகளாக, நம்முடைய பிள்ளைகளாகக் கருதித்தான் பழகினோமே தவிர
எதிரிகளாகக் கருதிப் பழகவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் நம்முடைய தம்பிகள், நம்முடைய
பிள்ளைகள் என்று குறிப்பிட்டார். அவர் இந்த அவையில் இருக்கிற எந்தச்
சாரரை அப்படிச் சொல்கிறார்? மற்றவர்கள் அவருக்குச் சொந்தமில்லை
யென்று சொல்கிறாரா, மற்றவர்கள் வேண்டாமென்று சொல்கிறாரா?

**திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து :** என்னுடைய தம்பிகளைத் தான் நான்
சொல்கிறேன் என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாகப் புரிந்து கொள்ள முடி
யும். நானே கூட பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு மேடை
அமைத்துப் பேச வைத்து கட்சியை வளர்த்த தம்பிகளைச் சொல்கிறோமே
யல்லாமல், தோழர் இராமமூர்த்தியை அல்ல.

**திரு. க. இராமமூர்த்தி :** அப்படியானால் பிள்ளைகளையும், தம்பிகளை
யும் சரியாக வளர்க்கவில்லை என்று உறுப்பினர் நினைக்கிறாரா? இல்லை
சரியாக வளர்ந்து விட்டார்கள் என்பதால் வெளியேறி விட்டார்கள் என்று
நினைக்கிறாரா?

**திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து :** சாதாரணமாக உங்களுக்கே மிக நன்றாகத்
தெரியும். குடும்பம் அதிகமாகி விட்டால், குழந்தைகள் அதிகமாகிவிட்டால்,
வெளியே செல்கிறவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள்
புரிந்துகொள்ள வேண்டும். (கரவொலி) நான் பேசினேன் என்றால்,
தொடர்ந்து பேசிக்கொண்டே இருப்பேன். பொதுவாக இந்த அவையிலே
உறுப்பினர்கள் சொல்கின்ற நல்ல கருத்துக்களை நான் கவனமாகக் கேட்டுக்
கொண்டு ரசித்துக்கொண்டு நடப்பவன். தள்ளாத வயதிலே இருக்கிறவன் நான்.
இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுடைய நல்ல கருத்துக்களை, சாதுரி
யங்களை, மக்களுக்குச் செய்ய வேண்டிய சாதனைகளை நான் இந்த மன்றத்
திலே அமர்ந்திருந்து பார்ப்பதற்குத்தான் என்னைப் புரட்சித் தலைவர்
அவர்கள் இங்கே அமர்த்தியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொண்டு
மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து அமை
கிறேன்.

**திரு. பி. முனுசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கான வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரையில் நடைபெற்ற 5 வது உலகத் தமிழ் மாநாட்டினைப்பற்றி இங்கே பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் மூலமாக நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மிக நன்றாகத் திட்டமிடப்பட்டு, சீரோடும், சிறப்போடும், கட்சி சார்பற்ற முறையில் நடைபெற்றது. அதற்கான பெருமை முழுக்க முழுக்க தமிழக முதல்வர் அவர்களையே சாரும்.

> " நன்மையும் தீமையும் நாடி-நலம்புரிந்த
> தன்மையான் ஆளப் படும் "

என்கிற குறள் வழி நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி புரிகிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டு மொத்தச் செலவு 12 கோடி ரூபாய் வரை இருக்கும் என்று சில உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் சில உறுப்பினர்கள் 15 கோடி ரூபாய்வரை ஆகியிருக்கும் என்று சொல்லுகிறார்கள். நான் இந்த மாநாட்டிலே கலந்து கொண்டவன் என்கிற முறையில் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக அங்கே வாழ்ந்து கொண்டிருந்த குடிசை வாழ் மக்களுக்குப் பல குறைகள், பல ஆண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்தன. அவைகள் எல்லாம் இந்த உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றதன் மூலமாகத் தீர்க்கப்பட்டுவிட்டன என்பதுதான் என்னைப் பொறுத்தவரையில் நான் தெரிந்துகொண்ட ஒன்று.

(பிற்பகல் 1-10)

ஏறக்குறைய 12 முதல் 15 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தத் தொகையில் குறைந்தது 5 கோடி ரூபாய் வரை வாழ் மக்களுக்காகச் சாலை வசதிகள், கழிப்பிடங்கள், சுகாதார வசதிகள் போன்ற நல்லபல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அங்கே செய்திருக்கிற நல்ல காரியங்களை வரவேற்காமல், பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இந்த அரசு மக்களுக்காக அதிலும் குறிப்பாக குடிசைவாழ் மக்களுக்காகச் செய்து தந்திருக்கின்ற நல்ல காரியங்களை மதுரை மாநகராட்சியோ அல்லது எந்த அரசு இலாக்காவோ தனிப்பட்ட முறையிலே நிச்சயமாகச் செய்து தந்திருக்க





முடியாது என்பது என்னுடைய கருத்து. மதுரைவாழ் மக்கள் கூட அந்த மாநாட்டைப் பாராட்டிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான முழுப் பலனையும் இந்த மாநாட்டின் மூலமாக அவர்கள் பெற்றிருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். ஏன்! தமிழகமே இதைப் பாராட்டியிருக்கிறது. தமிழ் அறிஞர்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆகையினால் நானும் இதை மனமாரப் பாராட்டுகிறேன். மாநாட்டுக்குச் சிறப்பு விருந்தினராக இந்தியாவின் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்து கலந்துகொண்டு தமிழ் நாட்டின் மீது ஒருபோதும் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற விளக்கத்தை, உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். அதற்கு, இந்தியாவின் தலைமையமைச்சர் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்துவோமாக.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு தமிழ் நாட்டின் திட்ட அளவுக்கு ஏறக்குறைய 3,150 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கிய ரூபாய் 1,122 கோடியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது கிட்டத்தட்ட மூன்று மடங்காகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த மொத்தத் தொகையில், நான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அவர்களின் நலன்களுக்காக இந்த அரசு 1 சதவீதமாவது ஒதுக்க வேண்டும். 1 சதவீதமாவது ஒதுக்கி அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். 3,150 கோடி ரூபாயில் 1 சதவீதம் என்று சொன்னால், ஏறக்குறைய 30 கோடி ரூபாய் வரையில் வருகிறது. அரிசனங்களுக்காகவும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் இந்தப் பணத்தை ஒதுக்கி நல்ல பல காரியங்களை அவர்களுக்காகச் செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றியமைக்கப்பட்ட நகலில் மத்திய அரசு சில குறைபாடுகளைக் குறிப்பிட்டிருப்பதை நான் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொத்த ஜனத்தொகையில் 3/5 பங்குக்குமேல் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களில் அதிகமான எண்ணிக்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் தமிழ் நாட்டில் தான் இருக்கிறார்கள் என்று அந்தக் குறிப்பு சுட்டிக்காட்டுகிறது. வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதில் தமிழக அரசு

[திரு. பி. முனுசாமி] [1981 ஜனவரி 2

முன்னேற்றம் காணாதது, மிகவும் வருந்தத்தக்கது என்று அந்த அறிக்கையிலே
மத்திய அரசு குறிப்பிட்டிருக்கிறது. வேலையற்றோரின் சதவீதம் 8.5 ஆ
இருந்த இந்தத் தமிழ் நாட்டில் இன்றைக்கு அவர்களின் எண்ணிக்கை 16.
சதவீதமாக உயர்ந்திருப்பதை நான் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்
வருகிறேன். ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம் தமிழக அரசு கவனித்து
வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களுக்கு முதலிடம் அளிக்க வேண்டு
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்கள் தான் நமது நாட்டின்
உண்மையான உயிர்நாடி என்று காந்தியடிகள் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறா
கள். மின்சாரக் கட்டணங்கள், கூட்டுறவுக் கடன், உள்ளாட்சி மன்ற வரிகள்
ஆகியவற்றைச் செலுத்த வேண்டாம் என்று விவசாயச் சங்கத்தின
போராட்டம் நடத்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு
விவசாயச் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி எளிய தவணை முறை
யில், அவர்களை பாக்கியை 1 ப்ளஸ் 1 என்ற ஏற்பாட்டின்படி கட்டலாம்
என்று அரசு ஏற்றுக்கொண்ட நிலையை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்
ஒருசில விவசாயச் சங்கங்கள் இந்தக் கருத்தையும் ஏற்றுக்கொள்ளாம
போராட்டங்களை நடத்தினார்கள். அந்தப் போராட்டங்களையும் சமாளிக்க
தக்க சமயத்தில் அரசு சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்ததை இந்த
நேரத்தில் நான் பாராட்டுகிறேன்.

மேற்கே பாயும் ஆறுகளின் உபரி நீரை தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்து
உபயோகப்படுத்துவதற்கு கேரள அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக கடந்த ஆண்டில்
அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்த ஆண்டும் தொடர்ந்து எடுத்து
தமிழ் நாட்டுக்கு, குறிப்பாக திருநெல்வேலி இராமநாதபுரம், மதுரை போன்ற
மாவட்டங்களுக்கு நன்மையயக்கும் முறையில் அந்த உபரி நீரைப் பயன்படுத்
தும் வகையில் இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். 376 வளர்ச்சி வட்டாரங்களில் 69 வளர்ச்சி வட்டாரங்
களில் ரூபாய் 49 கோடி செலவில் தன்னிறைவுத் திட்டம் செயலில் இருப்பதாக
அரசு குறிப்பிட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை முனைப்புடன் செயல்
படுத்தக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசினால் கொண்டுவரப்பட்டிருக்
கின்ற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட
காலத்தில் மத்திய அரசு மாநில அரசுக்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபாய்
5 லட்சம் வரையில் ஒதுக்கியுள்ளதாக மத்திய மதிப்பீடு கூறுகிறது. அதையும்
சேர்த்து நம்முடைய திட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று தமிழக
அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஜனவரி 29] [திரு. பி. முனுசாமி]

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கோயம்புத்தூர், திருச்சி,
காரைக்குடி போன்ற இடங்களில் புதிதாகப் பல்கலைக் கழகங்கள் தொடங்கப்
படவிருப்பதை, அதற்காக இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துவருவதை
நான் மிகவும் பாராட்டுகிறேன். பச்சையப்பன் அறக்கட்டளைகளை இரண்
டாண்டு காலத்துக்கு அரசு எடுத்துக்கொண்டிருப்பதை நான் மிகவும் பாராட்டி
வரவேற்கிறேன். பச்சையப்பன் அறக்கட்டளைக்குச் சொந்தமான பல சொத்
துக்கள், வீடுகள், நிலங்கள் பினாமி சொத்துக்களாக, நிலங்களாக, வீடுகளாக
மாற்றப்பட்டிருப்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்பு
கிறேன். அதற்கென்று நியமித்திருக்கின்ற கமிட்டியை வைத்து இந்த இரண்டு
ஆண்டுகளுக்குள்ளாக இவைகளைக் கவனித்து ஒழுங்குபடுத்தி வருங்காலத்தில்
அந்த அறக்கட்டளை நல்ல முறையில் செயல்படுவதற்கு தக்க நடவடிக்கை
களை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகருக்குக் குடிதண்ணீர்ப் பிரச்சினை மிகவும் முக்கியமான
பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் பல ஆண்டுக் காலமாக பல அரசியல்
கட்சிகள் வற்புறுத்தியும், அதற்கென்று பல திட்டங்கள் போடப்பட்டும் இன்று
வரை அதற்கு ஒரு பரிகாரம் காண முடியாமல் இருக்கிறது. இப்போது
போடப்பட்டிருக்கின்ற கட்டளைக் கால்வாய் திட்டத்தை விரைவுபடுத்தி
விரைவில் சென்னை நகர மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய
வேலைகளைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த அரசை
நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில், இந்த நகரின் சிக்கலான
பிரச்சினை 'போக்குவரத்துப்' பிரச்சினை. போக்குவரத்தை எடுத்துக்கொண்
டால், பல்லவன் போக்குவரத்துக் கழகம் மூலமாக அன்றாடம் பல விபத்துக்
கள் ஏற்படுகின்றன. லாரிகள், கனரக வண்டிகள் மூலமாகவும் பல விபத்துக்
கள் நடக்கின்றன. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை
யில், பஸ்களின் ஓடும் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, நடவடிக்கை
எடுக்க வேண்டும். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஓட்டுநர்
கள் பஸ்களை மிகவும் வேகமாக ஓட்டுகிறார்கள். ஆகவே, நிலையான
வேகத்தை நிர்ணயித்து அவர்களுக்கு ஒரு எச்சரிக்கை தரவேண்டும் என்று
அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு
கிறேன். இப்போது எங்கு பார்த்தாலும் கள்ளச் சாராயம் விற்பதை நாம்
பார்க்கலாம். குடிசைப் பகுதிகளைப் பார்த்தால் கூட, ஒரு பகுதிக்கு இரண்டு-

[திரு. பி. முனுசாமி] [1981 ஜனவரி 29

மூன்று கடைகள் என்று வைத்து சாதாரணமாக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி என்ன செய்யலாம் என்று அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தை இப்போது அரசு தேடியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், அவசர நிலை நேரத்தில் எப்படி ஒரு சட்டம் கொண்டு வந்து வேலை செய்தார்களோ அப்படி, இப்போதும் ஒரு அவசரச் சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள், இந்த அவசரச் சட்டத்தைப் பிரயோகப்படுத்தி, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை உள்ளே தள்ள வேண்டும் இல்லையென்றால், இந்தச் சட்டத்தை எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து, வேலை இல்லாதோர் பிரச்சினை நாட்டில் பெருகி வளர்ந்து வருகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மிகவும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிக்க இந்த அரசு உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறது என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இதை மிகவும் விரைவில் அமுல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு, அமைதி மிகவும் திருப்திகரமாக இருப்பதாக அரசு இந்த அறிக்கையின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், கடந்த 1980 ஆம் ஆண்டு சென்னை நகரில் மட்டும் பல பயங்கரமான சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. நகைக்காகவும், பொருளுக்காகவும் நடந்த கொலைகள் ஏராளம். கத்தியைக் காட்டி, மிரட்டி பணம் பறித்திருக்கிறார்கள். இரவு நேரத்தில் வீடுகளில் புகுந்து திருடுவது நிகழ்ந்திருக்கிறது. பகலில் வீடு புகுந்து திருடுவது நடந்திருக்கிறது. சைக்கிளில் திருட்டு நடந்திருக்கிறது. குழந்தைகளிடம் திருடுவது நடந்திருக்கிறது. ஜேப்படி அன்றாடம் நடைபெற்றிருக்கிறது. சங்கிலி அறுப்புகள், திறந்த வீட்டில் திருடுதல், மற்ற உடைமைகளைத் திருடுதல் ஆகியவை நடைபெற்றிருக்கின்றன. வடநாட்டுத் திருடர்கள் வேறு தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள். கார்கள் திருடப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையில் சட்டம், அமைதி, ஒழுங்கு நடவடிக்கை பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்றால், எனக்குப் புரியவில்லை. இதற்கெல்லாம் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இதிலெல்லாம் அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஜனவரி 29] [திரு. பி. முனுசாமி]

ஹரிஜன ஆதிவாசிகள் இலாக்கா என்பதை மாற்றி, ஆதிதிராவிடர் ஆதி
வாசிகள் இலாக்கா என்று மாற்றியமைக்க அரசு உத்தரவிட்டிருப்பதாகத்
தெரிகிறது. ஆதிதிராவிடர்கள் என்பவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில்
உள்ள ஒரு பிரிவினர், ஒரு துணைப் பிரிவினர். அதிலே வேறு பல ஜாதி
களும் இருக்கின்றன. அதாவது அருந்ததியர் என்று சொல்லப்படும் சக்கிலியர்,
மற்றும் பள்ளர் என்று சொல்லப்படும் தேவேந்திர குலத்தைச் சார்ந்தவர்கள்
எல்லாம் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்வார்களா என்று அரசு யோசிக்க
வேண்டும். எனவே பழைய பெயரை நீக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

சென்னையில் குடிசை மாற்றத் திட்டத்தின் மூலமாக பல வீடுகள் கட்டிக்
கொடுக்கப்படுகின்றன. அங்கெல்லாம் சரியான கழிப்பிட வசதிகள் இல்லாமல்
இருக்கின்றன. மிகுந்த துர்நாற்றம் இருக்கின்றது. இவைகளை அகற்றும்
திட்டம் எதுமில்லாமல் இருக்கிறது. எனவே இத்தகைய குறைகளைக் களைய
குடிசை மாற்று வாரியம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இனி கட்ட விருக்கும் குடிசைமாற்றுத் திட்ட வீடுகளைத் தரமான
மாகவும், காற்றோட்டம் மிக்கதாகவும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். மேலும் ஹரிஜன மக்களுக்குச் சிறு தொழில் செய்ய வட்டியில்லாமல்
கடன் கொடுப்பதற்கான திட்டத்தை விரைவுபடுத்தி மனுச் செய்து கொண்ட
வர்களுக்கு விரைவில் கடன் வசதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று
சொல்லி, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி தெ
வித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் இன்றை
நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-
மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-25)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

163. Notifications issued with G.O. Ms. No. 1736, Agriculture, dated the 1st September 1980 in regard to amendment to the Agriculture Department Notification No. II-1|148 of 1973, dated the 29th December 1972, published at page 27 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 24th January 1973 and amendment to the Agriculture Department Notification No. II (2)|AG|625|76, dated the 3rd February 1976, published at page 56 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 18th February 1976. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

164. Notification issued with G.O. Ms. No. 1744, Agriculture, dated the 2nd September 1980 relating to the declaration of the notified market area for Marakkanam Market under section 5 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act in respect of groundnut, gingelly, cotton, paddy, blackgram, greengram, sugarcane, jaggery and coriander. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

165. Notification issued with G.O. Ms. No. 2049, Agriculture, dated the 15th October 1980 declaring that the South Arcot district shall be a notified area for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act in respect of green chillies. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

166. Notification issued with G.O. Ms. No. 2087, Agriculture, dated the 22nd October 1980 relating to the control over the purchase and sale of onion in Tirunelveli district under section 3 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].



167. Notification issued with G.O. Ms. No. 2176, Agriculture, dated the 5th November 1980 declaring that the Kanyakumari district shall be notified area for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act in respect of banana ripe and unripe fruits and banana products like banana chips, banana flour. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

168. Notification issued with Government letter No. 104790| AM-II|80-2, Agriculture, dated the 1st December 1980 in regard to an amendment to the Agriculture Department Notification No. II (2)|AG|5768|76, dated the 7th October 1976, published at pages 647-648 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th November 1976. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

169. First Annual Report of the Tamil Nadu Newsprint and Papers Limited for the year 1979-80. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

### B. *Reports, Notifications and Other Papers.*

*Nil.*

---

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1981 ஜனவரி 30.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் கூடியது.

### 1. அறிவிப்புகள்.

#### (1) தியாகிகள் நினைவு நாள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்திய விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள் நினைவாக இன்று நாடு முழுவதிலும் இரண்டு நிமிடங்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுகூறி உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் பொருட்டு 10-45 மணிக்கு அவை ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 11-15 மணிக்குக் கூடும். நினைவு அஞ்சலி இராஜாஜி மைதானத்தில் நடைபெறும்.

### 2. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### நகர ஈட்டுப்படி மற்றும் வீட்டு வாடகைப்படி.

* 51 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (செல்வி அ. [illegible] சார்பில்): மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள அரசு அலுவலர்கள் மற்றும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு, நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும் வழங்கப்படவேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கையை, அரசு பரிசீலிக்குமா?

(இ) ஆம் எனில், கோரிக்கை எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

#### *House Rent Allowance*

* 52 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) whether it is a fact that many representations have been made to the Government to sanction [illegible] Rent Allowance to teachers of Government Institutions and Government Servants throughout the State, irrespective of the places of their residences;

(b) if so, the action proposed to be taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோரிக்கைகள் ஊதியக் குழுவிற்கு அனுப்பப்பட்டன. ஊதியக் குழு மாநிலம் பூராவும் வீட்டு வாடகைப்படி வழங்கும் திட்டத்தைப் பரிந்துரை செய்யவில்லை. நகரங்களுக்கு மட்டும் பரிந்துரை செய்தது. எனவே, [illegible] 1979 ஆம் நாளிட்ட [illegible] [illegible] [illegible] மாதம் 10 ரூபாய் [illegible].

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : [illegible] கேள்வி நேற்றைய முன் தினம் இந்த அவையில் கேட்கப்பட்டது என்று நினைக்கிறேன். அப்போது 10 ரூபாயாக இருக்கும் கிராம ஊக்கப்படியை 20 ரூபாயாக அதிகரிக்க [illegible] கேள்வி எழுப்பப்பட்டது. அப்படி 10 ரூபாயை 20 ரூபாயாக அதிகரிப்பதன் மூலமாக, அரசுக்குச் சுமார் இரண்டரை கோடி ரூபாய் செலவாகுமென்று தெரிகிறது. இதை அதிகரித்துக் கொடுப்பதால், [illegible], ஆசிரியர்கள் உட்பட கிராமப்புறங்களில் இருக்கின்ற [illegible] இலட்சக் [illegible] பலன் அளிக்கும் என்பதால், இந்த இரண்டரை கோடி ரூபாயை பெரிய நிதிச் சுமையாகக் கருதாமல் பரிவுடன் பரிசீலனை செய்து, அரசு ஒரு முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு [illegible] மற்றவர்களுக்கும் அவ்வப்போது அளிக்கின்ற சலுகைகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஊதியக் குழுவின் பரிந்துரையின் பேரில், ஊக்கப்படி 10 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. இவற்றை மேலும் உயர்த்துவதற்கான காரணங்கள் என்னென்ன என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. நான் அன்றே எடுத்துச் சொன்ன மாதிரி, நிதிநிலை இடம் [illegible] பொறிக்கலாம். இரண்டரை கோடி ரூபாய் என்பது [illegible] அவற்றை அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்.



டாக்டர் இரா. சனார்த்தனம் : நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப் படி [illegible] தர இயலாத நிலையில் கிராம ஊக்கப் படியை உயர்த்தும் [illegible] அரசு விரைவிலே பரிசீலனை செய்யுமா? எவ்வளவு கொடுத்தால் அவர்கள் திருப்தியடைவார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எவ்வளவு கொடுத்தாலும், மேலும் மேலும் வேண்டுமென்ற எண்ணம் தான் எவருக்கும் வரும். அதற்கு [illegible] அளவு இருக்கிறது. நம்மால் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதைத்தான் [illegible] யோசிக்க வேண்டும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து, இருக்கின்ற நிலை [illegible] ஆராய்ந்து அதில் எந்த அளவிற்கு நியாயம் இருக்கிறது என் [illegible] கண்டறிந்து, பிறகு நிதிநிலை இடம் தருகிறதா என்பதையும் ஆராய்ந்த பிறகு, இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

சுற்றுலா பேருந்துகள்.

*58 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு [illegible] அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தியாவில் உள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், பேருந்துகள் [illegible] ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) & (இ) தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை காணும் பயணத்திட்டம் மட்டுமே தற்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தென் இந்தியாவில் உள்ள சுற்றுலாத் தலங்களைக் காண்பதற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதில் பொது மக்களிடையே ஆர்வம் இருக்கிறதா? வெற்றிகரமாக அந்தத் திட்டம் செயல்படுமானால், வட இந்திய மாநிலங்களில் உள்ள சுற்றுலா இடங்களையும் காண்பதற்காக இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் இந்தச் சுற்றுலாப் பயணங்கள் இந்திய துணைக் கண்டத்திலே மட்டுமல்லாமல், வெளி நாடுகளிலும் புகழ்பெற்று விளங்கு

[1981 ஜனவரி 30

கின்றன. குறிப்பாக இலண்டன் மாநகரில் இருக்கும் " காஸ்மா டூர்ஸ் " என்ற அளவிற்குப் புகழ் பெற்று வருகிறது. இதை இன்னும் தீவிரப்படுத்தி இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்துகிறபோது, அந்தந்த மாநிலங்களில் உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களுக்கும், மத்திய அரசு நடத்துகிற சுற்றுலாப் பயணங்களுக்கும் இடையூறு இல்லாதவாறு விரிவுபடுத்த வேண்டுமென்று நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தென் இந்தியாவில் உள்ள முக்கியமான இடங்களைப் பார்க்க, சுற்றுலாக் கழகத்தின் சார்பாக, எத்தனை பேருந்துகள் இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன ? அத்தகைய பேருந்துகளில் எல்லாம் பயிற்சி பெற்ற சுற்றுலா வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இப்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய போக்குவரத்துப் பிரிவில் 15 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிலே அநேகமாக பயிற்சி அளிக்கப்பட்ட அல்லது விவரம் தெரிந்த வழிகாட்டிகள் இருப்பதாகத்தான் அறிகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : வெளி மாநிலங்களில் நம்முடைய சுற்றுலாப் பேருந்துகள் செல்ல அந்தந்த மாநிலங்கள் அல்லது மத்திய அரசு அனுமதிகளைக் கேட்டுத்தான் செய்ய வேண்டுமென்ற நியதி இருக்கிறதா ? நாமே செய்வதற்கு என்ன தடை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : சுற்றுலாப் பயணங்களுக்காகப் பேருந்துகளை விடுகிறபோது, அகில இந்திய அளவிலே பெர்மிட்டுகளை வழங்குகிற உரிமை மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. அவர்கள் அனுமதியைத் தந்த பிறகுதான், நாம் அந்த வண்டிகளை விட இயலும்.

திரு. சி. இராமலிங்கம் : சுற்றுலாத் துறையில் பேருந்துகளை வைத்து நடத்துகிறார்கள் என்றாலும், வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய நான்கைந்து பேர்களுக்காக டாக்சியை வைக்க வேண்டியிருக்கிறது. தனியார்தான் டாக்சிகளை வைத்து நடத்துகிறார்கள். ஆகவே நான்கைந்து பேர்களை அழைத்துச் செல்லக்கூடிய டாக்சியை ஏற்பாடு செய்யும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, நம்முடைய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிற சுற்றுலாப் பயணங்கள் வெளிநாடுகளில் மிகுந்த அளவில் பிரபலமாகி



1981 ஜனவரி 30]

வருகின்றன. பாராட்டுக்குரிய அளவிலே விளங்கி வருகிறது. அதையொட்டி மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து இங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்காக சுற்றுலாத் திட்டத்தின் அடிப்படையில் டிக்கெட்டுகளை வழங்குகிற உரிமையை வழங்கி, அங்கே நம்முடைய பிரதிநிதிகளை ஏற்படுத்துகிற திட்டமும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது. அதற்கான அனுமதியை இந்த அரசு அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறபோது, வந்து இறங்குகிற வெளிநாட்டுப் பயணிகளை விமான நிலையத்திலிருந்து அழைத்துவர வழிவகை செய்யப்படும்.

## வீராணம் ஏரிப்பகுதி.

*54 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் 29—10—1979 அன்று வினா எண் 28-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரிப்பகுதியை மகிழ்வுலாப் பகுதியாக (Excursion Centre) ஆக்கும் திட்டம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தற்போது இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : வீராணம் ஏரிப் பகுதியை மகிழ்வுலாப் பகுதியாக ஆக்கும் திட்டம்பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவையில் நடந்த ஒரு விவாதத்தின் போது சொன்னது எனக்கு மிக நன்றாக நினைவில் இருக்கிறது. அந்த ஏரி மிக அற்புதமான பகுதியிலே இருப்பதால், அதை மகிழ்வுலாப் பகுதியாக ஆக்கினால், அந்தப் பகுதி மக்களுக்குப் பொருளாதார ஆதரவு கிடைக்கும் நிலைமையை உண்டாக்கும் என்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டம் குறித்து அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று இந்த அவையில் முன்னாலே தெரிவித்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்து இப்போதும் இருக்கிறது. இவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு இடங்களை முதலிலே தேர்ந்தெடுத்து அவற்றை அந்தந்த மாவட்ட அளவில் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களாக ஆக்க வேண்டுமென்ற திட்டத்தின் கீழ் தென்னாற்காடு மாவட்டத்தில் பிச்சா

வரம், கோமுகி அணைக்கட்டு ஆகிய இரண்டு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த நிதியாண்டில் இந்த இரண்டு திட்டங்களும் முடிவு பெற்ற பிறகு, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த வீராணம் ஏரியைப்பற்றி அரசும், சுற்றுலாத் துறையும் பரிசீலிக்கும். அந்தக் கருத்து அரசின் குறிப்பில் இன்னும் இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பிச்சாவரம், கோமுகி அணைக்கட்டுப் பகுதிகள் ஆகியவற்றை மகிழ்வுலாப் பகுதிகளாக மாற்றுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இந்த ஏற்பாடுகள் நடைபெறுகிறபோது, குறைந்த வருமானம் உள்ளவர்கள், நடுத்தர வருமானம் உள்ளவர்கள் எல்லாம் அவர்களுடைய வருமானத்திற்கேற்பத் தங்கும்படியான விடுதிகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாவட்டச் சுற்றுலாத் தலங்களை உருவாக்குவதன் நோக்கமே, அந்த மாவட்டத்தைச் சுற்றிலும் இருக்கின்ற ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் ஆகியவர்கள் விடுமுறைக் காலங்களில் வந்து தங்கி, மகிழ்வடைந்து திரும்ப வேண்டும் என்பதுதான். இன்டர்நேஷனல், நேஷனல் என்ற அளவிலே உருவாக்கப்படுகிற சுற்றுலா மையங்களில்தான் விலையுயர்ந்த வகையில் அவர்களுக்கு வசதியாக இருப்பிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்குரிய கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆனால் மாவட்டச் சுற்றுலா மையங்கள் என்பது இப்படிப்பட்ட ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் ஆகியவர்களுடைய வசதிகளை அடிப்படையாகக் கொண்டு தான் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 10-40)

**டாக்டர் இரா. ஜனார்த்தனம் :** இப்படி மகிழ்வுலா வருகிற இடம் கோவை மாவட்டத்திலே ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே கோவை மாவட்டத்திலும் இரண்டு இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இப்போது [illegible] அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கு அப்பாற்பட்டு கேள்விகள் கேட்டாலும், அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். அதனால் உறுப்பினர்களும் உற்சாகமாகத் துணைக் கேள்விகள் கேட்கிறார்கள்.



## நிரந்தரப் பாதுகாப்புக் கட்டிடங்கள்.

* 55 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆண்டுதோறும் புயல் வெள்ளத்தால் சேதங்களுக்கு இலக்காகி வரும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தலைஞாயிறு, நாகை, வேதாரண்யம் போன்ற கடற்கரைப் பகுதிகளிலுள்ள ஒன்றியங்களுக்கு சிறப்பு நிதியளித்து, ஆபத்து நேரங்களில் பொது மக்கள் தங்குவதற்கு வசதியாக, அனைத்துப் பள்ளிகளுக்கும் பாதுகாப்பான நிரந்தரக் கட்டிடங்கள் கட்டச் செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) திட்டம் ஏதும் இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஒவ்வொரு ஆண்டும் தலைஞாயிறு, நாகை, வேதாரண்யம் ஆகிய பகுதிகளிலே புயல் வேகமாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது அடித்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆகவேதான் அங்கே இருக்கின்ற பள்ளிகளில் சிரமப்படுகின்ற மக்களைத் தங்க வைக்கிறார்கள். பெரும்பாலும், அங்குள்ள பள்ளிகள் கூரை வேய்ந்த பள்ளிகளாகத்தான் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளையெல்லாம் அவைகள் மக்களுக்குப் புகலிடம் அளிக்கக்கூடிய வகையிலே கொஞ்சம் பக்கா கட்டிடம் உள்ள பள்ளிகளாக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையிலே இப்போது திட்டம் எதுவும் இல்லாவிட்டாலும், அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நாகப்பட்டினம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் அடிக்கடி புயல் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகள் என்று அதற்கு பொதுப் பணித் துறையில் புயல், வெள்ளத்தின் போது நிவாரணம் கொடுக்க வேண்டிய சில இடங்களைத் தேர்ந்தெடுத்து கட்டிடம் கட்டப்படுகிறது. பள்ளிக்கூடங்களை நிரந்தரக் கட்டிடங்களாகக் கட்டுவதற்கு என்று சிறப்பு நிதி எதுவும் இல்லை. அப்படி சிறப்பு நிதி அளித்துக் கட்டுவது என்று திட்டங்கள் இன்னும் தீட்டப்படவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அளித்த யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கிராம நல ஊழியர்களை நிர்வாக அதிகாரிகளாக நியமித்தல்.**

* 56 வினா—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராம நல ஊழியர்களை, ஊராட்சிகளின் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இல்லையெனில், இது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**போக்குவரத்துக் கழகங்களில் ஐ.டி.ஐ. சான்றிதழ் பெற்றவர்கள்.**

* 57 வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் உள்ள ஏழு போக்குவரத்துக் கழகங்களில் பணி புரியும் ஐ. டி. ஐ. சான்றிதழ் பெற்றவர்களின் மாநில மாநாடு, அவர்களது அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்றும், அவர்களுக்குச் சான்றிதழ்படி வழங்கப்பட வேண்டுமென்றும், அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) ஐ.டி.ஐ. சான்றிதழ் பெற்ற ஊழியர்களுக்கு, தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு தரவேண்டுமென்று வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி (அ) ஆம்.

(இ) எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் 1—5—1975 முதல் தொழில் நுட்ப வேலைக்குப் பணியாளர்கள் நியமனம் செய்வதற்குக் குறைந்த அளவு ஐ.டி.ஐ. சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். ஆகையால் அவர்களுக்குச் சான்றிதழ்படி அளிப்பதோ, அல்லது அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவதோ தேவையில்லை என்று கருதப்படுகிறது.

(உ) ஆம்.



(எ) போக்குவரத்துக் கழக நிர்வாகங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட நீண்ட காலத் தொடர் ஊதியத் திட்ட ஒப்பந்தத்தின்படி, எல்லா தொழிலாளர்களுக்கும் பதவிக்கால அடிப்படையிலும், தகுதியைப் பொறுத்தும் பதவி உயர்வு வழங்க வழிமுறைகள் உள்ளன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்.

(முற்பகல் 10-45)

(இந்திய விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளின் நினைவாக அஞ்சலி செலுத்த அவை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 11-15 மணிக்குக் கூடியது).

**திருவாரூர் பணிமனை சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.**

* 58 வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சோழன் போக்குவரத்துக் கழக, திருவாரூர்ப் பணிமனையில் உள்ள பேருந்துகள், மிகவும் பழையவை என்பதையும் அடிக்கடி பழுதடைகின்றன என்பதையும் அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இக்குறைபாட்டை நீக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) சமீப காலம்வரை சோழன் போக்குவரத்துக் கழகம் திருவாரூர்க் கிளையிலிருந்து இயக்கப்பட்ட எல்லா பழைய பர்கோ பேருந்துகளுக்குப் பதில் லேலண்ட் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(இ) லேலண்ட் பேருந்துகள் நல்ல நிலையில் உள்ளதால் தற்சமயம் பழுதுகள் ஏற்படுவதில்லை. பயணிகள் புகாரும் இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இப்படிப் பழுதடைந்த பேருந்துகளை ஏலத்தில் விடுவதைவிட அரசே அவைகளைப் பழுது பார்த்து, அவைகளை மினி பஸ்களாக விடுகின்ற யோசனை அரசுக்கு உள்ளதா ?

[1981 ஜனவரி 30

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பர்கோ பேருந்துகளைப் பொறுத்த வரை, அவைகளைப் பழுது பார்த்து வைத்திருந்து அவைகளை மினி பஸ்களாக மாற்றுவது என்பது பொருத்தமற்றதாகும். காரணம் அவை பயனில்லா தவைகளாக இருக்கின்றன. லேலண்ட் பேருந்துகளை அப்படிச் செய்வதற்கு தொடங்கி விட்டோம். பல இடங்களிலே அதைச் செய்து கொண்டும் இருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பழுதடைந்த பேருந்துகளை ஏலம் விடுவது அல்லது விற்பது என்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை குறிப்பிட்ட பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்கு என்று வரையறுத்து, குறைந்த விலைகளை நிர்ணயித்துக் கொடுக்கலாம். அதனால் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் அவைகளைப் பயன்படுத்தி பயணம் செய்வதற்கு வாய்ப்பும் வசதிகளும் ஏற்படும். ஆகவே அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இந்த அடிப்படையிலேதான் அரசாங் கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. அந்தப் பள்ளிகள் பேருந்து வேண்டுமென்று எழுதினால், கொடுத்துக்கொண்டு தான் இருக்கின்றார்கள். அதிலே ஒன்றும் தடையில்லை. பள்ளிகள் வேண்டு மென்று கேட்டால், அந்தப் பேருந்துகளைக் கொடுக்கின்றபோது புத்தக மதிப்பீடு (புக் வேல்யு) போட்டு, அந்த அளவுக்குக் குறைந்த விலைக்குத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதை வாங்கிப் பயன் படுத்த முடியாத நிலைதான் இருக்கிறது. அதை வாங்கிப் பயன்படுத்துவ தாக இருந்தால், கொடுக்கத் தடையில்லை. அவர்கள் வாங்குவதிலேதான் தடை இருக்கிறது என்ப கருதுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** போக்குவரத்துக் கழகத்திலே பொதுவாக ஒரு புதிய வண்டியை வாங்கி எத்தனை ஆண்டுக் காலம் ஓட்டலாம் என்று அரசு விதி முறைகள் வைத்திருக்கின்றது ? எத்தனை ஆண்டுக் காலம் வண்டிகள் பழுதடைந்த பிறகும் ஓடுகின்றன ? அப்படிப்பட்ட பேருந்துகளை மாற்று வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு அங்கத்தினர் எல்லோருக்கும் தெரியும். இன்றைய தினம் போக்குவரத்துக் கழகத்திற்குச் சேசிஸ்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அந்த சேசிஸ்கள் பெறு வதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். தமிழ் நாடு அரசைப் பொறுத்த



1981 ஜனவரி 30]

வரையில், பேருந்துகளை 3 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தக்கூடாது என்று இருக்கின்றது. லேலண்ட் வண்டியாக இருந்தால், 8 ஆண்டுக் காலமும் மற்ற வண்டிகளாக இருந்தால் 7 ஆண்டுக் காலமும் பயன்படுத்திப் பிறகு மாற்ற வேண்டுமென்ற விதி முறைகள் வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் பேருந்துகள் கிடைக்காத காரணத்தினால், அந்தப் பேருந்துகளைப் புதிதாக மாற்றி வருகிறார்கள். 10 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை பயன் படுத்தி வருகிறார்கள். அவைகளை மினி பஸ்களாக மாற்றியும் பயன்படுத்தி வருகிறார்கள். அந்தப் பேருந்துகள் நல்ல முறையில் பயன் தந்து கொண்டு தான் இருக்கின்றன.

### *Veterinary Dispensary at Kattukkanallur.*

* 59 *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) whether any representation has been received in 1978, from the President, Samuga Narpani Mandram, Kattukkamallur, Arni Taluk, North Arcot District, to open a Veterinary Dispensary there; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) ஆம்.

(இ) அது கால்நடை பராமரிப்பு இயக்குநரின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 11-20)

**திரு. செ. முத்துசாமி :** அமைச்சரவர்கள் ஆய்வில் இருப்பதாகச் சொல்லு கிறார்கள். அங்கே கால்நடை மருந்தகத்திற்கு உடனடித் தேவை இருக் கின்ற காரணத்தால், விரைவாக இது குறித்து முடிவெடுக்கப்படுமா ? விரை வில் அந்த மருந்தகத்தைத் திறக்க அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** காட்டுக்காநல்லூரில் கால் நடை மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கான நில ஒதுக்கீடு சம்பந்தமாக, கிராமப் பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது குறித்து பஞ்சாயத்து யூனியனும் தீர்மானம் போட வேண்டியிருக்கிறது. மேற்கு ஆரணி பஞ்சாயத்து யூனியனுக்கு, இது குறித்த தீர்மானம் கோரி, 1980 செப்டம்பரில் கடிதம் எழுதியிருப்பதாக ஆரணி உதவி இயக்குநர் தெரிவித் துள்ளார். ஆகவே மேற்படி தீர்மானம் வந்த பின்பு, மேற்கொண்டு நட வடிக்கை எடுக்கப்படுமென்று கால்நடை பராமரிப்பு இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

திரு. செ. முத்துசாமி : ஊராட்சி மன்றம் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது. ஆனால் ஊராட்சி ஒன்றியம் இன்னும் தீர்மானத்தை நிறைவேற்ற வில்லை. அவர்கள் தீர்மானம் போடவேண்டுமென்று பரிந்துரைசெய்து 1980 செப்டம்பரில் குறிப்புரை ஒன்று சென்றிருக்கிறது. இதுவரை பஞ்சாயத்து யூனியன் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் இதுவரை தீர்மானம் நிறைவேற்றாமல் இருக்கக் காரணம் என்ன? அரசு முடிவெடுத்து, உடனடியாகத் தீர்மானம் போட்டு அனுப்புங்கள் என்று சொன்ன பின்பும், பஞ்சாயத்து யூனியனில் அரசின் ஆணையை நிறைவேற்றாமல் இருப்பது குறித்து அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : கிராமப் பஞ்சாயத்து, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால் பஞ்சாயத்து யூனியனின் தீர்மானம் தேவைப்படுகிறது. அப்படி பஞ்சாயத்து யூனியனின் தீர்மானம் தேவைப் படுவதால், அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். அந்தத் தீர்மானம் வந்த வுடன், எவ்வளவு விரைவில் மருந்தகத்தை ஏற்படுத்த முடியுமோ, அந்த அளவில் பரிசீலனை செய்து, ஏற்படுத்துவோமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : காட்டுக்காதல்லூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்துவது அவசியம்தானா ? அங்கு எவ்வளவு கால்நடைகள் உள்ளன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : காட்டுக்காதல்லூர் கால்நடை மருந்தகம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய அவசியமான இடமாகத்தான் கருதப் படுகிறது. அங்கும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலுமுள்ள கால்நடை களின் எண்ணிக்கை 13,217 ஆகும்.

திரு. செ. முத்துசாமி : அமைச்சரவர்கள் தன் பதிலில் பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போடுவதற்கு அரசாங்கம் ஏதோ வேண்டுகோள் விடுவதுபோல் கேட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையைச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன், தீர்மானத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் போட்டு அனுப்ப வேண்டுமென்று சொல்லும்போது, அதை நடைமுறைப் படுத்த அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவரும் இல்லை. அங்கே ஸ்பெஷல் ஆபீசர்கள்தான் இருக்கிறார்கள். எனவே நீண்ட காலத்தை இதற்காக எடுத்துக்கொள்ளாமல், 15 நாட்களில் அங்கிருந்து தீர்மானம் போட்டு, அரசுக்கு வர தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.





## கோழிகளுக்குத் தடுப்பு ஊசி மருந்து.

* 60 வினா.—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்) : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம். சாயர்புரத்தில் தடுப்பு ஊசி மருந்து கிடைக்காததால், கோழிகளுக்கு ஊசி போட முடியாததன் விளைவாக, சுமார் 10,000 கோழிகள் இறந்து விட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எதிர்காலத்தில் இம்மாதிரி நிகழாமல் இருக்க, அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரம் கிராமத்தில் 10,000 கோழிகள் இறந்துவிட்டன என்பது ஆதாரமற்றது. எனெனில், சாயர்புரம் கிராமத்தில் புள்ளி விவரக் கணக்குப்படி 3,000 கோழிகள்தாம் உள்ளன. 20 கோழிகள் மட்டுமே 'ராணிகட்' நோயால் இறந்து விட்டன என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்தத் தகவலை கோழிகளின் உரிமையாளர்கள் பண்ணைவிளை கால்நடை மருந்தகத்திற்குக்கூட தெரிவிக்கவில்லை.

(இ) சாயர்புரத்தில் 1953 கோழிகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட் டுள்ளன. இதுதவிர சுற்றியுள்ள 10 கிராமங்களில் 11,166 கோழிகளுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. எல்லா இடங்களிலும் கோழிகளுக்கு இது போன்ற தடுப்பூசிகள் போடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. செ. முத்துசாமி : 'ராணிகட்' நோய் என்பது கோழிகளை அழிக்கும் ஒரு சக்தியாக இருக்கிறது. நாமக்கல்லில் கோழிப் பண்ணைகள் பெருமளவிற்கு வளர்ந்துள்ளன. இந்த நேரத்தில், 'ராணிகட்' நோயை முழுமையாகத் தீர்க்க அரசு மருந்து ஏதாவது கண்டுபிடித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : 'ராணிகட்' நோயால் கோழிகள் பாதிக்கப்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரி வித்தார்கள். அதற்கு வேண்டிய மருந்துகளைத் தயாரித்துக் கொண்டிருக் கிறோம். நான் முன்பு கூறிய விடையில் கூடக் குறிப்பிட்டிருக்கிறேன். எல்லா இடங்களிலும் கோழிகளுக்குத் தடுப்பூசிகள் போடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சொன்னேன்.

[1981 ஜனவரி 30

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. கவன ஈர்ப்பு.

### குறிஞ்சிப்பாடி எஸ். கே. வி. மேல்நிலைப் பள்ளி நிர்வாகம் 13 பட்டதாரி ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்திருப்பது குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" தென்னாற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி எஸ். கே. வி. மேல் நிலைப்பள்ளி நிர்வாகம் 13 பட்டதாரி ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய் திருப்பது குறித்து "

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவ ரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, அமைச் சரவர்கள் அளித்துள்ள அறிக்கையிலே, ஒரு மிக முக்கியமான கருத்து அரசின் சார்பில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது குறிப்பிட்ட ஆசிரியர், திரு. ஜெயச்சந்திரன் என்பவருக்குப் பதவி உயர்வு தரப்பட வேண்டுமென்று மாவட்டக் கல்வி அலுவலர், முதன்மைக் கல்வி அதிகாரி, பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் அரசாணைகளையொட்டி ஆணையிட்டும்கூட, பள்ளி நிர்வாகம் அதை ஏற்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாணைகளை ஏற்க மறுக்கும் தனியார் பள்ளி நிர்வாகத்தின்மீது தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க போதிய விதி முறைகள் நம்மிடம் இருக்கின்றன. அரசின் ஆணைகளை அவமதிக்கும் பள்ளி நிர்வாகத்தின்மீது அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இனி என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறதென்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, இந்தப் பிரச் சினை இப்போது ஓரளவிற்கு முடிந்து, பள்ளிக்கூடமும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியர் நியமனம் குறித்த தவறுகளுக்கு விதிகளின்படி தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

@ 69-72 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1981 ஜனவரி 30]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பிரச்சினை இன்னும் தீரவில்லை. மாணவர்களுடைய கல்வி நலனை முன்னிட்டு ஆசிரியர்கள் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் பொறுப் புணர்ச்சியுடன், கல்வி இயக்குநரின் அறிவுரையை ஏற்று, பள்ளிக்குச் செல்லு கிறார்கள். அரசாணை இன்றும் அவமதிக்கப்பட்ட நிலையில்தான் இருக் கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் ஆறு அம்ச சமரசத் திட்டம் ஒன்று கொடுத்ததை ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், பள்ளி நிர்வாகம் அதை ஏற்கவில்லை. மாணவர்களிடம் நன்கொடை வசூல், ஆசிரியர்களிடம் அவர்கள் நியமனத்தின்போது பணம் பெறுதல், தாழ்த்தப் பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய மறுத்தல் போன்ற பல்வேறு புகார்கள், அந்தப் பள்ளி நிர்வாகம் குறித்து, கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தப் புகார்களை எல்லாம் ஆராய்ந்து, இருக்கும் சட்டத்தைப் பயன்படுத்தி, பள்ளி நிர்வாகத்தின்மீது அரசு நடவடிக்கை எடுக்குமென்று அமைச்சரவர்கள் உறுதிமொழி தருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கொண்டு வந்த பிரச்சினை பள்ளியில் சட்டம், ஒழுங்கு கெட்டிருக்கிறது, அமைதியில்லை என்பதுதான். அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டதென்று சொன்னேன். ஆசிரியர்கள் நியமனம் சம்பந்தமான பிரச்சினையை, விதி களுக்கேற்ப அரசு பரிசீலித்து. நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 11-30)

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, at the outset, I wish to congratulate the Government on the exemplary manner in which they have recently conducted the World Tamil Conference at Madurai Almost all the people in Tamil Nadu and also those who had come from abroad. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ் மாநாடு பற்றி உறுப்பினர் தமிழில் பேசினால் நன்றாக இருக்கும், சுவையாகவும் இருக்கும், அவையிலுள்ள அனைவரும் அனுபவிக்க வாய்ப்பாகவும் இருக்கும். (சிரிப்பு)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பாக்கி விஷயங்களைப் பற்றியெல்லாம் ஆங்கிலத்தில் பேசுவது எனக்கு எளிதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

Sir, almost all the people in Tamil Nadu, to whichever Party they may belong and also those who came from abroad have uniformly appreciated the nice manner in which the Conference was conducted, the comforts provided to the foreign delegates and the worthwhile discussions that took place in the Conference. In this connection,

I wish to mention only one point which I think the Government may take note of. During my earlier speeches in this House and also through a Question, I had requested the Government of Tamil Nadu to impress upon the Government of India that Tamil language should also be taken in as one of the classical languages of India. Perhaps, the Hon. the Education Minister may be aware of the fact that the Government of India are contributing large amounts for the furtherance of classical languages both in this country and elsewhere. Sanskrit and Arabic have been classified as classical languages and large amounts have been spent by the Government of India for the furtherance of those languages both inside and outside our country. Tamil is one of the ancient languages, not only of our country but also of the world. I request the Hon. the Minister for Education to take up with the Ministry of Education, Government of India, the matter of inclusion of Tamil also as one of the classical languages so that we may get funds for the furtherance of the language not only in our country but also elsewhere.

Sir, much has been said about the Five-Year Plan, in the Governor's Address. I am a Member of this Council for the last twelve years and I have had opportunities to speak on the Governor's Address and also to take part in the Budget discussions all these years. There have been two Five-Year Plans during these twelve years. Every time when a Plan is formulated by the Government of India, the Chief Ministers go to Delhi and take part in the discussions at the National Development Council meetings. During those discussions, they say that they want more funds. Later, they tell the Legislature and the public that Tamil Nadu will improve considerably after the implementation of the Five-Year Plan. The same line of thought has been given to this Five-Year Plan also. The Chief Minister went to Delhi and said that he wanted allocation of funds totalling about Rs. 3,910 crores for the Sixth Five-Year Plan. The Government of India told him that they would be able to allocate only about Rs. 2,400 crores for this Five-Year Plan. Now, after a skilful negotiation, he has been able to get an allocation of about Rs. 3,150 crores for Tamil Nadu. In the Governor's Address, it has been stated that this has been achieved by the Chief Minister of Tamil Nadu, that large funds are going to be spent here and that, generally, the condition of all people is going to improve. I only wish to mention one thing at this juncture. In spite of all the Five-Year Plans, the condition of the people has not improved. In the Governor's Address it is mentioned that the criteria followed for allocation of funds to Tamil Nadu have been the criteria laid down in the Ga... formula according to which the per capita income used



to be taken into account for devolution of funds to the State. Now, the Hon. the Chief Minister and other Ministers from here went to Delhi and asked that the Gadgil formula should be amended and that the devolution of funds should not be on the basis of per capita income but should be on the basis of the number of people below the poverty-line. Now, Tamil Nadu is one State in India where many people are coming below the poverty-line. Now, it is said that after the implementation of the Sixth Five-Year Plan more people will come out of poverty. Even our Hon. Prime Minister said at the time of the last Elections that she would be able to see that poverty was eradicated from our country by the so-called "Garibi Hatao" programme. But, ultimately, what happens is this. More and more people are becoming poorer in the whole country including Tamil Nadu. It is a pity that we have to argue with the people in the Planning Commission at the Centre that poverty line should be taken as the criterion for allotment of funds. I am happy to know that more money is to come. But, suppose we are arguing on the same lines for allotment of funds on the ground that more people have gone below the poverty line and we are able to get more money. This will lead to a situation in which the Government would be interested in keeping more and more people below the poverty line. The Government will have a vested interest in seeing that more and more people go below the poverty line. I wish to point out that in my opinion, we may have any number of Five-Year Plans implemented in this country but still the condition of the poor people, particularly in villages, will remain the same. All the funds that we have received during the Five-Year Plans have been spent only in urban areas and not in rural areas. Many economists have clearly stated that about 70 per cent of the funds that have been given for Five-Year Plans has been spent in urban areas and that the rural areas get very little. In the Sixth Five-Year Plan, we are supposed to get Rs. 3,150 crores during the course of the five-year period. We are going to spend a major portion of the amount on Power, for getting water to Madras City and on Transport and such other things. According to my calculations, the poor people in the villages are going to get not even 30 per cent of the Plan funds. Nearly 70 to 80 per cent of our people are living in villages but ultimately the urban people are derving 70 per cent benefit out of the Plan funds allotte. The same thing will happen in the Sixth Five-Year Plan also. The only ameliorative measure found in the Governor's Address is that the Government have taken some of the Blocks in the rural areas as the first instalment and that they are going to provide them all the facilities, under the Self-Sufficiency Scheme. My only contention is that out of the Plan allotment,

the Government are not spending a major amount in the rural areas. Our Hon. Chief Minister is one who says that the poor people should become rich or at least their condition should be improved. I would like to know what the Government are actually going to do to improve the living condition of the people in the villages which has not been done by the previous Congress Government and the D.M.K. Government. As one who has got some idea about finances, I would only say that even after the implementation of the Sixth Five-Year Plan, our State will be in the same position, in spite of great advocacy about improving the condition of the poor people in the villages. If we want really to improve their condition in the rural areas the forthcoming Budget should spell out what is going to be done instead of allowing in to remain merely a dream.

Another thing I want to mention about the sum of Rs. 3,150 crores the Government are getting as Sixth Five-Year Plan allocation. A feeling is created in the minds of many people that the entire sum of Rs. 3,150 crores is being given by the Government of India. I would like to say that out of the plan funds, one-fifth is given by the Government of India and four-fifths have to be given only by the State Government and the Government have to raise their quota of plan allocations within the State. Every year, our Government will have to mobilise nearly 400 crores of rupees from our internal resources for the implementation of Five-Year Plan projects. Unless we are sure about raising such resources, we will not be able to implement the Five-Year Plan as envisaged.

(முற்பகல் 11-40)

Even the Government of India are not fully getting their finances. The main objective of the Plan is to achieve a national growth-rate of 5 per cent. It is also considered that the national savings will be to such an extent that we will be able to finance our Plan schemes. Both these things, in my opinion, the Government of India are not going to achieve. They cannot achieve the growth-rate of 5 per cent and savings also will not be to the extent anticipated. When the Working Committee of the Planning Commission considered the Plan documents of our State, they said that our State could not get more than Rs. 2,400 crores because they felt that we would not be able to mobilise more than Rs. 40 crores or Rs. 50 crores. Now, while getting an allocation of Rs. 3,150 crores, I think the Hon. the Chief Minister would have given the assurance that we would be able to mobilise funds to the tune of Rs. 300 crores or Rs. 500 crores. Out of that Rs. 150 crores should come by way of taxation or by way of internal resources like additional revenue from the Electricity Board to which



they are going to pay nearly 40 per cent of the capital outlay. I do not know whether our Electricity Board will function in such an exemplary manner as to yield any return I think that we should be happy if it does not incur any loss. Similarly, the Transport Corporations also cannot contribute any profits to the Government. Then, how are the Government going to mobilise this Rs. 150 crores or Rs. 200 crores every year? When the Governor's Address says that the Members may give their views on Prohibition, I get a hunch. My candid opinion about Prohibition is that it has miserably failed and that it cannot be implemented. The other day, there was a question in this House about the deaths in our State due to illicit arrack. Immediately, I asked a supplementary question spelling out the fact that deaths due to illicit arrack occurred also in States like Punjab and Haryana where there was no Prohibition. We are not able to implement Prohibition in Tamil Nadu. In actual practice there is no Prohibition at all in Tamil Nadu at the present moment. When the Government ask for our opinion on something which is not there, it seems to me that Prohibition is not going to bear any fruit. Now, the Government of Tamil Nadu are placed in a position where they have to raise revenues somehow or other. They cannot raise revenue through any more sales tax. They are not going to get revenues by taxing irrigation. In fact, Thiru C. Subramaniam, when he was the Union Finance Minister talked about raising more funds by taxing irrigation. But, in the present situation when we have so many people in the villages, the Government will not be able to get funds by taxing irrigation. Again, they will not be able to raise revenues from the power sector, the transport sector or the industrial sector. About 70 per cent of our people living in the villages are already revolting against taxes and the Government cannot tax them further. I think that the Government are giving serious thought to this matter and it will not be a surprise if one fine morning, probably in the Budget session, we get an announcement that they are not scrapping Prohibition but only suspending Prohibition, as was announced by the earlier D.M.K. Government.

Sir, regarding poverty, especially in the rural areas, I want to mention something. Though we have been going on drawing Plans, our Plans have so far failed. Of course, planning is necessary. But, the Government of India and the Government of Tamil Nadu have to mobilise large resources from the people who can afford to pay and not from people who cannot afford to pay. Under Income-tax, 20 lakhs of people have already been taxed. There is black money to the tune of Rs. 6,000 crores in this country. The Union Finance Minister, Thiru R. Venkataraman is now trying to . . .

திரு. ப. மாணிக்கம் : கறுப்புப் பணம் 25 ஆயிரம் கோடி ரூபாய் என்று அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

Thiru G. SWAMINATHAN : I am only mentioning what was stated in the Wanchoo Committee report. It may be Rs. 25,000 crores or even more. The hon. Member Thiru Manickam should know better than I. The Wanchoo Committee gave its report about black money and the Government tried to bring out the black money saying that every person found to be having black money would be arrested. But, still, in India, black money is instrumental for a parallel economy. Now, the Union Finance Minister is thinking of issuing bonds to bring out the black money. It is only a way of regularising black money. Probably, after five or ten years, they may think of issuing another bond. So, the premium is only on dishonesty and not on honesty. If one is an honest tax-payer, nobody bothers about him. Ultimately, what the Government of India are doing is to tax the people who are unable to pay taxes. There are a number of indirect taxes like excise duties, customs duties, etc. The State Government, for their part, levy sales tax. The whole tax burden falls on the poor people. It has been calculated that indirect taxes have gone up by 2,250 per cent during the last ten years. Now, if the Government of India could get any money, it is only through indirect taxes. Now, they say that they are allocating Plan funds both for the Centre and for the States. My only grouse is that the people who earn the money and who save the money will be able to spend it much wisely and the Government which take away all the savings of the people will be able to spend it only unwisely. I fear that a situation will come when the Government will not be able to gather the necessary finance for providing even the infrastructure.

Another great difficulty which has not been contemplated by many of the people in the industrial sector as well as in the Government sector is the reason for many of the mills and industries going sick. I even feel that the Government departments will also become sick. Reference has been made by many members to the closure of B & C Mills and the consequent throwing of 15,000 to 20,000 workers out of employment. They want jobs to be given, whether the Mills works profitably or not. There is a wrong idea that any industry is started for the purpose of providing employment to workers. My feeling is that any industry is not started for the sake of workers or even for the sake of capitalists or for the people who are running the industry. An industry



is started for the benefit of the consumers. The B & C Mills had been started for manufacturing cloth to meet the requirements of the people. When it begins to incur heavy losses, it becomes sick. A demand is made that it should be re-opend for the sake of the workers. I have no grouse if the Central Government come forward to invest their money for reopening the Mills. The State Government also can pump in certain funds and get them lost. The Union Minister Thiru Pranab Mukerjee who came here has categorically stated that the Government of India are not ready to pump in any money for mere scrap. He has called the machinery of B & C Mills 'scrap'. From the tone in which he has spoken we can take it that the Government of India will not come forward to give any money. Why are most of the industries becoming sick? The machinery has been purchased about 20 years back for about one crore of rupees. Because of inflation and high prices, a sum of 40 to 50 crores of rupees will be required to replace the old machinery. When an industry is making a profit of about 10 per cent they are satisfied and dividend is declared to the shareholders. When the time comes for the replacement of the machinery, they are not able to do it and this is the reason why many industries become sick. A day will come when it will not be possible to revive any industry which has become sick. Today the Government may be in a position to put up palatial buildings and construct roads. After some time, the Government will not be able to find necessary funds to scrap the old building and put up a new building in its place. The Government may find it difficult to white-wash the buildings or to maintain the rotds laid. The Government may spend 100 or 200 crores to provide many amenities to the people and after some years, because of inflation and rising prices, the Government will not be in a position to maintain them.

I wish to speak about one more thing mentioned in the Governor's Address regarding diversification of crops by the agriculturists and the hon. Member Thiru Damodaran also spoke about it. It appears that the Government are thinking of penalising the farmers who resort to diversification in cultivation. My only question is that there are many industries in our country and in our State which have diversified their production. For example, Simco Meters stated in the first instance, with the manufacture of meters. When they ended up in loss, they resorted to manufacture of defence equipments and they got many orders and were able to make a profit. Such things have happened in many industries. When the manufacture of a particular thing is not profitable they have to switch on to some other thing so as to

[Thiru G. Swaminathan] [1981 ஜனவரி 30

make it profitable. In the same way, when agriculturists feel that even if the Government come forward to pay Rs. 10 more per quintal, the price is not remunerative, they are at liberty to grow casuarina or any other crop. How is it that the Government which do not come forward to penalise the industries take a different stand in the case of agriculturists? If they want to

(முற்பகல் 11-50)

have such an enactment in the case of agriculturists, they should bring in an enactment for the industrialists also and say that the industry should not be diversified but should be run only for the purpose for which it was started, whether it runs at a profit or at a loss. Having two standards, one for the industries and another one for agriculture is, in my opinion, not very fair. I feel that the Government should ponder over this for a much longer time before making a commitment.

Sir, I would also like to mention one thing regarding the starting of industries. I find that the Government of Andhra Pradesh are acting in a big way in promoting industries. I think that Tamil Nadu also can act in a much bigger way. I would not say that they should follow Andhra Pradesh. But, they can try to take up what the Government of Andhra Pradesh are now doing for promoting industries. I find that during the last three or four years many of our major companies from Tamil Nadu have gone to Andhra Pradesh. I was told recently that the Lakshmi Mills group was putting up an industry there. The reason for the industrialists going there is that the margin amount that they have to pay there is very much less than what is wanted here. The payment of margin amount has become a bugbear because of inflation. Previously, supposing that the margin amount is 20 per cent, if a person had Rs. 20 lakhs, it would be sufficient for him to start an industry with an investment of Rs. 1 crore. But due to inflation the margin money has gone up to Rs. 60 lakhs. The percentage of margin amount which was 20 per cent is growing so alarmingly high that fewer and fewer people are coming forward to put up industries here. What the Government of Andhra Pradesh have done in this regard is this. There, they have reduced the quotient or percentage on the money that the Government and the financial institutions give and also on the money that the industrialists are to give. Now, I find that even a person with very good managing capacity and who is well-versed in technology cannot put up an industry with an investment of Rs. 1 crore if he does not have a large amount to pay as margin



1981 ஜனவரி 30] [Thiru G. Swaminathan]

money. So, I would only suggest to the Government that, if they want more industries to be started here, they should consider the managerial capacity of the person who wants to start the industry and not his capacity to pay margin money.

Sir, I have already expressed my views on Prohibition. I only wish that all the pious hopes of the Government of Tamil Nadu will become fruitful and that the poor people in the villages will become richer. But, I would like to add that merely hoping and dreaming for a thing and merely saying that a particular thing will be done will not yield any fruit. I expect that the Government will follow up what they have said, with a prudent and definite policy both in the Budget and Plan documents.

I thank you very much for having given me this very good opportunity.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் அவர்களின் உரை, புத்தாண்டு வாழ்த்தும் பொங்கல் வாழ்த்தும் நமக்கெல்லாம் தெரிவித்து, நமமுடைய உள்ளங்களெல்லாம் மகிழ்கின்ற நல்லுரையாக அமைந்திருக்கிறது. உலகத் தமிழ் மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற்று, அதிலே கலந்துகொண்ட வெளிநாட்டு அறிஞர்கள் எல்லாம் தனியான இரயில் மூலம் பிரயணம் செய்து மகாபலிபுரம் வந்து அவர்களும் அங்கே பொங்கல் வைத்து தமிழ் உள்ளங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். அந்தப் பொங்கலை ரஷ்ய நாட்டிலிருந்து வந்திருந்த செல்வி மிச்சிகிவி அவர்களும், மலேசிய நாட்டிலிருந்து வந்திருந்த அங்கேலா ரோசய்யா அவர்களும், இலங்கையிலிருந்து வந்திருந்த திருமதி அமிர்தலிங்கம் அவர்களும் சேர்ந்து வைத்தார்கள். அதன் மூலம் அந்த விழா தமிழ் உள்ளங்கள் மகிழ்கின்ற விழாவாக, தமிழர்களின் விழாவாக அமைந்தது.

பொதுவாக, எது பொங்கலாம், எது பொங்கக்கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். பால் பொங்கலாம், அன்பு பொங்கலாம், இன்பம் பொங்கலாம்; ஆனால் உள்ளங்கள் பொங்கக்கூடாது என்று சொல்லுவார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ சிலருடைய உள்ளங்கள் பொங்கியிருக்கின்றன என்பதைச் சமீபத்தில் நாட்டு மக்கள் கண்டார்கள். குறிப்பாக, உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சீரும் சிறப்புமாக வெளியிடப்பட்ட மலர் ஒன்றில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்ட கருத்துக்குக் கோபம் கொண்டது போலவும், அதற்காக அந்த மலரை எரிக்க வேண்டும் என்றும் ஒருவர் ஒரு கருத்தினை வெளியிட்டார். மாநாட்டையொட்டி

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 ஜனவரி 30

வெளியிடப்பட்ட மலர்க் குழுவின் உறுப்பினன் என்ற முறையில் அந்த மலரில் என்ன கருத்து சொல்லப்பட்டிருக்கின்றது என்பதை நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்வது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"அமுதத் தமிழ் வளர்ப்போம்" என்று தமிழினுடைய பெருமையை எடுத்து விளக்கும் வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கட்டுரையை அதில் எழுதியிருக்கிறார்கள். அதில் "தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று சொல்லி தமிழின் பெருமையையும், வளத்தையும், வளமையையும் வடித்துக் காட்டி ஒரு இடத்தில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். "சிந்துவெளி நாகரிகம் அழிந்து பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து அறிந்த அறிஞர்கள் ஒரு கருத்தை உறுதியாக வெளியிடுகிறார்கள். அதாவது "மாறி வரும் காலத்தோடு மாற இயலாத நாகரிகம், வெளிநாட்டுத் தாக்குதல்களைத் தாங்க இயலாத நாகரிகம் ஆகும். ஆகவே அது அழிந்துவிட்டது" என்று அறிஞர்கள் வெளியிட்ட கருத்தை, அதிலே முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மலரையாவது வெளியிட வாருங்கள் என்று அவரை அழைத்த காரணத்தால், ஒரு வேளை அம்மலரை எரிக்கத் தூண்டியதோ என்னவோ நான் அறியேன்.

சிந்துவெளி நாகரிகம்பற்றி நாம் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரையார் அவர்கள் "தென்னாட்டுப் போர்க் களங்கள்" என்றதோர் நூலை எழுதியிருக்கிறார்கள். அதில் சிந்து வெளி நாகரிகம் பற்றிக் குறிப்பிடும்போது, "கி.மு. 3000 ஆண்டு அளவிலேயே அவர்கள் சிந்து, சேலம், சுமேர் ஆகிய இறந்துபட்ட நாகரிக வழிகளில் வாணிபம் செய்தும், குடியேறியும் நாகரிகத்தைப் பரப்பி இருந்தனர்" என்று எழுதியுள்ளார்கள். ஆக, தமிழ் அறிஞரான திரு. கா. அப்பாதுரையார் அவர்கள் வெளியிட்ட இந்தக் கருத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கருத்து ஒத்து வரவில்லை என்றால், நான் இன்னொரு நூலையும் ஆதாரமாகக் காட்ட விரும்புகிறேன். "தமிழ் நாட்டின் தொல் பழங்காலம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். "மக்களை இன அடிப்படையில் ஆழ்ந்து கண்ட உண்மைகள், எல்லோராலும் உடன்படத் தக்கவை. திராவிடர்கள் சிந்து மொழி பேசும் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்து இக்கால இன மரபியல், தொல் பொருளியல், மொழியியல் ஆகியவற்றைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்களால் தவறாகப் போய்விட்டது. சிந்திய மொழி இனம் என்று கூறுவதே ஒரு கற்பனையானது என்பதை மொழியியல், மானுடவியல் ஆராய்ச்சியியல் மூலம் புலனாகிறது" இந்த நூலுக்கு முன்னுரையும் அணிந்துரையும் எழுதியவர் மாநாட்டு மலருக்குத் தீ வைக்கவேண்டும் என்று கூறும் கலைஞர்தான் என்பதை நான்



1981 ஜனவரி 30] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒருவேளை அது ஆனந்தங்களின் வேலையாக இருக்கலாம், மறைமலைகளின் காரியங்களாக இருக்கலாம் அல்லது ராஜாக்களின் திருவிளையாடல்களாக இருக்கலாம் என்று அவர் சொன்னாலும், நான் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் கற்க ஆசிரியர்களை அனுப்பி வைக்க வேண்டும். அது தமிழ் மொழியைப் பரப்புவதற்குத் துணையாக இருக்கும் என்ற கருத்தை மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதையொட்டி, நான் ஒரு கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மொரீஷியஸ் நாட்டிலும் அதனை அடுத்து இருக்கிற சீசல்ஸ் டி யூனியன், மடகாஸ்கர் ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிற மொழி நம்முடைய பூர்வீகமான தமிழ் மொழியோடு பிரெஞ்சு மொழி கலந்து பேசப்படும் "கிரிலியோ" என்ற மொழியாகும். இவை இந்து மகா சமுத்திரத்தின் கரையோடுள்ள நாடுகள் அல்லது தீவுகளாக இருந்தாலும்கூட, அவைகளை அடுத்து வெகு தூரத்தில் இருக்கும் அட்லாண்டிக் மாகடலை ஒட்டியிருக்கும் கெயிட்டி, குவாடல்ஸ், மார்சேல்ஸ், மார்ட்டின் போன்ற பகுதிகளிலும் இது போன்றதொரு மொழியைப் பேசுகிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போது, எங்கெங்கோ பிரிந்து போயிருப்பவர்கள் நம்முடன் தொடர்புடையவர்களாக இருந்திருக்கக்கூடும் என்ற எண்ணம் தான் ஏற்படுகிறது. அவர்களுக்கெல்லாம் நமது மொழி உரிய காலத்தில் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்குமானால், நாம் எவ்வளவு பெரிய பரந்த இனமாக, உரிமை கொண்டாடுகிற இனமாக இருந்திருப்போம் என்று தெரிகிறது. இதற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையிலேதான் அங்கெல்லாம் தமிழ் ஆசிரியர்களை அனுப்ப வேண்டும் என்ற நல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று மழலை மொழியில் ஆளுநர் உரையில் சொல்லியிருப்பது இந்த அரசின் உணர்வைப் பிரதிபலிப்பதாகத்தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

மதுரை மாநாட்டைப்பற்றி நாம் பெருமையாகப் பேசுவது ஒருபுறம் இருந்தாலும், அந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்த பிறநாட்டு தமிழ் அறிஞர்கள் என்ன கருத்தைச் சொன்னார்கள் என்பதை நாம் இங்கே எண்ணிப் பார்ப்பதற்கு உதவியாக இன்றைய தினம் 'இந்து' பத்திரிகை ஒரு விவரத்தை வெளியிட்டிருக்கிறது.

பங்களாதேஷிலிருந்து வந்து மதுரைத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர் டாக்டர் மஸ்ஹல் இஸ்லாம் என்பவர் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

"I have observed that the ordinary people have a deep love for Mrs. Indira Gandhi, their Prime Minister, as an all-India leader and for Mr. M.G.R., their Chief Minister, as a Tamil leader."

அதோடு அவர் இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அது

"I have attended more than a dozen international conferences in the last two decades in different countries of Europe and Asia. But, so far as people's participation is concerned the Madurai Conference stands unique in my mind. I was never so much impressed before by a conference as I have been by the Fifth Tamil Conference".

இந்த அளவுக்குப் பங்களா தேஷிலிருந்து வந்த அறிஞர் கருத்து தெரிவித்திருக்கிறார். அந்த அளவுக்குத் தமிழுக்குப் பெருமை சேர்த்த நமது முதல்வர் அவர்களைப்பற்றி பலரும் என்ன கருத்து தெரிவித்தார்கள் என்பதையும் நாம் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

"ஸ்பாட் லைட் ஆன்" என்கிற பத்திரிகையில் "எம். ஜி. ஆர், எ ஹீரோ ஆன் அண்டு ஆஃப் தி ஸ்கிரீன்" என்ற ஒரு கட்டுரையில் "கோப்பர் ஹோரஷின்" என்ற அம்மையார் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் இரண்டு தொழிலாளர்களைப் பேட்டி கண்ட பிறகு, இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார். இரண்டு சாதாரண தொழிலாளர்கள் இந்த நாட்டு முதல்வர் அவர்களைப்பற்றி என்ன குறிப்பிட்டார்கள் என்பதை எழுதியிருக்கிறார். அதில் ஒருவர் சொல்கிறார்.

"Words cannot express the love that we people feel for him. Because of him and what he has done everything has improved for us".

இன்னொருவர்

"We have great confidence in him because what he says he will do, he does. He may have no children of his own; but we are all his children. That is how he treats us with love and understanding and we respond in the same way".

என்று குறிப்பிடுகிற அளவுக்கு, நாட்டு மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்த தலைவராக நமது முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள். இம் மாநாடு மூலம் அவர் தமிழுக்கு ஆற்றிய பணியைத் தமிழ்ச் சமுதாயம் உள்ளளவும் பெருமையோடு நினைத்துக்கொண்டிருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





(நண்பகல் 12-00)

அடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினைகளைப்பற்றி பலரும் நாட்டிலே பேசியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், அவருக்குத் தூது விடுகிற தூதுவனாக நான் போய் வந்தேன் என்று சொல்லுவதையும் கேட்டிருக்கிறோம். உள்ளபடியே விவசாயிகள் பிரச்சினைக்கு யார் பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் என்பதையும், எந்த அடிப்படையிலே அது வந்திருக்கிறது என்பதையும் நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டுகிறபோது கனரகத் தொழில்களுக்குத்தான் முக்கியத்துவம் தந்தோம். கனரகத் தொழில்களுக்கு முக்கியத்துவம் தந்தது தவறா, நியாயமா என்ற விவாதம் தேவையில்லை. நம்முடைய மாநிலம் விவசாயத்தை நம்பியிருக்கும் பகுதி. இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால், இப்போது அந்தப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டிய கட்டத்திலே நாம் இருப்போம். கனரகத் தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்ததன் காரணமாக விவசாயப் பாதிப்புக்கு ஆளாகியிருப்பது தமிழ் மாநிலம்தான் என்று அதனுடைய தொல்லைகளை நாம் அனுபவிக்கிறபோது உரியவர்கள் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டியது நியாயம் என்றும் கருதுகிறேன். அந்த முறையிலே விவசாயிகள் பிரச்சினையிலே இந்த அரசு அக்கறை காட்டுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள். "நாங்கள் நல்லெண்ணத்தோடு போராடுகிறோம், அதைத் தவறாகக் கருதத் தேவையில்லை" என்று சொன்னதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு சிலர் மக்களுக்குத் தொல்லை தருகிறார்கள். ஆட்சிக்குத் தொல்லை தருவது என்பது இயற்கை. ஆனாலுங்கூட அது மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்பதை அறியும்போதுதான் வருத்தம் ஏற்படுகிறது.

விவசாயத்திலே மறுமலர்ச்சி கண்டாக வேண்டும். சிறு விவசாயிகளுக்கு ஏற்ற வகையிலே சில காரியங்களைச் செய்ய வேண்டும். அமெரிக்காவில் ஹைட்ரோ சிஸ்டத்தில் மைக்ரோ கம்ப்யூட்டர்களை வைத்துச் சிறு விவசாயிகளுக்கு உதவி செய்கிறார்கள். உதாரணத்திற்கு, தக்காளிச் செடிக்கு ஏற்ற சீதோஷ்ணம் என்ன, அது எவ்வளவு நாட்களில் வளரும், அதற்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்ற விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு மைக்ரோ கம்ப்யூட்டர் முறையைப் புகுத்தி அங்கே வெற்றியடைந்திருக்கிறார்கள். அதையெல்லாம் நம்முடைய விவசாயத் துறையிலே அமுலாக்கி நல்ல மறுமலர்ச்சி உருவாக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

யார் யாரிடமோ யோசனையைக் கேட்கிறார்களே என்று சிலர் குறைபட்டுக்கொள்ளுகிறார்கள். ஒரு பேராசிரியருடைய நெஞ்சம் விம்முகிறது. சின்னஞ்சிறு யோசனையைக் கூட கேட்கிறார்களே என்று குறைபட்டுக்

கொண்டார்கள். தனி மனிதரிடத்திலே இருந்தாலும், நிர்வாகத்திடமிருந்தாலும் யோசனையைக் கேட்கிற தன்மை ஒரு அரசாங்கத்திற்கு மரியாதையையும், மதிப்பையும் தேடித் தரக்கூடியது. யாரையும் கேட்டு நடக்கவில்லை என்பதற்கு அண்ணா அவர்கள் அழகாகச் சொன்னார்கள். இராஜாஜி அவர்களுடைய படத்தைக் காட்டி உங்களையெல்லாம் யார் இயக்குகிறார்கள் என்று கேட்டபோது "மேலே இருப்பது இயக்கிக் கொண்டிருக்கிறது" என்று சொல்லி தலையை அசைத்துக் காட்டினார். அதாவது தலையில் உள்ள மூளை ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னார். அதைப் போல, புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணமும், அமைச்சர் பெருமக்களுடைய ஆலோசனையும் இந்த அரசை நடத்திக் கொண்டிருக்கிறது. நல்ல யோசனை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயங்குவதில்லை. நில உச்ச வரம்புச் சட்டம் வந்தபோது திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்தை, பரந்த மனப்பான்மையோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

காவிரி நீர்ப் பிரச்சினை வந்தபோது "நம்பூதிரிபாத் உங்கள் நண்பராக இருக்கிறார், சீக்கிரம் தீர்த்துவிடுங்கள்" என்று சொன்னபோது, அண்ணா அவர்கள் "தயவு செய்து இதைக் கொஞ்சம் அதிகமாகச் சத்தம் போட்டுச் சொல்லாதீர்கள். இங்கே அதிகம் பேசினால் அந்தச் சட்டமன்றத்திலே இதற்கு எதிர்ப்பு வந்துவிடும்" என்று சொன்னார்கள். அதைப் போல நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியால் காவிரி நீர்ப் பிரச்சினையில் ஒரு நல்ல முடிவு ஏற்பட இருப்பது வரவேற்கத்தக்கது. இதற்காக, சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருப்பதும் வரவேற்கத்தக்கது.

மின்சார அபிவிருத்தியைப்பற்றி, நாம் சிந்தனையைச் செலுத்தியாக வேண்டும். சவுதி அரேபியாவில் 50 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். 15 ஆண்டுக் காலத்திற்கு எவ்வளவு மின்சாரம் தேவையென்று அமெரிக்க நிறுவனத்தை வைத்துக் கணக்கிட்டிருக்கிறார்கள். வருகிற 15 ஆண்டுகளுக்கு 70,000 மெகாவாட் மின்சாரம் தேவையென்று அறிந்து அதற்கான திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் 22,000 மெகாவாட் மின்சாரத்தை, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். சென்ட்ரல் எலெக்ட்ரிசிட்டி அத்தாரிட்டி அதாவது சென்ட்டிரல் வாட்டர் அண்டு பவர் கமிஷன் இந்த முடிவில் இருக்கிறபோது, தமிழகத்தின் சார்பாக ஒன்றை நாம் நினைவுபடுத்தியாக வேண்டும். நம்முடைய மின் திட்டங்களை நிறைவேற்ற இந்தியாவில் உள்ள "பெல்"





தொழிற்கூடங்களிலிருந்து மின் இயந்திரங்களைத் தர வேண்டும் என்றும், அப்படித் தர முடியாது என்றால், வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துத் தர வேண்டும் என்றும் கேட்க வேண்டும்.

பக்கிங்காம் & கர்நாடிக் மில் பற்றிப் பெரிய முழக்கங்கள் செய்யப்படுகின்றன. ஏதோ இந்த அரசுதான் தவறு செய்ததைப் போலவும், அரசு அந்த ஆலையை ஏற்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். இது மூன்று பேர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஒன்று தொழிலாளர்கள், இரண்டாவது அந்த நிறுவனம், மூன்றாவது மத்திய அரசு. இதிலே மாநில அரசு அந்த மூன்று பேர்களுக்கும் ஒட்டுமொத்தமான ஒரு நிலையை உருவாக்கக் கூடிய நிலையிலே இருக்கிறதென்று முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையால் 13 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் டெவலெப்மெண்ட் பேங்க் ஆஃப் இந்தியா, இண்டஸ்ட்ரியல் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் ஆகியவைகள் கல்கத்தாவிலே அமைந்திருக்கின்ற காரணத்தாலே, கல்கத்தாவைச் சுற்றியிருக்கிற பகுதிகள் பயன் பெற்றிருக்கின்றன என்று பல பேர் பத்திரிகையிலே பேசியிருக்கிறார்கள். அந்த நிறுவனங்களைப் பயன்படுத்தி, இந்தத் தொழிற்சாலையைத் திறந்து 13 ஆயிரம் தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெறச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, கல்கத்தாவில் இதைவிட அதிகமான எண்ணிக்கையுள்ள மில்கள் மூடிக்கிடக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கும் வேலையிழந்து இருக்கிறார்கள் என்பதைத் தகவலுக்காகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** என்னை விட அதிகமாக அகில இந்திய அரசியலைத் தெரிந்து வைத்திருப்பவர் மாண்புமிகு உறுப்பினர், என்ற வகையிலே நான் அவர் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளுகிறேன். "இந்தியா டுடே" என்ற பத்திரிகையில் போட்டிருப்பதைப் படித்துவிட்டுத்தான் நான் அப்படிச் சொன்னேன். அப்படிப்பட்டதொரு எண்ணம் இன்றைக்கு இருக்கிறது. கல்கத்தாவில் உள்ளவர்கள்தான் அதிகம் பயன்படுகிறார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. அப்படி இல்லையென்றால், தவறு என்பதை ஒப்புக் கொள்கிறேன். இல்லையென்றால் அதை நான் பாராட்டுகிறேன். இண்டஸ்ட்ரியல் டெவலெப்மெண்ட் பாங்க் ஆஃப் இந்தியா, இண்டஸ்ட்ரியல் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் ஆகியவைகளின் உதவியைப் பெற்று இந்த மில்லை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைப்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று தெரிவித்துக்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 ஜனவரி 30

கல்வியைப் பொறுத்த வரையில், 1949-50 ஆம் ஆண்டில் 15,303 ஆரம்பப் பள்ளிகள் இருந்த நிலைமை மாறி இன்றைக்கு 33 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகள் தமிழகத்திலே இருக்கின்றன. 6 முதல் 14 வயது வரை உள்ள படித்தவர்களின் எண்ணிக்கை 18 இலட்சமாக இருந்தது, இன்றைக்கு 68 லட்சமாக உயர்ந்திருக்கிறது. ஒரு ஆசிரியருக்கு 38 மாணவர்கள் என்ற கணக்கு மாறி, ஒரு ஆசிரியருக்கு 60 பிள்ளைகள் என்ற அளவுக்கு இன்றைக்கு நிலைமை மாறியிருக்கிறது. கல்லூரிகளுக்குத் தன்னுரிமை வழங்கும் முதல் முயற்சி தமிழ் நாட்டில்தான் எடுக்கப்பட்டு, 14 கல்லூரிகள் இன்றைக்குத் தன்னுரிமையோடு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் உள்ள தொழிற்கல்வியைக் கணக்கிட்டால், தமிழ் நாட்டிலேதான் 52 ஆயிரம் மாணவர்கள் போதுமான ஆய்வுக்கூட வசதிகள் இல்லாத நிலையில் தொழிற்கல்வியைப் பயின்று கொண்டிருக்கிறார்கள். 1947 ஆம் ஆண்டு 24 கல்லூரிகளும், அதில் படிக்கும் 17 ஆயிரம் மாணவர்களும் இருந்தார்கள். ஆனால் இன்று தமிழகத்தில் 157 கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் 1,33,000 மாணவர்கள் பயில்கிறார்கள். ஆகவே பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

மேலும் பல திட்டங்கள் போடப்பட்டுள்ளன. சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் போடப்பட்டிருக்கின்றது. ஒரு நாளைக்கு 995 மில்லியன் லிட்டர் நீரைக் கொண்டுவரக்கூடிய வேலையை ஐந்தாண்டுக்குள் மேற்கொள்ளவிருக்கிறது அரசு. மாஸ் ராப்பிட் டிரான்சிட் சிஸ்டத்தின் மூலம் 60 கோடி ரூபாய் செலவில், சென்னை நகரப் போக்குவரத்தை எளிமைப் படுத்துகிற திட்டம், சுற்றுலா நோக்கோடு விமானப் போக்குவரத்தை அமைத்தல் போன்ற திட்டங்கள் போடப்பட்டுள்ளன. இதை மத்திய அரசு செய்யவில்லையென்றால், மாநில அரசு பொறுப்பு ஏற்றுச் செய்கிற நிலை வரவேண்டும். இதையெல்லாம் செய்கிறபோது, பணம் எங்கே என்ற கேள்வி வருகிறது. அதற்கு ஏதாவது வழிவகையை இந்த அரசு காண வேண்டும். அப்போதுதான் மதுவிலக்குப் பிரச்சினை நம் முன்னாலே வருகிறது. இராஜாஜி அவர்கள் மதுவிலக்கைக் கொண்டு வந்தபோது ஒரு வாக்குறுதியைத் தந்தார்கள்.

"I want to assure, on behalf of the Government, those Hon. Members who have any apprehensions in regard to the matter that it is not the intention of the Government to allow harassment, blackmailing and things of that kind. It will not permit social and private life being uprooted, so to say, on suspicion and things of that kind."

ஆனால் நடைமுறையிலே என்ன நடந்தது என்றால், அச்சுறுத்தல்களும் காவல் துறையினர் தங்கள் இஷ்டம் போல் நடக்கும் சூழ்நிலையும் வந்தது.



1981 ஜனவரி 30] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அப்போது இராஜாஜி அவர்கள் சொன்னதை அமுல்படுத்துவதில் என்ன நிலை இருந்தது என்பதைக் குறித்து ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். அப்போது இராஜாஜி அவர்கள் பிரதமர் என்று அழைக்கப்பட்டார். 1937 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி அன்று ரத்து செய்யப்பட்ட நேரத்தில் அப்போது ஆளுநராக இருந்த திரு. எர்ஸ்கின் என்பவர் திரு. பி. ஜே. கிரிக்குக் கடிதம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிடுவது—

"As a matter of fact, I would like to tell you very confidently indeed, and I hope you would not mention this to Mr. Rajagopalachari . . . ."

ராஜாஜி அவர்களுக்கு நீங்கள் தெரிவிக்க மாட்டீர்கள் என்று கருதி நான் சொல்ல விரும்புகிறேன் என்று ஆரம்பித்து எழுதியிருக்கிறார்.

". . that we are only to extend Prohibition to one district next year and even then not till October. You and I may only think of Prohibition as a ridiculous policy and we may well believe that it may only result in throwing away a large amount of money without, at the same time, doing a great deal to minimise the drink evil."

என்று அந்தக் காலத்திலேயே ஆளுநர் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

(பிற்பகல் 12-10)

(மாற்றுத் தலைவர் திரு. க. அருணாசலம் தலைமை)

பிறகு சேலத்திலே இந்த மதுவிலக்குத் திட்டம் எந்த அளவுக்கு நடந்தது என்று கணக்கிட்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே 1939-லே ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். அப்போது அந்த விவாதம் நடந்ததைப் பற்றியும் சொன்னார்கள். சர் வில்லியம் நைட்ஸ் என்பவர் ரூ. 4½ கோடி போகிறதே, எப்படி அதை ஈடுகட்டப்போகிறீர்கள் என்றார். அதுபோல கேரள மாநிலத்திலேயும் அந்த மதுவிலக்கை அமுல் படுத்துவதற்கு சுமார் ரூ. 26,22,000 செலவானது. ஆனால் இவ்வளவு செலவு செய்தும் அதிலே வெற்றி அடைந்தோமா என்பது ஒரு கால கட்டத்திலே கேள்விக் குறியாகவே இருந்தது. அமெரிக்க நாட்டிலேயும் இதைச் செய்தார்கள். ஆனால் அவர்களுடைய நிலை என்ன என்பதற்கு ஒரு ஆராய்ச்சி எழுந்தது. Intemperance என்ற நூலிலே இந்தக் கதை முழுவதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது இந்த மதுவிலக்கு 1920 ஜனவரி 16 தேதியில் கொண்டுவரப்பட்டது. அதைப்பற்றி அவர் என்ன குறிப்பிட்டிருக்கிறார்?

"At midnight on January 16, 1920, the Eighteenth Amendment became law. Americans said good-bye to legalised liquor and a 13-year on bootleggers began."

ஆனால் மதுவிலக்கு வந்ததே தவிர, கள்ளச் சாராயத்தினுடைய சண்டை அல்லது அவர்களுடைய போராட்டம் 13 ஆண்டு காலமாக நடந்தது என்ற நிலைமைகளைத்தான் குறிப்பிட்டிருக்கிறார். ‘ பூட்லெக்கர்ஸ் ’ என்ற வார்த்தையே அமெரிக்க நாட்டிலே அவர்கள் பூட்டிலே பாட்டிலை வைத்துக் கொண்டு போனதாலே தான் வந்தது என்று சொல்கிறார்கள். இந்தத் திட்டம் ஒரு பெரிய திட்டம். காந்தியார் அவர்கள் ஏற்றுக்கொண்ட ஒரு திட்டம். காந்தியார் வழியிலே வந்த நாம் இந்தத் திட்டத்தில் உள்ள உண்மையை, நியாயத்தை புரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் அதை நடைமுறைப் படுத்துவதிலே இருக்கின்ற சிரமங்களையும், அதனால் ஏற்படுகின்ற இழப்பையும் பார்க்கிறபோது, இதற்கு உங்களுடைய ஆலோசனை என்ன என்று ஆளுநர் அவர்கள் உரையிலே கேட்டிருக்கிறார்கள். அதிலேயும் நியாயம் இருக்கிறது. அதற்காக திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் ‘ எங்களை ஏன் கேட்கிறார்கள் ? ’ என்று கோபப்படுவதும் நியாயம் தான். அதற்குக் காரணம் ‘ எங்களைத் தனிப்பட்ட முறையிலே கேட்க வேண்டிய தேவையில்லை. எங்களுடைய கருத்தை, எங்களுடைய கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள், ஏற்கெனவே சொல்லியிருக்கிறார் ’ என்று சொல்கிறார்கள். அது எப்போது சொல்லியிருக்கிறார்கள் என்றால் 1971 ஜூன் 19 ஆம் தேதி சொல்லியிருக்கிறார். அது ‘ கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாள்தான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் ? ” என்று. அந்தக் கேள்வி இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது.

* திரு. க. இராமமூர்த்தி : கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக இருந்து சொன்னார்கள். உறுப்பினர் அவர்களையும் அடங்கிய ஒரு கட்சியின் தலைவராக இருந்து, உறுப்பினர் அவர்களுக்கும் சேர்த்துத்தான் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது தான் அதையெல்லாம் தேடுகின்ற அவசியம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இதில் இன்னொன்றைச் சொல்கிறேன். அந்தக் கருத்து ஒருவேளை இப்போது தேவைப்படுகின்ற நேரத்தில், இந்தக் கருத்தினுடைய நியாயத்தை, அவர் சொன்னதை இணைத்து நான் சொல்கிறேன். அதற்குக் காரணம் ‘ எங்களை எல்லாம் ஏன் கேட்கிறீர்கள் ? அவர் அன்றைக்கே சொல்லி வைத்திருக்கிறாரே ’ என்றுதான் அவர்கள் சொல்லாமல் சொல்கிறார்களோ என்றுதான் நான் இங்கு கருதுகிறேன்.



அடுத்து, எல்லாவற்றிற்கும் மேலாக ஆளுநர் உரையில் வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டம் வகுக்கப்பட்டு, அதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபடும் என்று ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. வெளி நாடுகளிலே, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் தனி மனிதனுக்கு ‘ சோசியல் செக்யூரிடி ’ என்று இருக்கிறது.

திரு. ப. மாணிக்கம் : மது விலக்குபற்றி, கடந்த காலங்களில் நடந்த அனுபவங்களைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் சொல்கின்றார்கள். இந்த மதுவிலக்குபற்றி அங்கத்தினர் அவர்களுடைய நிலை என்ன என்பதைக் குறிப்பிடாமல் போகிறார்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது தனிப்பட்ட நிலை என்பது அல்ல. பலருடைய ஒன்றுதிரண்ட கருத்துக்களைப் பெற்று இந்த நிலைமைகளை எப்படிச் சமாளிப்பது என்று பார்க்க வேண்டும். அதனால், இந்த அவையிலே பலரும் தெரிவிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலேதான் அரசு முடிவு எடுக்கும் என்று கருதுகிறேன். ஆனால் நமக்கு இருக்கின்ற பிரச்சினை எல்லாம் இந்தச் சிரமங்களை நாம் எப்படிச் சந்திக்கப் போகிறோம் ? இவ்வளவு இழப்பு ஒரு பக்கம், இன்னொரு பக்கம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கட்டான நிலை இருக்கிறதே என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். இதைத் தான் நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை. வெளிநாடுகளிலே தனி மனிதனுக்கு வாழ வழி செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இன்னமும் நம் நாட்டிலே கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை இருக்கிறது. அப்படி இருக்கின்ற காரணத்தினாலே, குடும்பத்திலே ஒருவருக்கு வேலை தருவது என்பது அந்தக் குடும்பத்திற்கு ஓரளவுக்குத் துணையாக இருக்கும். அந்த சோசியல் செக்யூரிடியை நாம் கொடுக்க வேண்டும். இந்தச் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க நியாயமான ஒரு இடத்தை அனைவருக்கும் தரமுடியாத கஷ்டம் இருக்கிறது. நம் நாட்டில் இன்னமும் வேலை இல்லாமல் இருக்கிற நிலைமைகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போதுதான் நாம் எண்ணுகிறோம். இன்னமும் எதிர்காலம் பயங்கரமாக இருக்கும். நாடு அந்த நிலைக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறது.

‘ ப்ராப்ளம்ஸ் ஆஃப் அன்எம்ப்ளாய்மெண்ட் ’ என்ற கட்டுரையிலே திரு. ஆர். கே. சின்ஹா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 2,000 ஆம் ஆண்டில் அவர்கள் எண்ணிக்கை 10 கோடிக்குப் போகும் என்றும், 1976-ல் ஐந்து கோடிப் பேருக்கு இருந்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள்

வேலைக்காக மனுச் செய்திருக்கிறார்கள். அவர்களில் 50 ஆயிரம் பேர்களுக்கு, பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்கு, வேலையில்லாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய சிரமத்தை நாம் எதிர்காலத்திலே, எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக குடும்பத்திலே ஒருவராவது வேலை பெற்றுக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற அளவிலே திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்திலே வந்திருக்கின்ற நாம், கம்யூனல் ஜி.ஓ. பிற்பட்ட மக்கள், சமுதாயத்தில் நல்ல வாழ்க்கையைப் பெறுவதற்காக வாதாடியவர்களாக இருக்கின்ற நாம், அடுத்த கட்டமாக ஒரு குடும்பத்திலே ஒருவராவது வேலை பெறவேண்டுமென்ற அரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற புரட்சித் தலைவருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நல்ல எண்ணங்களோடு கூடிய இந்த ஆளுநர் அவர்களின் உரையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எந்த ஒரு ஆட்சியையும் எடைபோடுவது அந்த ஆட்சியினுடைய நிர்வாக நிலைகளையும், திறமைகளையும், அவர்கள் காட்டுகின்ற சிறப்பான வழிமுறைகளையும் வைத்துத்தான். இவைகளை வைத்துத்தான் இந்த ஆட்சியையும் எடைபோடுகின்ற நிலை ஏற்படுகிறது. அப்படி எடைபோடுகின்ற ஒரு வாய்ப்பாகத்தான் ஆளுநர் அவர்கள் உரை இருக்கிறது என்பது இந்த அவையிலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியும். இந்த ஆண்டு ஆளுநர் உரை சிலவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. பலவற்றைச் சுட்டிக்காட்டவேயில்லையென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரையிலேயே எல்லாவற்றையும் சொல்லிவிட முடியாது. ஆனால், முக்கியமான சிலவற்றைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஒரு ஆட்சியினுடைய வலிமையை, வல்லமையை எடை போடுவதற்கு ஆங்கிலத்திலே சொல்வார்கள். ஒருவரைப் பற்றிச் சொல்வதானால், "Tell me your friends, I will tell you who you are" "உங்கள் நண்பர்களைச் சொல்லுங்கள், நீங்கள் யார் என்று நான் மதிப்பிட்டுச் சொல்கிறேன்" என்று சொல்வார்கள். அதுபோல, தமிழகத்தைப் பொறுத்த வரையில், அவர்களுடைய நிர்வாகத் திறமை எப்படி ஆண்டுக்காண்டு மாறுபட்டிருக்கிறது என்பதை விட, அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் படிப்படியாக வேகம் குறைந்திருக்கின்றன, அவர்களுடைய திறமையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த ஆளுநர் அவர்கள் உரையில் காட்டத் தவறியிருக்கிறார்கள். மிகப் பெரிய முடிவுகளையெல்லாம் எடுக்கிறார்கள். அதற்கான பிரச்சாரங்கள் பலமாக நடைபெற்று வருகின்றன. மிகப் பெரிய



அளவிலே, சமுதாயத்தைப் பாதிக்கின்ற முடிவுகளை எடுக்கிறார்கள். அதனுடைய விளைவுகளை இந்த அரசு எப்படி சந்திக்க இருக்கின்றது? அதனாலே ஏற்படுகின்ற பிரச்சினைகளை எப்படித் தீர்க்க இருக்கிறார்கள் என்பதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. அதற்கான ஏற்பாடுகளாவது செய்யப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டவேண்டியவனாக இருக்கிறேன்.

சமீபத்திலே கிராம உத்தியோகஸ்தர்கள் அந்தப் பதவிகளிலே இல்லை என்று ஆக்கியிருக்கிறார்கள். அதற்கு என்று அவசரச் சட்டம்கூட வந்தது. அவசரச் சட்ட அதிகாரம் காலம் காலமாக இருந்துகொண்டிருக்கிறது. அது ஒரு அமைப்பையே தீர்த்துக் கட்டுகிறது. அப்படிச் செய்வதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதிலே இருக்கின்ற வேகத்தைப் பாராட்டுகிறேன். அப்படி ஒரு அமைப்பைக் கலைக்கின்றபோது, அதனாலே ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும். அதற்காக எடுத்த நடைமுறைகள், நடவடிக்கைகள் முறையாக இருந்திருக்க வேண்டும். கிராம உத்யோகஸ்தர்கள் பணி போயிற்று. 25 ஆயிரம் கிராம உத்தியோகஸ்தர்கள் வேலையில் இருந்தார்கள். அவர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். புதிதாக 12 ஆயிரம் பேர்களுக்கு கிராம அதிகாரிகளாகப் பணி கொடுக்கப்போகிறார்கள். 25 ஆயிரம் பேர்கள் இருந்த இடங்களில் இப்போது 12 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறதாகச் சொல்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமாக உருவாகிக்கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் இப்போது 25 ஆயிரம் பேர்கள் பணியில் இருந்த இடங்களில் 12 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கப்போகிறார்கள். அப்படியென்றால் மீதியுள்ள 13 ஆயிரம் பேர்கள் பணியில்லாமல் வீதியிலே நிற்பதா? இந்த நிலையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்துவிடப் போகிறோம் என்று சொல்வது விந்தைக்குரியதாக இருக்கிறது.

கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் வரி கட்டுவது என்பது ஒரு உரிமை. அரசாங்கத்திற்கு வரி கட்டுவதை ஒரு உரிமையாக அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இன்றைக்கு வரி வசூல் இயந்திரமே செயல்படவில்லையே. பல இடங்களிலே வசூல் பணிகள் நடைபெறுகின்றனவா என்றால், இல்லை. அவைகள் நடக்காமல்தான் இருக்கின்றன. சொத்துப் பட்டியல் சான்றிதழ் வேண்டுமென்றால் யார் கொடுப்பது? நீதி மன்றங்களுக்குத் தேவையான வழக்குகளை சந்தித்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்குத் தேவையான

சான்றிதழ்களை யார் கொடுப்பது. சிவில் துறையா அல்லது கிரிமினல் துறையா ? எந்தத் துறையானாலும், கிராம மக்களுக்கு தேவையான சர்டிபிகேட்டுக்களை யார் கொடுப்பது ? யாராவது ஜாமின் கொடுப்பதாக இருந்தால் அவருடைய சொத்துக்கு சர்டிபிகேட் யார் கொடுப்பது ? கடன் சம்பந்தமாக வழக்குகள் இருந்தால், அதற்கு வேண்டிய சொத்துப் பட்டியலை யார் கொடுப்பது ? என்னென்ன விளை பொருள்கள் எந்தெந்த நிலங்களிலே விளைகின்றன என்று சான்றிதழ் கொடுப்பதற்கு, எந்தக் கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள் ? அங்கே பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றனவா ? அமைச்சர்கள் எல்லாம் இங்கே நடப்பதாகச் சொல்லலாம் ; கேள்வி நேரத்திலே கேட்கின்றபோது சொல்லலாம் ; ஆனால் யாரும் இடைமறித்துப் பேச முடியாது. அந்த இயந்திரம் ஸ்தம்பித்துவிட்டது என்பதை நான் சொல்கிறேன். அது மட்டுமல்ல, கிராம நிர்வாகம் சீர்குலைந்து போயிருக்கிறது. இப்போது பஞ்சாயத்துக்கள் கிடையாது ; மக்களுடைய பிரதிநிதிகள் கிடையாது ; முன்பு பஞ்சாயத்துத் தலைவர்களாவது அதை யெல்லாம் சேர்த்துச் சொல்வதற்கென்று இருந்தார்கள். அவர்களை ஒழித்துக் கட்டியாயிற்று. அவர்கள் இல்லாதபோது, கிராம மணியக்காரர், கணக்கர்கள் இருந்தார்கள். அவர்களையும் ஒழித்துவிட்டார்கள். அவர்களை ஒழிக்கின்ற போது சொன்னார்கள், அவர்கள் எல்லாம் பழைய காலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எல்லாம் தங்களுடைய பதவிகளைத் தவறாகப் பயன்படுத்து கிறார்கள். அவர்கள் எல்லாம் ஜமீன்தார் பரம்பரையினுடைய வாரிசுகள். அதற்காகத்தான் ஒழிக்கிறோம் என்று சொன்னார்கள் ; ஒழித்துவிட்டார்கள் அதற்கு மாற்று ஏற்பாடு செய்தார்களா ? அதனுடைய விளைவு என்ன ? எங்கும் குழப்பம் தான் உருவாகியிருக்கிறது. குழப்பம் உருவாகியிருக்கிறதே, அதற்கு என்ன பதில் ? இந்த நிலைமைகள் உருவாவதற்கு முன்பாக துறை அதிகாரிகளைக் கலந்து ஆலோசித்தார்களா ? அதைப்பற்றி அவர்களுடன் யோசிக்க வேண்டாமா ? ரெவின்யூ அதிகாரிகளை வைத்து ஆலோசிக்க வேண்டாமா ? பஞ்சாயத்துக்கள் இல்லாதபோது ஸ்பெஷல் ஆபிசர்களையாவது போட்டார்கள். கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக உடனடியாக யாரைப் போட்டார்கள் ? உடனடியாக அவசரச் சட்டம் போட்டார்கள். அந்த அவசரச் சட்டத்தின் மூலமாக அந்த அமைப்பைக் கலைத்து குழப்பத்தைத் தான் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த மாதிரி குழப்பங்கள் உருவாகாமலிருக்க முன்கூட்டியே ஒரு முடிவு எடுத்து அதைச் செய்திருந்தால், என்ன கெட்டுப் போயிருக்கும் ? அப்படிச் செய்திருந்தால், இந்தத் தமிழகம் இந்த விதத்திலே பாதிக்கப்பட்டிருக்காது. இப்படிச் செய்தது ஒரு விளம்பரத்திற்காக என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் திட்டமிட்டு ஏன் செயல்படவில்லை என்பதைத் தான் சொல்கிறேன். ஆலோசனை சொல்பவர்கள் எதையோ சொல்கிறார்கள். அதற்காக என்று ஒரு சட்டம். அதுவும் ஒரு அவசரச்





சட்டமே வருகிறது. அதனுடைய விளைவுகளை நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இது ஒன்றிலே மட்டுமல்ல. பேருந்துக் கட்டண

(பிற்பகல் 12-20)

உயர்வைப் பொறுத்த வரையில், சமீபத்தில் ஒரு நாடகமே நடந்தது. பெட்ரோல் விலை உயர்ந்தது என்பதற்காக, பேருந்துக் கட்டணங்களை உயர்த்தினார்கள். முதலிலே அதிகமாக உயர்த்தி, பிறகு எல்லோரையும் அழைத்து, அதைக் குறைப்பதற்காக ஏற்பாடு செய்தார்கள். குறைத்த பிறகு, பேருந்துக் கட்டணங்களைக் குறைத்துவிட்டோமென்று விளம்பரம் செய்தார்கள். ஒட்டகத்தின்மீது சுமையை ஏற்றிவிட்டு, கடைசியில் எதை யாவது லேசாக எடுத்துவிட்டால், சுமையை எடுத்துவிட்டார்களென்று நினைத்து அதுவும் சென்று கொண்டிருக்கும். சென்ற முறை இப்படி நடை பெற்றது. இந்த முறையும் அது நடைபெறப் போகிறதென்று நினைக்கிறேன். இதுபோன்ற நிலைமைகளை அரசு தவிர்ப்பது நல்லது.

நிர்வாக இயந்திரம் பழுதுபடுமானால், நாளைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மட்டுமல்ல, வேறு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அதைச் சீர்படுத்துவது என்பது முடியாத ஒன்றாகும். ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அத்தனை பேர்களும், நிர்வாக இயந்திரம் பழுதடைய இடம் கொடுக்கக்கூடாதென்று தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்தில் பல பிரச்சினைகள் குறித்து முடிவுகள் எடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டது. அதை நான் சொல்லியிருக்கிறேன். இன்று காவல் துறையில் Director-General of Police அவர்களின் பதவிக் காலம் முடிவடைந்தது. இருந்தும் அவருக்கு 6 மாதக் காலம் பதவி நீட்டிப்பு தரப்பட்டது. அவருக்குக் கீழ் 5 ஐ.ஜி.-க்கள் இருக்கிறார்கள். ஒருவருக்கு, ஐவராக இருக்கிறார்கள். அதே தகுதியில் வேறு இருவர் இருக்கிறார்களென்ற தகவலும் கிடைத்திருக்கிறது. இத்தனை பேர்களையும் வைத்துக்கொண்டு, ஒருவர் ஓய்வு பெறும்போது, அடுத்தவர் அந்தப் பதவிற்குப் போகிறார் என்ற நிலை இல்லாமல், பதவியிலிருந்து ஓய்வு பெறுபவருக்கே பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுத்தால், அது ஏன் என்று புரியவில்லை. ஏன் இந்த அரசுக்குத் தடுமாற்றம் ? முறைப்படி பதவி உயர்வு பெற வேண்டியவர்கள் இதன் காரணமாகச் சலித்துக்கொள்வார்கள். பதவி உயர்வில் தேக்கம் ஏற்படுவதால், காவல் துறையில் அடிமட்டத்திலிருக்கும் கான்ஸ்டபிள் வரை இதனால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காமல் போகிறது. அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதைத் தடுப்பது முறைதானா என்பது மட்டுமல்ல, இது எங்கே போய் முடியுமென்று பார்க்க வேண்டும். இருக்கின்ற டி.ஜி.பி. (D.G.P.) அவர்களின் திறமையை பற்றிக் குறை சொல்லவில்லை.

அவர் எவ்வளவு பெரிய திறமைசாலியாக இருந்தாலும், அவருக்கு அடுத்து இன்னொருவரை உடனடியாகப் போட அவருக்குத் திறமையில்லை என்று ஏற்றுக் கொள்ளச் சொல்லுகிறீர்களா ? நிச்சயமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத் திறமையின்மை இருப்பதாகக் கருதவில்லை. ஆனால் ஏன் இந்தத் தடுமாற்றம் ? இது நல்லதா ? ஒவ்வொரு பதவிக்கும், இவரைப் போடுவதா, அவரைப் போடுவதா என்று தடுமாற்றத்திற்குள்ளாகும் நிலைமையை எப்போது போக்கப் போகிறார்கள் ? இப்படிப்பட்ட நிலையை உருவாக்கினால், அமைச்சர்களைச் சுற்றி அதிகாரிகள் வந்துகொண்டேயிருப்பார்கள். அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் சுற்றி அதிகாரிகள் வந்துகொண்டேயிருப்பார்கள் . . .

THIRU G. SWAMINATHAN: May I ask the hon. Member how many posts of Secretaries to the Government of India and key posts in Public Undertakings of the Government of India have not been filled up for the last two years ?

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் இருந்து, இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால், உடனடியாகப் பதிலளித்திருப்பார்கள். இப்போது நான் மாநிலத்தின் ஆட்சியைப்பற்றி விமர்சித்துக்கொண்டிருக்கிறேன்.

நமது மாநிலத்தில் நிர்வாக இயந்திரம் பழுதுபட்டிருக்கிறதென்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி & சி மில் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நமக்குள் அதில் அதிக மாறுபாடில்லை. நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அதில் இந்த ஆட்சி என்ன செய்திருக்கிறது ? இந்த ஆட்சியின் கருத்து என்ன ? மத்திய ஆட்சி அந்த ஆலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறோம். மத்திய அரசு அந்த ஆலையைத் திறக்க துணையிருக்க வேண்டுமென்று கேட்கிறோம். அந்த ஆலை மூடப்படுவதன் மூலமாகத் தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுமென்று சொல்லுகிறோம். மத்திய அரசு இந்த அடிப்படையிலே ஆலையை ஏற்க வேண்டும். நாங்கள் இதைச் செய்திருக்கிறோம், மில்லை மூடியதற்கான சங்கடங்கள் இன்னின்ன, அவற்றை இப்படி இப்படித் தவிர்க்க வேண்டுமென்ற தகவல்களை ஏன் மாநில அரசு மத்திய அரசுக்குக் கொடுக்கவில்லை ? ஏன் அவை மறைவாக இருக்க வேண்டும் ? மத்திய அரசு முன்வரவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை, அந்த மில்லை பழமையான மில், ஜங்க் என்று சொல்லுகிறார்கள், அது பெரிய தவறு என்ற வாதம் இருந்து கொண்டிருப்பதே தவறு. அந்த மில் மிகப் பெரும் நஷ்டத்தில் நடந்துகொண்டிருக்கிறது, பல முறை, அதை மூடிவிட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது. மூடுகின்ற நிலை





ஏற்பட்டபோது, பல கோடி ரூபாய் அந்த மில்லுக்கு மத்திய அரசின் துணையோடு கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் லாபத்தில் அந்த மில் நடைபெறவில்லை. இத்தனையும் நடந்த பிறகு, இப்போது பிரச்சினை உருவாகியிருக்கிறது. இதில்தான் இந்த ஆட்சியின் நிலைமை, தமிழக அரசு இந்தக் கருத்தை இதில் கொண்டிருக்கிறது என்று வலியுறுத்திச் சொல்ல வேண்டும். இந்த அரசின் கருத்து என்ன என்பதைப் பற்றி மத்திய அரசும், இந்த அரசும் மட்டும் பேசிக்கொள்வது போதாது. எங்களுக்கும் தெரிந்தாக வேண்டும். ஏன் மூடி மறைக்கப்படுகிறது ? தெளிவாக ஏன் வெளிவரவில்லை ? அதைத் தெளிவுபடுத்தினால், அதிலுள்ள சங்கடங்கள் தீர வாய்ப்பு இருக்கும். அப்படி இல்லாமலிருந்தால், இதையும் மத்திய அரசுக்கு எதிராக ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த, மற்றவர்களுக்கும் வாய்ப்பு ஏற்படும். இது நல்லதாக இராது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்மீது நாங்கள் மிகுந்த அன்பு கொண்டவர்கள். நாங்கள் அவ்வளவு பேரும் இங்கே உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் அவருடைய இடைக்கால நண்பர்கள் யாரும் இங்கே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் எங்கே போய்விடுவார்களோ என்று பார்த்தேன். நாங்கள்தான் உங்கள் நண்பர்கள். நாங்கள் திசை திருப்ப மாட்டோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** எங்களுக்கு அரசியல் விரோதிகளே கிடையாது. நாங்கள் நண்பர்களைப் பல இடங்களிலிருந்து பார்க்கிறவர்கள். நாங்கள் நிரந்தரமாக நின்றுகொண்டிருப்பதும், பல நேரங்களில் அவசியமில்லாதபோது எங்களோடு துணை இருப்பதும், சில நேரங்களில் எங்களோடு பேசுவதற்கு, எங்களைப் பார்ப்பதற்குப் பயந்து ஓடுகின்ற நண்பர்களையும் பல கட்சிகளில் கண்டவர்கள் . . . பல நேரங்களில் கண்டவர்கள் நாங்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பொதுவாகப் பேசுகின்றபோது, ‘ தைரியம் ’ சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். பயந்து ஓடுவதென்பது தமிழனுக்கு என்றைக்கும் கிடையாது. திராவிட இயக்கத்தைச் சேர்ந்த யாருக்குமே அது கிடையாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் ரீதியான உறவுகள் ஏற்படும்போது, உறுப்பினர் அவர்கள் சொல்லும் வாதம் உறுப்பினருக்கே கூட பயன்படும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யாருமே, அந்தச் சந்தர்ப்பத்திலும் பயத்தின் காரணமாக அரசியல் உறவுகளை மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 ஜனவரி 3

திரு. க. இராமமூர்த்தி : பயமில்லாத, வேறு காரணங்களுக்காக இந் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது இன்னும் அதனுடை பின்னணியைத் தெளிவாக்குகிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சரவ களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே இதுபோன்ற பிரச்சினைகளிலே தெளிவில்லாத நிலை இருக்கிறத அதைப் போன்றுதான் இன்னொரு பிரச்சினையும் வந்திருக்கிறது. உயர்நீ மன்றத் தலைமை நீதிபதி மாற்றல் பற்றிய பிரச்சினை அது. அது வழக் மன்றத்திலே இருக்கிறது. எனவே அதன் விவரம்பற்றிப் பேச மாட்டேன் என்ன நடைபெறுகிறதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக் என்ன நடைபெற்றிருக்கிறது ? உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியை ஒ மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு மாற்றுவது சரியா, இல்லையா அதை இந்த ஆட்சி, 'ஆன் பிரின்சிபிள்' கொள்கையளவில் ஏற்று கொள்கிறதா, இல்லையா ? அதில் மாறுபாடு இல்லையென்று கருதுகிறேன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை ஏற்றுக்கொள்ளுகி தென்று கருதுகிறேன். அப்படியென்றால், நம்முடைய மாநில முதலமைச்சருக்குத் தெரியாமல், நம்முடைய மாநிலத்தின் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாற்றப்பட்டிருக்கிறாரா, இல்லையா என்பதுதான் பிரச்சினை. இது குறித்து நம்முடைய மாநில முதல்வரவர்களைக் கலந்து பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்த மாற்றம் நடைபெற்றிருக்கிறது. அதில் யாருக்கும் மாறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. பிறகு இன்றைக்கு உள்ள பிரச்சினை என்ன ? தமிழ் தெரியாதவர் இங்கே நீதிபதியாக இருக்கலாமா ? உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக இருக்கலாமா ? அதை எப்படி அங்கீகரிப்பது ? நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தலைமை நீதிபதியை மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டுவிட்டு, அவரை மாற்றும்போது அவர் எந்த மாநிலத்திற்குப் போவது ? இந்த மாநிலத்தின் மொழி தெரிந்தவர்கள்தான் தலைமை நீதிபதியாக வர வேண்டுமென்ற கொள்கை இருந்தால் எப்படி ? . . .

திரு. ஜீ. சுவாமிநாதன் : மாற்றுத் தலைவரவர்களே, On a point of Order இந்தப் பிரச்சினை உயர்நீதிமன்றத்திலே, வழக்காக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே sub-judice ஆக இருக்கிறது. ஆகவே இதுபற்றிப் பேசலாமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பேரவையிலும் இது பற்றிய பிரச்சினை, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கட்சித் தோழர்களால் எழுப்பப்பட்டுள்ளது. எனவே இதுபற்றி தலைவரவர்கள் ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றத்தில் ஒரு பிரச்சினை இருக்கும்போது, அதைப்பற்றிப் பேசக்கூடாதென்று விதி இருக்கிறது. எனவே தலைவரவர்கள் இது குறித்து தெளிவாக ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . .



1981 ஜனவரி 30]

(பிற்பகல் 12-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய சம்பிரதாயப்படி உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கின்ற ஒரு விஷயத்தைப்பற்றி தொடர்ந்து இங்கே பேசலாமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சட்டமன்றப் பேரவையில் அரசின் ருத்தைத் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைக் கொடுத்து விட்டார்கள். பத்திரிகைகளிலும் அது ந்து விட்டது. உச்ச நீதிமன்றம் பரிசீலித்துக்கொண்டிருக்கிற விஷயங் ளுக்குள் நான் போகவில்லை. இந்தக் கருத்துக்கள் எல்லாம் புதிதாகச் சால்கிற கருத்துக்கள் அல்ல. ஏற்கெனவே பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. வையிலும் இது பற்றிய பிரச்சினை வந்திருக்கிறது. ஆகவே இது புதி ரச்சினை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தலைமை திபதியைப் பொறுத்தவரை, அவருக்குத் தெரிந்தது ஆங்கிலமும் தமிழும். ர் எங்கே போவது ? இந்தியாவில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட று மாநிலங்கள் இல்லை. புதுவையில் தமிழ்தான் தாய்மொழி. ஆனால் ங்கே உயர் நீதிமன்றம் இல்லை. இந்தியாவில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் காண்ட மாநிலங்கள் இல்லை. நாகாலாந்தில் மட்டும் தான் ஆங்கிலம் ய்மொழி. அங்கு கூட உயர் நீதிமன்றம் கிடையாது. நமக்கு ஒன்று பொருந்துகிறது என்று நாம் வாதாடுகிறோம் என்று சொன்னால், அது மற்ற நிலங்களுக்குப் பொருந்த வேண்டாமா ? தமிழ் தெரியாத நீதிபதியை யமிக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். இப்பொழுது தான் இது புதிதாக தன் முதலாக ஏற்பட்டிருக்கிறதா ? அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ரசு முதன் முதலாகப் பதவி ஏற்றபோது பதவிப் பிரமாணம் எடுத்துக் காண்டார்களே அப்போது உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. கோவிந்த னன் என்பதை மறந்து விட்டார்களா ? அவருக்கு முன்பு மிழ் தெரியாத டாக்டர் சந்திரா ரெட்டி இருந்தாரே. ஆகவே முன்பும் தமிழ் தரியாதவர்கள் இருந்திருக்கிறார்கள். டில்லி உயர் நீதிமன்றத்திற்கு இந்தி யாத திரு. ரெங்கராஜன் அவர்கள் செல்லவில்லையா ? எதிலும் இந்த ரசு திட்டவட்டமாக, தெளிவாக இருக்க வேண்டும். ஏதோ தங்களுக்குச் சௌகரியமாக இருக்கும் வரையில், "எங்களுக்குப் பொருந்துகிற வரையில் ப்புக்கொள்ளுகின்றோம். மாற்றுவதற்கும் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் திர்பார்க்கின்றவர்கள் வரவில்லை என்ற நிலை வரும்போது மாற்றத்தை காள்வதற்கில்லை' என்று சொன்னால், அது ஒரு மாநிலத்தினுடைய

தேவைக்கு, நன்மைக்கு ஏற்றதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசியல் அமைப்பைச் சரியாக, முறையாகச் செயல்படுத்த இதுபோன்ற பிரச்சினைகள், வாதங்கள் இடம் கொடுக்காமல் தடுத்து விடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசினுடைய மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி எல்லோரும் இங்கே பேசிவிட்டார்கள். அதற்குள்ளே நான் அதிகமாக நுழைய விரும்பவில்லை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் அவருக்கே உரிய முறையில் அழகாக, "13 ஆண்டுக் காலமாக மதுவிலக்குக் கொள்கையை நாம் சரியாக, முறையாக நிறைவேற்றவில்லை, அதிலே அத்துமீறல்கள் இருந்தன. காவல் துறையினர் அல்லது வேறு துறையினர் தவறு செய்தார்கள், சரிவர அதை அமுல்படுத்தவில்லை" என்று சொன்னார்கள். அப்படி அவர் சொல்லியதைப் பார்க்கும்போது, எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. சங்கடம் கூட வருகிறது. அவர் ஆளுநர் உரையை எந்த அளவிற்குச் சரியாகப் படித்திருக்கிறார். அதை அவர் எந்த அளவிற்கு மதிக்கிறார் என்கிற சந்தேகம் எனக்கு வருகிறது. நான் ஒவ்வொரு ஆண்டும் ஆளுநரால் தரப்பட்டிருக்கிற உரைகளைக் கூர்ந்து பார்த்திருக்கிறேன், படித்திருக்கிறேன். சில ஆண்டுகளில் இது குறித்துப் பாராட்டியிருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல், வெற்றிகரமாக மதுவிலக்குக் கொள்கை நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆளுநர் உரையை நான் சரியாகப் படித்திருக்கிறேனா என்கிற சந்தேகம் மாண்புமிகு உறுப்பினருக்கு வந்திருக்கிறது. நான் சரியாகப் படித்து விட்டுத்தான் சொல்கிறேன். இந்த விஷயத்தில் வெற்றிகரமாக நாம் அடைய வேண்டிய கட்டத்தை அடையவில்லை ஆச்சாரியார் காலத்திலிருந்து ஒவ்வொரு முதலமைச்சர் காலத்திலேயும், ஒவ்வொரு ஆண்டும், ஆண்டாண்டு காலமாக என்ன குற்றச்சாட்டு இருக்கிறது என்றால், அண்ணா அவர்கள் காலத்திலேயும் சரியாக அது நிறைவேறவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அவர் சார்ந்திருக்கின்ற கட்சியைச் சார்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தயாரித்து அளிக்கப்பட்டிருக்கின்ற ஆளுநர் உரையில் "சரியாக இருக்கின்றது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போதே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "சரியில்லை" என்று சொல்லித் தடுத்திருந்தால், மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1977 ஆம் ஆண்டில்





அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, 7—7—1977-லே முதல் முறையாக ஆளுநர் உரை படிக்கப்பட்டது. அதில் பக்கம் 10, பாரா 18-ல் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறேன் : "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையாகச் சொல்கிறேன்" "மக்கள் மதுவிலக்குக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுகிறார்கள், மகளிர் பாராட்டுகிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "மதுவிலக்கைக் கண்டிப்புடன் செயல்படுத்தச் சட்ட ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு, குடிப் பழக்கத்தை மக்கள் மேற்கொள்ளாமல் இருக்க மக்களிடையே பிரச்சாரம் செய்வதும் அரசினுடைய முயற்சியாகும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு முதன் முதலாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் முதன் முதலாக ஆளுநர் அவர்களால் படிக்கப்பட்ட உரையில் காணப்பட்ட பொன்னான பொன்மொழி தான் இது. இந்த அடிப்படையில் தான் மதுவிலக்குக் கொள்கையின் ஆரம்பம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில், தொடங்குகிறது. அதற்கு அடுத்தாற்போல் 1978 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 30 ஆம் தேதி ஆளுநர் அவர்களால் உரை படிக்கப்பட்டது. 13-வது பக்கத்தில் 24-வது பாராவில் ஆளுநர் அவர்கள் மீண்டும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். (என்னிடம் தமிழ் உரை இல்லாததால் ஆங்கிலத்தில் இருப்பதை அப்படியே படிக்கிறேன்.)

"I would like to thank all the parties for helping the Government in its Prohibition policy. I also thank for their co-operation in the conduct of the Prohibition conference recently at Thanjavur .................

I would like to congratulate the Police Officers. who are discharging their duties in implementing Government's cherished policy of Prohibition, with a sense of great social responsibility, unmindful of dangers even to their lives. . .
We expect that the Union Government will come forward with substantial financial aid, taking note of the Government's faith in this basic policy which has eroded our resource base. Let us hope that the Union Government will not refuse this reasonable request."

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இங்கே இருக்கின்ற எந்த ஒரு அரசியல் கட்சியும் மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடிப்பதிலே, அமுல்படுத்துவதிலே தங்களுக்கு தடையாக, குறுக்கீடாக இல்லை என்பதை ஒப்புதல் வாக்குமூலமாக இந்த அரசு கொடுத்திருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடு, அன்றையதினம்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஜனவரி 30

காவல் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பாராட்டுரைகளையும் எண்ணிப் பார்க்கிறேன். அதே சமயத்தில் 1978-க்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு வரை நம்முடைய தலைமைக் கொறடா அவர்கள் காவல் துறை எப்படியெல்லாம் பாழாகியிருக்கின்றது என்று சொல்லும்போது, நான் வேதனையடையவில்லை. ஆனால் அது காலம் கடந்து உணரப்பட்டிருக்கிறதே என்று நினைத்து என் மனம் வேதனைப்படுகின்றது. கடைசியாக, அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த அடிப்படைக் கொள்கைக்கு. எந்த அளவுக்குப் பணம் தேவை என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நாங்கள் கைவிடுகின்றோம் என்று சொல்லும்போது, "பணம் இல்லை, ஆகவே கைவிடுகிறோம்" என்று மட்டும் சொல்லவில்லை. காவல் துறையினர் மதுவிலக்குக் கொள்கையைப் பாழ்படுத்துகிறார்கள், ஆகவே கைவிடுகின்றோம் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசு இதற்கென்று நிதி ஒதுக்கவில்லை, ஆகவே இதைக் கைவிடுகின்றோம் என்று சொல்லவில்லை. Prohibition Policy -ஐக் காவல் துறையினர் பாழ்படுத்திவிட்டார்கள், ஆகவே கைவிடுகின்றோம் என்று சொல்லுகிறார்கள்.

அடுத்தபடியாக, 1979 ஆம் ஆண்டு ஆளுநர் அவர்கள் உரையில் 9-வது பக்கத்தில் 24-வது பாராவில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

"This Government, with its strong faith in the policy of Prohibition, has promulgated recently an Ordinance to intensify the implementation of this policy"

என்று சொல்லியிருக்கிறார்கள். மதுவிலக்குக் கொள்கையை மிக மிகத் தீவிரமாகச் செயல்படுத்த இந்த அரசு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. காவல் துறையினர் முழுமையாக ஒத்துழைக்கிறார்கள், அரசியல் கட்சிகள் எல்லாம் முழுமையாக ஒத்துழைப்புத் தருகிறார்கள். இரண்டு ஆண்டு காலமாக மதுவிலக்குக் கொள்கையை முறையாக, வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிய பிறகு, மதுவிலக்குக் கொள்கையை மிக மிகத் தீவிரமாகச் செயல்படுத்த, மதுவிலக்குக் கொள்கைக்குத் துணை நிற்க இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வருகின்றோம் என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தச்

(பிற்பகல் 12-40).

சட்டம் தான் நாடுகடத்தல், கடுங்காவல் சிறைத் தண்டனை போன்ற பல்வேறு வாய்ப்புக்களை, அதிகாரங்களை இந்த அரசுக்குத் தந்தது. அரசாங்கமே சொல்கிறது, "To a certain extent the Ordinance had the desired effect" என்று. ஏற்கெனவே வந்துவிட்ட அவசரச்



1981 ஜனவரி 30] [திரு. க. இராமமூர்த்தி]

சட்டத்தைப்பற்றி ஆளுநர் அவர்கள் சொல்கிறார். இந்த அவசரச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது என்று. அப்புறம் என்ன? The Government is taking steps to replace the above Ordinance, with modifications, based on the experience during the interregnum by a suitable legislation to enforce prohibition which will go a long way in raising the standard of living of the poor people."

என்று சொல்லப்பட்டது. இடையே என்ன நடந்தது? இந்த அவசரச் சட்டம் மிகக் கடுமையான அவசரச் சட்டமாக இருக்கிறது என்று அன்றைக்கு நாங்கள் சொன்னபோது, அரசு மிகவும் தெளிவாக அறிவித்தது. அதாவது, ஆளுநர் அவர்கள் உரையின் மூலமாக அதுபற்றிய விவாதத்தை வைத்து தேவையான திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்று சொன்னது. ஆனால், இறுதியாக அவசரச் சட்டம் சட்டமாக நிறைவேறும்போது எந்த ஆலோசனையும் ஏற்கப்படவில்லை. அந்தச் சட்டத்தில் என்ன ஷரத்துக்கள் கொண்டு வரப்பட்டனவோ அவைகள் தாம் நிலைத்து நிற்கும் என்று அன்றைய ஆட்சி சொன்னது. அதற்குப் பிறகு 1980-லேயும் ஆளுநர் அவர்கள் உரை படிக்கப்பெற்றது. அந்த ஒரு ஆளுநர் உரையிலேதான் மதுவிலக்குக் கொள்கைபற்றி எந்தவிதமான கருத்தும் பேசப்படவில்லை. நான் அதை விவாதிப்பது நல்லதல்ல என்பதால், அதைப்பற்றி என் வாதத்தைச் சொல்லவில்லை. ஆளும் கட்சிக்கு எப்போது சந்தேகம் வருகிறது? மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கும் இப்போது. ஆட்சியை விட்டு இறங்குகிறோம் என்ற நிலை ஏற்பட்டபோது, மதுவிலக்குக் கொள்கையிலே உறுதியாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு, ஆளும் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்து முதலாவதாக படிக்கப்பட்ட ஆளுநர் அவர்கள் உரையிலே மதுவிலக்கு பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. இரண்டாவதாக வந்த இந்த ஆளுநர் அவர்கள் உரையிலே "நாட்டு மக்களுக்கு நலன் விளைவிக்கும் மதுவிலக்குக் கொள்கையை எந்த வகையில் சிறப்பாகச் செயற்படுத்தலாம் என்பதையும், இக்கொள்கையை மறுபரிசீலனை செய்வது அவசியமா என்பதையும் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை மனந்திறந்து தெரிவிக்க வேண்டும்" என கேட்டிருக்கிறார்கள். அவசரச் சட்டம் வந்த போது எங்களது கருத்துக்களைக் கேட்கவில்லை. அரசு கொண்டுவந்த கொள்கைக்குத் துணையாக நின்றதால் பாராட்டினார்கள். இது சம்பந்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னவெல்லாம் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் எண்ணிப்பார்க்கிறேன். நேரு ஸ்டேடியத்திலே தென் இந்திய நடிகர் சங்க விழா நடந்தபோது, அங்கு பேசிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமுதாயத்திலே பெர்மிட்டுகள் வைத்துக் குடிப்பதைக்கூட ஒழிப்பேன் என்று சொன்னார்கள். இதற்கான சட்டத் தடைகள் இருந்தால், அந்தத் தடை

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஜனவரி 30

களை உடைப்பேன் என்றும் சொன்னார்கள். பின்னர், இதுபற்றி வழக்கு உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, அப்படிச் செய்வது தவறு என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. அந்தப் பிரச்சினையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான தடைகளை உடைப்பேன் என்றுதான் சொன்னார்கள். அதற்குப் பிறகு, மதுவிலக்கு ஆதரவாளர்கள் மாநாடு 11—9—1979 ஆம் நாளன்று நடைபெற்றது. அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தடுக்க 'மிசா' போன்ற சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரவேண்டும் என்றும், தமிழகத்தைச் சுற்றி 8 கிலோமீட்டர் தூரம் 'ட்ரை பெல்ட்' இடமாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். 27—5—1979-லே இராஜாஜி நூற்றாண்டு விழாவிலே, மது குடிப்பதைப் பற்றி பெண்களிடத்திலே வாக்கெடுப்பு நடத்துவேன் என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மதுவிலக்கு பற்றி கொண்டுவரப்பட்ட சட்டங்கள் சம்பந்தமாக சந்தேகம் கேட்டவர்கள் எல்லாம், தமிழகத்திலே இருக்கிற பெண் களுக்குத் துரோகம் செய்கிறார்கள், அவர்களுக்கு விரோதமாக இருக்கிறார்கள்' என்றெல்லாம் வீரவாக்கியங்களை அன்றைக்குச் சொன்னார்கள். அன்றைக்குச் சொன்ன அந்த வாக்கியங்களையும், இன்றைக்கு இருக்கும் நிலைமைகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அன்றைக்கு அவசரச் சட்டம் கொண்டு வந்தபோது, அதைப் பயன்படுத்தி ஏழை மக்கள் தவறாகத் தண்டிக்கப்படு கிறார்கள், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள் என்று நாங்கள் குரல் கொடுத்தபோது, "நீங்கள் எல்லாம் தவறாகச் சொல்கிறீர்கள். நீங்கள் சொல்வதுபோல அல்ல, காவல் துறையினர் தங்கள் கடமையைச் செய்கிறார்கள்" என்று சொல்லப்பட்ட அந்த விஷயங்களுக்குள்ளே நான் அதிக மாகப் போக விரும்பவில்லை. ஆனால், ஆளும் கட்சி தங்களுடைய கொள்கை யிலேயிருந்து நழுவுகிறார்கள். இதுபற்றி திடமான ஒரு கொள்கை ஆளும் கட்சிக்கு இல்லாதிருப்பதால், எப்போது வேண்டுமானாலும் அவர்கள் முடிவு முடிகிறது. இது ஒரு கட்சிக்கு வேண்டுமானால் நல்லதாக இருக்கலாம், ஆனால் ஒரு ஆட்சிக்கு இது நல்லதல்ல. முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு பெரிய பாராட்டுதல்கள் எல்லாம் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்து வந்தன.

'He was determend not to give it up since it was a matter of conviction for him. He was not prepared to give it up because it was a matter of conviction for him.'

என்று 28—5—1979 அன்று இந்து (Hindu) பத்திரிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சுக்கு விமர்சனம் வந்திருந்தது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தான், இந்த 'பெர்மிட்' வழங்கும் முறை வந்தது. பெர்மிட் சிஸ்டத்திலே தேவைப்படுபவர்களுக்குக் கொடுக்கலாம் என்று கொண்டு வந்தார்கள். பாட்டில்களிலே சாராயம் வரப்போகிறது என்ற



1981 ஜனவரி 30] [திரு. க. இராமமூர்த்தி]

தகவலை அரசியல் மேடைகளிலே சொன்னார்கள். இவைகளையெல்லாம் சொல்லிவிட்டு இன்றைக்கு throwing the ball in the open என்ற அளவிலே பந்தைத் தூக்கி வீசியிருக்கிறார்கள். எதற்காக என்று சொன்னால், யார் முன்னே வந்து அடிக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்காக. யார் முன்னே வந்து அடிக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்காக மட்டுமல்ல அரசின் முயற்சி. அதன் உண்மையான முயற்சி இதுதான். எதிர்க் கட்சிகளையெல்லாம் பேச விட்டுவிட்டு, தங்களுடைய கருத்து எது என்று தெளிவாகச் சொல்லாமல், மதுவிலக்கைக் கைவிட வேண்டும் என்று எல்லோரும் சொன்ன பிறகு, மக்களுடைய நலனைக் கருதி மதுவிலக்கை 'இந்த அளவுக்குத்' தளர்த்தப்போகிறோம் என்று சொல்லப் போகிறார்கள். நான் கேட்கிறேன், அரசு தெளிவாகச் சொல்லவேண்டும் ஒரு boldness வேண்டும். The ruling party has got the majority. It must prove it to the State. ஜனநாயகத்திலே முக்கியமான பிரச்சினைகளைச் சந்திக்கும்போது நாம் வழுவக்கூடாது. இந்த ஆட்சியிலே திறமையற்றவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை. திறமையானவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், முக்கியமான பிரச்சினையிலே முடிவு எடுக்கும்போது வழுவுவதில் திறமையைக் காட்டக் கூடாது. இதிலே ஒரு தெளிவான, கொள்கை அடிப்படையிலான முடிவோடு நீங்கள் வர வேண்டும்.

சட்டம் ஒழுங்கைப்பற்றி நான் பேச வேண்டுமென்று சொன்னால், பேசிக் கொண்டே இருக்கலாம். மிகவும் விரிவாக அதைப்பற்றிப் பேசுவதற்கு இப் போது அதிக நேரம் இல்லை. ஆனால், சட்டம்-ஒழுங்கு சம்பந்தமாக இந்த அரசுக்கு ஒரு சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சியிலே, பணம் படைத்தவர்கள், செல்வாக்கு படைத்தவர்கள், வலிமை படைத்தவர்கள் ஜுந்தாகிரியான குற்றங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று வந்த தகவல்கள் எல்லாம் நாடறியும். ஆனால் அவைகள் எல்லாம் இன்றுவரையில் வெளிச்சத்திற்கு வராமல் மறைக்கப்படுகின்றன என்பதை மிகவும் வேதனை யோடு நான் சொல்லிக்கொள்கிறேன். ஒவ்வொரு முறையும் அதைப்பற்றிச் சொல்லாமல் சொல்வது என்னுடைய சங்கடமான கடமையாகிவிட்டது. சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. அடையாறிலே ... என்ற பெண் கொலை செய்யப்பட்டது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவு இருக்கும். அப் போது காவல்துறையிலேயிருந்து தகவல் வந்தது. இதனுடைய பின்னணி யிலே பெரும் பணக்காரர்கள், எல்லாம் யார் தெரியுமா ; இதனுடைய பின்னணியிலே பெரும் பணக்காரர்கள், செல்வாக்குப் பெற்றவர்கள் இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. இன்றுவரையிலும் அவர்கள் வெளியே வரவில்லை. அந்த வழக்கு என்ன வாயிற்று என்றும் தெரியவில்லை. அதன் பின்னர், 'ஃபோர் ஷோர் எஸ்டேட்டில்' (Foreshore Estate) கொலை நடந்தது. நல்ல வேளை

யாக அது முடிந்துவிட்டது. வழக்கு நீதி மன்றத்திற்குச் சென்று, முடிந்து விட்டது. அதன் பின்னர் பிரபல நடிகை 'ஷோபா' சாவு, ஆரம்பத்தில் அதுபற்றிய விமர்சனங்கள் பெரிய அளவிலே ஏற்பட்டு பின்னர் ஓய்ந்தது. அதன் பின்னர் மீண்டும் அதற்கு உயிர் கொடுத்து, மறுபரிசிலனை நடைபெற்று, புதிய தகவல்கள் எல்லாம் வருமென்று மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், எந்தத் தகவலும் வரவில்லை. இந்தப் பின்னணியைப் பார்க்கும் போது எங்கேயோ கோளாறு இருக்கிறது என்பது புலப்படுகிறது. சில வழக்குகளைப் பொறுத்த வரையில், ரீ-ஓப்பன் செய்கிறார்கள். சில வழக்கு களைப்பற்றி ஓப்பன் செய்யவே மாட்டேன் என்கிறார்கள். இதனாலேதான் இந்த அரசாங்கத்தின் மீது மக்களுக்குச் சந்தேகம் வருகிறது.

(பிற்பகல் 12-50)

அடையாறில் ஒரு விபச்சார விடுதி நடத்தப்படுவதைக் காவல் துறையினர் கண்டு பிடித்தார்கள். அது குறித்து எவ்வளவு வேகமாகத் தகவல்கள் தரப் பட்டன என்பதை நாம் மறந்துவிடவில்லை. தமிழகத்தையே தலை குனிய வைக்கக்கூடிய தகவல்கள் அப்போது தரப்பட்டன. அவைகளெல்லாம் அதிகார பூர்வமான தகவல்கள். "அரசியல்வாதிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மேல்மட்டக் காவல் துறை அதிகாரிகள், நீதிபதிகள் ஆக அவ்வளவு பேரும் அந்த விபச்சார விடுதியோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் அந்த விடுதியினுடைய வாடிக்கையாளர்கள் என்பதெல்லாம் விரைவில் வெளி வரப்போகிறது" என்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அவை இன்று வரையில் வெளிவரவில்லை என்றால், என்ன அர்த்தம்? அவர் களெல்லாம் இப்போது எங்கே பதுங்கிக் கொண்டிருக்கிறார்கள்? இந்த அரசு அவர்களுக்குப் பயப்படுகிறது என்று நான் சொல்ல மாட்டேன், ஆனால் எதனாலே அவர்களை இந்த அரசு வெளிக் காட்டவில்லை என்பதை மட்டும் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கெல்லாம் இந்த அரசு பதில் சொல்ல வேண்டாமா? இப்படிச் செய்வது அரசுக்கு முறையா என்றுதான் கேட்கிறேன். அந்த வழக்குகள் எல்லாம் கோர்ட்டுக்குப் போயிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள், இருக்கலாம். ஆனால் நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், சிலவற்றில் காட்டுகிற அவசரம் இத் தகைய வழக்குகளில் காட்டப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? இந்த வழக்குக்குப் பிறகு பிரமிளா என்ற ஒரு நடிகை விபச்சாரத் தடுப்பு வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்கு நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறது. அது விசாரணைக்கு வருகிறது, வாய்தா வழங்கப்படுகிறது என்று பல்வேறு செய்தி கள் தினமும் பத்திரிகைகளில் வருகின்றன. ஆனால் பெரிய மனிதர்கள் [illegible]ப்பட்ட இந்த வழக்குகள் மட்டும் இன்னும் வெளியே வராமல் இருக் கின்றன என்றால், இந்த நிலைமை ஏன் என்று கேட்க மாட்டோமா? இந்தத்



தகவல்களைச் சொல்லாமலிருப்பது ஒரு அரசுக்குத்தான் நல்லதா? இப்படி அரசு அவர்களை மறைப்பதன் மூலமாக பாரெல்லாம் தங்களை மறைத்துக் கொள்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருவொற்றியூரில் சில மாதங்களுக்கு முன்பு அரசாங்கத்திற்குச் சொந்த மான பெட்ரோல் திருடுபோயிற்று. அதைப்பற்றி மிகப் பெரிய வாதப் பிரதி வாதம் இங்கே உள்ள மாநில அமைச்சர்களுக்கும், மத்திய அமைச்சர்களுக்கு மிடையே நடைபெற்றது. பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள பெட்ரோல் திருடு போயிற்று. அதுவும் மத்திய அரசுக்குச் சொந்தமான பெட்ரோல் திருடப்பட்டிருக்கிறது. அதில் ஈடுபட்டவர்கள் ஏதோ வெறும் சாதாரண திருடர்கள் அல்ல. வேறு பல முக்கியமானவர்களும் அதில் ஈடுபட்டிருக் கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்தே தீருவோம், அவர்கள் மீது வழக்கு வரும், வழக்கு மன்றத்திற்கு அவர்கள் போய்த்தான் ஆக வேண்டும், அவர்களை நாங்கள் மக்கள் மன்றத்திற்கு அடையாளம் காட்டப் போகிறோம் என்றெல்லாம் அரசாங்கத் தரப்பிலிருந்து சொல்லப்பட்டது. நாங்களும் நம்பினோம். ஆனால் இன்றுவரை அவர்கள் மக்களுக்கு அடையாளம் காட்டப்படவில்லையே, அது ஏன்? அவர்களிடம் நிறைய பணம் இருக்கிறதே என்ற காரணமா?

அது மட்டுமல்ல. வடசென்னையில் நடைபெற்ற பாமாலின் ஸ்கேண்டல் தமிழகத்தில் நடைபெற்ற ஊழல்களிலேயே மிகப் பெரிய ஊழல். இரண்டரைக் கோடி ரூபாய் பெருமானமுள்ள சமையல் எண்ணெய் பதுக்கி வைக்கப்பட் டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குக் காரணமானவர்கள் யார்? முதலமைச்சர் அவர்களே ஒருமுறை மதுரையில் பேசும்போது இதைப்பற்றிக் குறிப்பிட்டு, இதற்குக் காரணமானவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் என்று குறிப்பிட்டார். ஆனால், அந்த எண்ணெய் சாப்பிடுவதற்கு லாயக் கற்றது என்று அப்போது சொன்னார். அதற்குப் பிறகு உயர் நீதிமன்றத்தில் அந்த எண்ணெயை விற்றுவிடலாம் என்ற அனுமதி மட்டும் அளிக்கப்பட்டிருக் கிறது. மக்கள் மத்தியில் அந்த எண்ணெய் விற்கப்படலாம் என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அந்த நிலையில் அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டும்? அந்த விற்பனையைத் தடை செய்திருக்க வேண்டாமா? கெட்டுப் போன எண்ணெயை மக்கள் வாங்கிச் சாப்பிடுவதால், மக்களின் ஆரோக்கியம் கெட்டுப் போகுமே என்று அந்த எண்ணெய் மக்கள் மத்தியில் விற்பனை யாவதை அரசு தடுத்திருக்க வேண்டாமா? அல்லது மக்கள் மத்தியில் தான் கொடுத்த தகவல் தவறானது என்றாவது முதல்வர் சொல்லியிருக்க வேண் டாமா? அதிலே ஈடுபட்ட அந்தப் பெரிய புள்ளிகள் யார்? ஏன் இன்னும் அவர்களுடைய பெயர்கள் வெளியே வரவில்லை? அவர்களெல்லாம் தப்பித்துக் கொண்டார்களோ என்ற அச்சம், பயம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதே? இதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? யார் அந்த

எண்ணெயைப் பதுக்கி வைத்தாரோ, அவரே அந்த எண்ணெயை ஏலத்தில் எடுத்திருக்கிறார் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதெல்லாம் சமுதாயத்திற்கு நல்லதுதானா ? நாம் எதையெதையெல்லாமோ பேசிக் கொண்டிருந்து என்ன பயன் ? நம்முடைய உயர்வைப்பற்றிப் பேசுகிறோம், நம்முடைய நிர்வாகத் திறமையைப்பற்றிப் பேசுகிறோம், 'இன்டிபென்டன்ஸ் ஆப் தி ஜுடிசியரி' நீதித் துறையின் சுயேச்சைத் தன்மை பற்றியெல்லாம் பேசுகிறோம். ஆனால் நாட்டு நடப்புகளும் அரசாங்கத்தின் செயல்முறைகளும் நம்மை எங்கே கொண்டு போய்க் கொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா ?

அதற்கு அடுத்து, தமிழகத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது ஆம்னி பஸ் ஸ்கேண்டல். ஒப்பந்த ஊர்திகள் என்று அவற்றைத் தமிழிலே சொல்லுகிறோம். இந்த ஊழல் பற்றிய தொடர் செய்திகள் தினந்தோறும் பத்திரிகையிலே வெளி வந்தன. அதைத் தொடர்ந்து பல போலீஸ் அதிகாரிகளும் மற்ற அதிகாரிகளும் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார்கள். சிலர் வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டார்கள். ஆனால் அந்த ஊழல்பற்றிய உண்மை இதுவரை ஏன் வெளிச் சத்திற்கு வரவில்லை ? அந்த ஊர்திகளின் சொந்தக்காரர்கள் யார் யார் ? அவர்கள் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தார்கள் என்றால், எவ்வளவு கொடுத்தார்கள் ? எவ்வளவு காலமாக இது நடைபெற்றுக் கொண்டிருந்தது ? இந்தச் செய்திகளெல்லாம் ஏன் இன்னும் வெளியே வரவில்லை ? இன்றைக்கும் மீண்டும் அந்த ஆம்னி பஸ்கள் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன. சஸ்பெண்டு செய்யப்பட்ட அதிகாரிகள் மீண்டும் வேலைக்குப் போய்விட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. மாற்றப்பட்டவர்கள் வேறு இடங்களில் இந்தச் சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்களோ அல்லது இன்னும் வேறு நல்ல இடங்களுக்குச் செல்ல யாருடைய துணையையாவது தேடிக் கொண்டிருக்கிறார்களோ, எனக்குத் தெரியவில்லை. அந்த வழக்கு இன்றுவரை ஏன் மறைக்கப்பட வேண்டும் ? இது நல்லதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

திருச்செந்தூரில் அறநிலையத் துறையைச் சார்ந்த ஒரு அதிகாரி சாவு பற்றி விசாரிக்க நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதால், நான் அதிகமாக அதன் உள்ளே போக விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கோயிலுக்கு அறங் காவலர்கள் நியமிக்கப்படுகிற நேரத்திலிருந்தே அங்கே சிக்கல்கள் தோன்றி யிருக்கின்றன. அவர்களை அங்கே அறங்காவலர் குழுவிற்கு நியமிக்க வேண்டுமா வேண்டாமா என்ற வாதப் பிரதிவாதங்கள் ஒரு கட்சியிலிருந்தோ அல்லது பல கட்சிகளிலிருந்தோ உருவாகி, அது விவாதத்திற்குரிய பிரச்சினை யாக மாறியது. சாவு குறித்து விசாரணை இருப்பதால், அதுபற்றி விரிவாக நான் பேச விரும்பவில்லை என்றாலும், அந்தக் கோயில் உண்டியலில் சேருகிற



பணத்தைப் பொறுத்த அளவில், ஒன்றை நான் அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன். இதற்கு முன் இரு ஆண்டுகளில் அந்தக் கோயில் உண்டியல் மூலம் ஆண்டு வருமானம் எவ்வளவு வந்திருக்கிறது ? இந்த ஆண்டு எவ்வளவு வந்திருக்கிறது ? அதாவது இந்த அறங்காவலர் குழு அமைக்கப்பட்ட பிறகு எவ்வளவு வந்திருக்கிறது என்று சிலர் ஒப்பிட்டுச் சொல்லும்போது, அவர்கள் கொடுக்கும் கணக்கு எனக்கு மிகவும் பயத்தைக் கொடுக்கிறது. இதையெல்லாம் அரசு தெளிவுபடுத்த வேண்டும். இதிலே அரசு தவறு செய்யாமல் இருந்திருக் கலாம். அது வேறு விஷயம். நடைபெற்றதில் தவறு ஏதுமில்லை என்பதை அரசு விளக்க வேண்டும். நியமிக்கப்பட்ட நீதிபதியேகூட சாவைப் பற்றி மட்டும்தான் விசாரிக்கப் போகிறார். மற்ற விஷயங்களுக்குள் அவர் போக மாட்டார், அதற்கான தேவை அவருக்கு இல்லை. அதற்கான அதிகாரம் அவருக்கு இல்லை என்பதை நான் அறிவேன். ஆனால் அது தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகள் இந்த அரசைப் பாதிப்பதாக இருப்பதால், எல்லாவற்றையும் பற்றி அரசு விளக்க வேண்டும்.

அடுத்து, சட்டம் ஒழுங்கு அமைதியைப்பற்றி நான் ஒன்றை இங்கே வேதனையோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது. அரசியல் படுகொலைகள் என்பது இங்கே சர்வ சாதாரண நிகழ்ச்சியாக மாறிக் கொண்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் மேலக்கொடுங் கையூர் கிராமத்தில் கோவிந்தன் என்பவரும், அவருடைய துணைவியாரும், குழந்தைகளும் உயிரோடு எரிக்கப்பட்டார்கள். கோவிந்தனும் அவருடைய 7 வயது மகன் சிவராமனும், 5 வயது மகள் தமிழரசியும், துணைவியார் நீலாம்பாளும் எந்த நாளிலே சாகடிக்கப்பட்டார்கள்? பண்டித நேருவின் பிறந்த நாளன்று, நாடெங்கும் குழந்தைகள் நாளாக அந்த நாள் கொண்டாடப்படும் போது இந்தக் குழந்தைகள் இருவரும் நேருவுக்குக் காணிக்கையாக்கப் பட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய கொடுமை? இதிலே அரசுக்குப் பொறுப் பில்லை என்று சொல்லிவிட முடியாது. இதற்கு குடும்பச் சண்டை காரணம் என்று சொல்லலாம். ஆனால் எத்தனை நாட்களாகத் தொடர்ந்து அங்கே சண்டைகள் நடைபெற்று வந்திருக்கின்றன? கலெக்டர் முதல் மற்ற அதிகாரிகள் அனைவரும் அந்த இடத்திற்குப் பல முறை சென்று பார்த்துவிட்டுத்தானே வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சங்கடம் வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று. அவர்களுக்குத் தெரியாதா? ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை? பதில் சொல்ல வேண்டாமா?

சமீபத்தில் எங்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஹரிஜனத் தோழர் ஒருவர் காவல் நிலையத்திலே மரணமுற்றிருக்கிறார். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த அவர் குலசேகரம் காவல் நிலையத்தில் அடிக்கப்பட்டு

மாண்மடைந்திருக்கிறார். மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் ஹரிஜனப் பிரிவின் தலைவராக இருந்த திரு. ராஜு அங்கே இறந்திருக்கிறார். அதிலே வழக்கம் போல் இரண்டு விதமான தகவல்கள் வந்திருக்கின்றன என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவர் போலீஸ்காரர்களால் தாக்கப்பட்டு இறந்தாரா அல்லது அதற்கு முந்தியே இறந்திருந்தாரா என்பது வேறு. என்றாலும் நான் ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். காவல் நிலையத்திற்கு வந்த பிறகு அவர் சாகும் நிலையில் இருந்தார் என்பதுபற்றி யாராவது காவல் துறையைச் சார்ந்தவர்கள் தகவல் கொடுத்திருக்கிறார்களா? அவர் அங்கே அழைத்துச் செல்லப்பட்ட பிறகுதான் இறந்தார் என்றும், அவர் 1972 ஆம் ஆண்டு தேர்தலில் சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டார் என்ற விவரங்களைச் சொன்ன பிறகுதானே, அவர் அங்கே இறக்கவில்லை, அது இல்லை, இது இல்லை என்றெல்லாம் தகவல்கள் வருகின்றன. அதற்குப் பிறகுதானே அங்கே உள்ள ஒரு ஹெட் கான்ஸ்டேபிள் தாற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். ஒரு

(பிற்பகல் 1-00)

காவல் நிலையத்திலேயே இந்த நிலை ஏற்படுகிறது என்ற நிலை வருமானால், அதற்காக ஹெட் கான்ஸ்டேபிளைப் பதவி நீக்கம் செய்கிற கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், இது அங்கேயிருக்கின்ற அதிகாரிகளுக்குத் தெரியாமலா நடைபெற்றிருக்கின்றது? சப் இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டும், ஹெட் கான்ஸ்டேபிளை மாற்ற வேண்டும் என்ற நிலையை விட இந்தச் சம்பவத்தைக் குறித்து அரசு உடனடியாக, தைரியமாக, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படவில்லையென்றால், அரசியல்வாதிகளை அடித்துக் கொல்லும் நிலையங்களாகக் காவல் நிலையங்கள் தமிழகத்திலே மாறும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, விவசாயப் போராட்டத்தின் நல்லது, கெட்டது ஆகியவற்றிற்குள் நான் போக விரும்பவில்லை. அதற்கு நேரம் இல்லை. ஆனால் விவசாயப் போராட்டம் என்ற பிரச்சினையை வைத்துக்கொண்டு அரசியல் சம்பந்தப் பட்டவர்களை, விவசாயப் போராட்டத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்களை யெல்லாம் எப்படிக் காவல் துறையினர் அடித்து நொறுக்கினார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கும்பகோணத்தில் உள்ள இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைவர் மூப்பனார் அவர்களது ஊரில் இருப்பவர், அவருக்குச் சொந்தக்காரர் என்பதற்காக எம். இராமசாமி என்ற ராமுவை—அவருக்கும் விவசாயச் சங்கத்திற்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்ன பிறகும், அவருக்கும் போராட்டத்திற்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்ன பிறகும்— அவருடைய வீட்டில் நள்ளிரவில் புகுந்து இழுத்துச் சென்று அவமானப்படுத்தி சிறையிலே அடைத்திருக்கிறார்கள். இது நல்லதா?





முடித்துவிடுகிறேன். அதைப் போலவே திண்டிவனம் தாலுக்காவில் உள்ள வெள்ளிமேடுபேட்டை என்ற ஊரில் காவல் துறைக்கும் ஊராருக்கும் ஒரு பெண் விஷயமாகச் சண்டை ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து அவர்கள் போராட்டம் செய்தபோது நடவடிக்கை என்ற பெயரிலே ஊரிலே உள்ளவர்களையெல்லாம் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இதற்கிடையே மாநிலத்தில் விவசாயப் போராட்டம் நடைபெறுகின்றது. அந்த ஊரிலே விவசாயச் சங்கமே கிடையாது. விவசாயச் சங்கத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லையென்று அவர்கள் தெரிவித்த பின்னரும் காவல் நிலையத்திற்கு ஊரார் பலர் அழைத்துச் செல்லப்படுகின்றனர். காவல் துறையினர் அவர்களைப் பூட் காலால் உதைத்து, அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் உள்ள கீழ்மாவிலங்கை என்ற ஊரில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர் ஒருவர் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார் என்பதையெல்லாம் வேதனையோடு தெரிவிக்க வேண்டி இருக்கிறது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களை அடிக்கிறார்கள் என்பதல்ல பிரச்சினை. அரசு சொல்லித்தான் போலீசார் அடிக்கிறார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஒரு நிர்வாகத்திலே சரியான முறையில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்காததன் விளைவாகத் தான் யார் கிடைக்கிறார்களோ அவர்களை அடித்து நொறுக்குவதில் காவல் துறையினர் ஈடுபடுகிறார்கள். இப்படி சட்டம், ஒழுங்கு சீர்கெட்டால், எப்படி நாம் அதைச் சீர்படுத்தப் போகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, தமிழகத்தை இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினையைப்பற்றிப் பேச விரும்புகிறேன். எரி சாராயத்தைப்பற்றி இன்றைக்கு வருகிற செய்திகளில் சில எனக்குப் புரிகின்றன, சில புரியவில்லை. அரசாங்கம் புரிய வைக்கும் என்று நம்புகிறேன். எரி சாராயத்தைப் பொறுத்த வரையிலே, உற்பத்தி செய்கின்ற இடத்திலே அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள். உற்பத்தி செய்யப்பட்ட எரி சாராயம் அரசாங்க அதிகாரிகள் பொறுப்பிலே இருக்கிறது. அவர்களுக்குத் தெரியாமல் யாராலும் எடுக்க முடியாது. அடுத்ததாக எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி, எரி சாராய ஊழல் கேரளாவிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதற்குப் பிறகு அதன் தொடர் நடவடிக்கையாக இங்கே நம் மாநிலத்தில் சில அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் கூற்றுப்படி, இங்கே எதுவும் நடக்கவில்லை. பிறகு எரி சாராய உற்பத்தி இங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. இங்கே ஒன்றும் நடைபெற வில்லை என்று சொல்லிவிட்டு அரசாங்கம் இந்த மாநிலத்திலிருந்து மற்ற மாநிலத்திற்கு எரி சாராயம் எடுத்துச் செல்வதைத் தடை செய்திருக்கிறது. இந்த மாநிலத்திலே உற்பத்தி செய்யப்படும் எரி சாராயத்திற்கான பெர்மிட், லைசென்ஸ் நிறுத்தப்பட்டிருக்கிறது. நமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்றால், ஏன் அவசரம் அவசரமாக இத்தகைய நடவடிக்கைதனை அரசாங்கம்

எடுக்க வேண்டும்? அதிகாரிகளை ஏன் 'சஸ்பெண்ட்' செய்ய வேண்டும்? சஸ்பெண்ட் செய்தது கூட எப்போது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். கேரளாவிலே பிடிபட்டது என்றால், இந்த அரசுக்கு அந்த விஷயம் உடனடியாகத் தெரியாதா? அதற்குப் பிறகு கேரளாவில் பத்திரிகைகளில் வந்த பிறகு, இங்கே செய்திகள் வருவதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகியிருக்கின்றன. அதற்குப் பிறகு இந்த அரசு நடவடிக்கை எடுத்ததால், இந்த மாநில மக்கள் விழிப்படைந்துவிட்டார்கள் என்று கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளுவதா அல்லது செய்தி அறிந்தவுடனே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளுவதா? ஆனால் ஊழல் இருப்பதாக ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஊழல் இருப்பதாக நான் இந்த நேரத்திலே சொன்னால் சான்று எங்கே என்று கேட்பார்கள். ஆனால் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை அவர்கள் விளக்கியாக வேண்டும். எப்படி விளக்கப் போகிறார்கள்?

**திரு. ஜேப்பியார்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சபைத் தலைவரைப் பார்த்துப் பேசாமல் அடிக்கடி பார்வையாளர்களைப் பார்த்துப் பேசுகிறார்.

**திரு. க. இராமமூர்த்தி:** பார்வையாளர்களை மிகவும் மதிப்பவர் மாண்புமிகு உறுப்பினர் என்பதை நான் அறிவேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தலைவரை மதிக்கவில்லையா?

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவருக்கு அப்படிப்பட்ட சந்தேகம் வந்துவிடப் போகிறதோ என்று எண்ணித்தான் நான் அடிக்கடி தலைவரைப் பார்த்துப் பேசுகிறேன்.

எரி சாராயத்தைப் பொறுத்த வரையில், சில மாதங்களுக்கு முன்னதாகவே முதலமைச்சர் அவர்கள், சேம்பர் ஆஃப் காமர்ஸ் கூட்டத்திலே பேசும்போது, மிகத் தெளிவாகச் சொன்னார்கள். "எரி சாராயம் தயாரிக்க அரசாங்கம் அதிகமாக அனுமதிக்கக் கூடாது. நம்முடைய மாநிலத்திலிருந்து அதிகமாகக் கடத்தப்பட்டிருக்கிறது; பிடிபட்டுவிட்டது. மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்க இருக்கிறேன்" என்று முதலமைச்சர் அவர்கள் தொழிலதிபர்கள் கூட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் எரி சாராயக் கடத்தல் நடைபெற்றிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே, அந்த எரி சாராயத்தை யார் தயாரித்தார்கள்? அதைக் கடத்தியவர்கள் யார்? அவர்கள் யாரிடம் லைசென்ஸ் வாங்கினார்கள்? அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் என்ன? யார் மீதாவது நடவடிக்கை எடுத்திருந்தால் விவரத்தைத் தெரிவிக்க



வேண்டும், நடவடிக்கை எடுக்காமலிருந்தால், எந்தச் சூழ்நிலையில் அப்படிச் சொன்னார் என்பதை அவர் சொல்ல வேண்டும் என்று கேட்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. இதைப் பொறுத்த வரையில், வெளி மாநிலங்களிலிருந்து பெர்மிட்டுகளை வாங்கிக் கொண்டு வந்துவிட்டு இந்த மாநிலத்தினுடைய அனுமதியை, பெர்மிட்டுகளைக் கேட்கிறார்கள். அந்தப் பெர்மிட்டை வழங்க இந்த அரசுக்குச் சாதாரணமாக ஐந்து நாட்கள் ஆகின்றன. ஆனால் இப்போது வெளி மாநிலங்களிலிருந்து வந்தவர்களுக்கு 24 மணி நேரத்திற்குள் பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னணி என்ன? எப்படிக் கொடுக்கப்பட்டது? அரசுத் துறை இவ்வளவு வேகமாக இயங்கியதற்குக் காரணம் என்ன என்று கேட்காமல் இருக்க முடியாது. இதையெல்லாம் கேட்டால் சொல்ல மாட்டார்கள். அதனால்தான் கேட்கிறோம், சி.பி.ஐ. விசாரணையாவது வைக்க வேண்டும் என்று. இதிலே எங்கே தவறு ஏற்பட்டிருக்கிறது? எரி சாராயத்திற்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற விலை ரூ. 1.74 என்று நினைக்கிறேன். கொஞ்சம் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் எரி சாராயத்தை உற்பத்தி செய்கிறவர்கள் வெளியே தெரிந்தே விற்பனை செய்கின்ற விலை ரூ. 3.50. அப்படியென்றால் இடையிலே இருக்கின்ற இலாபம் எங்கே போகிறது? இப்படி எத்தனை இலட்சம் லிட்டர் எங்கே விற்கப்படுகிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டாமா? இத்தனை இலட்சம் லிட்டர் வெளி மாநிலங்களுக்குப் போயிருக்கிறதே அதே நேரத்தில் இந்த மாநிலத்தினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு அனுப்பியிருக்கிறார்களா என்று பார்த்தால், அதுவும் இல்லை. இங்கேயிருக்கிற தொழிற்சாலைகள் எரி சாராயத்திற்காகக் கையேந்தித் தவித்துக் கொண்டிருக்கிற நிலையில் வேறு மாநிலங்களுக்கு அதை ஏற்றுமதி செய்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. இந்தத் தகவல் சரியில்லை என்றால், உண்மைக்கு மாறானது என்று சொல்லியிருக்க வேண்டாமா? "கெம்பிளாஸ்ட்" (Chemplast) என்ற கம்பெனிக்கு எரி சாராயம் கிடைக்காமல் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. எரி சாராயத்திற்கு எப்போதுமே டிமாண்ட் இருப்பதில்லை. சில மாதங்கள்தான் டிமாண்ட் இருக்கிறது. எப்போது வேறு மாநிலங்களில் இருந்து டிமாண்ட் வந்ததோ, அப்போதிலிருந்துதான் இங்கும் டிமாண்ட் இருந்தது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. அரசு தயவுசெய்து இவற்றையெல்லாம் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். இந்த மாநிலத்தின் சுய தேவை என்ன, அதைப் பூர்த்தி செய்த பிறகு மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா, அல்லது இந்த மாநிலத்தைப் பட்டினி போட்டுவிட்டு மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றதா என்பதையெல்லாம் கண்டறிந்தால், பல புதிய தகவல்கள் வெளிவரும். எங்களுக்குச் சம்பந்தம்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஜனவரி 30

இல்லையென்று தெரிவிக்கை மட்டும் போதாது. அதன் தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளுக்குரிய காரணங்களைச் சொல்ல வேண்டும். ஏற்கெனவே [illegible]

(பிற்பகல் 1-10)

[illegible] முடிந்த சம்பவங்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அதற்குக் காரணம் சொல்லவேண்டும். இந்த மாநிலத்தினுடைய தேவைகள் [illegible] செய்கிறார்கள். இதற்கெல்லாம் காரணங்கள் காட்டும்போது, மற்றவர்கள் [illegible] அப்படி அரசியல் ஆக்குகிறார்கள் [illegible] பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நேரத்திலே, [illegible] நடிகர், [illegible] (ஐ) கட்சியை இழுக்க [illegible]கிறார். இதையெல்லாம் அரசியல் ஆக்குகிறார். குற்றச்சாட்டிலிருந்து [illegible] பேசவேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறார். எவ்வளவோ [illegible] நடந்திருக்கிறது. யார் யார் இதற்குக் காரணம்? [illegible] எவ்வளவு உற்பத்தி ஆகிறது? அவர்கள் எவ்வளவு [illegible] கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெர்மிட்டுக்களை [illegible]? இவைகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டு [illegible] தகவல் வர வேண்டும். எட்டு ஆலைகளுக்கும் பெர்மிட் கொடுத்திருக்கிறார்கள். அது கர்நாடக மாநிலம் அல்லது கேரள மாநிலம் [illegible] சென்றிருக்கிறது. வழியிலே இருக்கின்ற காவல் நிலையங்களுக்குத் தகவல் [illegible]. [illegible] மூலமாக தகவல் தந்திருக்கிறார்கள். [illegible] அதற்குப் பாதுகாப்பாகச் சென்றிருக்கின்றார்கள். இவ்வளவு [illegible] வரை இது போயிருக்கிறது. இந்தத் தகவல் எப்படிப் [illegible] என்று பார்க்கவேண்டாமா? சம்பந்தப்பட்ட லாரிகள் எல்லாம் எப்படிப் போயிற்று என்று தெரியவேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: பேச இருந்த உறுப்பினர் ஒருவர் பேசவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அதனால்தான் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த ஒரு உறுப்பினர் பேசவிருக்கின்றார். சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: அவைகள் எப்படிப் போயின? எட்டு லாரிகள் போயின. இந்த லாரிகள் கடைசி வரையிலே இடையூறு இல்லாமலே போயின. [illegible] மாநிலத்திற்குள்ளாகப் பேசப்படுவதற்குள் [illegible] முழுமையாக [illegible] ஒருவர் இங்கே [illegible].



1981 ஜனவரி 30] [திரு. க. இராமமூர்த்தி]

[illegible] நடந்துசென்று [illegible] மேலும் இன்னொரு [illegible] என்று [illegible] ஒரு லாரிகள் [illegible] சொல்கிறார்கள். இவை எல்லாம் உண்மையா, உண்மைக்கு மாறானதா [illegible] என்ற [illegible] இந்த மாநிலத்திலே [illegible] என்று [illegible] பட்டிருக்கிறது [illegible] எடுத்துக்கொள்ளப்படுமா என்று [illegible] கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

இறுதியாக, உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி நான் ஒன்றும் அதிகமாகச் சொல்ல [illegible] இந்த அவையிலே [illegible] அதுபற்றிய கருத்துக்களை [illegible] சொல்லியிருக்கிறார்கள். [illegible] [illegible] சேர்ந்த உறுப்பினர்களும் [illegible] முன்னேற்றக் கழக [illegible] பெருமைகளை [illegible] அதற்குக் காரணம் அது அரசே [illegible] நடத்திய ஒரு [illegible] அதிலே குறைகள் இருந்தால், [illegible] என்று சொல்ல வேண்டும். அதிலே குறைகள் இருந்தால், [illegible] என்று சொல்கிறார்கள். நான் [illegible] இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். [illegible] விரும்பவில்லை. தமிழ் மொழிக்காக [illegible] அதிகமாகப் போக விரும்பவில்லை. அதிலே நான் [illegible] கட்டமைப்பட்டிருக்கிறேன். அதிலே நான் [illegible] நான் பாராட்டக் [illegible] ஒன்றைச் சொல்லிக்கொள்ள [illegible] சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்லிக்கொள்ள [illegible] வந்திருக்கிறது. அந்த அறிவிப்பு [illegible]. அதிலே ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. [illegible] அறிவிப்பு [illegible]. உலகத் தமிழ்ச் சங்கம் என்று ஒன்று [illegible] சொல்லியிருக்கிறார்கள்? அந்தத் தகவலை [illegible] வந்திருக்கிறது. அதை எப்படிச் சொல்லியிருக்கிறார்கள். [illegible] முழுமையாக [illegible] சொல்லியிருக்கிறார்கள். அதிலே எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. [illegible] என்று கருதுகிறேன். அதிலே [illegible] தமிழ் [illegible] என்று [illegible] ஏற்கெனவே '[illegible]' இன்ஸ்டிட்யூட் ஆஃப் தமிழ் ஸ்டடீஸ்' என்று [illegible] இருந்துகொண்டிருக்கிறது. தமிழ் பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு உலக நிறுவனம் [illegible] இருக்கப்போகிறதா அல்லது அது வேறு, இது வேறு [illegible]. அதற்கு இது துணையாக இருக்கப்போகிறதா என்று தெரியவில்லை. [illegible] என்று போட்டியாகச் செயல்படப் போகிறதா என்று [illegible] பல்கலைக் கழகம்பற்றி அறிவித்திருக் [illegible] அறிவித்த கொள்கையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே ஆராய்ச்சி நடக்கும் என்று [illegible]. அந்தப் பல்கலைக் கழகத்திலே [illegible] இருக்குமானால், தனியாக அந்த [illegible] கருதுகிறேன். அப்படி நடக்க வாய்ப்பு இருக்குமானால், தனியாக உலக [illegible] பல்கலைக் கழகம் இந்த மாதிரி அமைப்புகளைச் சேர்க்காமல் தனியாக உலக [illegible] தமிழ்ச் சங்கம் என்று ஒன்று வைப்பதனுடைய அவசியம் என்ன என்பதை [illegible] அறிய விரும்புகிறேன். மதுரையிலே ஏற்கெனவே ஒரு தமிழ்ச் சங்கம் இயங்கி [illegible] கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஏதோ ஒரு முறையிலே உலக [illegible] தமிழ்ச் சங்கம் என்று இருக்கும் அளவிலேதான் இது வந்திருக்கிறதோ என [illegible] எனக்குத் தெரியவில்லை. ஆகவே இந்தத் தமிழ் [illegible] நினைக்கிறேன். அதுபற்றி எனக்குத் தெரியவில்லை.

சங்கங்கள் எதற்காக வைக்கப்படுகின்றன என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. அது சந்தேகக் குறியாக மாறுவது நல்லதல்ல என்று கருதுகிறேன்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. அது ஏற்பட்ட பிறகு உருவாகியிருக்கின்ற நிலைகளைப் பார்க்கின்றபோது, நிர்வாகச் சீர்கேடுகளைப் பார்க்கின்றபோது, தவறுகளைப் பார்க்கின்றபோது, இந்த உலகத் தமிழ்ச் சங்கம் அமைந்தால், அது எவ்வளவு பெரிய தவறுகளுக்கு இடம் கொடுக்கும் என்ற பயத்தை, அச்சத்தைத்தான் எனக்குக் கொடுக்கிறது. இந்த நிலையில் அது தேவைதானா என்ற எண்ணம் உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்ப் பண்பாட்டு மையம் பற்றித் தகவல்கள் வந்திருக்கின்றன. 1978-79 ஆம் ஆண்டில் அரசு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மையத்தில் கம்பர்-வள்ளலார், நூலகம், காட்சியகம், கலையரங்கம் நிறுவப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படி நிறுவப்படும்போது அரசு ஆணை (நிலை) எண் 1849, கல்வி, நாள் 13—10—1979-ல் மொழிபெயர்ப்புத் துறை உதவி இயக்குநர் அவர்கள் இதன் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். அப்படி நியமிக்கப்பட்டவருக்கு ஊதிய விகிதம் ரூ. 1,300—75—1,900—100—2,000 என்று வரையறுக்கப்பட்டது. அவர் பதவியேற்ற பிறகு, அரசுக்கு அவர் கோரிக்கை விடுத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையிலே தன்னை அந்தச் செயலகத்தினுடைய தலைவராக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அந்தத் துறைக்கு சிற்றுந்து வேண்டுமென்று கேட்கிறார். அந்தத் துறைக்கு 1978-79-க்கு நிதி ஒதுக்கீடு ரூ. 5.36 லட்சம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். உடனடியாக 21 அலுவலர்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தமிழ்த்தாய் திருவுருவப் படம் வரைவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார், இசைத் தட்டு வெளியிடுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்.

அரசு ஆணை எண் 218, கல்வி, நாள் 12—2—1979-ல் அவர் கேட்டிருந்த பலவற்றிற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. சிற்றுந்து வழங்கப்பட்டிருக்கிறது. அரசாணை எண் 1311, கல்வி, நாள் 24—7—1979-ல் தமிழ்த்தாய் திருவுருவப்படம் வரைய ரூ. 15,000-த்திற்கு அனுமதி தரப்பட்டிருக்கின்றது. அரசாணை எண் 271, கல்வி, நாள் 20—2—1979-ல் நெடுநேர இசைத் தட்டு ஒன்று தயாரித்து வெளியிட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. பிறகு அரசாணை எண் 1770, கல்வி, நாள் 19—9—1979-ல் 1979-80 ஆம் ஆண்டிற்கு மையத்திற்கு நிதி ஒதுக்கீடு 16,78,500 கோரப்பட்டிருக்கின்றது. அப்படிக் கோரியதிலே ரூ. 3,28,500 சம்பளம் போக ரூ. 13,50,000 கலைப் பொருள்கள் வாங்குவதற்கு, கருவிகள், புத்தகங்கள் வாங்குவதற்கு மாத்தளவாடங்கள் வாங்குவதற்கு அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அந்த ரூ. 13,50,000-த்தில் ரூ. 11,10,000-க்கு அவைகளை வாங்குவதற்கு அரசு ஆணைபோட்டு அனுமதி அளித்திருக்கிறது. அதற்குப் பிறகு தான் தவறே நடைபெற்றிருக்கிறது. கலைப் பொருட்கள், கருவிகள், புத்தகங்கள், மாத்தளவாடங்கள் வாங்குவதற்குச் செலவு செய்ய அரசு ஒரு கமிட்டியை. குழுவை நியமனம் செய்திருக்கிறது. அந்தக் குழுவிலே அதிகாரிகள் இடம் பெற்றிருக்கிறார்கள். கல்வித்துறை துணைச் செயலர், நிதித்துறை துணைச் செயலர், சுற்றுலா வாரிய பொதுமேலாளர், தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர், அருங்காட்சியக இயக்குநர், ஆகியோர் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால்,

(பிற்பகல் 1-30)

[...]ந்தக் கொள்முதல் கலைப் பொருட்களாய் இருப்பின் குழுவின் [...]ங்கீகாரத்துடன் வாங்கியிருக்க வேண்டும். இதர பொருட்கள் மற்ற துறைத் [...]லைவர்களின் அதிகார வரம்பிற்குள் வாங்கியிருக்க வேண்டும். இந்த விதி [...]ளுக்கு மாறாக அவர் செய்த கொள்முதலின் பட்டியல் விலை விவரங்களுடன் [...]லைமைக் கணக்குத் தணிக்கையாளரால் அரசுக்கு அனுப்பிவைக்கப் [...]ட்டுள்ளது. இவ்வளவு அப்ஜெக்ஷன்களுடன் அரசுக்கு வருகிறது. தனியார் [...]விடமிருந்து விதிக்கு முரணாகக் கொள்முதல் செய்யப்படுகிறதென்ற தகவல் அரசுக்கு வந்திருக்கின்றது. அதற்குப் பிறகு நெடுநேர இசைத் தட்டுகளுக்காக வாங்கியிருந்த ரூபாய் 45,000 பெற்ற நாள் 20—2—1979. ஆனால் 23—1—1980 வரை இசைத் தட்டு வெளியிடப்படவில்லை. இந்தப் பணம் ஏறக்குறைய ஓராண்டுக்காலம் அவர் கைவசம் இருந்ததென்று வேறு இடங்களிலிருந்து தகவல்கள் அரசுக்கு வந்த வண்ணம் இருக்கின்றன.

இதற்குமேல், விழிப்புப் பணித்துறை ஆணையர் (விஜிலன்ஸ் கமிஷனர்) இவர் மீதான புகார்கள் விசாரணைக்கு உட்பட்டவையென்றும், பிரைமா-பேசி கேஸ் இருக்கிறதென்றும், கல்வித் துறை தக்க நடவடிக்கை எடுக்கலாமென்றும் சொல்லியிருக்கிறார். ஆனால், இதற்கிடையிலே தமிழ்ப் பண்பாட்டு மையத்திலே பணியாற்றியவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். வேலையிலிருந்து நீக்கப்பட்ட அவர்கள். அரசுத் துறையில் ஏற்கெனவே எங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார்களோ, அந்தத் துறைக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களையெல்லாம் இவரே அனுப்பிவிடுகிறார். அது தவறு என்று புகார் வந்திருக்கிறது. ஆனால் இந்தத் தவறுகளை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நான் செய்ததுதான் முடிவு என்று சொல்லி, கடைசியில் செல்வி காஞ்சனா என்ற பெண் தட்டச்சரை 8—1—1980-லிருந்து வேலை

நீக்கம் செய்திருக்கிறார். 7—2—1980-ல் மீண்டும் வேலைக்கமர்த்தி விசாரிக்க ஆரம்பித்திருக்கிறது. ஆனால் அந்த இயக்குநர், நான் முன்னறப்படி தான் வேலையிலிருந்து நீக்கியிருக்கிறேன், மீண்டும் வேலைக்கமர்த்தி, புதிதாக விசாரணை செய்யத் தேவையில்லை என்று எழுதியிருக்கிறார். இந்தக் கோப்பு சட்ட அமைச்சரவர்களுக்குப் போயிருக்கிறது. சட்ட அமைச்சரவர்கள், என்ன நடவடிக்கை எடுக்கலாமென்பது பற்றி செய்குறிப்பில் குறிப்பிடவில்லை. அவர் எழுதவேயில்லை. அதற்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி போய்விடுகிறது. குடியரசுத் தலைவரின் ஆட்சி தமிழகத்தில் நடக்கிறது. அதாவது, ஆளுநர் அவர்களின் ஆட்சி நடைபெற்ற போது, செல்வி காஞ்சனாவை மீண்டும் பணியில் அமர்த்துமாறு ஆணையிடப்பட்டிருக்கிறது. அரசாணை நிலை எண் 288, கல்வி, நாள் 19—2—1980-ல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள ஒருவரை தொல்பொருள் ஆய்வு இணைப் பேராசிரியராக மாதம் 1,250 ரூபாய் சம்பளத்தில் நியமனம் செய்திருக்கிறார்கள். அவ்வாறு பணிக்காலம் 1980 நவம்பர் வரை உள்ளது. [illegible] இருந்த இடத்தில் அப்படி இருக்கிறது. ஆனால் இங்கேயும் 19—2—1980-லிருந்து வேலைபோட்டு, சம்பளமும் கொடுத்துவிட்டிருக்கிறார்கள். [illegible] எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதற்குப் பிறகு வேலை நீக்கம் செய்ததுபற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பதினான்கு பேர்களை வேலையிழக்கச் செய்து, தன்னிச்சையாக, தவறாக அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார். செல்வி காஞ்சனாவை மீண்டும் அவ்வேலைக்கு வைக்கவில்லை. நிதிச் செயலாளரிடம் கொடுக்கப்பட்ட மனுவின்மீது இயக்குநரின் அறிக்கையைக் கேட்டு எழுதியதற்கு முறையான பதில் இல்லை, கொள்முதல் குழு ஒருமுறைதான் கூட்டப்பட்டது, அதற்குப் பிறகு கூட்டப்படவில்லை, இயக்குநரின் பணச் செலவு அதிகாரத்தைப் பற்றி விசாரிக்க, அக்குழுவிற்கு அதிகாரமில்லை என்ற [illegible] எழுப்புகிறார், ஆளுநரின் ஆலோசகருக்கும் கல்வித் துறையைக் [illegible] நேரடியாக அரசுப் பணியாளர்கள் விதிக்குப் புறம்பாக கடிதமெழுதிக் குற்றத்திற்கும் ஆளாகிறார், 1½ ஆண்டுகளாகியும் செயல்படவில்லை. [illegible] அதிகாரியை, [illegible] நடத்த அமர்த்தலாமென்று அரசு கருதுகிறது. ஆனால் என்ன நடைபெற்றிருக்கிறது ? முன்னாள் கல்வித் துறைச் செயலாளர் இந்தக் கருத்துருவினை ஏற்று, மொத்தத்தில் அவர் அப்பதவிக்கு [illegible] என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார். அதற்குப் பிறகு கல்வித் துறை நிலை ஆணை எண் 1849, நாள் 13—11—1978-லே [illegible] செய்யப்பட்ட அவரது இயக்குநர் நியமனம் 16—10—1979 [illegible] முடிவடைந்துவிட்டது. எனவே அவருடைய தாய்த் துறைக்குத் [illegible] ஆலோசனை [illegible]







[illegible] அரசாணை [illegible], [illegible], நாள் [illegible] அரசாணை எண் 718, கல்வி, நாள் 30—4—1980-ல் [illegible] 16—4—1980-ல் [illegible] அவருடையதாம் [illegible] நீதிமன்றத்திற்குப் போகிறார். [illegible] இதற்கிடையிலே குள்ளாக ஆளுநர் ஆட்சிக் காலம் [illegible] சம்பளம் வாங்க முடியாமல் தாய்த் துறைக்குத் திரும்பிய ஆசிரியர்கள் [illegible], அவர்கள் இருந்திருக்கிறார்கள். அதற்கான ஆவணங்கள் [illegible] இத்தனைக்கும் பிறகு, ஊதியம் பெற இயலாமல் அவதிப்பட்டிருக்கிறார்கள். [illegible] ஆணை வேண்டி கோப்பினைச் [illegible] என்ன நடவடிக்கை மேற்கொள்ளலாமென்று அனுப்பியிருக்கிறார்கள். சட்டச் செயலாளர், சட்டச் செயலாளருக்கு [illegible] கல்வி அமைச்சர், முதலமைச்சர் தலைமைச் செயலாளர் மூலமாக [illegible] அரசு ஆலோசகருக்கு [illegible] கையெழுத்திட்டிருக்கிறார். [illegible] சார்புச் செயலாளர் 6—12—1980-ல் கையெழுத்திட்டிருக்கிறார், [illegible] துணைச் செயலாளர் 8—12—1980-ல் கையெழுத்திட்டிருக்கிறார் [illegible] என்னிடம் [illegible] செயலாளர், இக்கோப்பு பற்றி [illegible] வைக்கிறார் ... செயலாளர் அரசின் [illegible]

திரு. ஜேப்பியார் : [illegible] தலைவரவர்களே, [illegible] உறுப்பினரவர்கள் ஒரு அரசினுடைய நடவடிக்கைகளையெல்லாம் [illegible] கையிலே வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். [illegible] இயந்திரம் [illegible] என்று [illegible] அதிகாரிகள் தந்ததைப் படிக்கிறார்களா அல்லது [illegible] இயந்திரத்தின் [illegible] எடுத்து வந்து படிக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : பழுதுபட்ட நிர்வாகம் இது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒத்துக்கொண்டதற்கு மகிழ்ச்சி.

திரு. ஜேப்பியார் : நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அவற்றைக் கையிலே வைத்துக்கொண்டு பேசுகிறாரா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நான் தந்த தகவல்கள் புள்ளி விவரங்கள். இதை [illegible] அதிகாரம், உரிமை, வாய்ப்புகள் அரசுக்கு இருக்கின்றன. நிர்வாக இயந்திரம் எவ்வாறு [illegible], இதில் வேறுபாடேயில்லை. [illegible] பற்றித்தான் சொல்கிறேன். இங்கே [illegible] அடைந்திருக்கிறதென்பதைப் [illegible] அதை ஏற்றுக்கொண்டதற்கு மகிழ்ச்சி.

திரு. ஜேப்பியார் : நாங்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அவர் [illegible] [illegible] வைத்துக்கொண்டு, நிர்வாகத்தை கெட வைக்கிறாரோ என்று தான் நினைக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : 'பார்லிமெண்டரி பிராக்டிஸ்'-ல் இது போன்ற விவரங்கள் வந்து சேரும். இதையெல்லாம் தாண்டி, நிர்வாகம் முறையாகச் செயல்படுகிறதென்ற அளவிலே விவரங்கள் இருக்க வேண்டும். இந்த அரசினுடைய துர்பாக்கியம், வருகிற விவரங்கள் அரசு முறையாகச் செயல்படவில்லை என்ற அளவிலேதான் இருக்கின்றன.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் அரசு அலுவலகங்களிலிருந்து எடுத்ததாகச் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உறுப்பினரவர்கள் விரைவாகத் தன்னுடைய பேச்சை முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : விவரங்களைப் போய் எடுத்து வருகிறோமா என்பதல்ல . . .

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : துணைத் தலைவரவர்களே, ஒரு கருத்தை இப்போதே சொல்லிவிடுகிறேன். இங்கே விவரங்களோடு, அரசு ஆணைகளைச் சொல்லி, தொடர்ந்து ஒரு அதிகாரியைப்பற்றி உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். அதிலேயும் அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளைத் தொடர்ந்து சொல்லுகிறார்கள். அதிகாரிகள் செய்த தவறுகளின்மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதுதான் இவ்வளவு நேரம் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கும் தகவல்களிலிருந்து தெரிகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய தகவல்கள் அரசுக்குத் துணையாக இருந்தால், நான் பெருமகிழ்ச்சியடைவேன். இதற்குப் பிறகு இதில் சட்டத் துறை வருகிறது. குறிப்பிட்ட அதிகாரி தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் இயக்குநர். அவரைப் பற்றித் தான் சட்டத் துறை தெளிவாகச் சொல்கிறது. அவர் அதற்கு முன்பு அரசுப் பணியில் இல்லை. தமிழ்ப் பண்பாட்டு மையத்துக்கு, பொருத்தமான வேறு ஒருவரை இதில் இயக்குநராக நியமிக்கலாம் என்று சட்டத் துறை கருத்துரை தெரிவித்திருக்கிறது. அவரை தாய்த் துறைக்கு திரும்பி அனுப்பப் பிறப்பிக்கப்பட்ட ஆணையை நிறைவேற்றுவதில் ஆட்சேபணையில்லையென்று அத்துறை சொல்லியிருக்கிறது. அதற்குப் பிறகு அவர் மீது அரசு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் சட்டத் துறை சொல்லியிருக்கிறது. இணைச் செயலாளர் 26—12—1980-ல் பார்த்திருக்கிறார். கல்விச் செயலாளர் 29—12—1980-ல் பார்த்திருக்கிறார். கல்வித் துறைச் செயலாளர் 30—12—1980-ல் கையெழுத்திட்டிருக்கிறார். இத்தனைக்கும் பிறகு என்ன நடைபெறுகிறது என்றால் . . .





மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அருள்கூர்ந்து உறுப்பினர் அவையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த அதிகாரியை அவரது சொந்தத் துறைக்குத் திருப்பி அனுப்பிவிட்டு நடைபெற்ற தவறுகளுக்காக அவர் மீது இலாகா பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று அரசாங்கத் தலைமைச் செயலாளர் உத்தரவிட்டிருக்கிறார். இதற்குப் பிறகும் அவரை அங்கே பதவியில் நீடிக்க அனுமதித்து விட்டு அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கலாம் என்கின்ற நிலை வருகிறது நல்லதா? இத்தனை லட்சக்கணக்கான ரூபாய்களை கையில் வைத்துக்கொண்டு பொறுப்பான பணியில் இருந்து கொண்டு, அதிகாரத்தை, பொறுப்பை தவறாகப் [illegible]யன்[illegible]த்தலாம் என்கிற ஒரு நிலை வருமபோது, உலகத் தமிழ்ச் சங்[illegible]த்தை [illegible]த்துக்கொண்டு, எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்கள[illegible]த்துக்கொண்டு, எவ்வளவோ நடக்கலாம் என்கிற ஒரு அச்ச நிலை இருப்பதைக் களைய வேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் அவர்களின் உரை சிறப்பாக அமைய வேண்டுமென்றால், அதற்கு அடிப்படையாக இருக்கின்ற அரசின் நிர்வாக இயந்திரம் . . .

திரு. எஸ். முத்து : தவறு செய்தவர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை உறுப்பினரே ஒத்துக்கொண்டிருக்கிறார். அது குறித்து விவரமாக இங்கே சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கும்போது, உலகத் தமிழ்ச் சங்கத்தில் யார் தவறு செய்தாலும், நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்கிற அச்ச உணர்வு ஏன் வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : பெரியவர் மிகவும் வேகமாகச் சொல்கிறார். என்னால் அவரைப் போல் வேகமாகச் சொல்ல முடியவில்லை. எப்படிப்பட்ட நடவடிக்கை அவர் மீது எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் படித்துச் சொன்னேன். இதில் இப்படித்தான் இருக்கும் என்றால் எனக்கும் சந்தேகம் வரத்தான் செய்யும். என்னால் அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. அது முறையாக இல்லை. மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்தியிருக்கிற உரையைப் பொறுத்தவரை, நிர்வாக இயந்திரத்திலுள்ள கோளாறுகளைச் சுட்டிக்காட்டத் தவறிவிட்டது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு காடுவெட்டி. கண்ணப்பன் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரிக்கின்ற வாய்ப்பினை எனக்கு இந்த [illegible] வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வா[illegible]

[திரு. எஸ். ஆர். இராதா] [1981 ஜனவரி 30

நான் என்னுடைய முழு கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கு நேரம் கிடைக்குமா என்கிற சந்தேகம் இருந்தாலும், முடிந்த அளவிற்கு நான் ஒருசில கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டியவனாக இருக்கிறேன். இந்த மன்றத்தில் ஆளுநர் அவர்களுடைய உரையை வைத்துக்கொண்டு பல்வேறு விதமான கருத்துக்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் ஆளுநர் மன்றத்தில் உரையாற்றுவதும் பிறகு அந்த உரையின் மீது நன்றி தெரிவித்து பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய பல்வேறு கருத்துக்களை அது சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, இல்லை சம்பந்தப்படாததாக இருந்தாலும் சரி, ஆசைப்படுகின்ற கருத்துக்களை எல்லாம் சொல்வதுமாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கருத்துக்கள் பத்திரிகைகளில் வர வேண்டுமென்ற உணர்வோடு இன்றைக்கு, பல்வேறு கருத்துக்களை அவர்கள் பேசுகிறார்கள். அரசியல் கட்சிகள் அத்தனையும் அவர்களுடைய கட்சிகளினுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்கிற அடிப்படையில் ஆளுநர் அவர்கள் உரையின் மீது விவாதம் நடந்தாலும் கூட இவை இவை ஆளுநர் உரையில் இல்லை, ஆகவே இதை இதைச் சொல்கிறேன் என்று சொல்லி எல்லாவற்றையும் ஆளுநர் அவர்கள் தலையிலே போட்டு விட்டு, இங்கே பல்வேறு கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியில் இருக்கிற எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் விவரங்களை எடுத்து வைக்கின்ற நேரத்தில் எங்களுக்கு இருக்கிற மிகப் பெரிய நெருக்கடி என்று எதைச் சொல்கிறோம் என்றால் ஆளுநர் அவர்கள் பேசிய பேச்சை நாங்கள் பாராட்டி, அதனுடைய சிறப்புகளை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரையிலும் கூட, நாங்கள் நினைக்கின்ற கருத்துக்களை எல்லாம் பேச வேண்டுமென்ற ஆசை இருந்தாலும் கூட, எந்த அளவுக்கும் விதிகளை மீறிவிடக் கூடாது என்கிற அளவில் பேச வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் பார்க்கின்றபோது, குறிப்பாக எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசியதைக் கேட்கின்றபோது, நாமும் இப்படிப் பேசினால் என்ன என்கிற ஒரு நிலை எங்களுக்கெல்லாம் ஏற்படுகிறது. அப்படி நாங்களும் பேச ஆரம்பித்தால், அது எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்பது நிச்சயமாக அவர்களுக்கே மிக நன்றாகத் தெரியும். என்றாலும் கூட, இந்த மன்றத்திலே விவாதம் நடக்கின்ற நேரத்தில் அப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் சொல்லுகிறார்கள். அரசு மீது குற்றச்சாட்டு என்ற வகையில், அரசு மீது களங்கம் கற்பிக்கின்ற முறையில், அப்படியெல்லாம் நாங்கள் நினைக்கக் கூடிய வகையில், கருத்துக்களை இங்கே சொல்கிறார்கள். ஆளும் கட்சியில் இருக்கிற நாங்கள் அவற்றுக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் வரும்



1981 ஜனவரி 30] [திரு. எஸ். ஆர். இராதா]

போது, நாங்கள் பதில் சொல்லத் தவறிவிடுவோமேயானால், அது பத்திரிகைகளில் வரும்போது ஆளும்கட்சியில் இருக்கிற தோழர்கள் அதைப் படித்து விட்டு எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்கு ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சரியாகப் பதில் சொல்வதில்லை என்கிற குற்றச்சாட்டுக்கு நாங்கள் ஆளாகிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு பரிதாப நிலை எங்களுக்கு இருந்தாலும் கூட, சில நேரங்களில் சில கருத்துக்களுக்கு நாங்கள் பதில் கூற வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் எதிர்க் கட்சியினரிடத்தில் "பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்கிறோம், அவர்கள் பதில் சொல்ல முடியவில்லை, பதில் சொல்ல முடியாத அளவிற்குப் பேசி விட்டோம்" என்று எண்ணுகிற ஒரு உணர்வு இருக்கிறது. எதிர்க் கட்சிகள் எந்தக் குற்றச்சாட்டுகள் சொன்னாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிச் சொன்னாலும் சரி அல்லது அரசாங்கத்தைப் பற்றிச் சொன்னாலும் சரி, அது குறித்த விவரங்களுக்கு என்னால் பதில் சொல்ல இயலும். ஆனால் அப்படிப் பதில் சொன்னால், அதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது அவர்கள் கையில்தான் இருக்கிறது. ஆகவே நிச்சயமாக எங்களால் பதில் சொல்ல முடியும், இயலும். இங்கேயும் ஆளுநர் அவர்கள் உரையின் மீது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து என்னால் பதில் சொல்ல இயலும் என்றாலும் கூட, ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நான் இந்த மன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி நான் கருத்துக்களை எடுத்து வைக்கிற நேரத்தில், அவர்கள் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டுகளெல்லாம் உண்மையிலேயே குற்றச்சாட்டுகளா என்று ஆராய்ந்து பார்க்கின்றபோது ஏதோ அரசியல்

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

காழ்ப்புணர்ச்சியில், அரசியல் சூழ்நிலையில், அவர்களுக்கு இருக்கிற பல்வேறு நிலைகளை வெளிப்படுத்துகின்ற காரியங்களாக அவைகள் இருக்கின்றனவே தவிர, அவை நியாயமான குற்றச்சாட்டுக்கள் என்று என்னால் சொல்ல முடியாது. அவர்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகள் நியாயமான குற்றச்சாட்டுகளாக, அரசைத் தட்டித் திருத்துவதற்கு அல்லது அரசைக் கண்டிப்பதற்கு, அரசு நடவடிக்கைகளை மாற்றுவதற்கான வகையில் சொல்லப் படுகிறதா என்று கேட்டால், நான் நிச்சயமாக இல்லையென்று தான் சொல்வேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் குற்றச்

(பிற்பகல் 1-40)

சாட்டுகளைச் சொல்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் நாங்கள் கவலைப் படவில்லை. எதிர்க்கட்சிகள் என்று சொன்னாலே குற்றச்சாட்டுகளைச்

சொன்னால்தான் அவைகள் எதிர்க்கட்சிகள் என்ற தகுதியைப் பெறும். ஆளும் கட்சியை ஆதரித்துப் பேசி, 'இதையெல்லாம் இந்த ஆளும்கட்சி செய்து விட்டது' என்று சொல்லி எதிர்க்கட்சி, ஆளும் கட்சியைப் பாராட்டியதை நான் பார்த்ததில்லை. ஆனால், எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம், இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, நீண்டதொரு உரையாற்றினார்கள். ஆளுநர் அவர்கள் உரையின் மீது விவாதம் என்ற பெயரிலே இந்த அரசின்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சொல்ல வேண்டும் என்று சொன்னார் என்று நினைக்கிறேன். அவர் இப்படிப் பேசுகிறாரே என்று நினைக்கும்போது, எனக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது. அண்ணா தி.மு.க. இப்போது தமிழ் நாட்டின் ஆளும் கட்சியாக இருக்கிறது. ஒரு குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில், அதைச் சொல்பவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல, முன்னாலே தன்னிடத்திலே குற்றம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டுத்தான் மற்றவர் மீது குற்றச்சாட்டைச் சொல்லும் பழக்கத்தை வளர்க்க வேண்டும். தமிழ் நாட்டிலே நடந்திருக்கிறதைப்பற்றிக் குற்றச்சாட்டைச் சொல்லும்போது, நிகழ்ந்திருக்கின்ற கொலைகளைச் சொல்லும்போது, பீஹார் மாநிலத்திலே பல பேர் குருடாக்கப் பட்டார்களே, அந்த நிகழ்ச்சி தெரியாதா என்று கேட்கத் தோன்றுகிறது. பீஹாரிலே காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது. அங்கே கைதிகள் குருடாக்கப்பட்டார்கள் என்று அரசியல் ரீதியாக இதை ஆரம்பித்தால் . . .

**திரு. க. இராமமூர்த்தி :** பீஹாரிலே காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அங்கே இப்போது காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி செய்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாகச் செய்யப்பட்டவை என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நேரம் ரொம்ப ஆகிவிட்டது. பசியிலே எல்லோருக்கும் கண் குருடாகிவிடும்போல இருக்கிறது.

(மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இன்றைய நிகழ்ச்சிகளை இத்துடன் முடித்துக்கொள்ளலாம் என்று தெரிவித்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் எவ்வளவு நேரம் தேவைப் படும் ?

**திரு. எஸ். ஆர். இராதா :** இன்னும் அரை மணி நேரத்திற்குமேல் தேவைப் படும்.

**சில மாண்புமிகு உறுப்பினர்கள் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் கருத்தினைச் சொல்ல மீண்டும் அவை கூடும்போது அனுமதிக்கலாம்.





### 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (2) அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைக்கு நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 31—1—1981 | — | கூட்டம் இல்லை. |
| 1—2—1981 முதல் 8—2—1981 வரை | — | கூட்டம் இல்லை. |
| 9—2—1981 | — | ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை. |
| 10—2—1981 (காலை 10-30 மணி) | — | 1980-81 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது விவாதம். |
| (மாலை 4 மணி) | — | மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம். |
| 11—2—1981 (காலை 10-30 மணி) | — | மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம். |
| 12—2—1981 13—2—1981 | — | அரசு அலுவல்கள். |

மேலவை இத்துடன் ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 9—2—1981 காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-45)

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

170. Notification issued with G.O. Ps. No. 1113, Commercial Taxes and Religious Endowments, dated the 28th October 1980, in regard to exemption from levy of sales tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act on sales of machinery required for workshop attached to the

Technical Institute, scientific and laboratory equipments, wooden and steel furniture, electrical equipments and accessories to (1) Sri Ramakrishna Mission Technical Institute, Madras-4, (2) Sri Ramakrishna Mission Residential High School, Madras-4 and (3) Sri Ramakrishna Mission Students' Home, Madras-4. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

171. Notification issued with G.O. Ps. No. 1232 Commercial Taxes and Religious Endowments, dated the 20th November 1980, in regard to reduction in the rate of tax from six per cent to five per cent single point in respect of the tax payable under the Tamil Nadu General Sales Tax Act on the sale of tea made at the auction centres at Coimbatore and Coonoor for the period from the 22nd November 1980 to the 21st May 1981. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

172. Notification issued with G.O. Ms. No. 1247, Rural Development and Local Administration, dated the 22nd August 1980, in regard to amendments to the Tamil Nadu Panchayat Union Councils Establishment (Qualification and Recruitment of Last Grade Servants) Rules, 1970. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

173. Notification issued with G.O. Ms. No. 2614, Revenue, dated the 24th November 1980, in regard to amendments to the Tamil Nadu Debt Relief Rules, 1980. [Laid on the table of the House under section 13 (3) of the Tamil Nadu Debt Relief Act, 1980 (Tamil Nadu Act 13 of 1980).]

174. The Audit Report on the Accounts of the Tamil Nadu Agricultural University, Coimbatore-3 for the year 1978-79 (English). [Laid on the table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

175. The Annual Accounts of the Tamil Nadu Agricultural University for the year 1978-79. (English). [Laid on the table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

*B. Reports, Notifications and Other Papers.*

**Nil.**



## இணைப்பு

**மேற்கண்ட தீர்மானத்திற்கு கல்வி அமைச்சர் அளிக்கும் அறிக்கை :**

472 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

குறிஞ்சிப்பாடி மேல்நிலைப் பள்ளிக்கு ஜூலை 1979-ல் ஆங்கிலம் போதிப்பதற்காக ஓர் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் ஒதுக்கப் பட்டது. அச்சமயம் அப்பள்ளியில் அப்பதவிக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர் இன்மையினால் எம்.ஏ. (ஆங்கிலம்) படித்த திரு. ஆர். செல்வகுமார் என்பவர் அப்பணியிடத்தில் 14—9—1979 அன்று நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டார். அன்னார் சார்பில் 1979-80-க்கு மட்டில் பி.டி. தகுதி பெறாமைக்கு கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரால் தவிர்ப்பு அளிக்கப்பட்டது.

அதே பள்ளியில் 10 ஆண்டுகளாக பி.டி. ஆசிரியராகப் பணியாற்றி வரும் திரு. வி. ஜெயச்சந்திரன் என்பவர் திரு. செல்வகுமார் என்பவரின் நியமனத் திற்குப் பிறகு எம்.ஏ. (ஆங்கிலம்) தேர்ச்சி பெற்றுள்ளார். பள்ளி நிர்வாகம் தகுதிபெற்ற திரு. வி. ஜெயச்சந்திரனை அப்பணியில் நியமித்து தகுதி பெறாத திரு. செல்வகுமாரை பணிநீக்கம் செய்திருக்கவேண்டும். திரு. செல்வகுமாருக்கு 1979-80 முடிய தவிர்ப்பு அளிக்கப்பட்டிருந்ததினால், 1980-81 ஆம் வருட ஆரம்பத்திலிருந்தாவது திரு. வி. ஜெயச்சந்திரன் என்பவருக்குப் பதவி உயர்வு அளித்திருக்க வேண்டும். பள்ளி நிர்வாகம் திரு. செல்வகுமார் சார்பாக 1980-81-க்குக் கோரிய தவிர்ப்பு கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரால் மறுக்கப்பட்டது. கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரும், முதன்மைக் கல்வி அலுவலரும் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரும் திரு. வி. ஜெயச்சந்திரனுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டும், பள்ளியின் நிர்வாகம் இதனை ஏற்கவில்லை.

இதன் காரணமாகத் தென்னாற்காடு மாவட்ட பட்டதாரி ஆசிரியர் கழகம், குறிஞ்சிப்பாடி எஸ்.கே.வி. மேல்நிலைப் பள்ளி 13 பட்டதாரி ஆசிரியர்களுடன் சேர்ந்து 9—10—1980 அன்று பள்ளியின் முன்பு ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர். பள்ளியில் சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் 10—10—1980 முதல் 26—10—1980 முடிய பள்ளி மூடப்பட்டிருந்தது. 13 பி.டி. ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்ததைத் தொடர்ந்து பள்ளி நிர்வாகம் அந்த 13 ஆசிரியர்களையும் தற்காலிகமாக 17—10—1980 முதல் பணிநீக்கம் செய்தது. 27—10—1980 அன்று பள்ளி திறக்கப்பட்டு 2—11—1980 வரை பள்ளி நடைபெற்றது. மீண்டும் சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனைப்படி பள்ளி தொடர்ந்து 9—11—1980 முடிய மூடப்பட்டிருந்தது.

30—10—1980 அன்று பள்ளியின் முன்னாள் மாணவர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் ஒன்று நடத்தி குறிஞ்சிப்பாடி பள்ளித் துணை ஆய்வர் அலுவலகத்தின் முன்பு ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தனர். 9—11—1980 அன்று தொழிற்சங்கங்கள் மற்றும் பல அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் (500) ஆசிரியர்களை ஆதரித்து ஊர்வலம் நடத்தி பொதுக்கூட்டம் நடத்தினர். 10—11—1980 அன்று பள்ளி திறக்கப்பட்டது.

11—11—1980 முதல் 14—11—1980 முடிய அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் கழகச் செயலாளர் மற்றும் இதர ஆசிரியர்களும் குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையத்திலும், 15—11—1980 அன்று கடலூர் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் முன்பும் உண்ணாவிரதம் இருந்தனர். 15—11—1980 அன்று குறிஞ்சிப்பாடியில் பள்ளி நிர்வாகத்தை ஆதரித்து 75 சதவீத கடைகள் மூடப்பட்டு மாலை 2 மணிக்குத் திறக்கப்பட்டதாகத் தெரிகிறது. அன்றே அவ்வூர் பொதுமக்கள் பள்ளி நிர்வாகத்தை ஆதரித்து ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்தி உண்ணாவிரதம். தர்ணா செய்யும் ஆசிரியர்கள் பள்ளியின் வளர்ச்சியையும், புகழையும் கெடுப்பதாகக் குறை கூறியுள்ளதாகத் தெரிகிறது.

26—11—1980 மற்றும் 27—11—1980 ஆகிய நாட்களில் 100 மாணவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பள்ளியின் முன்பு தர்ணா நடத்தினர். இதனால் இருசாரார்களுக்கும் மோதல் ஏற்பட்டதாகவும், இது சம்பந்தமாக இரு தரப்பினர்களின் மீதும் சில வழக்குகள் பதிவு செய்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பள்ளி மீண்டும் 29—11—1980 முதல் 30—11—1980 முடிய மூடப் பட்டிருந்தது. தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், பள்ளி நிர்வாகம். ஆசிரியர்கள், காவல்துறை அலுவலர்கள். சில முக்கிய உள்ளூர் பிரமுகர்கள், கல்வித்துறை அலுவலர்கள் ஆகியவர்களை அழைத்து 8—12—1980 அன்று கூட்டம் நடத்தி இருதரப்பிலும் சமாதானம் செய்தும், சுமுகமான முடிவு ஏதும் வரவில்லை. 9—12—1980 அன்று மீண்டும் பள்ளி திறக்கப்பட்டது. அன்று 200 மாணவர்கள் பள்ளியின் முன்பு கூடி தந்தை பெரியார் போக்கு வரத்துப் பேருந்தின் மீது கல் எறிந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாகப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 10—12—1980 முதல் பள்ளி மறுபடி மூடப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அமைதியின்மையைக் கருத்தில் கொண்டு 2—1—1981 வரை பள்ளியை மூட ஆணையிடுமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்கு ஆலோசனை கூறினார். அதனை ஏற்று முதன்மைக் கல்வி





